உ

திரிகூடபதி துணை.

திருநெல்வேலி ஜில்லாவிலுள்ள

# வடகரையாதிக்கத்தின் சரித்திரம்.

வாலம் II

பல வித்துவான்களியற்றிய

## பதினைந்து பிரபந்தங்கள்.

OFFICE OF THE REGISTRAR OF ... 6 - APR 1916 MADRAS

இவை

சேற்றூர் சமஸ்தான வித்துவான்கள்

மு. ரா. அருணாசலக்கவிராயரவர்களாலும்

மு. ரா. கந்தசாமிக்கவிராயரவர்களாலும்

பரிசோதிக்கப்பெற்று

டிப்டிகலெக்டர் ஸ்ரீமாந்

பி. சி. சி. பாண்டியன் அவர்களாலும்,

தாசில்தார் ஸ்ரீமாந்

பி. வி. சி. பாண்டியன் அவர்களாலும்

அச்சிடப்பட்டன.

Accn. No: 142628

[பிரபந்தங்கள் 14-ம் மதுரை விவேகபாநுப் பிரஸிலும் மற்றவைகள் மதுரைத் தமிழ்ச்சங்கம் பவர்ப் பிரஸிலும் பதிப்பிட்டவை].

மதுரைத் தமிழ்ச்சங்கம் பவர்ப் பிரஸ்.

1916.

*Copy right Registered.*

B

149/6

TO

THE HONORABLE

# SIR. HAROLD ARTHUR STUART,

K. C. V. O., K. C. S. I., I. C. S.,

*Member in Council of Madras Government.*

*This book is*

by kind permission respectfully dedicated

BY

MESSRS

**P. C. C. PANDYAN**

AND

**P. V. C. PANDYAN.**

## இப்புத்தகத்திலடங்கியவை.

MADRAS


| வரிசை எண். | பிரபந்தப்பேர். | பக்கம். |
| --- | --- | --- |
| ௧ | முகவுரை ... | |
| ௨ | வடகரையாதிக்கம் சமஸ்தானபதிகள் செய்த திருப்பணி முதலிய புண்ணிய விளக்கம் ... | |
| ௩ | சவ்வாது விடுதூது ... ... ... | ௧ |
| ௪ | சந்திரகலாமஞ்சரி ... ... ... | ௧௪ |
| ௫ | பட்பிரபந்தம் ... ... ... | ௩௮ |
| ௬ | பருவப்பதம் ... ... ... | ௭௬ |
| ௭ | வண்ணம் ... ... ... | ௮௬ |
| ௮ | நொண்டி நாடகம் ... ... ... | ௮௯ |
| ௯ | திருமலைக்கருப்பன் பேரில் காதல் ... ... | ௧௪௨ |
| ௧௦ | பிள்ளைத்தமிழ் ... ... ... | ௧௭௧ |
| ௧௧ | செப்புலிப் பெரியசுவாமித்துரையவர்கள் பேரில் வருக்கக்கோவை ... ... ... | ௧௮௮ |
| ௨ | கோவைச்சாதகம் ... ... ... | ௨௦௯ |
| ௩ | விறலிவிடுதூது ... ... ... | ௨௨௫ |
| ௪ | இரத்தினகர விலாசம் ... ... ... | ௨௮௯ |
| ௫ | முத்துசாமித்துரையவர்கள் பேரில் வருக்கக்கோவை | ௩௧௫ |
| ௬ | திக்குவிஜயம் ... ... ... | ௩௩௩ |

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
6 - APR 1916
MADRAS

உ

ஓம்.

திரிகூடபதிசகாயம்

# முகவுரை.

புண்ணியபூமியாகிய இப் பரதகண்டத்தின்கண்ணுள்ள எந்நாட்டுள்ளும் நன்னாடாகிய பாண்டிநாட்டை அரசுபுரிந்து வந்தவரும், முதலிடைகடையென்னும் மூன்று சங்கம் நிறுவித் தமிழ்த்தெய்வத்தைவளர்க்கக் கங்கணங்கட்டி நின்றவருமாகிய பாண்டிய மஹாராஜாக்களின் சந்ததியிலவதரித்துப் பொதியமலைச்சாரலைச் சார்ந்த தென்காசி நகரத்தின்கண் அரசுசெலுத்திய பெரிய குலசேகர பாண்டியன் காலத்தில் தமிழ் இலக்கணத்தை அகத்தியமஹாமுனிவருக்குச் செவியறிவுறுத்திய பரமாசாரியராகிய பாலசுப்பிரமணியக்கடவுளையும், அவர் அரும்பெறற்றந்தையாகிய சிவபிரானையுமே முழுமுதற் கடவுளாகவெண்ணி ஆராதிப்பவர்களாகிய செம்பிநாட்டிற்றோன்றிய மறவர்குலத்தினர்கள்; கண்ணப்பநாயனார் சிவபெருமானை வழிபட்டெய்திய பெரும்பேற்றைத் தாங்களும் பெறவெண்ணி அப்பெருமானை ஆராதிக்கத் தகுந்தவிடம்,

“தில்லையிலுஞ் சேதுவிலுங் காசியிலும்
வாசிபெறுந் திருக்குற் றாலஞ்
சொல்லையிலு நாவூறுங் கேட்கையிலுஞ்
செவிதிறக்குந் துறக்கம் போலும்
எல்லையினில் வளர்தீர்த்த மகிமைகூ
றெனமுனிவ ரிளம்பூங் கன்னற்
கொல்லையினின் மேய்ந்தசெழுங் கன்றுகள்போற்
சிந்தையலர் கொண்டார் மன்றோ”

“புந்தியுற நினைத்தார்க்கே யருணைகிரி
தரிசனைக்கே புலியூர் பேறு
நந்துதவழ் திருவாரூர் பிறந்தார்க்கே
யிறந்தார்க்கு நல்குங் காசி
யெந்தையார் திருவருளாற் பிறந்தார்க்கு
மிறந்தார்க்கு மெதிர்கண் டார்க்குஞ்
சிந்தையுற நினைந்தார்க்கு மழியாத
கதிகொடுக்குந் திருக்குற் றாலம்”

*

என்று சிந்தனைசெய்து அச்செம்பிநாட்டைத் துறந்து மேற்கூறிய பெரிய குலசேகர பாண்டியராஜனை அடைந்து தங்கள் வல்லமையாலும், வீரத்தாலும் அவனை மகிழச்செய்து அவ்வாசனால் "செம்புலி" யென்ற பட்டமும்பெற்று அவனன்பிற்குப் பாத்திரமாயினர்; பின்னர்; அவன் இவர்களிடத்திலுவகையுற்று வடகரைமுதலிய மூன்று நகரங்களைக்கொடுத்து அந்நகரங்களிலிருந்து அரசுபுரியும்படிசெய்தான். அந் நகரங்களிலிருந்து அரசுபுரிந்துவந்த எம் முன்னோர்களாகிய சின்னனைஞ்சு, பெரியனைஞ்சு, முத்தனைஞ்சு, பூவனைஞ்சு, நல்லனைஞ்சு என்பவர்களும், அவர்கள் சந்ததியார்களும் குறும்பலாவீசர்க்குச்செய்த திருப்பணிகள் இவையிவையென்பதும், அவை எவ்வெவரால் எவ்வெக்காலத்தியற்றப்பட்டனவென்பதும், இயற்றியவர்களின் வம்சாவளியும், பின்வருவனவற்றால் நன்கு விளங்கும்.

1. முதற்பட்டம்:— செம்புலிச் சின்னனைஞ்சாத்தேவர், இவர் காலத்தில் சாலிவாகன சகாப்தம் தூநுளயநு-க்கு,
A. D. 1391- செல்லாநின்ற கொல்லம்—நூாசுயஎ-ம் ஆண்டு பிர
முதல்
1434-வரை. ஜோற்பத்திரு ஆனிமீ கூஉ வியாழக்கிழமையும், அபரபட்சத்துவாதசியும், உத்திரநக்ஷத்திரமுங்கூடிய சுபதினத்திற் குற்றாலம் அன்னசத்திரத்திற்கு நாட்செய்தது. நூாஎஉ-ம் ஆண்டு தாதுரு சித்திரைமீ வரை செலவுசெய்த பொன் (தூளாநுய) ஸ்தானாதிபதி வயித்தியப்பபிள்ளை, விலாசத்திற்குப் பொன் (உதூநூாநுய) ஆகவகை உ-க்குப் பொன் (சதூநா). நூாஎயக-ம் ஆண்டு தாதுரு ஆவணிமீ நுஉ சுக்கிரவாரம் பூர்வபட்சத் துவாதசியுஞ் சிங்க காணமும் உத்திரநட்சத்திரமுங்கூடின சுபதினத்தில் சுவாமி குற்றாலலிங்கங் குழல்வாய்மொழியம்மன் கோவில் பொது முகப்பு மண்டபஞ்செய்ய நாட்செய்தது. சுாயஉ-ம் ஆண்டு ஆநந்தரு வரைக்கும் வருடம் நயகூ-க்கு; திருப்பணிச்செலவு பொன் (உயஅதூஅயநு) ஆக முதற் பட்டம் வருடம் (சயநு)-க்குத் திருப்பணிச்செலவு பொன் (நயகதூாயநு).



2. ஷை இராஜர்மகன் வீரபாண்டியராஜர் காலத்தில் இரண்டாம்பட்டம்:—ஷையார் தம்பி முத்தனைஞ்சாத்தேவர்.
A. D. 1434- இவர் காலத்தில் (சுாயக-ம்ஆண்டு ராக்ஷஸரு சித்
முதல் திரைமீ யகஉ புதன்கிழமையும், அபரபட்சத்து சஷ்டி
1461-வரை. யும் ஆனைக்கரணமும், பூசநட்சத்திரமுங்கூடின சுபதினத்தில் நாட்செய்து (சுாநயக)-ம் ஆண்டு சுபானுருவரை தொடர்ந்த திருப்பணியாகச், சுவாமி குற்றாலலிங்கம் குழல்வாய்மொழியம்மன் உட்சுற்றுப்பிரகாரம் செய்த செலவு பொன் (நயதூஉாநுயக, பணம் உஜ) ஸ்தானாதிபதி வயித்தியப்பபிள்ளை சகோதரர் சவரிப்பெருமாள்பிள்ளை.

3. மூன்றாம்பட்டம்:— முத்தனைஞ்சாத்தேவர் மகன் காளத்தியப்பதேவர், ஸ்தானாதிபதி குற்றாலநாதபிள்ளை (சுசசு-
A. D. 1462- ம் ஆண்டு சருவதாரிரு ஆனிமீ எஉ உத்திரநட்சத்
முதல் திரத்தில் நாட்செய்து (சுாநுயஎ-ம் ஆண்டு விகாரிரு
1490-வரை. சித்திரைமீ சுவாமிதேர், அம்மன்தேர், விநாயகர்தேர், சுப்பிரமணியர்தேர் ஆகவகை நான்கிற்குச் செலவு பொன் (சதூஉா). சுநுஅ-ம் ஆண்டு சருவதாரிரு வைகாசிமீ நுஉ ஞாயிற்றுக் கிழமை பூர்வபட்சத்துத்தசமியும், கெஜகரணமும் உரோகணி நட்சத்திரமுங் கூடின சுபதினத்தில் நாட்செய்து சுாசுய-ம் ஆண்டு சாதாரணரு வைகாசிமீ வரை தொடர்ந்த திருப்பணியாகக் குமார கோவில் முன் திருப்பணிக்குறைச் சுற்றுப்பிரகாரம் செங்கோட்டை வழிப்பாலம் அடங்கல் திருப்பணிச்செலவு பொன் (எதூசுாநுயக.) ஆக மூன்றாவது பட்டத்தில் திருப்பணிச்செலவு பொன் (யகதூஅாநுயக.) அப்பொழுது அதிவீரராஜா தெத்துப்புத்திரன் வீரசிகாமணி பொன்னுவீரபாண்டியன் இராஜாவாகவிருந்தார்.

4. நான்காம் பட்டம் :— காளத்தியப்பதேவர் மகன் அதிவீ
ராமத்தேவர். ஷையார் தம்பி பெரியசாமித்தேவர் விசா
A. D. 1490- ரிப்பு. குற்றாலநாதபிள்ளை ஸ்தானாதிபதி (சுாசுயஅ-
முதல் ஆண்டு சாதாரணரு ஆனிமீ நுஉ திங்கட்கிழமையு
1515-வரை. பூர்வபட்சத்துத் தசமியும், ஆனைக்கரணமும், மகந
சத்திரமுங் கூடிய சுபதினத்தில் வடகரை ஈசுரன் கோவிலுக்கு

கன்னிமூலைக்கோட்டைக்கும் நாட்செய்து (௬௱௯௰௨)-ம் ஆண்டு யுவஹு வைகாசி௴ வரை திருப்பணிச்செலவு பொன் (௫௲௫௱௫௰௧). பணம் ௨௰.

5. ஐந்தாவது பட்டம்:—நாலாவது பிரதானர் மகன் வல்லராயத்தேவர். ஸ்தானுதிபதி குற்றாலநாதபிள்ளை இறந்துபோக, ஷெயார் மகன் திரிகூடநாதபிள்ளை சிறுகுழந்தையாக இருந்தபடியால் ஷை குற்றாலநாதபிள்ளை உடன் பிறந்தாள் நல்லமங்கை நாயகன் செண்பகக்குற்றாலம்பிள்ளை ஸ்தானுதிபதி. (௬௱௯௰௫)-ம் ஆண்டு தாதுஹு சித்திரை௴ ௪௳ முதல் (௭௱)-ம் ஆண்டு சித்திரபானுஹு வரை ஷை வல்லராயத்தேவர் ஜமீந்தாராய் ஆண்டு வருகையில் ஷை பொன்னுவீரபாண்டியன் இறந்துபோகப் பின்னர் ஷெயார் பட்டஸ்திரீ புத்திரன் குலசேகரராஜாவிடத்தில் தாயாதி அழகப்பெருமாள் இராஜா இனமுறைப் பட்டமாகச் சீமைவிட்டுக் கொடுக்கும்படி சொல்லி சல்லியஞ்செய்த கலகத்தில் ஐந்தாவது பட்டம் பிரதானர் குப்பற்குரிச்சியிற்போய் (௭௱௧)-ம் ஆண்டு சுபானுஹு முதலிலிருந்து (௭௱௰௧)-ம் ஆண்டு விஜயஹு இறந்துபோனார்.

A. D. 1516-
முதல்
1522-வரை.

6. ஆறாவது பட்டம்:— குலசேகரராஜா சம்மதத்தின்மேல் (௭௱௰௨)-ம் ஆண்டு ஆவணி௴ ௫௳ புதன்கிழமையும், அபரபட்ச சதுர்த்தசியும், மூலநட்சத்திரமும், சிங்ககரணமுங்கூடியசுபதினத்தில் வல்லராயத்தேவர் மகன் திரிகூட ராஜகோபாலதேவர் பட்டமும், ஷெயார் தம்பி பெரியசாமி சின்னணைஞ்சாத்தேவர் விசாரிப்பும், இருளணைஞ்சாத்தேவர் சேனைத்தலைமையும் குற்றாலநாதபிள்ளை மகன் திரிகூடநாதபிள்ளை ஸ்தானுதிபதியுமாக ஆண்டுவருங்காலத்தில் குற்றாலநாதசுவாமி கோவிற்குறைவேலை தட்டொட்டியும், பசுப்பிறையும் கலங்காத கண்டிக்கோட்டையும், மேலைச் சொக்கம்பட்டிக் கோட்டையும் (௭௱௭௰௧)-ம் ஆண்டு மன்மதஹு வரை வருடம் ௬௰-க்கு அடங்கல் திருப்பணிச்செலவு பொன் (௨௮௲௨௱௰௧).

A. D. 1536-
முதல்
1595-வரை

இக்காலத்தில் குலசேகர மகாராஜா தம்பி வீரபாண்டிய ராஜாவும், இராஜகுலதேவராகிய மந்திரியுங்கூடி அழகம்பெருமாள் இராஜா



சீவலமாறன் இராஜா, கிரியப்பெருமாள் இராஜா ஆகிய இவர்களைச் சண்டையில் வஞ்சித்துக்கொன்றதற்காகக் கயத்தாற்றிலிருந்த மாவலிவெட்டும் பெருமாள் இராஜா பாளையத்துடன் போர்க்கு வந்தபோது தற்குலசேகரமஹாராஜா குழந்தைகளுடனும், மந்திரிகளுடனும் தற்கொலைசெய்துமாண்டுபோயினர் பின்னர் அம் மாவலிவெட்டும் பெருமாள் இராஜாவே தென்காசியைப் பட்டமெய்தி ஆண்டு வந்தனர்.

இக்காலத்துக்குள், மதுரைமாநகரை ஆண்டுவந்த கர்த்தாக்கள் நால்வராவர். இந்நால்வர் காலத்திலும் சேரனும், சோழனும் படையெடுத்துவந்து அடிக்கடி துன்பஞ்செய்துகொண்டிருந்தார்கள்; இவர்கள் செய்யுந் துன்பஞ் சகிக்கமுடியாமல் இவர்களோடு போர்புரிவதற்கு தெட்சண பாளையகாரரை வரும்படி கர்த்தாக்கள் விரும்பினார்கள். அவ்வேண்டுகோளின்படி ஆறாவதுபட்டம் பிரதானர் தம்பி பெரியசுவாமி சின்னணைஞ்சாத்தேவர், தளகர்த்தர் இருளணைஞ்சாத்தேவர், தாயாதி பெரியணைஞ்சாத்தேவர் ஆகிய மூவருந் தளத்துடன் மதுரைக்குச் சென்று (௭௱௭௰௨)-ம் ஆண்டு துந்துபிஹு முதல் (௭௱௮௰)-ம் ஆண்டு சோபகிருதுஹு வரை எட்டுவருடகாலம் பெரும்போர் நடாத்தி சேரர், சோழர்களை முறிய அடித்து பிரதானர் தம்பி பெரியசுவாமி சின்னணைஞ்சாத்தேவர், தளகர்த்தர் இருளணைஞ்சாத்தேவர் ஆகிய இருவரும் அப்போரிலிறக்கத் தாயாதி பெரியணைஞ்சாத்தேவர் மாத்திரம் திரும்பிவந்தனர்.

இதன்முன் தென்காசியிலுங் கயத்தாற்றிலுமிருந்த அரசர்கள், போர்க்குச்சென்றோர் வருடம் எட்டாகியும் திரும்பிவராத காரணத்தால் போரில் இறந்தனரென்று நினைத்து தத்தம் நாட்டைவிட்டுக் கொச்சிக்குப் போயினர். பின்பு ஆறாவது பட்டம் பிரதானர் குழந்தையில்லாமல் இறந்துபோயினர். ஸ்தானுதிபதி திரிகூடநாதபிள்ளையும் காலஞ்சென்றனர்.

7. ஏழாவது பட்டம்:— அக்காலத்து கர்த்தாக்களின் உத்தரவின்படி (௭௱௮௰௧)-ம்ஆண்டுசுபகிருதுஹுவைகாசி௴ ௰௬௳ வெள்ளிக்கிழமையும், பூர்வபக்கத்தசமியும், கெஜகரணமும், உத்திரநட்சத்திரமுங் கூடிய சுபதினத்தில் வடகரையில் கன்னிமூலைக் கோட்டையைவிட்டு ஈசுரன் மூலைக்கோட்டையில் பெரியணைஞ்சாத்தேவர் குமாரன் குமாரமுத்த

A. D. 1602-
முதல்
1629-வரை.

சின்னணைஞ்சாத்தேவருக்குப்பட்டமும், திரிகூடநாதபிள்ளை சிறிய தகப்பனார் வயித்தியப்பபிள்ளைக்கு ஸ்தானாதிபத்தியமுங் கொடுத்தார்கள். இதுமுதல் அாநடயஎ-ம் ஆண்டு சுக்கில௵வரை வருடம் ருயஎ-க்கு சுவாமி குற்றாலநாதர் தீர்த்தமண்டபம், சுற்றுப்பிரகாரம், நடைகற்பாவல் அடங்கல் திருப்பணிச் செலவு பொன் (யஎதுஉாக. பணம் கவ.) (அாநடயஎ)-ம் ஆண்டு சுக்கில௵ பங்குனி௴ நடயஉ குமாரமுத்து சின்னணைஞ்சாத்தேவர் சிவபதமடைந்தார்.

8. எட்டாவதுபட்டம்:—ஷை யார் சிவபதமடைந்த பின்னர்

A. D. 1630- முதல் 1659-வரை.

அவர்குமாரர் சிவனடியாத்தேவர்(அாநடயஅ)-ம்ஆண்டு சித்திரை௴ 5௳ ஞாயிற்றுக்கிழமை பூர்வபக்கத்தசமியும் கெஜகாணமும் அசுபதி நட்சத்திரமுங்கூடிய சுபதினத்தில் சின்ன வயித்தியப்பபிள்ளை மகன் பெரியபிச்சைப்பிள்ளையை ஸ்தானாபதியாக்கிப் பட்டமெய்தி அரசாண்டனர். அன்று முதல் (அாஅயசு)-ம் ஆண்டு விகாரிவருடம் ஆடி௴ வரை வருடம் (சயகூ)க்குத் திருப்பணிச்செலவு சுவாமி குற்றாலலிங்கம் குழல்வாய்மொழியம்மன் துவஜஸ்தம்ப அஷ்டபந்தன கும்பாபிஷேகம், பிராமண போஜனம், தானம் அடங்கல் பொன் செலவு (எதுருயக.)

கர்த்தா திருமலைநாயக்கர் அவர்களும் தளகர்த்தர் இராமய்யன்

A. D. 1660- முதல் 1721-வரை.

அவர்களும் குற்றாலநாதர் தரிசனத்துக்கு வந்தவர்கள் எல்லாப்பாளையகாரரையும் வரவழைத்து (அாஅஎ)-ம் ஆண்டு நந்தன-௵சித்திரை௴ நடஉ திங்கட்கிழமை பூர்வபட்சபஞ்சமிதிதியும்சிங்ககரணமும்மிருகசீரிஷநட்சத்திரமும்சித்தயோகமுங்கூடியசுபதினத்தில்எட்டாவதுபிரதானர்மகன் பெரியசாமித்தேவருக்குப் பெரியபட்டமும், ஷை யார் தம்பி இராஜகோபால தேவருக்குச் சின்னப்பட்டமும், பிச்சைப்பிள்ளைக்கு ஸ்தானாதிபத்தியமுங் கொடுத்தார்கள். இவ் வைபவத்திற்கு வந்திருந்த மற்றைய பாளையக்காரர்கள் தங்கள் தங்கள் தகுதிக்கேற்ப கர்த்தாக்கள் மரியாதைசெய்ய அதனையேற்று இன்புற்றார்கள். இம்மூவருக்கும் கர்த்தர் திருமலைநாயக்கரவர்கள் ஆபரண முதலியவற்றை அன்புடனளித்து அச்சபையில் இவர்களைக் கௌரவப்படுத்தினர். இவர்கட்கு முன்பட்டயப்படி ஊர் (கூயஎ)-க்குக் குளம் (எயஅ)-ம், திசை



காவலூர் (நயகூ)-க்குப் பட்டயமுங்கொடுத்தார்கள். பின்னர் இம்மூவரும் கர்த்தர் திருமலைநாயக்கர், தளகர்த்தர் இராமய்யனவர்கள் மற்றைய பாளையகாரர் ஆகிய இவர்களோடு காசிப் பராக்கிரமபாண்டியன்செய்த சித்திரசபைக்குச் செப்போடுபோட நாட்செய்தார்கள். பின்னர் சிற்றோடு மேய்ந்திருந்த சபைக்குச் செப்போடுவார்த்துச் சேர்க்கக் கும்பகோணம் சிற்பி தில்லைநாயகம் ஆசாரியையும், குறிச்சி பாப்பான்குளம் சிற்பி இராமனுசாரியையும், தென்காசி சிற்பி நல்ல குற்றாலமாசாரியையும், வரவழைத்து அடங்கல் முடிவுசெய்தது என்னவென்றால் மேலைச்சபை கிழமேல் தச்சுமுழம் (கூமாகாணி)-க்கும் செப்போடு (யசுதுா) கீழைச்சபை கிழமேல் தச்சுமுழம்(யஇ)-க்கும் தென்வடல் தச்சுமுழம் (நஇ)-க்கும் செப்போடு (ருதுய) ஆ வகை இரண்டிற்கும் ஓடு (உயகதுாய). ஷை ஓடு க-க்குப் பலம் (ய)வீதம் ஆ பலம் (உாயகதுா) ஷை பலத்திற்குத் துலாம் (உதுாயக)ஆம். பணம் (க)-க்கு செம்புபலம் இரண்டாகத் துலாமொன்றிற்குப்பொன் (ரு)-ம் துலாம் (உதுாயக)-க்குப் பொன் (யதுருாருயரு) மேலைச்சபைக் கும்பகுடம் (ந) கீழைச்சபைக் கும்பகுடம் (ரு) ஆகக்குடம் (அ) குடம் ஒன்றுக்குத் துலாம் ஒன்று. துலாமொன்றிற்குப் பொன் (ரு) ஆ மொத்தம் பொன் (சய) வகை இரண்டிற்கும் பொன் (யதுருாகூயரு) மேலைச்சபை, கீழைச்சபை கல்வரி, தளவரிசை திருப்பணி அடங்கல் செலவு பொன் (ருாஎய) ஓடு சேர்த்ததிற்குக் கூலி பொன் (நய) பொடிஆணி துலாம் ஒன்றுக்குப்பொன் (ரு) ஆ பொன் (யகதுஉா) உத்திரம், வாரக்கை முதலான மரவகைபொன் (உாருய) ஸ்படிகலிங்கம் பொன் (ருா) சித்திரமெழுதப்பொன் (நா) கும்பாபிஷேகம், பிராமணபோசனம் இரண்டிற்கும் பொன் (எா) பரிசுகொடுத்தது பொன் (துஉாய) ஆ செலவுபொன் (யசதுாசுய).

சபை சுற்றுச்சிகரம், முன்மண்டபம், தெப்பக்குளம், நடுமண்டபம், கோபுரமுள்பட ச-க்குப்பொன் (நாய) தானாதிபதி திருப்பணி பராக்கிரமபாண்டியப் பேரிசாலை கல்மடங்கிணறு வரிக்கல் குத்துக்கல் ஆசாரியன்வெகுமதியுள்படபொன்(நதுருா)தென்காசிஆனைப்பாலம் அடங்கல் கிழமேல் தச்சுமுழம் (உச) தென்வடல் முழம் (நஇ)படித்துறைக் கல்வரிசையுள்பட அடங்கல் பொன் (துருா) ஷை யூர் இருப்புத்துண்டுப்பாலம் முன் மரப்பாலமாக இருந்ததை மாத்தையும், கல்

லையும், திண்ணையுமெடுத்து உயர்த்திக்கட்டப் பழைய கல்லுடனே கிழமேல் தச்சுமுழம் (௫௰௬) தென்வடல் தச்சுமுழம் (௫இ)-க்கு அடங்கல் பொன் (௭௱௫௰) அடங்கல் திருப்பணிச்செலவு பொன் (௨௪௲௨௱௨௰) இப்பட்டம் (௮௱௯௰௬)-ம் ஆண்டு வரை நடைபெற்றது. இக்காலத்து பெரிய பிரதானிகர் எழுவர். சின்னப்பிரதானிகர் பெரியநாயகம்பிள்ளை ஒன்று, பொன்னம்பலப்பிள்ளை ஒன்று ஆக இருவராவர்.

முன்னர்த்தென்மலையார் என்று பெயர்பெற்று இக்காலத்து சிவகிரியென்னும் நகரை ஆள்பவரால் சேற்றூரார் மிக்க துன்பமடைந்தனர். அக்காலத்து சேற்றூரையாண்ட சிவப்பிரகாசத் திருவணுகத் துரையவர்கள் அத்துன்பத்தை நீக்கிக்கொள்ள வடகரையை ஆண்ட பெரியசாமித்துரையவர்களின் உதவிபெற வடகரைக்கு வந்து ௸ துரையவர்களைக்கண்டு,

கரைகாணா திருந்ததுன்பக் கடல் கடந்து
வடகரையுங் கண்டேன் கல்விக்
குறைகாணுந் துரைபெரிய சாமியுங்கண்
டேன்மழைக்கா ரோங்கக் கண்டேன்
நிரைகாணக் குன்றெடுத்த ராஜகோ
பாலனையும் நேரே கண்டேன்
வரைகாணும் படிபுயமும் பூரித்தேன்
நிலைமைபெற்றேன் வாழ்வுற் றேனே.

என்னும் இக்கவியைச்சொன்னார்கள். உடனே பெரியசாமித்துரையவர்கள் மகிழ்ந்து யாம் உதவிக்குச் சேனைகளை அனுப்புகிறோம் என்று வாக்களித்தார்கள். அங்ஙனம் வாக்களித்தபடி சேனைகளை அவர்கள் அனுப்பவில்லை. அதனையறிந்த சிவப்பிரகாச திருவணுதத் துரையவர்கள் அடிக்கடி லிகிதம் எழுதியவண்ணமாக இருந்தனர். இதனையறிந்த ஸ்தானாதிபதி பொன்னம்பலம் பிள்ளையவர்கள் பெரியசாமித்துரையவர்கள் சமுகத்திற்சென்று காலமுமிடமுமறிந்து,

வேலைகள் சூழ்புவி வேந்தர்கள் போற்ற விதிமறையோர்
நூலை யெழுதப் படாதென்று வைத்தனர் நண்ணிசைப்பா
மாலையெழுதப் பரராஜர் மந்திரி மார்கள் மெச்ச
ஓலை யெழுதச் சடையான் இருவ ரொருவனுமே.



என்னுமிக்கவியைக்கூறினர். உடனே துரையவர்கள் பொன்னம்பலம் பிள்ளையை நோக்கி நமது சேனையைச் செலுத்தி தென்மலையாரைச் செயித்து வருகவென்று கட்டளையிட்டனர். அக்கட்டளையின்படி ௸ பிள்ளையவர்கள் சேனையைச் செலுத்தித் தென்மலைக் கோட்டையை அழித்து அவர்களைப் பணியச்செய்த பின்பு தமது படையோடு சேற்றூரை அடைந்து ஜமீந்தாரவர்களைச் சந்தித்தவுடன் ௸ ஜமீந்தாரவர்கள்,

சேற்றூரார் நெஞ்சந் திடப்பட்டார் தென்மலையான்
றோற்றோமென் றோடித் தயருற்றான்—மாற்றலர்கள்
தெண்டனிடுஞ் சின்னணைஞ்சான் சேனாபதிப்பொன்னன்
தண்டிகையைக் கண்டவுடன் றான்.

என்னும் இக்கவியைக்கூறினர். பின்னர் ஒருகாலத்து சேற்றூருக்குப் பொன்னம்பலம்பிள்ளைசென்று அரமனைவாயில் காப்போரை நோக்கி நம்மரையரிடம் வடகரை ஸ்தானாதிபதி பொன்னம்பலம்பிள்ளை வந்துளார் என்று அறிவித்திடுமின் எனக் கூற, உடனே வாயில்காப்போர் அரையருக்கறிவிக்கச் சென்றனர். அவ்வமையம் துரையவர்கள் போஜனஞ்செய்து கரசுத்திசெய்துகொண்டிருந்தார்கள். வாயில்காப்போர் பிள்ளையவர்கள் வரவைக்கூறவே ஜமீந்தாரவர்கள் மிக்க பரபரப்புடன் ஜலபாத்திரத்தை எறிந்துவிட்டு பிள்ளையவர்களைச் சந்தித்தலும் சுத்திபண்ணின கையில் இவர் அறியாவண்ணம் ஒரு அன்னமும் போஜனகாலமாகையால் வலக்கையிற் கிடக்கவேண்டிய கணையாழி இடக்கையிலும் இருக்க; இதனைக்கண்ட பிள்ளையவர்கள்,

ஒருகையிலே யன்ன மொருகையிலே சொன்னம்
வருகையிலே சன்மான வார்த்தை—பெருகுபுகழ்ச்
சீமான் திருவாழ் சிவப்பிரகா சத்திருவைக்
கோமானுக் குள்ள குணம்.

என்னும் இக்கவியைக்கூறிப் புகழ்ந்தனர். இது நிற்க.

இவ்விதந்தென்மலையாரை அடக்கியும் அவர்கள் அடங்கா சேற்றூராருக்குத் துன்பஞ்செய்துவந்தனர். இதனை வடகரை ஸ்

னாதிபதி பொன்னம்பலம் பிள்ளையவர்கள் கர்த்தாக்கள் மந்திரியாய் திருநெல்வேலியிலிருந்த ஆறை அழகப்பமுதலியாரவர்களிடஞ் சென்று சேற்றூராருக்குத்துன்பஞ்செய்யுந் தென்மலையாரை அடக்க நீங்கள் துணைப்படை அனுப்பவேண்டுமென்று கேட்டனர்; அவர் அதற்குடன்படாமல் மறுத்துவிட்டனர். சிலநாட்சென்றுழிப் பொன்னம்பலம்பிள்ளையவர்கள் திருநெல்வேலிக்குப்போய் முதலியாரவர்களைப்பார்க்க அவர்கள் வீட்டுக்குப்போயினர். அவ்வமையம் முதலியாரவர்கள் சிவபூஜைசெய்துகொண்டிருந்தார்கள். பூஜைமுடிந்து வெளியில் வரும்பொழுது பொன்னம்பலம் பிள்ளையவர்கள்,

பத்தியைப் பூஜை முகத்திற்கண்டேன் பர ராஜர்தொழுஞ்
சத்தியைத் தென்மலை மீதிற்கண்டேன் றருப் போன்றசெங்கைக்
கத்தியை ரெட்டி கழுத்திற்கண்டே னன்பைக் கண்ணிற்கண்டேன்
அத்தியழைத்த முகிலே தென்னாறை யழகப் பனே.

என்னும் இக்கவியைக் கூறினார்கள்.

உடனே முதலியாரவர்கள் துணைப்படையனுப்ப அதனைப்பெற்றுத் தென்மலையாரைச் செயித்து சேற்றூரார் துன்பத்தைநீக்கினர். இங்ஙனம் பலமுறை வடகரையாரால் அடக்கப்பட்ட தென்மலையாருக்கு உதவிபுரிந்த ஊற்றுமலைச் ஜமீந்தாரை வஞ்சகமாகக்கொன்றுவிட அவர் மனைவி பூஜைத்தாயார் அவர்கள் மருதப்பதேவர் சிவலவதேவர் என்னும் இரு குழந்தைகளையும் அழைத்துக்கொண்டு தென்காசியை அடைந்து அங்குவசித்திருந்தனர். அங்ஙனம் இருக்குங் காலத்தில் ஒருநாள் தம்பி சிவலவதேவர் கலாசாலைக்குச் செல்லாது விளையாட்டுச் சிறுர்களோடுகூடித் தோடியில் விளையாடிக்கொண்டிருந்தனர். இதனைத் தமையன் மருதப்பதேவர் அறிந்து அடித்தனர். சிவலவதேவர் அழுதுகொண்டுவந்து தாயாருடன் அண்ணையவர்கள் என்னை அடித்தனர் என்று சொன்னார். உடனே அத்தாயாவர்கள்,

தேரோடு நின்று தெருவோடலைகிற செய்திதனை
ஆரோடு சொல்லி முறையிடுவோ மிந்தவம்புவியில்
சீரோடு நாமு நடந்துகொண்டா லிந்தத் தீவினைகள்
வாரா தடாதம்பி சிவல ராய மருதப்பனே.

ன்னும் இக்கவியைக் கூறினார்கள்.



உடனே சிவலவதேவர் தாயாரிடம் அத்துக்கம் வருதற்குக் காரணத்தைச் சொல்லவேண்டுமென்று பிரார்த்தித்துக்கேட்டனர். அத்தாயார் தென்மலையாருக்கு உதவிசெய்ததும் அதற்காக வடகரையார் ஜமீந்தாரைக் கொலைசெய்ததும் முதலியவைகளைத் தெளிவாகச் சொன்னார்கள். உடனே சிவலவதேவர் நமது அரசை நாம் பெற வேண்டுமானால் யாரைத்துணையாகக் கொள்ளவேண்டுமென வினவ, அத்தாயார் வடகரையாராலே இக்காரியமெல்லாம் நடந்தன; ஆகையால் அவர்கள் நமக்குத் துணையாகவிருப்பின் நம்மரசை நாம் பெறலாமென்று கூறினர். சிவலவதேவர் அம்மணி யான் சிறுவனாயிற்றே யான் அரசரை எவ்வாறு போய்ப்பார்ப்பது என்று கூறினார். அத்தாயார் குழந்தாய் வடகரை ஸ்தானாதிபதி பொன்னம்பலம்பிள்ளையைப் பார்த்து நமது துக்கத்தைச் சொல்லின் அவர் மிகச்சமர்த்தர் இராஜதரிசனமுஞ்செய்வித்து நமது அரசையும் நிலைபெறச்செய்வரென்று பகர்ந்தனர். உடனே சிவலவதேவர் வடகரையை அடைந்து பொன்னம்பலம்பிள்ளை வீட்டிற்குச் சென்றனர். பொன்னம்பலம் பிள்ளை அரமனையிலிருந்து வந்தவுடன் ஸ்நானத்திற்குச்சென்று ஸ்நானம்பண்ணிப் போஜனஞ்செய்துகொண்டிருக்கும்பொழுது அரமனையிலிருந்து ஏவலாளர்கள் அரையர் உங்களை யழைத்துவரும்படி கட்டளையிட்டனர் எனக்கூற, உடனே பொனனம்பலம்பிள்ளை புறப்பட்டு வெளியில்வந்து திண்ணையில் வீற்றிருக்கும் சிவலவதேவரிடத்தில் இராஜ இலக்கணங்கள் விளங்குவதை அறிந்து ஐய நீவிர் யாரென வினவ அவர் யான் ஊற்றுமலை, தங்களைப்பார்க்கவந்தேன், என்றனர். பிள்ளையவர்கள் எல்லாவற்றையும் விஜாரித்து தாங்கள் இப்படி என் வீட்டிற்கு எழுந்தருளின் என்றலை பொறுக்குமாவென்று உபசா வார்த்தைகள் சொல்லி போஜனத்திற்கெழுந்தருளச்செய்து போ னஞ் செய்வித்துப்பின்னர் ஐய சிறிது சிரமபரிகாரஞ்செய்துகொ ளுங்கள் யான் அரையரிடஞ்சென்று வருகிறேன் என்று சொல் விடைபெற்றுச்சென்று அரையரையடைந்து அவருடன் இராஜாங் காரியங்களைப்பற்றிப் பேசிக்கொண்டிருக்கும்போது சிவலவதேவ பாற்கொண்ட அன்பால் நாமளித்த ஊற்றுமலையார் எட்டயபுர தாரைத் துணையாகக் கொள்வதாக நான் கேள்விப்படுகிறேன் என் சொல்லி உடனே நாமே அளித்த ஜமீனை நாமே நிலைநிறுத்திவை

தால் நங்கீர்த்தி உலகமெல்லாம் நிலைபெறும் என்று கூறினர். உடனே அரையர் உமது அபிப்பிராயம் எப்படியோ அப்படியே செய்க வெனக் கட்டளையிட்டனர். பின்னர் பொன்னம்பலம்பிள்ளை மருதப்பதுரையையும், பூஜைத்தாயாரையும் பல்லக்கனுப்பி வரவழைத்து சீவலப்பதேவருடன் வடகரையில் இருக்கச்செய்து, தான் பாளையத்துடன் ஊற்றுமலைக்குச் சென்று கோட்டை முதலியவைகளையெல்லாம் செய்வித்து கோட்டைவாசல் நிலைநாட்டும், இலக்கினமும், கிருகப்பிரவேச இலக்கினமும் ஒன்றாகவைத்து ஷை மூவர்களையும் வடகரையிலிருந்து வரவழைத்தனர். அவர்கள் வந்திறங்கிக் கோட்டை வாசலுக்குட் புகும்போது பூஜைத்தாயாரவர்கள்,

> கூட்டினுன் மிகுந்தபா ளயக்காரர் சேகரத்தைக் குறைவராமல்
> சூட்டினுன் மணிமகுடந் துரைபெரிய சாமிசெய்யுஞ் சுகிர்தத்தாலே
> தீட்டினு னம்பலம்பொன் னம்பலத்தான் திரிகூட வரையிற்கீர்த்தி
> நாட்டினு னூற்றுமலை நாட்டரசு தழைக்கநிலை நாட்டினுனே.

என்னும் இப்பாடலைக்கூறிப் பொன்னம்பலம்பிள்ளையை மகிழ்வித்தார்கள்.

பின்னர்த் தென்மலையாரென்ற சிவகிரியார் இராமநாதபுரத்திற்குச்சென்று சேதுபதியவர்களிடம் வடகரையார் செய்தவற்றையெல்லாஞ் சொன்னார்கள். அவர்கள், வடகரையாருக்கு (சேதுபதிகாத்த விஜயரகுநாத சேதுபதி செம்புலிச்சின்னணைஞ்சாத்தேவனுக்கு எழுதியது) என்று மரியாதைக்குறைவாக எழுதினார்கள். உடனே செம்புலிச் சின்னணைஞ்சாத்தேவர், [திரிகூடபதிகாத்த செம்புலிச்சின்னணைஞ்சாத்தேவர் விஜயரகுநாததேவனுக்கெழுதிய]தென்று எழுதினார்கள். உடனே சேதுபதிமன்னர் படையெடுத்து வடகரையார்மேற் போர்செய்யவந்தனர். அப்பொழுது இந்த ஜில்லாவிலிருந்த பாளையக்காரரெல்லாம் வடகரையாருக்குத் துணையாகவந்தமையால் சேதுபதி மன்னர் சேனை முறியும்படி நேரிட்டது. இஃதிங்ஙனமாக அக்காலத்து சங்கரநயினார்கோவிலிலிருந்து எழுந்தருளும் நாயகரை சென்னகசணபட்டரென்பவர் களவுசெய்துகொண்டுபோய்த் திருவுத்தரகோசமங்கையில் அடக்கஞ்செய்து வைத்துவிட்டனர் இதனை சேதுபதியவர்களறிந்து ஷை சுவாமியை ஷை கோவிலில்வைத்து பூஜைநடாத்தி



வரும்படி உத்தரவுசெய்தார்கள். சங்கரநயினார்கோவிலிலுள்ளார்கள் சுவாமிகளவுபோன விஷயத்தைத் திருநெல்வேலிஜில்லா மந்திரியாகிய ஆறை அழகப்பமுதலியார் அவர்களிடம் முறையிட்டார்கள். ஷை முதலியாரவர்கள் சுவாமி கோவிலில்வந்து சேரும்வரையும் யான் போஜனஞ்செய்யேன் பாற்கஞ்சிமாத்திரஞ் சாப்பிடுவேனென்று விரதஞ்செய்துகொண்டு பாளையக்காரரிடத்திலுள்ள ஸ்தானாதிபதிகளையெல்லாம் வரவழைத்து துப்புவிசாரித்து இராமநாதபுரத்திலிருக்கிறதென்று தெரிந்து அவர்களை ஷை சுவாமியைக்கொண்டுவரும்படி கட்டளையிட்டனர். அவர்கள் எங்களால் இயலாது வடகரைஸ்தானாதிபதி பொன்னம்பலம் பிள்ளையவர்கள் கொண்டுவந்தாற் கொண்டுவரலாம் என்றுசொன்னார்கள்.

இஃதிங்ஙனமாக அக்காலத்து தேசமந்திரியாகிய ஆறை அழகப்ப முதலியார் தன்கொலுமுகத்துக்கு வருபவர்கள் தன்னை வணங்கிச்செல்லும் அடையாளத்தை உலகத்தார் அறியும்வண்ணம் தன்முன் சேறு செய்து அதில் கோடி வஸ்திரத்தை விரித்து அதன்மேல் வீழ்ந்து வணங்கும்படி செய்துவந்தனர். இதனால் வடகரையார் முதலியோர்கள் ஒருவருஞ்செல்லாது, தாங்கள் கப்பத்தை மாத்திரம் செலுத்திவந்தார்கள். வடகரையார் தன்னைவந்து வணங்காதிருந்தல்பற்றி அவர்களிடத்து முதலியார் அவர்கள் கோபங்கொண்டிருப்பினும் வேறெவ்விதத்தாலும் அவர்களைப் பணியச்செய்ய ஏதுவில்லை. இங்ஙனமவர்கள் முதலியாரவர்களை மதியாதிருப்பினும் அவர்களால் காரியம் நடைபெற வேண்டியதாயிருந்ததனால் ஷை முதலியார் தன்னுடைய உத்தியோகஸ்தரொருவரை அனுப்பினர். அவர் சென்று வடகரையாரிடஞ் சொல்ல அவர்கள் பொன்னம்பலம்பிள்ளையைத் திருநெல்வேலிக்கனுப்பினார்கள். அவர் புறப்பட்டுவந்து முதலியாரைக்கண்டனர். உடனே முதலியார் சந்தோஷப்பட்டு சுவாமி களவுபோன விபரமெல்லாம் தெளிவாகச் சொல்லி, மிக்க அன்பு பாராட்டித் தன்னிடத்திலிருக்கும்படி செய்தனர். இங்ஙனமிருக்குங்காலத்தில் பொன்னம்பலம்பிள்ளைக்கு ஒருநாள் விரதினமாகையால் முதலியாரவர்கள் தலைசிட்பிள்ளையை நோக்கி ஸ்தானாதி

பதிப்பிள்ளைக்கு வடைசெய்தனுப்பென்று கட்டளையிட்டனர். அவனங்ஙனமே செய்து அவர்கட்குக் கொடுத்தான். மறுநாட் காலையில் பொன்னம்பலம்பிள்ளை முதலியாரவர்கள் கொலுவிருக்குமிடத்திற்கு வந்தார். உடனே பிள்ளையவர்களைப்பார்த்து பலகாரம் நன்றாயிருந்ததாவென்றுவினவினார்கள். நன்றாயிருந்தது சமையற்காரன் சிறிது பாகத்தைச் செலவுசெய்துவிட்டான் என்றனர். உடனே முதலியாரவர்கள் தவசிப்பிள்ளையை அழைத்து நீயிந்தக் குற்றஞ்செய்ததற்காக உன்னை முக்காலி கட்டியடிக்கும்படி கட்டளையிட்டிருக்கிறோம் என்றனர். ஐயா யான் ஒரு செலவுஞ்செய்யவில்லையே என்று மிக்க பரிதாபத்துடன் சொன்னான். அப்பொழுது பொன்னம்பலம்பிள்ளை யாவருக்கும் நகையுண்டாகும்வண்ணம் வடைமத்தியில் ஒரு தமர் செய்து கொண்டுவந்தான் இதுதான் அவன்செய்த செலவென்றனர். இதைக்கேட்ட முதலியாரவர்கள் வெட்கமடைந்திருந்தனர். பின்னர் ஒருநாள் முதலியார்வீட்டில் திதிநடந்தது. அத்திதிக்கு அநேகம் பிரபுக்கள் போஜனத்திற்குவந்து இலையின் முன்பிருந்தார்கள். முதலியாரவர்கள் பந்தியைப்பார்த்துச் சமயற்காரர்களைப் பறிமாறச்சொல்லி நின்றுகொண்டிருந்தனர். பொன்னம்பலம்பிள்ளை வருவதற்குச் சிறிது தாமதமானதால் பள்ளமாகிய இடத்திலிருந்த ஒரு இலையில் உட்கார்த்தினர். முதலியார் அவர்கள் பொன்னம்பலம்பிள்ளையை அவமானப்படுத்தவேண்டுமென்றெண்ணங்கொண்டு தவசிப்பிள்ளைகளைநோக்கிப் பள்ளப்பந்தியைக் கவனமாகவிசாரியுங்கள் என்றுகூறினார்கள். உடனே பொன்னம்பலம்பிள்ளையவர்கள் எஜமான் குடும்பப்பிரதானியாகவிருந்து பந்திவிசாரிக்கும்பொழுது பள்ளப்பந்திக்கு யாதொரு குறையும் வராதென்று கூறினார்கள். இவ்விதம் சாதுரியமாகப் பேசுந்திறமையைக்கண்ட முதலியாரவர்கள் இவர் சென்றால் நமதுகாரியம் சித்தியாகுமென்றெண்ணி இவருடன் சுவாமியிருக்கும் இடமெல்லாஞ்சொல்லி வேண்டியபணங்களும் இனாமாகவளித்து துணைக்கு நூறுமனிதர்களையும் அனுப்பிவைத்தனர். உடனே பொன்னம்பலம்பிள்ளையவர்கள் தன்னோடு வடகரையிலிருந்து வந்திருந்த நூறுபேருடன் முதலியாரவர்கள் அனுப்பிய நூறு பேரையும் அழைத்துக்கொண்டு இராமநாதபுரஞ்சென்றனர். அங்கு சேதுபதியவர்கள் தரிசனங்கிடையாமல் ஒருவாரங்காத்திருந்தனர். சேதுபதி



யவர்கள் காவடிகளைமாத்திரம் கொலுமுகப்பிற்குவரலாமென்று செய்திருந்த உத்தரவையறிந்து ஒரு காவடி கட்டிப் பழநிக்குச்செலுத்தப்போவதாகச்சொல்லிப் பரிசனங்களை மேளகாரர் முதலியோர்களாக வேடந்தரிக்கும்படிசெய்து மிக்க ஆவேசம் வந்ததாகப் பாவனைபண்ணிப் பாராச்சாவடியைக்கடந்து கொலுமுகப்பிற்குவந்துசேர்ந்தனர். இக்காவடி வருவதையறிந்த சேதுபதியவர்கள் இருக்கையைவிட்டெழுந்து காவடிக்கு முன்னர்வந்தனர். வந்தவுடன் காவடிக்குத் தீபாராதனைநடந்தது; உடனே சேதுபதியவர்கள் காவடியைப்பார்த்துக் கையைக்குவித்தனர்; அச்சமயத்திற் பொன்னம்பலம்பிள்ளையவர்கள் காவடியைப்பக்கத்திலுள்ளவர் கையிற்கொடுத்துவிட்டு சேதுபதியவர்களை நமஸ்காரஞ்செய்து எழுந்து,

தேனாட்டு முல்லை ரகுநாத சேது பதியைக்கண்டு
பூனாட்டு மன்னர் தொழாதவ ரார்தெய்வப் பூணணிந்த
வானாட் டரம்பையர் மண்ணாட் டரசர் மணத்துக்குநற்
கானாட்டும்போது நிலைநாட்டுங் காரியங் கண்டு கொண்டேன்.

எனவும்,

சேதுபதி யென்றுநர சென்மமெடுத் தாய்கமல
மாதுபதிக் குன்னையன்றி வாயாதே—நீதிபதி
நீயே விஜய ரகுநாத னின்னீன்ற
தாயே யருட்கோ சலை.

எனவும்,

இவ்விரு கவிகளையுங் கூறினார். உடனே சேதுபதிமன்னரவர்கள் என் பெயரைப் பலர்சொல்லக் கேள்வியுற்றிருப்பீர் * ஆரண்மனைப்பெயரை எப்படித் தெரிந்துளீர் எனக் கேட்க அதற்கு அவர் சரசுவதித்தாயார் தெரியும்படி செய்தனர் என்றார். சேதுபதியவர்கள் இவர்கடாக்ஷ வித்துவானென்று தீர்மானித்துத் தான் ஒற்றைக்கல் திண்ணையிலிருந்துகொண்டு பொன்னம்பலம்பிள்ளையையும் கூடவிருக்கும்படி கட்டளையிட்டார்கள். பொன்னம்பலம்பிள்ளையவர்கள்

* ஆரண்மனையென்றது சேதுபதியவர்கள் தாயார் பெயரைக் குழூஉக்குறியாகக் குறித்ததாம்.

அநேக வித்துவான்களும் ஸ்தானாதிபதிகளும் நிற்கையில் தானுட்காருதல் சரியல்லவென்று தீர்மானித்து சேதுபதியவர்களைநோக்கி மஹாராஜாவே! ஆடித்தவித்த கவிமத்தளத்திலேறி இருப்பதுபோல அடியேன்மாத்திரமிருத்தல் தகாதென்றனர். இதனைச் சேதுபதியவர்கள் கேட்டு நகைப்புற்று ஸ்தானாதிபதிகள் வித்வான்களில் மூன்றுபேர்களை அவருடன் உட்காரும்படி உத்தரவுசெய்தார்கள். [இதற்குச்சான்று பிதா அவர்கள் பொன்னுச்சாமித்தேவரவர்களிடம் போயிருக்கும்பொழுது முன்னர்ப் பொன்னம்பலம்பிள்ளையால் சேதுபதியவர்களுடன் சமாசனம்பெற்ற ஸ்தானாதிபதிகளின் சந்ததியார்கள் பிதா அவர்களை வந்து தரிசனஞ்செய்து சேதுபதிகள் இப்பொழுதும் எங்களுக்குக் கொடுக்கும் பெருமை தங்கள் ஸ்தானாதிபதியாலானதென்று சொல்லிப் புகழ்ந்தனராம்]. பிதா அவர்கள் திருவாவடுதுறை ஆதீனம் மகா சந்நிதானத்தினுத்தரவின்வண்ணம் ஆண்டு சென்றிருந்தனர்களென்பது பொன்னுச்சாமித்தேவரவர்கள் மகா சந்நிதானத்தின்பேரிலும், மகா சந்நிதானம் பொன்னுச்சாமித்தேவரவர்கள்பேரிலும் கூறிய அடியில் வருங்கவிகளால் வெளியாகும்.

---

உ

சிவமயம்.

### ஸ்ரீமஹா ஸந்நிதானத்தின் பேரில், பொன்னுசாமித்தேவரவர்கள் இயற்றிய பாடல்.

"சீர்பூத்தவுவரிசீர்த்திரளுவரென்மூன்றினிகர்செயலஞ்சாமற்
பார்பூத்தவுளத்தின்வலிதுறஞ்சூழ்ச்சியெணிக்கொளீஇப்பாலன்பேரைக்
கார்பூத்தவரவுகனல்கழுக்கரந்துகருணைபுர்தக்களிப்பின்வந்திப்
பார்பூத்தசங்கரனைச்சுப்ரமண்யதேசிகனைப்பரசிவாழ்வாம். (க)

கடிதஞ்சல்வழிமுன்மதிகாட்டுதேதிகளுவொன்றுகாணுநாளிற்
கடிதஞ்செய்சுந்தரனுமெந்தைபுனைபூதியொடெங்கனிவினுய்த்த
கடிதஞ்சார்த்ததமுடியைக்காட்டியதனுட்பொருளுங்கண்டேன்கன்மந்
கடிதஞ்சமென்றூர்மேற்கண்பரப்புஞ்சுப்ரமண்யகருணைவாழ்வே. (உ)

பரிகரிநடாத்தொட்டம்பார்ப்பான்கூடற்கேகிப்பயின்றேனங்க
ணரிகரியெற்பற்றியநோயெவ்வளவோவவ்வளவுமணியார்வெள்ளிக்
கிரிகரியாயனைத்துள்ளுநிறைந்தபிரானருள்வலியாற்கெடுத்தப்பின்னைற்
புரிகரிசின்றிப்புகுவானுன்னிவர்தேன்பாம்பனுக்குப்புகழ்க்கோமானே. (ங)



வந்தமைகைவர்தனவான்மற்றைநாட்பதிபுகுவேன்மறவாதென்னைச்
சிந்தையுண்ணீவைத்ததுங்காண்பான்கருதுமருளுமியான்றேறேனல்லே
னெந்தையதற்கமயமுளதியம்புவல்பின்னென்செய்வேனீரைந்தாண்டா
னொந்துளேனுணர்தருவாதிலெம்மனோர்பரவுநோன்றாளோனே. (ச)

உக்கம்பட்டிடையார்களுயர்த்தகிமிர்பெருவாழ்வுமுவர்வேலாய
வக்கம்பட்டிடைந்தவர்பாலனுபவிக்குமின்பமுமெய்யாகாவந்தோ
பொக்கம்பட்டியமனுணவாகாதீரெனப்புகலும்புனிதர்பெம்மான்
சொக்கம்பட்டித்தலைவர்க்காண்குவலுன்சொல்வழியான்றுறவரேறே. (ரு)

### பொன்னுசாமித்தேவரவர்களுக்கு ஸ்ரீமஹா சந்நிதானத்திலெழுதியனுப்பிய பாடல்.

திருமலியுந்தென்முகவைப்பதியினிலெங்கண்மணியிற்றிகழ்ந்துநாமுன்
புரிதவத்திற்கேபயனுப்பெற்றபொன்னுச்சாமிமன்னன்புனிதவாக்கா
லருமையாயியற்றியநற்பாடல்களைந்தின்சுவையையறியுந்தோறும்
பெருமையினைப்பேசுதற்குச்சேடனைப்போலாயிரநாப்பெற்றேமல்லேம். ()

வேறு.

சீர்பெறுமமுதஞ்சிறந்தபாற்கடலுட்டேவர்கள்கலங்கிடுதலின்று
லேர்பெறுசசிபாலெய்தலுங்கயநோயெழில்குறைந்திடுதலுங்கண்டு
தார்பெறுபொன்னுச்சாமிநின்வாக்கிற்கலந்துசார்ந்திருத்தலாலிந்தப்
பார்பெறுமன்னநினதுபாட்டினிலமைபகர்வதற்கெளியதோவெமக்கே. (உ)

கலித்துறை.

என்போற்றுறவரோர்கோடியுன்றனக்கென்றனக்கோ
வுன்போலரசருனையன்றிவேறிலையொண்மதிக்கு
மின்போலொளிருங்குமுதமனேகமவ்வெண்மதியந்
தன்போற்குமுதத்திற்குண்டோவவனியிற்றூர்மனனே.

---

இவ்விதஞ் சமாசனம்பெற்றுப் பொன்னம்பலம்பிள்ளை சிலகாலம் இராமநாதபுரத்திலிருந்து சேதுபதியவர்களிடம் வடகரைக்கு வர விடைபெற்றுக்கொள்ளும்பொழுது தாங்கருதிவந்த காரியத்தை நிறைவேற்ற எண்ணி அடியேன் ஊருக்குச்செல்ல உத்தரவளிப்ப

தோடு திருவுத்தரகோசமங்கை தெரிசனஞ்செய்ய *கிள்ளாக்கையுங்
கொடுக்கவேண்டுமென்றனர். உடனே சுவாமிதெரிசனஞ்செய்ய
சேதுபதியவர்கள் கிள்ளாக்கை கொடுத்தார்கள். அவர் உடனே
புறப்பட்டு திருவுத்தரகோசமங்கைக்கு வந்து குடவரைவாசல் தெரி
சனஞ்செய்யும்பொழுது கோவிலிலிருக்கும் சுவாமிகள் பெயரெல்லாம்
நன்றாகத் தெரிந்த பட்டர் யாரென்று ஆங்குள்ளாரை விசாரித்தனர்.
அவர்கள் ஒரு பட்டரைக்குறித்தனர். உடனே ஒருவரை அனுப்பி
அவரை வரவழைத்து ஐய! எல்லா சுவாமிகட்கும் தீபாராதனை நடக்
கவேண்டும். நடக்கும்பொழுது அந்தந்த மூர்த்தங்கள் பிரதிட்டை
செய்ததற்கு ஐதிகமும் சொல்லவேண்டுமென்றனர். உடனே பட்டர்
அழைத்துக்கொண்டுபோய் தீபாராதனைசெய்து அம்மூர்த்திகள் பிர
திட்டை செய்தற்குக் காரணமும் கூறிவந்தனர். சங்கரநாராயணர்
கோவிற் சுவாமிக்குந் தீபாராதனைசெய்து, அந்த மூர்த்தம் வந்த வர
லாற்றையுஞ் சொன்னார். அதனைக்கேட்டுப் பிள்ளையவர்கள் தாம்
சுவாமியை வினவினதாக வொருபாடலும், அவ்வினாவிற்கு சுவாமி
விடைகொடுத்ததாக வொரு பாடலுமாக,

புற்றெங்கே புன்னை வனமெங்கே பொற்கோயிற்
சுற்றெங்கே நாக சுனையெங்கே—இத்தனையும்
சேரத்தா னங்கிருக்கத் தேவரீ தான்றனித்துத்
தூரத்தே வந்ததென்ன சொல்.

விள்ளுவமோ சீராசை வீடுவிட்டுக் காடுதனில்
நள்ளிருளிற் செண்பகக்கண் நம்பியான்—மெள்ளவே
ஆடெடுக்குங் கள்வரைப்போ லஞ்சா தெமைக்கரிசற்
காடுதொறு மேயிழுத்தக் கால்.

இவ்விருகவியுங் கூறிச் சுவாமி தரிசனஞ்செய்து இராமநாத
புரத்திற்குத் திரும்பிவந்து சேதுபதியவர்களைக் கண்டனர். உடனே
சேதுபதியவர்கள் பிள்ளையவர்களை நோக்கி சுவாமிதெரிசன முடிந்த
தாவென்றுகேட்க, உடனே பிள்ளையவர்கள் இவ்விரு கவியையுங்
கூறினார். சேதுபதியவர்கள் இக்கவியைக்கேட்டு இவர்கடாக்ஷ வித்து

* கிள்ளாக்கையென்பது அரசருடைய நகக்குறியை ஏற்றிருக்கும் இலை;
இதனைக்கொண்டு வருபவர்களை மிக்க மரியாதையுடன் நடத்துவார்கள்.



வாளென்று புகழ்ந்து உமது இஷ்டம்போல் ஷடி சுவாமியை சங்கர
நாராயணர் கோவிலிற் சேர்த்துவிடுவோமென்று சொன்னார்கள். பிள்
ளையவர்கள் சந்தோஷமடைந்தார்கள். சேதுபதியவர்கள் சுவாமியை
மேளவாத்தியத்துடன் பூஜை நைவேத்திய முதலியன குறைவில்லா
மல் நடத்திச் சங்கரநாராயணர் கோவிலிற் கொண்டுசேர்க்கும்படி
கிள்ளாக்கை கொடுத்தார்கள். அதனைப்பெற்றவுடன் ஆறை அழ
கப்ப முதலியாருக்கு நான்சுவாமியை எழுந்தருளப்பண்ணிக்கொண்டு
வருகிறேன் தாங்கள் என்னைத் திருமங்கலத்தில் வந்து சந்திக்கிற
தென்று ஒருவரிடத்திற் சொல்லியனுப்பிவிட்டு இவர் இராமநாத
புரத்தைவிட்டுத் திருமங்கலம் வந்துசேர்ந்தனர். உடனே முதலியா
ரவர்களும் திருமங்கலம் வந்து சேர்ந்து சுவாமியைத் தரிசனஞ்
செய்து பொன்னம்பலம்பிள்ளையைக் கண்டு மிக்க அன்பாய்ப்பேசி
யிருந்தனர். பின்னர் இருவருஞ் சுவாமியைக் கொண்டு சங்கர நாரா
யணர் கோவிலில் சேர்த்தார்கள். இக்காரியத்தைச் செய்து முதலியா
ரவர்களை மிகச் சந்தோஷப்படுத்தினர் பொன்னம்பலம்பிள்ளை. சில
நாட்கழித்து முதலியாரிடம் போகும்போது எட்டயபுரம் ஸ்தானாதி
பதிமுத்துப்பிள்ளை வருவதையுங்கண்டு அவரிடஞ்சென்றுநாமிருவரு
மின்று சேர்ந்து முதலியாரைப் பார்க்க நேர்ந்ததால் அவர் காதைப்
பிடித்தாட்டிவிடவேண்டுமென, அப்படியே செய்கிறதென்று பேசிக்
கொண்டார்கள். அவ்வண்ணமே முதலியாரிடஞ்சென்று வார்த்தை
யாடும்பொழுது பொன்னம்பலம்பிள்ளை அடிக்கடி முதலியார் காதைப்
பார்க்க என்ன பார்க்கிறீரென்று முதலியார் கேட்க, எஜமான் காதுக்
கடுக்கனைப் பார்க்கிறேன் வெள்ளெழுத்தால் நன்றாய்த் தெரியவில்லை
யென்று பொன்னம்பலம் பிள்ளை சொல்லினர். முதலியார் உடனே
கண்ணாடி கொண்டுவரச்சொல்லி நன்றாய்ப் பார்க்கச்சொல்ல, பொன்
னம்பலம்பிள்ளை முதலியார் காதைப்பிடித்துக்கொண்டு பொன்னும்
முத்துங் கூடினாலழகு பறவாதாவென்று இரண்டு மூன்று தரம்
காதை அசைத்துச் சொன்னார்.

இவ்விதஞ் சென்றவிடமெங்குங் கல்வித்திறமைகாட்டிய ஸ்தா
னாதிபதி பொன்னம்பலம்பிள்ளையை வைத்தாண்ட செம்புலி சின்ன
ணைஞ்சாத்தேவர் இராஜகோபால தேவர் ஆகிய இருவர்களில் மூத்த
வருக்கு குமார சின்னணைஞ்சய்யா, சிவராமய்யா என்ற இரண்டு

ஆண்குழந்தைகளும் பூவாத்தாள் என்ற ஒரு பெண்ணும் ஆகிய மூன்று குழந்தைகள் இருந்தனர். இளையவருக்கு ஏழு ஆண்குழந்தைகள் இருந்தனர். மூத்தவர் குமாரராகிய குமார சின்னணைஞ்சாத்தேவர் பின்னர் ஒருமுறை தென்மலையை அழித்துத் திரும்பிவந்தனர். இவர்தம்பி சிவராமய்யா வைசூரிநோயால் இறந்துபோயினர். பூவாத்தாளவர்களை சுண்டைக்காய் வீரப்பதேவர்மகன் பெரியசாமித்தேவருக்கு விவாகஞ்செய்து கொடுத்தார்கள். சின்னப்பட்டமும் பெரியபட்டமுமெய்தியிருந்த பெரியசாமி செம்புலிச்சின்னணைஞ்சாத்தேவரவர்களையும் இராஜகோபாலதேவரவர்களையும் சிலையாகவகுத்து அச் சிலைகளைக் குற்றாலநாதசுவாமி துவஜஸ்தம்பத்துக்குத் தெற்குப் பக்கம் வடக்கு நோக்கிய தூணில் விட்டிருத்தலை இன்றுங்காணலாம். இவர்கள் இறந்தகாலத்து பொன்னம்பலம்பிள்ளையவர்கள்,

வாறு டரசாளப் போன மதப்புலிதான்
தாறு பதிதனையுந் தானழைத்துப் போகாதோ
சேறு பதிராஜன் சின்னணைஞ்சான் போனவழி
போறு வொழியமனப் புண்பாடு தீராதே.

என்னும் இக்கவியைக் கூறினர்.

A. D. 1722- முதல் 1728-வரை.

இவர்கள் காலத்திற்குப்பின் (அ௲௩௱௯௰௭)-ஆண்டு சுபகிருது வருடம் ஆவணிமாதம் ௩௨ புதன்கிழமையும் அபர பட்ச சஷ்டியும் ஆனைக்கரணமும் அசுபதி நட்சத்திரமும் கூடிய சுபதினத்தில் ஷெயார் தம்பிமக்கள் ஏழுவருள் மூத்தவர் திருமலைக்குமார சின்னணைஞ்சாத்தேவர்க்குப் பெரிய பட்டமும், ஷெ தம்பி சிவராம சின்னணைஞ்சாத்தேவர்க்குச் சின்னப்பட்டமுங்கட்டி ஸ்தானாதிபதி பிச்சைப்பிள்ளை மகன் பெரியநாயகம்பிள்ளையையும் ஷெ பொன்னம்பலம்பிள்ளையையும் ஸ்தானாதிபதியாகவும் நியமித்தார்கள். இப் பெரிய பட்டத்திலிருந்தவர் (௲௭௱௨௰௮) ஆண்டுவரை ஆண்டுவந்தனர்.

A. D. 1729- முதல் 1731-வரை.

இவர் காலஞ்சென்றபின்னர் (௲௭௱௨௰௯) ஆண்டுமுதல் சின்னப் பட்டத்திலிருந்த சிவராமசின்னணைஞ்சாத்தேவர் பெரிய பட்டமாகவும் பெரியநாயகம்பிள்ளையும் பொன்னம்பலம் பிள்ளையுமாகிய இருவரும் ஸ்தானாதிபதியாகவும் இருந்து (௲௭௱௩௰௧)-ம் ஆண்டு பரீதாபி-௵ ஆடி௴ வரை ஆண்டனர். இக்காலத்தில் திருமலையாண்டவர்கோவில் மலைமேலிருந்த சுனையைப் பெரிதாகச்செய்யவும் திருமலைக்குமாருப்பிள்ளையவர்கள்செய்த திருப்பணிக் குறைநின்றதை யெடுத்துக்கட்டி முடிக்கவும் மண்டபச்சுற்றுப்பிரகாரங்குறைவேலை செய்யவும் ஷெ சுனையில் பூவெடுத்தல் புண்ணியாவாசனம் அபிஷேகக்கட்டளை ஆகிய இவைகள் செய்யவும் செலவுபொன் (௭௲௩௱)-இக்காலத்தில் பொன்னம்பலம் பிள்ளை குற்றாலத்தில் தனக்கு முன்னிருந்த ஸ்தானாதிபதி வயித்தியப்பபிள்ளை யென்பவர் தன்பெயரால் வயித்தியப்பவிலாசமென்று ஒன்று தன் சொந்தத்திலிருந்து செலவுசெய்து கட்டிமுடித்ததுபோல என் பெயராலும் ஒன்று குற்றாலத்தில் அங்ஙனஞ்செய்ய வேண்டுமென்றனர். அதற்கு இவர்கள் இடங்கொடாததினால் திருமலையிலாவது இடங்கொடுக்கவேண்டுமென்று கேட்டதற்கும் சிவராம சின்னணைஞ்சாத்தேவர் இடங்கொடோமென்றுகோபித்துக்கொண்டபொழுது பொன்னம்பலம்பிள்ளை,

என்றுவரு மென்றுவரு மென்றிருந்தேன் றிவ்யகுணக்
குன்றமே கோபங் குறியாதே—மன்றுதனில்
செம்பியன்போல் வாழுஞ் சிவராம தேவமன்னா
அம்புவிமேற் செம்புலிப்பட் டம்.

என்னும் இக்கவியைக் கூறினர்.

அதன்பின்னர் தம் மனம்போல் உத்தரவுகொடாமையால் அவ்விடத்தினின்றும் புறப்பட்டுச் சங்கரநயினார் கோவிலுக்குப்போய்ச் சுவாமிதரிசனஞ் செய்யும்பொழுது,

காவிக் கலையிலை யோகப்ப லேறக் கடலிலையோ
ஆவிக்கு மீளப் பிறப்பிலை யோகல்வி லம்புதனை
யேவிப் பிளப்பது போலே யிதமறி யாதவரைச்
சேவிப்ப ரோசிவ சங்கர ராசைச் சிவக்கொழுந்தே.

என்னும் இக்கவியைக்கூறித் துதித்துப்பின்னர் அவ்விடத்தினின்றும் புறப்பட்டுத் திருநெல்வேலிக்குவந்து தளவாய் ஆறை அழகப்ப முதலியாரிடஞ்சென்று,

தானு பதியெனும் பேர்மாத்திர மென்றமிழ ருமை
ஆனு லறிவது நீமாத் திரமெனக் காதரவு

நானு விதத்திலுங் காணே னுனைமுற்று நம்பிவந்தேன்
மானுப ராதொண்டை நாடா வழகப்ப மன்னவனே.

என்றபாடலைக்கூறினர்.

இப்பாடலைக்கேட்டு முதலியார் அவரிடத்ததிக அன்புபாராட்டித் தம்மோடிருக்கும்படி செய்தனர்.

இங்ஙனம் பொன்னம்பலம்பிள்ளை முதலியாரிடமிருத்தலையறிந்த ஆண்டுள்ள சிலர் சிவராம சின்னணைஞ்சாத்தேவரவர்களிடம் வந்து, ஐய தங்கள் தானுபதிப்பிள்ளை முதலியாரிடமிருக்கின்றனர்; அவ ரங்கிருத்தல் தங்கள் கௌரவத்திற்கே குறையாமென்றுரைத்தனர். உடனே சிவராம சின்னணைஞ்சாத்தேவர் பொன்னம்பலம்பிள்ளையை வரவழைத்து உமது மனப்போலத் திருமலையில் திருப்பணியியற்றிக் கொள்ளுமெனக் கட்டளையிட்டனர். அக்கட்டளையைப் பொன்னம் பலம்பிள்ளை சிரமேற்கொண்டு மிகுதியாகப் பொருளைச்செலவுசெய்து தாம் கருதியவண்ணம் திருமலையிலநேகம் திருப்பணிகள்செய்து முடித்தனர். இவர் திருப்பணியின்பொருட்டு மிகுதியாகப் பொருளைச் செலவுசெய்ததையும் தாம் படையெடுத்துச்சென்று தென்மலைக்கோட்டையை யழிக்கும்போது வடகரையிலிருந்து உணவுப் பொருள்கள் முதலியன செவ்வனேவந்து சேராமையால் தம் சொந்த ஊராகிய வாசுதேவநல்லூரிலிருந்து உணவுப்பொருள்கள் முதலியன வரவழைத்துச் செலவுசெய்ததையும், இராமநாதபுரத்திற்குச்சென்று ஆங்குத்தனது வித்யாசாமர்த்தியத்தால் அவ்விறையவர்மாட்டுப் புகழ் பெற்றதையும்,

பொன்மலைக்குஞ் சேதுவுக்கும் புகழ்பெற்றே னெதிர்வந்து
பொருதார் தம்மை
விண்மலைக்கப் பொருதுதுறும் படக்கியடங் காதபெரு
விஜயங் கொண்டேன்
தென்மலைக்குந் திருமலைக்கு மாஸ்திகொடுத் தேன் கருணைச்
செவ்வே என்றிக்
கன்மலைக்கு மனத்தாரைக் கையெடுக்க வினியெனக்குக்
கடப்ப டாவே.

என்னும் இக்கவியால் விளக்கியுள்ளாரென்க.



பொன்னம்பலம்பிள்ளை வடகரையார்மேற் கோபித்துக்கொண்டு சங்கரநயினார்கோவில் முதலிய இடங்கட்குச்சென்றிருந்த ஞான்று பூவாத்தாள் கணவனுகிய மாப்பிள்ளை பெரியசாமித்தேவர் சிவராம சின்னணைஞ்சாத்தேவரிடஞ்சென்று, ஐய! இப் பொன்னம்பலம்பிள்ளையால் வடகரையாராகிய நீங்களடைந்த நன்மைகள் எத்துணையோ வுள்ளன, அங்ஙனமிருக்கத் தாங்களவரைப் புறத்தே போகவிடுதல் தகுதியன்றென்று பலவாறுக எடுத்துக்கூறினர். அங்ஙனங்கூறியதைச் சிவராமசின்னணைஞ்சாத்தேவரின் தம்பிமாரைவரும் அங்கீகரியாமல், மாப்பிள்ளை பெரியசாமித்தேவரை யவமானமாகப் பேசினுர்கள். அவர் இவர்களுக்கு அவமானமுண்டாகக் கூடாதென்பது கருதி யாம் சொன்னிதற்கு இவர்கள் நம்மையன்றோ அவமானஞ்செய்து விட்டனரென்று அவர்கள் ஐவரையுஞ் சிவராமசின்னணைஞ்சாத்தேவரையுங் கொல்ல நினைத்தார். இதனைச் சிவராமசின்னணைஞ்சாத் தேவர் எவ்விதமாகவோ அறிந்து அங்கிருந்துபுறப்பட்டுக் கடையநல்லூரிற்போய் மறைந்திருந்தனர். பின்னர்ப் பெரியசாமித்தேவர் பலசூழ்ச்சிகள்செய்து தம்மை யிகழ்ந்த ஐவரையுங் கொன்றுவிட்டுப் பூவாத்தாள்வயிற்றிற்பிறந்த ஆண்குழந்தையை மடியிலிருத்தி 908-ம் ஆண்டு பிரமாதீச-ஹு ஆவணிமீ 5 உயிற் பட்டமெய்தினர்.

A. D. 1731-ஹு-முதல் 1741-ஹு வரை.

அக்குழந்தை இவர் பட்டமெய்திய ஏழாவது நாளில் இறந்துபோயிற்று. இவர் பட்டமெய்தியிருந்த காலத்துச் சிவகிரியார், தளவாய் முதலியாரிடஞ்சென்று ஐய! எங்களுக்குத் தீங்கிழைத்த பாபத்தால் வடகரையாருக்கு இவ்வித துன்பம் நேரிட்டது ஆகையால், இங்ஙனங் கொலைசெய்த மாப்பிள்ளை பெரியசாமித் தேவரைக் கொலைக்குற்றத்திற்குத் தகுந்த தண்டனை செய்வதோடு எங்கள் பூமியை எங்கட்குக் கிடைக்கும்படி செய்யவேண்டுமென்று தெரிவித்துக்கொண்டார்கள். அங்ஙனமே தளவாய் முதலியார் படையெடுத்துவர உத்தேசிக்குமமையத்தில் பெரியசாமித்தேவர் இதனையெவ்விதமாகவோ அறிந்து சிவகிரியாருடைய அந்தரங்க தூதனுகிய காளை சேர்வைகாரனைக் கைவசப்படுத்திச் சிவகிரியார், முதலியாரைக் கொலை செய்துவிடின் அவர்கள் பூமியை யவர்கள் வசம் விட்டுவிடுகிறேனென்று சத்தியஞ்செய்து கொடுத்தனர். அவனுமதற்குடன்

பட்டு யான் தங்களிடம் வரும்பொழுது இன்னபூச்சொல்லுவேன்
கோட்டைக்கதவு திறக்கவேண்டுமென்று பெரியசாமித்தேவரிடம் ஏற்
பாடு செய்துகொண்டு சிவகிரிக்குச் சென்று தான் செய்துவந்த ஏற்
பாட்டைச் சிவகிரியாரிடஞ்சொல்லி அதற்கு அவர்களையுஞ் சம்மதிக்
கும்படி செய்தனன். பின்னர்ச் சிவகிரியாரும் காளை சேர்வைகார
னுடன் வடகரைக்கு வந்து பெரியசாமித்தேவரைச் சந்தித்துத்
தாமும் அவரிடத்தில் மைத்துனக் கேண்மையால் அந்தரங்கமாய்ச்
சத்தியஞ்செய்து கொடுத்தனர். பின்பு அவ்விருவரும் அழகப்ப
முதலியாரிடஞ் சென்று, ஐய! நீவிர் கொண்ட எண்ணப்படி வட
கரையார்மேல் படையெடுத்து செயிக்கவேண்டுமாயின், வடகரையார்
செய்யும் ஒவ்வொரு வஞ்சனைகளையு மறிந்துவந்து அவ்வப்போது
தெரிவிக்கின், அவற்றைப் பரிகரிப்பதற்கு ஏற்ற உபாயங்களைத் தேடு
வது சாத்தியமாகும். ஆதலால் யாங்களிருவரும் அங்ஙனமே
தெரிந்துவந்து தெரிவிக்கிறோம். அவ்வாறு தெரிவிப்பதற்கு யாங்
கள் ஒருங்கேயாயினும் அல்லது தனித்தனியாயினும் எவ்வமயத்து
வரினும் வாயில்காப்போர் தடைசெய்யாது விடத் தாங்களுத்தரவு
செய்யவேண்டும். இல்லாவிடில் ஆபத்துக்குள்ளாவீர்களென வஞ்ச
கமாய்ச் சொல்ல அவர்கள் சொல்லை மெய்யென்று கருதிய முதலியா
ரும் அங்ஙனமே வாயில் காப்போருக்குக் கட்டளையிட்டனர். அத
னைக்கேட்ட அவ்விருவரும் தங்களெண்ணம் நிறைவேறியதற்குப்
பெரிதுஞ் சந்தோஷித்தனர். அன்றுமுதல் காளை சேர்வைகாரன்
வழக்கமாக மடியில் வாழைக்குருத்தைச் செருகிக் கையில் கட்டாரி
யைப் பிடித்து முதலியாரிடத்து மிக்க அன்புடையவன்போல் நடித்து
அவரைக் கொல்லுவதற்குத் தக்க சமயத்தை நாடோறு மெதிர்
பார்த்து வரலானான். ஒருநாளிரவில் சிவகிரியாரும் காளைசேர்வை
காரனு நடுயாமத்தின்கண் முதலியாரிருக்குமிடத்திற்குச் சென்றார்
கள். அப்பொழுது காவலாளிகள் யாவருமயர்ந்து நித்திரை செய்த
னர். முதலியாருக்குத் ஸ்தூலித்த சரீரமாகையால் அடிக்கடி தொண்
டையில் கொழுப்பு வந்தடைக்கும்; அஃதடையாவண்ணம் வெந்
நீரைக்கொதிக்கவைத்துக் கெண்டியில் விட்டு அதை யிடுக்கிகொண்
டெடுத்துச் சாப்பிடுவது வழக்கம். அங்ஙனமே அன்றைக்கும் சாப்
பிட்டுவிட்டுத் திண்டில் சாய்ந்து அயர்ந்து தூங்கிவிட்டனர். இங்



ஙனம் தூங்குவதை யறிந்த அவ்விருவரும் யாம் கருதிய காரியமுடித்
தற்கு இதுவே நல்ல வமையமென்றெண்ணிக் கட்டாரியினால் அவர்
வயிற்றைக் கீறிக் குடலை யெடுத்து வாழைக்குருத்திற் பொதிந்து
மடியில் வைத்துக்கொண்டு இருவரும் குதிரையேறி விரைவாக வட
கரைக் கோட்டைக்குட் புகுந்தார்கள்.

முதலியார் சோதிடர் மூலமாகக் கருவியால் தமக்கு மரணமென்
பதை முன்னரே யறிந்து தாம் எங்கு இறந்தாலும் கருப்பந்துறை
யில் கொண்டுபோய்த் தம் முடம்பைச் சேர்க்கவேண்டுமென்று கட்
டளையிட்டு நாற்பது போகிகளுக்கு மாதச்சம்பளங்கொடுத்து அந்நாற்
பது பெயரும் இரவில் தம்மைச் சுற்றிலும் படுத்திருக்கும்படி
திட்டஞ் செய்திருந்தனர். அக்கட்டளையின் வண்ணம் போகிகள்
நாற்பதுபெயரும் அன்று அங்கிருந்தார்களாகலின், அவர்கள் உடனே
டி பிரேதத்தை யெடுத்துக் கருப்பந்துறைக்குக் கொண்டுபோயி
னர். முதலியாரிடத்துள்ள யாவரும் நம் தலைவரிறந்தமையால் நமக்கு
ஏதாவது விபரீதமேற்படுமோ வெனப்பயந்து முற்றிந் தோடிவிட்ட
னர். இச்சம்பவம் நிகழுங்காலத்துடனிருந்த முதலியாரின் சமுக
வித்துவானொருவர்,

தூங்குல் வைத்ததோர் கன்னட ராணுவச்
சங்கு வன்னியன் பெற்ற வரகுணன்
தெங்கு தெங்கெனத் தெங்கெனத் தெங்கியே
தொங்கு தொங்கெனத் தொங்கெனத் தொங்கினான்.

என்னும் இக்கவியைக் கூறினார்.

இவ்விதமான சம்பவம் நிகழவே முதலியார் வடகரையார்மேற்
படையெடுக்க எண்ணிய வெண்ணம் நிறைவேறாமற் போனதோடு
அவர் சேர்த்துவைத்திருந்த படையு முறிந்துபோயிற்று. பின்னர்
மாப்பிள்ளை பெரியசாமித்தேவர் தாமுன்னர்ச் சிவகிரியாருக்குச்செய்
துகொடுத்த சத்தியத்தை நிறைவேற்ற நினைத்துச் சிவகிரியாரைத்
தன்னுடனழைத்துக்கொண்டு தென்மலைக்கு வந்து முன்னர் வட
கரையாரால் இடிக்கப்பட்ட கோட்டைகளையெல்லாம் புதிப்பித்தமைக்க
கவேண்டுமென்று சொன்னார். சிவகிரியார் அங்கு கோட்டை கட்டி ார்

யிருத்தற்குடன்படாமையால், உடனே பெரியசாமித்தேவர் தாங்கள் எங்கு கட்டவேண்டுமென்று நினைக்கின்றீர்களோ அங்கு கட்டிவைத்தற்கு எனக்கொரு தடையுமில்லையென்றனர். உடனே சிவகிரியார், இப்பொழுது சிவகிரியென்னும் ஊரிருக்கும் இடம் முன்னர் வேப்பந்தோப்பாயும், குளிர்ச்சியான இடமாயு மிருந்ததால் பெரியசாமித்தேவரை யழைத்துவந்துகாட்டி இதுதான் யாங்களிருத்தற்குத் தகுந்த இடமென்று கூறினார். உடனே பெரியசாமித்தேவர் தம் அடைப்பைக்காரனிடமிருந்த பாக்குவெட்டியை வாங்கி யொருமுளை நறுக்கி அம்முளையைச் சிவசிவாவென்று பூமியிலூன்றிச் சிவகிரியாரைப்பார்த்து மாப்பிள்ளை! தங்களுருக்கு எப்பெயரிடலாமென்று கேட்கத் தாங்கள் முதலிற் சிவசிவாவென்று சொன்னதினாலும், இவ்விடம் மலைச்சாரலிலிருத்தலினாலும் இதற்குச் சிவகிரியென்று பெயரிடலாமென்று கூறினர். உடனே பெரியசாமித்தேவர் ஊருண்டாக்கிச் சிவகிரியென்று பெயரிட்டுக் குடியேறச்செய்து அவர்கள் கிராமங்களையு மவர்கட்குக் கொடுத்துப் பட்டமுங் கட்டிவைத்தனர். இதனைக் கடிகை முத்துப்புலவர் சிவகிரியார்மேற்பாடிய திக்குவிஜயமென்னும் பிரபந்தத்தில்,

"எனும குத்துவ மிகுதியு மாகிய விருநி லத்துரை பெரியசு வாமிதன்
மனது வைத்திடு தயவுவி டாமலுண் மகிழு மைத்துனன் வரகுண ராமனே"

என்னுமடிகளால் விளக்கியுள்ளாராகலின் இத்னுண்மை விளங்குமென்க.

இங்ஙனஞ் சிவகிரியார் முன்னிழந்த பூமியைப்பெற்று ஆண்டு வருகையில் ஷை அழகப்பமுதலியார் மகன் குமாரசாமித் தளவாயை சிவகிரியார்மேற் படையெடுத்துவந்து வரகுணராஜவன்னியனார் தலையைக் கொண்டுபோயினர். இதனை,

நிலைகொண்ட கீர்த்தி யழகப்ப ராயன்றன் னித்திரையிற்
கொலைகொண்ட பாதகன் றென்மலை வன்னியன் கோட்டைநெட்டுப்
புலைவந்து ராவணன் சேனை யழிவது போல்வன்னியன்
றலைகொண் டனனந் தளவாய் குமார தளசிங்கமே.

என்ற இக்கவியால் முதலியாருடைய வித்துவான் விளக்கியுள்ளார் என்க.



மாப்பிள்ளை பெரியசாமித்தேவர் வடகரையிற் பட்டமெய்தியிருந்த காலத்துப் பொன்னம்பலம்பிள்ளை, திருமலைவேலுப்பிள்ளை அசைந்தாடும் பெருமாள் பிள்ளை, சிதம்பரதாண்டவ முதலியார் ஆகிய நால்வரும் ஸ்தானாதிபதியாக இருந்தார்களென்பதனை ஷை திக்குவிஜயமென்னும் பிரபந்தத்தில்,

"சீரார்பொன் னம்பலவேள் செய்கூடற் றிருமலைவே டிசைகடோறும்
பேரான வசைந்தாடும் பெருமாள்சொற் சிதம்பர தாண் டவபூபாலன்"

என்ற இவ் வடிகளாற் குறிக்கின்றனர் என்க.

இந்நான்கு பெயர்களும் ஒவ்வொரு ஜமீனுக்கும் வெவ்வேறு காரியார்த்தமாகச் சென்றிருந்தனர். அக்காலத்து ஊற்றுமலைக்கு இன்றியமையாத காரியத்தினிமித்தம், ஒரு ஸ்தானாதிபதியை அனுப்பும்படி நேர்ந்தது. அப்பொழுது சிவகிரிக்குச்சென்றிருந்த பொன்னம்பலம்பிள்ளை வருவாரென்று எதிர்பார்த்தனர். அவர்வரத் தாமதமானதால் ஆண்டுள்ள சீனி என்ற மேஸ்திரியை அனுப்பினார்கள். அவன் ஊற்றுமலைக்குச்சென்று அவமானப்பட்டு வந்தனன். இதனைச் சிவகிரிக்குச் சென்றிருந்த பொன்னம்பலம்பிள்ளை வடகரைக்கு வந்தறிந்து மனவருத்தமுற்று மாப்பிள்ளை பெரியசாமித்தேவரவர்கள் சமுகத்தில்,

நாணமில்லை யெங்களுக்கு நாலுபேர் தங்களுக்குட்
பாணனொரு தானா பதியானான்—நீணிலத்தில்
துன்னார் பரவுந் துரைப்பெரிய சாமிமன்னா
கன்னா விதுவளமை காண்.

என்ற இப்பாடலைக் கூறித் தன்னோடு சேர்ந்த மூன்று ஸ்தானாதிபதிகளையு நோக்கி,

நானா விதத்திலும் பாளைய காரர்க்கு நன்றிசெய்யுந்
தானா பதிச்சுட்டி மாந்தர்க ளேபுத்தி தானிலையோ
மானாபி மான மிலையோ வுதர மறிகடலா
வேனாயைப் போலலை கின்றீ ரிதினு மிறத்தனன்றே.

என்ற இப்பாடலையுங் கூறினாரென்ப.

இங்ஙனம் மாப்பிள்ளை பெரியசாமித்தேவர் பட்டமெய்தியிருந்த காலத்து சந்திரகலாமஞ்சரியும், பள்ளும், பருவப்பதமும் அவர் சபையில் அரங்கேற்றப்பட்டன வென்பதை,

*வருதொளா யிரத்தொருபத் தானந்த வருடமதின் மகரமாதந்*
*தருதிங்கட் பூரணையிற் றமனியக்குன் றனையபுயச் சார்வபூமன்*

*       *       *

*       *       *

எனவரும் பாடலால் அறியலாமென்க.

ஷை பெரியசாமித்தேவரும் இராஜபிளவைவந்து 916-ம் ஆண்டு துன்மதி-௵ பங்குனி௴ 28௳ மரணமடைந்தனர். இவருயிருடனிருக்கும்போது சத்திரம் பிடாகையிலிருந்து வந்த பூசணிக்காயை அறுக்காமல் முழுக்காயைப் பக்குவஞ்செய்து வைக்கும்படி செய்தகுற்றத்திற்காக ஷை பெரியசாமித்தேவர் மனைவியாராகிய பூவாத்தாளென்பவர்கள் அவர்களுடைய ஆபரணங்களையெல்லாங் கழற்றிக்கொடுத்து திருமலைச்சுனைக்கரையில் ஒரு மண்டபங்கட்டச் சொல்லினர். இப் பூவாத்தாளென்பவர்கள் தம் நாயகரோடு உடன் கட்டையேறினார்கள். இவர் பட்டமெய்தியிருந்தகாலத்தில் முன்னர்த் தானாதிபதியாயிருந்த பெரியநாயகம்பிள்ளை குமாரன் பிச்சைப்பிள்ளையென்பவர், தானாதிபதியாகவிருந்தனர். இவர்காலத்துத் திருப்பணி சிறிதும் நடைபெறவில்லை. 917-ம் ஆண்டு துந்துபி-௵ சித்திரை௴ 5௳ முதல் மாப்பிள்ளை பெரியசாமித்தேவர் சிறியதகப்பனாராகிய சங்கரக்குமாரதேவர் குமாரர் காளத்தியப்பதேவருக்கு ஸ்தானாதிபதி பெரியநாயகம்பிள்ளையும், அவர் குமாரன் பிச்சைப்பிள்ளையுஞ்சேர்ந்து வடகரையிற் பட்டங்கட்டினார்கள். இங்ஙனஞ்செய்தது பொன்னம்பலம்பிள்ளைக்குச் சம்மதமில்லாததால் சில தேவமாருடன் கடையநல்லூருக்குச் சென்று 11-வது பிரதானர் சிவராம சின்னணைஞ்சாத்தேவரவர்கள் குமாரர் சின்னணைஞ்சாத்தேவரை யழைத்துக்கொண்டு மேலைச்சொக்கம்பட்டிக் கோட்டைக்குப்போய் ஷை ஸ்தானாதிபதியவர்கள் காளத்தியப்பதேவருக்குப் பட்டங்கட்டியவன்றே இவருக்கும் பட்டங்கட்டிவைத்தனர். இங்ஙனம் இரு வேறுவகைப்படக் காரியம் நிகழ்ந்தமையால் ஆதிக்கமிரண்டுபட்டுக் கலகமுண்டாயிற்று. இதனை நீக்கிக்கொள்ளக் குடிகளும், மற்றையோரும் மலையாளதேசத்திற்குச்சென்று அத்தேயத்து மகாராஜாவினிடத்திற் சொன்னார்கள். உடனே அவர்கள் இச்சம்பவங்களையெல்லாம் செவ்வனே ஆராய்ந்து காளத்தியப்பதேவர் பெரியபட்டமும், சின்னணைஞ்சாத்தேவர் சின்னப்பட்டமும் எய்தவேண்டுமென்று தீர்மானஞ்செய்தனுப்பினார்கள்.



யாவரும் வடகரைக்குவந்து சேர்ந்தார்கள். மலையாளத்தினின்றும் வடகரைக்குவந்த பின்னர் காளத்தியப்பதேவர், ஸ்தானாதிபதி பெரியநாயகம்பிள்ளை, அவர் குமாரர் ஆகிய மூவருக்கும் மலையாளத்துச் சுரங்கண்டது. உடனே மலையாளத்து வலியான் (வைத்தியன்) ஒருவனை வரவழைத்து மருந்துகொடுப்பித்தும் அவ்வியாதி குணப்படாமையால் ஆடி, ஆவணியாகிய இரண்டு மாதத்திற்குள் மூவரும் இறந்துபோயினர். இந்நிகழ்ச்சி 919-ம் ஆண்டில் நடந்தது என்க.
917-ம் ஆண்டு துந்துபி-௵ பட்டமெய்தி அவ்விருவரும் 924-ம் ஆண்டு சுக்கில-௵ வரை யாண்டனர். ஆகப்பட்டமிரண்டிற்கும் வருஷம் எட்டு. இவ்வெட்டுவருஷத்தில் காளத்தியப்ப

A. D. 1741- முதல் 1743-வரை.

தேவர் 917-ம் ஆண்டில் பட்டமெய்தி 919-ம்ஆண்டு வரை யாண்டனர். அதன் பின்னர் சின்னணைஞ்சாத்தேவா 920-ம் ஆண்டு பட்டமெய்தி, 924-ம் ஆண்டு சுக்கில வருஷம்வரை யாண்டனர். இவர் காலத்தில்

A. D. 1744- முதல் 1749-வரை.

சவரிப்பெருமாள் பிள்ளை ஸ்தானாதிபதியாயிருந்தனர். இச்சின்னணைஞ்சாத்தேவருக்குப்பின்னர் இவர் குமாரர் குமார சின்னணைஞ்சாத்தேவர் 925-ம் ஆண்டு பிரமோதூத வருஷம் பங்குனி௴ 1௳ பட்டமெய்திச் சவரிப்பெருமாள் பிள்

A. D. 1750-முதல் 1760-வரை.

ளையை ஸ்தானாதிபதியாகவும், பொன்னம்பலம் பிள்ளை வயோதிகரானபடியால் அவரைப் போக்குவரத்துக்காக் கௌரவ ஸ்தானாதிபதியாகவும் நியமித்தாண்டனர். கௌரவ ஸ்தானாதிபதியாகிய பொன்னம்பலம்பிள்ளையவர்கள் 937-ம் ஆண்டு மாசி௴ 7௳ சிவபதமடைந்தனர். இவர் மகா வித்துவானாயிருந்ததோடு இராஜாங்க காரியங்களில் மிக வல்லுநரும் அதியூகியுமாயிருந்து ஜமீந்தாருக்குப் பெருங்கீர்த்தியுண்டுபண்ணிய மகானவர். வாசுதேவநல்லூர்ப்புராணம் பாடியவருமிவரே. இவர் அவ்வவ்வமயங்களிற் கூறியுள்ள பாடல்களை நோக்கும்பொழுது சொற்சுவை, பொருட்சுவை முதிரப்பெற்றிருப்பதோடு கடாக்ஷித்துவானுமிருந்திருக்கவேண்டுமென்றும் யூகிக்க இடந்தருகின்றது. பின்பு சவரிப்பெருமாள் பிள்ளையென்பவர் தானே சகல வதிகாரமுஞ்செய்து இராஜாக்களுக்குரிய பவனி வருதல் முதலிய சகல மரியாதைகளையுங் கைக்கொண்டு பட்டத்துக்குடையவர்கள் அரண்மனைக்கு வெளியே

போகவேண்டுமானால், தம்முடைய உத்தரவில்லாமல் போகக்கூடாதென்றும் ஏற்பாடு செய்திருந்தனர். இதனிமித்தம் பலவிதமான ஆலோசனைகள் செய்தும் ஒன்றும் கைகூடாமையால் சிறிதுகாலம் அவ்வேற்பாட்டின்படியே ஜமீந்தார் நடந்துகொண்டனர். பின்னர் 936-ம் ஆண்டு ஆவணி மீ திருநெல்வேலிக்குப் போய்வரவேண்டுமென்று சவரிப்பெருமாள் பிள்ளையின் சம்மதிபெற்று அவ்விடத்துக்குச் சென்று ஆண்டுள்ள நவாபுவின் காரியஸ்தர் கான்சாயைக் கண்டு சவரிப்பெருமாள் பிள்ளையென்பவர் ஜமீனதிகார முற்றிலுங் கைக்கொண்டு ஜமீந்தாராகிய எம்மை அவருத்தரவுப்படி நடக்கவேண்டுமென்று திட்டஞ்செய்திருப்பதுமன்றி, ஷை ஜமீன் வரும்படி முழுவதும் தம் சொந்தவூராகிய தென்காசியிலுள்ள தம் வீட்டில் கொண்டு சேர்த்திருக்கிறாரென்றும் அவர் மோசச்செயல்களைக்கூறி, அவரைத் தண்டிக்கத் தமக்குத்தரவு கொடுக்கும்பக்ஷத்தில் அவர் வசமுள்ள ஜமீன் பொருள் முழுவதையும் தாங்களேயெடுத்துக் கொள்ளலாமென்றும் அவருடனுடன்படிக்கை செய்தபின்னர், அவ்விடத்திலிருந்து ஷை மீ 19உ சவரிப்பெருமாள் பிள்ளை வீட்டுக்குத் தாம் வருவதாகவும், பிள்ளையும் வடகரையிலிருந்து அன்று அங்கு வரவேண்டுமென்றும் திருமுகமனுப்பினார். அவரும் அத்திருமுகத்திற்குறித்தவண்ணமே அவ்விடத்தினின்றும் புறப்பட்டுத் தென்காசிக்கு வந்து ஜமீந்தாரைச் சந்தித்து, மிகச்சிறப்பாகத் தம் வீட்டுக்கழைத்துச்சென்று சவுக்கையிலிருக்கச்செய்தனர். அப்பொழுது போஜன சமயமாதலால் பிள்ளையின் காவலாளிகளாயிருந்த துலுக்கர்களில் நத்தடுகானென்பவனைத் தவிர ஏனைய காவற்காரர்கள் போஜனத்துக்குச் சென்றிருந்தனர். அவ்வமயத்துச் சமீந்தாரவர்களைச் சவரிப்பெருமாள் பிள்ளை வந்து போஜனத்துக்கழைத்தனர். அச்சமயத்தில்ஜமீந்தாரோடு கூடவிருந்த பண்டாரத்தேவரேவுதலின் பேரில் பிள்ளையை யொருவன் கத்தியாற் குத்தினான். குத்தியவுடன் அவர் நத்தடுகானென்று கூவிக் கீழே விழுந்தனர். அச்சத்தத்தைக் கேட்ட நத்தடுகானென்பவன் ஏதோ நந்தலைவர்க்கு அபாய நேரிட்டதெனக் கருதி மிகப்பரபரப்புடன் உள்ளேசென்று பிள்ளை குத்துண்டு மூர்ச்சித்துக்கிடப்பதைக்கண்டு பிள்ளையைக் குத்தினவனைக் குத்தினான். உடனே பண்டாரத்தேவர் அந் நத்தடுகானைக் குத்தி வீழ்த்தி



னர். பின்னர் ஜமீந்தார் பிள்ளையின் வீட்டைக்கொள்ளையிடும்படி சொல்லி யூரார் வசம் விட்டுத் தம் பரிசனருடன் வடகரைவந்து சேர்ந்தனர். இச்சவரிப்பெருமாள்பிள்ளையின் சந்ததியார், தென்காசி அணைக்கரைத்தெருவில் இப்பிள்ளையின்வீட்டுக்கு முன்னர்ப் பீடமிட்டு இற்றைக்கும் இவர்க்குப் பூசை முதலிய செய்து கொண்டாடுகின்றனர்.

இதன்பின்னர் இச் சமீந்தார் சொல்லியவண்ணம் கான்சாயபுக்குச் சவரிப்பெருமாள்பிள்ளை வீட்டிலிருந்த பொருள்களையனுப்பவில்லையாதலால் அவர் கோபங்கொண்டு மலையாளத்து மகாராஜாவவர்களின் உதவிபெற்று இவர்கள்மேற் படையெடுத்துவந்து வென்று, வடகரைமுதலான சகல ஜமீன் கிராமங்களையும் ஜப்திசெய்து இவருக்குப் பயந்தொளிந்துகொண்டிருந்த சவரிப்பெருமாள்பிள்ளையின் குமாரர்களை வரவழைத்து மானிபம் விட்டுக்கொடுத்து மலைச்சாரலிலிருக்கிற வடகரை, நெடுவேலி, இடைகால், கொடிக்குறிச்சி, பண்புளி, புளிப்பட்டினம், குத்துக்கல்வலசை, கணக்கப்பிள்ளைவலசை, புளியறை ஆகிய ஒன்பது கிராமங்களையும் தென்காசித் தாலூகாவுடன் சேர்த்து ஏனைய கிராமங்களை கிலேதார் ஜதர்பிலிகி என்பவனுக்குக் குத்தகைக்குக்கொடுத்ததோடு வடகரைக் கோட்டைக்காவலையுமவனுக்குக்கொடுத்தார். (936-ம் ஆண்டுமுதல் 1760-A. D.) 942-ம் ஆண்டு (1767-A. D.) வரை வடகரை ஜமீன் மேற்கூறியவண்ணம் சர்க்கார் ஜப்தியிலிருந்தது.

A. D. 1760- முதல் 1767-வரை.

கர்னல் காம்பல்துரையென்பவர் பாளையங்கோட்டையை விட்டு நீங்கியபின்னர் அநேக ஜமீந்தார்கள் தாங்கள் முன்னரொப்புக்கொண்ட கப்பங்களைக் கொடுக்கமாட்டோமென்று மறுத்தனர். அங்ஙனமறுத்த ஜமீந்தார்களுள் முதன்மையானவர் சிவகிரி ஜமீந்தாராவர். இங்ஙனமறுத்தவர்களையெல்லாமொருவாறு காப்ட்டன்வ்ரிஸ்க்மன் (Captain Frischman) துரையென்பவர் நவாபுக்கு மானேஜராகிய ராஜா உக்மட்ரூமும் (Raja Hukmutram) ஜமீனையிழந்த வடகரை ஜமீந்தாரும் செய்த உதவியால் சமாதானஞ்செய்து கப்பங்களை வாங்கினார். மேற்குறித்த குமார சின்னணைஞ்சாத்தேவர் 940-ம் ஆண்டில் (1764-வருஷத்தில்) இறந்தமையால் அவர் குமாரர் பெரியசாமி செம்புலி சின்னணைஞ்சாத்தேவருக்கு முன்னர்த் தென்காசித்

தாலூகாவில் சேர்ந்த மலைச்சாரலிலுள்ள ஒன்பது கிராமங்களைத் தவிர ஏனைய கிராமங்கள் விடப்பட்டன. இவர்கள் இராஜாங்கமுறைக்குப் பேரங்கமாகிய கோட்டை கொத்தளமிருந்த வடகரையென்னுந் தலைநகரைச் சர்க்கார்கைப்பற்றிய காரணத்தால், இவர்கள். சொக்கம்பட்டியைத் தங்கட்குத் தலைநகரமாகக்கொண்டு பட்டமெய்தியரசு புரிந்துவந்தனர். இங்ஙனம் இராஜஸ்தானத்தைமாற்றியது 942-ம் ஆண்டு (1767-௵) ல் என்க. இவ்வாறு சொக்கம்பட்டியைத் தலைநகராகக்கொண்டநாட்டொட்டு இச் சமீனுக்குச் சொக்கம்பட்டி ஜமீனென்று பெயர்வழங்கலாயிற்று.

A. D. 1767- முதல் 1781-வரை.

942-ம் ஆண்டு ஆனி௴ 21௳ புதன்கிழமையில் ஸ்ரீ பெரியசாமி செம்புலி சின்னணைஞ்சாத்தேவர் பட்டமெய்தித் தன் தம்பி முத்துச்சாமித்தேவருக்குச் சேனைத்தலைமையும், விசாரிப்புங்கொடுத்தாண்டனர்.

A. D. 1767.

956-ம் ஆண்டு தை௴ 1781-௵ சிவகிரிஜமீந்தார் ஐதர் ஆலி (Hyder Ali) நவாபைக் கும்பினியாரோடெதிர்க்கும்படி தெக்ஷணத்துக்கு வரும்வண்ணமழைத்தனர். அக்காலத்துச் சொக்கம்பட்டி ஜமீந்தாராகிய சின்னணைஞ்சாத்தேவரையு முதவிசெய்யுமாறுவேண்டினர். அவரங்ஙனஞ்செய்ய மறுத்தமையால் சிவகிரியாரவர்மீது கோபங்கொண்டு படையெடுத்துவந்து அவரை ஜமீனைவிட்டப்புறப்படுத்தி அவர் மனுஷனாகிய வெள்ளையத்தேவரைச் சொக்கம்பட்டி ஜமீனில் வைத்தனர். 956-ம் ஆண்டு தை௴ (1781-௵) முதல் 961-ம் ஆண்டு பங்குனி௴ (1786-௵) வரை வெள்ளையத்தேவர் சொக்கம்பட்டி ஜமீனிலிருந்துவந்தனர். இக்காலங் கும்பினியாரதிகாரந் தென்னாட்டில் ஸ்தாபிக்க ஆரம்பமானகாலமாதலால் அவர்களுக்கு இன்னார் ஜமீனுக்குரியவர், இன்னார் ஜமீனுக்குரியரல்லாதவரென்றறிய அவகாசமில்லாமற் போயிற்று. இங்ஙனமாயகாலத்து 1781-௵ டிசம்பர்௴ 2௳ கும்பினியாருங் கருநாடகநவாபுஞ்செய்துகொண்ட வுடன்படிக்கையின்படி திருநெல்வேலி முதலிய ஜில்லாக்கள் கருநாடக நவாபுவின் ஆளுகையிலிருந்து கும்பினியாருடைய ஆளுகைக்குட்பட்டன. 1783-௵ ஆகஸ்டு௴ திருநெல்வேலிஜில்லா வரும்படியை குத்தகைக்கு விடுதன்முதலிய சகல வதிகாரங்களையும் கலெக்டர்



அஸிஸ்டெண்டு அர்வின் ( Mr. Irwin ) துரைக்கு கவர்ன்மெண்
டார் கொடுத்தார்கள். அக்காலத்து வெள்ளையத்தேவர் கும்பினி
யாருக்கு வேண்டிய உதவிகளைச்செய்து கீழுத்தியோகஸ்தருடைய
தயவைச் சம்பாதித்தனர். இக்காலத்துச் சிவகிரி ஜமீந்தார், தம்
முத்தாவின்வண்ணஞ் சொக்கம்பட்டி ஜமீனிலிருந்துவந்த தம்
வேலைக்காரனாகிய வெள்ளையத்தேவர் தமக்கெதிரியாகிய கும்பினியா
ருக்கநுகூலமாகவும், தமக்குப் பிரதிகூலமாகவு மிருப்பதையறிந்து
கட்டப்பொம்மநாயக்கருதவிபெற்றுச் சொக்கம்பட்டிக்கோட்டையை
முற்றுகையிட்டனர். முற்கூறியவண்ணம் வெள்ளையத்தேவர் கும்
பினியாருடைய தயவைப் பெற்றிருந்தமையால், இங்ஙன முற்றுகை
யிட்டதை கர்னல் வல்லர்டன் ( Colonel Fullurton ) அறிந்து
சைனியத்துடன் வந்து அம்முற்றுகையை நீக்கினர். பின்னர் 1785-
௵ த்தில் கும்பினியார் தென்சீமை யதிகாரத்தை கருநாடக நவா
புக்குக்கொடுத்தனர். அந்நவாபுவின் மானேஜராயிருந்த எட்டி
பர்காலுல் சொக்கம்பட்டி ஜமீனுக்குரியவராகிய, பெரியசாமி செம்
புலி சின்னணைஞ்சாத்தேவரிடம் ஷை ஜமீனொப்புவிக்கப்பட்டு
அபாத்தியஸ்தரான, வெள்ளையத்தேவர் அச்சமீனினின்றும் நீக்கப்
பட்டனர். இந்நிகழ்ச்சி 1787-௵ பிப்ரவரி௴ த்தில் நிகழ்ந்தது.
ஆகையால் ஷை பெரியசாமி செம்புலி சின்னணைஞ்சாத் தேவரென்
பவர் மறுபடியும் 961-ம் ஆண்டு பங்குனி௴ (1787-

A. D. 1787- முதல் 1790-வரை.

௵) பட்டமெய்தி 966-ம் ஆண்டு கார்த்திகை௴
(1790-௵ நவம்பர்௴ 10௳) வரை சொக்கம்பட்டி
ஜமீனையாண்டனர். இவர் 966-ம் ஆண்டு கார்த்
திகை௴ 10௳ சிவலோகபதவியடைந்தனர்.

பெரியசாமி சின்னணைஞ்சாத்தேவர் இறந்தஞான்று அவர் குமா
ரர் குமார சின்னணைஞ்சாத்தேவர் எட்டு வயதுள்ள மைனராயிருந்த
னர். இதனை அந்த ஜில்லாக் கலெக்டரறிந்து இக்குமார சின்ன

ணைஞ்சாத்தேவர் பட்டத்திலும், இவர் மைனராதலால் இவர் சிறிய
தகப்பனார் முத்துச்சாமித்தேவர் இவருக்குதவியாகக் காரிய விசா
ரிப்பிலும் இருக்கவேண்டுமென்று உத்தரவு செய்தனர். அவ்வுத்
தரவின்படி குமார சின்னணைஞ்சாத்தேவர் முத்துச்
சாமித் தேவரைக் காரியஸ்தராகக் கொண்டு 966-ம்
ஆண்டு கார்த்திகை[illegible] (1790-ஸ்டு நவம்பர்மீ) பட்ட
மெய்தி 971-ம் ஆண்டு மாசிமீ (1796ஸ்டு பிப்ரவரிமீ)

A. D. 1790- முதல் 1796-வரை

வரை சொக்கம்பட்டி ஜமீனை ஆண்டனர். இங்ஙனம் ஆண்டுவருங்
காலத்து வெள்ளையத்தேவர் சொக்கம்பட்டி ஜமீனுக்குத் தான் வம்ச
பரம்பரையான பாத்தியஸ்தரென்று அக்காலத்துள்ள அதிகாரிகளி
டத்துப் பன்முறை வற்புறுத்திச்சொல்லி வந்தனர். கர்னல் மாக்ஸ்வல்
(Colonal Maxwell) துரையென்பவர் போர்ட்டாருக்குச் செய்த
சிபார்சினால் சேற்றூராரும் சிவகிரியாரும் தத்தமக்கென்று சொல்லிச
சண்டையிட்டுக்கொண்டிருந்த தேவதானமென்னுங் கிராமத்தை
வெள்ளையத்தேவருக்குக் கொடுக்கும்படி 1792ஸ்டு டிசம்பர்மீ 18உ
போர்ட்டாரவர்கள் உத்தரவு செய்தார்கள். அவ்வுத்தரவின் வண்
ணம் அக்கிராமம் அவருக்குக் கொடுக்கப்பட்டது. வெள்ளையத்
தேவரென்பவர் தான் கீழுத்தியோகஸ்தர்களையேமாற்றியிருக்கிற
சங்கதியை யுத்தேசித்து என் சொந்த ஜமீனாகிய சொக்கம்பட்டியைக்
கொடுத்தால்மாத்திரம் பெறுவேனல்லது ஏனைய கிராமங்களை யான்
பெறமாட்டேனென்று மறுத்துவிட்டனர். இவ்வெள்ளையத்தேவர்
செய்யுங்காரியங்கட்கு ஜமீந்தார் மைனராயிருந்ததும் விசாரிப்பிலி
ருந்த முத்துச்சாமித்தேவர் இராஜாங்க காரியங்களைக் குறைவற
நடாத்தும், ஆற்றலில்லாதவராகவிருந்ததும், அனுகூலமாயிருந்தன.
இம்முத்துச்சாமித்தேவர் கர்னல் மாக்ஸ்வல் சொல்லியவண்ணம்
நடவாததால், 1792ஸ்டு-த்தில் மைனராகிய ஜமீந்தாரை ஜமீனை
விட்டு நீக்கியதாகத் தெரிகிறது. பின்னர் கிஸ்து தொகையை இவர்
கள் பாக்கியன்றி 1792ஸ்டு நவம்பர்மீ 9உயில் பானர்மன் (Mr.
Bannerman) துரையிடஞ் செலுத்தி ரசீது பெற்றிருப்பதால், மைன



ராகிய ஜமீந்தாரை மீண்டும் ஜமீனை யொப்புக்கொள்ளும்படி செய்த
தோடு கர்னல் மாக்ஸ்வல் துரை யென்பவர் 1792ஸ்டு நவம்பர்மீ
11உ கவில் நாமாவுங் கொடுத்திருக்கின்றனர். இங்ஙனம் மைனரா
கிய ஜமீந்தார் ஜமீனை யாண்டுகொண்டிருக்குங் காலத்துக் கலெக்ட்ட
ராகவந்த போனி துரை யென்பவர் 1795ஸ்டு நவம்பர்மீ 3உயன்று
வெள்ளையத்தேவரிடத்திலும் ஜமீந்தாராகிய சின்னணைஞ்சாத்தேவ
ரிடத்திலும், கொடிவழி ஜாப்தா வாங்கினதோடு பின்னர் வெள்ளை
யத்தேவரிடமிருந்து 1795ஸ்டு நவம்பர்மீ 30உ-க்குள் ஒரு பெட்டி
ஷன் வாங்கி எக்காரணத்தினாலேயோ அப்பெட்டிஷனில் வெள்ளை
யத்தேவர் குறித்திருப்பதெல்லா முண்மையென்றும், தான் அவ்
விஷயங்களைப்பற்றி விசாரித்திருப்பதாயும், அங்ஙனம் விசாரித்ததில்
சொக்கம்பட்டி ஜமீனுக்கு இவ்வெள்ளையத்தேவரே பாத்தியஸ்தரென்
றும், 1795ஸ்டு நவம்பர்மீ 30உ ரிவினியூ போர்ட்டாரவர்களுக்கு
ரிப்போர்ட்டு செய்தனர். அத்துடன் வெள்ளையத்தேவரிடத்திலும்
சின்னணைஞ்சாத்தேவரிடத்திலும் 1795ஸ்டு நவம்பர்மீ 3உ வாங்
கிய கொடிவழி ஜாப்தாவை யனுப்பாமல் கவர்ன்மெண்டு ரிக்கார்டுக
ளையும் வெள்ளையத்தேவர் சொல்லிய கட்டுக்கதைகளையு மனுசரித்து
ஒரு கொடிவழி ஜாப்தாவைத் தானே யெழுதி மேற்கண்ட ரிப்போர்
ட்டுடன் சேர்த்தனுப்பி கவர்ன்மெண்டாரை யேமாற்றிச் சின்னணைஞ்
சாத் தேவரிடமிருந்த ஜமீனைப் பலாத்காரமாய்க் கைப்பற்றி வெள்
ளையத்தேவருக்குக் கொடுத்திருக்கின்றன ரென்பது ரிக்கார்டுகளின்
மூலமாக இப்போது உள்ளங்கை நெல்லிக்கனி போற்றெள்ளிதின்
விளங்குகின்றது. இப் போனி துரை யென்பவர் தாமொரு கொடி
வழி சிருஷ்டித்தனுப்பாமல் அவ்விருவருங்கொடுத்த கொடிவழியை
யனுப்பி ரிப்போர்ட்டுச் செய்திருப்பாராயின கவர்ன்மெண்டாரவர்
கள் இவர் ரிப்போர்ட்டை நம்பிச் சின்னணைஞ்சாத்தேவரை ஜமீனி
லிருந்து நீக்கும் வண்ண முத்தரவு செய்திருக்கமாட்டார்கள். சின்ன
ணைஞ்சாத்தேவர் பரம்பரையாகச் சமீனை யாண்டுவந்த சந்ததியினு
தித்தவராகலின் அவர் கொடுத்த கொடிவழியில் ஜமீனையாண்ட தம்
முன்னோர்களின் பெயர்களையும், அவர்களாண்ட காலங்களையு
முறையே குறித்திருக்கின்றனர். வெள்ளையத்தேவர் கொடுத்த கொடி
வழியில் அவர்கள் முன்னோர்கள் ஜமீனை யாண்டிருப்பின் இன்ன

காலத்து இன்னார் ஆண்டனரென்று குறிப்பர்! அங்ஙனமின்மையால்
அவர் முன்னோர்களின் பெயரும் அவர்களாண்ட காலமுங் காணப்
படாததோடு அவர் போனி துரையிடங்கொடுத்த பெட்டிஷனிலும்
அவ்விரண்டுங் காணப்படவில்லை. ஆகையாலிது வெள்ளையத்தேவர்
புனைந்த பயனற்ற பொய்க்கதையே யன்றிப் பிறிதில்லை யென்பது
யாவருக்கும் வெள்ளிடைமலை போற்றெள்ளிதில் விளங்குமென்க.
இங்ஙனம் போனி துரை செய்த மோசத்தையும் அநியாயத்தையும்
போர்ட்டாருக்கு 1815௵ எப்ரல்மீ கலெக்ட்டர் காட்டன் துரை
யென்பவர் தாமெழுதிய ரிப்போட்டில் யூகமாயெடுத்துச் சொல்லிச்
சொக்கம்பட்டி ஜமீனுக்குச் சின்னணைஞ்சாத்தேவரே பரம்பரையான
பாத்தியஸ்தரென்று மன்றாடியும் போர்ட்டாரவர்கள் அவ்விஷயத்தி
னுண்மையறியாதுபோனது இச் சின்னணைஞ்சாத்தேவர் குடும்பஞ்
செய்த புண்ணியம்போலும்! இங்ஙனமிவர்கள் ஜமீனை யிழந்தகாலத்
துச் செய்ந்நன்றி மறவாத சேற்றூர்ப் பாளையகாரருடைய ஆதரவி
லிருந்ததாக வெளியாவதோடு இவ்விரு ஜமீனும் முற்காலந்தொடங்கி
யொன்றோடொன்று அன்புற்றிருந்ததாகவும் புலப்படுகின்றது. சின்
னணைஞ்சாத்தேவரின் முன்னோர்கள் வடகரையிலும் சொக்கம்பட்டி
யிலும் சுமார் 500 வருஷகாலம் அரசாண்டிருந்ததாகப் பலவித
ஆராய்ச்சியாலும் ரிக்கார்டுகளாலும் வெளியாகின்றது. வடகரை
யென்னும் ஜமீனே அக்காலத்துப் பெரிய ஜமீனாக இருந்ததென்பது
திருநெல்வேலி, திருவனந்தபுரம் இவைகளைப்பற்றி யெழுதிய சரித்
திரங்களில் காணப்படுகின்றது. அவ்விரண்டு சரித்திரங்களாலும்
கவர்ன்மெண்டு ரிக்கார்டுகளினாலும் வடகரை ஜமீனே பின்னர்ச்
சொக்கம்பட்டி ஜமீனென்று பேர் பெற்றிருப்பதாகக் கரதலாமலகம்
போல் வெளியாகின்றது. போனி துரையிடம் வெள்ளையத்தேவர்
கொடுத்த கொடிவழியில் சின்னணைஞ்சாத்தேவரின் முன்னோர்கள்
தம் முன்னோர்களின் வைப்பாட்டி மக்களென்று தெரிவித்திருக்கிறார்.
அந்தோ! ஈதென்ன அநியாயம்! பூர்வீக பரம்பரையினராய் ஜமீனை
யாண்டு திருக்குற்றாலமென்னும் திவ்ய க்ஷேத்திரத்தில் கோவில்
திருப்பணிகள்செய்து அன்னசத்திரங்கட்டி அச்சத்திர தர்மத்திற்
காகவும் கோவிலில் நித்திய நைமித்தியங்கள் குறைவற நடக்கும்
பொருட்டும் போதுமான கிராமங்களை சர்வமானியமாக விட்ட குடும்



பத்தினரைத் தங்கள் முன்னோர்களின் சாரப்பிறந்தவர்களென்று
வாய் கூசாது சொல்லி ஜமீனை யபகரித்தனர். இங்ஙனம் வஞ்சித்
தபகரித்த வெள்ளையத்தேவருக்கும் அவர் குமாரர் வலங்கைப்புலி
பெரியசாமித்தேவருக்கும் தெய்வ சங்கற்பத்தால் கொடிய விரோத
முண்டாயிற்று. வலங்கைப்புலி பெரியசாமித்தேவர் தென்காசியின்
கண்ணிருந்த கஜானாவைக் கொள்ளையடித்ததோடு வேண்டாக்கொலை
கள் செய்ததினிமித்தம் கவர்ன்மெண்டார் அவரைக் கைதியாக்கி
(State prisoner) குத்துவல்லாரி (Gooty Ballary)ஜயிலுக்கனுப்ப,
அவர் அங்கேயே மரணமடைந்தனர். அவர் குமாரர் கருணாலய
வலங்கைப்புலித்தேவருக்குக் கவர்ன்மெண்டார் தங்களிடம் ஜப்தியி
லிருந்த ஜமீனை 1859௵ ஆகஸ்டுமீ த்தில் கொடுக்கக் காமுகனாய்க்
கடன்காரனாய் நாலைந்து வருடங்களுக்குள் ஜமீனை யிழந்து உண்டியு
முறையுளுமின்றிப் பிறராலாதரிக்கப்பெற்றுச் சின்னணைஞ்சாத்தேவ
ரின் அன்னசத்திரத்தின் ஒரு பாகத்தில் வசித்து 1892௵ ஜூலைமீ
காலஞ்சென்றனர். இங்ஙன முத்தமர்களைக் குறைகூறிய இவர்கள்
குடும்பத்தை யெம்பெருமா னடியோடு நசிக்கும்படி செய்தனர்.
"அடாது செய்தவர் படாது படுவ"ரென்னும் பழமொழிக்கிணங்க
இவ்விதம் வஞ்சனைசெய்து ஜமீனை யபகரித்த அவர்கள் குடும்பம்
அனுபவித்த நன்மையை யுலகோரனைவரும் தெளிவாயறிவார்கள்.
மேற்கூறிய வெள்ளையத் தேவர் 1796௵-த்தில் பட்டமெய்தி
1806௵ வரை யாண்டனர். இவர் குமாரர் வலங்கைப்புலி பெரிய
சாமித்தேவர் 1806௵-த்தில் பட்டமெய்தி 1835௵ வரை யாண்ட
னர். இவர்குமாரர் கருணாலய வலங்கைப்புலித்தேவர் 1859௵-த்தில்
பட்டமெய்தி 1863௵ வரை யாண்டனர். இம்மூவரும் பட்ட
மெய்தி யாண்ட காலத்தில் சின்னணைஞ்சாத்தேவர் குடும்பத்தினர்
செய்த தருமங்களைக் கெடுத்ததைத் தவிர ஒரு தருமமுஞ் செய்த
தாகக் காணப்படவில்லை. சின்னணைஞ்சாத்தேவர் குடும்பத்தினரை
வஞ்சித்துப்பெற்ற ஜமீனை வெள்ளையத்தேவராவது, அவர் குமார
ராவது பேரராவது சுகத்துடனிருந் தாண்டனுபவித்ததாகப் புலப்
படவில்லை. "அரசனன்று கேட்கும் தெய்வ நின்று கேட்கு"மென்ற
பழமொழியும் "கற்றோரைப்புண்ணியரைக் கண்டோரையல்லாது மற்
றோரையேலாவடகரையாம்" என்ற முதுமொழியு மீண்டுச்சரதமா

யின. வெள்ளையத்தேவர் 1795௵ போனி துரையிடங்கொடுத்த பெட்டிஷனில் அவர்கள் முன்னோர்கள் சொக்கம்பட்டியில் அரசு புரியுங் காலத்துக் குப்பக்குறிச்சியிலிருந்து சில உப்புக்கட்டி மறவர்கள் குடும்பத்தோடு மாடுமேய்க்கும் பொருட்டுத் தங்கள் ஜமீனுக்கு வந்ததாகவும், அங்ஙனம் வந்த குடும்பத்துள்ள ஒரு பெண்ணைத் தங்கள் முன்னோர்களின் பந்துக்களிலொருவர் வைப்பாக வைத்திருந்ததாகவும், அப்பெண்ணிற்கு ஒரு பெண் குழந்தையும் இரண்டு ஆண் குழந்தைகளும் பிறந்ததாகவும், அங்ஙனம் பிறந்த பெண்ணைத் தன்னுடைய பாட்டனாருடைய பாட்டனார் வைப்பாக வைத்திருந்ததாகவும், அவ் வாண்குழந்தைகள் பெரியணைஞ்சாத்தேவர், சின்னணைஞ்சாத்தேவர் என்ற பெயருடையவர்களென்றும் எழுதிக்கொடுத்திருக்கின்றனர். ஷெ போனி துரை தாமே சிருஷ்டித்த கொடிவழியில் "இரண்டு உப்புக்கட்டிமறவர்கள் தங்கள் சகோதரியுடன் சொக்கம்பட்டிக்குவந்து அந்தச் சகோதரியை வெள்ளையத்தேவருடைய பாட்டனாருடைய பாட்டனாரிடம் வைப்பாகவிருக்கும்படி செய்து தாங்களிருவரும் அவருக்குதவியாக விருந்ததாகவும், அங்ஙனமிருந்த இருவரில் ஒருவர்தான் சின்னணைஞ்சாத்தேவ"ரென்றுங்காணப்படுகிறது. ஷெ வெள்ளையத்தேவர் 1795௵ நவம்பர்௴ 3௳ கொடுத்த கொடி வழியில் சொல்லியவண்ணம் சின்னணைஞ்சாத்தேவர் வெள்ளையத்தேவரின் முன்னோருடைய வைப்பாட்டி மகனென்றாவது, 1795௵ நவம்பர்௴ 30௳க்குள் வெள்ளையத்தேவர் கொடுத்த பெட்டிஷனில் கண்டபடி வெள்ளையத்தேவரின் முன்னோர்களின் பந்துக்களிலொருவரின் வைப்பாட்டி மக்களில் ஒருவர் சின்னணைஞ்சாத்தேவரென்றாவது போனி துரை சிருஷ்டித்த கொடிவழியிற் காணப்படவில்லை. ஜமீனுக்குப் பரம்பரையாக உரிமையுடைய சின்னணைஞ்சாத்தேவரை வைப்பாட்டி மகனென்று வெள்ளையத்தேவர் சொல்வது கடவுள் சம்மதத்திற்கும் தன் மனச்சாட்சிக்கும் பொருந்தாத பெரும்பாவமென்றெண்ணிப் போனி துரை தான் சிருஷ்டித்த கொடிவழியில் அங்ஙனமெழுதாதுவிட்டனர் போலும்! இச்சின்னணைஞ்சாத்தேவரை மோசஞ்செய்யவேண்டுமென்ற எண்ணத்துடனே அயோக்கியதையான ரிக்கார்டுகளை 27-நாளைக்குள் சிருஷ்டித்திருக்கிறார்கள். இதனுண்மை யாவருக்கும் பொள்ளெனப் புலப்படுமாறு அக்காலத்துக் கவர்ன்



மெண்டி லேற்பட்டிருந்த ரிக்கார்டுகளிற் சிலவற்றை யீண்டு வரைகின்றோம். அவை வருமாறு.—

"1797-௵ ஏப்ரல்௴ 4௳ திருநெல்வேலிஜில்லா கலெக்டர் மிஸ்டர் ஜாக்சன் (Mr. Jackson) ரிவினியுபோர்டாரவர்களுக்கு அடியிற்கண்டவண்ணம் எழுதியிருக்கின்றார். சிறிது நாட்களுக்கு முன்பு சொக்கம்பட்டிக்கு முன்னிருந்த பாளையக்காரராகிய சுமார் 15-வயதுள்ள இளைஞர் இராமநாதபுரத்துக்கு வந்து முன்னிருந்த கலெக்டர் உத்தரவுப்படி அவர் குலையனேரியென்ற கிராமத்தைக் கைப்பற்றுவதற்காகச் சொக்கம்பட்டிப் பாளையத்துக்குத்தான் சென்றதாயும், இப்போது ஜமீந்தாராயிருக்கிற வெள்ளையத்தேவர் பக்கத்திலிருப்பதனால் தன்னுடைய க்ஷேமத்துக்குக் கெடுதிவருமென்று சந்தேகித்துத் தன்னுடைய குடும்பத்தார் அபிப்பிராயப்படியும் தனக்குண்டான பயத்தினாலும் தான் கும்பினியாருடைய (கவர்ன்மெண்டாருடைய) சம்ரக்ஷணைக்குள்ளேயே இருக்கவேண்டுமென்று இராமநாதபுரத்துக்குத் தான் வந்ததாகவும் என்னிடம் சொன்னார்.

அவர் சொன்ன விஷயங்களிலிருந்து மேலேசொன்ன காரணத்தினால்மட்டும் அவர் இவ்விதம் செய்யவில்லையென்று நான் யூகிக்கிறேன். அவருக்குக்கொடுத்திருக்கிற கிராமத்தை அவர் இப்போது ஒப்புக்கொண்டாரானால் அப்படிச் செய்வதானது அவர் இனிமேல் கொண்டுவரும் எவ்வித பாத்தியாபாத்தியதைகளுக்கும் தடையாக நேரிடுமென்பது அவருடைய குடும்பத்தினர் யாவருக்கும் அபிப்பிராயமென்று எனக்குத்தோன்றுகிறது. கும்பினியாருடைய உத்தரவுக்குக் கீழ்ப்பணிந்து நடக்கவேண்டியது அவசியமென்றும், அவருடைய அன்னவஸ்த்திரத்துக்காக ஏற்படுத்தப்பட்ட கிராமத்தைக் கைப்பற்ற மறுப்பது அவருக்குத்தானே கெடுதியென்றும் அந்தக் கிராமத்தைத்தவிர அவருக்கும் அவருடைய குடும்பத்தாருக்கும், அன்னவஸ்திரத்திற்கு வேறே ஒன்றுமில்லாமலிருப்பதையும் நான் அவருக்கு எடுத்துச்சொன்னேன். அவருக்கு கும்பினியாருடைய பாதுகாப்புமட்டும் வேண்டுமென்றும், இராமநாதபுரத்திலே தான் வசிப்பதற்கு உத்தரவுமட்டும் வேண்டியதைத்தவிர வேறொன்றும் வேண்டாமென்றும், யாதொரு அலவன்சும் இல்லாமல் இராமநாத

புரத்திலிருக்கும்படி கவர்ன்மெண்டாருடைய தயவிருந்தால் அவ்விதமே உத்தரவுகொடுத்தாலும் போதுமென்றும் பதில்சொல்லுகிறார். இதைப்பற்றித் தங்களுடைய அபிப்பிராய மென்னவென்றறிய விரும்புகிறேன். ஆனால், என்னுடைய அபிப்பிராய மென்னவென்று கேட்டால், இளைஞர் வேண்டிக்கொள்கிறபடி செய்யவேண்டியதுதானென்றும், குலையனேரியென்ற கிராமத்தின்* வரும்படியை அவருடைய அன்னவஸ்திரத்துக்காக இராமநாதபுரத்தில் செலுத்தவேண்டியதுதானென்றும் நினைக்கிறேன்.

இவ்விதம் நான் சிபார்சு செய்கிறதற்கு இரண்டு காரணங்களிருக்கின்றன. முதலாவது முன்னிருந்த மானேஜருடைய பிசகான நடையெவ்வாறிருந்தபோதிலும் அதில்கிஞ்சித்தாவது மைனர் ஜமீந்தார்பேரில் சொல்லுவதற்கிடமில்லை. இரண்டாவது, மைனர் ஜமீந்தாரை அவருடைய விருப்பப்படி இராமநாதபுரத்திலிருக்கும்படி செய்தால், வெள்ளையத்தேவர் அவருடைய கடமையைச் சரியாய் பார்க்கவேண்டியதவசியமென்றறிந்து நடப்பார்."

"சென்னப்பட்டண மாகாணரிவினியு போர்டாரவர்களுக்கு 1816 ௵ ஏப்ரில்௴ 1௳ திருநெல்வேலி ஜில்லா கலெக்டர் மிஸ்டர் காட்டன் (Mr. Cotton) துரை பின்வருமாறு எழுதுகிறார்.

... ... ...

... ... ...

சின்னணைஞ்சாத்தேவர் அவர் தெரியப்படுத்துகிறபடி மிகவும் துன்பப்படுகிறாரென்று நான் நம்புகிறேன். ஜமீனுக்கு அவருக்கிருக்கிற பாத்தியதை நியாயமானதென்று நான் தெரிந்திருக்கிறேன். என்னுடைய ஆபீஸிலுள்ள ரிக்கார்டுகளால் அவர் ஏன் ஜமீனிலிருந்து நீக்கப்பட்டாரென்று தெரியவுமில்லை. அவர் வெறுப்பாயிருக்கிறார். ஜமீனைத் திரும்பக் கைப்பற்ற வியாச்சியஞ்செய்யத் தன்னால்முடியாதென்றும், ஜமீனை யவரிடத்திலிருந்து கவர்ன்மெண்

* இதை வாசிப்பவர்கள் அக்காலத்தில் திருநெல்வேலியும் மதுரையும் ஒரே ஜில்லாவாக விருந்தனவென்றும், அதற்குக் கலெக்ட்டரிருப்பிடம் இராமநாதபுரமா யிருந்ததென்றுமறிக.



டாரே எடுத்திருக்கிறபடியால் அவருடைய பெட்டிஷன்களை விசாரணைசெய்து அவைகளிற்கண்ட விஷயங்க ளுண்மையாயிருந்தால் நியாயாதிபதியாகிய கவர்ன்மெண்டாரே அவரைப் பழையபடி ஜமீந்தாராக்குவார்களென்றும் நம்பியிருக்கிறதாகச் சொல்லுகிறார்."

"முன்பு திருநெல்வேலியில் சப்கலெக்ட்டராயிருந்து மாற்றப்பட்டுப்போன மிஸ்டர் ஹூஜஸ் (Mr. Huges) துரையென்பவர் 1824 ௵ ஜூன்௴ 26௳ திருநெல்வேலி கலெக்டர் மிஸ்டர் மன்ரோ துரைக்குப் பின்வருமாறெழுதியிருக்கிறார்.

... ... ...

... ... ...

"சொக்கம்பட்டிப் பாளையகாரருடைய யோக்கியா யோக்கியதைகளையும் நடத்தைகளையும்பற்றிக் கொஞ்சக்காலத்துக்கு முன்பு நமக்குள்நடந்த சம்பாஷணையை ஞாபகப்படுத்திப்பார்த்தேன். நம்முடைய கவர்ன்மெண்டாரிடமிருந்து வாங்கப்பட்ட சாசுவத சன்னதின்பேரில் மட்டும் ஜமீந்தாரிக்கு அவருக்குப்பாத்தியதை யேற்பட்டதென்றும், அவருடைய குடும்பத்தாருக்கு ஜமீனில் யாதொரு பூர்வீகபாத்தியதையு மிருந்திருக்கவில்லை யென்றும் இப்போதிருக்கிற ஜமீந்தாரின் தகப்பனாரானவர் அநேகவித ஜெயமுள்ள கபடவஞ்சனைகள்செய்து அப்புறப்படுத்திய முந்திய ஜமீந்தாருக்கு வேலைக்காரனாயிருந்ததைத் தவிர வேறில்லையென்றும், நான் அக்காலத்தில் உம்மிடஞ்சொன்னது உமக்கு ஞாபகமிருக்கக்கூடும். மறந்துபோயிருக்கக்கூடிய மேற்கண்ட விருத்தாந்தங்களை விபரமாய் வெளியிடுவது ஒருவேளை உபயோகமில்லாத விஷயமாயிருக்கலாம். ஆனாலும் தன்காலத்தில் நிச்சயமாய்க் கெட்டசெய்கைகளால் பிரசித்திபெற்ற இப்பொழுதுள்ள ஜமீந்தார் மகனுடையகதியை (வாழ்வை) பொதுஜனங்கள் அறியும்வண்ணஞ்செய்ய முயற்சிப்பது பலனையே கொடுக்குமென்று நான் நம்புகிறேன்."

... ... ...

"முன்பு திருநெல்வேலி ஜில்லாவில் ஜட்ஜியாயிருந்து மாற்றப்பட்டுப்போன மிஸ்டர் மாங்கஸ் (Mr. Monks) துரையென்பவர்

1824-௵ ஜூலை௴ 15௳ திருநெல்வேலி கலெக்டர் மிஸ்டர் மன்ரோ (Mr. Munro) துரைக்குப் பின்வருமாறெழுதியிருக்கிறார்.

இப்போது சொக்கம்பட்டி ஜமீந்தாரென்று சொல்லப்படுகிறவர் அந்த ஜமீந்தாரிக்கு சட்டப்படி பாத்தியதையுள்ளவராவென்று ஒரு சந்தேகம் நாட்டிலுள்ளவர்களுக்கிருக்கிறதாகவும், இப்போது திருநெல்வேலி டவுனில் வாசஞ்செய்து கவர்ண்மெண்டிலிருந்து பென்ஷன்வாங்கிக்கொண்டு வருகிறவர்தான் அந்த ஜமீன்தாரிக்குச்சட்டப்படி பாத்தியதையுள்ள வாரிஸாகப் பாவிக்கப்பட்டிருக்கிறாரென்றும், நான் கேள்விப்பட்டவிஷயம் எனக்கு நன்றாய் ஞாபகமிருக்கின்றது. அது எப்படியிருந்தாலுஞ்சரி. இப்போதிருக்கிறவர் கவர்ன்மெண்டாருக்குத் துரோகியாய்ப்போய்விட்டபடியால், அதுவிஷயத்தில் விசாரணைசெய்வது நலமென்றும் மேற்சொல்லியபடி சந்தேகமேதாவது இருக்கும்பக்ஷத்தில் அதை யாதொரு வருத்தமில்லாமல் தெளிந்துகொள்ளலாமென்றும் நான் நினைக்கிறேன்.”

... ... ...

“திருநெல்வேலி ஜில்லா கலெக்டர் மிஸ்டர் மன்ரோ (Mr. Munro) துரையானவர் 1826-௵ ஆகஸ்டு௴ 19௳ ரிவினியுபோர்டாரவர்களுக்கு அடியில்வருமாறெழுதியிருக்கிறார்.

ஒரு சத்திரத்தின் மானேஜ்மெண்டை நான் வகித்தெடுத்துக்கொண்டதைப்பற்றிச் சொக்கம்பட்டிப் பாளையக்காரர் முறையிடுகிற பெட்டிஷனைத் திருப்பியனுப்புகிறேன். பிரஸ்தாபிக்கிற கட்டிடங்கள் குற்றாலம் அருவியின் கரையோரத்திலிருக்கிறபடியால் தென்னிந்தியாவின் சகல பாகத்திலிருந்தும், இன்னுமதிக தூரமான இடங்களிலிருந்தும் வரக்கூடிய மதாபிமானமுள்ள பிரயாணிகள், அடிக்கடி வந்து தங்கக்கூடிய இடமாயிருக்கின்றன. அக் கட்டிடமுழுவதும் 150வருஷங்களுக்குமுன் சின்னணைஞ்சாத்தேவரால் கட்டப்பட்டன. அவர் இப்போதிருக்கிற பாளையக்காரருக்குமுன் ஜமீனையாண்டவராயிருந்தபோதிலும் இப்போழுதாள்பவர் அவருடைய நேரான வாரிஸிலுற்பவித்தவரில்லை. அதற்கு மானியமாய்விடப்பட்ட நிலங்கள் ஏராளமாயும் அவருடைய உதாரகுணத்தை விளக்கிக் காட்டக்கூடியவைகளாயுமிருக்கின்றன.



பக்கத்திலுள்ள பன்னிரண்டு கிராமங்களின் மேல்வாரம் இது விஷயத்துக்கேற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அதன் வருஷாந்தர சராசரிமதிப்பு சுமார் 9080-ரூ. ஆகிறது. இத் தர்மத்துக்கும் இதன் வரும்படியிலிருந்தேற்படுத்திய கோவில்கைங்கரியங்களுக்குங் கெடுதியாக சத்திரவரும்படிகள் நியாயமற்ற வழிகளிற் செலவாகின்றனவென்றும், மானியம்விட்டதின் பூர்வநோக்கம் மாறுதலடைந்துவிட்டதென்றும் 1825-௵ ஆரம்பத்தில் எனக்கு இரகசியமாய்ச் சமாசாரந்தெரிந்தது. நானதைப்பற்றிப் பின்னும் விசாரணைசெய்ததில் எனக்கு முன்கிடைத்த சமாசாரமுண்மையென்று ஸ்திரப்பட்டது. நான் தெரிந்துகொண்ட இன்னும் மற்றவிஷயங்களில் பாளையக்காரர் அந்த இடத்துக்குவந்த சமயங்களில்* அந்தக் கட்டிடத்தின் அநேகபாகங்கள் முழுவதும் நாய்க்கொட்டமாய் உபயோகப்பட்டு வந்தனவென்பதும், அந்தக்கட்டிடத்தி லேற்படுத்தியிருந்த ஒரு பள்ளிக்கூடம் இல்லாமற் போய்விட்டதென்பதும், இவ்விஷயங்கள் ஜனங்களுக்கு வியக்தமாய்த் தெரிந்தவைகள்.”

இவைகளால் இவர்கள் செய்திருக்கும் மோசமும் அநியாயமும் விளங்குமென்பதில் ஒருசிறிது மையமின்றாம்.

யார் யாருக்கு எவ்வெக்காரியங்களிற் பழக்கமிருக்குமோ அவ்வக்காரியங்கள் தங்கள் செய்கையில் விளங்குமென்பது எல்லாருக்குமொப்பமுடிந்த விஷயமாதலால் இவ்வெள்ளையத்தேவரின் முன்னோர்கள் மாடுமேய்க்குந் தொழிலிலமர்ந்திருந்த காரணத்தாற்றான் இவ்வெள்ளையத்தேவர் புத்தியில் வேறு கதைகள் தோன்றாமல் இம் மாடுமேய்க்குங் கதை தோன்றியிருக்கிறதென்று யூகிக்க இடமுண்டாகின்றது. தான் சின்னணைஞ்சாத்தேவரின் முன்னோர்களின் வைப்பாட்டி மகனென்று வெள்ளையத்தேவர் எழுதிவைத்திருப்பா

* இக்கடிதத்தினால் சின்னணைஞ்சாத்தேவர் செய்த தருமத்துக்கு அவர் பரம்பரையான வம்சத்திலுற்பவியாத வெள்ளையத்தேவர் மகன் வலங்கைப்புலி பெரியசாமித்தேவருக்குப் பாத்தியதை யில்லையென்று வெளியாகிறது. இவர் காலத்தில் அக் கட்டிடத்தை நாய்க்கொட்டமாக்கிய பாபமும், இவருக்கு மிவர் மகனுக்குங் கொடியவிரோத மேற்பட்டதனிமித்தம் மகனுக்கு நாய்ப்பத்தலில் சாப்பாடுபோடும்படி செய்த பாபமும் இவரைக் குத்துவல்லாரி ஜெயிலுக்கு அனுப்புவித்தனபோலும்.

ராயின் அது பொருத்தமாயிருந்திருக்கும். இவ்வெள்ளையத்தேவர் தான் வைப்பாட்டி மகனென்பதனை நிலைநிறுத்த இக்காலத்துஞ் சிலர் முயல்வர். இக்காரணங்கொண்டே சங்கரநயினார் கோவில் தாலூகாவில் ஒரு கிராமத்திலுள்ள கவரை நாயக்கமார் குடும்பத்திற்கு வெள்ளையத்தேவர் அவர் குமாரர் அவர் பேரன் ஆகிய இம்மூவரும் ஜமீனையாண்ட காலத்தில் பிரத்தியேகமாக மரியாதைகள் செய்ததாக இப்பொழுதும் பிரஸ்தாபித்துக் கொள்கிறார்கள்.

இங்ஙன மிவர் கட்டிய கட்டுக்கதையை யனுசரித்து போனி துரை தயார்செய்த கொடிவழியில் வெள்ளையத்தேவரின் முன்னோர்கள் 1737-௵ வரை இடைவிடாது முறையாகச் சொக்கம்பட்டி ஜமீனையாண்டதாக எழுதியிருக்கிறார். இங்ஙன மிவர் எழுதியது மெய்யல்லவென்பது 1767-௵ த்துக்கு முன்னர்ச் சொக்கம்பட்டி யென்றொரு ஜமீனேயில்லையென்றும் வடகரை ஜமீனென்று பெயருடையதுதான் பின்பு 1767-௵ முதல் சொக்கம்பட்டி ஜமீனென்று வழங்கப்பட்டுவந்ததென்றும் மேலே விளங்கக் கூறியிருக்கின்றாமாதலால் யாவர்க்கும் வெளிப்படையாய் விளங்குமென்பதில் ஒரு சிறிது மையமின்றாம்.

1781-௵ த்துக்குப் பின்னரன்றி அதற்கு முன்னர் வெள்ளையத்தேவரின் முன்னோர்கள் வடகரையில் ஜமீனிருந்த காலத்திலாயினும், அன்றிச் சொக்கம்பட்டியில் ஜமீனிருந்த காலத்திலாயினும் ஒரு நிமிஷநேரமாவது ஆண்டதாக ஒரு ரிக்கார்டாவது அன்றியொரு துண்டுக் கடிதமாவது யாவராலுங் காட்டமுடியாதென்பது மலையிலக்காம்: இங்ஙனமிருக்கப் போனி துரை எழுதியது சுத்தப் பொய்யென்று நிரூபித்தற்கு 1737-௵ த்துக்கு முன்னர்ச் சின்னணைஞ்சாத்தேவரின் முன்னோர்களால் திருக்குற்றாலமென்னுந் திவ்விய க்ஷேத்திரத்தில் செய்யப்பட்டிருக்கும் ஒப்புயர்வற்ற திருப்பணிகளே தக்க சான்றாகுமென்பதிலையமின்றாம். இன்னும் வடகரை ஜமீனில் அரசுபுரிந்த சின்னணைஞ்சாத்தேவரால் 1705-௵ த்துக்கு முன்னர்த் திருக்குற்றாலத்தில் அன்ன சத்திரங் கட்டப்பட்டதாகத் திருக்குற்றாலக் குறவஞ்சி யென்னு நூலிற் கூறப்பட்டிருப்பதோடு அக்குறவஞ்சி பாடிய இராஜப்பன் கவிராயரவர்களுக்கு விஜய ரெங்க



சொக்கநாத நாயக்கர் மானியம் விட்டிருப்பதனாலும், திருக்குற்றாலநாதசுவாமி கோவில் திருப்பணிக்காகத் தென்காசித் தாலூகா பாட்டைப்பத்துக் கிராமத்தில் 1705-௵ த்துக்கு முன்னரே சுமார் 120 கோட்டை விரைப்பாடு மானியமாக விட்டிருப்பதனாலும் 1715-௵ சின்னணைஞ்சாத்தேவர் ஜமீந்தாராக விருந்தாரென்று பிரஞ்சுப் பாஷையிலுள்ள புத்தகத்துக் கூறியிருப்பதனாலும், 1737-௵ த்துக்கு முன்னரே சின்னணைஞ்சாத்தேவர் மிக்க கீர்த்தியுடன் ஜமீனையாண்டுவந்தனரென்பது கரதலாமலகம்போல விளங்குமென்பதிலையமின்றென்க. இவையன்றிக் கவர்ன்மெண்டு ரிக்கார்டுகளுமிருக்கின்றன. வடகரை ஜமீன் தோன்றிய நாட்டொடங்கிச் சொக்கம்பட்டிக் கிராமம் ஷை ஜமீனுக்குட்பட்ட கிராமமேயன்றி வேறு தனிச் சமீனல்லவென்று காட்டற்குத் தகுந்த ரிக்கார்டுகளிருக்கின்றன.

இங்ஙனங் கூறிப்போந்த விஷயங்களால் சொக்கம்பட்டி வேறு ஜமீனல்லவென்பதும், திருக்குற்றாலநாத சுவாமி கோவிலிற் செய்திருக்கும் திருப்பணிகள் வடகரை ஜமீந்தாராகிய சின்னணைஞ்சாத்தேவரால் இயற்றப்பட்டனவென்பதும், அநேக கிராமங்கள் அவராலேயே மானியமாக விடப்பட்டனவென்பதும் வெள்ளிடை மலைபோல் யாவர்க்குந் தெள்ளிதின் விளங்குமென்க. இத்துணை அரும் பெருந்தர்மங்களைச் செய்த புண்ணிய சொரூபிகளாகிய வடகரை ஜமீந்தார் பெரியசாமித் துரையும், அவர் தம்பி இராஜகோபால தேவரும் திருக்குற்றாலநாத சுவாமி கோவில் துஜஸ்தம்பத்தினருகேயுள்ள கற்சிலையில் நீடூழி காலம் வாழ நிற்கின்றனர்.

இத்தகைய தர்மசொரூபியாகிய சின்னணைஞ்சாத்தேவர் பெயர் பிறர்க்கு வெளிப்படாவண்ணம் அவர்களால்விடப்பட்ட மானியங்கள், செய்த தருமங்கள், திருப்பணிகள், சிலாலிகிதங்கள் முதலியன அழிவுறும்வண்ணம் வெள்ளையத்தேவரும் அவர் மகனும் பேரனுஞ் செய்த முயற்சிகள் அளவிறந்தனவாகும். ஆனால் இவர்கள் கெட்டவெண்ணம்போல இறைவன் சம்மதமில்லை. ஆகையாலிவர்களெண்ணம் நிறைவேறவில்லை. இவைகளைப்பற்றி விவரமாகப் பின்னரெம்மால் வெளியிடப்பெறும் மூன்றாம் வால்யத்தால் (Volume III) நன்கு வெளிப்படுமென்க.

புண்ணிய சொரூபிகளாகிய சின்னணைஞ்சாத்தேவரும், அவர் குடும்பத்தினரும் தொன்றுதொட்டுச் செய்த ஒப்புயர்வற்ற தருமம் கோவிற்றிருப்பணி முதலியவற்றால் இந்நில வுலகத்தின்கண் பூத வுடம்பழிந்து புகழுடம்பழியாது என்று நின்று நிலவுதலை நோக்கிப் பொறாமையுற்று ஷையார்கள் செய்த மற்றைய தருமங்கள், மானியங்கள், அவர்களைப்பற்றிய கவர்ன்மெண்டு ரிக்கார்டுகள் முதலியவை கெடுதலுறும்வண்ணஞ் செய்துவந்த தன் பாட்டன் தகப்பன் சுபாவத்தைக் கருணையவலங்கைப்புலித்தேவர் கைக்கொண்டு திருக்குற்றாலநாதசுவாமி கோவிலில் நீடூழி வாழாநிற்குஞ் சின்னணைஞ்சாத்தேவர் திருவுருவச் சிலைகளிரண்டையும் அப்புறப்படுத்த வெண்ணங்கொண்டு தன் முன்னோர்கள் சிலையென்று இரண்டு செய்து அவற்றைக் கோவிற் சந்நிதியிற் கொணர்ந்து சேர்த்துப் பின்னர்த் திருக்கோவிலினுள் நிற்கிற சின்னணைஞ்சாத்தேவரின் முன்னோர்கள் திருவுருவச் சிலையை நீக்க முயன்றனர். இவ்விஷயத்தைத் தென்காசித் தாலூகா தாசில்தார் சரவணமுத்துப்பிள்ளை யென்பவரறிந்து பெரும் பொருள் செலவிட்டுத் திருப்பணி நடாத்திய புண்ணிய சீலர்களின் ஞாபகார்த்தமாக ஸ்தாபிக்கப்பட்ட அவர்கள் திருவுருவச் சிலைகளை யகற்றிவிட்டுப் புண்ணிய காரியங்கள் செய்தலிற் சிறிதுஞ் சம்பந்தமில்லாத மற்றையோர் சிலைகளை யவ்விடத்திற் கொண்டு வந்து நாட்டுதல் தகாது. அங்ஙனஞ் செய்தல் ஒருவன் செய்த தருமத்துக்கு மற்றவன் பிறந்தவனாதல்போலும் என்று அவர் நாணும்படி கூறித் தடுத்துவிட்டனர். இங்ஙனங் கருணையவலங்கைப் புலித்தேவரென்பவர் தங்கள் முன்னோர்களென்று பாவித்து வகுத்த சிலைகளிரண்டையும் அவரெண்ணிய வெண்ண நிறைவேறாமையால் போட்டுவிட்டுச் சென்றனர். பின்னரவைகள் நதிக்கரையிற் றள்ளப்பட்டு அநேகர் மலசலவிசர்ச்சனஞ் செய்வதற்கிடமாயிருக்கின்றன.

இதனைக்கண்ட ஒரு புலவர் சின்னணைஞ்சாத்தேவரும் அவர் முன்னோர்களும் தருமசீலர்களாயிருந்து மேலான பதவியுற்றனரென்பதற்கு அறிகுறியாக அவர்கள் திருவுருவச் சிலைகள் திருக்கோவிலுள் எம்பெருமான் முன்னிருப்பதும், வெள்ளையத்தேவர் முதலியவர்கள் அதர்மர்களாயிருந்து நரகத்திலழுந்துகின்றனரென்



பதற்கு அறிகுறியாக அவர்கள் சிலைகளைத் திருமதிலுக்கு வெளியே கிடத்திப் பலரு மலசலவிசர்ச்சனஞ் செய்தற்கிடமாய்ப் பலராலிகழப் பட்டுக்கிடத்தலும் தக்க சான்றாகுமென்று புகன்றனரென்பார்கள்.

துஜஸ்தம்பத்தினருகே ஸ்தாபித்திருக்குந் திருவுருவச் சிலைகளிரண்டிற்கும் இன்னும் விசேஷதினங்களில் பூஜை நைவேத்தியங்கள் நடைபெற்றுவருகின்றன. இது திருவனந்தபுரம் மகாராஜா அவர்களும் சேதுபதிமன்னரவர்களும் ஏனைய பலரும் நன்கறிந்த விஷயம்.

சித்திரசபை சீரணோத்தாரணகாலத்தில் திருக்குற்றாலநாத சுவாமி சின்னணைஞ்சாத்தேவர் வடிவோடு இறுதியி லூற்றுமலை ஜமீனிலரசுபுரிந்து காலஞ்சென்ற ஊற்றுமலை ஜமீந்தாரவர்கள் சொப்பனத்திற்றோன்றிச் சித்திரசபைக்குத் தெப்பஸ்தூபி செய்துவைக்கும்படி வேண்டியதாகவும் அதனால் குற்றாலநாத சுவாமி சின்னணைஞ்சாத்தேவர் குடும்பத்தில் மிக்க கருணைவைத்திருப்பது விளங்குகிறதென்றும் எம்மிடம் அவர்கள் கூறியிருக்கின்றார்கள்.

சின்னணைஞ்சாத்தேவரின் முன்னோர்களுள் ஒரு ஜமீந்தாரரின் சகோதரியும் மனைவியும் திருக்குற்றாலநாதரைத் தரிசனஞ்செய்து பிரகாரம் வரும்பொழுது ஜமீந்தார் மனைவி தரித்திருந்த வஸ்திரத்தில் மண்பட்டிருப்பதை ஷை ஜமீந்தாரின் சகோதரி பார்த்து யாமினி யொருமுறை யெம்பெருமானைத் தரிசித்தற்கு வருவதற்குள் பிரகாரமெல்லாங் கற்பாவியிருக்கும்வண்ணஞ் செய்தால் இவ்விதம் மண்படாதென்று பரிகாசமாகச்சொல்ல, அதனைக்கேட்ட அப்பெண்மணி சுவாமி சந்நிதானத்திற்குமுன் வந்து நமஸ்கரித்தெழுந்து தன் கைக்குட்டையை விரித்துத் தாமணிந்திருந்த ஆபரணங்களுள் திருமங்கல்யந்தவிர மற்றவைகளையெல்லாங் கழற்றி யாங்களடுத்தமுறை யெம்பெருமானைத் தரிசிக்கவருவதற்குள் இவ்வாபரணங்களைக் கொண்டு வெளிப்பிரகாரமுற்றிலும் கல்லால் தளவரிசைபோட்டு முடிக்கவேண்டுமென்று ஆக்ஞாபித்தார்களென்று இப்பொழுது ஊற்றுமலை ஜமீனையாண்டுவரும் ஜமீந்தாரணியவர்கள் வெளியிட்டார்கள்.

இச்சின்னணைஞ்சாத்தேவரின் முன்னோர்கள் திருக்குற்றாலத்திற் செய்திருக்கும் அரும்பெறற்றிருப்பணி முதலிய தருமங்களைப் போலவே திருமலையிலும் செய்திருக்கின்றார்கள். இவ்விரு திவ்ய க்ஷேத்திரங்களும் வடகரை ஜமீனுக்குட்பட்டிருந்ததாகத் தெரிகிறது. இன்னுமிவைகளை விரிக்கிற் பெருகுமென்றஞ்சி யீத்துடன் விடுத்தாம்.

ஜமீனையிழந்ததொரு பெருங்கதை. எங்கள் ஜமீனுக்குப்பதிலாகக் குலையனேரியென்ற கிராமத்தை யெங்கள் பாட்டனருக்கு சர்வமானிபமாகவிட்டதும், அதனை 1797-௵ எப்பிரல்௴ 4௳ கவர்ன்மெண்டாரிடம் ஒப்புவித்ததும், கவர்ண்மெண்டாருத்தரவின்வண்ணம் வெள்ளையத்தேவர் அக்கிராமத்தை யொப்புக்கொண்டு அதில் வரும் வரும்படியை யொவ்வொரு மாதத்திலுங் கவர்ன்மெண்டாரிடஞ் செலுத்துவதாய் 1797-௵ ஜூன்௴ 14௳ முச்சலிக்காவெழுதிக்கொடுத்ததும், வெள்ளையத்தேவருக்கு 1803-௵ இஸ்திமிராசன்னது கொடுக்கும்பொழுது மேலேகண்ட விபரங்காணாது குலையனேரியென்கிற கிராமத்தையும் கவன்மெண்டாரால் சேர்த்துக்கொடுக்கப்பட்டதும், இங்ஙனம் நிகழ்ந்ததைக் கவர்ன்மெண்டா கருதாது செய்த தவறுதலுக்காக இக்குடும்பத்தைப் பாதுகாக்கக் கடமைப்பட்டவர்களென்று தீர்மானிக்கப்பட்டதும் ஒருகதை. இவைகள் விவரமாய் இங்கிலீஷிலெழுதிக் கூடியவிரைவில் வெளியிடப்பெறும். ஆண்டுக்காண்க.

1797-௵த்தில் ரிவினியூ போர்டாரவர்கள் உத்தரவுசெய்தது முதல் இதுவரை எங்கள் பாட்டனரும், அவருக்குப் பிற்றைஞான்று எங்கள் தந்தையாரும், அதன்பின்னர் யாங்களும் கவர்ன்மெண்டாரின் ஆதரவின்கீழிருந்து வந்திருக்கின்றோம். அவ்வுத்தரவை யின்னுமவர்கள் மாற்றியதாகக் காணப்படவில்லை.

ஆகையால் எங்கள் குறைகளைக் காருண்ய கவர்ன்மெண்டாரவர்களே கேட்டு நியாயமாயாலோசனைசெய்து நிவர்த்திப்பார்களென்று உறுதியாய் நம்பியிருக்கின்றோம். எங்கள் முன்னோர்கள்செய்த புண்ணியத்தினாலும், பூஜாபலத்தினாலும், பகைவர்கள் உன்னிச் செய்த கேடுகள்யாவும் சூரியன் முன்றோன்றிய பனிபோல் நீங்கத்



திருக்குற்றாலநாதர் கிருபையால் கவர்ன்மெண்டாரை யேமாற்றி எங்கள் பாட்டனரை வஞ்சித்த குடும்பம் பாழாக நாங்கள் கவர்ன்மெண்டாருக்கு நண்பர்களாய் இக்காலத்தில் சின்னணைஞ்சாத்தேவரின் குடும்பத்தை விளங்கச்செய்யுநிலைமையில் வந்தோமென்று பிறரறிய நேர்ந்தமையே பெரும்பாக்கியமாம். ஜமீனை 1796-௵ பிப்ரவரி௴ இழந்த குமார சின்னணைஞ்சாத்தேவரின் குமாரருடைய குமாரர் யாங்களாவோம்.

942-ம் ஆண்டில் பட்டமெய்தி 956-ம் ஆண்டுவரை யாண்டு பட்டத்தினின்றும் நீங்கிப்பின்னர் 961-ம் ஆண்டில் பட்டமெய்தி 966-ம் ஆண்டுவரை யரசுபுரிந்த பெரியசாமிசெப்புளி சின்னணைஞ்சாத்தேவரவர்களின்மேற்றான் பின்னர்வரும் பிள்ளைத்தமிழ், வருக்கக்கோவை, கோவைச்சதகம், விறலிவிடுதூது, இரத்தினாகரவிலாசமுதலிய பிரபந்தங்கள் பாடப்பெற்றன.

இப் பிரபந்தங்களை யச்சிடுவதற்குப் பிரதிகள்தேடும்பொருட்டு யாங்களடைந்த கஷ்டத்திற்கோரளவில்லை. இப் பிரபந்தங்களிற் சிலவற்றைப் பேர்மாற்றி வெள்ளையத்தேவர்பேரிற் பாடினதாகப்புரட்டியிருக்கின்றனர். அந்தோ ஈதென்னபரிதாபம்! இஃதுண்மையென்பதற்கு தொண்டிநாடகமும், திக்குவிஜயமும் போதுமான சான்றாகவுள்ளன. ஆகையால் இம் மாறுபாடுகளல்லாத சுத்தமான மூலப்பிரதிகளைத் தேடிக்கைப்பற்றுவதற்கு மிக்க சிரமம்நேரிட்டது. இங்ஙனம் பெயரைமாற்றிப் பாடியிருக்கிற சங்கதியையறிந்த சிலபுல்லியர்கள் தங்களிடமுள்ள இன்னுஞ்சில பிரபந்தங்களின் பிரதிகளை வெளியிற் காட்ட வெட்கமுற்றிருக்கின்றனர். இப்பொழுது வெளியிட்டிருக்கும் எங்கள் முன்னோர்கள்சம்பந்தமான பிரபந்தங்களைத்தவிர ஏனைய பிரபந்தங்கள் கனதனவான்கள் கைவசமிருந்து அனுப்பிவைத்தாலவற்றை யச்சிட்டு வெளியிடுவதோடு அவர்களிடத்தென்றுமறவாத நன்றிபாராட்டவுங் கடமைபூண்டுள்ளோம். இப்பிரபந்தங்களைப் பிழையறப் பரிசோதித்து அச்சிடுவதற்கு உதவிபுரிந்த நண்பர் மு. ரா. அருணாசலக்கவிராயரவர்கட்கும், மு. ரா. கந்தசாமிக்கவிராயரவர்கட்கும், மிக்க நன்றிபாராட்ட வுரிமைபூண்டுள்ளோம். இப் பிரபந்தங்கள்

வெளிவர உதவிசெய்த அசிஸ்டென்டு ஸர்ஜன் சுப்பிரமணிய பிள்ளையவர்களுக்கும் நன்றிசெலுத்தக் கடமைப்பட்டுள்ளோம். எங்கள் முன்னோர்களாற் பட்டயங்கொடுக்கப்பெற்ற அநேகர் அப்பட்டயங்களிற் குறித்தபடி இனும் நிலங்களைப்பெற்று இன்னுமனுபவித்துவருகின்றார்கள்.

அப்பட்டயங்களும், மேலே குறிப்பிட்ட ஆண்டுகள் தமிழ் வருடங்களோடு முரணுதலால் அவற்றைப்பற்றி யாராய்ச்சிசெய்து பின்னால் வருஷங்களும், அவற்றிற்குச் சரியான ஆண்டுகளும், ஒவ்வொரு ஜமீந்தார் பெயரும், அவர்கள் ஜமீனையாண்ட காலங்களும் தொகுத்த ஒரு கொடிவழியும் எம்மால் பிரசுரிக்கப்படும் மூன்றுவது வாலத்தில் வெளியிடப்பெறும்.

எங்கள் முன்னோர்கள்செய்த தருமங்களுட் சிலவற்றை ஈண்டுக் குறிக்கின்றோம். A. D. 1607-௵ முதல் 1654-௵ த்திற்குள் ஒரு கிராமமும், அதில் செண்பகராமப்பேரியென்ற குளமும், பெரியசாமியையன் கோவிலென்ற சிவாலயமுமுண்டுபண்ணி, அக்கிராமத்துக்குச் செண்பகராமநல்லூரென்று பெயரிட்டுக் குடியேற்றி, அச்சிவாலயத்தைச்சுற்றிலும் 64 வீடுகள்கட்டிப் பிராமணர்களுக்குத் தானஞ்செய்து 144 கோட்டை விரைப்பாடும் அவர்களுக்குத் தானமாகக் கொடுக்கப்பட்டன.

1655-௵ முதல் 1677-௵ த்துக்குள் வடகரைக்கோட்டையும், அரண்மனையும் மிகப் பெரிதாகக் கட்டப்பட்டுக் கிணறுகளும் வெட்டப்பட்டன.

1677-௵ முதல்1726-௵ த்துக்குள் நெடுவேலி யென்னுங் கிராமத்தில் இராஜகோபாலப்பேரியென்ற குளமுங் காலும் வெட்டி அணையுங் கட்டப்பட்டது.

தென்காசியில் ஆனைப்பாலமும், குற்றாலத்தில் அன்னதான சத்திரமும், திருக்குற்றாலநாத சுவாமி கோவில் துஜஸ்தம்பத்தைச் சுற்றியுள்ள மண்டபமும், திரிகூடமண்டபமும், சபாபதிமண்டபமும், சித்திரசபையின் முகப்புமண்டபமும் கட்டிமுடித்துச் சித்திரசபையும் செப்போட்டால் வேயப்பட்டது.



குற்றாலநாதசுவாமி கோவில், இலஞ்சிக்குமார கோவில், தென்காசி விஸ்வநாதர்கோவில் இவைகளுக்குத் திரிகாலசந்திக் கட்டளைகளேற்படுத்தப்பட்டன.

வாசுதேவநல்லூரில் இராஜகோபாலப்பேரியென்ற குளமும், செண்பகராமநல்லூரிலுள்ள செண்பகராமப்பேரிக் குளத்துக் காலும் வெட்டப்பட்டதோடு அவ்வூரின்கணுள்ள இராஜகோபாலப் பெருமாளுக்குத் திருக்கோவிலுங் கட்டப்பட்டது.

இஃதல்லாமல் அநேக மடங்களும் சாலைகளுமேற்படுத்தப் பட்டன.

1728-௵ முதல் 1751-௵ த்துக்குள் திருக்குற்றாலத்துக் கட்டிய அன்னசத்திர தருமம் செவ்வனே நடைபெறுவதற்காக நன்செய் புன்செய்கள் வாங்கி மானியமாக விடப்பட்டன.

சபாபதிக்குத் தங்கப் பூணூலும், வேறு திருவாபரணங்களும் அன்ன சத்திரத்தின் உபயோகத்திற்காக அநேக சமையற் பாத்திரங்களுங் கொடுக்கப்பட்டன.

திருமலையின்மேலிருந்த கோவிலைச்சுற்றி மண்டபங்களும், சுனை

யின் பக்கத்துள்ள சுனைக்கரை மண்டபமும், அதன் பக்கத்தொரு

சத்திரமுங் கட்டிமுடித்துக் கோவிலுக்குவேண்டிய பாத்திரங்களும்

சுவாமிக்கு வேண்டிய திருவாபரணங்களும் கொடுக்கப்பட்டன.

1752-௵ முதல் 1760-௵த்துக்குள் பண்புளிப்பட்டினத்தி

திருமலைச் சுப்பிரமணியசுவாமி மகோற்சவம், விசேஷமாக நடை

பெறும்வண்ணஞ் செய்ததோடு ஒரு பங்களாவுங் கட்டப்பட்டது.

1767-௵ முதல் 1782-௵ த்துக்குள் 'திருக்குற்றாலத்தி

சுவாமிக்கு இரதோற்சவம் நடைபெறும் வண்ணம் அநுராதங்

செய்யப்பட்டன. அன்னசத்திரத்தை விரிவாகக்கட்டிக் கரு

லாலும், சுண்ணும்பிலுைம் முசுடுவேய்ந்து குற்றாலநாத சுவாமி கோவில் மூலைவாசலப்பனுக்கு ஒரு கோவிலுங் கட்டப்பட்டது. செண்பகராமநல்லூரில் பிராமணக்குழந்தைகள் வேதாத்தியயனஞ் செய்ய ஒரு வேதபாடசாலை யேற்படுத்தித் திருமலையில் சுக்கிரவாரந் தோறும் ஏழைகளுக்கு அரிசிகொடுக்கும்வண்ணம் சுக்கிரவார மண்டபமொன்றுங் கட்டப்பட்டது.

1792-ஆம் முதல் 1796-ஆம் த்துக்குள் திருக்குற்றலம் அன்ன சத்திரத்துக்கெதிரே ஜனங்கள் தங்குவதற்கொரு ஆசார மண்டபமும், அதற்குக் கிழக்கே நெற்குத்துப்பிறையும், சொக்கம்பட்டிக்கு மேற்கே மலையடிவாரத்தில் மலைப் பெரியசுவாமியைய்ன் கோவிலைச் சேர்ந்த கட்டிடங்களுங் கட்டப்பட்டன.

இங்ஙனம்,

பி. சி. சி. பாண்டியன்,

டிப்டிக்கலைக்டர்.

பி. வி. சி. பாண்டியன்,

தாசில்தார்.

முற்றும்.



உ

திரிகூடபதி சகாயம்.

## வடகரை ஆதிக்கம் சமஸ்தானபதிகள் செய்த திருப்பணி முதலிய புண்ணிய விளக்கம்.

| பட்டத்து வரிசை எண். | பட்டம் ஆண்டவர் பெயர். | தர்ம விவரம். | செலவு பொன் தொகை. |
|---|---|---|---|
| 1 | செம்புலிச் சின்னணைஞ்சாத்தேவர் ... | திருக்குற்றலம் அன்னச்சத்திரம் ... | 4300 |
| | | ஷை சிவாலயம் ... ... | 28085 |
| | | ஷை சிவாலயம் உட்சுற்றுப்பிராகாரம் | 30251 |
| 2 | முத்தணைஞ்சாத்தேவர் | ஷை சிவாலயம் தேர் நான்கு ... | 4200 |
| 3. | மு. காளத்தியப்பதேவர் | குமாரகோயில், தெங்கோட்டை | |
| | ,, | வழிப்பாலம் ... ... | 7651 |
| 4 | அதிவீரராமத்தேவர் ... | வடகரைச் சிவன்கோயில், கன்னிமூலைக் கோட்டை ... ... | 555[illegible] |
| 6 | வ. திரிகூட ராஜகோபாலதேவர் ... | திருக்குற்றலம் சிவாலயத் திருப்பணிக்குறைவேலை, தட்டொட்டி, | 28211 |
| | | பசுப்பிறை, கலங்காத கண்டிக்கோட்டை, சொக்கம்பட்டிக் கோட்டை ... ... | 17201 |
| 7 | குமாரமுத்து சின்னணைஞ்சாத்தேவர் ... | திருக்குற்றலம் தீர்த்த மண்டபம் சுற்றுப்பிராகாரம், நடைகற்பாவல் | 7051 |
| 8 | சிவனடியாத்தேவர் ... | திருக்குற்றலம் சுவாமியம்மன் துவஜஸ்தம்ப அஷ்டபந்தன கும்பாபிஷேகம் வகையரா ... ... | 1416 |
| 9 | பெரிய பட்டம் பெரியசாமித்தேவர் ... | | |
| | சின்னப் பட்டம் ராஜகோபாலதேவர் ... | திருக்குற்றலம் சித்திரசபைக்குச் செப்போடுமேய்ந்து கும்பாவிஷேகமுதலிய செய்தல் ... ... | 242[illegible] |
| | ,, | ஷை சித்திரசபை சுற்றுச் சிகரம், தென்காசி ஆனைப்பாலம், இருப்புத்துண்டுப் பாலம் வகையரா ... | 71[illegible] |
| | சிவராம சின்னணைஞ்சாத்தேவர் ... | திருமலைச் சுப்பிரமணியர் கோயில் | |
| | | ஆ பொன் ... | 177[illegible] |

குறிப்பு:—ஒரு பொன் என்பது ரூ 2-1-4. அக்காலத்து ஒரு பொ[illegible] என்பது இக்காலத்து ஒரு பவுன்போல மதிக்கக்கூடியதென்பதை அன்ப[illegible] கவனிப்பார்களாக.

OFFICE 5 - APR 1916 MADRAS

உ

திரிகூடபதி துணை.

# வடகரை யாதிக்கத்தின் சரித்திரம்.

## சவ்வாது விடுதூது.

இந்தச் சவ்வாதுவிடு தூதென்ற பிரபந்தம் இப்போது ஸ்ரீகுற்றாலலிங்கசுவாமி கோயில் துவஜஸ்தம்பத்துக்கருகே நாட்டியிருக்கிற தூணிலுள்ள கற்சிலை இரண்டில் இளையவர்களாகிய

**திரிகூடராஜகோபால துரையவர்கள்**

பேரில் *பாடப்பெற்றது.

பூமன் செயராஜ கோபால பூபால
சோமன் சவாதுவிடு தூதுக்கு—மாமலரோ
னாணத்தர் தந்தா னருள்பொழியு மைந்துகரக்
காரணத்தர் தந்தானே காப்பு.

நூல்.

பூமாதும் பொன்மாதும் பொன்னுலகை யேந்துபுணர்
மாமாதுஞ் செல்வ மணம்புரிய—மாமலைமான்

பெற்றபே றாகப் பிறந்துபிறப் பித்தோகை
பற்றித் தவழ்ந்து பார்தேடி—மற்றவர்பாற்

றன்னிடை யிட்டினீர்த் தண்ணு ரமுதருந்தி
வெள்ளிச் சிமிழ்த்தொட்டின் மேற்றுயின்று—தெள்ளியோர்

காதுகொடுத் துக்கேட்ப வாசித்துக் காவலர்க்குக்
கோதிலா வாசங் கொடுத்தருளி—மாதரின்மால்

வந்தவரைக் கைப்பிடித்து மல்லாரைக் கோடொடித்துத்
தந்தப் பணிகொண்ட தார்வேந்தே—சொந்தத்

* பாடியவர் பெயர் தெரியவில்லை.

தளமடல் கொள்ளமதன் ருனுடைவா ளேந்த
வளமடல் கொண்டகுல மன்னு—உளமகிழ்ச்சி

மீறியுலாக் கொண்டுகுல வேந்துநர வாகனத்தி
லேறியுலாக் கொண்ட விறைவனே—கூறரிய

வங்காளக் கஸ்தூரி மந்திரியாய் மாமலயச்
சிங்காரச் சந்தனமே சேனையாய்க்—கொங்குபுகழ்

பச்சைப் புழுகே படைத்தலைமை யாயெவர்க்கு
மிச்சைப் பரிமளங்க ளெண்பனவு—மச்சமின்றி

வாழுங் குடியாய் மலரெல்லா நின்னடிக்கீழ்த்
தாழு மடிமையாய்த் தான்படைத்தே—ஆழிப்

புவியிற் பராச ராசரையெப் போதுஞ்
செவியைப் பிடித்தாட்டுஞ் செல்வா—கவினெழுகு

வட்ட முலையாரும் வாலிபரு மேவுமணச்
சட்டமெல்லா முன்னுடைய சட்டமே—சிட்டர்தொழத்

துங்கவிடை யேறிவருஞ் சோதியைப்பே யேறவிட்டுத்
தங்கவிடை யேறுகையாற் சம்புவே—மங்கைத்

திருமார்பி லேறுந் திருமால் திருவின்
மருமார்பி லேறுகையால் மாலே—தருமேவு

மாகவன மேறுபிர மாவுமறை வாய்விடவு
மேகவன மேறுகையால் வேதாவே—நாகரிகக்

கோடைக்காற் றேர்மதனைக் கூறுங்கா லாளாக்கி
வாடைக்கா லேறுகையால் மாமதனே—ஓடுமட

மானைக் காத்தேந்து மாமதுரைச் சொக்கருக்குன்
ஞானத் தலைவன்பேர் தானன்றோ—ஆனபெருஞ்

சீர்பெற்ற தென்னரங்கச் செல்வருமுன் மந்திரியார்
பேர்பெற்று ரன்றோ பிரதாப—சார்பெற்று

முன்னுடைய பேரு முனது பரிவாரர்
தன்னுடைய பேருமிந்தத் தாரணியில்—நின்னுடைய

வாளடிமைப் பேரையெல்லா மப்பாக்கி யாவரையும்
வேளடிமை யாக்கிவிட்ட வித்தகனே—வாள்விழியார்



செங்கை பிடித்துமணஞ் செய்தோரும் பார்த்திருப்பக்
கொங்கை பிடித்திழுக்குங் கோமானே—அங்கவரைக்

கெஞ்சவைத்து மெள்ளமெள்ளக் கிட்ட வரவழைத்துக்
கொஞ்சவைக்கு மாசைக் கொழுந்தனே—இன்சொலாக்

பையரவ மல்கு படமெடுத் தாடுதற்குத்
துய்யமருந் தாகவந்த தோன்றலே—தையலார்

முத்துப் பொதிகனிவாய் முத்தமுத மாகவுண்ணத்
தித்திக்குங் கட்டிச் செழுந்தேனே—யெத்திக்குங்

காம்படுத்த கையார் கருதுகா மப்பாலை
மேம்படுத்த வந்தநல்ல வெல்லமே—ஆம்பதைக்கக்

கொங்கைசுரித் தாலுங் குழல்சரைத்தா லுங்கிழட்டு
மங்கையரை நீபோய் மருவினு—லங்கவரு

முக்காட்டை யும்போட்டு முன்னடக்கப் பின்னிளைஞோர்
செக்காட்டு வார்போற் றிரிவாரே—மைக்கருங்கண்

மண்ணறிந்த தல்லால் மறுமுகங்கா ணுதவரும்
கண்ணெறிந்து பார்க்கவரும் காமுகனே—அண்ணறுமிடம்

பூசிநடக் கிற்கருவம் பொங்கியீறு மார்திருகை
வீசிநடக் கக்கொடுக்கும் வேள்வேந்தே—வேசையர்கள்

போர்வையால் வல்லவட்டுப் போட்டுவரும் போதுமுலை
மார்பையே போய்த்திறக்கும் வல்லாளா—சோகந்தாக்

வட்டமுலை யார்நீ மருவுதலைக [illegible]
விட்டுவெளி யாக்கி விடுவோனே—[illegible]

நீட்டுந் தொறுமடவார் முக்காட்டை [illegible]
காட்டத் தலையளிக்கும் [illegible]

சொல்லையென் [illegible]
வல்லா யுமை [illegible]

பணமே குணமென்பார் பார்க் [illegible]
மினமே [illegible]

ஆரிற் குடியினை [illegible]
தாயப் பணிபுரு [illegible]

வாய்க்கிலே கெட்டார்போல் வாய்நாற வேதிரிவா
ராக்கிவிடு முன்போ லுண் டாக்குமோ—சேக்கைதொறு

மைமணக்குங் கண்ணியரை வாய்மணக்கக் கைமணக்க
மெய்மணக்க மேவி விடுவோனே—மெய்மணக்குஞ்

சொல்லோன் பெரிய சுவாமிக்கே தூதுசென்ற
நெல்லோ ருயிர்த்துணைபாய் நின்றோனே—யெல்லோரும்

வண்டுகிளி தென்றல் மழைமேக மாதியாய்க்
கொண்டுசில தூதுவிடுங் கோட்டியைநான்—விண்டுரைக்கில்

பொய்மணக்கு மல்லாற் புதுமணக்கோ லம்பொருந்த
மெய்மணக்க நின்னைப்போல் விள்ளாதே—ஐயனே

யாசையா லுள்ளமுத லத்தனையுங் குத்துமுலை
வேசையருக் கேகொடுத்து வீறழிந்து—தாசராய்ப்

போனவருங் கையிற் பொருளற்ற பின்னடிமை
யானவருங் கிட்டா தலைபவரு—மானபார்

வாய்மருந்து தேடி மறுகுவோ ரும்மயலாய்த்
தோய்மருந்து தேடிச் சுழல்வோருந்—தாய்மருந்தைத்

தின்று கிடந்து திகைப்போரும் பச்சோந்தி
கொன்றுவலக் கண்ணெடுத்துக் கொள்வோரு—நின்றுநின்று

பஞ்சரிப்போ ருந்தொழும்பு பண்ணிப் பலகாலஞ்
சஞ்சரிப்போ ருங்கிழட்டுத் தாய்ப்போரி—விஞ்சிநின்ற

மந்திபோற் பற்காட்டி மாறு வழக்கேற்றிச்
சந்திதொறு நின்று தவிப்போரு—மந்நாள்

வாழ்ந்திருந்தாளிருந்தவாழ்வையெல்லாமெண்ணியெண்ணித்
தாழ்ந்திருந்த நெஞ்சந் தளர்வோரு—மாழ்ந்துகடன்

வாங்கிக் கொடுத்தபொன்னை வாயாற் றொகையேற்றி
யேங்கிப் பெருமூச் செறிவோருந்—தூங்குமஞ்ச

மெத்தைக்குங் கூடுமின்ப வித்தைக்குங் கொள்ளிவா
யத்தைக்கு மத்தைமிட்ட வாணைக்கு—மித்தனைக்குஞ்

செய்தகுறை யுண்டோ சிவனே யெனக்கிழடி
வைதகுறை யெண்ணித்து மாய்வோரும்—பொய்யுரையோ



துத்தோ குடிலமோ சூதோ கபடமோ
யெய்த்தோமே யென்றிருந்தோ மென்செய்வோஞ்—சத்தியமு

மில்லையோ தெய்வமே யெம்மளவுங் கைதொழுதோங்
கல்லையோ யென்று கரைவோருந்—தொல்லுலகி

லின்ன மனேக ரெடுத்துரைக்கி லிப்படியுண்
டன்னவரு மாயமதி யற்றோரே—யுன்னை

யறியாரோ கேட்டு மறியார் சிறியார்
பிறியாரோ புத்திகெட்ட பேயர்—வெறியாருங்

குங்குமநா மந்தங்கங் கோரோ சனைபுழுகு
செங்கழுநீர் கோட்டமுஞ் செண்பகப்பூ—பொங்குபச்சைக்

கற்பூரங் கஸ்தூரி காகதுண்ட மாதியாய்ப்
பொற்பூருஞ் சந்தனத்தி லேபோட்டு—நற்பனிநீர்

விட்டரைத்திங் கித்தனைக்கும் வேந்தே யுனைச்சற்றே
தொட்டமைத்து வாடையெனுஞ் சொல்லமைத்தே—யிட்டமுடன்

பொட்டுமிட்டு லேபனமாய்ப் பூசிப்பூ சிப்புணர்ந்தால்
விட்டுவிட்டுப் போவாரோ வேசையர்கள்—வட்டமிட்டு

வந்து வலிய வலியமடி மேல்விழுவார்
தந்தபணத் தைத்திரும்பத் தான்கொடுப்பார்—சொந்தமாய்

வைத்திருக்கச் சொல்லித்தாய் மார்வார்த்தை யேகேட்கும்
பொய்த்திருக்கை யும்மறந்து போவாரே—யித்தனைதா

னுண்டோ மகளே யுனக்குவந்த கேடிவற்குப்
பெண்டோகே ளிந்தப் பிரமையேன்—பண்டுநான்

தேடிக் கொடுத்த திரவியத்தைச் சோழித்தாய்
வாடித் தவிக்கவைத்தாய் மாபாவி—யாடிக்குச்

சிங்கியடிக் கப்போறாய் செச்சை முலைவிழுந்தா
லங்கே கரியா ருருவருப்பார்—மங்கைப்

பருவமே யன்றிப் பயிர்ச்செலவு முண்டோ
தருபவனைத் தள்ளத் தகுமோ—தெரிய

வெறிகொண்டார் போலே வெருண்டு வைமே
லெறிபர்தா யென்னெ விசழ்ந்தாய்—முறிவென்னே

வந்தபே ரென்னை மறித்திழுக்கக் கைக்கடனைத்
தந்தபேர் வந்துமுந்தி தானிழுக்க—விந்தவித
நாய்வாயிற் சீலையென நானலையக் கண்டிருந்துந்
தாய்வார்த்தை தட்டுவதுந் தன்மமோ—காயமெல்லாம்
வாடைமருந் தாலேபூ மாலைபோல் வாடியரைக்
காடைமருந் தானுமென் றன்னை சொல்லப்—போடிபோ
கேடி திருடி கிழடி தெருத்தலையில்
வாடி யுனக்கு வழக்குண்டோ—தேடிக்
கொடுத்தபணம் போதாதோ கொள்ளையோ கள்ளி
யெடுத்துவிட்ட நாய்போ லெதிர்த்தாய்—கடுத்துரைப்ப
தென்ன வவளோ டிணங்கிப்பார் நீயெனக்குச்
சொன்னபுத்தி நானுனக்குச் சொல்லுவேன்—பின்னமுறை
யாதென்று தாய்பேச் சகற்றியென்மால் சொல்லிடுஞ்சு
வாதேரீ ஆறுசென் றுவாவெனக்காச்—சீத
மணிக்கு மணியா யதிமோக தாகந்
தணிக்குங் கருணைச் சுவாதே—குணிக்குங்
கருப்புச் சிலையான் கவசமென நாளுந்
தரிக்குங் கருணைச் சுவாதே—முருக்கு
மரக்குரோ ராம்பல்வா யர்நலா ரின்பச்
சுருக்கமையாய் வந்த சுவாதே—திருக்கட்
கடைதீர்க்க வேலர்க்குங் காமுகர்க்கு மூடி
தடைதீர்க்க வந்த சுவாதே—வடிவா
லொளியாய்ப் பருதி யுதையவரை யுட்க
வளியாமை மேலிரி யஞ்சத்—தெளிபளிங்குப்
பாறையால் வெள்ளிவரை யுட்கப் பனிவிமய
விறையரு வித்திவலை வெற்றிகொள்ள—கூறரிய
மாதவமாற் றென்பொதிய மாமணியக் கன்மலையிற்
சோதிநகை யாற்சொல்லிச் சோகமுற—மோதி
வளைபூ மகள்சூழ் மணமேரு தாழக்
கிளைசூழும் ரத்ன கிரியான்—வளைமுழங்க



வீர முரசெனவே வெங்கை கிடந்தலறப்
பாரமத யானை பரந்துவர—நேரே
குதிக்குந் திரைக்குதிரை கொஞ்சிவரச் சோதி
யுதிக்குங் கதித்தேரு டோட—அதிர்த்திரைத்துக்
காலா ளிருமருங்குங் கைநெருங்க நீடுகொடி
மேலா நெருங்கி வெகுண்டெழுந்து—வாலநர
சிங்கமுந் தன்னுடைய சேனை சமுத்ரசது
ரங்கமென வந்தகருப் பாற்றினன்—பொங்குபுனல்
வாவியெல்லாம் வெண்கலையா மாமதிபோ லேசிரம்பி
மேவிவளர் கீர்த்தியெல்லா மெய்வடிவாக—காவலாய்
வாசநிறை கூந்தலா மானெல்லா மைவிழியா
வீசுகதிர் முத்தெல்லாம் வெண்ணகையா—வீசலைமேற்
சென்றார் குடவளைக ளெல்லாந் திருக்கழுத்தாக்
குன்றார் புளினமெல்லாங் கொங்கையா—மன்றல்கமழ்
தாமரையெல் லாந்தாளாத் தண்டமிழோர் நாவிலுறை
நாமகளாங் கல்லகநன் னாட்டினன்—சீர்மருவு
தோகை நடம்புரியச் சூழ்ந்த வரிச்சுரும்பர்
பாகமுறுஞ் சங்கீதப் பண்பாடப்—பூக
மதத்துப் பலாப்பழத்தை மத்தளமாக் கொட்ட
வதற்கு மயிலினங்கொண் டாட—விதற்கருகே
வந்து கிளிகள் மகிழ்ந்துமுக மன்கூறச்
சந்தநறும் பூகந் தலையசைப்ப—நந்தா
வனச முகைமலர வான்கரும்பு நெல்லுந்
தினமு மணித்தாளஞ் சேர்க்கப்—புனிதநறுந்
தாதுகமழ் கேதகையுந் தன்பலா வின்சுளையும்
போதுகமழ் செண்பகமும் பொன்சொரிய—மேதகுபொன்
மாதுதிரு வோலக்கம் வாழ்வுளார் தோன்றி
யோதுபுகழ்ச் செண்பகநல் லூரினன்—ஆதித்
திருமா லிவனெனவே சிந்தைகளி கூர்ந்து
மருவி யளகமணி மார்பன்—பிரியாத

காரைநிகர் கூந்தற் கமலைக் கபிஷேக
தாரையெனுந் தண்டளவத் தாரினன்—பேருலகம்
வாழக் கலியகற்ற மாட்டாது வான்பரியோ
ரேழைப் பரியென்னு மெண்பரியான்—வாழியான்
கட்டழலால் வாய்த்தழலாற் காமனுரு வம்புரமூன்
றட்டதுகேட் போருக் கதிசயமோ—துட்டமறு
மன்னரென வந்தெதிர்த்த மன்மத ரோர்கோடி
அன்னோர் புரங்கோடி யாரழல்போய்த்—தின்னச்
சினத்து மதத்துச் செறுத்துச் சிறுகட்
கனற்பொரி சிந்துங் களிற்றான்—வினைக்களப்போ
ராடல்வந்த மேவலர்க ளாற்றுதென் றாருயிரை
யோடவென்று ரென்ன வுருத்தெழுந்து—நாடியே
தூயகதிர்ப் பச்சைத் துரகதத்தேர்ச் சூரியன்மேற்
பாயு மனுமப் பதாகையான்—வாய்மைபெறத்
தோன்றுந் தியாகமணி வீரஞ் சொலுமுரச
மூன்று முழங்குமணி முன்றிலான்—தேன்றுளிக்குந்
தும்பைத் தொடையற் பெரிய சுவாமிமல
ரம்பொற் கமலபதத் தாளையான்—விம்பரிற்போர்
வேளுக்கோ மங்கையரில் வேல்விசய மும்மருவார்
வாளுக்கோ புத்தர் வயிரமும்—நீளுந்
தருவுக்கே குற்றேவற் றன்மையும்பன் னாக
நிருபற்கே நீங்கா நெளிவுந்—திருவமுகால்
வீரத்தால் நல்கும் விதானத்தால் மெய்யறிவால்
ஆரத்தா னல்குபுக ழாபரணன்—வாரத்தாற்
சோமன்பூ மன்பெரிய ஸ்வாமி அரையைப்பி
ரேமித்து வந்துதித்த நேமிமால்—பூமியைத்
தன்புயத்தி லேந்தித் தடநாக மூடுவெட்டு
மன்புவந்து வாழ்த்து மரசர்கோன்—தென்புலத்தோர்
தெய்வம்விருந் தொக்கலெலாஞ் சேர்ந்தகுடிக் கூட்டியுண்டு
வையம் புரக்கு மகாராசன்—செய்யபரன்



பொற்சபையை மேய்ந்தோர்பேர் போகாமற் சித்ரசபை
நற்சபையாய் மேய்ந்த நாராசன்—சிற்சபையி
லானந்தத் தேறல்புரி யாடல் பதஞ்சலிக்கோ
மானந்த மாதருகுழல் வாய்மொழிக்கோ—ஞானமிகு
மெய்ப்புலிக்கோ தென்கிருவை வேந்தன் றிருப்பணிக்கோ
கற்பணிக்கோ பொற்பணிக்கே காராவுக்கோ—துய்ப்போர்க்குச்
சாத முதவுசத்ர சாலைக்கோ கற்கோயில்
பாதைதொறுஞ் செய்தமடப் பத்திக்கோ—சோதிக்
கரிஞ்சை வனத்திற் [1]கடவுளுக்கோ வானை
யுரிஞ்சு [2]சிவாலயமுண் டாக்கித்—தெரிஞ்சுதிருத்
தேருந் திருவுந் திருவிழா வுஞ்சிறந்த
ஊருங் குளமுமல ரோடைகளும்—நேரே
அகாரமும் பாரளந்த வச்சுதனுக் கான
சிகாரமுங் [3]கோயிலுமே சேர—வகை வகையாச்
செய்து முடித்த திருப்பணிக்கோ தென்மதுரைத்
துய்ய புழுகணைச் சொக்கருக்குந்—தையலொரு
பாகன்[4] சிவாய பானுக்குந் தென்[5]கூழை
நாகசுனை யாவுடையாள் நாயகற்கும்—பாகம்
பிரியாதாள் [6]வாசிப் பிரானுக்கு மேதுந்
தெரியாதாள் காந்திமதி சேரும்—[7]வரையீன்ற
முத்தற்குந் [8]தென்னிலவை மூர்த்திக்கு மூர்த்திபெற்ற
சுத்தர் [9]திருமலைவாழ் சோதிக்கு—நித்தம்
நடத்துமறைக் கட்டளைக்கோ நாமறியோ மென்ன
வெடுத்துலகோ ரேத்து மிறைவன்—தொடுத்தபுகழ்ப்

---

1. வடகரைஜமீன் வைரவன்குளம் கிராமத்திலுள்ள குலதெய்வமாகிய பெரியசுவாமி ஐயனார். 2. ஷை ஜமீன் செண்பகராமநல்லூர்க் கிராமத்திலுள்ள சிவன்கோயில். 3. ஷை கிராமத்திலுள்ள பெருமான் கோயில். 4. கரிவலம்வந்தநல்லூர் பால்வண்ணநாதர். 5. சங்கரன்கோயில். 6, வாசுதேவநல்லூர். 7. திருநெல்வேலி அனவரததானநாதர். 8, இலஞ்சிக்குமாரக்கடவுள், 9. திருமலைக் குமாரக்கடவுள்.

பாண்டிமண்ட லாதிபதி யட்டமுற வாம்புரவி
தூண்டிமண்ட லாதிபரைத் தாள்படுத்தி—யாண்டவற்கு

வெற்றி யனேகம் விளைத்தும் விசயாணைக்
கொற்றமிகு செம்புலிப்பேர் கொண்டருளி—யுற்றமத

வாரணமுந் தண்டிகையும் வாம்பரியும் பூடணமுந்
தாரணியும் வெண்குடையுஞ் சாமரையும்—பேரணியும்

பெற்றுப் பலவிருது பெற்றுப் பெரும்புகழும்
பெற்றுக் கனவாழ்வு பெற்றுப்பின்—கற்றவர்சூழ்

தென்மதுரை வேந்தன் திருமலை நாதிபதி
தன்ம துரைமகிழ்ந்து தானருளும்—பன்மணியாற்

சோதிதரு சாரித் துரகமும் வெண்டயமும்
ஆதியாச் செய்வரிசை யத்தனையு—மேதினியோர்

கொண்டாடப் பெற்ற குலவேந்தன் கூடார்மேற்
சென்டாடும் வாசித் திறல்வேந்த—னுண்டுடுத்துப்

பூசிமுடித் துக்கொடுத்துப் பூண்டுணர்முப் பால்மகிமை
பேசி மகிழ்ந்தபிர தாபித்து—வீசுபுக

ழாரத் துரைச்சின் னணைஞ்சபெரு மாள்விஜய
சூரத் துரைப்பெரிய ஸ்வாமியெனப்—பேர்படைத்த

மக்க ளிளையதுரை மக்க ளிவர்க்குமரு
மக்க ளிவர்கள் துணை மக்களுட—னொக்க

வுடன்வாழ வாழ்வுற் றுபயகுலம் வாழத்
திடவாழ்வு வாழுந் திருமால்—குடையாகக்

கன்றெடுத்துக் கோகுலத்தைக் காக்குநாள் கன்மழைக்கா
குன்றெடுத்த கோராஜ கோபால—னன்றெடுத்த

வேலா வலைய நிலமகட்கோர் வேலியெனுங்
கோலா கலன்ராச கோபாலன்—வேல்வளவன்

வெற்றிப் புலிக்கொடியை மீட்டுமக ரத்துவசக்
கொற்றப் புலிராஜ கோபாலன்—பொற்றிகிரி

மாமால் பெரியசு வாமியுடன் வந்துதித்த
கோமன் [illegible]ராச கோபாலன்—பூமிதனில்



தேடாத் திரவியம்போற் செந்தமிட்கு நல்கமுகங்
கோடாத் துரைராச கோபாலன்—ஓடாத

தானையான் செங்கோல் தழைத்ததமிழ் நாட்டிலொரு
மானனையார் வந்தார் மலர்க்காவில்—தேனனையார்

கூந்தல்கரத் தாழி கொடுத்தவிரு ளேறுதலும்
போந்து வளர்ந்த புருவமும்—ஏந்திய

கார்முகமே கண்ணுங் கணையே மணிநாசி
* யோர்புலவன் பேர்பெற்ற வோதியே—சீர்பெருகு

காதிரண்டுந் தோள்மார்புங் காணியாய் மேவுமிரு
மாத ரிருவரையும் வைத்தாட்ட—ஆதி

சமைத்திட்ட வூசலெனத் தண்பவளச் செவ்வா
யமைத்திட்ட தெள்ளா ரமுதே—யமைப்புரக்குந்

தீங்குதலை வெற்புருகச் செவ்வாயில் வைத்தூதும்
வேய்ங்குழலே தந்தநல்ல மெல்லரும்பே—பாங்கிற்

கதுப்பிரண்டுஞ் சாந்தரைக்குங் கல்லே வதன
மதிப்பரியோன் மேவு மதியே—துதிப்பெரிய

கந்தரமுங் கைச்சங்கே காண்டகுதோள் மைத்துனனூர்
வந்து புகுந்த வரையினமே—அந்தக்

காமிரண்டு செங்கட் கமலமே தூய
விரலிசையால் விட்ட தனிரே—இருதனமுந்

தானெடுத்த குன்றிரண்டே தக்க மணிபுதர
மானமைத்தோன் கள்வளரு மாவிலையே—ஆனிரைபை

யுந்திகா ளிந்திச் சுளியே யொசியுமிடை
அந்தர சிங்கத்தி னந்தமே—சந்தாஞ்சே

நல்குதுமன் றூடல்புரி யாடவே யாசையெல்லாம்
நல்குதுறந் தென்னோ நவில்வதே—நல்குமறை

மெய்யே யெனக்காத்து வென்று புரந்துதிக்
கையே யிரண்டு கவிக்காலு—செய்தோயும்

வெய்யகனைத் தூணியே மிக்க புறவடியு
மையோ வவதரித்த வாமையே—செய்ய

பதுமனையாள் மைந்தன் பாதமமே நின்ற
விதமுயர்ந்த மேன்மணியே வேலை—புதவிமலர்

* காளமேகம்.

வேதனையே தந்தமால் மெய்வடிவாய்த் தோன்றியே
பூதலத்தில் வந்த புதுமையிதே—காதலாற்

கண்டேன் துதித்தேன் கரங்குவித்தேன் கண்பனித்தேன்
விண்டே னறிவழிந்தேன் மெய்ப்புளகங்—கொண்டேனான்

பூஞ்சித் திரவுருவைப் பேர்மருவச் சாமீபம்
வாஞ்சித்தே னப்போதே மாலானேன்—பூஞ்சதங்கை

காலுக்கோ ஊருக்கோ காம னரண்மனைக்கோ
நாலுக்கோ நேரான நுண்ணிடைக்கோ—ஆலுக்கோ

வுந்திக்கோ ரோமத் தொழுங்குக்கோ கொங்கைமத
தந்திக்கோ கைக்கோ சரிவளைக்கோ—அந்தக்

கழுத்துக்கோ மூரற் கனிவாய்க்கோ தேமாம்
பழத்துக்கோ வின்சொலுக்கோ பார்த்து—வழுத்தரிய

காதுக்கோ நாசிக்கோ கண்ணுக்கோ விற்புருவ
வீதிக்கோ வாணுதற்கோ வேர்வைக்கோ—சோதி

முகத்துக்கோ கூந்தல் முடிக்கோநிற் கின்ற
சுகத்துக்கோ வேதுக்கோ தொல்லை—யகத்தடிமை

யானே னடியேனை யாளக் கடனென்றே
போனே னெனைமறந்து போய்விட்டேன்—மீனூர்

மனத்தா மரைக்கு முகையவிழா வட்டத்
தனத்தா மரைக்குந் தனத்து—டெனைத்தழுவுங்

கைத்தா மரைக்குமிரு காற்றா மரைக்கு நடு
வமைத்தா மரைக்குமொரு வண்டானேன்—மெய்த்தகரும்

கொண்டைக்குங் கொங்கைக்கு மல்குலுக்கும் பூமாலைத்
தண்டரள மேகலையாய்ச் சார்ந்திலே—னொண்டொடியார்

பின்னழகு முன்னழகும் பேரும் நடையழகைக்
கென்னழகு கண்டுமன் றிரண்டிலேன்—மின்னார்மேல்

கொண்டபெருங் காதலாற் கொங்கைமத வேழ
மூண்டவிளா வின்கனிக்கே யொப்பானேன்—கண்டு

பரவக் கிடையாத பையர வல்கு
லரவுக் கொருதேரை யானேன்—பெருமதவேள்



அம்புக்கு நாணுகி யாடவரைக் கொல்லும்விழித்
தும்பிக்கு நான்முருக்கந் தூணானேன்—வம்பிற்

சுகப்பட்ட பூண்முலைக்குத் தொய்யுமிடை நூலி
னகப்பட்ட மால்யானை யானேன்—புகப்பட்ட

பூங்காமுன் னாளிற் புரிந்ததவ நான்புரியா
தேங்காநின் றேனிதனுக் கென்செய்வேன்—தாங்கவரி

தென்று பலவு மெடுத்தியம்பி யேழையெனச்
சென்று திருத்தாளைத் தெண்டனிட்டே—னென்று

முரையா தெழுதரிய வோவியம்போல் நின்றார்
கரையாத வுள்ளங் கரைந்தேன்—திரைநிறந்து

சேவைதர வேணுமென்று சேவித்தேன் கொல்லிமலைப்
பாவையனை யீருன் பயலென்றேன்—பூவைமதன்

சேலை யடரும்விழி சென்றுவினை யிருகுழை
யோலை விலைமுறியென் றோதினேன்—கோலமணித்

தண்டை யடிவருடத் தாருமென்றே னாமுதத்
தொண்டையுத வும்பழைய தொண்டனென்றேன்—தண்டைப்

புகழ்படாப் போர்த்த முலையானை தாரு
மிகழ்படாப் பாகனு னென்றேன்—நெகிழவிடப்

பெத்தடிமை யென்று பிடர்போட் டிடும்பக்கக்
கொத்தடிமை யென்றுகெஞ்சிக் கும்பிட்டேன்—சுத்த

நயன தெரிசனமே நல்கி யனந்த
சயன தெரிசனமே தாரீர்—வியனழகு

சந்த்ரோ தயத்தி லிருந்து மகிழ்ந்துசற்றே
யந்தோசெவ் வாயாம்ப லாகாதோ—செந்திருவே

யென்றே னவரு மெனதுதோள் புல்லிடவே
நன்று மெனமாலை நல்கினார்—மன்றலவன்

கொண்டேன் அனைராச கோபால னன்புபெறக்
கண்டேனென் கற்பும்வரக் கண்டேனே—தண்டரள

மாலைச்ச வாதுகொடு வந்தாயே வால்புனையு
மாலைச்ச வாதே மகிழ்ந்து.

சவ்வாது விடுதூது முற்றுப் பெற்றது.

௭

திரிகூடபதிதுணை.

# வடகரை யாதிக்கத்தின் சரித்திரம்.

## சந்திரகலாமஞ்சரி.

---

இதுவும் பின்வருகிற பட்பிரபந்தமும் இப்போது ஸ்ரீ குற்றால லிங்க சுவாமி கோவில் துஜஸ்தம்பத்துக்கு அருகே நாட்டியிருக்கிற தூணிலுள்ள கற்சிலை யிரண்டில் மூத்தவர்களாகிய வடகரை ஜமீன்தார் பெரியசாமி செம்புலிச் சின்னணைஞ்சாத்துரையவர்கள் புத்திரி பூத்தாய் என்றவர்களின் காந்தனாகிய

**மாப்பிள்ளை பெரியசாமித்தேவரவர்கள் பேரில்**

பேர்பெற்ற கடிகைமுத்துப்புலவர் பாடியவை.

பின்னால் வருகிற பருவப்பதம் ஷையார்கள் பேரில் திருச்செந்தூர் கந்தசாமிப் புலவர் பாடியது.

### காப்பு.

இந்திரன்போல் வாழு மெழிற்பெரிய சாமிக்கே
சந்த்ரகலா மஞ்சரியைச் சாற்றவே—யந்தப்
புரத்தேக தந்தத்தான் புங்கவன்சிற் றீட்டுங்
கரத்தேக தந்தத்தான் காப்பு.

### நூல்.

கார்பூத்த கண்ணனுக்குங் காணாத் தனிக்கடவுள்
தார்பூத்த கொன்றைச் சடைமேலு—நீர்பூத்த

கங்கைக்கு நண்ணைக் கலந்து தலைபாவோம்
சங்கைக் கிடமாமே சந்திரனே—தங்கள்குரு

பொன்மனையைச் சேருமுன மஞ்சியோ பொன்மகளுந்
தன்மனையைத் தாவிடுவாள் சந்திரனே—வன்மைதரு

மாலத்தா னென்னுமலாலோனென் றுன்பெயரைச்
சாலத்தா னேனுரைத்தார் சந்திரனே—பாலத்துக்

கண்ணவனென் முர்வடைவை கட்டியனைத் தேற்குமுன்னைத்
தண்ணவனென் றுருரைத்தார் சந்திரனே—கண்ணகல

மோங்கிக் கனைகடலி னுள்ளிமூர்த்த பார்மகளைத்
தாங்கிப் புயத்தாற் றழீக்கொண்டு—நீங்கா



வொருதா மரையி லுறைபவளைக் கண்ணு
மிருதா மரையி லிருத்திப்—பருதி

பாந்து வெயிலெரித்த பாரனைத்துந் தானே
கிரந்து கவிகை நிழற்றிப்—புரந்தோன்

றிதலைமுலைப் பொன்மடந்தை சேரும்வீ ரப்பன்
மதலை பெரியசு வாமி—பதம்வருடார்

தந்தடமாற் றம்போலத் தள்ளாடிக் காலசைத்துக்
கந்தடு மாற்றக் கடாயானை—முந்த

நிகழும் பசத்தை நெளித்தறுத்துச் செய்ய
துகள்ம் பரத்தின்வழி தூர்ப்பப்—புகுமளவி

லெத்திக்கு மைக்கடலு மெங்குமரு வாருடலைக்
குத்திக் குமைக்கும்வெள்ளைக் கொம்புபோற்—பத்துப்பேர்க்

கோரதத்தி லேறியமால் கூடார முன்குறைத்த
பாரதத்தி லூதும் பணிலம்போற்—கோரமுற்று

வாழி யிரணியனை வாளுறு ருநிஞ்சியமா
வாழியுரு நீக்கிவெள்ளை யானதுபோ—லூழி

முடிவதனிற் சங்கார மூர்த்திதிரு நீற்றுப்
பொடியணியும் வெள்ளைநிறம் போல—மடமாத

ருனை மூயிரு மூறிஞ்சிக் குடிப்பவனி
தானும் வெளுத்திருந்தாய் சந்திரனே—மாநிலத்தில்

வெள்ளைமதி யென்பார் விசாரியா தாரவற்கு
வெள்ளைமதி யல்லால் விளையமுண்டோ—வொள்ளியதோர்

தண்ணிலா வென்பாரே சற்றேனு முன்னிடத்தே
தண்ணிலா வென்பாரே சந்திரனே—மண்ணுலகிற்

செம்மைதரு பிந்துவிலை சிந்துபுன லின்மிசை
வெம்மை தரப்புகுங்கி வேர்ப்பதன்றோ—வம்மம்மா

கண்ணகையார் பெண்பழியைக் கண்ணாலே பார்க்குமர்த
வண்ணனுமுன் வல்லெழுத்தா னல்லவோ—வெண்ணிலவே

பெண்பழிகொண் டன்றே பிறந்து வளர்ந்தாலும்
பண்பழியத் தேய்வாய் பனிமதியே—என்புலவர்க்

கண்ணுதல்கோ பாக்கினிபாற் காமன் கரிந்தனனென்
றெண்ணுதல் சால விழுக்கன்றோ—வண்ணனுக்குக்
காகளமா மன்றிலும்விற் கட்டியநா ணஞ்சுரும்பு
மாகளஞ்சேர் பேரிகையாம் வாரிதியுஞ்—சோகமுறும்
வில்லாங் கரும்பும் விருதாங் கருங்குயிலு
மல்லாங் களிறு மகங்கறுக்கக்—கொல்லுமொரு
பூவுங் கறுப்பாமோ போர்புரியும் பாசறையாங்
காவு மிருண்டு கறுப்பாமோ—மேவி
விரிந்த மதிக்குடையின் வேடைபட வெம்பிக்
கரிந்து கறுத்ததெனக் கண்டோந்—தெரிந்து
வடவைக் கனலும் வடகாற்று மொன்றாய்க்
கடலிற் புகுந்திருக்கக் கண்டோங்—கடலு
மறுகக் கொதியாதோ வாயில்வைக்கப் போமோ
சிறுகச் சுடுமோ சிவனை—யறியோமோ
பண்டு மொருராம பாண மதியாம
லுண்டு பெருமை யுமிழ்ந்ததே—தெண்டிரையைக்
கும்ப முனிவன் குடங்கையினு லேந்தியது
வெம்ப மறுத்தும் விடுத்தானே—அம்புலியே
பாந்தளுக்குப் பாந்தள்விடம் பற்றுமோ வப்படியே
காந்தழலுங் காந்தழலைக் காயாமல்—நீந்தியே
திண்ணிய வாரிதியிற் சென்று தினங்குளிக்கப்
புண்ணியவான் மேனி பொறுத்ததே—கண்ணினும்
பார்க்கப் படாதவுன்னைப் பண்ணவரு முண்டாரா
மார்க்கவிரு கோளு மடுத்ததாங்—கூர்த்து
விறுவிறெனத் தொண்டை வெதும்பியதாங்—கண்ணைத்
திறுதிறென வேவிழித்தார் தேவ—ருறுபசிக்குத்
தின்றுநா முய்வமெனத் திண்டையிலே சூடுபட்டுக்
கன்றியதாம் ராகுக் கறுப்பென்பார்—ஈன்றுடனே
வெம்புநா நீட்டி விழுங்கையிலே சூடுபட்ட
செம்புண்ணுங் கேதுச் சிவப்பென்பார்—கொம்பனையார்



மூட்டமுலே யுன்னை முலைக்கையிலே யள்ளி யெருப்
போட்டமுல வென்றோ புகைத்தார்க—ளீட்டியதோர்
மானமுள்ள பேர்க்கு மருவுண்டோ வுன்குணத்தான்
மான மிருந்து மறுப்பட்டாய்—கானறிய
வற்றைநாட் சேர்ந்தமின்னு ராற்றாத வெம்மைகண்டு
மற்றைநா ளுன்னை மருவாரோ—சிற்றினமாய்
வாழுங் கலையுறவு மானுறவுங் கொண்டன்றோ
தாழுங் குணம்பண்டைத் தாய் சந்திரனே—யேழையர்க்குத்
தீங்கு விளைத்தகுறை தீருமோ தாபதனும்
றுங்குமயூர் பன்னியிட்ட சாபத்தாற்—பாங்கான
பாண்டுவைப் போல்வெளுத்த பாவமன்றோ மங்கையரைத்
தீண்டுவது மற்றுந் திரிந்தனே—யாண்டகையே
வள்ளமுலை மாதர் மனதுநொந்தா லாகாதென்
றெள்ளளவும் புத்தியுனக் கில்லையே—கள்ளரைப்போல்
வந்திரா வேளையன்பர் வாராத வேளைகண்டு
சந்திரா வேளையுநீ தானழைப்பா—யந்தநா
ளிந்திவண்ணன் சென்னியின்மே லம்புலியாய் நீயிருந்தாய்
குந்திமகன் கைச்சிலையைக் கொண்டடித்தான்—சந்திரனே
பொல்லாக் கலகம் புரியு முனையடித்த
தல்லாற் சிவனை யடித்தானோ—சொல்லுமந்தக்
காயமு மாறிக் கருந்தழும்பு மொன்றினதே
மாயமுடைய மறுவென்பா—ராயர்வாய்த்
தீங்குழலுஞ் சந்தனமுந் தென்காலும் பன்னீரும்
பாங்கு பெறுமுனக்குப் பாங்கரோ—வாங்காலும்
மாயனொரு வேய்ங்குழலை வைத்தூதப் பட்டுலர்ந்து
போயமரா முந்தளிர்த்துப் பூத்ததென்பார்—யாயினு
லூதுங் குழலுந் தளிராத துன்னாலே
மோதுங் கனறாக்கு *மூட்டியன்றோ—போதவே

* மூட்டியெனவும் பாடபேதமுண்டு.

தென்றல்கன லுண்டாகுங் காற்றன்றோ தென்றலுடன்
மன்றல்கமழ் சந்தனமும் வந்ததன்றோ—வன்றியுமோ

பன்னீரு முன்மேற் பனிநீரன் றோவதுவும்
வெந்நீரைப் போல வெதும்பாதோ—விண்ணிலத்தி

லித்தனையும் பெற்றவுன்னை யீரமதி யென்றாரே
யத்தனையு முன்னே யறியாரோ—மெத்தமெத்த

வில்ல புகழ்த லிகழ்த லெனநினைந்து
நல்ல மொழியாலே நாமமிட் டார்—சொல்லினு

லெள்ளாமன் முன்னா லிருந்தபேர் காராட்டை
வெள்ளாடென் றாற்போல் விளம்பிவைத்தா—ரள்ளலுறு

முன்னீரிற் கூனி முளைத்ததா ளாரலென்
றன்னீர் மகர மருந்திலையே—வன்னியையோர்

பன்னி விழுங்கியது பார்த்து முனைவிழுங்காள்
பொன்னின் மனையாள் பொறுதன்றோ—வின்னலற

விம்மியகோ பக்கதிரை வெம்மையற வேகடைந்த
கம்மியனு ருன்கொடுமை காணாரோ—நம்முடைய

நம்பரங் கைதங்கு வெண்டலைபோ லெந்நாளு
மம்பரத்தின் மேலிருந்தா யம்புலியே—வம்புரைத்த

மிக்கசிசு பாலனுக்கு விண்டு தரித்தவொரு
சக்கரம்போல் வட்டமிட்டாய் சந்திரனே—யிக்கணமே

மைக்கடலாங் காட்டில் வரைத்தழல்போற் றோன்றையிலே
செக்கர் நிறம்படைத்தாய் திங்களே—யக்கடல்விட்

டிப்பால் வரும்போ தெழுந்துபொறி மூடியதிக்
கொப்பாய் வெளுத்தா யுவாமதியே—துப்பாகச்

செக்கச் சிவந்திருந்த செவ்வான மத்தனையும்
பக்கக் கொழுந்து படர்ந்தனவே—யொக்குமொக்கு

நெட்டுயர் வானி னிறைந்தவுடு வன்கிரணங்
கொட்டுதழல் பட்டெழுந்த கொப்புளமே—கெட்டிகெட்டி



மேற்றாவும் வல்லிரவில் வேலை யொலிப்பதுனக்
காற்றாமல் வாய்விட் டரற்றுவதே—மாற்றாத

திண்டழலுக் காணாலுந் தீராத கூரிருளும்
வெண்டழலுக் கஞ்சி வெளுத்தெனவே—மண்டலத்தி

லெந்நாளு மொண்கிரண மிப்படியே காயுமென்று
சொன்னா லுலகோர் துதிப்பாரோ—வுன்னாலே

மண்பதையும் பைங்கூழும் வாடுமோ வாடாதோ
வெண்பதைநான் புத்தியினா லெண்ணினேன்—முன்பிருந்த

சென்னிக்குப் பேர்கொடுத்த செங்கோன்மை யாலரசர்
சென்னிக்கு வைத்த திருத்தாளா—னென்னலர்மேற்

பேரிலை வாளி பிடித்தகரத் தான்மடவார்
பேரிலை வாளி பிடியாவேள்—வீரப்பன்

றந்த பெரிய சுவாமி தயவினால்
வந்த கருணை மழைபெய்யச்—சந்ததமும்

யாங்கா யுலகம் படைந்த குடைநிழற்கீழ்
நீங்காத கீர்த்தி நிலாவெரிப்ப—வோங்குதலா

னீயுங் குளிர்ந்தாய் நிலமகளு மெய்குளிர்ந்தா
ளாயுந் தமிழோ ரகங்குளிர்ந்தா—ராயதினா

லக்கினியைத் தண்ணீர்விட் டாற்றுதல்போ லுன்றுடைய
விக்கினத்தைத் தீர்க்கவகை வேறுண்டோ—தக்கபுகழ்ச்

செம்புலி ராஜசெய சிங்கத்தை நான்சேர்ந்தா
லம்புலியே நீயு மடங்காயோ—தம்பமாம்

வீரப்பன் பாலனென்னை மேவவரக் காணுமன்று
வீரப் பனிமதியா யெய்துவாய்—பாரிலுள்ளோர்

நாமனே கந்துதிக்குஞ் சந்திரக லாநிதியே
சோமனே செய்தியெல்லாஞ் சொல்லக்கேள்—வாமமகப்

விஞ்சைமாக் கூட்டத்தால் மேவியவா னேற்றத்தா
வஞ்சு முகங்கொண் டமர்தலாற்—செஞ்சவே.

மெய்த்தவரை வல்விலங்கை மேற்கொளலா லவ்விடமே
வைத்தகண் டங்க வளங்கொளலான்—மெய்த்தவமர்
சங்கை வனந்தரித்த காட்சியா னீட்சியாற்
றுங்கிய கோடு தரித்தலாற்—பொங்கமாய்

மாறாச் சிலைக்கான மானிடமேல் வைகுதலால்
வீறல் மிகுந்தாரை மெய்யுறலாற்—கூறு
முறுவுமா ணிக்கமலைக் கொப்பா மவன்போன்
மறுவுமா ணிக்க மலையான்—பெருகு

மரவத் தலைதோய்ந் தடியடலா லாழி
பரவிய பாணிபுகும் பண்பால்—விரவிய
கண்ட கரையுடைத்த கார்முகங்கொண் டோங்கலான்
மண்டலவன் பார்க்கும் வரத்தினாற்—றண்டி

மிருந்த வளைதிருக்கை யேறுதலாற் கண்கள்
பொருந்தவளைக் கால்சேரும் பொற்பாற்—பரிந்த
திடந்தருமால் போலத் திரைக்கடலை நாடி
நடந்த கருப்பா நதியா—னிடந்தோறு

மாந்தர் வரப்படைக்கும் வண்மையான் மெய்ச்சுமையைப்
போந்தவனந் தாங்கிப் பொலிதலாற்—சாந்தமாய்ச்
சொன்னகர கந்தரித்த தோற்றத்தா லேற்றத்தா
லின்னலறப் பூமே லிருத்தலாற்—பின்னமன்றித்

தென்முகந்த கஞ்சத் திருவுந்தி தோற்றுதலா
னன்முகன்போற் கல்லகநன் னாட்டினான்—யான்மகிழுங்
கோகனக வீட்டிற் குடியிருந்த பான்மையினான்
மாகருணை மாலகத்தில் வாழ்வதினா—னாகரிக

வங்கதனக் கோட்டை யமைதலான் மேல்வீடு
தங்குமலை யாகத் தயங்கலாற்—றுங்கமாம்
வாமங்கை யேற்ற வளமையால் வாழ்வினாற்
பூமங்கை யந்தப் புரமென்னக்—காமர்பெறுஞ்



செண்பக ராமநல்லூர் தென்கிளைவை யென்றுவக்கோ
னெண்பகரா மன்ன ரிறைஞ்சுவோன்—பண்புதரு
கற்புத் திசநாமங் காட்டலா லெட்டிக்கும்
பொற்புத் தனியே பொருந்தலா—லற்புதமாய்

வாய்ந்த தவள வடிவாற் கலைமடந்தை
தோய்ந்ததென முல்லைத் தொடையினா—லாய்ந்தறியக்
கந்துகத்தை மைந்தர்பல கைக்கொளறப் பந்தாக்கித்
தந்துகன வட்டந் தனதாக—விந்தையாய்ப்

பாடலத்தைக் கானகத்திற் பாதிரியாய்ப் பேர்கவிட்டுக்
கோடல்புரி கோதமதைக் கொய்தில்வைத்து—நாடறியச்
சூரியனார் தேர்ப்பரியைத் தோற்கறையினும் விரைமையினும்
வாரி யருந்துபச்சை மாவாக்கிச்—சாரியாய்ச்

செஞ்சகதி யாய்க்கடலைச் செந்தூளி சிதற்குளப்பிப்
பஞ்சகதி பாயும் பரியினான்—வெஞ்சமரிற்
பட்டமது கட்டியொளிர் பத்திசரி யக்கரிய
வெட்டியடி வைக்கவுட லெய்த்தயர்வு—தட்டழிய

முட்டையுடை பட்டதென முட்டி துணை பட்டுவளை
யெட்டும்விழ மத்தகமெட் டோடுவிலை—விட்டகல
விட்டமணி சத்தமிட வெட்டுவிசை வட்டமிட
வட்டில வட்டமையு மைக்கடலு—மட்டிலைய

வெட்டவெளி பட்டுகடு விட்டகடு தட்டுருவ
நெட்டுட னொளித்தொருவ ரெற்றிடினை—நொட்டிவையு
மட்டறவி டிக்குந்துயம் மட்டமைநி ரிட்டமுகில்
கட்டழகு பெற்றுமொரு காரணமாய்த்—திட்டமுள

னம்புவியில் வந்ததுபோ லாமனி ரிநிறைந்த
வெம்பு மதத்தில் விழுந்தவன்மைத்—தும்பியென்றுங்
காலால் முழக்கியதிர் வாரணமென் றூர்க்கடலைக்
காலா லுழக்குங் கடாக்களிற்று—ராஜயும்

போதனையுந் தாங்குமுந்தி பூத்தவனைத் தாங்கியையுந்
தூதனையுந் தாங்குந் துவசத்தான்—மீதுயரப்

பொன்கறங்கு மாமகுடம் பூத்தமன்னர் காத்தகடை
முன்கறங்கு மூன்று முரசினு—னன்குதருஞ்

சைவக் குருமரபைத் தாங்கு பரஞ்சோதித்
தெய்வக் குருமணியைத் தெண்டனிட்டு—மெய்வைத்த

சோதிப் பெரிய சுவாமியையுந் தான்வணங்க
வாதிக்கம் பெற்றதிரு வாணையான்—போதித்து

முத்திரச பர்கங் கொடுக்க முளைத்தெழுந்த
சித்திரச பாபதியாந் தேவனுக்கு—நத்தினங்க

டோய்ந்த திருமலைமேற் சூழ்ந்தசுனைப் பூங்குவளை
வாய்ந்த திருமலைமேல் வாழ்வோர்க்கும்—பாய்ந்தறலை

மண்டலைக்கொண் டோடிவரும் வையையிலே கூடைகட்டி
மண்டலைக்கொண் டோடி வருவோர்க்குந்—தொண்டனெனா

நீண்ட வளந்தழுவ நின்றசீர் மாறனுக்கு
வேண்ட வளர்ந்த விமலனுக்கும்—பூண்ட

நறைக்கட் டளைக்குமலர் நாகவனத் தாற்கு
மறைக்கட் டளைப்படியுண் டாக்கிச்—சிறக்கவே

யாலயமு மண்டபமு மன்னசத்ர சாலையும்பூஞ்
சோலையுஞ் செய்த சுகிர்தவான்—வேலைசூழ்

பூமான் மனுவாய்ப் புரந்தவற்குத் தென்னுறந்தைக்
கோமா னெனும்பேர் கொடுத்தருளிப்—பாமாலை

சேரமா னென்றபெயர் சேரனுக்கு நல்கிமன்னர்
சேரமான் போலத் திகைத்தோட—வீரமிகு

வெம்புலிப்பட் டக்கொடியை மேருவினி லாக்கியொரு
செம்புலிப்பட் டப்பேர் செலுத்தினோ—னிம்பரிலே

போந்து மிறையோர் பொருள்கொடுத்த லாற்புலவோ
நேந்து பலகையிசைதலாற்—பாந்தமாய்



மங்கலவாக் கோத மதுரைவளந் தாங்குசிறந்
சங்க மனைய சமுகத்தா—னெங்கு

மடவி மயில்க ளகவ வினிது
புடைவை யுதவு புயலு—மிடரில்

சாத விரதி தளவு தடைசெ
யிரத முதவு மிறையு—மறிய

தனைய னுரைகொள் தமிழி னருமை
நினையு மனைய நிதியு—மினிய

வரவு பரிசெய் வனிதை யுடைமை
காவு பரிசெய் களிறு—வுரைசெய்

புலவன் வினவு பொழுது சிரசை
வசிய வருள்கு மணனு—மிலையே

யெவர்கள் தருவ ரெனவு மயரு
மவர்கண் மகிழ வருளி—நவமா

யிளகு மிசையு மினிய தமிழும்
வளர வளரும் வரிசை—கிளர

விருநிலத்தி லெவ்வுயிர்க்கு மின்னுயிர்போற் றங்கத்
தருநிலத்தில் வந்ததுபோற் றந்தோன்—கருதா

ரெதிர்க்குஞ் சமர்த்துண் டெனப்படைகொண் டோங்கி
யதிர்க்குஞ் சமர்க்களத்தி லன்னோர்—விதிர்க்கு

முரமுந் துளைபட் டுயிர்போக வெய்யோன்
புரமுந் துளைபட்டுப் போகச்—சுரர்பதிதன்

வண்ணத் தருவின் மலரும் பறிபோகப்
பண்ணவர்க்குத் தாரம் பறிபோக—வெண்ணிறந்த

காகப் படையுங் கழுதுந் தொடர்ந்துபின்னே
போகப் படைவாளி போகவிட்டோன்—கேகயத்தர்

வங்கத்தர் சீனர் வரவிட்ட சாம்புனதம்
வங்கத்தி னிற்சிறிது வச்சிரமுஞ்—சிங்களமும்

வார்ண வாசி மஹாராஜ ருங்கொடுத்த
வாரண ராசி வகைதொகையுஞ்—சேரர்

கலிங்கத் தரசர்பலர் கப்பமிட்டுச் செம்பொற்
கலிங்கத் துடன்மோ காமுங்—குலிங்கத்த

ரீழத்த ருஞ்சீனர் யாழ்ப்பாணர் கப்பமடை
யாளத் துடன்சிறிது யானைகளு—மாளவர்கோன்

காந்தார காம்பீரர் கப்பம்வர விட்டவொளிர்
காந்தார கேயூர கண்டிகையும்—வேந்தர்பலர்

கப்பமிட் டுப்பணிந்த கையினர்க ளாகிநிறை
குப்பு மிடையுங் கொணுவினு—னிப்புவியிற்

கொட்டமிட்ட துட்டரிட்ட கொத்தளத்த டிப்படைக்கொ
ரொட்டுவைத்த றுத்தெயிற்கு ளூற்றுழக்கி—முட்டிமுட்டி

நெட்டுயிர்ப்பெ முத்துடித்து நெட்டுடற்ப ணைப்படுத்த
பட்டவர்த்த னச்செருக்கர் பட்டுவட்ட மிட்டதுற்கை

கொட்டுகைப்பு டைக்கமட்டை கொக்கரிக்க வொக்கடித்து
நட்டமிட்ட வட்டணைக்கு கட்டணைக்கு—முட்டிமுட்டி

யெட்டியெட்டி யப்பிணத்தை யெற்றியெற்றி ரத்தமொக்க
மட்டிறக்கு டித்தெயிற்றில் வைத்துவைத்து—தட்டைநக்கி

மெய்க்கொழுப்பை நச்சுநச்சு மெச்சுமெச்செ னக்கடிக்க
மொய்க்குமக்கொ டிப்பெலிக்கு முற்படைத்து—வைங்கவைக்க

புத்த கள்க்கி துயிர்ப்பெலியிட் டேமுரசஞ்
சத்தமிட மற்றவர்கள் சந்திக்க—கத்தனெனச்

செஞ்சரண் மேற்சிரசு சேராத மாற்றரச
ரஞ்ச ரண்வேட்டை யாடினேன்—விஞ்சைப்

பிறைநிலவு தீட்டிப் பிடிக்குங் குடையுங்
கறைநிலவு தானக் களிறுங்—குறையாமற்

சொல்லிய சாரித் துரகமும் வெண்டயமும்
வில்லொளிர் காளாஞ்சி வெள்ளிமடல்—வல்லமைசே



ரொட்டகையும் பேரிகையு மொண்டிமுத்துங் கண்டிகையு
மிட்ட சரப்பணியு மிவ்வளவோ—தொட்டேயுந்

தண்டிகைசேர் முன்னணையும் பின்னணையுஞ் சாமரையு
மெண்டிசைசொல் பாவாடை யித்தனையுங்—கொண்டல்

தெரிசொற் புகழான் திருமலைரா சேந்த்ரன்
வரிசைதர வாங்குவிக்ர மார்க்கன்—குருகுலத்தார்

தூது விடுத்த துரைப்பெரிய சாமியெனு
மாதுலனுக் கேற்ற மருகவேள்—மாதிரத்தோர்

போற்றிய சின்னணைஞ்ச பூபாலன் மைத்துனவேள்
தோற்றிய கல்வித் துறைகண்டோன்—சாற்றியதோர்

முத்தமிழோர் கொண்டாடு முத்துமகி பாலனுக்குஞ்
சித்தசவே ளெங்கள் சிவனுக்கு—மித்தலத்திற்

றிக்குப் புகழ்படைத்த சீர்படைத்த முத்துக்குஞ்
சொக்குக்கு நற்றுணையாய்த் தோன்றினேன்—மிக்குடைய்

நன்னிதியம் போலவந்த நாரா யணனையிசை
மன்னிய சின்னு மகிபதியைக்—கன்னியர்வேள்

சங்கரனை மைத்துனனென் போன்றழைக்கும் வெள்ளையனுந்
துங்கனையு நற்றுணையாச் சொல்லுவோ—னிங்கிதவேள்

நாராய ணன்றுணைவ னோடோறு நாடோறுங்
காரா யுதவுங் கரதலத்தான்—சீராரும்

விந்தை புயந்தழுவு வீரப்ப பூபாலன்
சிந்தை மகிழ்பாலன் சீராள—னந்த

னெடுத்த மாமரங்க ளேழுக்கோ ரம்பு
தொடுத்த பெரிய சுவாமி—யடுத்துப்

பரந்தபுவி யெல்லாம் பரிக்குங் கருணை
சுரந்த பெரிய சுவாமி—நிரந்து

கனிந்தமொழிக் கோவியர்க்காக் கன்வரைக் கொணர்ந்
தொனித்த பெரிய சுவாமி—யினிக்கப்

பரிந்த தமிழ்க்கே பதினறு கோடி
சொரிந்த பெரிய சுவாமி—தெரிந்து

தடையற் றளிக்குலங்க டாநிறைக்கு முல்லைத்
தொடையற் பெரிய சுவாமி—கொடையா

னி நிதியு மொப்பில்லை யென்றேதா னீயுந்
திரவியசம் பன்னசெய சிங்கம்—பெரிய

புரிசைப் பரப்பணியும் பொன்மாட வீதி
வரிசைப் பவனி வருநாட்—சரிவளையும்

பொன்னணியு மின்னிடையும் பூண்முலையுந் தாங்கிவரு
மன்ன நடையா ரனைவோரும்—வன்னமலர்ப்

புன்னாகம் வேங்கை பொரியரைந்தே மாப்பூவை
நன்னுவல் கொன்றை நறுங்காஞ்சி—பன்னரி

தேங்கு சாலஞ் சிறுமிசண் பகமத்தி
கோங்கு மதுகங் குருக்கத்தி—தூங்குகனி

மாதுளை முல்லை மயிலை காவிரஞ்
சாதி செவந்தி தளிர்ப்பாலை—பாதிரி

புன்கு குரவு புனமுருக்கு கெட்டிலவ
நன்குதரு கூவிளமு நுவலான்—முஞ்சொல்

இணையஞ்சு மொன்றாய்ச் செறிந்த வனத்திற்
கணையஞ்சு பார்வையினுற் கண்டு—பிணையனையார்

சோலை புகுந்து சொரிந்த மலர்பறித்த
வேலை புரிந்த விளையாட்டிற்—சோலைசெறி

புன்னை யரும்பைப் புதுமுத்தாய் வெண்கைமலர்
தன்னை யரித்துத் தமனியமாய்—முன்னங்

குரவம்பா வைக்குமணக் கோலம் புனைந்து
பரிசங் கொடுப்பதொரு பாங்க—குருவிலாங்

காமன் றிருநாட்குக் காணுட்டிப் பந்தரிட்டுப்
பூமலர்த் தாமம் புடைசாற்றித்—தேமன்முலை



மங்கையரெல் லோரும் வளையமிட்டுக் கூத்தாடிச்
செங்கை புடைக்குஞ் சிறப்பொருபாற்—றங்கு

மில்வமலர் வீழ்வ தெரிபோல் மலர்த்தேன்
நிலமிசை வீழ்வதுவே நெய்போற்—குலவிய

தும்பி பறப்பனவே தூமம்போற் புன்கமலர்
பம்பி விழல்பொரியின் பண்பாக—நம்புசினை

மாஞ்சோலை கையசைக்கு மாறுபோல் மாறுமற்
பூஞ்சோலை யாகம் புரிவதுபோல்—வாஞ்சையினுற்

காந்தண்மல ரேற்பவர்தங் கைபோற் கொடுப்பவர்போற்
போந்து கடுக்கைமலர் பொன்சொரிய—வேந்திழையார்

பார்த்து மனமகிழ்ந்து பன்மலருங் கொய்யவென
வார்த்து நடந்தங் கவர்வரவே—கூர்த்துப்

பரவர் குருவைப் பழித்து நெடிய
குரவரைப் பற்றணைத்துக் கொண்டு—விரைவாகப்

பக்கத் திலஞ்சியிலே பல்வகையோட் டங்கொடுத்துக்
கொக்குக் கிருன்மீன் குதித்தெழுந்த—தொக்குமெனு

நாகத்தின் முற்று நடத்தியவாட் டைக்கொடுத்து
மோகத்தைக் கற்பை முறுவல்செய்து—வாகா

யருகதம் வீட்டுக் கடியிட்டுச் சேருங்
குருகுக்குத் தாரங் கொடுத்துப்—பரிவா

யிசைமொழி யும்பாலை யின்புற் றளிக்கே
வசையா னவரை மறைத்து—நிசமாகப்

பூவாத காலத்தும் பூமலருண் டாதலினுற்
றூவா தெடுத்துத் தரித்தார்கண்—மேவு

நகையாமல் முல்லை நறுமலரைச் சற்றும்
பகையா மெனவெறுத்துப் பாரேன்—மகராசன்

சங்கப் புலமைத் தமிழ்ப்பெரிய சாமியெங்கோன்
றுங்கப் புயத்துத் தொடையலென—மங்கலமாய்ச்

செய்யும் வதுவைத் திறம்புரிந்து நானுமங்கே
யுய்யும் வகையா லுவந்திருந்தேன்—செய்ய

வனச பதியுகள மற்புயவ சீரன்
கனக முகவிசைய கன்னன்—றனத

னடரு மிகல்கொண் டறப்பகைத்த வெய்ய
திடரி டறுசப்ர தீபன்—விடலைத்

திரட்டுப் பகைக்குவட்டைச் சேனையெனுங் காலாற்
புரட்ட வருசார்வ பூமன்—வெருட்டி,

யடையார் பதன மடைக்க நடக்கும்
படையான் கருணை படைத்தான்—வடிவிற்,

றணியாத தாமோ தரன்போலு மாறன்
பணியான் சிவனைப் பணிவான்—றிணிசேர்

துதியாவெட் டெட்டகத் தோய்ந்தகலை வாய்ந்த,
மதியா லுலகோர் மதித்தா—னிதியாற்

குறையாத கீர்த்திக் குணத்தாற் றராசு
நிறையான் கருணை நிறைந்தான்—செறிவான

பொற்றகட்டுப் பாகுநுதல் பூத்த திருநீறு
முற்றக் குழைக்கணிந்த வொண்டிமுத்தும்—பற்றிய,

கண்ட சரமுங் கனமாலை கற்பகக்கந்
தண்டாள மாலை சரப்பணியுங்—கண்டுமகிழ்

துங்க மணிப்புயத்தான் சூழ்ந்திடுகே யூரமுன்கைத்
தன்கைவளை யும்வீர சங்கிலியு—மங்குலியிற்

கற்பதித்த மோதிரமுங் கையிசையக் கட்டாரிப்
பொற்பு மரைக்கிசைந்த பூந்துகிலு—மற்புதமாந்

செய்ய கனிவாயுஞ் செங்கமலக் கண்மலரு
மெய்யழகும் பார்க்க விருப்பாகத்—தையனல்லார்

ஆலத்தி யேந்தமின்னா ரங்குமிங்கு நின்றிரட்டைக்,
கோலக் கவரி குழைந்தசைக்கக்—காலசைக்கும்



வட்ட விசிறி மருங்கசைப்பப் பாவாடை
தொட்டமழை மின்போற் சுழற்றிவரக்—கட்டியங்கள்

பாதவெச்ச ரிக்கை பராக்கென்று சொல்லிவரச்
சூதர் கவிதை துதித்துவர—நாதிக்கு

மம்மாரி போற்பேரி யண்ட கடாகமுட்ட
டம்மான வோசை டமடமெனா—விம்மிய

கொம்பதிரு மோசை குமுகுமென வச்சியத்தின்
கம்பலைக ளெங்குங் கடகடெனச்—சொம்புதரு

முத்தளமுங் கைமணியும் வாசிக்குந் தித்தியுடன்
றத்தளங்கு தாவெனவே சத்தமிடச்—சித்திரப்பொற்

கட்டழகு பெற்றபெண்கள் கண்மருட்டி மெய்குலுக்கி
வட்டமிட்டுக் கைகாட்டி மாறுமற்—பட்டனையுந்

தேசுகுச்சு ராத்தியொடு செக்கணியூஞ் சாதியுஞ்செய்
தாசி னடனமுறை யாடிவர—மூசித்

தரையிற் பராசர் தண்டிகையு மற்றத்
துரைமக்கள் பல்லக்குஞ் சூழ—நிறை நிறையாய்ச்

சொந்தப் பரிவாரஞ் சுற்றிவர வேற்படையுங்
குந்தப் படையுங் குழாநெறுங்க—வந்து வந்து

வெள்ளிகட்டிக் கற்குழலும் வில்லும் பிடித்தவர்க
ளெள்ளிடப்போ காம லிடைநெருங்க—வொள்ளியதாம்

வாட்பிடித்த போருவி வல்லையக்கா ரர்கள்செந்
தூட்பறக்கப் பின்னுமுன்னுஞ் சூழ்ந்துவரக்—கேட்குங்,

கணக்கர்களி ராயசக் காரர்கரு ணிக்க
ரிணக்கு நடைப்பரியி லெய்த—வணக்கமுள்ள

நற்றுணையாய் வந்துதித்த நாரா யணபூமான்
மற்றுமுள்ள தந்தா வளத்தில்வர—வுற்றறிந்து

மெய்யான கர்த்த விசுவாச மேதனக்கு
மெய்யாய் விபூஷணமாய் மேற்கொண்டு—பொய்யாத,

கல்வி வளத்தையெல்லாங் கைக்கொண்டு மாற்றாசர்
செல்வ வளத்தைத் திறைகொண்டோன்—பல்வளஞ்சேர்

கூடல் நகர்புரந்து கொண்டமுகில் செண்பகஞ்சொ
லாடன்மத வேளெனும்பொன் னம்பலமு—நாடிய

சொன்ன படிமுடிக்குஞ் சூட்சியாற் கெட்டியென்றே
மன்னர் புகழு மகராசன்—முன்ன

மருதூருங் கள்ளனைப்போல் வன்பகையை மாற்றி
மருதூரும் பேரும் வளர்த்தோ—னிருதிதிபோற்

செந்தமிழ்க்கு நல்குந் தியாகி வயித்தியப்பன்
றந்தபிச்சைப் பிள்ளை தியாகியுஞ்—சந்த

மதுரமொழு கப்பேசும் வார்த்தையாற் பேசுஞ்
சதுரனென வாழ்வு தழைத்தோன்—கதிர்வீசும்

வள்ளைபொரு வுங்குழையார் மாரனட ராஜனருள்
பிள்ளையசைந் தாடும் பெருமாளும்—வெள்ளமென

மற்றப் படைவீரர் மக்கண்மரு மக்களுமே
சுற்றப் பெரிய சுவாமியெங்கோன்—கொற்ற

மதவா ரணப்பிடரில் வைத்தசக டோன்மே
விதமாய்ப் பவனி யெழுந்தா—னெதிராக

மாட நெருங்கு மணிமறுகின் மாதர்சென்றார்
கூட நெருங்கிநின்று கும்பிட்டே—னீடியது

துப்புப் பரிவாரஞ் சூழ்தலா லெத்திசையுஞ்
செப்ப வருந்தாக்கு திரையினா—லொப்பற்ற

கஞ்சக் கருவியினர் கம்பலைசே ருங்குணத்தாற்
சஞ்சரிக்குங் காற்களிறுந் தாண்டுதலாற்—றஞ்சம்வரத்

தானைபரி வாளாற் றனிப்பாறு சுற்றுதலாற்
சேனை கடலாத் தெரிந்தே—னானையின்மேன்

மின்னவனைப் பொற்றகட்டு வேதிகையின் மேலிருந்த
மன்னவனை மாலாய் வணங்கினேன்—முன்னடந்த



மாதரும் நின்று வணங்கினா ராசைகொண்டா
ராதலா லாரென் றயிர்த்தார்கள்—காதலா

லெத்திசையும் போற்றுகும ரேசனென்றா லாங்கவனுஞ்
சத்தியெடுப் பானுவமை சாற்றோமே—யத்தருவாள்

வானாடர் கோவென்றால் வன்சிறைச்செஞ் சூட்டுமுட்டா
ளானா னவனுவமை யாகானே—மீனாரு

மாமதன்சோ மன்குடைக்குள் வாழ்ந்தா னிவன்குடைக்குச்
சோமனின்மிக் காகிலொப்புச் சொல்லோமே—யேமநிறை

வானநள கூபரனென் றுரைப்பா ராங்கவனு
மான மிழந்தான் மகனன்றோ—மானனையீ

ராவனுடன் சீவகனென் றாலவனுஞ் செட்டியன்றோ
சேவகனுக் கொப்பாகச் செப்போமே—யாவருக்குந்

தம்பமென வோங்குந் தனுவெடுத்தீ தாற்பகைமே
லிம்பரிலே தண்டமுங்கொண் டெய்துதலா—லம்புயத்துத்

துங்கத் திருமாது தோய்ந்தகுணத் தால்ரேகை
சங்கத்தா லாக்கினா சக்கரத்தா—லெங்கும்

புவனம் புரந்து புலவர்தமைக் காக்க
விவனும் படியளந்தா னென்பா—ரவனாகி

லோரானை காக்க வுளங்கண் டான்முலையா
மீரானை காக்கவிங்கே யெய்தானே—நீராடு

மங்க ணிடைச்சியர்பா லன்றுந் துகில்கொடுத்தா
னங்க டயில்திரும்ப நல்கானே—மங்கையெனுஞ்

சீதையினால் வேலையின்மேற் சென்றபடை யாசைகொண்ட
கோதையினால் வேலை குடியாதோ—வாதினா

லேழு மராந்துளைக்க வெய்கணை மாங்குயில்கள்
வாழு மராந்துளைக்க மாட்டாதோ—வாழத்தி

லன்று முதலையுண்ட வாருயிர்தந் தான்மயங்கும்
மென்னுயிரை மீட்டாற் பிழையாமோ—வென்னரிய

தந்திரத்தா லேபகலைத் தள்ளிபந்தி யாக்கினவ
னந்திபக லாக்கினு லாகாதோ—நந்தாத

வென்றிதரும் புள்வாய் விரியக் கிழித்தவன்று
னன்றிலகல் வாய்கிழிக்க லாகாதோ—துன்றியகால்

தந்திதிரை யோதை தடுக்கமந்த்ர கூடத்தில்
வந்தவினை வித்தெருவில் வாராதோ—தந்தமணிச்

சங்க மிவன்பாற் றனதாறுற் பேதையரே
சங்க மளித்தாலுந் தாரானோ—துங்கம்

பொருந்தவரு மாலாற் புயவரையை நோக்கி
யிருந்தவரு மாலானே மென்பார்—திருந்திய

முற்றிழையும் பொற்குழையு மோதிரமுஞ் சேரவெங்கே
சுற்றி யுடுத்த துகிலெங்கே—குற்றமிலாத்

தொய்யிற் கனதனமேற் சோதித் தாளமெங்கே
கையிற் கடக மெங்கே காணேமே—தையலரைத்

தாண்டியா ராலுமொன்று சொல்லாமற் பார்புரந்த
பாண்டியா யாமோ பறிகொடுப்போம்—பூண்டமதன்

போரா கிலும்விலக்கிப் போனமுதல் தாராயேற்
றூரா கிலுமெமக்குத் தாவென்பார்—போராலே

விந்தையுந் தேட விரல்படைத்தாய் பேதையரெஞ்
சிந்தையுந் தேடித் திரிவேமோ—சிந்தாத

கந்த மலர்புனைந்து கட்டாச் சுரிகுழலுஞ்
சந்தனமும் பூசாத் தனக்கோடும்—விந்தைபெறக்

கையெழுதிப் பார்த்துமிந்தக் கைக்கூட லுங்குழைந்து
மையெழுதிப் பார்க்கு மதர்விழியுந்—துய்யநிறச்

சேலை புனையாத் திருவழகு மெம்மனையே
யாலைமதன் கல்லூரி யானதுவு—மேலுமயல்

போர்த்த வெமையும் புலவோர் கவிதீரப்
பார்த்தகடைக் கண்ணாலே பாரென்பா—ரார்த்த



கூடலொலிபோற் பெண்கள் கழறுவதன் முன்னே
யுடல்பதறி நின்றேனொருத்தி—தடுமாறி

யொன்று முரையே னுளத்திற் குடியிருந்தாய்
நன்றுசெய்தா யென்று நகைபுரிந்தேன்—சென்று

நிறையக் குளித்தார்க்கு நீர்வரடை யுண்டோ
வறையப் படுமோவென் னாசை—குறையிரந்து

பேச வகையறியேன் பேராசை கொண்டதுவு
மோசமென நின்றுபெரு மூச்செறிந்தேன்—மூசுங்

குழலிசைய வண்டினங்கள் கூட்டுணுந்தேன் முல்லை
யழகொழுகு தாங்குபுயத் தண்ண—லெழுகுணபாற்

கூடல்வரை யாதவன்போற் குஞ்சரமேற் றோன்றியெமர்
தேட வரையாத் தியாகத்தான்—றேடுமெழில்

விற்காமன் போலெமக்கே மிக்காமன் போல்விளங்கு
பொற்காமன் போலப் புவிபுரந்தோ—னற்பு

மதனும் படியழகு வாய்த்தவீ ரப்பன்
சுதனும் பெரிய சுவாமி—யதிகாரன்

சூரன் பெரிய சுவாமி புகழ்க்கிளவை
யூரன் பவனி யுலாப்போந்தான்—வாரத்தி

லாதரவு செய்வானென் றன்புபுரிந் தாங்குநின்ற
மாதருந் தங்கண் மனைபுகுந்தார்—பூதலத்தி

லேயப் பவனிக் கெழுந்த துகள்டைந்த
காய மதனைக் கழுவவென்றோ—நேயத்தாற்

றூவிய வாசை தலைமண்டைக் கொண்டுநின்ற
பாவியைப் பார்க்கப் படாதென்றோ—பூவுலகில்

வெல்வென்றான் மாரனுக்கு வேழம்வர வேணுமென்றோ
வல்லவென்று னன்வரவை யஞ்சியோ—வெல்லுடனே

சூரியனும் வாம்பரியுந் தூண்டு மருணனுமாய்
வாரி யகட்டில் மறைந்தார்க—ளூரறியத்

தந்திப் பவனிமுன்னே சந்திப்ப வர்க்கெதிரா
யந்திப் பவனிவந்தா னம்புலியே—நிந்திக்கும்

பெண்படைத் தூசிபிடிக்கு மகரடால்
கண்படைகொள் ளாத கடல்முரசம்—பண்பயிலு

மாங்குயில் சின்னம் வசந்தக் கொடிஞ்சியந்தே
ரேங்கு குரலன்றி லெக்காளம்—பூங்கிள்ளை

நாங்கணவாய்ப் புள்ளு நடாத்தும் வயப்புரவி
பூங்கணை பூட்டியவிற் பூங்கரும்பு—பாங்குபெறத்

தோயும் படைப்பெருக்கந் தோன்றியவின் மாரனுக்கு
நீயுங் குடையாய் நிலாவெறித்தாய்—மாயமாய்

வந்தவனைப் பார்த்தேன் மயங்கி விழுந்துவிட்டே
னந்த விரக மறியாரோ—புந்தியுள்ள

சேடியரும் பாங்கியருந் தேடியெனை நாடியங்கே
யோடிவந்தா ரேதென் றுளமெலிந்தார்—நாடி

நிலத்தைவிர லாற்றடவி நெற்றியின்மேல் வைத்தார்
பிலக்கவென்னைக் கையாற் பிடித்தார்—குலக்கொடியே

யஞ்சாதே யென்று ரகத்திற் கொடுவந்தார்
துஞ்சாத கண்ணைத் துடைத்தார்க—ளஞ்சாத

செம்பிற் பனிநீர் சிவிறியினாற் றாவினார்
வெம்பிப் புழுங்காமல் வீசினார்—நம்புமின்னார்

சந்தனமும் பூசித் தகையாற்றிப் பார்த்தார்க
ளெந்தவிதத் தானு மிளைப்பாரே—னிந்தப்

புருவக் குறுவேர்வும் பொன்பூத்த மெய்யும்
வெருவிச் சிவந்த விழியும்—பரபரெனப்

பேசையிலே யோங்கிப் பெருமூச் செறிவதுங்கண்
டாசை யெனவே யறிந்தார்க—ளாசைதரு

வேலையும் நீயுமத வேளும் வருத்தாமன்
மாலையும் வாங்கி வரப்போனா—ராலம்போற்



கின்னரமு மாயர் கிளையும் வருத்தையிலே
கின்னர மோடிக் கிளைகூட்டுங்—கன்னன்மதன்

கோகிலமு மீனக் கொடியும்வருங் காற்குயிலுங்
கோகிலமு நன்னிமித்தங் கூறுமே—வாகடின

சந்திரனே நீயுந் தனித்தாயே யென்னுடலிற்
சந்திர ரூபந் தணியாதோ—வந்தடரு

முன்கலையுங் கோப மொழிந்து குளிர்ந்ததென்று
லென்கலையு மீளவெனக் கெய்தாதோ—மின்கூர்

சசியுன் னிலவு தணிந்து குளிர்ந்தாயேற்
சசியு மெனக்குச் சரியோ—நிசமாக

வார மமைத்து வளர்த்தாய் தமியேன்மேல்
வார மமைத்தால் வழுவுண்டோ—சீருதவு

பெண்ணுடனே கூடப் பிறந்தாயே யாசைகொண்ட
பெண்ணுடனே வஞ்சம் பெறலாமோ—வெண்ணிப்

பொருமலைகண் டொன்றிவரும் புண்ணியவா னேயென்
பொருமலைக்கண் டேனும் பொறாயோ—மருவியே

யாகாயஞ் சேரவந்த வம்புலியே யாசைகொண்ட
வாகாயஞ் சேர வறியாயோ—நோகாம

லிந்தி வரமென் றிருந்தேனே வேளொடுக்கு
மிந்தி வரங்கொண் டிரங்காயோ—வந்தரத்தி

லாயம் புலியேநீ யாறுத வெம்மைகொண்டா
லாயம் புலிக்கூட்ட மாகாதோ—காயவரும்

பானிலா வால்வளையைப் பற்றியிருந் தேனெனவே
பானிலா வால்வளையைப் பாராயோ—தானவரும்

வானவரு மாலயனும் வாரி கடைந்தாரே
ஞானபரன் கோபம் நடந்ததே—யானதினு

லால மெழுந்ததே யன்னாட் பயந்தீர
மாலயனும் பின்னே மறைந்தாரே—சீலமிகு

## வடகரை யாதிக்கத்தின் சரித்திரம்.

விண்ணவரோ டத்தகுவர் விண்ணமுத முண்ணையிலே
யண்ணலே நீகண் டறிந்தாயோ—முன்னந்

தமையந்தி யுன்னாலே சஞ்சலமாய்ப் பின்னு
மமையும் படிமணமுண் டாளே—சமையத்தி

லெப்படியுங் காப்ப தெதிர்காலந் தானறிவா
யப்படியே நொந்தகண்ணு லாற்றுவா—யிப்படியே

திட்டிதிதி சங்காரஞ் செய்வதுகண் டேசிவனுந்
திட்டியென வுன்னைவைத்தான் றிங்களே—யட்டதிசை

யெல்லாம் விளக்கி யிருட்படலம் நீக்குதற்கு
வல்லாளு னீயன்றி மற்றுண்டோ—நல்லாறு

கண்டு மனுநீதி கைக்கொண்டு செல்வவளங்
கண்டு தமிழைக் கரைகண்டோன்—பண்டிருந்து

கண்டன் பெரிய சுவாமி கடாட்சமெதிர்
கண்டதினாற் கற்புவரக் கண்டேனே—வெண்டளவ

வாசந் தருமாலை வந்ததாச் சேகுளிர்ந்து
வாசந் திரனே மகிழ்ந்து.

### வெண்பா.

வாழி பெரியசு வாமி மகாராஜன்
வாழிதுரை மக்கண்மரு மக்களெல்லாம்—வாழி
வடகரையா திக்கம் வளரவவன் செல்வம்
வடகரைபோல் வாழி மகிழ்ந்து.

சந்திரகலாமஞ்சரி முற்றிற்று.

## * பட்பிரபந்தச் சிறப்புப் பாயிரம்.

சொல்லாருந் தொளாயிரமாம் பாபவத்திற் றுலங்குதுலாத்
திலஞ்சாந் தெய்தி

மல்லாரும் வடகரையான் மகுடேந்திரன் சின்னணைஞ்ச
மகிபன் மீதே

பல்லாரும் புகழ்வதற்கே பன்னேச லரங்கேற்றிப்
பரிசில் பெற்றான்

கல்லாருங் காமுறுசொற் கடிகைமுத்துப் புலவனெனுங்
கவிஞரேறே.

* ஆக்கியவர் பெயர் தெரியவில்லை.

உ

திரிகூடபதி துணை.

வடகரைத் துரையவர்கள் பேரில்

# பட்பிரபந்தம்.

## காப்பு.

கார்பூத்தசெங் கதிரொளிசிறிதெனக் கடல்பூத்தசெந் தாமரைக் காடெனக்
கைவாய்பதம் விழிசிவந்தொளிவிடு கண்ணனைப்பொருவாம்
பார்பூத்திடு திசைதொறுமிவனெனப் பகர்தருதுரைப் பெரியசுவாமியைப்
பாக்கியப்புரு கூதனைப்பாடிய பள்ளேசலுக்கே
யோர்பூத்திடு புகர்முகத்தொருமருப் பிருதாண்மத களிறுபிதாமுடித்
திருந்திடுமித ழியின்முகைச்சதங்கையென் றிசைத்திடவசைத்துச்
சீர்பூத்திடு முமைமுனங்குதித்தலுந் திருநகைசெய்து தருசொலியிலையெனச்
சிந்தடித்துணை சிந்தடித்துணையெனச் சிந்தைவைப்பதுவே. (1)

சிரசினிலணி மோலிச்சுமைகொடு புரவலர்தொழு பாதத்துணையுள
செயதானில மாதுக்கொருதுணை திருவளர்புயத்தா
னிரவலர்கலி கோலித்திருநிதி தருபெரியசுவாமித்துரைதன
திசைபழகுபள் ளேசற்றமிழ்சொல வெளிதெனநினைத்தே
னரகரசிவ னேபொற்சரணிணை யுதவெனமலர் தூவித்துதிசெயு
மடியவர்வினை தீரக்கடைவிழி யருள்பொழிகருத்தார்
வரன்முறைவரு மூவர்க்கிடமென வளமுறுதிரி கூடத்திறையவன்
மலரடிதலை மீதிற்புனைகுவன் மலைவிலையெனக்கே. (2)

மேருப்புராதன வரைமேலரி தாடப்பதாகையை விருதாயணி
வீரப்பபூபதி யருள்பாலனை யிருபுகழ்விளைத்தே
பாருக்கெலாமொரு துரையாயருள் பூரித்தமால்பெரி யசுவாமியைப்
பாடிக்குலாவிய மகிழ்வாலுரை யழகுபள்ளிசைக்கே
தேருக்குளேவரு கதிர்பானுவி னீருக்குளேதெரிவதுபோலியல்
தேறிச்செல்வோர்கவி யுடனேயிது சிறிதொருவியப்பா
யாருக்குமோர்தமி ழெனவேயருள் பாலிக்கவேயுமை குழல்வாய்மொழி
யாளுக்குநாயடி மையெனுமினி லவள்குடியிருப்பே. (3)



மருமலி தளவத் தாமன் மன்னவன் பெரிய சாமி
தருமழைக் கரத்தான் கீர்த்தி தழைத்தெமைப் புரக்க வேண்டி
யிருநிலத் தெவருங் கேட்ப விசைந்தபள் ளேசல் சொல்லத்
திருமலைக் குமரன்செம்பொற் றிருவடி துணைக்கொண் டேனே.

## நூல் விருத்தம்.

துள்ளிய வாளை யேறித் தூங்குமாங் கனியை யுந்த
வள்ளியோர் வழங்கு பொன்போல் வருதலுங் கமலப் போது
தெள்ளிய தமிழோர் கைபோற் செழித்திடுங் கிளுவை நாட்டிற்
பள்ளிகள் தோன்று மந்தப் பண்பெலாஞ் சொல்லு வேனே. (5)

## சிந்து.

கும்பமுலை சாய்த்ததொல்லை வஞ்சியிடை யேற்றகவ்வை
கொஞ்சமல்ல வார்த்தைசொல்ல வாஞ்சையாமே
யம்பினெதிர் தாக்கும்வெய்ய கண்களுமு லூத்துகையி
லந்தமுறு காப்புமுள்ள பாங்குதானே
சொம்புமிறு மாப்புமய்யல் தந்துகுளி ராட்டமுல்லை
துன்றுநகை பார்த்துமள்ள ரேங்குவாரே
செம்பொன்விலை யேற்றமுள்ள வெண்டுகிலும் வீக்கிநல்ல
தென்கிளுவை மூத்தபள்ளி தோன்றினாளே. (6)

## விருத்தம்.

சொல்லு மழகுக் காரிணையாச் சொல்வோங் கிளுவை மூத்தபள்ளி
வெல்லும் விழிக்குக் கடைதுடிப்ப வேதா விதித்தா னேதாமோ
வல்லு முகிலும் பொருங்குழலிக் கையோ மனத்தி லிரங்காத
கல்லு மிரும்பு முண்டெனவோ காப்பும் வடமு மணிந்தாரே. (7)

## சிந்து.

மங்கைசரீர மெல்லா மஞ்சளின் வாடையல்லான்
மஞ்சளை விசுமெல்லாச் செவ்வியும்பாரீர்
கொங்கையு மேருவல்லோ கண்களும் வாளியல்லோ
கொண்டையு மேகமல்லாற் பல்லமென்பாரோ

தொங்கலு லாவுகல்லோ மந்திர கூறைகொல்லோ
தொந்தரை பூணுமுள்ளாய்ப் பள்ளர்கொஞ்சாரோ
செங்கையை வீசிமெல்லா ரம்புரை மூரனல்லாள்
செண்பக ராமநல்லூர்ப் பள்ளிவந்தாளே. (8)

விருத்தம்.

மெய்க்கடை சியர்தாங் கஞ்ச விரைமல ரதனைக் காலாற்
செய்க்கடை மிதிக்கத் தேன்பாய் செண்பக ராம நல்லூர்
நெய்க்கடைக் கூந்தற் பள்ளி நெருங்குபூண் முலைக்கோ பார்க்கின்
மைக்கடை விழிக்கோ மள்ளர் மனம்பறி கொடுக்கின்றாரே. (9)

சிந்து. பள்ளர் வரவு.

ஈர்க்குக்கம் பிச்சோமனை யேற்க வரிந்துகட்டி
யிருக்கிக்கச்சைக் குள்ளேவாங்கைக் குறுக்கிற் சேர்த்துமே
மூர்க்கத் துடனேபள்ளன் பார்க்கும் விழிசிவப்ப
முறுக்கிவிட்ட வீசையும்வண் டுறுக்குமாகவே
வேர்க்கும்வேர் வைதுளிக்கப் போர்க்களி றுகத்துள்ளி
வெண்ணீறு மழியவேபெய்த் தண்ணீர்வெறியாற்
றீர்க்கத் துடனேகுதித் தார்க்கவே யேப்பமிட்டுச்
செம்புலித் திருநாமக் குடும்பன்வந்தானே. (10)

வேறு சந்தம்.

குலதிலகன் பெரியசாமி மலரடிபோற் றுர்கள்செய்ய
கோலையுழக் கோலென்வேர்க் கோலியுழுவேன்
கலகநாடன் மேலெதிர்த்துக் கலகமிடு வோர்களிரு
காலறுகக் காலெனமுக் காலுந்தறிப்பேன்
னிலவரமா யென்னாண்டவர்க் குலகறிய வேயுழுது
நெற்கோட்டையுங் கட்டியொன்னார் கற்கோட்டையை
யிலகுமண் வெட்டியாலே பலபலவென் றேநொறுக்கி
யேரண்ட வுழுதேரண்ட மிடுவேனாண்டே. (11)

பள்ளி வரவு.

செம்மையாகத் தோன்றிமண்ணுந் தோன்றுதநாள் வாளுடனே
சிங்கமென வேயுதித்தோ ரெங்களையன்மார்
மும்முலைத்த டாதகையா மம்மையவ தாரஞ்செய்யு
முந்தவே குடியிருந்தோ மந்நாட்டிலே



யெம்மைவளர்க் குந்துரைகள் தம்மையேநம் பிப்பிழைப்போ
மேழேழு தலைமுறைக்கு மூழிவரைக்கும்
விம்முகடல் சூழ்புவியி னம்முடைய செம்புலிப்பேர்
மிக்கபள்ளன் மூத்தபள்ளி நானேஆண்டே. (12)

விருப்பத் துடனேபேசிச் செருப்புத் தேயநடந்து
வேணுமென்று கொண்டானென்னைக் காணுங்குடும்பன்
திருப்பித் திருப்பிச்சொன்னாற் பொருப்ப துடன்வளருஞ்
செம்புலிப்பேர் பெற்றபள்ள னம்புவதென்னை
மருப்புக்கட் டுங்கரடப் பொருப்புக் குதையனெங்கண்
மன்னவன் பெரியசாமி தென்னவன்போலே
யிருப்பதி ஞாலேயவன் றிருப்பத மேதுதிக்கு
மிந்தச்செண் பகநல்லூரி லிளையபள்ளி நானே. (13)

விருத்தம்.

மீனெலாம் பாயத் தோட்டு விரைகமழ் கமலத் தேறல்
கானெலாம் பாயுஞ் செல்வக் கல்லக நாடுங் கான்றோய்
வானெலா மந்தி பாயும் வளர்தடா தகைநன் னாடு
தானெலா மள்ளர்மாதர் தனித்தனி புகல்கின் றாரே. (14)

சிந்து. நாட்டுவளம்.

மண்ணரம்பைகள் விண்ணரம்பைக்கெதிர்
வட்டமிட்டால வட்டமசைக்குங்
கண்ணகன்றிட மேற்கண்ணிறைந்திடுங்
கஞ்சமெல்லலர்க் கஞ்சமொதுங்கும்
பண்ணைவாய்வைத்த பஞ்சரமேற்கிள்ளை
பண்ணைவாய்வைத்த பஞ்சரம்பாடும்
வெண்ணிலாப்பிறைக் கோடுசெங்கோட்டு
விடாதகைக்குந் தடாதகைநாடே. (15)

வண்டலைத்த வளைத்தடத் தேறை
வண்டலைத்த வளைக்குல மூழ்கும்
விண்ட லத்தகம் போய்த்தொடு மாதளை
விண்டலத்தகம் போன்மலர் தூவுந்

தண்ட ருக்கனி தானத்தி யோகந்
தண்டருக்கனி தானத்தைச் சாய்க்குஞ்
செண்ட டைத்தொழு மானவயு மாத்தொடச்
செல்ல கந்தொடுங் கல்லகநாடே. (16)

கோடை யாவது மேல்தலை மாருதங் கோப மாவது கார்காலச்செந்து
வோடைதோறுமொளித்திடுங்கள்வனுண்டேரிலேகள்வரென்பவரில்லை
யாடி மாசத்திற் சூறையுண் டாமறுத் தானி சூறை யறிந்தவ ரில்லை
மேடைமேன்மயில்கேதுவைக்கோதிவிடாதகைக்குந்தடாதகைநாடே

ஆவ லுந்திரி கூடத்தர் மேற்றிங்க ளைப்ப சியுண்ட டற்பசி யில்லை
தாவிற் சோலையும் வாவியு மாவன சஞ்ச லமுண்டு சஞ்சல மில்லை
யேவு மேழ்பரித் தேரவ னீங்கு மிரவல் லாம விரவென்ப தில்லை
தேவதாரமுங்காவுமொன்றாய்த்தொடுஞ்செல்லகந்தொடுகல்லகநாடே.

மானு மானு மடவார்க ளோதிக்கு மஞ்சு மஞ்சு மணித்தடந் தோறு
மீனுமீனும்வளையும்புரண்டிடும்வேலைவேலைகண்டேகுயில்கூவுங்
கானுங் கானுங் கமழும் பழக்குலை காவுங் காவுங் கலந்து நெருங்குந்
தேனுந் தேனுந் தெருத்தொறும் பாய்ந்திடுந் தென்னிருலைநல் லூரெங்களூரே.

கமல வாவி கமலத்தைக் காட்டுங் கரையெல்லாங் கொக்கரை தலை நீட்டுந்
தமர வண்டந் தமரத்தம் பாடும்பைஞ் சாறு டைந்துழுஞ் சாறுடைந் தோடுஞ்
சுமையெல்லாநெற் சுமையாய்த்துலங்குந் துறையெல் லாமுத்துறையுமிலங்கும்
நமது வேந்தன் பெரிய சுவாமி நரேந்த்ரான் செண்பக ராமநல்லூரே. (20)

### விருத்தம்.

ஊடிய பெடையென் றெண்ணி யொளிர்சுரி முகத்த சங்கைத்
தேடிய குருகு சேவல் சிறையினு லணைக்கும் வாவி
நீடிய பண்ணை சூழ நிறைந்தகல் லகநன் னாட்டிற்
கூடிய மள்ளர் மாதர் குயின்மொழி கேட்கின் றாரே. (21)

### குயிற்சிந்து.

கார்பூத்த கடனுடுத்த காசினிக்குள் வீரப்பன்
கண்மணியை வாழ்த்தியே கூவாய்குயிலே.
சீர்பூத்த புகழ்படைத்த பெரியசுவா மித்துரைக்குச்
செல்வமரு கனைவாழ்த்திக் கூவாய்குயிலே. (22)



கருஞ்சவன லிங்கருக்குக் காலகா லந்தோறுங்
கனபூசை நடக்கவே கூவாய்குயிலே.
தெரிஞ்சுசொலுங் குற்றாலத் திரிகூட பதிதனக்குத்
தினபூசை நடக்கவே கூவாய்குயிலே. (23)

திருமலையாண் டவர்தமக்குத் தினபூசை யொடுதேருந்
திருநாளு நடக்கவே கூவாய்குயிலே.
கருதுசொக்கர் சங்கரர் நெல்லையப்ப ருக்குமறைக்
கட்டளைகள் தழைக்கவே கூவாய்குயிலே. (24)

குற்றாலந் தனிலுள்ள அனதான சத்திரமுங்
குறையாமல் நடக்கவே கூவாய்குயிலே.
பொற்றாலத் தரசுரிமை போலவட கரைவேந்தன்
புகழ்தழையக் கிளைவாழக் கூவாய்குயிலே. (25)

எல்லாரும் புகழவரு மெல்லாரி பூபால
னின்பமரு கனைவாழ்த்திக் கூவாய்குயிலே.
சொல்லானன் னயம்பெருகு வெங்கிடாத் திரிமருகன்
துரைப்பெரிய சாமியென்று கூவாய்குயிலே. (26)

மன்னனெனு மீனாக்ஷி ராஜலட்சு மீகரனை
மாமனென்ற துரைவாழ்க கூவாய்குயிலே.
கன்னனெனு மெல்லாரி ராயனைமைத் துனனென்று
கருத்துவந்த துரைவாழ்க கூவாய்குயிலே. (27)

ஆணிப்பொன் மேருவெள்ளை யன்முத்து வீரணனுக்
கருமைத்துனை வனைவாழ்த்திக் கூவாய்குயிலே.
மாணிக்கவா சகஞ்சிவனு முத்துசொக்கு வீரணவேண்
மகிழ்துணைவன் வாழ்கவே கூவாய்குயிலே. (28)

மன்னு ராயணனைச் சங்கரனைக் காத்தப்பனை
மைத்துனனென் பவன்வாழ்க கூவாய்குயிலே.
சொன்னம்பொழி கொடைக்கரத்துக் கன்னன்பிச்சைப் பிள்ளைதரு
சுபுத்திரரை வாழ்த்தியே கூவாய்குயிலே. (29)

அசைந்தாடும் பெருமாளு மவனுடைய சந்ததியு
மனுதினமும் வாழ்கவே கூவாய்குயிலே.

யிசைந்தமற்றக் கருணிக்கர் துரைகள்சே ருவைகார
ரெல்லோரும் வாழ்கவே கூவாய்குயிலே. (30)

மண்டலிகன் சின்னணைஞ்சப் பெருமாளுக் கருமையுள்ள
மைத்துனனை வாழ்த்தியே கூவாய்குயிலே.
கொண்டல்வண்ணன் போல்வந்த பெரியசுவா மித்துரையைக்
கொண்டாடி வாழ்த்தியே கூவாய்குயிலே. (31)

தெய்வத்திரி கூடபதி திருவுளத்தாற் பெரியஸ்வாமி
சின்னணைஞ்சான் வாழ்கவே கூவாய்குயிலே.
இவருக்குங் கண்ணனைப்போ லனுகூலஞ் செய்யவந்த
வரிகரபுத் திரன்வாழ்க கூவாய்குயிலே. (32)

பொன்னம்பல பூபாலன் புத்திரனும் மைத்துனனும்
புகழ்தழைக்க வாழ்கவே கூவாய்குயிலே.
சின்னணைஞ்ச பெருமுபொன்னு பெரியசுவா மிக்கருணை
செய்யுமைத்து னன்வாழ்க கூவாய்குயிலே. (33)

தென்னவன் பூவுதன்னை மைத்துனனென் றேயுரைக்குஞ்
செகராசன் வாழ்கவே கூவாய்குயிலே.
யின்னிலக் குமாரமுத்தைப் பிள்ளைமுத்தை மருகனெனு
மெங்கோமான் வாழ்கவே கூவாய்குயிலே. (34)

திருமலைமுத் தென்றவனை லெட்சுமணப் பெருமாளைச்
சேயென்ற துரைவாழ்க கூவாய்குயிலே.
மருவுமுத்துக் கருப்பனையும் ராஜகோ பாலனையும்
மைந்தரென்ற துரைவாழ்க கூவாய்குயிலே. (35)

தனதன்வீ ரப்பனருள் பெரியசா மித்துரைக்குச்
சந்ததிப்பாக் கியந்தழைக்கக் கூவாய்குயிலே.
தினமும்வெள் ளாண்மையிடக் கல்லகநன் னாட்டினிற்
றிங்கண்மும் மாரிபெய்யக் கூவாய்குயிலே. (36)

செம்புலிச்சின் னணைஞ்சேந்த்ரன் வடகரைநா ராதிபதி
செங்கோன்மை தழைக்கவே கூவாய்குயிலே.
அம்புலிச்செஞ் சடையாளர் திரிகூட பதிபுரக்கு
மாதிக்கந் தழைக்கவே கூவாய்குயிலே. (37)



### விருத்தம்

குயின்மொழி விரும்பி நிற்குங் கொம்பனை ரோடு மள்ளர்
வெயின்மணி யிமைக்குங் கொம்மை விண்டோட வுயர்ந்த பார்வை
பெயின்மதில் வளைக்கு மூது ரிலங்குகல் லகநன் னாட்டின்
வாயின்மழை வேண்டித் தெய்வ வணக்கமும் புரிகின் றாரே. (38)

### தெய்வ வணக்கச்சிந்து.

பள்ளிகண் முழுகுங்கோடி—யம்மைகோயிற்
படியையுந் தரையையு மெழுகுங்கோடி
உள்ளுறச் செலனுங்கோடி—பொங்கலிட்டு
ஊரொக்கக் கும்பிட்டு நில்லுங்கோடி
சுத்தத்தவி லடித்திடுங்கோ—வந்தத்தவில்
தொடுத்தடித் தேபாட்டுப் படித்திடுங்கோ

சத்தங்குழ லூதிடுங்கோ—களியாண்டி
தனையழைத் தேவர வோதிடுங்கோ
வட்டத்தி லெல்லாரும்—அம்மைமுன்னே
மதுப்பானை பொங்கிவா ரதைப்பாரும்
இட்டமு மிதுவல்லவோ—மழை பெய்யுந்
தேவதை யாவர்க்கும் பொதுவல்லவோ
மந்திர மதுவல்லவோ—யாகத்தில்
வந்தவர் குடிப்பது மதுவல்லவோ
தந்தது நயமல்லவோ—மதுவினிற்
றருவது மானந்த மயமல்லவோ
உள்ளுக்குக் குடித்திடுங்கோ—சாயாம
லுறங்காமற் றியங்காம னடித்திடுங்கோ
தள்ளியே குதித்திடுங்கோ—நம்முடைய (39)
சாமியை மழைபெய்யத் துதித்திடுங்கோ.

### பேய்க்கோடை வேறு.

சேரியுள்ள மள்ளரெல்லாம் நல்ல செங்கிடாய் வெட்டித்தருவோம்
மாரியம்மை சாத்தாவே யின்று மழைதரு வீர்மழை தருவீரே
திரிகூடத்திறைவரேயும்மைத்திக்குநோக்கித் தெண்டனிட்டோம்
பெரிதாக வெள்ளம் வந்து குளங்கள் பெருகவாந் தருவீரே. (40)

தெரிஞ்சுநல்ல பூசையிட்டுப் பள்ளர் சேரநின்று கைதொழுவோங்
கருஞ்சவனத் தாண்டவரே மழைக் காருதவி செய்யுமய்யா
ஆதிகண்டன் சாத்தாவே யெங்க ளாரியங்கா வுள்ளவரே
சோதிகண்ட பழம்பொருளே மழை சொரியவருள் புரிவீரே. (41)

## விருத்தம்.

கள்ளலர் நெடிய தோட்டுக் கமலமென் மலர்மே லன்னப்
புள்ளடை இடப்ப வாவிப் புறமெலா நறவு பாயு
மள்ளல்வா யாமை அஞ்சு மகன்பணைக் கிழவை நாட்டில்
மள்ளரெல் லோருங் கூடி மழைக்குறி பார்க்கின்றாரே. (42)

## சிந்து.

அடவி யிரவு பகல் மடமடென் றிறையுதே
அத்தனையு மழைக்குறி மித்தமல்லவோ
வடதிசை நோக்கியாடு கிடைபெயர்ந் தோடியோடி
மறிபடு தேமழைக் குறியல்லவோ
இடவான் பெரியசாமி வடகரை நராதிபதி
செங்கோன்மை வலம்புரிச் சங்கோலம்போற்
கடலுமு ழங்கவானந் திடுதிடென் றதிருதே
காலமழை பெய்யுநல்ல காலம்பள்ளரே. (43)

## விருத்தம்.

மந்தரப் புயன்குற் றாலம் வளர்பிரா னருளி னாலே
யிந்திர போக மேற்கொண் டிருந்தருள் பெரிய சாமி
செந்திரு மார்பன் கைபோற் றிசையெல்லாம் வழங்க வேண்டி
யந்தரத் திருந்த மேக மடைமழைக் கொண்ட தன்றே. (44)

## சிந்து ஆற்று வரத்து.

வாரியாலங் கவர்தலாலொரு முறியேறு வெள்ளமாய்
வானத்துலவு கையினாலொரு சேனத்துலவு மரியுமாய்ப்
பாரினாலு காலுமூன்றிச் சோத்துதிக்கை காட்டலாற்
பயமுறச்செவி வீசலாலதி சயமலைப்பிடி மேவலால்



வேரிவனசக் கோயின்மாது சேருநயனப் பார்வையான்
வேந்தன்பெரிய சாமிராஜரா ஜேந்த்ரன்மகுட ராஜர்மேற்
போரிலேறு களிறுமாய்நின்ற நீருலாவு காரெலாம்
பொருப்பிலேறிப் பொழிந்துநாலு மருப்புவேழ மானதே.()

## விருத்தம்.

கார்கொண் டெழுந்த மழைத்தாரை ககனத் திருந்து பொழியவிழி
நீர்கொண் டெழுந்த பசுங்கரும்பு நின்றான் மொழித னன்றாமோ
தார்கொண் டெழுந்த புயன்பெரிய சாமி கிளுவை வளநாட்டி
லூர்கொண் டெழுந்து செலவலவா வுரித்தோர்குலவு பரித்தேரே.

## குறிஞ்சி சிந்து.

பரந்து டைத்திடு வாரி போலவம் பரந்து டைத்திடு வாரிநீர்
பாரங் குறைக்கக் கரைத்தி டித்தார பாரங் குறைக்க நிறைத்துப்போய்
மரங்க ளைக்கலைச் சாடி யும்பிர மாங்க ளைக்கலைச் சோடியும்
வாசத் தேனலைத் துதறி யும்வன வாசத் தேனலைச் சிதறியு
முரம்பு தைத்திடத் தேக்கி யுங்கய முரம்பு தைத்திடத் தாக்கியு
முருகக் கோட்டம் பாவி யுங்கமழ் முருகக் கோட்டம் விரவியுங்
காந்த வேங்கையை யுருட்டி யும்படு காந்தை வேங்கையைச் சுருட்டியுங்
கான வரையுங் கடந்து குறிஞ்சிக் கான வரையுங் கடந்ததே. ()

## விருத்தம்.

வாகை புனையக் கட்டாரி வாங்கும் பெரிய சாமியெங்கோ
னோகை புரியு மல்வரைவா யுள்ளா ரினையு முள்ளாரோ
கூகை பகையே யோதியுடன் கொண்டல் பகையே கண்ணாலத்
தோகை பகையே வேள்பகைக்கென் சொன்னார் பிரிந்த பின்னாரே.

## பாலை சிந்து.

கடந்த பிரமன் பதைக்கு மால்வரை கடந்தப் புறமண் பதைக்கவே
கையுந் தலையுந் தாழ்ந்த வேநடுக் கையுந் தலையும் வீழ்ந்தவே
விடம்ப துக்கைவா யரவு சேர்மறை விடம்ப துக்கைவாய்ப் பரப் [பெலா
மிதக்க வந்தழு மோட வேபெரு மிதக்க வந்தழு மாடவே
நடந்த பாதஞ் சாத்தி யாயெதிர் நடந்த பாத மெத்தியே
நல்கு ரவுறுங் காட்டை யுஞ்சில நல்கு ரவுறுங் கோட்டையு
மிடந் திருப்பையின் வேரெல்லாம்வல மிடந்தி ருப்பையி னீரெல்லா
மெட்டிப்பாலையும் பாலையும் முதித்தெட்டிப் பாலைவிட் டோடுமே.

விருத்தம்.

மாலை வனமே புனைந்தநெடு மாலாம் பெரிய சாமி வெற்பிற்
சோலை வனமே யில்லையெனச் சொலத்த வனமே பொறுத்தாளோ
பாலை வனமே கிடையாத பாதை வழியே யேதுசெய்தாள்
சேலை வனமே முந்தியின்மேற் றிருத்தாண் மிதிக்குங் கருத்தாளே.

முல்லை சிந்து.

ஓடு மானும் பயிலு மாதர்க ளோடு மானும் பயிலுமே
யொக்க விரட்டி மூரி மால்வரை யொக்க விரட்டி வாரியே
வாடு மிடப வருக்க முந்தழை யாடு மிடப விருக்கமு
மாய முல்லைக் கொடிக ளும்மலர் மாய முல்லைச் செடிகளுங்
கூடு மறியும் பட்டி யும்புனற் கூடு மருகி ரட்டியுங்
குத்திக் குத்தித் தள்ளி யேபண்ணைக் குத்திக் குத்திக் கள்ளியே
போடு மாங்கடுத் தலைக்கு மாங்குரம் போடுமாங் கடுத் தலைக்குமாம்
புடைக்கு மாமலைத் துள்ளு மாம்வரம் புடைக்கு மாமலை வெள்ளமே. (51)

விருத்தம்.

நாளுக் குறவர் மனைபுகுந்த நங்கை களப்ப் புளகமுலைத்
தோளுக் குறவாய் மணம்புணர்ந்த துணைவன் பெரிய சாமிவெற்பில்
வேளுக் குறவாய்த் தாய்ப்பகையை விளைப்பார் சூல்வா யடைக்கவவன்
வாளுக் குறவா னவர்வெளியில் வந்தாற் றலைவர் வந்தாரே. (52)

மருதம் சிந்து.

வெள்ளம் பரந்து நாடெ லாமொரு வெள்ளம் பரந்து மூடெலாம்
வெண்ணி லாவளைக் கூட்ட மாய்ப்பல வெண்ணி லாவளை யீட்டமாய்ப்
பள்ளங் கோடி பெருக வுஞ்சில பள்ளங் கோடி வருகவும்
பாம்ப ணைத்தேரி நிறைக்க வுஞ்சில பாம்ப ணைத்தேரி மறைக்கவு
முள்ள லங்களைத் தெளிக்கு ளேதிரை யள்ள லங்களை யொளிக்கவும்
ஆமை யோடங் கிட்ட வுகிலை யாமையோட்டங் காட்டவுந்
துள்ள ரும்புனற் கூனலைக் கயத் துள்ள ரும்புனற் பானலைத்
துதைந்த வரியை முடுக்கி யேமரு துதைந்த வரியைக் கடக்குமே.

விருத்தம்.

அன்பாற் றனக்கே திரிகூடத் தமலன் கருணை தரப்புவன
மின்பாற் றனிவெண் குடைநிழற்றும் வேந்தன் பெரிய சாமிவெற்பி
லென்பாற் றனமுங் குழவியுங்கண் டென்னும் விரகி யின்ன மெங்கை
தன்பாற் றனங்கொண் டளிக்கிலின்பந் தலைவர்க்கதுறு தனமாமே.()



நெய்தற் சிந்து.

கடுத்த ரித்திடு முடங்க லைமருங் கடுத்த ரித்திடு நுடங்கலை
கம்பு ளினத்தைத் துரத்த வேயுத கம்புளினத்தை நிரைத்திடும்
நடுக்கி டங்கருங் கூல மும்புன னடுக்கிடங்கருங் கூலமும்
நாகக் கானிற் புறவ மூந்தவழ் நாகக் கானற் சுறவமும்
மடுத்தி டர்ப்படத் துறி யும்நன்னீர் மடுத்தி டர்ப்பட வேறியும்
வாரத் துப்பளங் கரைய வுஞ்செறி வாரத் துப்பளம் பிரையவு
முடுத்தி டந்தரும் வெண்ம ணித்திரை யுடுத்தி டந்தரு மண்மக
ளுள்ளங் களிக்கும் படிக்கு வாரிதி யுள்ளங் களிக்கும்வெள்ளமே.

விருத்தம்.

பாரிற் றிரிகூ டத்தர்பதம் பரவும் பெரிய சாமியெங்கோன்
சீரிற் சிறந்த கடற்றுறைவாய்த் திரையே யினிநித் திரைபோகேன்
வாரிக் கரையே யெனைப்பிரிந்த வஞ்ச கரையே வரக்காணேன்
மூரிப் படவே கடுந்துயர முழுதும் படவே யிருந்தேனே. (56)

சிந்து.

தணிவில் லாத மலையில் வெள்ளஞ் சவுந்த ரேச னந்தநாள்
தன்னை யடைந்த வாறு காட்டித் தானு மவனைப் போலவே
துணிவி னாலு மெழுந்து மண்டருஞ் சுமைக்கும் வாரி யாமெனத்
தோயத் தலைகொண் டடிக்க வோடிச் சுற்றி வரப்பிட் டேந்தியே
பணில மெடுத்த மாய னெடுத்த படிவ மெடுத்த மச்சம்போற்
பாயு மலங்குச் சூடை கோடை பருவ ராற்கன்று பொந்திமீன்
மணவி யயிரை கெளிறு தேளி மசரி சூரவை குதிக்கவே
வைகை மாநதி பெருகி யேவருஞ் செய்கை யைப்பாரும் பள்ளீரே.

புண்ணி யநதி யாத லாலதன் புனலு மினிமை தருதலாற்
புகழும் பெயருங் கேட்ப தாலதைப் புசிக்க வேண்டின் ருசிப்பினன்
மண்ணில் விரிந்த கடலிற் பிறந்த மகரஞ் சுறவு வாளைமீன்
வாய்த்த குதிரை மச்சம் யானை மச்சம் பலவு மெதிர்கொள
வெண்ணி றத்தலை யாட்டு மாருத மெய்த்தி றங்கரி தாய்வரும்
வேலியுட்புகுந்தோட்டஞ்சேரும்வெளிக்குருத்துமுன் பாய்ந்திடுங்
கண்ணு றுந்தடத் தூறு நெருங்கக் கட்டு மிலையு மசைத்திடுங்
கரும்ப மாநதி பெருகி யேவரும் விருப்பம் பாரும் பள்ளீரே.

கப்பற் சிந்து.

திரிகூட பதிகாத்த சின்னணைஞ்சா னென்பதெல்லாம்
பெரியசாமி மருகனெனும் பெரியசாமி ராஜனையே.
வாரப்புலி சின்னணைஞ்சான் வடகரைக்கே துரையென்பது
வீரப்பன்சொல் பெரியசாமி வீரரண சூரனையே.
விரைகமழுந் தளவணியும் வீரப்பன்சொல் பெரியசாமித்
துரைகருப்ப நதிதனிலே தோணிவிட வேணுமென்றே.
தோணிவந்து சேருமுன்னே தோகைதனக் குடமெனது
தோணிவந்து சேருமுன்னே சொல்லில்வலந் துடிக்குதடா.
ஏறுபட வோடரிக்கண் ணேவுமன மேனினைவா
யேறுபட வோடவில்லை வேறுமன மில்லையடா.
ஏரேற்றக் கொடியேற்றி யிசைந்தபடந் தனைத்தீண்டித்
தேரேற்றம் பாராமற் சிந்தைபரி தவிக்குதடா.
மதுமலர்பூங் கொம்புவைத்தே வரும்போது பரிமளித்த
ததுகனியா யிருக்குமினி யனுபவிக்க வேணுமடா.
பாயுந் தலையணையும் பாவையுஞ்சேர் கப்பலெல்லாம்
பாயுந் தலையணையும் பாவையும்போற் காணுதடா.
இக்கொடியுந் தண்பாரு மேந்தியென்னைக் கரைசேர்த்தா
லிக்கொடியுந் தண்பாரு மேந்திழையுஞ் சேருமடா.
கன்னிக்கரை பொருநைத்துறை கருப்பநதிக் கரைகடத்திக்
கன்னிக்கரை பார்க்கவென்னைக் கப்பல்கரை சேர்த்ததடா. (59)

விருத்தம்.

மல்லணி திணிதோண் மள்ளர் வண்பக டெழுப்ப வேண்டிப்
புல்லடைக் கருப்பாற் றுக்கிப் புடைத்தலுந் தெரித்த முத்த
மல்லியங் கமலப் பூமே லணந்துயி லெழுப்பும் பண்ணைக்
கல்லக நாட்டுப் பண்ணைக் காரனுந் தோன்றினனே. (60)

சிந்து.

ஓரிபோ லேகுரலும் பேரிகைவைத் தடிக்கு
மொட்டகைபோ லுடம்பிலே மெட்டுவளைவுங்



காரினிலி ருந்துவிழுந் தாரைபோ லூற்றுக்கண்ணுங்
காகநிற முங்கிழட்டுக் கூகைமுகமும்
நீரிலலை கல்லுப்போலக் கூரிய பாசிப்பல்லும்
நீலவுரு மானுமொற்றைச் சேலையுமாகச்
சேரியுள்ள பள்ளர்தம்மைக் காரிய மாயழைக்கத்
தென்கிளுவைப் பண்ணைக்காரன் றோன்றினனே. (61)

வேறு சிந்து.

மொட்டைத்தலை யழகரே கும்பிடுறோஞ் சொத்தி
மொண்டிக்கா லழகரே கும்பிடுகிறோம்
பொட்டைக்கண் ணழகரே கும்பிடுகிறோம் மந்தி
போன்முகத் தழகரே கும்பிடுகிறோங்
கொட்டைப்பெட்டிக் குள்ளவனுங் கொட்டைத்தேங் காயும்வைத்துக்
கூதறைக்கா தழகரே கும்பிடுகிறோங்
தொட்டயோகன் சின்னணைஞ்ச ராஜராஜேந் திரன்புகழ்
சொல்லும் பண்ணைக் காரனாரே கும்பிடுகிறோம். (62)
பள்ளனெங்கே யென்றுமூத்த பள்ளியைக்கேட் பாரா முகம்
பார்த்துச்சிரித் துச்சிரித்து வார்த்தைசொல்வாராம்
மெள்ளத்தலை சாய்த்துப்பள்ள னுள்ளளப்பைக்கேட் டிளையாள்
வீட்டைப்பார்த்துக் கண்ணைக்காட்டிச் சேட்டைசெய்வாராம்
வள்ளமுலை தன்னைப்பார்த்து முள்ளிக்கையோ மார்பிலென்று
வாய்ச்சரசஞ் செய்துபெரு மூச்செறிவாராங்
துள்ளித்துள்ளிப் போய்ச்சடைச்சி கள்ளியவள் பள்ளன் மெத்தச்
சள்ளையென்பா ராங்கிளுவைப் பண்ணைக்காரனார். (63)

விருத்தம்.

பொற்படி புரந்த தெய்வப் புரந்தரன் பெரிய சாமி
சொற்படி பண்ணை பார்ப்போன் சொல்லவே மருத வேலி
வெற்படி யிட்ட கொங்கை வெண்ணகைக் கருங்கட் செவ்வா
யற்படி குழலார் கும்மி யடிப்பதற் கிசைகின் றாரே. (64)

கும்மிச் சிந்து.

வேதத்தின் மேலே குடியிருந் தமறை வேதியன் கூறுத மெய்ப்பொருளைப்
பாதத்தைப் போற்றும் பெரிய சுவாமியைப் பாடிக் கும்மி யடியுங்கோடி.

அஞ்சக் கரமுஞ் சிவனரு ளும்மவ ளுக்கிஞ சக்கர மாய்ப்புரந்த
வஞ்சக் கரவும் பகைதுரந் தானெங்கண் மன்னன் பெரியசுவாமியடி.

ஆடிக் குதித்தோடி வட்டமிட் டுப்பண்ணை யாண்டவர்முன்னேநாமெல்லோருங்
கூடிக் குரவை மிகமுழக் கிப்பெண்கள் கொண்டாடிக் கும்மி யடியுங்கோடி.

காலடி பார்த்துப் பதறுகி ருரதைக் கண்டா லடுக்கம் பிடிக்குமென்பார்
ஆலடிப் பாம்பை மறையுங்கோ டிபண்ணை யாண்டார்க்குப் பித்த சரீரமடி.

மண்ணை யளந்து புவிபுரந் தகடல் வண்ணன் பெரிய சுவாமிமகிழ்
பண்ணை நயினு ரிருந்தா ரேயவர் பார்க்கக் கும்மி யடியுங்கோடி.

வாழைக்கு மெலொரு தேன்கூடு கண்டால் வாயூறு வீர்பண்ணை யாண்டவரே
பேழைப் பள்ளருக் கல்லா மல்லுமக் கெங்கே கிடைக்கு நயினுரே.

பந்தடி பாரும் நயினு ரேயென்ற பள்ளியைக் கள்ளி யெனவறிந்து,
சந்தடி நீக்கிஞற் பார்க்கலா மென்கிருர் சமர்த்த ராம்பண்ணைக் காரரடி.

ஊரு நடுவே யுழவுழ வேபறந் தோடித் திரிகிருர் பண்ணைக்காரர்
ஏரு நமக்குக் கலப்பையும் பள்ளருக் கீவோ மென்றினிச் சொல்லுங்கோடி.

மேலக் குளத்தையும் பார்க்கிருர் கீழே மீன்துடிக் கின்றதை நோக்குகின்ருர்
காலுக்குட் டண்ணீ ரொதுக்கவல் லோபண்ணைக் காரர்திரிகிருர் பாருங்கோடி.

சித்தர் தனிலே நினைத்தது தெல்லாம்வந்து சித்திக்க வேபிர சித்திருங்
கத்தன் பெரிய சுவாமித் துரைக்கென்று கருதிக் கும்மி யடியுங்கோடி.

ஆரப் பணிதிரி கூட பதிதரு மாதிக்கம் பெற்ற பெரியஸ்வாமி
வீரப்பன் பாலன் புகழ்துதித் தேபெண்கள் வேடிக்கைக் கும்மி யடியுங்கோடி.

விருத்தம்.

காலெல்லாங் கடந்து சோலைக் காட்டின்மே னடந்து பாயுஞ்
சேலெல்லாம் புயன்மேற் ருவுஞ் செண்பக ராம நல்லூர்ப்
பாலெல்லா மறிந்து மூத்த பள்ளியும் பள்ளன் கொண்ட
பூலெல்லாம் பண்ணை யார்க்கு வகையுட னுரைசெய் வரளே. (66)

சிந்து.

அங்க லாய்த்தநான் பொங்கியிட் டாலு,
மருவ ருத்துத் தெருவி லெறிவா
ரிங்கே வந்தாலு மங்கே நினைவா
யிருப்ப தன்றி விருப்பமு மில்லை,



யுங்க ளுக்குத் தெரியுமோ குற்றாலத்
துள்ள தெய்வமென் னுள்ள மறியும்
பங்கங் கொள்ளவே கங்கணங் கட்டினன்
பள்ள னேஅம்ம கள்ளன்கா ணுண்டே. (67)

சேரி யிற்பள்ளர் பேரிலே குற்றமோ
சீரிட் டால்லோ வேரிட் டுழுவார்
மாரி காலத்திற் காரியக் காரன்
மடக்கிக் கொண்டால் நடக்குமோ வேலை
சூரி யனைப்பார்த் தோரிகூப் பிட்டாற்போற்
றெண்டை கட்டநான் சண்டையு மிட்டேன்
ஏரி காலனை யாரினிப் பார்ப்பாரோ
வென்னசெய் வீரோ சொன்னேன்கா ணுண்டே. (68)

விருத்தம்.

கூறிய மூத்த பள்ளி குறையெலாங் காதிற் கேட்ப
வேறிய கோபத் தாலு மெழுந்திடும் பண்ணைக்காரன்
சீறிய வார்த்தை யாலுஞ் செண்பக ராம நல்லூர்த்
தேறிய விளைய பள்ளி செய்தியாய்ச் சொல்லுவாளே. (69)

சிந்து.

காலனைக்கும் போகன்ன ரியமாய் நடந்துசெய்தி
கண்ணுரக் கண்டிருப்ப துண்டு
மாலரிக்கும் வெள்ளமீக் காணும் வரப்படுமோ
மறிவர்திரும் [illegible] தெரியும்
பாலடியி லன்பதெள்ள வி[illegible] ராத்திரியும்
பகலு [illegible] திரிவான்
காலமல்ல வுள்ளபடி சொன்னேன் [illegible] றொருத்தி
தவிக்கிறேன் [illegible] டே. (70)

அ[illegible] [illegible] [illegible] திருப்ப
தல்லாம [illegible]
[illegible] [illegible] [illegible]
[illegible] [illegible] யானுர்.

திண்ணையேறிப் படுத்திருந்த பள்ள—னிருவிழியுந்
தேவரீர் விழிகளுமென் கண்ணுக்
கிணையேது மில்லாமற் சிவந்தும்—பள்ளனைநா
னின்னம் வரக் காண்கிலே னாண்டே. (71)

வேறு.

மெல்லணையிற் படுத்துமஞ்சள் மேலணையும் பள்ளனுக்குக்
கல்லணையிற் படுத்திருக்கக் காரியமோ பள்ளி.
வீட்டுவாய்க் குளங்கரையி லுன்முகத்தைப் பார்ப்பதல்லாற்
காட்டுவாய்க் குளங்கரையுங் காண்பானோ பள்ளி.
உன்கலப்பை யல்லாம லுழுங்கலப்பை யறியாத
வன்கண்ணன் வெளியிலே வாரானோ பள்ளி. (72)

விருத்தம்.

ஏட்டிலே கமழுங் கஞ்சத் திளமுகை யவிழ்ப்பச் சாலி
மூட்டிலே தேன்பாய்ந் தோடி முழங்குகல் லகநா டென்னு
நாட்டிலே குளமுங் காலு நதியும்பார்த் தவன்போ லேயுள்
வீட்டிலே யிருந்து பள்ளன் வெளியிலே புறப்பட் டானே. (73)

சிந்து.

வாரும் வாரும் நயினா ரேபோன
வருஷங் கண்டதுக் கின்றல்லோ கண்டேன்
நீரு நானு மறியா தல்லவே
நேற்றெல் லாமொன்று சாற்றவுங் காணேன்,
சீரு மேருமுண் டாக்கிக் கொடுப்பார்
திரிகூ டாசலத் தாரென்று சொல்வீர்.
ஊரு நாடு மறிய நம்பண்ணையி
லுள்ள காரியம் விள்ளுவே னாண்டே. (74)

வைத்துக் கொண்ட சடைய னொருவன்முன்
வாங்கிக் கொண்ட வடமேருக் கூட
மொய்த்துக் கொண்ட விரும்பையுந் தட்டி
மூன்று துண்டாக்கி முன்னுதைக் கால்கொண்



டெய்த்துப் போகவ டித்துமு ரித்ததை
யேழை சொல்லக் கொடுமுடி யென்பா
ருய்த்துக் கொள்ளப் பயிர்செய்ய வேணு
முழவு சீரின்ன முண்டுகா ணாண்டே. (75)

பாரைக் கொம்பா லுழுத கறுப்பன்
படப்பை நாடிப் படுப்பதல் லாம
லேரைப் பூட்டி வடத்தொடு சேர்க்கி
லெழுந்தி ராமற் கிடப்பது முண்டே
யூரைச் சூழ வளைத்துத் திரியு
மூர்த்த லைபெற்ற துண்டொரு வெள்ளை
காரைக் காணின் மறைத்திடும் வெய்யிலைக்
கண்ட போதி லொளிக்குங்கா ணாண்டே. (76)

பங்க யக்காடுங் கன்னலுந் தேடிப்
பரந்து ராத்திரிக் கெல்லாந் திரியுங்
கங்க ணங்கட்டித் தேடினுங் காணாத
கள்ளப் போர்க்காளைக் குள்ளதைக் கேளுஞ்
சங்க ரனா லடியிலே பட்ட
சளமு மெத்தச் செருமலுக் காக
அங்க மேற்பட்ட சூடாற வில்லை
யடித்த காலின்னந் தாங்குங்கா ணாண்டே. (77)

தாங்கும் வெண்டலை யானோங்கற் கொம்பன்முற்
சந்து போன சுந்தர னாலே
யோங்கு முன்னவன் கட்டி வழக்குரைத்
தோடுங் கான்முறி யாதோ வென்று
னோங்கி யெய்த்த மருங்காலை யெண்ணி
யெருத்துக் காரன்கொண் டானவை சேர்
வாங்கு நாளில் நடமாட மாட்டாமல்
வாதக் கால்கொண்டு நிற்குங்கா ணாண்டே. (78)

சுத்த வீரர் களத்தினி லேவருஞ்
சூட்டுக் கோதும்பைக் கேட்டுக்கொண் டாரே
மெத்த வாருஞ் சிறகியைப் பண்ணைக்கு
வேண்டா மென்று விலக்குவ னாண்டே

வைத்துக் கட்டி யிருந்தசம் பாநெல்லை
வாரி நீரென்ப தாருஞ்சொல் லாரோ
கொத்த ளந்திட்டு மேல்வைத்த துண்டுக்குக்
கொண்ட தெல்லாங்கல் லுண்டைகா ணாண்டே. (79)

வருக ருஞ்சூரை போரிலே செட்டி
மறிதகக் கொண்டதி னாலும டிக்கும்
பருவந் தப்பியு மாவாய் நொறுங்கிப்
பறந்த செய்தி யறிந்திருப் பீரே
கருதி யதில்லை வாணன்ம் பாரங்
கவர்ந்த சென்னியைத் தேடினாற் காணப்
பிரம னாலு முடியாது பள்ளன்
பித்த னென்னசெய் வேன்காணு மாண்டே. (80)

சரச மல்ல மணல்வாரிக் கேராமன்
சண்டை யிட்டுக் கலக்கியுஞ் சேற்றில்
வரவ ழிச்சேது கட்டினைத் தான்கண்ட
மாத்தி ரம்வாளை பூத்துக் கிடக்கும்
விரகி னான்முந்து வெள்ளையென் பிரதை
வெள்ளந் தள்ளியு முள்ளே யமைக்கும்
பரவ ராலு லரித்தெடுப் பாரிந்தப்
பள்ள னென்னசெய் வான்காணு மாண்டே. (81)

விடியுமுன் னேவந் தீரே யெனக்கந்த
வித்தை நீர்கொடுத் தீர்பெரு மாடன்
நெடிய கால்கொண்டு நீட்டி யளந்தால்
நிலமெல் லாமோ ரடிக்குப்பற் றாது
மடிமை யல்லவே நெல்லும் விதையும்
ஐயனு மாடுங் கலப்பையுந் தந்தா
லடிமை சொன்னேன்குற் றால ருளினா
லான தெல்லாம் நடக்குங்கா ணாண்டே. (82)

விருத்தம்.

செங்கதி ராமென் றெண்ணித் திகழா தனத்தை நோக்கிப்
பங்கய மலரு மோடைப் பண்ணையும் விளைவை காட்டிற்
றங்கிய குடும்பன் வார்த்தை தனைதெனப் பண்ணைக் கார
னிங்கித மாகப் பேசி யிடையரை யழைக்கச் சொன்னான். (83)



சிந்து.

நீராட்டைப் பார்க்கவந்தீர் நேரமே வாருமிந்தப்
பாராட்டைக் கொண்டுநான் பகல்வருவே னாண்டே.
சடைவுமனத் தெண்ணமற் றனித்தாட்டுப் பட்டியிற்குட்
கிடைகிடக்கு மதுநாளைக் கேளுங்கா ணாண்டே. (84)

விருத்தம்.

மதம்புரி பள்ளன் சொன்ன வார்த்தையை மெய்யென் றெண்ணிக்
கதம்புரி யாமற் பண்ணைக் காரனும் வீட்டிற் போனான்
விதம்பெறப் பேசும் பள்ளன் மீண்டுபோ யிடையர் தம்மை
யிதம்பெற வழைத்தா னப்போ திடையனுந் தோன்றி னானே. (85)

சிந்து.

நீல மெய்யெலா நெய்யும் நாறவே
கோல வீசையுங் குஞ்சம் வீசவே
காலும் பாற்கட காலுந் தூக்கியே
யேல வேகிழட் டிடையன் றோன்றினான். (86)

வேறு சிந்து.

கம்பெடுத்த விடையன்முடி தும்பைவைத்த சடையக்கோன்
கண்டமருங் கிடையிலொரு துண்டமுண்டோ குடும்பா
வம்புடைய வில்லிக்கோன் வெம்புருவை யொளித்ததின்ன
மறைந்துதிரி வானவனை யறிந்தவரார் குடும்பா
பம்புதிரைக் கடலுடுத்த அம்புவியில் ரங்கக்கோன்
பணக்கிடையை நாமெழுப்பக் கணக்குண்டோ குடும்பா
செம்புலிச்சின் னணைஞ்சேந்த்ர னம்பொன்வளர் திருநாட்டுச்
செய்க்கெல்லா மாடுவைக்கத் தக்கவனுன் குடும்பா. (87)

விருத்தம்

பாட்டுக்கோ இலம்போன் மூத்த பள்ளியும் பண்ணை யாரே
நாட்டுக்கோ டலிப்பே யல்லா னமக்கென்ன பள்ளன் றன்னை
யாட்டுக்கோ போகச் சொன்னீ ரல்லவென் றிளைய பள்ளி
வீட்டுக்கோ போகச் சொன்னீர் விளம்புமென் றுரைசெய் தாளே.

### சிந்து.

ஆட்டையு மறியா னிவன்வயற் காட்டையு மறியான்—அவள்வினை
யாட்டுக்குத் தரிப்பா னினிவரும் பாட்டுக்குத் தரிப்பான்
மாட்டையுமறந்தான்பள்படும்பாட்டையுமறந்தான்—மெய்யொன்று
வாய்கொண்டுமொழியான் அவள்மயற்பேய்கொண்டுமொழியான்
வேட்டையின் மீனும்நெடுவயற் பேட்டைநெய் மீனும்—கொண்டவள்
வீட்டுக்கொப் படைப்பா னிலையென்று நாட்டுக்கொப் படைப்பான்
சாட்டையி லாடும் பம்பர மாட்டையி லாடுங்—காரியந்
தடித்திடு முன்னே மரத்தினி லடித்திடு மாண்டே. (89)

எத்தனைசால மதுசொல்ல மெத்தனைசால—முழவினு
மேரினுமடங்கா னிவனிந்த வூரினுமடங்கான்
புத்தியுமடித்தா னென்னையும் நித்தியமடித்தான்—வரவரப்
பொய்சொல்லப் படித்தா னவன்கொண்ட மையலப் படித்தான்
குத்தகைக்கடைக்கும்பாட்டநெல் வர்த்தகன்கடைக்குங்—கடனுக்குங்
கொண்டுபோய்க் குவித்தான் கணக்கினுங் கண்டுநீக்குவித்தான்
சித்திரக் களவு மம்பார முத்திரைக் களவுங்—காணலாஞ்
சீக்கிரம் பிடித்துக் குட்டைக்கு ளாக்குவீ ராண்டே. (90)

காணுமற் குடிக்குங் கள்ளுக்குஞ் சாணைக் குடிக்குங்—கொடுத்திடுங்
காளையு மிரண்டு மனமெந்த வேளையு மிரண்டு
வீணுதி வீணன் சாடிக்கு நாணுத வீணன்—இனமொரு
வெள்ளாடு மறுப்பான் புத்தியைத் தள்ளாடி மறுப்பான்
நாணுளைக் குறுக்கி யென்னையும் வாணுளைக் குறுக்கிப்—போட்டானே
ஞாயத்துக் கசையும் தாமில்லை லாயத்துக் கசையும்
பூணுன கட்டுங் கைத்தடிக் கோணுன கட்டு—மடியுந்தான்
புத்திக்கு மருந்தாய்க் காரியஞ் சித்திக்கு மாண்டே. (91)

இதுவல்லோ விருத்தி பள்ளிகள் பொதுவல்லோ விருத்தி—நானதை
யேதென வயலா மவளுக்குச் சீதன வயலாம்
நதியெல்லாமுழுதுங்கண்டநெற்பொதியெல்லாமுழுதுங்—குச்சுக்குள்
தகிலித்து வைத்தான் கேட்டே னென் றிகலித்து வைத்தான்



கண்ணைக்காட்டிக் கொங்கையுங் காட்டி—முன்னேநின்றாற்
கருத்துக்குளி ராதோபள்ளன் கான்மரம்வெட்டி
மண்ணைக்கிண்டிப் பிழைக்கிற பள்ளா—வுனக்கேனிந்த
வண்டத்தன மென்றுவெகு மானமுஞ்செய்து
பண்ணைக்குள்ள மாடும் விரையு—முள்ளதெல்லாம்
படிப்படியே சொல்லுமள்ளா பள்ளாவென்றானே. (106)

### விருத்தம்.

உரைத்திடும் பண்ணைக் கார னுன்னியே யுறவு பேசி
இரைத்திடப் புத்தி புத்தி யென்றுவாய் பொத்திப் பள்ளன்
வரைத்தடம் புயத்தைக் கையால் வளைத்திடக் கட்டி நின்று
நிரைத்திடு மாடு நெல்லு நிலவரஞ் சொல்லு வானே. (107)

### வேறு சிந்து.

புண்ணி யவான் பெரிய சுவாமிக்குப்
போத வேதிரி கூடத்தர் செல்வம்
நண்ணி யேயெந்த நாளும் வளரும்
நயினு ரேநமக் கில்லாத துண்டோ
மண்ணி லுள்ள இவலை கறுப்பு
மயிலை வெள்ளை கருமறை செம்மறை
யெண்ணி விட்டேன் பதினு யிரமா
டிருக்கு தின்ன மொருக்காலே ஆண்டே. (108)

### வேறு.

பலவை கையாம் விதைபதி னுயிரம்
பட்ட டையுண்டு கட்டினேன் சேரில்
[illegible] யிருக்கிற
நெற்க ணக்குக்குச் சொற்கணக் கில்லை
யலர்த லைப்புவி யாளும் பெரியசு
வாமி ராஜனிப் பூமியி னித்தஞ்
செலவ ளித்தாலு மெல்லாம் பணமுந்
தினந்தி னமும் விளையுங்கா ணுண்டே. (109)

வீர ராசன் பெரிய சுவாமி
    விருது கட்டிப் பொருதவந் நாளிற்
சூர ராக வெதிர்த்தவர் செங்கையிற்
    சோதி வாளைக் கொழுவா யடித்தேன்
பார யானை மருப்புப் பிடுங்கிப்
    பருத்த மேழி நுகமாச் சமைத்தேன்
தீர மாமவர் சிங்காடி நாணைத்
    திருத்தி யேவட மாக்கினே னுண்டே. (110)

விருத்தம்.

ஏருடன் விதையு மாடு மிருக்குமிப் பெருக்க மெல்லா
மாருடன் சொல்வேன் பண்ணை யாண்டவர்க் குரைத்தே னென்றான்
காருடன் பசானந் தானுங் கருத்துடன் பயிரு மேற்றச்
சீருட னாளை யிட்டுச் செய்புழப் போவென் றானே. (111)

சிந்து.

ராசரா சேந்திரன்சகு ராமன்பெ ரியசுவாமி
வாசமுல் லைப்புயத்தான் மகிழ்பண்ணை தன்னிற்
பூசமும் பஞ்சமியும் புதன்கிழமை யில்நாளைக்
காசலை யாயேரைக் கட்டடா குடும்பா. (112)

வேறு.

மாடன்சாத்தன்கறுப்பனிருளன்வக்கையனைஞ்சான்மொக்கையன்
கூட வரவேபள்ளன்பண்ணையான் குறிப்புச்சொன்னலக் கினத்திலே
காட னிடமு மாகச் சென்றவன் காட்டுக் காளையை விரட்டினான்
ஓட மாட்டாமற் காளைக் குப்பயந் துதறி விழுந்தான் பதறியே. (
கூறு மன்னுகத் தலையிற் பாசங் கோலி னால்விட் டானவன்
கூறு மன்னுகத் தலையிற் பாசங் கோலி னால்விட் டானிவன்
ஏறு தழுவி யவனு மருதத் திடறி வரம்பை மிதிக்கின்றான்
ஏறுதழுவி யிவனு மருதத் திடறி வரம்பை மிதிக்கின்றான்
வேறு புகல்வ தேது தரையைக் கீறி யுழுத விருவரில்
வேலை யாளுக் கதிப னொருவன் மேற்பட் டானவன் கீழ்ப்படச்
சீறு மாட்டுக் கோட்டி னுழுமுறு பாட்டைக் காட்டலாற்
செம்பு வித்திரு நாமப் பள்ளனுக் கம்பு வித்திரு நாமமே. (114)



விருத்தம்.

மூன்னுந் தலைகீ ழாய்வீழ்ந்தான் முறையிட் டமைத்து வைத்தானே
பின்னுந் தலைகீ ழாய்வீழ்ந்தான் பிறவிக் குணந்தான் போகாதோ
வென்னும் படிக்கு மூத்தபள்ளி யெழுந்து வரவே கண்டசெய்தி
பன்னும் படிக்கே யிளையபள்ளி பதறிப் பிறகே வந்தாளே. (115)

சிந்து

உணக்காலைக் கோதுபோற் பிழிந்தா—னுனைச்சோ
    றுணக்காலைப் பிடிக்கநீ செய்த
கணக்காறி னாலா றிலையே—யுனக்கொருவங்
    கணக்காரி யெனைப்பிரித்த வஞ்சக்
குணக்காளை நீதொடர்ந்த பாவ—முன்னையெந்தக்
    குணக்காளை யுந்தொடர்ந்து பாயும்
வணக்காது நிமிர்ந்தவுடற் பள்ளா—வென்வார்த்தை
    வணக்காது கேட்கிலெழுந் திரடா. (116)

மலையானை யெதிர்த்தா னாலும்—பிடிப்பதன்றி
    மலையானை விரட்டியொரு காளை
கலையாத காடுகலைத் திடுமாஞ்—சீறுமடங்
    கலையாத காடுநா ளிதுவோ
தொலையாவை யோவெனக்கு வருத்தம்—நீயுமிந்தத்
    தொலையாவை யோவிதென்ன மயக்கம்
நிலையாத காதல்பெற்ற குடும்பா—வெழுந்திருந்து
    நிலையாத காதல்கண் ணுறவே. (117)

ஏரடிச் சிந்து.

குஞ்சத்துரு வாய்க்காளை கள்ளன்—திருக்
    குஞ்சத்துரு வாய்ப்பாயப் பள்ளன்
கொஞ்சத்தனம் பாராமல் விழுந்தான்—இளையபள்ளி
    கொஞ்சத்தனம் பார்த்தல்லவோ வெழுந்தான். (118)
மாட்டுத்தரம் பேசியே குறித்தான்—பள்ளன்
    மாட்டுத்தரம் பேசியே பிரித்தான்

நாட்டுப்புர வாற்றெய்வந் தொழுதான்—பள்ளன்
நாட்டுப் புரவையெல்லா முழுதான். (119)
செய்யுத்தனை யுந்தொளி பண்ணி—நம்மைச்
செய்யத்தனை யுந்தொளி பண்ணி
துய்யநாற் றுச்சமைத்து வந்தான்—பண்ணை
துய்யநாற் றுச்சமைக்க வந்தான். (120)

### விருத்தம்.

கொழுநுதி யதனிற் சாய்ந்த குவளைமென் மலரை மள்ளர்
பழுதறு மாதர் தங்கள் பார்வையென் றெண்ணி யேங்கி
வழுவறு கிளைவைப் பள்ளன் மகிழ்பண்ணைக் காரன் கேட்ப
உழுதுதான் வந்த செய்தி யுரைத்திடத் தோன்றி னானே. ()

### சிந்து.

மாரி கருக்க வேரி பெருக்குமே—ஆற்றுப்பாய்ச்சல்
வடக ரைக்குளங் கடல்நிகர்த்திடுமே
பாரிற் செண்பக ராமநல் லூரு—மற்றுள்ள
பண்ணைக் குளமுந் தண்ணீர் நிறைந்ததே
ஊரிற் பள்ளரைச் சேரக் கூட்டியே—வயலெல்லா
முழுதுழவு தொளியு மொக்கச் சமைந்ததே
சீரி னாலும் நாற்றுப் பாவினேன்—பருவமாச்சு
செந்நெல்நாற்று நடவுத்தாரஞ் செய்யும்நயி னாரே. (122)

### விருத்தம்.

வந்தவன் சொல்ல வுள்ள மகிழ்ந்திடும் பண்ணைக் காரன்
தந்தருள் விடையை வாங்கித் தலைக்குமேற் கொண்ட பள்ளன்
கொந்தலர் தடத்தி லன்னங் குலவுகல் லகநன் னாட்டில்
நந்தலில் லாத நாற்று நடுகைக்குத் தோன்றி னானே. (123)

### சிந்து.

திட்ட மாக நாற்றைப் பிடுங்கித் திடரும் வரப்பு மேற்றியே
வட்ட வட்டமாக் குவித்த நாற்றை வாரி வாரிச் சிதறியே
கட்ட ளைப்படி நயினா ருத்தாரங் கைவ ரைதெரிந் திடமட்டுஞ்
சட்ட மாய்நின்று சேரிப் பள்ளிகள் சகல ரும்நட வாருமே. ()



### விருத்தம்.

மஞ்சடை கிடக்குஞ் சோலை மருவுகல் லகநன் னாட்டுச்
செஞ்சர மனைய கண்ணார் சேற்றுக்கால் நாற்றுக் காலில்
மிஞ்சவே மிதிப்ப வெங்கி விளங்குகாற் கஞ்சி மள்ளர்
கஞ்சமென் மலரைப் பற்றிக் கைகளாற் றுடைக்கின் றாரே. ()

### சிந்து.

நாந்த கந்தலை நடுக்க வேபகை வேந்த ரங்கமும் நடுக்கவே
நானொ டுஞ்சிலை வாங்க வேயவர் நானொ டுங்குடி வாங்கவே
போந்த விசைய வளத்தி னாலிறு மாந்து பொருத தளத்தினான்
புவன ராசன் பெரிய ஸ்வாமி யெவன மாரன் கிளைவைவாழ்
மாந்தர் தம்மனக் குழைவு போற்குழைந் தேய்ந்த நாற்றை நடச்செய்தே
மருதன் பள்ளியைக் குருவி யழகன் சருவிக் கையைத் தொடவலோ
காந்தள் பூத்தது நாடென் றானவ ளேந்தி யொடித்துப் போடென்றாள்
கையைத் தானல்லோ பிடிக்கி றானென்ன செய்யத் தானடி பள்ளீரே.

வெள்ளைக் கவிகையின் பாப்பி னானிழல் கொள்ளப் புவியை நிரப்பினான்
விசயன் பெரிய சாமி ராசனுக் கிசையும் பண்ணையில் நடச்செய்தே
பிள்ளைப் பிறைநுதல் வீரி யும்மொரு தொள்ளைக்கா துப்பயல் மாரியும்
பேசிப் பேசிக் குலவு றார்சற்றே கூசிக் கூசி யுலவுறார்
கள்ளைக் குடித்தொரு தியக்க மாயந்தப் பள்ளச் சிறுக்கி மயக்கமாய்க்
கண்ணைக் கண்ணைச் சுற்றி விழிக்கி றாளிவ னெண்ணிக்கை யில்லாமற்
[பழிக்கிறான்

வள்ளைக்கு ளோடுது மீனென் றானதை மெள்ளத் தடவுமச் சானென்றாள்
மத்தியி லேயொரு சித்திரமாய்க்கண்ணைப்பொத்துகிறான்பாரும்பள்ளீரே.

மருட்டுக் கண்மட வாருக் கும்மனத் திருட்டுள் ளமரு வாருக்கு
மைய லையுளத் திடந்தந் தோன்மலர்த் தையு லைமணத் திடவந்தோன்
தெருட்டுக் கினிக்குற் றாலத் தான்திரு நாட்டா ருமனு கூலத்தான்
நிரவி யப்பதி பெரியஸ் வாமியைப் பரவிப் பண்ணை நடச்செய்தே
குருட்டுப் பிச்சனைத் தாடியைப் பிச்சு விரட்டு வாரில்லை மாடியைக்
கூந்தல் சாய்த்து லாத்த வேயெடுத் தேந்து மார்பைப் பார்த்தல்லோ
இருட்டுப் பாயுதும் யோடுவென் றானதி விரட்டைத் தாமரைப் பூவென்றான்
எங்கேயென் றானவ ளிங்கேயென் றேயவள் கொங்கையைத் தாங்கிறான்
[பள்ளீரே. (125)

விள்ளவ ருந்திரி கூடத் தான்மகிழ் வுள்ளமி குந்தருள் கூடத்தான்
விசையஞ் செலுத்தும் பெரிய சாமியைத் திசையி லரசர் வருடிய
தள்ளரும் பங்கயத் தாளை யேதொழு மள்ளர்கள் தங்குலத் தாளையே
தரம்பி ரித்தெண்ணி விடச்செய் தேயவர் பாம்பு கட்டியு நடச்செய்தே
தெள்ளவ ரும்புனற் றெளியி லேதெரி வள்ள நிகர்தன வெளியிலே
தேங்கா யென்றவன் காட்டி னனவன் பாங்காய் நின்றுரை ...டினன்
அள்ளல்கலங்கியெங் கேயென்றுண்மார்பினுள்ள க...லாதென்னங்காயென்று
னரசன் பள்ளியு மருத னுஞ்செய்யும் சரசம் பாரும் பள்ளீரே. (129)

வேலைப் புவிப்புயத் திருத்தி னேன்றமிழ் நூலைத் திருக்கறத் திருத்தினேன்,
விசைய மாதுக் கிசையு மார்பன் விருது ராச னிருபர்கோன்
மாலைப் பொருநன் னயத்தி னன்முல்லை மாலைக் கழகுள புயத்தினன்
வரிசைப் பெரிய சாமி பண்ணையின் வளத்துக் கிசைந்த குளத்திலே
மூலைக் கரையடி நிலத்தி லேயுழுஞ் சாலைக் கலக்கிய தலத்திலே
முத்தி நடச்செய்தே சித்திரனுங் கூடப் பொத்திப் பிடிப்பது போலவே
காலைக்கா லைப்பையக் கிள்ளு றனவள் வேலைப்ப ராக்கிலே தள்ளுறாள்
கையைத் தொடப்போனன் வையத்த லைப்பட்டாள் பையச் சிரிக்கிறன்
பள்ளீரே. (130,

துடிப டைத்தவர் முடிய றுத்தவர் கொடிம திற்களு மிடிபடத்
தூளி பரக்க வாளி தொடுத்த சோனை யிறைத்த சேனையான்
பிடிந டைத்துவள் கொடியி டைச்சிறு பிணைவி ழிச்சியர் கணைமதன்,
பெரிய சாமி மருக ராச பெரிய சாமி யருளினற்
குடித ழைத்திடு குரவை யிட்டெழு கடல்மு ழக்கிடு கடைசியர்
குழையு நாற்றைப் பழைய சேற்றி லளவில் லாம ணடச்செய்தே
செடிம றைப்பினில் நொடிநொ டித்திடு நெடிய வக்கையன் கெடியினஞ்
சிறுக்கி யுருக்கிக் குறுக்கே மறித்துத் தருக்கி றாள்பாரும் பள்ளீரே. ()

கோங்கி ளந்தனந் தாங்கி நடக்குங் கொடியி டைமட வியரெல்லாங்
கொடுத்த மாலை யுந் தொடுத்த மாலையுங் கொண்டு வாங்கக் கண்டமால்
வாங்கி யதிரை யோங்கி யகலை வனிதை திலகமனையமால் [வாய்த்
மன்னன் பெரிய ஸ்வாமித் துரைக்குச் சொன்னம் விளையும் பண்ணை
தாங்கி யபுனற் றேங்கி யொதுங்குந் தலைய ணைவாய்க்கால் வெளியிலே
தண்ணீர் குடித்த விரைச லாய்த்தெற்குக் கண்ணுற் றடுக்க வரச்செய்தே
தூங்கன் மகளை மூங்கி லடியிற் றுச்ச ணஞ்செய்யப் பிச்சன்போய்த்
தொடுக்கி றன்கிட்ட அடுக்கி றனவள் முடுக்கி றாள்பாரும் பள்ளீரே. ()



கவனப் பரியு மெவனக் களிறும் புவனத் தரசர் திறைதரக்
கனமு றுந்திரி கூடத் தார்தரு கனக தண்டிகை யேறினே
னுவரிப் புவியி லெவருக் குமன துகந்த பெரிய சாமியை
யுளத்தி லிருத்திப் பாதம் பரவிக் குளத்துப் புரவில் நடச்செய்தே
சிவனுக் கும்பெரி யவனுக் குமென்ன செருக்க டிக்கிட்ட நெருக்கிறன்
தெந்த னம்பண்ணிச் சந்தனமென்று சேற்றை வாரிப் பூசுறு
னிவனுக் கவளு மூப்பல் லோபயல் கவனிப் பதுவுங் கோப்பல்லோ,
விந்தப் பள்ளிக் கந்தப் பயலுஞ் சொத்தக் காரன் பள்ளீரே. (133)

## விருத்தம்.

அரும்பிள முல்லை பூத்த வணிநகைக் குமுதச் செவ்வாய்க்
கரும்பினு மினிய செஞ்சொற் கன்னியர் தொடருந் தோட்டுச்
சுரும்பிமிர் முல்லை மார்பன் துரைச்சிங்கம் பெரிய சாமி
விரும்பிய பண்ணைச் செந்நெல் விளைந்தது சொல்லுவேனே. ()

## சிந்து.

பாரப்ப னுவல்கொண்ட வீரப்ப னுக்கருமைப்
பாலன், பெரியசாமிப் பண்ணையெல்லாஞ்
சேரப் பதித்த நாற்று நடவு தேறியவன்
செல்வம் போல் மிக வளர்ந்தோங்கி
வாரப் பொலிகொடுப்ப தொன்று பத்துநூறாய்,
வளர்வு தெனவளர்ந்து தூருங்கட்டி
யீரப் புனலினின்று கருப்பங் காடுபோல,
விருண்டு குழைந்தரையுந் திரண்டதுவே. (135)

பச்சைப் பாம்புசினை கொண்ட தெனவேபொதி
பருத்து வீங்கிக்கதிர் வீக்கியபி
னிச்சைப் படநிமிர்ந்து பாலுங் கோதியரி
யேந்தித் தலைகவிழ்ந்த வாறுங்கண்டு
கொக்கைக் களமரரி வாளிட் டறுத்ததனைக்
கொண்டு வந்துகூடு குவித்தேற்றிக்
கூச்சைக் களிறணைய புகடிட் டடித்துவைக்கோல்,
களைந்து தூற்றிப்பொலி யளந்தனரே. (136)

## வேறு.

அரிக டாவிநம் பிணையற் கடுக்கை யானுஞ் சொல்வகை காணவே
தெரிவைக் கோலங் கட்டி யோர்புறஞ்சேர்த்ததாலுந் தொடுகையாற்
பாவ லாருங் களத்தி னலம் பாரங் காட்ட லாலுமே
பெரிய சிவனைப் போலிருந்தது பெரிய பண்ணைவெள்ளாண்மையே.

## விருத்தம்.

வடவரை யனைய செல்வ வடகரை புரக்குங் கோமான்
கடகரி யழைக்க வந்த கருணைமால் பெரிய சாமித்
தடவரைப் புயத்தான் வாழ்வு தழைத்திடும் பண்ணை தன்னிற்
புடவியோர் மகிழப் பள்ளன் பொலியளந் ததுசொல் வேனே.

## சிந்து.

அத்தர்திருக் குற்றாலத் தறைக்கட்டளை தனக்கு
முத்திருளன் வசமாக முத்து வெள்ளையளந்தேன்.
அனதான சத்ரத்துக்கோ ராறுயிரங் கோட்டை
தனதாக ஆனைக்கொம்பன் சம்பாநெல் லளந்தேன்,
திருமாமலை வடிவேலர் தினக்கட்டளைப் படிக்கு
ஒருமேனியா நெற்கோட்டை யோராயிர மளந்தேன்,
புலவோர்படி பல்வாச்சியம் புகல்வோர்கள் படிதனக்கும்
பலவகையா நெற்கோட்டையும் பதினாயிரமளந்தேன்.
மணியம் புன்னை வனபூபதி வார்த்தைப்படி தப்பாமற்
றணியாமல் மரக்காலைக்கை தாங்கித்தானே யளந்தேன்,
நாட்டுக்கெல்லாஞ் சம்பிரதி நடத்தும்புன்னை வனம்பிள்ளை
சீட்டுப்படி ராணுவுக்குச் சிறிதுநெல்லை யளந்தேன்,
அருணசலம் பிள்ளைகணக் கட்டவனைப் படிக்கு
மருளாமல் நெல்லெல்லாம் வகைவகையா யளந்தேன்
ராசுசெட்டி சொற்படிக்கு யாபாரிகள் பொன்விலைக்கும்
பேசியநெற் சிறிதுகோட்டை பிரித்துத்தானே யளந்தேன்
கூற்றருள்சின் னாண்டித்தேவ ருள்ளவகை தொகையறிவார்.
முற்றநெல்லைச் சேருக்கட்டி வைத்தேன்புன்னை யாண்டே. ()



## விருத்தம்.

புனிதமாய் விளைந்த நெல்லைப் பொலியளந் திட்ட செய்தி
கனிவுடன் பள்ளன் சொன்ன கணக்கெல்லாங் காதி லேறு
வினிதெனப் பண்ணைக் கார னிருந்தன னிப்பாற் சிந்தை
முனிவுடன் கிளைவைப் பள்ளி முறையிட வருகின் றாளே. (140)

## சிந்து.

ஆறுதலைப் பண்ணைக்கார னடுக்கேளாணே—மொண்டிச்
சொத்திக்கைப் பண்ணைக்கார னடுக்கேளாணே
யேறுகாதுப் பண்ணைக்கார னடுக்கேளாணே—குணம்
ஏதுங்கெட்ட பண்ணைக்கார னடுக்கேளாணே
தாறுமாறுக் காரப்பள்ளன் ஏறுமாறு செய்தவகை
சாதியாரெல் லாருங்கேளுஞ் சாக்கி வைக்கிறேன்
பேறுகூறெல் லாமிளையாள் கையிற்கொடுத்தான்—வெறும்
பெட்டியையென் கையிற்றந்து விட்டான் பள்ளீரே. ()

சாதிக்கில்லாக் கட்டுப்பண்ணி யூநக்குட்டி ரிந்துமுற்றுஞ்
சாதிக்கிற செய்தியல்லோ சாட்சிவைக்கிறே
னாதிக்கஞ்செ னுத்துவாயே பாதிக்குப்பெண் டிருந்துதா
யாதிக்குமு ழுதுஞ்சொந்த மானவள் பள்ளி. (142)

குட்டைக்குட் காலிரண்டு மிட்டுக்கொள்ளப் பள்ளனைத்தான்
குட்டைக்கெடுத் தாயேபொல்லாக் குட்டைப்பள்ளத்தி
யொட்டைப்போட்டுச் சிட்டுப்போலப்பள்ளனைக்கை வசமாக்கி
யொட்டைக்குளொட் டுப்பகையுண் டாக்குவாயடி. (143)

ஆழமூக்குச் சுங்காட்டுரு யிழமுங் கொங்குமலை
யாளமுங் கண்டவள்நீ யல்லவோபள்ளி
யேழையுங்கண் டாய்பலமில் லாததுங்கண் டாய்புவியி
லேழையுங்கண்ட சிமாட்டி யேசாயோபள்ளி. (144)

வள்ளமான மும்முலைத் தடாதகைகாட் டுள்ளபள்ளி
மற்றுனக்கு நாலுதனம் வந்ததென்னடி
யுள்ளபடி நாலுதன மெனக்காகை யாலேபள்ள
னுள்ளநக மூன்றுதன முனக்காச்சுதடி. (145)

துங்கமலை வளமெல்லா மெங்கள்நாட்டுக் கேயல்லாமற்
சொல்லுமுங்க ணாட்டுக்குண்டோ சொல்லடிபள்ளி
தங்கமலை தவம்புரிந்த தெங்கணாட்டி லேயிருந்த
தன்மையறி யாமலென்ன சாற்றுறாய்பள்ளி. (146)

இப்புவிக்குள் ளேகருப்ப மாநதியென் றிட்டபெய
ரெங்களாற்றுக் குங்களாற்றுக் கில்லையேபள்ளி
யப்புத்தனை வெல்லக்கட்டி விட்டவேடெ திர்ந்தவாறென்
ருரைத்தியார் நீநினைத்துப் பாரடிபள்ளி. (147)

சொல்லியத டாதகைநாட் டுள்ளதிறற் கொங்கையைப்பார்
தொட்டாலுந் தடாதகைகொண் டுற்றுமேபள்ளி
கல்லகநாட் டுள்ளபள்ளி யானதி னாலேமனமுங்
கல்லாகக் கடிந்துமொழி சொல்லுறாய்பள்ளி. (148)

முந்தமுந்த வுங்களூருங் கிளுவையென் பதினாலே
முள்ளுப்போலே குத்தவார்த்தை மொழிவாயடி
சந்தனரிப் பள்ளிநீதான் செண்பகநல் லூரென்றல்லோ
தண்ணளிவா ரமல்வார்த்தை சாற்றுறாயடி. (149)

பேயேபோடி யுங்கள்சீமை கீழ்ச்சீமையா மெங்கள்சீமை
பேரானமேற் சீமையென்று பேசுவாயடி
யாயிரமுழக் கம்பத்தின்மே லேறியாடி னாலுங்கீழே
யல்லோதி யாகமென்ப தறியாயோபோடி. (150)

ஆமடி நமக்குப்பள்ள னந்தச்சீமை யாகையினா
லப்படித்தா னெண்ணவேணு மல்லவோபள்ளி
மாமயிலே யிந்தச்செய்தி தானிருந்தி ருந்துமென்னை
வார்த்தையறி யாமற்சொல்ல வந்ததென்னடி. (151)

என்னசொன்னா லென்னசிறு பிள்ளைசொன்னவார்த்தைதன்னை
யெண்ணலாமோ யினிமேனீ சொன்னதுகேட்பேன்
மன்னவன் பெரியசாமி ராயனையுந் திரிகூட
மால்வரையெம் மானையுந்தான் வாழ்த்துவோமடி. (152)



வார்முள்ள திரிகூடத் தத்தருக்குப் பத்திசெய்யு
மன்னவர்நம் மன்னவன்போற் பின்னையாரடி
சேரமான் பெருமானுடன் வரகுண பாண்டியன்முன்
செனமித்தா ரிவனிப்போது செனமித்தானடி. (153)

செம்பொனம்ப லந்தனிலே வெம்புலிக்கா யாடினவர்
சித்ரசபை தன்னின்டஞ் செய்ததென்னடி
அம்பொன்வளர் வடகரைச் செம்புலியாம் நம்முடைய
ஆண்டவனை யாளவேண்டி யாடினாரடி. (154)

குற்றாலம் புறம்பென்று சிதம்பரந் திருக்காப்பிட்டாற்
குற்றாலக் கூத்தற்குமறு கோவிலெங்கடி
கற்றோருக் குதவிசெய்யும் பொற்றுருப் பெரியசாமி
கருத்துக்குள் ளேகுடியா யிருப்பாரடி. (155)

கருத்துக்குள் ளேகுடியா யிருப்பாரைக் குறும்பலாக்
காட்டுக்கு ளிருப்பாரென்ற காட்சியென்னடி
குருக்களுடன் கோளாறு யுரைக்கின்றாய் துரைமன்முன்
குறும்பலா மனமென்று குறித்தாரடி. (156)

சிலம்பு கங்கையவர் திரிகூடந் தன்னில்வைத்தார்
சென்னிக்குக் கொடுப்பாரென்ற செய்தி யென்னடி
தவமிகுநம் முடையதுரை சடைகண்ட சென்னி
தானென்றல்லோ நீரோடை தந்ததுபள்ளி. (157)

செஞ்சவே பதஞ்சலிக்காத் தில்லைவனந் தன்னினின்றார்
செண்பகா டவியில்வந்த செய்தியென்னடி
வஞ்சமில்லா ரம்பற்கோயில் வல்லஞ்செய்த பதஞ்சலியார்
மால்பெரிய சாமியென்றே வந்தாரமடி. (158)

அருவிற்க னகவர் புள்ளவ ருமிக்கவர்
பூமின்ற காரணந்தா னேதடிபள்ளி
யருவிக்க ணங்கோட முன்னின்று பெரியசாமி
யாண்டவனை யாளுஞ்செய்தி யறியாயோஅடி. (159)

அப்படித்திரி கூடபதி யனுக்கிர கஞ்செய்து
வாழ்வுதர வேயிருந்த ஆதிக்கஞ்செய்தே
யிப்படிப் பெரியசாமி வாழ்ந்திருக்க நாமவரை
யென்னேரமுந் துதிக்க வாழி யென்றும் வாழியே.(160)

விருத்தம்.

பரந்திடு மருவிப் பொன்னும் பருமணிக் குவையுஞ் சாய்த்து
நிரந்திடுந் திரிகூ டத்து நிமலனார் கமலப் பாதம்
வரந்தரப் பெரிய சாமி மைந்தர்பெற் றினிது வாழப்
புரந்திடும் பண்ணை வாழப் புவியெல்லாம் வாழி தானே. (161)

கடிகைமுத்துப்புலவரியற்றிய
பட்பிரபந்தம் முற்றிற்று.

---



சிவமயம்.

# பருவப்பதச் சிறப்புப்பாயிரம்.

—(*)—

வருதொளா யிரத்தொருபத் தானந்த வருடமதின்
மகர மாதந்
தருதிங்கட் பூரணையிற் றமனியக்குன் றனையபுயச்
சார்வ பூமன்
மருமுல்லைத் தொடைப்பெரிய சாமிக்கே யெழுபருவ
மாலை யீந்தான்
கருமுகில்போ லமுதமொழிக் கவிதைபொழி கவிக்கந்த
சாமி தானே.

உ

வடகரைத் துரையவர்கள் பேரில்

கந்தசாமிப் புலவரியற்றிய

# பருவப்பதம்.

## காப்பு.

மன்னவர்க்கு மன்னன்வட வரைத்துவசந் தீட்டிவட
கரையை யாளுந்
தென்னவனுஞ் சின்னணைஞ்ச ராஜசெய செம்புலியாந்
திறலோன் மீதே
கன்னியரா மெழுபருவக் கவிமணமா லிகைசூட்டக்
கடலின் பாங்கர்
மன்னியிரு மாதர்நடு வொளிர்வடிவே லவன்றிருத்தாண்
மனத்துள் வைப்பாம்.

## பருவம் ஏழும், வயதும்.

### வெண்பா.

வன்னமுறும் பேதை பெதும்பைமங்கை யேமடந்தை
மன்னரிவை யேதெரிவை பேரிளம்பெண் — தன்வயது
முந்தேழ்பன் னொன்றுபதின் மூன்றுபத்தொன் பானிருபத்
தைந்தெண்ணான் கையெட்டு மாம்.

## க. பேதைப்பருவம்.

### பல்லவி.

இராகம் பந்து வராளி — தாளம் ஏகம்.

பேதைப்பருவந்தானையா — இவளின்னுஞ்சின்னப்
பேதைப்பருவந்தானையா.

### அநுபல்லவி.

தாதைபரவுகுரு நாதர்கருணைபெறு — சாமீ
இருநைவயில்வரு பெரியசு வாமீ — இவள்



மனத்தி லேயொரு சூதோ கபடோ
வாதோ பிறகா காதோ என்னுடனே
ஏதோ சொல்லுகிறீர் (பேதை)

### சரணங்கள்.

படித்தி டாதவர் சொற்போ லேகடை
துடித்தி டாதக யற்பார் வைகள்நீர்
பிடித்த வாளென வெட்டுறு கூர்மை
பிறக்க வில்லையையா — சிறு
தடிக்கு ளேயொரு சிற்று டையையணை
யுடுத்தி னலும விழ்த்தே யொருதலை
மடித்து மார்பை மறைத்தா டுவது
மறக்க வில்லையையா — புரிசிற்றில்
துறக்க வில்லையையா — சிறுமுத்ரி
திறக்க வில்லையையா — இவள்நெஞ்சிற்
றடித்த சூது புறமு மகமுமிலை — தாளம்
துணை யாய்வரு கிறதடை யாளம்
பிறகல வோதெரியும்
குடித்த பாலின மணக்கு தேகவுள்
நெறித்து ஈன்முத் தாடிறு போதிவள் (பேதை)

இணங்கி லாருறு தாழ்வைப் போலுமே
வணங்கி னோர்பெறு வாழ்வைப் போலிவள்
இளம் புன்முறுவல் அரும்பு விழுந்து
எழுந்து முளைக்குதையா — சிறு
புணங்கை யுரடவ லோசித் தாதிகள்
மயங்கு வாரென வேசிற் றாரினில்
அணங்க ளூர்கட் டியவரை மூடி
அழுந்த விளைக்குதையா — மணிவண்டல்
அளைந்துவி ளைக்குதையா — அதில்சோர்ந்து
குழைந்து இளைக்குதையா — இன்பவனியில்
முனங்கொள் மார்பில வரிந்தம தாவரியின்
வுச்சரத்தி லிருந்தகனி முலைய டைந்துதந்த னெடுவிதோயாடி

கணங்கள் தமிலொரு குழந்தை யெனமெய்
கனிந்து துணிந்து தொடர்ந்து முன்வருவாள். (பேதை)

அம்பிகை கணவனை வானைத் தடவுகு
றும்பல வினில்வள ராதிப் பரமனை
நம்பிய கிருவையில் வீரப் பனுதவு
நயகுண விருநிதியே—உயர்
செம்பிய னெனவுல காளப் பெறுசின
ணஞ்சபெ ருமாள்ப்ரிய மாகத் தருமொரு
செம்புலி பெரியசு வாமிக் குமருக
செயம்வளர் மனுபதியே—அரசர்பர
வியதிரி கூடபதியே—குதனருள்பெரு
கியகன செல்வநிதியே—நவமணி திகழ்
பைம்பொன்ம குடபதி பெரியசு வாமிமகி —பதியே அசு
பதிகெஜ பதிநர பதியே—இவள் குழையினழகு
குதம்பைசு மந்துச தங்கைபு னைந்துப
தங்கள்சி வுந்து தளர்ந்த நடையினள். (பேதை)

## உ. பெதும்பைப் பருவம்.

### பல்லவி.

இராகம்—மத்தியமாவதி தாளம்—ஜெம்பை.

பெதும்பை காண்—இவளின்னம்
பெதும்பை காண்.

### அநுபல்லவி.

ததும்பி யமுதொழுகுப்ரசங்க முத்தமிழறி
தருமகு ணநிதியே பெரியசு வாமி மன்னு
நிதம்பு னையுமுடையு ளரும்பு விரிய வுமிலை
நினைத்த பொழுதிலிவளை அழைக்க வயதலவே. (பெதும்பை)

### சரணங்கள்.

பேரிகை யிடிமுழக்கு தேதெனமெய் திகிலிட்டு
நீவரு பவனிக்கெதிர் வந்திடுவாள்—சிறு



சாரிகை தனையடுத்தி தாரென விவகரிப்பள்
பேர்சொலு சொலெனப்ரி யஞ்சொலுவாள்
பேர்வின் டதுசொலவே தானென் சொல்வனென்வே
பின்பா தியையுரைப்பள் முன்பா தியைமறைப்பள்
காரிகை தன்கருத்தில் நாணமு மங்குரித்தொர்
கதிர்மதி யினில்மறுவென மடமயி லுடன்வளர்வது. (பெது)

சித்தச கொலுமேடை வளர்த்திட வெதிர்போடும்
அடித்தள மெனமார்பு தடிக்குதுகாண்—சிறு
தத்தைகள் பெடையொடுசா தத்தினில் விளையாடல்க
ளுற்றது மனதாசை படிக்குதுகாண்
உத்தமர் பெறுமேல்வீ டற்பர்க ளனுகார்போ
லொருவகிர் சூழியத்தி லொருவகிர் தோள்வளைக்குள்
மொய்த்திட வேகோதிமு டிக்கினு மேகூடிடா
முகில்பொரு அரிகுழலாள் சுகரய மினமறியாள். (பெது)

சித்திர சபைநடனவி சித்திர பதயுகளநி
னைத்திரு தயமுருகிய வுத்தமனே—பொரு
சத்துரு மணிமகுடமு டித்தலை களையிடறிமி
தித்திடர் விகூடத்ரிகட வெற்பரசே
கத்தனை மாடுநீ லத்திரு மலைதனில்வளர்
கந்தனை யநுதினமே வந்தனை புரிஜனகா
வர்த்தனை பெறுநிதிவீ ரப்ப னருள் கண்மணியே
மாமுனி லேபெரியசு வாமிந ராதிபனே. (பெது)

## ௩. மங்கைப் பருவம்.

### பல்லவி.

இராகம்—கேதாரகௌளம்—தாளம்—ரூபகம்.

மங்கைப்பருவம்—இவள் நல்ல
மங்கை யையா.

### அநுபல்லவி.

திங்கட்குடை நிழல் கவியம தங்கொட்டுகை மலைதனில்வரு
த்ரிகூடபதி யேகிருவைப் பெரியசாமிதே வேந்திரனே ()

சரணங்கள்.

பெடையஞ்சுக மொடு சேவலு மொருபஞ்சர மிசைகூடுதல்
பிரியஞ்சுக மென நாடிய ழைக்கச் சொல்கிறாள்—ஒளிர்
படமொன்றிலுன் வடிவந்தனை விசித்ரஞ்செய்து தனமீதணி
பசுமஞ்சளை யதில் சோகியெ டுத்துப்புல்கிறாள்
கடல்நடுவிற் பைம்புயல்போற் படைநடுவிற் றண்டிகைமேற்
கண்டனது விசித்ர வெழில் கவர்ந்துவிழிகள் பொத்தியுருகி
உடைநெகிழக் கண்டதைவிட் டிடைநடுவிற் செங்கைவர
உனைத்தேடிவெ ருக்கென்றும னக்கோயில்த னிற்கண்டனள் (மங்)

அமுதமொழிக் குழந்தமிழ்க் குமரிதனத் துணைசிமிழுக்
கதிகமதாத் திடுகோங்கின ரும்பத்தனைகாண்—அதொர்
சுமையெனவிற் றொடியுதுசிற் றிடையொருகைப்பிடியலமெய்த்
துடியலவெய்த் தறநொந்தது ரும்பத்தனைகாண்
கமலமுகைக் கிண்கிணிவாய் நறவுபொருட் டின்புறமாய்க்
கன்னியிளம் பிடியனையாள் தன்னையறிந் திருபதுநாள்
சமர்மருவார் பதிதொறுநீ சாடியோடி மீள்வதுபோற்
சண்பகவன வண்டளகவ னந்தனிலேபோய் வந்திடுவது. (மங்)

குப்பெனவெண்ம ணக்குடல்கள்கொ ழுப்பெக ; ற்றரியலர்
குப்பமிடுமு னைப்படைகள்கு ரத்தெ திர்சித்ற—அவர்
கைப்படைசித றக்கொடிசித றத்துடிசித றத்ரிகடக்
களிற்றர்சர்மு டித்தலையின்மி தித்த புரவியான்
அப்பன்மகன்ம றைப்புலவன்வ ழுத்துதமிழ்த் ரித்தருள்குற்
றலர்பெற்ற நீலவெற்பின் வாலசுப்ர மண்யர்பாத
மெப்பொழுதும்வ ழுத்தியவீ ரப்பனருள்சு புத்ரனேசகு
ராமாவதாரா பெரியசு வாமிமன்னு நேமிசொன்னேன். (மங்)



## ௪. மடந்தைப் பருவம்.

பல்லவி.

இராகம்-பைரவி, தாளம்-ஜெம்பை.

திருமடந்தை கலைமடந்தை ரதிமடந்தை கண்டுவந்து
தெண்டனிடு மடந்தையிவள் கண்டசெய்தி சொன்னேன்

அநுபல்லவி.

பொருள்மடந்தை புவிமடந்தை புகழ்மடந்தை செயமடந்தை
பொருந்தி யனுசரிக்க வளர்ந்த ரசுதழைத்த (திரு)
புரவல னேகிருவைப் பெரியசு வாமிமன்னு.

சரணங்கள்.

முன்பருவம் பெற்றிடுபொ வையரும் பின்வரும் பெற்றிடுபூ வையரும்
என்பருவஞ் சொல்லெனவிரு பால்நிறை கொலுவிலி நக்கு நடுப்பருவம்
சிலைமத-னிச்சைசெர லப்பருவம்-கலவி நயந்தின்மு தற்பருவம்-
தலைமைசெ லுத்துது வைப்பெணிவள்
இன்பரச மென்பழிதல்லாமிரு குரும்பை தனிநிரப்பி
யிருந்து துவள்நுசுப்பு வருந்த வளர்தனத்து (திரு)
ளொத்தனை செருவிதங்கள் எத்தனைபெருமிதங்கள்.

பணிலநடுவி லிலகுவ லம்புரியும்
அணிதிகழ் கணநடுவிலோர் சந்த்ரிகையும்
அணிநடுவிலோர் ரத்தினமும் மணிநடுவிலோர் க்ருஷ்டிணனும்
அலவோ எழில்மேன்மை சிறந்ததையா
இதமானதி தான மடந்தையயா
ப்ரீதி தான் விலகாதிவள் சிந்தையையா
நிணமொழுகு கதிர்வடிவேல் நிலமன்னவ ரனைவருக்கும்
நீதுரை நடுநாயக மாதரில் நடுநாயக (திரு)
நேரிழை யிவள் காணிவள் சேருவ துவிசேடமே.

பஞ்சவன விருது கருடக் கொடியும்
சஞ்சீவி கொடுவரு மனுமக் கொடியும்
நெஞ்சக் தரியலர் பொறி யஞ்சும் படப டெனவே
நின்றுடிடும் வாசல்ந ராதிபனை பொன்றூர்வளர் தேவகு லாதிபனை

நன்றாய்கிளு வாபுரி யாதிபனே ஒன்றாய்சிவ ஞானவ ரோதயனே
கொஞ்சுகிளி யஞ்சொன்மொழி குழல்வாய்மொழிமயில்மருவும்
பிஞ்சும திச்சடிலர் பெறுங்குக னைப்பரவிய
பெரியசா வாமிமன்னு பருவசு காமியிவள் (திரு)

---

## ரு. அரிவைப்பருவம்.

இராகம்-பூரிகல்யாணி, தாளம்-ஆதி

பல்லவி.

அரிவைப் பருவமிவள் தானையா—உமக்கு
மருவப் பருவமான மானையா.

அநுபல்லவி.

தெரி சொற்றமி ழைக்கரை கண்டுதமிழ்ப்
பொதியக்கிரி யைத்திரை கொண்டுவளர்
திரிகூட பதிகாத்த பெரியசா மிராசேந்த்ரா (அரி)

சரணங்கள்.

அட்டக ஜங்கள்த சக்கிரிவன்பொ
னாத்திடை குத்திம ருப்பறு பட்டது
கட்டழகிக்குமி னுக்குத னம்வளரு மென்றல்லோ—எதிர்
பட்டம ரந்தழை யப்பக ருங்கிளி
பொற்குழை முத்திவ ளர்த்தத லத்துளே
பட்டது மைக்குழ லாக்குவிழிய யியல்கள்-சென்றல்லோ
பார்வைமான் கன்றல்லோ—பெண்களிலிவள்
கட்டாணி முத்தலவோகிளி பட்டாடை பொற்புயத்தி
லிட்டாட வெற்றிதரும் வச்ராங்கிச் சோடலவோ
எட்டெட்டு வகைக் கரணங்க ளுடன்
கொக்கோக விதத்தினி தானமெலாம்
எஜமானியிவள்பிச்சையிட்டவருக்கலோகற்கவருமையா.(அரி)



அம்புயமலர்மா னும்பலகலைமா
னும்புவியிசைமா னுந்தொடரெஜமான்
செம்புலியலவோ வென்கணவனெனத் தேடுறாள்—மத
தும்பியில்வருவா னென்றபொழுதிலே
சொந்தம தலவோ வென்றுதளவமலர் சூடுறாள்
மனதினுளே—நாடுறாள்—அப்போது
கும்பா சலத்திலிதோ வந்தா னெனச் சொல்லுமுன்
வந்தாள் திருப்பவனி கண்டா ளுனைத் தொழுதாள்
அம்பொற் பணியங் குசம்வைத் தகையால்
எம்பொற் பணியங் குசம்வைத் ததன்மேல்
அடங்காக்காமயானையை அடக்குவதலோவிசித்திரமென்றாள்.()

அத்தர் வடிவமா ணிக்கவரைகுலா
மிக்கு நதி நனீர் சுற்றுகி னுவையூ
ரற்புதமெனவாழ் வுற்றருள் கல்லக நாடனே—தேன்
மொய்த்த துளவமா லைப்பொரு தருசீர்
முக்ய தளவமா லைப்புய தரனே
முத்தமிழ் முதுநூல் கற்றுரை சொல்லிய சேடனே
பரதளவி பாடனே—சமரிடைமி
தித்தேறிய பரிநகு லாவொரு
கைத்தாலமு மதகரியா யதிர்
முத்தாலமு முரசுடையாய் வளர்
குற்றால நன் னகரினில் மேவிய
சித்ரச் சபையார் திரு வாணையைநே
சித்துக் கடல்சூழ் புவியாள் ஜனகா
ஜெயமீன கேதனனே பெரியசா மிராஜேந்த்ரா. (அரி)

---

## சா. தெரிவைப் பருவம்.

இராகம்-செஞ்சுருட்டி, தாளம்-ரூபகம்.

பல்லவி.

தெரிவைப்பருவம்—இவள் நல்ல
பருவப் பிடிகாண்.

அநுபல்லவி.

குருவைப்பர மானந்தமெய்ப் பொருளைப்பொரு ளாய்நம்பிய
வரிசைத்துரை யேபெரியசு வாமிமன்ட லாதிபனே. (தெரி)

சரணங்கள்.

இக்குமொழித னக்குடமொரு நெற்கிடைதலை குப்புறுருது
முக்யமாயமு தச்சுனையில்மு கக்கவோ அறியேன்—சுனை
அக்கரைகுட மிக்கரையோர்ந டுக்கரைபோ லொளிக்கரோமவுந்
இக்கரைகள்க டக்கவணையொன் றிட்டதோ அறியேன்
கொக் கோகவித் தையுமதனக லைக் ஞானமத் தனையுமனம
திக்கு மிக்கு மதனுமிங்கேப டிக்கவல்லவோ வேணுமையா
மிக்க திரி கூடபதிக லைக்குதவுவல்லவ னிவனே யென்பள்
மிஞ்சியமட வார்க்கெல்லாமிவள் மேற்றரமான வாத்தியாளையா. ()

தும்புருவா குவர்தும்புரு நாரதரா குவர்நாரதர்
தம்புருவா சித்திவள் சங்கீதமி சைத்தால்—மதன்
அம்புருவாம் விழிமாதுசு யம்பகர்வது:கண்டுபெறுவ
லாட்டியுமிவள் வீட்டிலொருவெள் ளாட்டியாய் வருவாள்
செம்புலியின் புகழ்பாடிந டம்புரியுந் திருமாதுமு
ணம்பரதந் செலுமோவென நம்பரகங் கனிந்தல்லவோ
வெம்புலிபுல் லாய்நின்றிட மாசுணமா சுணமாட
மிதித்தரன்மு நடித்தகாலிவள்
வித்தையதிச யத்தையென் சொல்வேன். (தெரி)

திரைக்க டல்வளை புவிக்கெ லாமொரு மதிக்குடை நிழல் பரப்பியே
திசைக்கு நிருப நடத்தியவட கரைப்பாண்டி யனே—தமி [அட்ட
மூரைக்கு மூரகன் பிலத்திலேபுக வகத்ய முனிவன் சிறுத்துமலைமே
லொளிக்க வேசங்கப் பலகையேந்தும் துரைப்பாண் டியனே
வரைக்குளேசித்ரசபைக்குளேசத்ரநடத்தியேஅத்தர்திருக்குற்றாலம்
வளமை யாகச்செய் பெரிய சாமி தலைமை யாதிக்கம் வளரவே வளர்
துரைப் பெரியசு வாமி மன்ற பெண்களிற் பெரியசு காமியிவள்நீ
தோய்ந்தக் காலுனக் கேற்கு மேதனஞ் சாய்ந்தக் காலுனக் கேற்
[குமோ ஐயா. (தெரி)

---



## எ. பேரிளம் பெண்பருவம்.

இராகம்—சௌராஷ்ட்ரம், தாளம்—சாப்பு.

பல்லவி.

பேரிளம்பெண்—இவள் நல்ல
பெண்கள் திலக மையா.

அநுபல்லவி.

காரெனச்சொல வேயுரைத்திடு
தூதுமுச்சித மாய்நடத்திய
போர்முகத்தினில் விஜயனேறிய
[illegible] வலவனாகிய [illegible]—இளவாபுரிவாழ் [illegible]
பெரிய[illegible] போஜதே [illegible]

சர[illegible]

நொந்தி ளைத்திருக்கு—மெளியவா
தங்க ளைக்கிடுக்கண்—செயும்பொல்லா
முன்தொ டிப்பி லுக்கர்—பவுசுதா
னைந்த லக்கணுற்றால்
வந்து பின்பவர் காலிற் பணிவதுபோல்
நொந்து பின்னிடை நூலுக் கருகிலே போய்
முந்த நான் செய்த பிழைபொ றென்றுவ
ளைந்து கும்பிடு வாரைப் போற் சரிந்த
முலையினாள்—நவமணிமே
கலையினாள்—இவள் பருவம்
அந்த நாளைக்கு மிந்த நாளைக்கு
மெந்த நாளைக்கு முன்றன் மேல்வைத்த
சிந்தை யாசைவ ளர்ந்தத னாலே (பேரி)
சிறியதனம் போய்ப் பெரியதனம் பெற்றாள்.

கற்ப தும்பு தினம்—பலகலை
கற்ப தும்பு தினம்—இவட்குவெள்
ளாக்க லைபு தினம்—உனக் கென்றும்
பொற்க லைபு தினம்
அற்பு தமுன தாண்மையை யெண்ணு[illegible]
புற்பு தமல வோபெண்மை யெண்ணுவ[illegible]

அஞ்ச நன்குவ ளைகைக் கழுத்துமென்
றஞ்ச னங்குவ ளைக்கெழு தாள்மன
    தாவலாள்—மதனனிவட்
    கேவலாள்—சுனையின்மலர்
உற்ப லகிரி யானைநே சிப்பதும்
சிற்ப லாநிழ லானைப்பூ சிப்பதும்
பற்ப லவிர தங்களெல் லாமறுட்
டிப்ப துமுனைக் கூடுதற் கல்லவோ. (பேரி)

ஆழிப்பு விக்கரசே—த்ரிகடமத
ரூழிக்க ளிற்றரசே—அமுதொழுகு
விழிக்க னித்துவர்வாய்க்—குழல்வாய்மொழி
ஏழைக்கி ளிப்பின்னையால்
ஊழிக் கடையினு மசையாத ரூறும்பலர
வாழ்வைச் சதாகால மறவாத முகுந்தனே
சூழக் கிளைவளம் வளர்ந்தோங்கி யிசைபெற
வாழ்மெய்த் துரையேசின் னணைஞ்சேந்த்ர பெரியசு
    வாமியே—புரவலர்சு
    வாமியே—பிலத்துலகம்
ஏழிற் பெரிதான புவிமடந் தையைப் போலும்
ஏழிற் பெரிதான பருவமங் கையைச் சேர்ந்தாள்
ஏழு பருவத்துப் பெண்ணும் வதுவை செய்து
வாழி வாழி யென்றுன் பேரைக் கொண் டாடுவள். (பேரி)

பருவப்பதம் முற்றிற்று.

## வண்ணம்.

ஆதிமுதற்பொருளானநம்பரர்—பூரணைபுட்கலை மாதர்பங்கினர் —தவளப்பொடிதிகழ் பவளக்குலகிரி-கருணைக்குணநிதி பெரியசுவாமி, பாதமலர்த்துணை நாளுநம்பிய—யோகவிகட்சண ராசசெம்புலி —பகைஞர்க்கிடியிர வலர்கற்பகநிறை—கனகப்புயலதி செயதாமேரு, ஆகாவிற்புரு தாயகங்கவி—நாவலருக்கொரு தாபரந்தரு—கவிதைக்கிருநிதி பொறுமைக் கொருபுவி—அழிவிற் பிலபதி எளியவர்வேலி, சின்னணைஞ்ச பூபதி சொல்ல ரிசைமால். (௫)



ஆனையெனத்திர ளூடுசென்றிய—லாளியெனத்தரி யாரைவெ
ன்றுயர்—அனுமக் கொடியொடு கருடக் கொடிவிரு—திருபக்கமும்
வர விசையமு ராரி, யேழை சினத்துரை ஆடினுங் குறு—மூரல்
விளைத்தித மேசொலுந் துரை—மெ... ...ன் பாரதற மொழியுத்தம
மனு—முறைசத் தியமென மொழியு நிதானி, ஆலைகுதத மரு
தேறல் சென்றலை—மோதிவயற்கழு நீர் மலர்ந்திட—நிலவைத் தரு
சிறு தாளத் தொளிதிகழ்—கிளுவைக்கதிபதி பெரியசுவாமி, பன் (௬)
னுசெஞ்சொல் பாடிவருக ளியரேம்.

வேதன் விதிப்படி யாகமண்டப-மாடமெழுக்கிடு தூணடங்க
ளும்—நிறையச் சுதையடி கதலிக் குலைநடு—கமுகுக்குலைபொதி தொ
டரவிதானி, வாடை மிகுத்த சவாது சந்தப—டீர மதைக்கொடு
கோலமும்புனை—மதில்கைப் பணியிடு பலசித் திரமெழு—தணிபொற்
குடநிறை விசிறு பன்னீரை, வேழமுகத்தனை யேயலங்கிர்த—பீட
மமைத்ததி லேபொருந்தவை—அவலெட் பொரிநவ ரசமுக் கனிப
டை—வடிசர்க் கரைபடை முறை வழுவாமல், கன்னியன்பர் சேச (௭)
வர வழையடா.

மேனிகொழுத்த கிடாயிலம்பது—ஓரடைவைத்திடு கோழியெ
ண்பது—அருமைத் தசையெடு குறுகத் தறியிடு—நறுநெய்த்துளிவிடு
புளிவிர வாமல், ஓர்கறி யைப்பொடி தூவி யங்கதில்—ஓர் கறியைப்
பொரி தேளியுஞ்சமை—முயல்நற் கரியது சிறுகச் சமையிடு—தலை
சுற் றியுமெறி யெறியெறி காயை, வேறு நமக்கொரு காருடும்பித—
மாக வறுத்துவை காடை யும்பொரி—சிறுகொக் கவியல்வை அதி
ண்முட்டையை யவி—மதுவைப் பெருகவை முதிய வரால்கள், இன் (௮)
னமஞ்சுதாளி சமை யமையுமே.

காதல் மிகுத்தசங் யாசிமிண்டரீ-லாடர்குளக்கரு வாடு மண்டு
வர்—அயிரைப் பொடியலை நொடியிற் றிருடுவர்—சிவபத் தரையடி
அடிகுடி கேடர், கூளிதினக்கிடை யாதவம்பர—லோகொலை யிற்சிவ
பூசையென்பவர்—அவர் முத்தியையறி வெறுகொப் பவரா—காமுக்
குவரெழு பதுபொதி கோடி, காவிதரித்தவர் சார கெண்டைகள்—
மூடி விழிக்குமுன் னேவிழுங்குவர்—குருவுக் கொருகுட மதுவைக்
கொடுசில—குருவித் தலைகொடு வயிறெரி யாமல், அன்னமுண்பதார் (௯)
சிறுக வடியடா.

அஞ்ச னன்குவ ளைகைக் கழுத்துமென்
றஞ்ச னங்குவ ளைக்கெழு தாள்மன
 தாவலாள்—மதனனிவட்
 கேவலாள்—சுனையின்மலர்
உற்ப லகிரி யானைநே சிப்பதும்
சிற்ப லாநிழ லானைப்பூ சிப்பதும்
பற்ப லவிர தங்களெல் லாமநுட்
டிப்ப துமுனைக் கூடுதற் கல்லவோ. (பேரி)

ஆழிப்பு விக்கரசே—த்ரிகடமத
சூழிக்க ளிற்றரசே—அமுதொழுகு
வீழிக்க னித்துவர்வாய்க்—குழல்வாய்மொழி
ஏழைக்கி ளிப்பிள்ளையால்
ஊழிக் கடையினு மசையாத சூலம்பலா
வாழ்வைச் சதாகால மறவாத முகுந்தனே
சூழக் கிளைவளம் வளர்ந்தோங்கி யிசைபெற
வாழ்மெய்த் துரையேசின் னணைஞ்சேந்த்ர பெரியசு
 வாமியே—புரவலர்சு
 வாமியே—பிலத்துலகம்
ஏழிற் பெரிதான புவிமடந் தையைப் போலும்
ஏழிற் பெரிதான பருவமங் கையைச் சேர்ந்தாள்
ஏழு பருவத்துப் பெண்ணும் வதுவை செய்து
வாழி வாழி யென்றுன் பேரைக் கொண் டாடுவள். (பேரி)

பருவப்பதம் முற்றிற்று.

---

## வண்ணம்.

---

ஆதிமுதற்பொருளானநம்பரர்—பூரணைபுட்கலை மாதர்பங்கினர்
—தவளப்பொடிதிகழ் பவளக்குலகிரி-கருணைக்குணநிதி பெரியசு
வாமி, பாதமலர்த்துணை நாளுநம்பிய—யோகவிதட்சண ராசசெம்புலி
—பகைஞர்க்கிடியிர வலர்கற்பகநிறை—கனகப்புயலதி செயதரமே
ரு, ஆகரவிற்புரு தாயகங்கவி—நாவலருக்கொரு தாபரந்தரு—கவி
தைக்கிருநிதி பொறுமைக் கொருபுவி—அறிவிற் பிலபதி எளியவர்
வேலி, சின்னணைஞ்ச பூபதி சொல்வ ரிசைமால். (ஞ)



ஆனையெனத்திர ளூடுசென்றிய—லாளியெனத்தரி யாரைவெ
ன்றுபர்—அனுமக் கொடியொடு கருடக் கொடிவிரு—திருபக்கமும்
வர விசையமு ராரி, யேழை சினத்துரை ஆடினுங் குறு—மூரல்
விளைத்தித மேசொலுந் துரை—மெய்...ன் பாதற மொழியுத்தம
மனு—முறைசத் தியமென மொழியு நிதானி, ஆலைகுதந மொரு
மனு—முறைசத் தியமென மொழியு நிதானி, ஆலைகுதந மொரு
தேறல் சென்றலை—மோதிவயற்கழு நீர் மலர்ந்திட—நிலவைத் தரு
சிறு தாளத் தொளிதிகழ்—கிளுவைக்கதிபதி பெரியசு வாமி, பன் (வ)
னுசெஞ்சொல் பாடிவருக ளியரேம்.

வேதன் விதிப்படி யாகமண்டப—மாடமெழுக்கிடு தூணடங்க
தோலும்—நிறையச் சுதையடி கதலிக் குலைநடு—கமுகுக்குலைபொதி தொ
டரவிதானி, வாடை மிகுத்த சவாது சந்தப—டீர மதைக்கொடு
கோலமும்புனை—மதில்கைப் பணியிடு பலசித் திரமெழு—தணிபொற்
குடநிறை விசிறு பன்னீசை, வேழமுகத்தனை யேயலங்கிர்த—பீட
மமைத்ததி லேபொருந்தவை—அவலெட் பொரிநவ ரசமுக் கனிப
டை—வடிசர்க் கரைபடை முறை வழுவாமல், கன்னியன்பர் சேச (வஞ)
வர வழையடா.

மேனிகொழுத்த கிடாயிலேம்பது—ஓரடைவைத்திடு கோழியெ
ண்பது—அருமைத் தசையெடு குறுகத் தறியிடு—நறுநெய்த்துளிவிடு
புளிவிர வாமல், ஓர்கறி யைப்பொடி தூவி யங்கதில்—ஓர் கறியைப்
பொரி தேளியுஞ்சமை—முயல்நற் கரியது சிறுகச் சமையிடு—தலை
சுற் றியுமெறி யெறியெறி காயை, வேறு நமக்கொரு காருடும்பித—
மாக வறுத்துவை காடை யும்பொரி—சிறுகொக் கவியல்வை அதி
ன்முட்டையை யவி—மதுவைப் பெருகவை முதிய வரால்கள், இன் (இ)
னமஞ்சுதாளி சமை யமையுமே.

காதல்மிகுத்தசங் யாசி மிண்டரீ—லாடர்குளக்கரு வாடு மண்டு
வர்—அயிரைப் பொடியலை நொடியிற் றிருடுவர்—சிவபத் தரையடி
அடிகுடி கேடர், கூளிதினக்கிடை யாதவம்பர—லோகொலை யிற்சிவ
பூசையென்பவர்—அவர் முத்தியையறி வெறுகொப் பவரா—காமுக்
குவரெழு பதுபொதி கோடி, காவிதரித்தவர் சார கெண்டைகள்—
மூடி விழிக்குமுன் னேவிழுங்குவர்—குருவுக் கொருகுட மதுவைக்
கொடுசில—குருவித் தலைகொடு வயிறெரி யாமல், அன்னமுண்பதார் (இஞ)
சிறுக வடியடா.

பவளநிறமணி யிலகுசிறுபதக் கிருபைபெறுமடி யவர்கள்மனதுக்குக்
கிட்டிணன் திருமலைக் கிட்டிணனுந் துணையே—தந்தானனா

விரவிவிரைகமழ் குவளையுதவிய வேதத்திருமலை யாதிக்கநுபரன்
விசையத்திருப்புக ழிசையப்பரிவுட னே—கொண்டாடவே

அரனொடமர்பொரு மதனன்மருமல ரள்ளிச்சொரிதர வள்ளிக்காசை
டடர்ந்தகான்மிசை நடந்ததாள் துணையே—தந்தானனா [கொண்

குமரகுருபர முருகனருடரு குழகன ( முக வழகனிலகிய
குவளைத்திருமலை வளமைப்புகழினை யே—கொண்டாடவே

அமரர் சிறைவிட வவுணர்குடிகெட அயிலைநடவிய குகனைமருவுதெய்
வானைத்தாயெனு ஞானத்தாய் துணையே—தந்தானனா

சுரர்கள்முனிவர்கள்பரவியருள்பெறு சுனையின்முழுகியமலையில்வலம்
தொண்டர்க்கருள்புரி தண்டைத்தாளிணையே-கொண்டாடவே [வரு

வரைகடுகள்செய்பன் னிருகைபுயமெனு மலைகண்மெலியவே முலைகள்
மறத்தியொருசிறு குறத்திதாள் துணையே-தந்தானனா [கொடுபொரு

சிலையெனப்பரு வரையெடுத்தருள் சிவசுதச்சர வணபவப்பொரு
டிருமலைக்குரு பரனெனப்பனை யே—கொண்டாடவே

மலைதகர்த்தெழு கடல்குடித்தொரு மகபதிக்குநல் லரசளித்தருண்
மாலைக்கதிர்வடி வேலைப்புகழுவனே—தந்தானனா

சூதப்பரும ரக்கடற்புவி சோதிக்ககனம ளாவித்திகழ்தரு
சூரைப்பொருநங் குமரக்கடவுளை யே—கொண்டாடவே

ஓதக்கடலலை மோதிச்சுவறவு லாவிக்கதிகொடு தாவித்திரியுமயூ
யூரப்பரியொடு சேவற்கொடிதுணையே—தந்தானனா

சேரலார்கழு வேறநீர்மிசை தேவவேடெதி ரேறவேவரு
தெய்வத்திருமலைச் சைவத்தலைவனை யே—கொண்டாடவே

சூரன்மேவிய காலமானகர் தூதுபோய்வரு வீரவாகொடு
சூரம்பெறுதிருத் தம்பிமார் துணையே—தந்தானனா

சிகரகிரியொடு மகரசலதிகள் சிதறவவுணர்கள் கதறவிசைகொடு
திருகுநடமிடு மொருமயூரனை யே—கொண்டாடவே

ககனமுகடுற விரவுதிருமலைங் காவிச்சுனைதனில் மேவித்திகழ்தரு
கன்னிமார்களெ ன்னைமார் துணையே—தந்தானனா



கோலமறைப்பொருள் மூலவெழுத்தையே கூறுகுருக்களைச் சிறியரு
குருவைத்திருமலை முருகக்கடவுளை யே—கொண்டாடவே [ள்புரி

சூலமெடுத்திடு காலையிசக்கியுந் தூயவெழிற்பெறு வேவைநிகர்த்திடு
தோளித்திருமலைக் காளியுந் துணையே—தந்தானனா

சோதிமெய்ச்சிவ ஞானசற்குரு ஸ்வாமிநற்சிவ காமிபெற்றிடு
தூங்கத்திருமலைச் சங்கப்புலவனை யே—கொண்டாடவே

ஆதிவெற்பொரு காவடிச்சுமை யாயெடுத்திடு தூயபொற்புய
னடர்ந்திடும்புக ழிடும்பனுந் துணையே—தந்தானனா

அருணகிரியெனும் வாதமுகில்பொழி யமுதகவிகொளும் வீரகனுரகனை
யடர்த்துமாமயி னடத்துவீரனை யே—கொண்டாடவே

கருணையொழுகிய தருணவிகசித கமலவதனமும் வடிவுமிலகிய
கருப்பனிங்கிதச் சிறப்பதந் துணையே—தந்தானனா

## விருத்தம்.

வாயகட்டித் திறுதிறென விழித்துச் சீறி
மதயானை போனடந்து மதனைப் போலச்
சேயதிரு வழகொழுக நடித்துக் கொம்பு
தீர்த்தாலு மருகில்வாச் சிந்து பாடித்
தாயெனவே புவிபுரக்குங் கருணை மேகஞ்
சண்முகனைப் பணிபவர்க்கே தணிவா னந்தத்
தூயதிரு மலைபாவாக் கொடியோர்க் கெல்லாந்
தொங்கன்வரி கண்டநொண்டி தோன்றி னானே.

## சிந்து.

கந்த சுவாமியைச்செவ் வேளை—யெங்கள்
காவித் திருமலையின் மேவும்பெரு மானை
சொந்தச் சுவாமியைக்கொண் டாடி—நொண்டி
தொந்தோமென் றாடிக்கொள்ளத் துசங்கட்டி னேனே.
எங்கள் திருமலையைத் துதிப்பேன்—துதிக்க
வலாத பேரைநொண்டிக் காலாலே மிதிப்பேன்

துங்கக் குமரனையே மதிப்பேன்—நொண்டி
தொந்தோமென் றாடிக்கொள்ளத் தூசங்கட்டி னேனே.

மாறுகொண்ட வண்டருக்குவண்டன்—திருமா
மலையில் வேலரடி யார்களுக்குத் தொண்டன்
சூறைவளி போல்வருமுத் தண்டன்—நொண்டி
தொந்தோமென் றாடிக்கொள்ளத் தூசங்கட்டினேனே.

வல்லதே சத்தினுஞ்சஞ் சரிப்பேன்—சற்றே
வாய்திறந்து பேசிலரைக் காசுமிஞ்சச் சிரிப்பேன்
சொல்லிக்கல்வி லேயும்நா ருரிப்பேன்—நொண்டி
தொந்தோமென் றாடிக்கொள்ளத் தூசங்கட்டி னேனே.

வானரவை மந்திரத்தாற் றடுப்பேன்—கூடி
வாழாத பெண்களுக்கு நீறோதிக் கொடுப்பேன்
தாளாகச் சத்துருவைக் கெடுப்பேன்—நொண்டி
தொந்தோமென் றாடிக்கொள்ளத் தூசங்கட்டி னேனே.

நொண்டி நொண்டி நொண்டி நொண்டி நடப்பேன்—இரு
நூறுதர மாகமகா மேருவையுங் கடப்பேன்
தொண்டர்பா தத்தின்கீழே கிடப்பேன்—நொண்டி
தொந்தோமென் றாடிக்கொள்ளத் தூசங்கட்டி னேனே.

அஞ்சாறு மரக்கால்கள்ளுக் குடிப்பேன்—வானி
லன்றுவந்த சோமனையும வென்றுகையிற் பிடிப்பேன்
துஞ்சாமற் களவுசெய்து முடிப்பேன்—நொண்டி
தொந்தோமென் றாடிக்கொள்ளத் தூசங்கட்டி னேனே.

மருட்டிப் பணம்பறிக்குஞ் சிறுக்கி—மார்கள்
மாலேறி வட்டமிட மேல்மீசை முறுக்கிச்
சுருட்டிப் பகட்டியேவண் டிறுக்கி—நொண்டி
தொந்தோமென் றாடிக்கொள்ளத் தூசங்கட்டினேனே.

இங்கிதக்குப் பாயமுங் கட்டிச்—சபை
யெல்லாங்கொண் டாடப்பட்டுக் குல்லாவுங் கட்டித்
துங்கவீரப் பட்டமுங் கட்டி—நொண்டி
தொந்தோமென் றாடிக்கொள்ளத் தூசங்கட்டி னேனே.



குதித்துக் குதித்துவிளை யாடி—யெங்கள்
கோதைவடி வேன்முருகர் பாதமலர் சூடித்
துதித்துத் திருப்புகழைப் பாடி—நொண்டி
தொந்தோமென் றாடிக்கொள்ளத் தூசங்கட்டி னேனே.

புனையிலவி பூதியல்லாற் புனையேன்—தினம்
பூசாத பேரையொரு காசாக நினையேன்
சுனையிற் புனலலாது நனையேன்—நொண்டி
தொந்தோமென் றாடிகொள்ளத் தூசங்கட்டி னேனே.

தலையாரி வீட்டிலும்போ யொளிப்பேன்—என்னைத்
தட்டிமறிப் பார்களுண்டோ பொட்டலில்முக் குளிப்பேன்
தொலையாப் பொருள்திருடி யளிப்பேன்—நொண்டி
தொந்தோமென் றாடிக்கொள்ளத் தூசங்கட்டி னேனே.

கள்ளர்பொரு ளுந்திருடி விடுவே—னதைக்
கள்ளவிலை மாதருக்குக் கொள்ளைகொடுத் திடுவேன்
துள்ளுமயில் வீரனைக்கும் பிடுவேன்—நொண்டி
தொந்தோமென் றாடிக்கொள்ளத் தூசங்கட்டி னேனே.

## விருத்தம்.

மருமலர்க் கமலச் சின்ன மழலைவாய் மலர்ந்து கொஞ்சி
யருமறைப் பொருளை முன்னோ னயனுக் குரைத்த கோவே
யொருமலர்க் குவளைப் பூவை யுகந்துபூஞ் சுனையிற் றந்த
திருமலைக் குகனைப் போற்றித் தெரிசிக்கும் நொண்டி நானே.

## சிந்து.

கார்மேனிப் பொன்னரங்கர்—பத்தன்
கள்ளத் திருமங்கை யாள் வார்தம்
போரான நற்குலத்திலே—நான்
பிறந்து வளர்ந்து சிறந்தேனே
சிறந்த குலத்துதித்தே—னென்போற்
றேவ ரெனப்பெயர் யாவர் பெற்றார்

கறந்தவெண் பாலையுமோ—காகங்
காத்திருக் குஞ்சும்மா பார்த்திருக்குங்
கூடியாமற் காவல்செய்வோம்—உண்ட
கொட்டிலிற் கட்டிலின் கீழ்ப்பார்ப்போம்

மிடியாத் துடியடங்கோந்—ஓய்விலா
வில்வெடித்தபொல் லாதமரம்

மறமுங் குறமுமொன்று—திருமா
மலையான் றந்தை யேமுறவே

யுறவாகக் காதலித்தே—யெச்சி
லுண்ணச்சொல் லிச்சொன்ன கண்ணப்பனும்

எங்கள் கிளையாளன்—பின்னை
யெத்தனை பேரென்று துத்தியஞ்சொல்வேன்

சிங்க மெனவுதித்த—கள்ளச்
சேமனைப் பார்க்கிலென் மாமனென்பார்

மருதப்பன் சீவலவன்—நெல்லை
மாநகர் மேவிய ஞானசுகச்

சுருதிப் பரம்பொருளைப்—போற்றும்
சூரச்சுப் பிரதீபன் பேரனும் நான்

சென்னச்சாலி நீள்வயல்சூழ்—திருச்
செந்தூரில் நொண்டியென் றந்தையென்பார்

கன்னக்காற் கண்டமுத—லுள்ள
கள்ளரெல் லாமெனக் குள்ளல்லவோ

கள்ளர்கள் மூவருண்டு—அந்தக்
கள்ளர் சரித்திரம் விள்ளுகிறேன்

எள்ளும்நல் லெண்ணெயும்போ—லொளித்
தெங்குமி ருந்திடுந் தொங்கனவன்

வெண்ணெய் திருடினமா—லொரு
மித்த இடைச்சிதன் மத்தடியாற்

கண்ணைப் பிசைந்தழுதே—யவன்
கட்டுப்பட் டான்மகன் குட்டுப்பட்டான்



பாரச் சபைதனிலே—மூவர்
பாட்டையுந் தேட்டையுங் கன்னமிட்டான்

சோரச் சிவன்களவை—யவன்
தொண்டரெல் லாங்கூடிக் கண்டுகொண்டார்

பின்னை யொரு திருட—னெங்கள்
பெண்ணைத் திருடிக்கொண் டண்ணே யண்ணே

இன்னந் திருமலைமே—லோடி
யேறிக்கொண் டானென்னை மீறிக்கொண்டான்

என்னை யறியாம—லவ
னென்னைத் திருடிக்கொண் டென்மனத்தில்

மன்னி யொளித்துக்கொண்டா—னவன்
மாயத்தை யுஞ்சம்ப்ரதாயத்தையுஞ்

சோதித் தறிபவரா—ரென்றும்
சொல்லக்கூ டாதென்ன வல்லமையோ

ஆதிக் குருபரனே—யவ
னல்லாமல் வேறெனக் கில்லையண்ணே

சீர்மே கழுமதியுந்—தவழச்
சென்னித் திருமலைச் சன்னிதிக்கே

வாசார் பொருளையெல்லாம்—நான்
வைத்த பொருள்போல வுச்சிக்கொள்வேன்

நிறையாளர் செந்தமிழ்க்கும்—அருள்
நேசருக் குஞ்சிவ பூசனைக்கு

மறையோர்க்கு மீயாமற்—றேடி
வைத்த பொருட்கு நான் பெற்றபிள்ளை

குறித்துக் களவுசெய்வேன்—சும்மா
கொஞ்சக் களவுக்குச் சஞ்சரியேன்

மறித்துத் தடுத்தவர்கள்—செவி
வாய்வழி யோடியே போய்விடுவேன்

வையாம லேகொடுப்பேன்—கை
வகையில்லை யென்றாற் புகையிலைக்குஞ்

திரள்மாட்டை யேதிருடிச்—சந்தைச்
செட்டிக டைதொறுங் கட்டிவைப்பேன்

மன்ன ரரசாட்சி—பகல்
மாத்திர மேநான் ராத்திரிக்குஞ்

சொன்ன படிமுடிப்பேன்—றடை
சொல்லப்போ மோஎன்னை வெல்லப்போமோ

கொலையுங் களவுங்கற்ற—கள்ளர்
கூட்டத்தில் வீரசிங்க நாட்டுக்கள்ளர்

நிலைமை பெற்றபதியில்—நான்
நெடுநாட் பழகிக் குடியிருந்தே

னிருந்த சமயத்திலே—அதற்
கேற்ற களவுகள் பார்த்திடவே

விரைந்து பயணப்பட்டேன்—மின்போல்
மின்னுங்கை வங்கியுங் கன்னக்கோலு

மாயச்சொக் குப்பொடியு—மாய
மையுங்கட் டிச்சோறுங் கையிற்கொண்டேன்

ஆயிரம் பொன்னெடுத்தேன்—பை
யடப்பத்திற் போட்டுத் தட்டப்புடனே

நடந்தேன் வழிகூடிச்—சொல்லும்
நன்மது ரைத்தமிழ்த் தென்மதுரைத்

தடங்கோட்டை வாசலிலே—சென்று
தங்கி யிருந்தேனே பொங்கமதாய்

மறுநா ளெழுந்திருந்து—கோட்டை
வாசல் கடக்கப்ர யாசமென்றே

விறகு தலையில்வைத்துப்—போய்
விலைகூறு வார்போலத் தலைவாசல்

கடந்துள்ளே போய்ப்புகுந்தேன்—சுமைக்
கட்டைத யங்கேன் போட்டுவிட்டுத்

தொடர்ந்த கடைவீதியினிற்—சென்று
சொக்கலிங் கங்கோயி லைக்கண்டு நான்



உன்னிப் பரவசமாய்—நெஞ்
சுருக்கத் துடன்போய்த் திருக்கோயிற்

சன்னிதி வாசலிலே—நெடுஞ்
சாஷ்டாங்க மாகவே நாட்டமுடன்

வந்தனை செய்ததற்பின்—போய்
மயக்கந் தவிர்த்தங் கயற்கண்ணியைச்

சந்தோஷ மாய்ப்பணிந்தேன்—கோயிற்
சம்ப்ரமங் கண்டுவ லம்புரிந்தேன்

குடவறை வாசலிலே—மனக்
கூர்மையி னொலொரு பாரிசத்தி

லடைவாகப் போயிருந்தேன்—என்னை
யாரறி வார்கள்ளச் சோரனென்றே

பொன்னங் கொடிபாகர்—சொக்கர்
பூவடி யைத்தொழுந் தேவடியா

ரன்னோரங் கூடிவந்தா—ரதி
லானந்த வல்லிச தானந்தியும்

வங்கார மாணிக்கமு—மோக
வல்லியுஞ் செல்லியும் நல்லமுத்துங்

குங்குமக் கோதையுடன்—முத்துக்
குப்பி நமுப்பி கறுப்பழகி

யல்லியங் கோதைப்பெண்ணு—முல்லை
யாரம் புனைந்திடு சீரங்கியு

மெல்லப்ப மாணிக்கமும்—நல்ல
இங்கித மோகனச் சங்குமுத்துஞ்

சல்லாப மோகினியும்—மோகச்
சந்த்ர மதியுட னிந்த்ராணியும்

வல்லிசிவ காமியுடன்—குண
மாலையும் வள்ளியுஞ் சோலைமுத்துந்

தோகை மயிற்குலம்போற்—புடை
சுற்றிவ ரத்தானோர் பொற்கொடிபோல்

நாகரீ கத்துடனே—வந்தாள்
நானில மோவந்த மேனிலமோ

வண்டாரும் பூங்குழலா—ளனும்
வால சவுந்தர மாணிக்கத்தைக்

கண்டேன் மதிமறந்தேன்—மதக்
கள்ளன்வந் துள்ளத்தைக் கொள்ளைகொண்டான்

கூந்தற் சொருக்கழகு—முத்துக்
குச்சுங்கண் டேன்காமப் பிச்சுங்கொண்டேன்

தேய்ந்த பிறைநுதன்மேற்—பொட்டுச்
சிந்தூர முங்கண் டயர்ந்துவிட்டேன்

போர்வேல் விழிப்பகட்டும்—விற்
புருவமுங் கண்டே னுருவழிந்தேன்

கூரிய மூக்கழகு—மூக்
குத்தியுங் கண்டுப யித்யங்கொண்டேன்

குழையும்பொற் றோடழகு—முத்துக்
கொப்புங்கண் டுள்ளம்வெ துப்புக்கொண்டே

னழகு திருமுகமுஞ்—சொல்லு
மஞ்சுகக் கிஞ்சுகச் செவ்விதழுங்

கனிவாயும் புன்சிரிப்புஞ்—சிறு
கன்னிக் கமுகுடன் பொன்னணியும்

புனித விருதோளும்—ரத்னப்
பொற்கட கத்தொடு நற்பவளஞ்

சேர்த்த மலர்க்கரமும்—பொற்
றிருவிர லுங்கைக் கருவளையும்

பூத்த பசுந்தேமல்—திகழ்
பொன்னின்கு டம்போலத் தன்னியமும்

வங்காரக் கச்சழகு—முத்து
மாலையு மோகன மாலிகையுஞ்



சிங்கார வாலிலையின்—மேற்
செழித்திடும் ரோமத் தொழுக்கழகு

முந்திச் சுளிபழகும்—பட்
டுடையழ குஞ்சிற் றிடையழகு

மந்த ரங்கம்மான—செவ்
வரம்பை நிகர்த்துவி ளங்குந்துடை

துய்ய முழந்தாளும்—வேள்
துணைவரால் போலக் கணைக்காலுஞ்

செய்ய மலர்ப்பதமும்—பொற்
சிலம்பொடு தண்டை கிலுங்கவரு

மன்ன நடையழகும்—நெஞ்
சயர்க்கவொண் ணுத மயிற்சாயல்

என்னை மயக்கிடவே—கண்
டிடைந்துவிட் டேனுள் ளுடைந்துவிட்டேன்

வஞ்சிக் கொடியனையா—ளென்
மனமுங்கண் டாள்கைக் கனமுங்கண்டாள்

பஞ்சிலைக் கெண்டையைப்போற்—கண்
பகட்டியுள் ளாசையைப் புகட்டிவிட்டே

உல்லாசப் பார்வையுமாய்க்—கச்
சொதுங்கிப் பிதுங்கிய மாதனமுஞ்

சல்லா ரவிக்கையுடன்—காணச்
சற்றே திறந்து நகைத்தொல்கியே

வீட்டுக்குப் போகலுற்றாள்—தூண்டில்
மீன்போற் றொடர்ந்துபின் னான்போனேன்

கோட்டு மலர்க்குழலா—ளென்
குறிப்பறிந் தங்கோர் சிறுக்கியைவிட்

டாரென்று கேட்கவிட்டாள்—நானும்
அம்பலக் காரக் குறும்பனென்றேன்

சோரனெனவறிந்தாள்—மனச்
சோரமுடன்வீட்டில் வாருமென்றாள்
சந்தோஷமாய்நடந்தேன்—வெகு
தாட்டிகமாயென்னைக் கூட்டிச்சென்றாள்

அந்தப் புரமான—வுள்
ளடுக்களைக் கப்பாற்படுக்கைவீட்டிற்
சப்பிர மஞ்சத்தில்—வெகு
தத்தர மாய்த்தூளி மெத்தையின்மேற்

செப்ப முடனிருந்தேன்—வீடு
சிங்காரித் தாள்வெகு பொங்கமதாய்
மேற்கட்டி கட்டிவிட்டாள்—மேல்
விதானமுஞ் செய்துநி தானமதாய்ச்

சூற்கட்டு மேகநிறப்—பட்டுச்
சூத்திரஞ் செய்தச லாத்திவிட்டா
ளப்பா லெனையிருத்தி—யுள்
ளடக்கமாய் வீட்டில் முடக்கிக்கொண்டு

கிழட்டோரி போற்கிடக்குந்—தாய்க்
கிழவிக் கெனதுசீர் வளமை சொன்னாள்
கேட்டாள் மனமகிழ்ந்தாள்—கெட்டி
கெட்டியென் றேபாயை விட்டெழுந்து

ஆட்டினைக் கண்ட புலிபோல்—மாமி
அத்தைவந் தாள்வெகு தத்தரமாய்ப்
போழ்வாய் திறந்தலறி—மெல்லப்
பொருமிப் பொருமி யிருமிக்கொண்டு

தள்ளாடித் தள்ளாடிக்—கைத்
தடிக்கம்பை யூன்றி நடக்கலுற்றாள்
வயிற்றுக்கு நாலுதனம்—அந்த
மட்டிமு ழந்தாளுக் கெட்டுதனம்

கயிற்றுப்பைக் கூறைபோலே—சுரைக்
காய்போ லலைந்திடப் பேய்போலே

155



சவரி நரைத்தலைச்சி—முன்னே
சுட்டிச் சுருள்வைத்துக் கட்டுமெட்டாய்ச்
சுவருக்குள் ளேபதுங்கி—யந்தத்
தோப்பாடி மாப்பிள்ளை வாருமென்று

ளாமா மெனவுரைத்தேன்—தன்
னலைவாய் திறந்து கலகலெனப்
போமோநான் செய்ததவ—மென்று
பூத்தான மாய்ச்சில வார்த்தைசொன்னாள்

துரைமகனென் வீட்டில்வரக்—கண்ட
சொப்பன மின்று பலித்ததென்றாள்
குரவை யிடுங்கெவுளி—முன்
குறித்த நிமித்தம் பலித்ததென்றாள்

தேனார் மொழியாட்கு—நல்ல
சீரான மாப்பிள்ளை மார்வரவே
மீனாட்சி யம்மனுக்கு—மவள்
வேந்தற்கு நூறுபொன் னேர்ந்துகொண்டேன்

அந்தப் படிதானே—இவட்
காஸ்தான மாப்பிள்ளை வாய்த்தீரோ
தொந்தம் விட்டுவிடுமோ—மனச்
சூதறி யாளிந்தப் பேதைமகள்

பன்னி ரண்டுவயசா—யுள்ள
பசலைச் சிறுக்கியும் வசமானாள்
கன்னி யளித்துக்கொள்ளுங்—காமக்
கப்ப லுமக்கு வசப்பட்டதே.

பெற்றேன் வளர்த்தேனா—னிந்தப்
பேதைச் சிறுக்கிக்குன் பாதமல்லால்
மற்றொரு தஞ்சமில்லை—யென்
மடப்பிடி யுங்க ளடைக்கலங்காண்

142628

ணென்றே பலபேசி—யென்னை
யெத்திப்போட் டேமாமி யத்தைபோனாள்

மன்றல்தரும் பூங்குழலாள்—வெகு
வன்ன முடனேவந்து வென்னீர் விட்டாள்

குளித்தே மனைபுகுந்தேன்—அவள்
கூடக் குளித்தங்கே வேடிக்கையாய்க்

களிப்பாகச் சோறுமிட்டாள்—பெண்ணைக்
கண்ணிற்கண் டாற்சோற்றை யுண்ணப்போமோ

படுபாதிச் சோற்றையுண்டேன்—மதன்
பாணம்பட் டார்தமக் கூணு முண்டோ

கடிகமழ் சந்தனமும்—வாசக்
கஸ்தூரி யுங்குழைத் தப்பினேந்தாள்

கையா லணைத்தணைத்தே—யிரு
காதிற் புழுகுச வாதுவைத்தாள்

தையலவள் தனக்கு—நானுஞ்
சந்தன மும்புழு கும்புனைந்தேன்

வன்னத் துகில்களைந்தாள்—அந்த
மன்மத வேள்திருச் சன்னிதிக்குச்

சின்னத் துகிலுடுத்தாள்—சிவு
தெள்ளுகொட் டைப்பாக்கு வெள்ளிலையுந்

தந்தாள் சுருள்மாறி—யவள்
தம்பலம் உம்பருக் குங்கிட்டுமோ

சுந்தரச் செவ்விதழ்மேற்—கைச்
சுருள்வைத்துப் பாதி பருகச்சொல்வாள்

கொவ்வை யிதழ்மீதி—லின்ப
கோமள மாகவே முத்தமிட்டேன்

சவ்வாசு கெட்டியென்றாள்—சில
தாடன வோசைகள் போடலுற்றாள்

விடியாம னேர்ந்துகொள்வாள்—விழி
வெட்டிக்கொள் வாளாவிக் கட்டிக்கொள்வாள்



யடிமேற் சரிந்துகொள்வா—ளிரு
வள்ளத் தனத்தின்மேற் கிள்ளுவைதரே

முகத்தில் முகத்தைவைத்து—வாயில்
முத்திக்கொள் வாள்சற்றே கத்திக்கொள்வாள்

சகஸ்திரப் பணம்பெற்றிடும்—பொற்
சதங்கைப் பதங்கொண் டுதைத்திடுவா

ளுதைந்த மலர்ப்பதத்தைக்—கண்ணி
லொத்திக்கொண் டேன்மேலே தொத்திக்கொண்டாள்

துதைந்த களபதன—விரு
துங்கக் குவட்டிலொ துங்கிக்கொண்டேன்

வன்னச் சிறுதுகிலைக்—கையால்
மன்னிக்கொண் டேனவள் பின்னிக்கொண்டாள்

பொன்னங் கலமீது—நல்ல
புதுமண மாலைகள் கமகமென

அரிய மணம் வீச—மன
தாவ லுடன்கண்டு சேவைசெய்தேன்

ஒருவொ லு குள்ளொளித்தாள்—நாணி
யூடிக்கொண் டாள்கண்ணை மூடிக்கொண்டாள்

பவள விதழையுண்டேன்—மணிப்
பந்துத் தனத்தைமு கந்துகொண்டேன்

அவடான் புளகிக்கவே—யிரண்
டாகங்கள் நாகங்கள் போற்பிணைந்தேன்

தாராள மாய்த்திருகி—யிட
சாரிசுற்றி வல சாரிவந்தாள்

வீரா வேசமுடன்—தழுவி
மேற்கொண்டு மாமயில் போற்குழைந்தாள்

தண்டைசி லம்பலம்பக்—கைச்
சரிகை யுடனெட்டுக் குரல்முழங்கக்

கொண்டை சொருக்கவிழக்—குழை
கூராடு வேல்விழி போராட

இரண்டு குழைபாடச்—செப்
பிசைந்த தனங்க ளசைந்தாடப்

புரண்டு புரண்டாடி—மார்பிற்
பொற்பணி முத்தார மற்றுவிழ

வஞ்சி யிடைதுவளத்—தன்
மயிர்க்கூச் செறிந்து வுயிர்த்துவிம்மி

கஞ்ச முகம்வேர்க்கக்—கட்
கடையுந் துடித்துப் படபடெனத்

தன்னை மறந்துவிட்டாள்—நான்
சலசலென் றேயங்கம் வெயர்த்துவிட்டேன்

பொன்னையும் வெள்ளியையு—மொன்றுப்
போட்டே யுருக்கிய நாட்டமென

உவப்பு மிகுந்திடவே—தாவி
யுதித்திடு மின்பங் குதித்திடவே

துவர்வாய் வெளுப்பேறக்—கண்கள்
துப்பு நிறம்போற் சிவப்பேற

அரவஞ் செய்யாமல்—உள்
ளழுந்தியே நெஞ்சி னுறங்கினளே

முதுகைக்கை யாற்றடவித்—தன்
முகத்தைத் துடைத்து நகத்தாலே

மதுவார் குழல்கோதினேன்—தன்
மனந்தெளிந் தங்கே யெழுந்திருந்தாள்.

நகைத்து நகைத்தொல்கியே—கையால்
நாணித்தன் மானத்தைப் பேணிக்கொண்டாள்

திகைத்தாள் கலைதேடித்—தேடிச்
சேலை யுடுத்தியப் பாலேநின்றாள்

விசிறி யெடுத்தசைத்தாள்—வந்து
மேல்பிடித் தாளிரு கால்பிடித்தா

ளிசையும் பதம்படித்தாள்—மருந்
திட்டகொட் டைப்பாக்கும் வெற்றிலையுங்



கலவி மயக்கத்திலே—தந்தாள்
கைக்குரங் காகவே சிக்கிக்கொண்டேன்

திலத நுதல்மடவா—ளென்னைத்
தெட்டி மடிச்சேலை கட்டவென்றே

அந்திக் கடைபார்ப்போம்—வாரு
மையாவென் றாள்நானு மெய்யெனவே

முந்தி நடக்கலுற்றேன்—ஆசை
மூட்டிக்கொண் டேயென்னைக் கூட்டிக்கொண்டு

சவுளிக் கடையிற்சென்றாள்—பத்துச்
சல்லாச்சே லைவிலை சொல்லச்சொல்லி

அவளென் முகம்பார்த்தா—ளதுக்
கைம்பது பொன்னையு முன்பறித்தாள்

மறுத்தோர் கடையிற்சென்றாள்—முத்து
மாலையுங் காதிற்பொன் னோலையுமே

சறுக்காமற் சென்றெடுத்தாள்—வாங்கித்
தரப்போகி றாரென்று கூறிநின்றா

ளிருநூறு பொன்முடிப்பை—நா
னெடுத்துச் சுருக்காய்க் கொடுத்துவிட்டேன்

மருமாலைப் பூங்குழலாள்—கண்
மருட்டியே நெஞ்சைச் சுருட்டிக்கொண்டே

அடுத்தோர் கடையிற்சென்றாள்—சிலம்
பாடகத் தாற்செய்த பாடகமுந்

தொடுத்தே பவளங்களு—முத்துச்
சுட்டிக ளுந்தங்கக் கட்டிகளும்

விரைவாகச் சென்றெடுத்தாள்—கை
விதியற்ற பேர்கள் கொதிகொதித்தால்

வருமோவென் றேங்கிநின்றாள்—முக
மாறாமல் வாரியெண் ணூறுபொன்னைக்

கைமேற் கொடுத்துவிட்டேன்—அந்தக்
கள்ளியிந் தப்படி யுள்ளதெல்லாம்

கொய்தாய்ப் பறித்துக்கொண்டா—ளென்னை
நோக்கித்தன் கைவச மாக்கிக்கொண்டே

இன்னம்பணந் தாருமென்றாள்—கையி
லில்லையென் றேனல்ல தொல்லையென்றாள்

பின்னை யொருவனுடன்—சென்று
பேசிநின் றாள்நானுங் கூசிநின்றேன்

தட்டிப் பறித்துங்கொண்டே—வாங்குந்
தட்டுமுட் டெல்லாமோர் பொட்டணமாய்க்

கட்டிச் சுமக்கச்சொல்லி—வழி
காட்டித்தன் வீட்டுக்குக் கூட்டிச்சென்றே

சுமையைப் பறித்துக்கொண்டே—யென்னைச்
சுற்றுத்திண் ணைதனிற் பற்றிவிட்டாள்

அமையாத காதலினால்—விலை
யாள்போ லவள்பாதத் தாள்போலே

திரிந்தேன் சிலகால—மேக
தேசமாய் வார்த்தைகள் பேசலுற்றாள்

புரிந்த பழவினையோ—சொன்னாற்
போகலொண் ணாதடா ஆகெடுவாய்

பொதுமாதர் சையோகஞ்—சும்மா
போட்டுக் கிடக்கென்றோ கேட்டுவந்தாய்

சதுர்வேதன் கற்பனையோ—வென்று
தட்டிச்சொன் னாளத்தை கேட்டுக்கொண்டே

வந்தாளே தாடகைபோற்—பொக்கு
வாயைத் திறந்துபேய் நாய்போலே

நிந்தனை வார்த்தைசொல்லி—யென்னை
நேராடி யேவெகு போராடினாள்

வாடா அரண்மனைக்குள்—வர
மாட்டேனென் றாலெங்கள் வீட்டைவிட்டுப்



போடாகள் ளப்பயலே—யென்று
தூசலிட் டேபரி யாசம்பண்ணி

யாறுநா ளேகொடுத்தா—ளென்
னளப்பரி யாமற் சளப்படுறாய்

சோறுங் கறியுமிட்டே—யுன்னைச்
சும்மா அணைத்திடச் சம்மதியோ

எனவே கிழட்டோரி—யென்னை
பேசிக்கொண் டேதலை வாசலிலே

மனம்நோகத் தள்ளிவிட்டாள்—போக
மாட்டேனென் றேனெங்கள் வீட்டுக்குள்ளே

கள்ளன் திருடவந்தா—னென்று
சாவென்று கூவென் றபயமிட்டாள்

மெள்ள ஒளித்தொளித்து—நானும்
விட்டுப் பிரிந்தேனே சிட்டுப்போலே

பழிகாரி ஆசையினா—லெட்டிப்
பார்த்துப் பதைத்துக்கண் பூத்திடவே

கழுவடி நாய்போலே—வீட்டைக்
கால்தேயச் சுற்றிச் செயலழிந்து

தாட்டீக மாகச்சென்றேன்—நடுச்
சாமத்தி லேயொரு கோமுட்டிதன்

வீட்டைப்போய்க் கன்னமிட்டே—யந்த
வேசைக்கென் றேதங்கக் காசுப்பையைத்

திருடி யெடுத்துக்கொண்டே—வந்து
சீக்கிர மாயந்தத் தாய்க்கிழவி

யருகாக முன்னேவைத்தேன்—கண்
டருமை யுடனே மருமகனார்

வந்தீரோ வென்றுசொன்னாள்—நானும்
மாமிஆந் தேவந்தேன் வந்தேனென்றேன்

சுந்தர வேசைகண்டா—ளென்னைத்
தொட்டுக்கை யாறவே கட்டிக்கொண்டாள்

கெட்ட குணக்காரி—தாய்க்
கிழவிசொன் னாலென் வளவுதனை

விட்டுப் பிரிவானேன்—நீர்
வெறுத்தால்நா னாசைபொ றுப்பேனோ

என்றாள் பரிசுத்தம்போல்—நெஞ்
சிசைந்திடக் கண்ணைப் பிசைந்தழுதா

ளன்று முதலாக—முன்போ
லஞ்சாறு நாளாகச் சஞ்சரித்தே

னிருக்குஞ் சமையத்திலே—மகிழ்ந்
தெண்டிசை போற்றிய கண்டிமன்னன்

திருப்பார மார்புதன்னிற்—போட்ட
சித்ரப் பதக்கமுங் கொத்துமுத்து

மாலையுங் கொண்டுவந்தால்—முற்றும்
வைப்பிருப் பேனிது தப்பாதென்றே

சாலமா யாணையிட்டாள்—நானுஞ்
சம்மதித் தேன்மனம் ஸம்மிதமாய்

அந்நேர மேநடந்தே—எனக்
காதர வாய்ச்சில சேதிசொல்லக்

கன்னி தொடர்ந்துவந்தாள்—மனங்
காதலித் தாற்போலே பேதலித்தாள்

வன்னெஞ்சி னாடவரைத்—தினம்
வம்பாக மாதர்கள் நம்புவரோ

என்னெஞ் சிருக்குதில்லை—நீ
ரெழுந்து துணிந்து நடந்தீரே

கருதார் தொழும்புலியே—யும்மைக்
கண்டாற்போ லேமனங் கொண்டிருக்க

வொருமுத்தந் தாருமென்றாள்—வந்
தளவாகக் கட்டித் தழுவிக்கொண்டா



ளனுப்பிக்கொண் டேநடந்தேன்—பின்னை
யானைநி னைந்தோகண் ணீரொழுகக்

கனைத்துக் கனைத்தழுதாள்—நானுங்
கண்ணைத் துடைத்தவட் குண்மைசொல்லிப்

பெயர்ந்து நடக்கலுற்றேன்—ஆசை
பின்னிழுக் கக்கன்ம முன்னிழுக்க

அயர்ந்து மதிமயங்கி—நா
னலைவாய்த் துரும்பாய்க் குலைகுலைந்து

திண்டாடி யேநடந்தேன்—மெய்த்
திருப்பரங் குன்றை விருப்பமுடன்

கண்டாவ லோடுசென்றேன்—வேற்
கையன் சரவணப் பொய்கைகண்டேன்

குணக்கோலக் குஞ்சரியும்—நங்
குகப்பெரு மாளும் மகிழ்ச்சிபெறு

மணக்கோலக் காட்சிகண்டேன்—கண்டு
வந்தனை செய்தங்கி ருந்ததற்பின்

நேமத்தெய் வேந்த்ரப்பட்டன்—கண்டு
நீறுதந் தான்கோயிற் சோறுதந்தான்

சோமாசிப் பட்டர்வீட்டிற்—சென்று
சோற்றையுண் டேன்பசி யாற்றிக்கொண்டேன்

நிலவு வெளிச்சத்திலே—சுற்றும்
நித்திரை போகாமற்—றத்தரமாய்

புலிபோல் நடந்துசென்றேன்—திருப்
பூவணத் தைக்கண்டு சேவைசெய்தேன்

போது விடிந்ததுவே—அந்தப்
பொன்னனை யாளெனு மின்னனையாள்

கீத மொழிப்பாவை—கையாற்
கிள்ளிமுத் தம்மிடும் வள்ளலையே

சேவித்துப் பாலநடந்தேன்—துரைச்
சேதுபதி ராம நாதபுர
மேவிக் களிகூர்ந்தே—னங்கே
மேலாறி னேனிரு காலாறினேன்
ராமே சுரத்திற்சென்றேன்—ராம
நாத ருடன்மலைக் காதலியை
வார முடன்பணிந்தேன்—கடல்
வாணிப [illegible]நான் றோணியேறிப்
போனேன் கண்டிதேசத்திற்கு—அந்தப்
பொன்னாரு ராகிய நன்னகரிற்
றானே களவுசெய்ய—வெகு
தந்திர மாகநி னைந்துகொண்டேன்
கற்கோட்டை கன்னமிட்டேன்—கண்டிக்
காவல னன்பாக மேவிவளர்
பொற்கோயில் காவலுக்குள்—முத்துப்
பொக்கிஷத் திற்புகுந் துக்ரமுடன்
மாணிக்கப் பொற்பதக்க—முத்து
மாலையோ ராட்சுமை போலெடுத்துத்
தோணித் துறையில்வந்தே—னொரு
தோணிக்கார னட்புப் பேணிக்கொண்டேன்
விரைவாய்க் கடத்திவிட்டான்—ரா
விடியுமுன் றாத்துக் குடியில்வந்தேன்
கரைசேர்ந்த சந்தோஷத்தால்—வலக்
காலழுத் திக்கொண்டேன் மேற்றிசையை
நாடி நடக்கலுற்றே—னருள்
நல்லோர் தொழுந்திரு நெல்வேலியில்
வாடாமல் வந்துவிட்டேன்—வடி
வாளையும் வேய்முத்தர் தாளையுமே
நேச முடன்பணிந்தே—னருள்
நேச மிகுந்ததென் காசிதன்னிற்



கூசாமல் வந்துவிட்டேன்—கோயிற்
கோபுர வாசலிற் றமதித்தேன்
அகிலேச னைப்பரவி—யுல
கம்மனைச் சேவித்து ரம்யமுடன்
சுகமாய் வருகையிலே—மதச்
சுந்தர வேள்தொழு மிந்த்ராணிபோற்
சின்னஞ்ச மாணிக்க—மெனுஞ்
சிமோட்டி யைக்கண்டு மாமயலாய்ப்
பின்னே தொடர்ந்துசென்றேன்—மனப்
பேராசை யோடென்னை வாருமென்றாள்
உள்வீட்டிற் கூட்டிச்சென்றாள்—நெஞ்
சுரிமை யுடன்வைத் தருமையிட்டாள்
எள்ளளவுங் கூசாம—லங்
கெடுத்த வுடைமை கொடுத்துவிட்டேன்
மாமோ கினியனையாள்—சுக
மாகப் புணர்ந்தனு போகஞ்செய்தாள்

### விருத்தம்.

செகமகிழ் திலத மென்னத் திகழ்ந்ததென் காசி யூரி
லகமகிழ் வுடனே மேவி யமர்ந்துநா னிருக்கு நாளிற்
சுகமத விசய ரெங்கச் சொக்கநா தேந்த்ர தீரன்
மகபதி போற்றென் பூமி மண்டலங் காண வந்தான்.

### சிந்து.

குரவணி புயப்பெருமாள்—அழகிய
குகப்பெரு மாளறு முகப்பெருமாள்
சரவண பவப்பெருமாள்—மூவிரு
தலைப்பெரு மாள்திரு மலைப்பெருமாள்
ஆனைக் கிளையபெருமாள்—திருமலை
யருட்பெரு மாள்நல்ல தெருட்பெருமாள்

சேனைத் தலைவர்பெருமாள்---உமையொடு
சிவப்பெரு மாள்செய் தவப்பெருமாள்
காவிக் கிரியிற்பெருமாள்---பன்னிரு
கரப்பெரு மாள்குரு பரப்பெருமாள்
தாவித்து ரங்கப்பெருமா---ளருள்பெறு
சுரர்பெரு மாள்முனி வரர்பெருமாள்
பேசிய தமிழ்ப்பெருமாள்---ஒரு
பிடிப்பெரு மாள்குறக் கொடிப்பெருமாள்
தேசிகக் குருப்பெருமாள்---திருமலைத்
தெய்வப்பெரு மாளெங்கள் சைவப்பெருமாள்
குருக்களுக் கருட்பெருமா---ளாவினங்
குடிப்பெரு மாள்சேவற் கொடிப்பெருமாள்
கருதுமன் பர்பெருமாள்---சிறுதண்டைக்
காற்பெரு மாள்வடி வேற்பெருமாள்
திருமலைப் பதிப்பெருமாள்---முகவி
சிதப்பெரு மாள்சிவ சுதப்பெருமாள்
திருப்பரங் கிரிப்பெருமாள்---அருள்புரி
செந்திப்பெரு மாளெனுங் கந்தப்பெருமாள்
சோலைம லையிற்பெருமா---ளானந்த
சுகப்பெரு மாளாறு முகப்பெருமாள்
ஆலச்சிலை வேட்பெருமாள்---குன்றுதோ
றுடும்பெரு மாள்புகழ் சூடும்பெருமாள்
அரிக்குரை சொல்லும்பெருமாள்---பரமா
னந்தப்பெரு மாளெங்கள் சொந்தப்பெருமாள்
திருப்புகழ்க் கவிப்பெருமாள்---சூரனைச்
சீறும்பெரு மாள்மயி லேறும்பெருமாள்
சுருதிகள் தேடும்பெருமாள்---வீரவாகு
துணைப்பெரு மாள்சர வணப்பெருமாள்
அருமை மருகப்பெருமா---ளெனைவிலை
யாண்டபெரு மாள்கிருபை பூண்டபெருமாள்



167

சிந்தைக்கி சைந்தபெருமா---ளடியவர்
தேடும்பெரு மாள்விளை யாடும்பெருமாள்
சுந்தர மயிற்பெருமாள்---காமன்மைத்
துனப்பெரு மாள்பர மனப்பெருமாள்
திருமலைப் பேர்படைத்த---கச்சிநகர்த்
திருமலையா திபனருள் வீரப்பன்
விருதிடும் ரணவிசையன்---சொக்கநாத
வேந்தனுத வியரா சேந்த்ரபதி
முரசதிர் வாசலினான்---ரங்கக்கிருஷ்ண
முத்துவீ ரேந்த்ரனருள் புத்ரதீரன்
துரைகள்ப ரவிபசிங்கம்---விசையரங்கச்
சொக்கநா தேந்த்ரனெனுஞ் சக்ரபாணி
யடல்விடை யவனாடும்---வெள்ளிச்சபை
யான்மது ரைச்சமஸ் தானபதி
வடவரு வியிலாடிக்---குற்றால
வரதனைப் பரவவே விரதமுடன்
திருவடித் தேசந்தன்னில்---நாலுவகைச்
சேனையுட னேமத யானையில்வந்தா
னுருமிடி போற்குமுறி---யானைப்பேரி
யொட்டகைப் பேரிதிசை யெட்டுமுழங்கக்
இடிபிடிப் பலகைபம்பை---மல்லாரி
கிளர்துடி முரசுகள் முழவினொடு
மடமட மடமடெனப்---பதினெட்டு
வாத்திய முழங்கவே நேர்த்தியுடன்
திடமலை வருவதுபோற்---கடகரித்
திரள்வர அதனொடு புரவிகள்தாம்
கடலலை போல்வரவே---முன்னும்பின்னுங்
காலாட்ப டைநெருங்கக் கோலாகலன்
லட்சுமி பதிராய---னெனுமொரு
நரபதி யுடனென் றுரைகள்வரத்

தெட்சண பூமியெல்லாம்—வளமேவித்
திங்களுமும் மாரிபெய்ய எங்குஞ்செழிக்கத்

தளவாய் குமாரத்தளவாய்—புத்திதனிற்
றூரணிக்குள் மிக்கான நாரணப்பய்யன்

எளியவர் தாயகமாம்—வெங்கிடகிட்டின
ராகவாச் சாரியெனும் பூகிவரவே

வடகான் கிலுசுடனே—பீருகான்
வாவுகான் மீராகான் தாவுதுகான்

அடல்பெறு முகம்மதுகான்—முத்தீசுகான்
அசனுகா னுசனுகான் மாருதுகான்

மாத்தா னலுக்குச்சாய்பு—சேகுகான்
வாலுகான் சருவாணி குலுபுகான்

முத்திசாய்பு மீராசாய்பு—அருள்பெறு
மோகன சாய்பினொடு சேகுசாய்பு

வீரப்புலி மீசுருகான்—சுகாமு
மீராசு கானொடு தாரேசுகான்

கோரத்தறு கண்விசிகச்—சவ்வாசு
கோரியுட னேவந்த காரிசாய்பு

துங்கப் பரிகளேறி—ரணமுக
துரந்தர ராகவே பரந்துவர

ஆறைப் பதியில்மேவும்—துரைமயி
லப்ப னுதவுமழ கப்பராயன்

வீறிட்ட தளஞ்சூழச்—சிவிகையின்
மேவிய புலிபோற் றுவிவர

மீனக் கொடிபிடிக்கவே—தினந்தினம்
விருதிட்ட மன்னியரைப் பொருதிட்டமால்

சேனைத் தலைவர்தலைவன்—றேவையிற்
சேது பதிதளமு மோதிவரவே

வெம்பிப் பொருமருவலார்—கெடிபுக
மிளவன்போல் நாலுவகைச் சேனையுடனே



அம்பைக் குலசேகரன்—எனவந்த
ஆண்டுகொண் டார்படை தூண்டிவரவே

செகதல பரிநகுலன்—கம்பளத்திற்
செகவீர ராமனெனு மகராசன்

சுகமத வேளையான்—பணியாத
துட்டர்தொழுங் கருக்கோட்டை யெட்டன்வரவே

வடமலை யெனும்புயத்தான்—றென்மலை
வரதுணை னெனவந்த நரராசன்

கடகரிப் படையுடையா—னழகிய
கன்னன்மதன் சின்னத்தம்பி வன்னியன்வரப்

பாளையக் காரர்தம்மிற்—றிரிகூட
பதியெனப் பேர்பெற்ற அதிவீரன்

வாளபி மனுக்கபிமன்—றினந்தினம்
வணங்கலார் வணங்குஞ்சின் னணைஞ்சேந்த்ரன்

வேதமறை யோர்தமக்குஞ்—சைவநெறி
மித்துருக்க ளுக்குமன்ன சத்திரஞ்செய்தோன்

வரதர்குற் றலருக்கே—சித்ரசபை
வளம்பெறச் செய்திடுஞ்சின் னணைஞ்சேந்த்ரன்

எங்கடிரு மலைதன்னிற்—றிருப்பணி
பெல்லாஞ்செய் தருள்பெறு வல்லமைக்காரன்

தூங்கக் குமாரசாமிக்—காறுகாலஞ்
சோராமற் பூசிக்குமு தாரதீரன்

மழுவைத்த கரதலனே—பெரியசு
வாமியைப் பரவிய நேமியினான்

இளவைச்சின் னணைஞ்சேந்த்ரன்—றளத்தொடு
கெருடக் கொடிபிடித்து விரைவில் வரக்

கொஞ்சிய பரிநகுலன்—குண்டையங்
கோட்டைக் கரசெனுந்தென் னாட்டுராயன்

செஞ்சிலை ரணவிசையன்—மருதப்ப
தேவ சேவு தாரன்வரவே.

ஆயுந்த மிழ்க்கிளுவையான்—பணியாத
அடையலார் கெடிமதி விடிபடவே

பாயும் புலிக்குற்றால—ராயனெனும்
பாதாள கேசரித் துரைவரவே

தெய்வத் திருமடந்தையும்—ரணமுக
ஜெயமக ளொடுகுவ லயமகளுங்

கல்வித் திருவுமாம்—சிவப்பிர
காசத் திருவன்மக ராசன்வரவே

இரவலர் கலிகோபன்—முத்தமி
ழெல்லாம் படித்தறிந்த சல்லாபவேள்

வரகுண ராமச்சிந்தா—மணியெனும்
வடக்காத்தான் பூலிராய னடுக்கவர

சிதவா ரணவேந்தன்—எனுந்திறற்
சிலைக்காம னுந்திரு மலைக்கொழுந்து

மதியாப் புலியரிவன்—கிளுவையில்
வடமலைச் சாளுவ னுடன்வரவே

வலிய புலியதிரவே—செகதல
மண்டலீகர் கண்டுகண்டு தெண்டனிடவே

அலைகடற் றீவுகளு—மற்றமலை
யாளமு மீழமுந் தாள்பணியத்

துத்தியஞ் செய்புகழான்—விசயரெங்க
சொக்கனா தேந்த்ரனெனு முக்ரவீரன்

சித்திரை விசுவுதன்னில்—வளமலி
தென்காசி யூரினில்வந் தன்பாகவே

பாதாள ரணவிசயன்—செம்புலி
பாலந்த னைக்கடந்தப் பாலேசென்று

சுரர்கள் முனிவரிருக்குஞ்—செண்பகச்
சோலையு மன்னசத்ர சாலையுங்கண்டு

சிகரமுங் குறும்பலாவுங்—கோவிலுந்
தீர்த்தக்கரை மண்டபமும் மூர்த்திகளும்



அகமகி ழுடனேகண்டு—திரிகூட
அருவிப்புன லாடியே யுரிமையுடன்

சுகபரி பூரணமாய்ச்—சங்கவீதி
சுற்றித் திருக்கோயில் முற்றத்தில்வந்து

மனது பரவசமுடன்—குற்றால
வரதனைப் பரவியே விரதமுடன்

தினகர ரொளிதிகழுந்—திருமதிற்
சித்திர சபையைப்போற்றித் துத்தியஞ்செய்து

தென்காசி யூரில்வந்து—விசுவேசர்
திருப்பாதம் போற்றியே விருப்பமுடன்

மின்போலச் சேரனாட்டில்—புலியூர்
மேட்டிலே பாளையம் போட்டாரே

துங்கக்கூ டாரமடித்து—விசயரங்க
சொக்கனாதேந் திரனிருந்தான் முக்யமுடனே

செங்கட் கரியும்பரியு—மரந்தோறுஞ்
சேர்ப்பாரும் வந்துவந்து பார்ப்பாருங்

குச்சுகள் கட்டுவாரும்—வீதிதோறும்
கொட்டகையு மொட்டகையுங் கட்டுவாரும்

பச்சைச்சு ளுகுப்பட்டினாற்—கடைதோறும்
படங்கு விரித்ததுக்குள் ளடங்குவாரும்

இப்படிப் பாளையமெல்லாந்—தெய்வலோக
மென்னச்சிங் காரஞ்செய்து மன்னியிருந்தான்

மைப்படிக் குழலியர்வேள்—கச்சிவேந்தன்
வாசியைத் திருடவே யோசனைசெய்தேன்

மதனனுக் கவிடேகஞ்—சின்னணைஞ்ச
மாணிக்க மென்னுமிந்தி ராணிகண்டு

இதென்ன களவுபடித்தீர்—போகவேண்டா
மிந்த்ரபோக முமக்குநான் றந்துவிடுவே

னென்றாளே சீமாட்டி—யந்தவார்த்தை
யெண்ணமற் சற்றுஞ்சட்டை பண்ணாமலே

சென்றேனே பாளையத்திற்—பரகதி
தேடிய சங்கமர்தம் வேடங்கொண்டே
னுச்சிக்கொண் டையுமுடித்துக்—கொண்டைமே
லுருத்திராட்சக் குல்லா வெடுத்தணிந்து
செச்சையு மெடுத்தணிந்து—மார்பிலே
திடம்பெற வுருத்திராட்ச வடம்புனைந்து
காதினில் வேடமிட்டுப்—பாதுகை
காலி லணிந்துகையில் வேலும்பிடித்து
போதவி பூதிபெடுத்தே—புத்தளமாய்ப்
பூசி மயிலிறகால் வீசிக்கொண்டு
புலித்தோ லிடைக்கணிந்து—சந்தனப்
பொட்டுமிட்டு மேலேநீற்றுப் பட்டையும்வாங்கிக்
கழுக்குக் கழுக்கென்றதிர—வீரதண்டை
காலுக் கணிந்துசட்டை மேலுக்கணிந்து
பசலைச்சித் தாண்டிச்சிறுக்கர்—வெண்கலப்
பாளச்சே மக்கலமுந் தாளக்குச்சியும்
இசைக ளுடன்முழங்கவே—பார்த்தவர்க்
கேற்கவே யாரியக் கூத்தாடியே
காவித் திருமலைப்பிரா—னானந்தக்
களிப்பையும் யாடிக்கொண்டு நெளிப்புடனே
தாவிக் குதித்துக்குதித்து—வட்டமிட்டுச்
சாரியிட சாரிவல சாரிதிருகிப்
பாளையத் தினிற்புகுந்து—துரைமக்கள்
பாரக் கொலுமுகக்கூ டாரமுங்கண்டேன்
கூளைப்பா ளையக்கடையும்—லாயத்திற்
குதிரைப்பந் தியிலுள்ள சதிருங்கண்டேன்
தளவா யரண்மனையு—மானைகட்டுஞ்
சற்சார மும்வாசலில் எச்சரிக்கையு
முளவா யறிந்துகொண்டேன்—குச்சலிய
ரொக்கிருக்குங் கடையுடன் பொக்கிசங்கண்டேன்



கேசரி போலிருக்கும்—துலுக்கருக்
கிரமுந் தலையாரிகள் திறமுங்கண்டேன்
வாசல் மணியகாரன்—சட்டமிடு
மணியத்தி ராஜரியுந் துணிவுங்கண்டேன்
வடுகத் துரைகளிலே—வேங்கிடகிருஷ்ண
மகராசன் றிருக்கொலு முகமுங்கண்டேன்
தொடுகடற் படைவேந்தன்—விசயரெங்க
சொக்கநா தேந்த்ரன்கொலு முக்யமுங்கண்டேன்
வரதச் சிலைவிசையவேள்—செண்பக
வனப்புலி யெனப்பேர் தரித்திடுவோன்
பிரசத் தளவப்புயத்தான்—சின்னணைஞ்ச
பெருமாள்கூ டாரத் தருகில்வந்தேன்
வாசற்ப்ர தானிகளுக்கு—மென்றுரை
மக்களுக்கும் பரிசன விக்கிரமர்க்குங்
கூசாம லடுத்தடுத்துத்—திருநீறு
கொடுத்துக் கொடுத்துவசப் படுத்திக்கொண்டேன்
செம்புலி கொலுவிற்சென்றே—னென்னைமுகந்
திருத்தியே யுபசரித் திருக்கச்சொன்னான்
கம்பளி மேலிருந்து—திருநீற்றைக்
கையாற்றொட் டுநெற்றியிற் பையத்தரித்தேன்
உருத்திராட்சப் பூனைபோலே—நான்கொண்ட
வுருவத்தைக் கண்டுமகிழ்ந் தருமையிட்டுக்
கொத்துப்பருப் புஞ்சாதமும்—நெய்யுமீனுங்
கோழிக் கறியுமிரு நாழித்தயிரு
மஞ்சுமூன் றஞ்சிரண்டாய்ப்—பொதிபோலே
யாசனம் போட்டிருந்து போசனஞ்செய்தேன்
கெஞ்சிக்கஞ் சாவாங்கிப்—புகைகுடித்துக்
கிறங்கிக் கும்பகர்ணன்போ லுறங்கிவிட்டேன்
இரவு விடிந்துபோச்சு—பாலுஞ்சோறு
மிடவே நன்றாயுகண்ட மடநாய்போல்

விரைவுட னெழுந்திருந்து—தண்டுக்குச்சு
வீடுங்கூ டாரமுஞ்சென் றாடாடினேன்

இரக்கமு முறக்கமுந்தா—னில்லாத
ஏவற் பசாசர்பரி காவற்காரர்

குரக்கு முகக்குலாமர்—வாசலிலே
கூட்டமிட் டிருக்கும ராட்டியர்கள்

அளப்பையெல் லாஞ்சோதித்தே—னவர்வாழ்
வறிந்துள வாகப் பழகிக்கொண்டேன்

களத்திற் பெருக்கமுங்கண்டேன்—காசுதாரிச்
சல்லிப் பயல்களுடன் புல்லுக்கொண்டுபோய்
விலையிடு வார்போலே—லாயத்தில்
வேவுசோ தித்திடவு லாவித்திரிந்தேன்

இலகிய நவரத்னம்போற்—பரிகட்டு
லாயத்தில் மெள்ளமெள்ளப் போயெத்தினேன்
பந்திக் குதிரைபார்க்குந்—தொழிலெல்லாம்
படித்துக்கொண் டேனட்புப் பிடித்துக்கொண்டேன்

அந்தப் படியேபத்து—நாட்சென்றபி
னமாவாசை யிருள்வந்த சமயத்திலே

குதிரையைத் திருடவென்றே—நான்கொண்ட
கோலத்தைக் கழற்றியப் பாலேயெறிந்து

சதிருடன் கச்சைகட்டிக்—கருங்காங்குச்
சட்டைதொட்டுக் கண்மாயப் பொட்டுமணிந்து

நன்னரிப் புல்லுருவியும்—பூனைக்கண்ணும்
நரிக்கொம்புஞ் சிகைக்குள்ளே தரித்துக்கொண்டேன்

முன்னேகண் டோர்மயங்கக்—கண்கட்டு
மூலமந்தி ரஞ்செபித்தே ஞலகாலம்போல்

பையப் பதுங்கிடந்தேன்—காசுதரிப்
பயல்களுஞ் சாணிமாருந் துயிலக்கண்டேன்

வையத்தை விலைமதிக்குந்—துரைபடி
வாகைக் குதிரையரு காகச்சென்றே



வெம்புலி போலப்பதுங்கி—லாயத்தில்
விளக்கு நிழல்மறைவி லொளித்தொளித்துச்

சம்பிர தாயத்துடனே—தவழ்ந்துபோய்ச்
சமத்தாக விளக்கையும் அமர்த்திக்கொண்டேன்

இங்கித மாயடுத்துச்—செவிபிடித்
திஷ்டத்துட னேமுகத்தைத் தொட்டுத்தடவித்

தங்கத்தைப் போலநிற்குங்—குதிரையைத்
தாள்பணிந் தேகடி வாளம்பூட்டி

இணைந்தபா ளாசமவிழ்த்துச்—சேணம்வைத்
திருக்கிக் கழுத்திற்கட்டுத் தெரிப்புமிட்டேன்

அணைத்துப சரித்திதமாய்—மேல்வாகை
யங்க படித்திருத்திப் பொங்கம்பண்ணினேன்

கொடிக்கயிற் றினிற்பிடித்து—வெளியிலே
கொண்டுவந் தேன்கறுப்புக் கண்டுகொண்டு

நடிச்செவிச் சோடங்கிநாய்—சள்ளிட
வாளித்துக் குதிரைச மாளித்திடவே

பரிச்சத்தங் கேட்டெழுந்து—காசுதாரிப்
பயல்களுஞ் சாணிமாருங் கசகசென

நரிகுட்டி போற்கதறிக்—கூவென்று
நாப்பத றிக்குழறிக் கூப்பிடவே

பட்டாணி ராவுத்தமாரும்—வடுகரும்
பந்திக் கருகிருந்த பொந்திலியரும்

கொட்டாரப் பறையர்களும்—வந்துவந்து
கூடிக் குதிரைதனைத் தேடினாரே

கால்கள் பதறியுடம்பு—வேண்டாங்
கையை விடுமென்றுரை செய்யுங்கதைபோல்

மேலான குதிரைதனை—வெளியிலே
விட்டுவிட் டோடிப்புல்லுக் கட்டில்நுழைந்தேன்

தேசியைக் கண்டுபிடித்துக்—களவாண்ட
திருடனைத் தேடுமென்றொரு நொடியில்

வீசிய பகல்வர்த்தியுந்—தீவர்த்தியும்
விஸ்தாரக் கைவிளக்கு மத்தாப்புடன்

கதிர்க்குல முதிப்பதுபோற்—போட்டபணங்
கண்டெடுக்க வேவிளக்குக் கொண்டுவெருண்டு

பொதுப்பெண்கள் மனதுக்கொப்பாய்க்—கவிவாணர்
புகலு மிருளைப்பட்டப் பகலாக்கினார்

வற்றின குளத்துக்குள்ளே—கூளைக்கிடா
வந்து விழுந்தரிக்கும் விந்தைபோலே

சுற்றித் திரிந்துதேடித்—திருடின
தொங்கன் பதனமோ றெங்குந்தேடுவார்

ஒருவர்க் கொருவர்முந்தியே—திசைதொறு
மோடி யுளக்கண்மட்டுப் போடுமென்றார்

வெருவிப் பயந்துநானும்—புல்லுக்கட்டை
விட்டுப் பரிந்தடுத்த வொட்டுடையின்மேற்

றொத்திப் பிடித்தேறினேன்—மேனியெல்லாஞ்
சுறுக்கென முள்ளுத்தைக்கச் சருக்காமற்

பித்தரைப் போல்மயங்கி—யடங்காத
பெருந்துயர் வளைந்திட இருந்தேனே

ஒலுங்கு வளைந்துகடிக்க—முசுறுக
ளொட்டிக்கொண் டுடம்பெல்லாங் கொட்டியரிக்க

கலங்கிப் பரிதவிக்கவே—சகுனத்திற்
கடுத்துவா யெறும்புகள் கொடுக்கழுத்தப்

பெருஞ்செய்யா னட்டுவக்காலி—முதுகிலே
பிடுங்கப் பிடுங்கப்பயந் தொடுங்குமென்னைக்

கருந்தேள் கடித்திடவே—விஷத்துக்குக்
கற்றசித்தி ராரூட முற்றுமறந்தேன்

கூட்டமிட் டாள்தேட—இருதலைக்
கொள்ளிவா யெறும்பெனவே தள்ளாடி

வாட்டமுட னேமயங்கிக்—கொம்பிழந்த
மந்தி யெனவிருந்து நொந்தேனே



வடத்திடும் செப்புப்பானைக்குட்—டலையிட்டு
வாங்கமாட்டா மற்கிடக்குந் தூங்கணைப்போல்

இடிச்சத்தங் கேட்டடங்கும்—பாம்புபோ
லிருந்து மனமயங்கி வருந்தையிலே

பாந்துநிரந்து சோதித்துக்—காணாமற்
பாளையப்பட் டெல்லாந்தேடிச் சாளையப்பட்டு

மரங்களி லொளித்திருப்பான்—மரங்களை
வளைத்துத் துப்பாக்கிகொண்டு கொளுத்துமென்றார்

பாதகர்க் கிடங்கொடுத்த—உத்தமரும்
படியிற் கிளைகளொடு மடிவதுபோற்

றீதுசெய் திடுமெனக்கே—இடந்தந்த
செடிக்குங் கிரகசாரம் பிடித்ததென்றே

ஆளரவந் தனைப்பார்த்து—மரத்தைவிட்
டப்பாலே நான்வைச்சுத் தப்பையிலே

பாளாசக் கயிறுதட்டி—மாடுபோலே
பாழ்ங்கிணற் றினிற்சென்று வீழ்ந்தேனே

ஆனைலத் தியுங்குதிரை—மூத்திரமு
மடங்காத நாற்றநாறுங் கிடங்குக்குள்ளே

பூனைக்குட் டியைப்போலே—விழித்தங்கே
பொடுக்கென்று மற்பதுங்கிக் கிடக்கையிலே

இடுக்கென்று நான்விழுந்த—சத்தங்கேட்டுச்
சேருவை காரர்தலை யாரிமாரும்

வடக்குத்தித் துலுக்கர்களுங்—கொடிய
மராட்டியச் சேவகருந் தாட்டிகமாய்

வந்து வளைந்துகூடித்—தொங்கப்பயல்
வசமானான் கிணற்றுக்குள் நிசமிதென்றே

பந்தங்கொ ளுத்திப்பார்த்துக்—கிடக்கிற
பரிசுகேட்டைக் கண்டிது வரிசையென்றார்

பூவலர் காவிச்சுனைத்—திருமலைப்
புண்ணியனைத் தினந்தின மெண்ணிவழுத்தும்

நாவலர்க் கிடுக்கண்செய்யுந்—துஷ்டனைப்போல்
நரகிற் கிடந்தானே துரோகியென்பார்

தோட்டுக் கடம்பனைக்கண்டு—திருமலைச்
சுனையில் முழுகியருச் சனைபுரியா

மோட்டுக் குலாமனைப்போற்—திருடினை
முட்டாட்ப யல்வந்தகப் பட்டானென்பார்

சீயென் றருவருப்புடன்—என்னைக்கண்டு
சீறி யுடல்நடுங்கக் காறித்துப்புவார்

பேயென்று பயந்தோடிச்—சங்கடைப்
பேய்பிடித்துக் கொண்டிடல் மாய்வாரும்

தள்ளாடித் தள்ளாடியே—மூக்கைப்பொத்தித்
தலைநடுங்கிக் கொண்டோடி யலைவாரும்

கள்ளனென்று சொல்லமாட்டாமற்—கேட்டவர்க்குக்
களகளென் றுபயந்து குழறுவாரும்

மனித னிதற்குள்விழுந்து—பிழைப்பானோ
மலைப்பாம் பிருக்குமென்று கலகலந்து

இனிநின்றால் மோசமென்று—மயங்களி
லேறுவாரும் பையப்பையப் பாறுவாரும்

கள்ளன்வந்து விழுவானோ—கோவேறு
கழுதை விழுந்ததென்று மொழிவாரு

முள்ளபேய ரெல்லாம்பதறி—யிப்படியே
யொருவர்க் கொருவர்சொல்ல வெருவாமற்

கடுத்துச் சினத்துமீறி—யஞ்சாறு
காசுதா ரிப்பயல்கள் துசியோடி

அடுத்துக் கிணற்றிலிறங்கிக்—காலுங்கையு
மழுத்த முடனேபிடித் திழுத்திழுத்து

வெளியிலே கொண்டுவந்து—பயித்திய
வெறிதீரத் தண்ணீர்விடுங் குறிபோலே

குழியில் விழுந்தநாற்றம்—போகவே
குளிப்பாட்டி னூர்களென்னை வளப்பமுடன்

179



பொழுது விடிந்துபோச்சு—காசுதாரிப்
பொட்டிமக்கள் பின்கட்டாய்க் கட்டிக்கொண்டு

வளைதடி யாலடித்துத்—தலையாரி
மறவரும் வடுகருங் கருகுறெனப்

பிடரியைப் பிடித்துத்தள்ளி—முன்னும்பின்னும்
பேய்போல் வளைந்ததட்டி வாய்குதட்டி

யடல்பெறு ரணவிசயன்—கிளுவைச்சின்
னணைஞ்சான் சமுகத்திற் கொணர்ந்துவிட்டார்

துரைகளும் பரிசனருந்—துளுவருந்
தொட்டியரு மெத்தமாரும் பட்டாணிகளும்

அரண்மனைக் குதிரைதனைத்—திருடின
ஆண்பிள்ளை யிவனே ஆண்பிள்ளையென்பார்

துதிசேர் விசயரங்க—சொக்கநாதச்
சுந்தரத் துரையேறுங் கந்துகத்தை

மதியாமற் றிருடினவ—னம்புலி
மானைப் பிடித்துவிண்ணில் மீனைப்பிடிப்பான்

விண்ணிற் பறந்துவிடுவான்—இவன்கையை
விட்டுத்தப்பி னாற்பிடித்துக் கட்டப்படுமோ

கண்ணிலே புகுந்தொளித்துச்—செவிவழி
கதமுட னோடிப்போவான் பதனமென்பார்

சங்கமாண்டி யாகவந்து—துரையுடன்
சரியிருப் பாயிருந்த நரியல்லவோ

புங்கமல்ல வோஐயரே—நேற்றொரு
பானைச்சோற் றையுமடித்த ஞானியாரே

சொந்தவா சியைப்பிடித்துத்—திருமலைச்
சுப்ரமணி யன்பாதத்துக் கொப்பிவையாம

லிந்தவா சியைப்பிடித்து—விருதாவி
லித்தனை துன்பப்படல் விதித்திருந்ததோ

பாமுத்திப் பொருள்திருடித்—திருமலைப்
புண்ணியவன்பா தத்திலொளித் தண்மைபெருமல்

தூரகத்தை யேதிருடி—இத்தனை
துரோகத்தை யென்செய்தீர் கிரகத்தரே
தத்துவமெல் லாம்படித்துத்—திருமலைச்
சைவநாய கனையறிந் துய்யாமலே
யெத்துங்க ளவும்படித்தே—யித்தனை துன்ப
மெல்லாங்கண் டீரோ தம்பிரானே
காவித் திருமலைப்பிரான்—திருவருட்
கடலில் முழுகியதிற் கிடவாமல்
தாவிய பரிதிருடிக்—கிணற்றுக்குள்
தண்டாம லேன்விழுந்தீர் பண்டாரமே
கடிக்கொண்ட குவளைமலர்த்—திருமலைக்
காங்கையன் பாதத்திலே தூங்காமலே
நடிக்கின்ற பரிதிருடி—நாயைக்கண்ட
நரிபோலே விழிக்கிறீரே பெரியவரே
திருமலைச் சுனையாடி—யானந்தத்
தெள்ளமுது துண்டுகளித் துறையாமலே
மருள்கொண்டு பரிதிருடிக்—கள்ளுண்ட
வாமிபோல மயங்கிறீரே சாமியாரே
ஞானத் திருப்புகழ்கற்றுந்—திருமலை
நாதனடி யார்பசிக்குச் சாதமிடாம
லீனக் களவுகள்கற்றுப்—பலநாய்க்
கிட்டவெலும் பானீரே மொட்டையாண்டாரே
திரைகடற் செந்தூரிற்போ—யங்கப்பிர
தட்சணஞ்செய் திடுமன்பர்க் கிச்சைகேளாமல்
அரண்மனைச் சிச்சைக்குள்ளாய்ப்—பொன்னு
ஆகமெல்லா மெலிந்தீர்சிவ யோகியாரே
ஆளுந் திருமலைப்பிரான்—பாங்குன்றுக்
கடைவொடு தினந்தினம் நடவாமற்
குளுங் காமுமிழந்து—நாளைக்கெல்லாந்
தாண்டவமா டப்போறீரே யாண்டவரே



வான்மருவு திருமலையான்—தண்டைத்தாளை
வணங்கிமுற் செனனத்தி விணங்கார்போல்
கானடையே திரிவீரோ—ஏறிக்கொள்ளக்
காலையொன்று கேளுங்காணும் ஏழைச்சாதுவே
என்று சிலர்கள்பேசச்—சிலபே
ரெடுபிடி அடியென்று கொடுகொடுத்து
நின்றதுடி யைப்பாரேன்—பாரஞ்சாறு
நெட்டைவாங்கிப் பட்டைக்குட்டாய்க் குட்டுகுட்டென்பார்
ஆளைப்பார் சங்கைபைப்பார்—ஆண்மைவிட்
டண்ணல்கள் வாசல்காக்க ஒண்ணுதோ வென்பார்
தோளைவெட்டிச் சரியுமென்பார்—மலைமேற்
சுருட்டி மடக்கிக்கட்டி யுருட்டுமென்பார்
அகப்படு வானோஇவன்—சங்கமார்த
மருமைத்திரு வேடம்விட் டுருமாறி
இகழ்ச்சி யுடனேதிருடி—லிங்கத்தை
யிகழ்ந்த பாவமேவந்து விளைந்ததென்பார்
இத்தனை தொலியல்பட்டும்—அவனிற்கு
மிறுமாப்பைப் பாருமென்று மொறுமொறுப்பார்
பித்துப் பிடித்தபயலே—மாடுமேய்த்துப்
பிழைத்தாலு மதுமெத்த வளப்பமென்பார்
மேவலர் தொழுங்குரிசில்—வனமூலை
மின்னூர் மதன்கிளுவைச் சின்னணைஞ்சான்
காவலென்றே யறிந்திருந்து—முண்டிடுங்
கட்டிலின்கீழ்ப் பார்த்தானே சொட்டனென்பார்
சுத்த ரணவசீகரன்—விசயரங்கச்
சொக்கனு தேந்திரன்பரி யைக்கவர்ந்த
கத்தத் துரோகமல்லவோ—பிடித்தின்று
காட்டிக் கொடுத்ததென்று சேட்டையடிப்பார்
வள்ளல்திரு மலைவேலர்—திருப்பண்ணை
வடவாரி நாட்டுக்குள்ளே விடையமிட்ட

கள்ளன் கிழவனாகா—னென்றுசொல்லுங்
காதையறிந் தானில்லையே பாதகனென்பார்

கன்னமிட்டார் கழுவேறுவார்—திருவேடங்
காதிலிட்டார் கைலாச மீதிலேறுவார்

அன்னமிட்டார் கரையேறுவா—ரென்றசொல்லி
னடைவறிந் தானில்லையே மடையனென்பார்

சமுசாரா சாக்கள்வடுகர்—தொங்கவாண்டு
சலைக்காய்கொட் டனவென் றலக்களிப்பார்

குமுகுமென் வேமுழங்கிக்—கம்பளத்தார்
தொங்கவாண்டு கொட்டவேயென் றங்கையோங்குவார்

துலுக்கரும் பொந்திலியரும்—அக்கிரமாக்குச்
சோதமென்று காறித்துப்பி வார்த்தைசொல்லுவா

ரலக்கணற் றிடச்சீறிப்—பகல்கண்ட
ஆந்தைமேற் காகங்கள் வீழ்ந்தாற்போல்

பலபல சனங்கூடி—யெனைவெகு
பழிப்பினைச் சொல்லியலக் கழிக்கையிலே

மலிபுகழ்ச் சின்னணஞ்சான்—சனங்களை
யையவேண்டா மென்றுசொல்லிக் கையமர்த்தி

வாரும்வாரும் பண்டாரமே—நேற்றிங்கே
வந்துபோன துக்குள்மெத்த நொந்துபோனீரோ

சோரனென்றும் பேரெடுத்தீரோ—இருவினை
துடைத்தீரோ குற்றமது படைத்தீரோ

தனவெகு மானமுடன்—கிடையாத
கைக்கயிறு பெற்றீரது முக்கியமல்லவோ

அனைவருந் தரும்பூசை—கனவடி
யாகக் கிடைத்ததுங்கள் யோகமல்லவோ

காதிலிட்ட வேடமெங்கே—புலித்தோற்
கச்சையெங்கே லிங்கமெங்கே செச்சைதானெங்கே

போதமெங்கே புத்தியெங்கே—திருநீற்றுப்
பூச்செங்கே விண்ணாணப் பேச்சுத்தானெங்கே



ஆறலு முமையிங்கே—கோவிப்ப
தல்லவென்று சொல்லிமெல்ல நகைநகைத்து

மானபரன் கச்சிவேந்தன்—சமுகத்தில்
வரிசை கிடைக்கும்போம் விரைவிலென்றார்

கள்ளக் குதிரைபிடித்து—வாருகட்டிக்
கடிவாளம் போட்டிழுக்கிப் படிவாகையிற்

றள்ளி நடத்துவார்போற்—குறடாவுந்
தாப்பணி வாருமுட்டிக் கோப்புக்காட்டியே

அச்ச முடனேமயங்கி—நான்மன
தலைமலைந் திட—அந்தத் தலையாரிகள்

கச்சிநக ராதிபதி—சமுகத்திற்
கட்டோடுங் கொண்டுபோய் விட்டார்களே

ஆரெனத் துரைவினவ—நான்வந்த
தத்தனையுஞ் சுருக்கிரண் டுத்தரமாக

ஊருங் குலமுந்தொழிலும்—அகப்பட்ட
உளவுங் களவாண்ட களவுஞ்சொன்னேன்

மெள்ள நகைத்துநகைத்து—மனுநூல்
வேதமெல் லாம்பார்த்து நீதியுடனே

கள்ளத் திருடனிவனைக்—கொல்லாமற்
கையுங்காலும் வாங்குமென்று பையவுரைத்தார்

துரையிந்தப் படியுரைக்கத்—தலையாரித்
துட்டர்சூழ்ந்து வெட்டவெட்டக் கொட்டுங்கொட்டியே

இறைமுகக் கிரியைப்போல்—சீறிச்சினத்
தெருக்கலை மாலையுந் தரித்தாரே

கடைவீதி தோறுங்கொண்டுபோய்ப்—பலபல
கடைக்குக் கடைசென்றெடுப் பெடுக்கச்சொல்லிப்

படைவீரர் தெருவுஞ்சுற்றி—வாலியன்
பாறையிற் கொண்டுவந்தார் குறைவிலிபோ

லொலியுடன் விருக்கச்சொன்னார்—அம்பட்ட
னுமைப்பதும் வந்தானந்தச் சமையத்திலே

கையிலொரு கத்தியெடுத்துத்—தீட்டியொரு
காலுங்கையும் வாங்கிவிட்டான் மேசாலிபண்ணாமல்

இரத்தங்குப் பென்றுகுதிக்க—மனம்பேதித்
திளைத்துவிட் டேனுடல் களைத்துவிட்டேன்

ஒத்த துணையுமில்லாமல்—நான்கிடந்
துளைந்துகொண் டேன்சனங்கள் வளைந்துகொண்டு

பார்த்தென்னைச் சிரிப்பாருங்—காலுங்கையும்
பதறுவா ரும்மிரங்கிக் கதறுவாரும்

வேர்த்துயிர் பதைப்பாரும்—எனைக்கண்டு
வீடு தொறும்பதறி யோடுவாரும்

ஆகிற காலமெல்லா—மடங்காம
லவிசாரி யாடிய விபசாரியாய்ப்

சாகிற நாளையிலே—அரகரா
சங்கரா வென்றுள்ள மயங்குவார்போற்

றிருமலை தனைப்பார்த்து—ஆறுமுகச்
செவ்வேளை தஞ்சமென்றே னவ்வேளையிற்

காசிரா மயன்சொல்ல—எல்லாரிக்
கருணைத் துணைவனெனும் ரணவீரன்

வீசிய பெரும்புகழான்—மனுபதி
மீனாட்சி ராயனெனு மானபரன்

தந்தச் சிவிகையேறிப்—பலபல
சதுரங்க சேனையுட னதிர்பெறவே

விந்தைப்பே ரிகை முழங்கப்—புகழ்சொல்லி
விருதுகட் டியங்கூறப் பொருமதன்போற்

றிருமலை தனிலேகிச்—சுனைதனிற்
றீர்த்தமா டிக்குகனைத் தோத்திரஞ்செய்து

வருகிற சமையத்திலே—யென்னைக்கண்டு
மகராசன் சற்றிரங்கி முகமலர்ந்து

பண்டிதர் தமையழைத்தா—னெலுமிச்சம்
பழத்துக்கும் நல்லெண்ணெய்க்கும் வளப்பமுடன்



உண்டுசுகிக் குஞ்சோற்றுக்கும்—நூறுபொன்
னொருமுடிப் பாய்க்கொடுத்துப் பரிகரித்துக்

காலுங்கையும் வாசியாகக்—காயமுங்
கட்டச்சொல் லிமகிழ்ந்து கட்டளையிட்டுச்

சாலவு மனதிரங்கித்—திருமலைச்
சந்நிதி தன்னிலேபோ யுன்னுடைய

பங்கத்தைத் தீரெனவே—சீமான்
பரிவுடன் சொல்லியவ ரரண்மனையில்

இங்கிதத் துடனேபோய்க்—கனகொலு
விருந்தே புவியெங்கும் புரந்தானே

மகத்துவத் துரையருளாற்—பண்டித
மாரென்னைக் கொண்டுவந்த வூர்தனிலே

சுகத்துட னேகாயங்—கட்டிப்புண்வாய்
சுருங்கித் தழும்பேற மருந்துகட்டிக்

கோழிச்சா றுஞ்சோறும்—நல்லெண்ணெயுங்
கொடுத்தாருண் டேனுடல் தடித்தேனே

மேனைக்கா ளையைப்போலே—பருத்துடல்
மெலிவெல்லாந் தீர்ந்தே னலியாமற்

செலவிட்ட பணம்போக—நின்றபணத்
திரட்டிக் கணக்குப்பார்த்துச் சுருட்டிக்கொண்டு

நலமொய்த்த திருமலைக்கே—போவது
நாளையென் றேயிருக்கும் வேளையிலே

சீரகத் தார்மார்பன்—புகழ்மாடன்
செட்டி யொருகுதிரை மட்டங்கொடுத்தான்

கூர்வடி வேலவனே—துணையென்று
கூறிக்கொண் டேன்குதிரை யேறிக்கொண்டேன்

பெடையென நடையார்வே—ளசைந்தாடும்
பெருமாள் வணங்கிய திருமால்சேர்

நடராச புரமுங்கண்டே—னிலக்குரு
நாதரைக் கெண்டாம்பண்ணிப் பாதைகூடிச்

சின்னண்டி மடமுங்கண்டேன்—வொத்திகழ்
திருப்பண்மை யூரில்வந்தேன் விருப்பமுடன்

பொன்னுன அறம்வளர்த்தாள்—திருப்பாதம்
போற்றிசுசீசனைத் தோத்திரஞ்செய்தேன்

மாதாக்குர் சக்கிரவாரந்—தெரிசித்து
வருகிற பத்தரைக்கண் டுருகினேன் நான்

வெகுகாந்தப் பொருளிருந்—திருமலை
நீதிற்சிங் காரங்கண்டு காதல்கூர்ந்தேன்

மாதாவின் கோயிலுங்கண்டேன்—சொக்கலிங்க
வரத கணபதியைப் பரவிக்கொண்டேன்

பேதாதி பேதமில்லாப்—புகழ்பொன்னும்
பெருமாள் மண்டபத்தி னருமை கண்டேன்

பொன்னெடுத்த மணிமார்பன்—மீனாட்சி
பூபால னன்னசத்ர சாலையுடனே

அன்னக்கா வடிமடமுங்—கண்டந்த
வடைக்கலங் காத்தவ ரிடத்தில்வந்தேன்

காளிகா தேவிசரணம்—பரவிய
நம்பியர் மடத்தில்வந்தேன் நம்பியமுட

னுழிப் பெரும்புவியெல்லா—மந்நதொழி
லகமகிழ் வுடன்செய்யுஞ் சகலகுரு

விசுவ குலத்துதித்த—அக்கசாலை
வேந்த ரெனைக்கண்டுப சாந்தியுட

னிசையு மஞ்சமங்கொடியும்—நடப்பதற்
கிணையில்லை யென்றொரு பனைமரமுந்

தந்தார் வாங்கிக்கொண்டேன்—குதிரையைத்
தானங் கொடுத்தேனொரு ஞானியார்க்குச்

சிந்தா குலந்திரப்—பனைமரஞ்
சேர்த்துத் திருமலையைப் பார்த்துநடந்தேன்

நித்திய சோபனஞ்சேர்—மங்கள
நேசத் திருமலைவி லாசத்தில்வந்தேன்



உத்தம நயகுணவான்—புன்னைவன
ஊருந்தெப் பக்குளமுந் தேருங்கண்டேன்

தும்பி முகனைப்போற்றி—யின்பமுறுஞ்
சுடர்வேலுங் கண்டுகும்பிட் டுடல்பூரித்தேன்

செம்பொற்றிரு மடந்தைசேரத்—தேரோடுஞ்
சித்திரத் தெருவுமன்ன சத்ரமுங்கண்டேன்

சிங்காரச் சோலைகண்டேன்—கும்பிட்டேன்
சிவப்பாரை முண்டனைக்கண் டுவப்பாக

கங்காளி மகமாயி—திரிசூலி
காலவி சக்திபெற்ற நீலமேகந்

துங்கக் கறுப்பசாமி—சந்நிதியுந்
தூயகால இசக்கி கோயிலுங்கண்டேன்

அங்கப்பன் மீதிலேதான்—கறுப்பன்வந்
தாவேஷம் வந்துகிட்ட வாவாவென்றே

திருநீ றெடுத்தணிந்தா—னறுமுகத்
தெய்வ மகிழ்ந்துனக்குக் கையுங்காலுந்

தருவா ரெனவுரைத்தான்—சரவணத்
தடமு மடிவார மடமுங்கண்டேன்

நயவுடன் படியேறினேன்—இடும்பேசன்
றனையுங்கண் டேனவன் சுனையுங்கண்டேன்

நயமுடன் போற்றிசெய்தேன்—இயல்போடு
நந்தகோ பாலர்செய்த சொந்தமடமு

மிடும்பவனத் தையுங்கண்டேன்—சற்றேயிருந்
திளைப்பாறி யேநடந்தேன் மனப்பூர்வமாய்

உடம்பு புளகித்துருகப்—படியேறி
யுச்சிக் கணபதிமே லிச்சைகூர்ந்தேன்

திருமலைக் கலம்பகமு—மந்தாதியுந்
திருமலை வெண்பாவும் பெருகச்சொல்லித்

திருமலை வேலவர்க்குப்—பனிரண்டு
செவிக்கு விருந்தளிக்குங் கவிக்குஞ்சரம்

பொன்னம் பலவசீரன்—செண்பகம்
புத்திரன் மடமுமன்ன சத்ரமுங்கண்டேன்

அன்னமிட் டுபசரித்தான்—மலையேறு
மலுப்புத் தீரவிருந்து சலிப்பாறினேன்

தரைபுகழ் சின்னணைஞ்சான்—வாசற்பிர
தானி யெனவேவந்த மானபரன்

திரைகடற் புவிமடந்தை—பாலகன்
செந்தமிழாற் குற்றாலத் தந்தாதிசொன்னோன்

வயித்தியப் பன்னருளா—லுதித்திடு
வள்ளலென்ன வந்தபிச்சப் பிள்ளைராயன்

சயித்திய மதிவதனன்—கட்டிவைத்த
தைப்பூச மண்டபச்சி றப்பையுங்கண்டேன்

பூசுரர்க்குஞ் சைவருக்குஞ்—சங்கமர்க்கும்
பொருந்தின படிகன விருந்தளிக்கும்

நேசன் பெரியசாமி—தான்செய்த
நித்தியசோ பனஅன்ன சத்ரமுங்கண்டேன்

சாணார் மடமுங்கண்டேன்—வரதுங்கன்
தண்டமிழ்சேர் நாலுகால்மண் டபமுங்கண்டேன்

காணாத தத்துவமெல்லா—மறிந்திரு
கன்ம வினையொழிய நன்மைபுரிந்து

திருமூப் பொருளையறிந்தேன்—அனுதினஞ்
செறிவானந் தப்படைத் தறிவானந்த

குருபுத்ர நித்தியதானந்—தருமன்னக்
கொடியும்பிச் சக்கட்டளை மடமுங்கண்டேன்

அறைக்கட் டளைமடமும்—வள்ளியம்மை
ஆதி மடமுஞ்சொக்க நாதன்மடமும்

சிறக்குந் தெருவீதியுஞ்—சுவாமிநாதன்
இட்டமுடன் சுக்கிரவாரக் கட்டளைமடமும்

மடைப்பள்ளி வாசலுங்கண்டேன்—பலர்செய்த
மண்டபங்கண் டருள்மாலைத் தெண்டம்பண்ணினேன்



செருமன்னர் குறும்படக்குஞ்—சிவராமச்
சின்னணைஞ் சானுக்கு முன்னாக

வருகுமாரச் சின்னணைஞ்சான்—அணைக்கரை
வசந்தமண் டபங்கண்டேன் நிசம்பெறவே

காணிக்கன் புன்னைவனமும்—கருணிக்கன்
காராளன் சங்கரநா ராயணனும்

வரதக்கு கனுக்குச்செய்த—திருவடி
வார்மண்ட பத்தின்விஸ் தாரமுங்கண்டேன்

திருமலைக் காளியம்மை—சந்நிதியைச்
சேவித் தகமகிழ்ந்து காவிச்சுனையின்

பெருமித மெல்லாங்கண்டேன்—கன்னிமார்
பெண்களைத் தெரிசித்தேன் கண்குளிர

ஆலவட்டம் நின்றசைய—மங்கையர்க
ளங்குமிங்குஞ் சாமரை செங்கையசைப்பக்

கோலவட்டச் சுருட்டிகளும்—இடக்கயமும்
குடைகளும் தூபமும் புடைதயங்கப்

பூரிகைத் தவளச்சங்கும்—கோணக்கொம்புப்
பொன்னினாற் செய்தபல சின்னமுடனே

பாரெல்லாம் புகழ்படைத்த—உமையொரு
பாகப் பணிக்கனூது நாகசுரமும்

நாகரீக மாய்முழங்கச்—சிவசங்கு
நட்டுவன் கைத்தாளங் கொட்டியதட்ட

மோகமங் கையராடச்—சதிமுறை
முட்டுக்காரன் மத்தளமுங் கொட்டிவரவே

பண்புறு தம்புருவிற்—சரிகம
பதநிச வென்றுநல்ல சுதிகூட்டி

நண்புறு பதம்பாடிப்—பாகவத
நாராயண னெனுமுப காரன்வரவே

தாமரைத் தாளுடையான்—திருமலைச்
சண்முகனைப் பூசைசெய்யும் உண்மையுடையான்

கோமளத் தருள்புனைவோ—னடிகையிற்
குலசேகரன்பெற்ற சிலைமாரன்

உலகமெல் லாம்புகழச்—சுனையினி
லுற்பலப் பூவெடுக்கு மற்புதவா

னிலகுசுந் தரக்குலத்தான்—தலத்தா
னிக்குமதன் விக்ரபாண்ட்ய வேதனெனும்

விப்பிர குலதிலகன்—திருமலை
மீதில்முன் னேகுவளைப் போதுங்கண்டோன்

சுப்பிர மணியநம்பி—யுதவிய
சுதனென வந்துதித்த மதுநாதனும்

சுனைக்கரை யருகில்வந்து—கன்னிமார்
துய்யபூ சைகளெல்லாஞ் செய்துமுடித்தே

நினைத்துத் தியானஞ்செய்து—திருமலை
நித்தன் மலர்ப்பதத்தைச் சித்தத்தில்வைத்துங்

கனவிக் கிரமபாண்ட்யன்—தெய்வீ
கச்சுனை யினின்முக் கால்முழுகிச்

சனமகிழ் பைங்குவளைப்—பூவெடுத்
தாள்பத்தரெல் லாம்பரவ அரம்பையரைக்

கண்டேன் பரவசமாய்—நான்மனங்
களித்தே னிருவினை களையொழித்தேன்

தண்டேன் மலர்ச்சுனையி—லன்பொடு
தானமுஞ் செய்தேனனுஷ் டானமுஞ்செய்தேன்

பூவெடுத்த நம்பிமாரும்—பரிசனப்
புண்ணியருங் கோயிலுக்குள் நண்ணினரே

தேவர்சே னைபதிகள்—கோயிற்பிர
தக்ஷணம் வந்தேன்வெகு லட்சணமுடன்

கொடிக்கம்பத் தருகில்வந்தேன்—மாயூரக்
கோவில்கண் டேன்றிரு வாயில்கண்டேன்

வடிக்குஞ்சொற் குமரனுக்கு—வளர்மணி
மண்டபஞ்செய் தேதிருத் தொண்டுபுரிவோன்



அம்பல வாணமுனி—தனைக்கண்டே
னதிபதி பழமலை நாதனைக்கண்டேன்

வெம்பிய சூர்தடிந்த—திருமலை
வேலப்பன் றிருக்கொலு வோலக்கந்தன்னில்

சித்திரச் சீர்பண்டாரக்—கருணிக்கச்
சிங்கங் குமாரசு வாமிதுங்கன்.

உத்தமத் திருப்புகழுந்—தேவார
மோதுவார் வயித்திய நாதனைக்கண்டேன்

அலங்காரத் தேவார—மோதுநின்ற
அருளான தம்பிரான்றன் றோழனைக்கண்டேன்

தண்டையொடு நூபுரமுங்—கிண்கிணியுஞ்
சதங்கையும் பாதமுந் துலங்கவேதான்

வெண்டுயி லறைஞாணுஞ்—சீராவு
மெல்லிப்பட்டுக் கச்சையு முல்லாசமும்

மடிப்பிட்ட சிறுதொங்கியு—முந்நூல்
மார்பும் பதக்கமுமுத் தாரமாலையுங்

கடிக்கொண்ட திருக்கடம்புஞ்—செச்சையுங்
காவியுங் குரவமு மேவிவிளங்க

மோகன மாலையுடன்—சரப்பணி
மோக்ஷங் கொடுக்குமுத்தி ராக்ஷவடமு

மேகாச வுத்தரீகமு—மழகுபன்
னிருபுயமு மலிகந்த பரிமளமு

மீராறு செங்கையழகுங்—கும்பகுடமு
மெதிர்பொரு சூர்தடிந்த கதிர்வேலுந்

தாராரும் பல்படையும்—வலம்புரிச்
சங்கக் கழுத்தழகுந் தங்கப்பணியுஞ்

சந்திரனும் மதிமருள—விலகிய
தண்முகக் கருணையுஞ் சண்முகமும்

விந்தைக் கபோலங்களுங் குழைகளும்
விண்டலத் திரவியொத்த குண்டலங்களு

மீசற்குப் பிரணவத்தை—முன்னு
ளினிமை யுடனுரைத்த கனிவாயும்

வாசச்செண் பகமூக்கு—மடியர்க்கு
வரும்வினை தடிந்தபன் னிருவிழியும்

புருவமும் நெற்றியழகுங்—கஸ்தூரிப்
பொட்டழகுந் திருநீ றிட்டவழகுங்

குருமணிச் சுட்டியழகு—மூவிரு
குலமணி மவுலியுஞ் சிரசினழகுஞ்

சிங்காச னத்தின்மேவு—மயில்மேற்
செக்கர்பணி போலிலங்க வுக்ரமுடனே

மாணிக்க வஞ்சிக்கொடியும்—பரிமள
மரகதக் கொடியும்போ லிருபுறமும்

ஆணிப்பொன் மணித்தவிசிற்—குஞ்சரிப்பெண்
ணரசியும் வள்ளிப்பெண்ணு மருகிருக்கச்

சாமிவீர வாகுடனே—லட்சத்தெட்டுத்
தம்பிமாருங் கண்டுகண்டு கும்பிட்டுருகப்

பூமிசை வீற்றிருக்கும்—நான்முகப்
புனிதன் பணிமாறக் கனிவினுடன்

திருமாலுந் தோத்திரஞ்செய்யக்—குறுமுனி
செந்தமிழி னூற்புகழ்ந்து வந்தனைசெய்ய

முருகவிழ் மலர்தூவி—யிந்த்ரனொடு
முப்பத்துமுக் கோடிதேவர் மெய்ப்பதம்போற்றக்

குமரா சரணமென்றே—நாற்பத்துநாற்
கோடி முனிவர்தொழப் பாடிக்கொண்டு

அமரர் பதிக்குருவுஞ்—சுக்கிரனும்
ஆனந்தக் கூத்தாடப் பானுவுடனே

அக்கினி விளக்கேந்தச்—சந்திரனு
மடக்கமா கவேநின்று குடைபிடிக்க

விக்கிரம விசையமகள்—சரஸ்வதி
விருதுகட் டியங்கூற வரிசையுடன்



தும்புரு நாரதரும்—வீணையில்
சுருதி யிசைபாட அருமையுடன்

வம்பவிழ் பனிநீருஞ்—சந்தனமும்
வருண னெடுத்திறைத்துக் கருணைபெறவே

மன்றலர் மலர்த்தாதுஞ்—சந்தனமு
மலர்மண முந்திகழ்ந்து மெலமெலவே

தென்ற லுருவமெடுத்து—மருத்துவன்
றிருக்கோவில் வாசலிற்சஞ் சரித்திடவே

பானுகம்பன் சங்கமூத—வொருநூறு
பத்துக்கை வாணன்வந்து மத்தளங்கொட்டத்

தானவர்கள் மனம்பதறத்—துந்துமி
தங்கு தகுதியென முழங்கிடவே

படைத்தலை வர்களுடனே—கணபூதப்
படைகளும் விஞ்சையரும் புடைநெருங்க

விடைக்கொடிப் பெருமானும்—பார்ப்பதியும்
வெள்ளி மலையிலிருந் துள்ளமகிழ

அரம்பையர் நடனமிட—நாகலோகத்
தரிவைய ரும்மயங்கி விரகமுற

நிரம்பிய நாவுடையான்—சேடனும்
நிகழ்வுட னின்றுதிருப் புகழ்பாட

வேதாக மங்கள்முழங்கக்—கன்னிமார்
விரைவொடு வந்துதிருக் குரவையிடக்

காதார்ந்த படைவிழியாள்—திருமலைக்
காளியுங் கூளியும் வாழிபாட

இடும்பன்வந் தடிபரவக்—கறுப்பனு
மிசக்கியும் பணிந்திட நிசத்துடனே

நெடுங்கதிர் திசைவிளங்க—வுதித்திடு
நீலக்கடல் நடுவில்வால சூரியன்போல்

வடிவேற் குகப்பெருமாள்—திருச்சுக்கிர
வாரக் கொலுவிருக்கும் நேரத்திலே

அடியா ருடன்கூடி—நானுஞ்சென்
றண்டர்பி ரான்கோலுவைக் கண்டுகொண்டேன்

கண்டுள்ளங் களிகூர்ந்தேன்—ஆனந்தக்
கண்ணீர் சொரியவேவே றெண்ணாமல்

விண்டிடு மொழிகுழறப்—புளகித்து
விம்மிவிம் மிப்பரவ சம்மிகவே

உடனே காலுங்கையு—முளைத்திட
வோடினே னானந்தக்கூத் தாடினேனே

தடமலர்க் கரங்குவித்துக்—கும்பிட்டேன்
சரணஞ் சரணந்தண்டைச் சரணமென்றேன்

உளங்களி கூர்ந்திடவே—குகன்றிரு
வோலக்கங் கண்டெனக்குக் காலுங்கையும்

வளர்ந்தவ திசயமெல்லாங்—கண்டுகண்டு
வானத்தார் புகழ்ந்திடத் தானத்தாருஞ்

செகத்தி லரசர்களுஞ்—சுக்கிரவாரந்
தெரிசித் தருள்படைத்த பரிசுத்தரு

மிகக்கிருபை யுடன்கூடி—வரிசைகள்
வேண்டியதெல் லாந்தந்தார் பூண்டுகொண்டேன்

அம்புவி தனைப்புரக்கும்—வீரப்ப
னருமைச் சுதன்கிளுவைப் பெரியசாமி

செம்புலி யெனையழைத்துத்—திருமலைச்
சேருவை காரனென்று பேருங்கொடுத்துங்

குதிரையுஞ் சாலுவையுஞ்—சுருட்டியுங்
கொடுத்தான் காவல்காக்கத் தொடுத்தேனே

சுதிரொடு வாழ்வுபெற்றுத்—திருமலைச்
சந்நிதி காத்திருந்து நன்மையடைந்தேன்

திருமலைக் குருபரனைத்—தினந்தினஞ்
சித்தமகிழ்ந் தேபரவும் பத்தசனங்கள்

இருபாதத் தாள்போலே—நடந்துகொண்
டேனுலகுங் கொண்டாட வாழ்வுபெற்றேன்



திருமலைச் சந்நிதியு—முருகனுந்
தெள்ளுதமிழ்க் குஞ்சரியும் வள்ளியும்வாழி

அருமறை வேதியரும்—சைவரு
மாழிப் புவியில்நீ டூழிவாழி

எங்கள்செந் தமிழ்வாழி—யடியவ
ரெல்லோரும் வாழிவாழி யெல்லோருமே

செங்கைகுவித் துக்குவித்துத்—திருமலைத்
திசைபார்த்துக் கும்பிட்டோரு மிசையுடனே

திருப்புகழ் சொல்லுவோருஞ்—சுக்கிரவாரத்
தெரிசனை சேவிக்க வருவோரும்

மருக்கமழ் சுனையாடித்—திருக்கோயில்
வலஞ்செய் திடுவோருந் தலந்தனிலே

நாடிக்கொண்டு கேட்போரு—மிந்தநொண்டி
நாடகத்தைப் பாடிப்பாடி யாடுவோருந்

தேடிக்கொண்டு பார்ப்போரும்—வாழிவாழி
திருமலை வாழியருட் குருவாழி.

## விருத்தம்.

சீர்வாழிசெந்தமிழ்நா வலர்கள்வாழிசெல்விதிகழ்தென்னரி நாடுவாழி
பார்வாழிபண்பைநகர் வாழி ஞான பரமாக ரீசர்மலர்த்தாள்கள்வாழி
யேர்வாழி வள்ளிதெய்வ யானைவாழி யெங்கள்திரு மலைவாழி யென்சொல்வாழி
கார்வாழி சைவர்சதுர் வேதர்வாழி காவிமலைக் குகப்பெருமாள் வாழிதானே.

திருமலைச் சுப்பிரமணியசுவாமி பேரில்

நொண்டிநாடகம் முற்றும்.

உ

திரிகூடபதி சகாயம்.

# திருமலைக் கறுப்பன்பேரில் காதல்.

——(o)——

## காப்பு.

திருக்கறுப்ப னைக்குகனைச் செவ்வேளைப் போற்றுந்
திருக்கறுப்பன் மேற்காதல் செப்ப—இருக்குரைசெய்
மெய்த்திரும லைக்குடிமி வித்தகர்ப னைப்பொருவு
கைத்திருமு கக்கடவுள் காப்பு.

சீர்மேவு செல்வத் திருமலையிற் பாதையில்வாழ்
கார்மேக வண்ணன் கறுப்பசு வாமியெங்கோன்

பருவப் புயலழகன் பாந்துவிளை யாடுந்
திருவச்சங் கோவிற் செழுங்காவில் வீற்றிருப்போன்
பெருகு புகழ்சேர் பெரிய சுவாமியெங்கோன்
மருவு கருஞ்சை வனத்திலே நின்றபிரான்

வேதாக மத்தொனிகள் மேவு புலியூரில்
மாதாவின் கோவில்மணி வாசலிலே நின்றபிரான்

ஆளி லழக னழகுக் கழகுதரும்
வேளி லழகனெழு மேகக் கறுப்பழகன்

சேவற் கொடிக்குமரன் செவ்வே டிருமலையிற்
காவற் கறுப்ப சுவாமிமேற் காதல்செப்ப

## துதி.

செச்சைப் புயத்தழகன் செவ்வே டிருமலையி
லுச்சிக் கணபதியே உன்சதங்கைத் தாள்பணிவாம்

பண்கொடுக்குஞ் செந்தமிழும் பாக்கியமு நல்கியருட்
கண்கொடுக்கு மெங்கடெய்வக் கந்தன் சரண்பணிவாம்



செறிவானந் தப்பொருளைச் சிந்தையுள்ளே காட்டும்
அறிவானந் தக்குருவி னம்பொற சரண்பணிவாம்

தகரேறு வள்ளலெங்கள் சண்முகனை யீன்ற
நகரீசர் செய்ய நளினமலர்த் தாள்பணிவாம்

திறம்வளர்த்த மூவர்துதி செய்யவுல குய்யவெண்ணுன்
கறம்வளர்த்த கன்னியெமை யாண்டவளைப் போற்றிசெய்வாம்

பூவி லிருந்தருளும் பொற்கொடிதன் னற்புதல்வ
ஞவி லிருந்தவெள்ளை நாயகியைப் போற்றிசெய்வாம்

தரையி லதிசயஞ்சேர் தண்சுனையின் மேய
கரையிற் குடியிருக்குங் கன்னிமா ரைப்பணிவாம்

கருமலையைப் போன்ற கனதனத்தாள் தெய்வத்
திருமலையிற் காளியம்மை சேவடியைப் போற்றிசெய்வாம்

செங்காவி வாவித் திருமலையைக் காத்துநிற்கு
மெங்கோ னிடும்ப னிணைச்சரணம் போற்றிசெய்வாம்

பணிகொண்ட சென்னிப் பரம னரியீன்ற
மணிகண்டன் சாத்தா மலர்த்தாளைப் போற்றிசெய்வாம்

சால இசக்கி தமிழ்வாணர் கொண்டாடும்
கால இசக்கிதண்டைக் காலைப் பணிந்திடுவாம்

சீரியங்குஞ் செஞ்சொற் செழுந்தமிழைக் கொள்ளைகொண்ட
ஆரியங்கா வைய னடிக்கமலம் போற்றிசெய்வாம்

படைக்கலங்கொண் டொன்னார் படைபொருது விண்ணோர்க்
கடைக்கலங் காத்தருளு மையன் சரண்பணிவாம்

## அவையடக்கம்.

சொற்பனுவ லாளர்முன்னே சொல்லுமென் புன்கவிதை
நெற்பயிர்முன் புல்லுருவி நேரே முளைத்ததொக்கும்

பொலியெருது முன்னமிரு பூவளவி னூலே
வெலியெருது சீறி விரைந்துசெடிப் போட்டதொக்கும்

நடனமிடு சித்ரசபை நாதர்திரி கூட
வடவருவிக் கொப்பாக வாட்டருவி பாய்வதொக்கும்

இப்பார் படைத்த வியல்வேதன் றன்படைப்புக்
சொப்பாங்க ருபவ னுநூலைஞ் சமயத்த தொக்கும்
ஆராய்ந்து கால மறிந்திருந்து தானென்றிப்
பாராம் புவியிற் பயிர்ச்செய்வே னென்பதொக்கும்
பால்கடைவார் தம்மைநித்தம் பார்த்துப் பொறுதண்ணீர்ச்
சால்கடைவா ரொப்பாய்த் தமியேனும் பாடுகிறேன்
மன்கவிதைச் செய்யதமிழ் வாணரே யென்னுடைய
புன்கவிதைக் குற்றம் பொறுப்பீர் பொறுப்பீரே

## கதை.

கர்த்தனைப் போற்றுங் கறுப்ப சுவாமியெங்கோன்
வந்தவர லாறு வகைபாகச் சொல்லுகிறேன்
தாண்டு பரியாளன் சாத்தன்குளத் துரைவிட்டுப்
பாண்டியனைச் சேவித்துப் பான்மைபெறு மந்நாளிற்
புலிப்பால் கொணர்ந்தரசன் பூவை தலைநோவைச்
சலிப்பாற்று மெங்கள்கண்டன் சாத்தன் மனமகிழ்ந்து
பாண்டிதனை விட்டுப் பருவதமெல் லாங்கடந்து
கூண்டசெழுஞ் சோலையச்சன் கோவிலிலே வீற்றிருந்தான்
காராட்டும் பைங்கூந்தற் கால இசக்கியம்மை
ஆராட் டுடையார் அரசன்மக்கள் சூழ்ந்துநிற்க
சித்தா மம்புனையுஞ் செய்யசிவப் பாறைமுண்டன்
பூதத்தா னெல்லோரும் போய்த்தானஞ் சூழ்ந்திருக்க
தோணித் துறையுடனே சுந்தரஞ்சேர் பூமுகப்பும்
ஆணிப்பொன் னாலே யமைத்தமணி மண்டபமும்
உண்டாக்கித் தேவ ருலகமிது வாமெனவே
கொண்டாடுஞ் செப்பவச்சன் கோவிலையன் வீற்றிருந்தான்
பேனைவென் றோன் பெற்றெடுத்த வீரமணி கண்டனிந்தக்
காலகண்டன் றன்சுரத்தைக் காப்பவரா ரென்றுரைத்தார்
தெய்வங்க டங்க டிறங்களெல்லாந் தான்பார்த்துக்
கைவங்கிக் காரக் கறுப்பனிவ னாமெனவே



சோதிகண்டர் கைவாட் சுதக்கறுப்ப னைக்கருணை
யாதிகண்ட ரிங்கே யழையென் றருள்புரிந்தார்
செய்ய கறுப்பனிடஞ் சென்றுசில பேய்கள்
ஐய னுனக்கே யருளிப்பா டென்றுரைத்தார்
வந்தான் றுணுக்கெனவே வாய்புதைத்துத் தாள்பணிந்தா
னென்ற னருளிப்பா டென்றானே முன்னைநின்றான்
எளியோ ரிடைந்தோர்க ளியாவருக்குந் தாயகமாய்
வழிகாவல் செய்யெனவே வள்ளல் விடைகொடுத்தான்
அன்றுமுத லின்றளவு மாதிகண்டன் சந்நிதியில்
நின்று கறுப்பு னெடுந்திசையெல் லாம்புரந்தான்
காவலஞ் சேருமந்தக் காலகண்டன் றன்சுரத்திற்
றுவளங்க டோறுமிவன் றானாக நின்றிடுவான்
பாண்டியனுக் கன்று படைபொருத சேவகனார்
வேண்டி யனுப்பி விடைகொடுக்க மேற்கேபோய்
இரவிவர்ம ராயன்முத லெல்லோருங் கொண்டாட
விரவிவர்மங் கொண்டெதிர்க்கு மேவலரைச் சூரையிட்டான்
சற்கோண மூர்த்தி சகோதரவான் றன்னருளா
லுட்கோணத் துப்படைமீண் டோடத் துரத்திவிட்டான்
நீதித் தமிழ்நா னிறைந்தவஞ்சி யூர்புரக்கும்
ஆதித்த வர்ம னகமகிழுந் தாட்டிகன்
குன்றுதொறுஞ் சேர்ந்துநிற்குங் கொல்புலியும் புல்வாயும்
ஒன்றுபடக் கூடி யொருதுறையில் மேயவிட்டான்
வெறுப்பன் கொடியோரை மெய்யருக்கு மெய்யாங்
கறுப்பன் கறுப்பனென்று காவலெல்லாங் கொண்டாட
சிலையாள னாதிகண்டன் செய்யதிரு வுள்ளத்தான்
மலையாள மெல்லா மலையாமற் காவல்செய்தான்
அன்பான தெய்வமெங்க ளாதிக் கறுப்பனிந்தத்
தென்பாண்டி நாட்டின் சிறப்பறிய வேண்டுமென்றே
மனத்தில் நினைத்தான் மணிகண்டன் சந்நிதியில்
நினைத்ததெல்லா மங்கே நிகழ்த்தினா னேகறுப்பன்

மந்தகா சம்புரிந்து வள்ளல் விடைகொடுக்கச்
சந்தோஷ மாகவந்து சாலை புகுந்தானே
செய்ய திருவரையிற் செம்பொற் கலையுடுத்திக்
கைவங்கி சேர்த்துக் கறுங்கச்சை யாலிருக்கிச்
சிற்றிழைசேர் வண்ணச் சிகைதாடு சுற்றிமற்றப்
பொற்சரிகை யிட்ட புரிஷஉரு மாலைகட்டி
ஆகத்துக் கொப்ப வணிந்தபதக் கம்பருவ
மேகத்துக் குள்ளிலகு மின்போற் பளீரெனவே
வெய்ய கதிருதையம் வெற்பி லுதித்ததுபோற்
றுய்யமணிக் குண்டலங்க டோளிற் புரண்டசைய
அழகுதிரு மேனியெல்லா மாபரணத் தால்மறைத்துப்
பழகு தமிழ்க்கறுப்பன் பாதச்சம் மாளியிட்டான்
தள்ளரிய கார்மேகந் தள்ளிநடை யிட்டதுபோல்
மெள்ள நடந்து வெளியெறிந்தா னென்கறுப்பன்
கருமலைபோல் வந்து கறுப்பன் படைவழிகேட்
டொருநொடியிற் பேய்க ளொருமிக்கக் கூடியதே
தந்திமுகக் கின்னரமுந் தம்புருவுந் துந்துமியு
மந்தி முகப்பேய்கள் வந்து முழக்கிடவே
குரக்குமுகப் பேய்களெல்லாங் கொக்கரித்துக் கொண்டாடச்
சிரக்கம்பஞ் செய்துநல்ல சிங்கேறு போல்நடந்தான்
மட்டுப் படாதசில வன்பேய்கள் கைவாளுந்
துட்டத் தடியுஞ் சுமந்து மருகில்வர
வாழ்வாயெந் நாளும்நீ வாழ்வாயென் றேவாழ்த்திப்
பேழ்வாய் திறந்துசில பேய்களும்பல் லாண்டிசைப்ப
ஐயா பராக்கென் றதட்டிச் சிலபேய்கள்
கையாற் பிரம்பெடுத்துக் கட்டியங்கள் கூறிவர
இரணக் கறுப்ப னெழும்ப வனிகண்டு
கரணங்கள் போட்டுக் களிக்குஞ் சிலபேய்கள்
பம்மிப் பதுங்கியெட்டிப் பார்க்குஞ் சிலபேய்கள்
குர்மி யடித்துக் குதிக்குஞ் சிலபேய்கள்



கொங்கவிழுங் காவிற் குறைத்தலைப்பேய் கைமடித்துச்
சிங்கி யடித்துமகிழ்ந் தாடச் சிலபேய்கள்
வெள்ளிவெண் சாமரைகள் வீசச் சிலபேய்கள்
கொள்ளிவாய்ப் பேய்களெல்லாங் கூண்டுபந்த மேந்திவர
வாராத பேய்களெல்லாம் வந்துவந்து கஞ்சாவுஞ்
சாராய முங்கொணர்ந்து சந்தித் தருகில்வர
வண்ணக் கறுப்பன் மலைக்காவெல் லாங்கடந்து
தண்ணிக்கல் லுங்கடந்து தலைமலைக்கும் வந்தானே
தலைமலையிற் சாத்தாவைத் தான்வணங்கிக் கொண்டாடி
உலகமெல்லாங் கண்டா னுகந்தான் மனமகிழ்ந்தான்
மாவண்ணஞ் சேர்ந்த மழைவண்ணச் சிங்காரன்
பூவண்ணத் தாவளத்திற் புதுமையுடன் வந்திறங்கி
புகழ்மேற் கரையும் புதுக்கோட்டை யுங்கடந்து
திகழ்காவி வாவித் திருமலையைக் கைதொழுதான்
கந்தா சரணம் கடம்பா சரணம்விண்ணோர்
தந்தாய் சரணஞ் சரணமென்று தெண்டனிட்டான்
தெண்டனிட்டான் பண்பைத் திருநகரிற் சென்றுறைந்தான்
மண்டலமெல் லாம்பரவு மாதாவைக் கைதொழுதான்
காவிச் சுனையாடிக் கந்தன் பரிபுரத்தாள்
சேவிக்க வென்று திருமலைக்குச் செல்லலுற்றான்
மாதாவைப் போற்றியந்த மாதாவின் கோவிறனில்
வேதாக மக்கறுப்பன் மேன்மையுட னின்றதற்பின்
சென்றடுத்தான் வீரத் திறலிடும்பன் சந்நிதியிற்
குன்றெடுத்த தோளினான் கூடியுற வானானே
திருமலையிற் காளியம்மை செய்யகன்னி மாரிவரை
யருமையுடன் போற்றி யகமகிழ்ந்தா னென்கறுப்பன்
கற்குஞ் செழுந்தமிழ் நூற் காதற் கறுப்பனிங்கே
நிற்க வெனக்கோர் நிலைமைதர வேண்டுமென்றான்
திருமலையி லுள்ள சிவகணமெல் லாம்பார்த்துத்
தருநுகனை யெண்ணித் தவஞ்செய்வா யென்றுரைத்தார்

கூண்டிவர் சொன்ன குருமொழியை யுள்ளிருத்தி
யாண்டுபன்னி ரண்டு மதிகதவஞ் செய்துநின்றான்

இவ்வாறு செய்ததவ மித்தனையுங் கண்டுகண்டு
செவ்வேள் கருணைத் திருவுளஞ்சற் றேயிரங்கிப்

பட்டணத்தி லுள்ள பலரிலொரு பால்வண்ணஞ்
செட்டி வழியிற் சிலையெடுத்தங் கூன்றிவைத்தான்

ஞானத் திருமலையி லையகற்குத் தொண்டுசெய்யுந்
தானத்தா ரச்சிலையைத் தட்டிப் பிடுங்கிவிட்டார்

படியேழுங் கொண்டாடும் பண்பைத் திருமலையான்
அடியார்கள் செய்தகுற்ற மாரொடுஞ் சொல்வமென்று
மீண்டுவந்தான் பண்பை வியநகரில் விக்கிரம
பாண்டிய நம்பி படுத்துறங்கு வேளையிலே

விற்பனஞ்சேர் சொற்பனுவல் விக்கிரம பாண்டியற்குச்
சொற்பனத்தி லற்பனமாய்ச் சொன்னான் சிலவார்த்தை

வந்தவா லாறுமிவன் மாதவங்கள் செய்ததுவுங்
கந்த னிரங்கினதுங் கற்சிலையை நாட்டினதும்

அன்னாட் சிலையை யடியார் பிடுங்கினதுஞ்
சொன்னான் மறையோன் றனுக்கென் றெழுந்திருந்தான்

அப்போதி லெங்கோ னறைந்தமொழி யத்தனையுந்
தப்பாம லுத்தமனுந் தானத்தார்க் கேயுரைத்தான்

தானத்தா ரெல்லோருஞ் சம்மதித்துக் கொண்டாட
ஞானத் திருமலையை நாடி நடக்கலுற்றார்

அப்போதி லெங்கோ னறிவானந் தக்கடவுள்
செப்பமுள்ள சந்நிதியிற் சென்றா னருட்கறுப்பன்

சென்றா னெனையாண்ட சேவடியைப் போற்றிசெய்து
நின்றா னெனக்கோர் நிலைமைதர வேண்டுமென்றான்

செய்தவத்தா லெந்தை திருவுளமெல் லாமகிழ்ந்து
கையமர்த்திக் கந்தன் கடாட்சமுண்டென் றேயுரைத்தான்

திருமலையி லிவ்வாறு செய்தி நடந்ததற்பின்
மருவுபுகழ்த் தானத்தார் வந்துமலை யேறினரே



செறிவாகக் கூடித் திரண்டுவந் தெங்கோமான்
அறிவானந் தக்குருவை யன்பாய் வணங்கலுற்றார்
சொற்பனத்தி லேகறுப்பன் சொன்னதெல்லாஞ் சொன்னார்கள்
உற்பனத்திற் கண்டதெல்லா முத்தமனுஞ் சொல்லலுற்றான்
பன்னுதமிழ் விக்கிரம பாண்டியர்முத லெல்லோரும்
நன்மைபெறக் கூடி நடுவிட்டான் பாறையிலே
செய்யமணி மண்டபமுந் திருவுருவுஞ் செய்துவைத்து
வையமெல் லாம்புகழ மணிக்கலச மாட்டிவிட்டார்
வடுவிட்ட கன்னிகுற வள்ளிபங்கன் மெய்யருளால்
நடுவிட்டான் பாறையிலே நாட்கொண்டு வீற்றிருந்தான்
நாட்கொண்டு வீற்றிருந்து நாட்கவியுங் கொண்டபிரான்
ஆட்கொண்டா னன்றுமுத லங்கப்ப னைத்தானே
திருமலைக்குஞ் செல்வத் திருவாச்சான் கோவிலுக்கும்
உரிமைபெற வழிகாத்து உத்தரிக்குந் தாடாளன்
வேறெழுத்துக் குள்ளம் வெருவான் றிருமுருக
னாறெழுத்துக் கற்றவருக் கஞ்சு மனதுடையான்
வாரார் திருமலையை வாழ்த்தார் பெரும்பொருளைச்
சாராயக் காரருக்குத் தட்டிக் கொடுத்திடுவான்
செய்யதிருப் பணிக்குஞ்செந் தமிழ்க்குமீ யாப்பொருளை
வைத்துப் பேய்களுக்கு வாரிக் கொடுத்திடுவான்
சொலிஃகோதில் லாதசெழுஞ் சொற்புல வோர்க்குற்ற
கலிக்கோடை யைப்பறத்துங் கால மழைமேகன்

அட்டதிசை யும்போ யறுமுகனைப் போற்றாத
துட்டர்க ளைப்பழக்குஞ் சூறை வளிக்காற்று
எட்டெழுத்து மஞ்செழுத்து மெந்தையிரு மூன்றெழுத்தும்
வட்டஞ்செய் யாதவர்கள் மார்பி லிடியேறு

அஞ்சன மேனி அழகு கறுத்தலால்
வஞ்சகமில் லாத மனக்கறுப்பொன் றில்லாதான்
கரியமுகி லூடு கலந்தொளித்துச் சற்றே
தெரியுமதி போலத் திருநீ றணிநுதலான்

அந்தமுள்ள மேல்முருகு மன்புமணிக் குண்டலமுஞ்
செந்தமிழும் வெண்புழுகுஞ் சேர்ந்த திருச்செவியான்

சங்கையில் லாதவெறிச் சாராயத் தைக்குடித்துச்
செங்கமலம் போலச் சிவந்த விழியழகன்

வளைத்தடக்கை மாயோன் மருகன் கிடாய்தனக்கு
முளைத்தகொம்பு போலே முறுக்கிவிட்ட மீசையினான்

அல்லும் பகலு மறுமுகனை தெய்வமென்று
சொல்லுஞ் செழும்பவளத் தொண்டைக் கனிவாயான்

கந்திருவர் தேவர் கடல்கடையப் பாம்புசுற்று
மந்தரம்போற் சுந்தரஞ்சேர் வாகுவலை யப்புயத்தான்

வாள்பிடுங்கித் துட்டர்களை மாய்க்கும்போ துங்குமரன்
றுள்வணங்கும் போதுந் தலைமே லுயர்ந்தகையான்

அசையாப் பலத்ததனா லாறுமுக மேவுதலாற்
றிசையெலாம் போற்றுந் திருமலைபோ லும்மனத்தான்

மாவளத்த காவில் மலைபோல் விறகடுக்கிப்
பூவளர்த்துக் கூத்தாடும் புண்டரிகச் செஞ்சரணன்

செயிரறுமெய்ஞ் ஞானச் சிவயோகி யாகவந்த
வயிரவ நாதருக்கு வழித்துணையாய் வந்தபிரான்

திரிகூட மேவுமெங்கள் செண்பகக் குற்றாலர்
திரிகூடற் சாய்கைத் திருமலையா னுளமலையான்

தெருள்சே ரடியார்கள் செல்வம்போற் கந்த
னருள்போற் பெருகு மனுமநதியுடையான்

நாற்றா னதுநடவு நாட்கதிர்கள் கொய்வதுவு
மாற்றா வயல்சூழ் வடவாரி நாடுடையான்

எண்ணான் கறம்வளர்த்த வின்னமுத முள்ளதனாற்
கண்ணார் திருப்பாற் கடல்போலும் பண்பையினான்

மெய்யா வருவார்கள் விகடாங் கேபொருது
செய்யமரு வாரத் திறல்வாகைத் தார்புனைந்தோன்

சூறைவளி போற்சுழன்று தூசியோ டித்திரும்பி
வீறுகொண்டோர் நெஞ்சில் மிதிக்குங்கவ னப்பரியான்



திசையானை பாதாளஞ் சென்றுபின் காட்டிச்சமந்
தசையாம னிற்க மடக்குங் கடகரியான்

திண்டகரே றுங்குமரன் சேவடியைப் போற்றாத
கண்டகரைத் தட்டிவெட்டிக் கட்டுவிசை யக்கொடியான்

கம்முரசுஞ் சோலைக் கனகமணி முன்றிலிலே
மும்முரசு நின்று முழங்குமணி மண்டபத்தான்

மெய்யன்ப ருக்குதவு மெய்யன் றிருமலைமுத்
தையன் றிருப்பதத்தி லாணை மறவாதான்

பண்ணா வலர்கடமிழ்ப் பாடலறிந் தேயுதவுங்
கண்ணான தெய்வக் கருப்ப சுவாமியெங்கோன்

நீற்றாற் பிணிதீர்க்கு நீலத் திருமலையிற்
காற்றாடி போற்சுழன்று காக்குந் திறலாளன்

தந்திரமு மந்திரமுந் தம்பனவுச் சாடனமு
மந்திரமுங் கற்றெதிர்த்தோர் வாய்கிழிக்குங் கோடாரி

வஞ்சக் கொலைத்தொழிற்கும் வல்லபில்லிக் காரர்தம்மை
நெஞ்சைப் பிளந்து நெடுங்கழுவிற் போட்டிடுவான்

பொய்கள்சொல்லி வாங்கியுண்ணும் பொல்லாப் பசாசுகளைக்
கையரிவாள் கொண்டிரண்டு கண்டதுண்டஞ் செய்திடுவான்

கணியான்கை வெட்டுடனே கனபூசை தாவெனவே
பிணியோடுங் கூடிப் பிதற்றும் பசாசுகளை

வட்டமிட்டோ ரேழு மணிகட்டி வல்லையத்தாற்
கொட்ட மடக்குங் குமாரக் கருப்பழகன்

சேயாம்பற் செவ்வாய்த் தெரிவையருள் ளங்கவரும்
காயாம்பு மேனிக் கருப்ப சுவாமியெங்கோன்

திருத்தமுறு மேனித் திருவழகார் மாதர்
கருத்தை மயக்குங் கருப்ப சுவாமியெங்கோன்

தொனிவாய்த்த மென்மதுரச் சொற்றேன் கனிந்தொழுகுங்
கனிவாய் சிவப்பன் கருப்ப சுவாமியெங்கோன்

சங்க நிறைந்த தமிழ்க்கிளுவை யூர்புரக்கு
மெங்கதுரைச் சின்னணைஞ்சா னிட்டகுல தெய்வமென்னும்

மன்னுங் கருஞ்சை வனப்பெரிய சாமிமுன்னே
முன்னடியாய் நின்று முழுப்பூசை கொண்டபிரான்
பருப்பதங்க டாழப் பருமிதங்கொண் டோங்கிவளர்
திருப்பரங்குன் றத்திற் றிசைநான்குங் காத்திருப்போன்
சிற்றூரில் மேவுமெங்க டென்கரைமா ராயருக்கு
மெய்த்தூதன் சுத்தரண வீரக் கறுப்பழகன்
செப்பமுள்ள காவித் திருமலையாச் சான்கோவி
லிப்படியே தான்காத் திருக்குமந்த நாளையிலே
வளமேவும் பண்மையெனு மானகரி லாடவர்க
ளுளமேவுங் கன்னி யொருத்தி யவதரித்தாள்
ஏந்திழைபொன் மேனி யெழில்கண்டாற் செங்கரும்பு
மாந்தளிரு நாணி வருந்திக் குழைந்திடுமே
நீண்டு கடைசுருண்டு நீல விழிக்கயல்க
டாண்டிப் பதுங்குதல்போற் சைவலத்துக் கொப்பாகி
கருமணலைக் காரைக் கறுப்ப சுவாமியெங்கோன்
திருவழகைப் போலச் சிறந்த கருங்குழலாள்
சொம்பி னிளம்பிறைமேற் சோதிமீ னுற்றதுபோ
லம்பொன்மணிச் சுட்டி யணிந்த திருநுதலாள்
வேளிரதி யைப்பொருது வென்றிரண்டு விற்பறித்து
வாள்விழிமேல் வைத்தனபோல் வாய்த்த புருவமின்னாள்
குழைவள்ளை யூடேபோய்க் கூந்தலெனுஞ் சைவலத்தில்
விளையா டுதலாலே மென்பஞ் சிலைதானோ
வேலோகை வாளோ விடமோ திருமலையி
னீலோற் பலத்தையிரு நேத்திரமாய்க் கொண்டமின்னாள்
பூசல் விழியும் பொருந்துமிளை ஞோருயிரு
மூசலிருந் தாட வுடைமையிட்ட தாழ்குழையாள்
விண்ணாட்டு மாதரிவள் மெய்யெழிற்கொப் பாய்வளைந்து
கண்ணாடி பார்க்குங் கனகக் கவுட்சுவட்டாள்
சுந்தரஞ் சேரும்விழிச் சுடர்பவளந் தொண்டையோ
டிந்திரகோ பந்தா னிருந்த விலவிதழாள்



முல்லை யரும்பை முருந்தைமுத்தைத் தன்னுவமை
யில்லையென மெல்லநகைத் திட்ட வெயிறுடையாள்
விழிவண் டுலகையெல்லாம் வெல்லுமென்றே வேதன்முன்னாட்
பழியஞ்சித் தான்செண் பகமூக்கும் வகுத்தானோ
மறுகுதலைக் கொண்டுகுயில் வாயடைக்க வேபுகலுஞ்
சிறுகுதலை மென்மழலைச் செவ்வாய்ப் பசியகிளி
முழுமதியி னூடே முயன்மறுவுண் டானதுபோ
லெழுதுகஸ்தூ ரித்திலத மிட்ட திருமுகத்தாள்
சங்கும் பசிய தனிக்கமுகு மங்கலியச்
செங்கழுத்துக் கொப்பாகச் செப்பலாங் கண்டீரே
காந்தண்மலர் பூத்தபசுங் காம்பிரண்டுண் டாமாகி
லேந்திழைபார் தோளுக் கிணையாகுங் கண்டீரே
மாந்தளிரைப் பஞ்ச வனக்கிளிகள் கொத்துதல்போற்
பூந்தளிர்க்கை மெல்விரலிற் பூத்தணிந்த கூறுகிராள்
சிமிழ்போ லரும்பிவட்டஞ் சேர்ந்துகைத்தா ளத்தின்
குமிழ்போற் புடைத்துமலர்க் கோங்கரும்பு போற்குவிந்து
செப்புப்போல் விம்மித் திரண்டுருண்டு செவ்விளநீர்க்
கொப்புத்தா னென்ன வுரத்தெழுந்து கண்கறுத்து
தங்கக் குடம்போற் றடித்தெழுந்து முத்தணிந்து
வெங்கட் கடகரியின் வெண்கொம்பு போலேந்தி
தேய்த்திட்ட மெல்லிடைக்குச் சேதம்வரு மென்றிரங்கிச்
சாய்த்தெட்டிப் பார்ப்பதுபோற் சற்றே சரிதனத்தாள்
ஆலிலை போலு மடிவயிற்று ளவ்வயிற்றின்
மேலலைகள் போலும் விளங்கு மடிப் புடையாள்
அதரச்செந் தேனுக் கவாவுற் றெறும்பினங்க
ளுதரத் தனிவழியே யூர்வதுபோல் ரோமமின்னாள்
இந்தப்பெண் சின்ன விடைநுட்பங் கண்டோர்க
ளுந்திச் சுழிக்கோ ருவமைகண்டு சொல்வாரோ
இலங்காரக் கன்னல்வில்லி யேய்ந்தகொலு மண்டபத்தி
லலங்காரத் தூணோ அரம்பையோ செந்துடைகள்

பொற்கடக மிட்டசெங்கைப் பூவைமுழந் தாள்களுக்குக்
கற்கடகத் தைச்சரியாய்க் கற்றோர் புகல்வாரோ
தாசிற் சினைவரால் தானிறுத்து விற்பதுபோற்
பாரவுங் கணைக்காலும் பரடும் புடைத்தமின்னாள்
கஞ்சத்தி னேரே கமட மொதுங்குதல்போற்
செஞ்சொற் குயிலனையாள் செய்ய புறவடிகள்
சேல்பிடிக்குங் கண்ணியிவள் செம்முகத்துக் கொவ்வாமற்
கால்பிடிக்குஞ் சீதமலர் கஞ்சமெனு முன்பதத்தாள்
பொன்னுமின்னு மாந்தளிரும் பூத்தகொம்புங் கூட்டியொன்று
கன்னி யுருவாய்க் கமலன் படைத்தானோ [ய்க்
மையழகு வேற்கண் மயிலனையாள் செய்யதிரு
மெய்யழகை யென்னால் விளம்ப முடியாதே
செப்படிகொண் டோங்குகொங்கைச் சேயிழைதன் பேரழகுக்
கொப்புவமை யில்லா துவக்குமந்த வேளையிலே
காக்குங் கருணைக் கறுப்பன்மலர்ச் சோலையிலே
பூக்கொய்ய வாருமென்று பூவையிவ ளுக்குரைத்தாள்
மாதுசென்று சொல்லுநல்ல வார்த்தைவழி காட்டவள்ளைக்
காதுசென்ற கன்னிமலர்க் காவுக்குச் செல்லலுற்றாள்
செல்லு மளவிலந்தத் தேன்மொழியைப் பெற்றதொரு
நல்லவளாந் தாய்க்கிழவி நாவுதிறந் தேதுரைப்பாள்
போகாதே யென்மகளே பூங்கா வனந்தனிலே
வாகாக வேகறுப்பன் மயக்கங்கள் செய்திடுவான்
கஞ்சா வெறியன் கறுப்பனுன்னைக் கண்டவுடன்
பஞ்சாங்க வார்த்தைசொல்வான் பால்போன் மொழிபகர்வான்
காடுகா வற்காரன் கறுப்பனுன்னைக் கண்டவுடன்
கூடுதற்கு நல்ல குடிலங்கள் செய்திடுவான்
ஆகையா லந்த அருட்கறுப்பன் காவுதன்னிற்
போகவேண் டாமகளே புத்திசொல்ல நீகேளாய்
இந்தப் படிதா யெடுத்துரைக்கக் கேளாமன்
முந்தப் பிரமன் முறைப்படியென் றேநடந்தாள்



மாயிருஞா லத்துமின்கள் வந்ததுபோற் சுந்தரஞ்சே
ராயிரஞ் சேடியர்க ளன்பாகச் சூழ்ந்துவர
அன்னநடை கற்க வடிவீழ்ந் தெழுவதுபோன்
மின்னிடையா ளங்குமிங்கும் வெண்சா மரையசைப்ப
அஞ்சுகச்செஞ் சொல்லா ரடைப்ப மெடுத்துவரக்
கஞ்சமுக வஞ்சியர்கள் காளாஞ்சி யேந்திவர
பேடைமயில் சுற்றப் பெருந்தோகை மாமயினின்
றாடுவது போலே யடிமே லடிபெயர்த்தாள்
வள்ள முலைசுமந்து வஞ்சியிடை நூல்போலத்
தள்ளாடி யேநடந்தாள் தண்டைசிலம் புங்கிலுங்க
செய்ய திருமலையிற் றென்ற லுலாவுதல்போற்
பைய நடந்துமலர்ப் பைங்காவி லேபுகுந்தாள்
புதுமலர்கொய் யப்போந்த பூவைமுகத் துக்கம்
மதுமலரென் றேவிரும்பி வண்டினங்கள் வந்துமொய்க்க
நங்கைக் கிதத்த நடையாற் பிடிபிதென்று
கொங்கைக்குத் தோற்றோடுங் கொம்பானை பின்றொடரச்
சென்றுமலர்க் காவிற் சேயிழையா ரெல்லோரு
மன்றன்மலர் கொய்துகொய்து மங்கைக்குச் சூட்டலுற்றார்
தண்கொடிகள் சுற்றுமலர்ச் சண்பகங்கா ளெங்கள்குலப்
பெண்கொடிக்கு வாசப் பெரியமலர் தாரீரோ
மாவி லுலாவும் வரிக்குயில்காள் செங்கமலப்
பூவி லிருப்பவட்குப் பூப்பறித்துத் தாரீரோ
எங்கண்மங்கை கொங்கைக் கிசைந்தமலர்க் கோங்கினமே
யுங்கண்மல ரெங்கட் குதவினா லொண்ணாதோ
சந்தனங்காள் வண்டினங்கா டாதளையு மாதளைகா
ளிந்துநுதல் வல்லிக் கினியமலர் தாரீரோ
தோப்பூடு நின்றசையுந் துய்யமுல்லை காளுமது
பூப்போ னகையாட்குப் பூவொன்று தாரீரோ
கூருமிள வஞ்சிக் கொடிகா ளுமைப்போலச்
சோருமிடை யாட்குநறை தோன்றுமலர் தாரீரோ

என்று மடவா ரியம்பியிவள் மெல்லடிகள்
கன்றுமெனப் பூப்பறித்துக் காவிற் சொரிந்திடுவார்
மானார்கள் சோலை வளத்தான் மதிமறந்து
போனார் திசைகடொறும் பொன்னா டனித்துநின்றாள்
மடமயிலைப் பஞ்ச வணக்கிளியைக் கோகிலத்தை
அடைவுபெறு பாங்கியரென் றாயிழையஞ் சாமனின்றாள்
பூந்தளிர்க்கை மெல்விரல்கள் பூப்பட்டுக் கன்றிவிடக்
காந்தண்மலர் கொண்டுசெழுங் காவின்மலர் கொய்யலுற்றாள்
மயிலுடனே கூடி மகிழ்ந்துவிளை யாடிக்
குயிலுடனே பேசிக் குளிர்ந்தமலர் கொய்துநின்றாள்
பூவை தனித்துநின்று போதுகொய்யும் வேளையிலே
காவுவளம் பார்க்கக் கறுப்ப னெழுந்துநின்றான்
சல்லடமுந் தொட்டுச் சலவைகட்டி மேவலரைக்
கொல்லும் விசையக் குமாரசமு தாடணைத்து
மெய்போ னிறம்படைத்த மேகவன்னக் கச்சைகட்டிக்
கைபோற் சிவந்தசந்த்ர காவியுறு மாலைகட்டித்
தங்கப் பணியுஞ் சரப்பணியுந் தாழ்வடமும்
வெங்கற் பணியுடனே வித்துரும மும்புனைந்தான்
தூணிபுயத் திற்சேர்த்துத் துங்கவில்லுங் கைப்பிடித்தே
யாணழகன் வெய்யமத யானையின்மே லேறினனே
வெள்ளைநிறச் சாமரைகள் மின்னார் மருங்கசைப்ப
வள்ளமுலைத் தெய்வ மடவார்கள் சூழ்ந்துவரச்
சீதக் கமலமுகத் தேனார் குழாத்துடனே
காதற் குமாரக் கறுப்பன் பவனிவந்தான்
கையிற் சிலையாற் கறுப்பழகர் காமுகனை
யெய்யுமத னென்றுவிண்ணாட் டேந்திழையா ரேங்கிநின்றார்
மலைமே லிருந்திறங்கு மைமேகம் போற்கறுப்பன்
கொலையானை விட்டிறங்கிக் கூண்டுமலர்க் காவில்வந்தான்
காவில்வளம் பார்த்துக் கறுப்பன்வரும் போதுகுயில்
கூவுதல்போ லந்தமங்கை கூவுங் குரல்கேட்டான்



பேதை மயிலனையாள் பேச்சின்வழி யேநடந்தான்
மாதுதனை யந்த வனத்தில்வந்து கண்டானே
மின்போலுஞ் செய்யதிரு மேனி பளபளெனப்
பொன்போலு மங்கையொரு பூத்தகொம்பு போலநின்றாள்
பார்த்தான் விரும்பிப் பதைத்தான்பொன் மேனியெல்லாம்
வேர்த்தான் கறுப்பன் விரகவெள்ளத் தூடாழ்ந்தான்
வினைப்பகைதீர்க் குங்குமரன் மெய்யடியா ரைப்போ
னினைப்பு மறப்புமற்று நின்றான் சிலநேரம்
மயங்கிச்சற் றேதான் மனந்தெளிந்தா னப்பொழுதே
செயங்கொள்ளக் காலமென்று செஞ்சிலைவே ளம்பொருதான்
சேயிழைதன் காதல்வெள்ளஞ் சிந்தைநிறை யப்பெருகி
வாய்வழியே பொங்குதல்போல் வாய்திறந்து பேசினனே
சல்லாப வேள்பரவுஞ் சந்த்ரமதி யோமதனை
வல்லியோ கொல்லி மலைப்பாவை நீர்தாமோ
காவிமலை யென்னூர் கறுப்ப சுவாமியென்பேர்
தேவரீ ருங்க டிருநாம மும்புகல்வீர்
அடுக்கோ தனித்துவர லாமோவில் வேளைவென்ற
துடுக்கோ நடுக்காவிற் றோகை மயிலினின்றீர்
நற்பாதக் காலா னடந்துவந்தீ ரும்முடைய
பொற்பாதந் தீண்டவிந்தப் பூமிதவஞ் செய்ததுண்டோ
விருப்பாகத் தேவரீர் மேவுதலா னுங்கள்செழுந்
திருப்பாற் கடலிது சிங்காரச் சோலையன்றோ
மருக்கண்ட பிச்சி மலர்க்குழலீர் சொல்லுங்கள்
உருக்கண்டோ மார னுருவழிந்து போனதெல்லாம்
மாதங்கக் கொங்கை மலைசுமந்த சிற்றிடைபோற்
பாதங்க ளேகப் படிமே னடந்தீரே
துடியிடையு நானூர் துணைத்தாளும் நோகாமல்
மடியிலிரும் வாரு மனப்பேத கங்களுண்டோ
காந்தள் குவளை கமலமுங்கள் பாலிருக்க
வேந்திழையீர் பூங்காவில் வெண்ணமலர் கொய்யவந்தீர்

செந்துவர்வாய்ச் செங்குமுதச் செந்தே னெனக்களித்தா
லந்தமதன் பூசைக் கவிடைகளுஞ் செய்வேனே
சொலுமன் மதனைத் துரத்தியவன் மேவுங்
கொலுமண் டபத்திற் குடியிருக்க மாட்டேனோ
கொந்தார் குழற்காடுங் கொங்கைப் பெருமலையுந்
தந்தா லிகன்மதனன் சண்டைக் கொதுங்குவனோ
கொம்பனையீர் மோகக் குளிர்காய்ச்சல் தீரவுங்கள்
தம்பலவுட் சாற்றைத் தந்தாற் பிழையேனோ
பையவந்து வாயதர பானக்க நீரளித்தாற்
றையலீ ரென்மோக தாகந் தெளியாதோ
தையலீரே யுங்க டனக்குடமென் பாலளித்தாற்
கையடங்கா மோகக் கடலைவிட்டு நீந்தேனோ
சற்றே கடைக்கணிட்டுத் தான்பார்த்தா லுன்பிழைத்துக்
குற்றேவல் செய்திடுவேன் கோடிபல னுண்டுமக்கே
வாவென் றிரங்கியொரு வார்த்தைசொல்லீ ராமாகிற்
கூவென்று கூவுங் குயில்வா யடையாதோ
திருந்திமையல் பூட்டிவிட்டீர் தென்றலைக்கண் காட்டிவிட்டீர்
வருந்தியெனைக் கெஞ்சவிட்டீர் மன்மதனை மிஞ்சவிட்டீர்
தண்குலவுங் காவில்வந்தீர் தாராத மையறந்தீர்
கண்களா லென்னைவென்றீர் கருத்திரங் காமனின்றீர்
ஐயையோ மோடியிட்டீ ரன்பெல்லா மெங்குவிட்டீர்
தையலீ ரென்னகள்ளஞ் சகிக்குமோ வென்றனுள்ளம்
கனக்கும்பம் போற்றனத்தீர் காரிரும்பு போல்மனத்தீ
ரெனக்குமைய றீரீ ரிரங்கி முகம்பாரீர்
இலையோ விரக்கமுமக் கெள்ளளவு முங்கணெஞ்சு
சிலையோ விழிகள் சிலைமதன னத்திரமோ
பெண்ணரசே யும்மேற் பிழையோ வயனுமக்குத்
தண்ணளியுஞ் சிற்றிடையுஞ் சற்றும் படைத்திலனோ
மைபிடிக்கும் வேற்கண் மயிலனையீ ரென்னைமுற்றுங்
கைபிடித்துக் காக்கிலுங்கள் கால்பிடிப்பேன் கண்டேனே



அமுத மொழிக்கறுப்ப னவ்வார்த்தை சொன்னதற்பின்
குமுதமுல்லை பூத்ததுபோற் கோதைகுறு மூரல்செய்தாள்
ஆணழக னெங்க ளருட்கறுப்பன் பேரழகைக்
காணின் மலர்ப்பாவை கற்பாவை பேசாதோ
சற்றே கடைக்கணிட்டுத் தான்பார்த் திலன்பெரிய
கொற்றப் புயத்திற் குவளைமலர் சூட்டினளே
உண்ணெகிழ்ந் தாண்மயங்கி யுத்தரிகஞ் சோர்ந்துநின்றாள்
வண்ணமுக மீதின் மதக்கறுப்பன் கண்பதித்தான்
சின்ன நகையுஞ் சிறுநெருக்கு முண்டானாற்
பின்னையொரு தூதும் பிரியமுஞ் சொல்வானேன்
அடுத்தான் கறுப்ப னகமகிழ்ந்து கைலாகு
கொடுத்தான் மடமயிலுங் கூட நடந்தாளே
விரிந்து படர்ந்து விளங்குமுல்லைப் பந்தரிற்காம்
பரிந்து மலரா லடுக்குமெத்தை தான்விரித்து
விரைமலர்ப்பூங் கொம்பொடித்து மேற்கட்டி கட்டியிந்தக்
கரையில்லா மோகக் கறுப்பனுங் கன்னிகையும்
மேவி யிருந்தார்கள் வேளு மிரதியும்போல்
தேவியிந்தி ராணியுடன் தெய்வேந் திரன்போலும்
வாச மிகுந்த மலர்ச சுகந்த மாலிகையும்
பூசுஞ்ச வாதும் புழுகு மெடுத்தணிந்தார்
சந்தனமுங் குங்குமமுஞ் சாதிக்கஸ் தூரியொடுங்
கந்த பொடியுங் கலந்து குழைத்தணிந்தார்
வெள்ளிலையுஞ் சீவி மிருது மிகப்பாக்கு
மள்ளி யருந்தினா ரங்கைச் சுருண்மாறி
கன்னிதனைக் கண்டு கறுப்பன் மனமகிழ்ந்தான்
பொன்னழகைக் கண்டுகண்டு பூவை மனமகிழ்ந்தாள்
யோகக் கறுப்பன் முகத்தின்முகம் வைத்துமங்கை
பாகொத்த செஞ்சொற் பவளத்தின் முத்தமிட்டான்
கறுப்பன் மடியிலிந்தக் கன்னிவிழுந் தேகுளைவண
மறுந்துக் கறுப்பனிந்த மங்கை மடிமேற்சரிவான்

கன்னி மனத்திற் கறுப்பன் குடிபுகுந்தான்
மன்னுகறுப் பன்மனத்தில் மங்கை குடிபுகுந்தாள்
மருவு சுகலளித மங்கலப்பூம் பந்தருள்ளே
யிருவர் மனது மிணங்கியுயி ரொன்றானார்
கருமுகில்போல் வண்ணக் கறுப்பனந்தக் கன்னிகைதன்
பருமுலையிற் செவ்வாய்ப் பவள வடம்புனைந்தான்
மாந்தளிர்போன் மேனி மயிர்க்குச் செறிந்துமங்கை
காந்தண்மல ரண்டுங் கறுப்பன்முடி மேற்புனைந்தாள்
ஊடியுற வாடிமன மொன்றியொரு வர்க்கொருவர்
கூடிவிளை யாடிமெள்ளக் கொஞ்சி விளையாடி
தண்டை சிலம்பு சதங்கை புலம்பிடவே
கொண்டை தனில்வனைந்த மலருங் குலைந்திடவே
வஞ்சியிடை யும்பதற மங்கைவளை யுஞ்சிதறக்
கொஞ்சிமயன் மிஞ்சியுடல் கொண்டபுள கம்பெறவே
ஆனன மலர்ந்திட வனங்கனு முலர்ந்திடவே
பானல்விழி யும்புருவ மும்படப டென்றிடவே
இன்சொல்குழ றிக்குழறி யெண்குரமொ ளித்திடவே
நெஞ்சமொரு மித்தன னெருங்குமெழு கொத்துருக
அருமைபெறு மடமயிலு மழகுதரு கரியவனு
மறுகியுட லுருகியிரு மனதுபர வசமுறுவார்
கொங்கு விரியக் குவளை விழிசிவப்ப
மங்கையெனு மாது மலரணையி லேதுயின்றாள்
சிறக்குமங்கை கூடமஞ்சஞ் சேர்ந்துமயங் கிக்கறுப்பன்
உறக்கம் புரிந்தா னுடலெல்லாம் வேர்த்துவிட்டான்
தன்னதரம் போன்ற சலவைத் துகில்சோர
வன்னநெடுந் தோகை மயிலும் மயங்கினளே
எங்கள் கறுப்ப னிதையந் தெளிந்திருந்தான்
மங்கை யதற்குமுன்னே யனந்தெளிந்து தானிருந்தாள்
மெல்ல நகைதது மிகநாணி யொல்கி யொல்கி
அல்லலெனுங் கோதை யவிழ்ந்த கலைபுனைந்தாள்



கூசினா ளப்பாற் குதித்துநின்றாள் வீரனுக்கு
வீசினாள் வட்ட விசிறி யெடுத்தசைத்து
சிவந்த பதம்பிடித்தா டேகமெங் குங்குளிர
உவந்த பதம்படித்தா னாரவோன் மனங்குளிர
இப்படியே கூடி யிருந்த சுகக்கறுப்பன்
மைப்படியுங் காவி மயிலனையா ளைப்பிரிந்தே
வங்காரச் சிங்கார வண்ணக் கறுப்பழகன்
செங்காவி வாவித் திருமலையிற் போய்ப்புகுந்தான்
பாதலமெல் லாம்விளங்கப் பார்ப்போன் கமலமெனுங்
காதலியை நீங்கிக் கடலிற் புகுந்தானே
வயிரமணித் தோளான் மதக்கறுப்ப னைப்பிரிந்து
உயிர்பிரியச் சோரு முடல்போற் றுடிதுடித்தாள்
எதிரவனைக் காணாம லேங்கிமனந் தேங்கிக்
கதிரவனைக் காணாத கமலமொத்தாள் காரிகையும்
கண்முத் துடையளாய்க் காமரச மீறுதலால்
கண்முத் துடைய கரும்பானாள் காரிகையும்
கலையிழந்து சோருதலாற் கண்மருண்டு பார்ப்பதனாற்
கலையிழந்த மான்போலக் கன்னி பரிதவித்தாள்
இடைந்திடைந்து வானோர்க ளின்னமுத முன்னாட்
கடைந்தெடுத்துக் கொண்ட கடல்போற் கலக்கமுற்றாள்
வறிஞோர்கள் செல்வ வளம்பெற் றிழந்ததுபோ
னெறியாள னைப்பிரிந்து நெட்டுயிர்த்துச் சோர்ந்தனளே
கண்ணில்லா மானிடர்கள் கண்பெற் றிழந்ததுபோ
லெண்ணிலா னைப்பிரிந்தே யெண்ணியெண்ணி யேயிடைந்தாள்
கூடிப் பிரிந்தேங்குங் கொம்பனையாள் கண்களுக்குக்
காடுஞ் செடியுங் கறுப்பனாத் தோன்றியதே
ஓது மதிதீக் குருகு மெழுகானாள்
சீதளந் தென்றற் சிறுபுலிக்கோ ராடானாள்
வென்றிமத னாணசில வேடனுக்கு மானானா
ணின்று முழுங்கியமுன் னீருக் கலையானாள்

அன்றிற் குரலா மரவுக் கெலியானுள்
கொன்றைக் குழலிசைக்குங் கோடைப் பயிரானுள்

கால மிடமறிந்து கன்னற் சிலைவளைத்து
வாலமத னீலமல்லால் வாளியொரு நாலுமெய்தான்

மாங்குயிலைச் செவ்வாய் மழலைப் பசுங்கிளிபோற்
றேங்குதலைச் செவ்வாய் திறந்து புலம்பினளே

சொரியும் பெரியமழைச் சூன்மேக மேயுனைப்போற்
கரியதிரு மேனிக் கறுப்பனைக் கண்டீரோ

மாமாங் குயிலே மயிலே யெனைப்பிரிந்த
சீமா னிருக்குந் திசையெனக்குச் சொல்வீரே

கடக்குஞ் சரமே களித்துமதன் பட்டுனைப்போ
னடக்குங் கறுப்ப னகரெனக்குச் சொல்வீரே

கிள்ளைகாண் மெள்ளமெள்ளக் கெஞ்சிநெஞ்சை யுங்கவர்ந்த
கள்வ னிருக்குமலர்க் காவெனக்குச் சொல்வீரே

இந்திரசா லக்கார னென்மனஞ்சோ திப்பதற்கு
மந்திரத்தா லிங்கே மறைந்தானோ வண்டினங்காள்

மாவீர வண்டீர் மதுவையுண்டு பூவைவிட்டுப்
போவீர் கறுப்பனிடம் புத்தி படித்தீரோ

நிறையுங் கலையும் நெகிழவிட்டாய் சின்னப்
பிறையே வெப் பம்படைத்தாய் பிரிந்தா ருனக்குமுண்டோ

அன்னக் கொடியா ரந்தரமா கப்பறந்தா
யுன்னையுங்கூ டிப்பிரிந்தா ருண்டோ வரிக்குயிலே

தான்வருந்திக் கெஞ்சுவதுந் தன்னைப் பிரிந்திங்கே
நான்வருந்திக் கெஞ்சுவது நன்றாச்சு கண்டீரே

செறிந்தாடு மாமயிலே சேர்ந்து பிரிவானென்
றறிந்தாற் றிருமலையா னையிடச் சொல்வேனே

கண்ணான தெய்வக் கறுப்ப சுவாமிசொன்ன
விண்ணாணப் பேச்சையெல்லா மெய்யென் றிருந்தேனே

காயகக் காரக் கறுப்ப சுவாமிகையின்
மாயப் பொடியின் மயலிலகப் பட்டேனே



கன்னியிள நாரியர் கறுப்ப னினியொருநாள்
வன்னமலர்ச் சோலை வளம்பார்க்க வாரானோ

காசலையா யந்தக் கறுப்பன்வந்தென் காதுதனிற்
பூசுஞ் சவாதைப் புழுகென் றறியேனே

நாணமட மச்சம் பயிர்ப்பென்னும் நாற்குணமுங்
காணேன் கறுப்பன் களவாண்டு கொண்டானோ

வல்லாள னெங்கள் மதக்கறுப்ப னைப்பிரிந்து
கல்லார் சபையுங் கவிதையும்போ லானேனே

காந்தனெங்க டெய்வக் கறுப்பனை நான்பிரிந்து
வேந்தனில்லாச் சேனைபோல் வேளுக்குத் தோற்றேனே

வாகாகக் கூடி மதக்கறுப்ப னைப்பிரிந்து
மீகாம னில்லா வெறுங்கப்ப லானேனே

சசியிலா நாளானேன் சத்யமிலாச் சொல்லானேன்
பசியிலா வூணானேன் பாகமில்லாப் பாட்டானேன்

வருந்திவலி யத்தொடுத்து மையலெனக் குக்கொடுத்துப்
பிரிந்து விடலாமோ பெண்பழிசும் மாவிடுமோ

முன்னைப்போற் கூடி முயங்கத் திருமலையிற்
றன்னைப்போ னானுந் தவஞ்செய்ய மாட்டேனோ

உரையெலாம் பேசியெனை யுள்ளாக்கிக் கைகலந்து
கரையிலா மோகக் கடலிலே தள்ளிவிட்டான்

காராரு மேனிக் கறுப்பனென்னைக் கைகலந்து
பேராசை தீரப் பிரமலபி யாக்கிவிட்டான்

தடமருவு காவிமலைத் தானத்தார் தாமறியா
மடலு மெடுப்பேன் வழக்குந் தொடுப்பேனே

என்று மடமா னிருந்தேங்கப் பாங்கியர்கள்
கன்று பிரிந்துழலுங் கற்றாவைப் போல்வந்தார்

வண்டார் குழலி மயக்கந் தியக்கமெல்லாங்
கண்டா ரிவள்மனத்திற் காதலுட னேயறிந்தார்

மாந்தளிரைக் கீழ்விரித்து மாமலரை மேல்விரித்தே
யேந்திழையைக் கையா லெடுத்தகின்மே லேகிடத்தி

எங்கண் மடமயிலுக் கென்னவிதி வந்ததென்பார்
சங்கவடத் துக்கோதித் தண்ணீர் தெளித்திடுவார்

என்னரசே பொன்னரசே யெங்கள் குடிக்கரசே
மின்னரசே யென்றிடுவார் மெய்மறந்து நின்றிடுவார்

பேதலித்துச் சோர்ந்திடுவார் பேய்களுக்கு நேர்ந்திடுவார்
சீதளப்பன் னீர்தெளிப்பார் திருமுகத்தில் வேர்வழிப்பார்

மாதுபரை யீசனொடு மன்றி னடம்புரியுங்
கோதை நடைபெலிமுன் கொண்டவளைப் போற்றிசெய்வார்

திருநீறு சாத்தித் திருமுருக னைறெழுத்தை
யொருநூ றுருவேற்றி யுச்சா டணம்புரிவார்

சற்றே மனந்தெளிந்து தான்பார்த்தாள் கைலாகாய்ச்
சொற்சீற னையாளைத் தோழியர்கள் கூட்டிவந்து

வித்தார மாளிகையில் மின்னரசைக் கொண்டுவந்து
வைத்தார்கள் தாய்க்கிழவி வந்தாள் புலிபோலே

தலைநடுங்கிக் கோலூன்றித் தள்ளாடித் தள்ளாடி
முலைகள்முழங் காலில்விழ முடக்கி யுடல்கூனித்

தண்டார் கருப்பன் றனத்தில்வைத்த ரேகையெல்லாங்
கண்டா ளிவள்மனத்திற் காதலுட னேயறிந்தாள்

பற்கழன்ற வாய்திறந்து பார்ப்பா ளரிபோலச்
சொற்குழறிச் சொற்குழறிச் சொன்னாள் சிலவார்த்தை

வல்லாள னந்த மதக்கருப்பன் பூங்காவிற்
செல்லாதே யென்றேனே செய்திசொல்லி நின்றேனே

போய்ப்பூப் பறிப்பதல்லாற் பூமான் கருப்பனுன்னை
யேய்ப்பா னதற்கு ளிணங்காதே யென்றேனே

வாடைப் பொடிபூசி மங்கையரை யுள்ளாக்கிக்
கூடித் துவண்டிடுவான் கூத்தாட்டங் கொண்டிடுவான்

சர்க்கரையுந் தேனுந் தனிப்பாலுஞ் சீனியும்போற்
கற்கலரயப் பேசிடுவான் காமவலை வீசிடுவான்

மகளே திருமலையில் வாழ்கருப்ப சாமியென்போன்
முகமாயக் காரனென்று முன்னேநான் சொன்னேனே



அம்மனைபந் தாடிலையே யமுதவிசை பாடிலையே
நம்மனைவிட் டோடினையே நாயகனைக் கூடினையே

வேர்த்துடலஞ் சோர்ந்தனையே வித்தகனைச் சேர்ந்தனையே
வார்த்தை கடந்தனையே மயங்கிக் கிடந்தனையே

என்மொழியெல் லாமறந்தா யேச்சாக வேபிறந்தா
யுன்றனக்கு மென்குடிக்கு மொக்கவடு வாங்கினையே

ஆனதெல்லா மாக வவனே மணவாளன்
மானபர னைக்கூடி வாழ்வாயென் றேபோனாள்

ஆடல் மதன னழகு கருப்பன்வந்து
கூடுதற்குக் கூ.்.ற் குறிபார்த்தாள் கொம்பனையாள்

சீமான் றிருமலையிற் செல்வக் கருப்பனென்னுங்
கோமா னெனைக்கூடக் கூடலே கூடாயோ

கஞ்ச முகத்தான் கருப்பன்முன் போல்வந்து
கொஞ்சிவிளை யாடமணற் கூடலே கூடாயோ

மற்றொப்பி லாதபுகழ் வள்ளற் கருப்பனிரு
கொற்றப் புயங்கூடக் கூடலே கூடாயோ

இல்லாமை கொண்ட விளமைபோற் காய்ந்துமதி
கொல்லாமல் வெள்ளைமணற் கூடலே கூடாயோ

மாறா விரக மடவியென்றே மாதர்வசை
கூறாமல் வெள்ளைமணற் கூடலே கூடாயோ

அழலி விடுமெழுகா யக்குநொந்து கொன்றைக்
குழலிற் கமலமணற் கூடலே கூடாயோ

மருங்குபோற் கூடல் வளைத்தவிர லுந்தேயக்
கருங்குவளைக் கண்ணி கலங்குமந்த வேளையிலே

வென்றிவே லொத்த விழிகள்மழை யிற்புரளக்
குன்றில் வடம்புனைந்த கொங்கைக் குடமசையக்

கூந்தல் சொருக்கவிழக் கூடையெடுத் தேயிடுக்கிக்
காந்தண்மலர் போன்றஇருக் கையிற் பிரம்பெடுத்து

வஞ்சி யிடையின் மதனுடையை ளொருயிரும்
நெஞ்சவருந் திச்சோர நீல மயில்போல

முதுகிற் குழவிவைத்து முன்றானை யாலிறுக்கி
மதுமொய்த்த காவி மலைக்குறத்தி வாசல்வந்தாள்
வந்தாள் மலைக்குறத்தி மையல்கொண்ட தையல்மனச்
சிந்தா குலந்தீரச் செஞ்சொல் சிலமொழிந்தாள்
வாழ்வு வருதம்மே மங்கலங்கள் கூடுதம்மே
யேழுலக மாள்வதற்கு ராசரிகஞ் சேருதம்மே
பால்போன் மொழியாள் பதிக்குமேற் கேயுள்ள
மேல்வீசைக் காரனால் மேன்மை வருதம்மே
காவித் திருமலையுங் காவில்வளங் கோகிலங்கள்
கூவிக் களிக்குமச்சங் கோவிலுநான் வாழுமலை
ஊழின் விதியோ டுபநிடதம் பொய்த்தாலும்
வாளிரவி தெற்கு வடக்கா யுதித்தாலும்
சிந்தா குலந்தீர்க்குஞ் செல்வத் திருமலையில்
இந்தீ வரப்பூவு மென்குறியும் பொய்யாதே
தண்கொடுக்குங் காவிமலைச் சண்முகனுக் குண்மையுடன்
பெண்கொடுத் தோர்க்கும் பெரியகுல நாங்களம்மே
சிறியான்வே லக்குறவன் செய்யமறை நாலும்
அறியாக் குறியை யறிந்துசொன்னான் கேட்கலையோ
வாய்த்தகுறி பார்த்ததிலே வந்தகுறி கந்தனுக்கு
மூத்த குறவன்வரு முன்னெழுதி வைத்தானே
மயிலனையாள் பார்பதிக்கு வாய்த்தசா நூற்குறியைக்
கயிலை மலைக்குறவன் கண்டுசொன்னான் கேட்கலையோ
எங்கள் குறவர்குறி யீதானா லெங்கள்குல
மங்கையர்கள் சொல்குறிக்கு மானே பழுதுமுண்டோ
மனத்துயரங் கொண்டு வருந்தாதே யுன்மனத்தி
னினைத்தகுறி யெல்லா நிகழ்த்துவே னுண்மையம்மே
தறைமெழுகு கோலமிடு தந்திமுகன் பூசைசெய்ய
முறத்திலே முந்நாழி முச்சிரங்கை நெற்கொடுவா
அடைக்காயும் வெள்ளிலையு மள்ளிவை தேங்காயும்
உடைப்பாய் கணபதிமு னுண்மையுட னேபடைப்பாய்



கெஞ்சிப் பசித்துக் கிடந்து பரிதவிக்குங்
குஞ்சுக்குச் சோறுகஞ்சி கூழாகி லுங்கொடுவா
காளியம்மை செய்யுங் கன்னிமார்க் குத்துயிலும்
ஏழுருண்டை மஞ்சளையு மேந்திழையே நீகொடுவா
கைக்குறியுஞ் செய்ய கமல முகக்குறியு
மெய்க்குறியு நன்றுநன்று மேற்கெழுந்த தும்மனன்று
வள்ளியம்மை காளியம்மை வாய்த்தகன்னி மாரும்வந்தென்
உள்ளத்தி னுள்ளே யுவந்துவிளை யாடுதம்மே
சிலையிலிடு மம்பதுபோற் சீக்கிரமா யோடிவந்து
மலையிலுள்ள தெய்வமெல்லாம் வந்துவிளை யாடுதம்மே
உள்ள முருகி யுடல்புல் லரிக்குதம்மே
மெள்ளமெள்ள நீநினைத்த மெய்க்குறியுந் தோன்றுதம்மே
உன்னுடைய பண்பை யூருக்கு மேற்காக
வன்னமலர்ச் சோலைகளும் வாவிகளுந் தோணுதம்மே
அந்தமுறுஞ் சோலையிலே அன்னநடை மாதரொடுங்
கந்தமலர் கொய்வதற்குக் காரிகைநீ போனதுண்டு
மறுத்தொருவ ரில்லாமல் மானே தனித்துநின்றாய்
கறுப்பனென்னு மேல்வீசைக் காரனுன்னைக் கண்டானே
ஆசாரக் கள்ள னடுத்தடுத்துக் கெஞ்சிவந்த
மாசால வார்த்தை வலையிலகப் பட்டனையே
உரையும் பொருளு முடலு முயிர்போல
விரைமலர்ப்பூங் காவனத்தில் மேவிச் சுகித்தீரே
மன்றல்கமழ் காவிலந்த மன்ன னுனைப்பிரிந்தா
னன்றுமுத லின்றளவு மாசைப்பேய் கொண்டிருந்தாய்
வருவானோ மேக வனக்கறுப்பன் பூமாலை
தருவானோ வென்றுநீ தானினைத்துக் கொண்டதம்மே
சின்னக் கொடிபோலுஞ் சிற்றிடையாய் நீவளர்த்த
வன்னத்தைத் தூதுவிட்டா லணிய றருவானே
என்று குறமா னிருந்துரைக்கப் பாங்கியர்க
ளன்றெனவே கொண்டாடி நல்வெகுமா னங்கொடுத்தார்

வன்னக் குறத்தியந்த வாசலிலே போகுமுன்னே
யன்னத்தைப் பார்த்தா ளதற்கேற்ற வார்த்தைசொல்வாள்

மூன்றுலகும் பல்லுயிர்கள் முற்றும் படைப்பதற்குத்
தோன்றி னவனுக்குஞ் சுமதலைநீ தானலவோ

நாட்டி லிருக்கும் நரர்முதலா யாவருக்கு
மூட்டியுறக் காட்டுவது முன்றன் பொருளலவோ

அன்னமே செய்யதமை யந்தி தனைநளன்பான்
முன்னமே கூட்டி முடித்ததுவும் நீயலவோ

பாலுந்தண் ணீரும் பகுந்து பிரித்திடுவாய்
கோலமலை யுங்கடலுங் கூடவே சஞ்சரிப்பாய்

ஆதலா லென்னுடைய வன்னமே யுன்போலக்
காதல்நோய் தீர்ப்பதற்குக் காணே னொருதூது

காவிச் சுனையாடிக் கந்தன் பரிபுரத்தைச்
சேவிக்கும் வேளையிலே சிந்தைமயல் சொல்லாதே

இடும்ப னுடன்கூடி ரமித்திருக்கும் வேளையிலே
உடன்கலந் தென்றனுட னுள்ளாசை சொல்லாதே

சிரந்தணிந்து நித்தநித்தஞ் சேவிக்கும் பத்தருக்கு
வரங்கொடுக்கும் வேளையிலென் மையலைப்போய்ச்சொல்லாதே

தண்டிக் குணங்கொண்டு தலத்தினட வாதவரைத்
தெண்டிக்கும் வேளையிலென் சிந்தைமயல் சொல்லாதே

ஆதிகண்ட னெங்கோ னடிபாவி நித்தமும்போய்ச்
சேதிசொல்லும் வேளையிலென் செய்தியைப்போய்ச் சொல்லா
ஏகாந்த மாக விருக்குமந்த வேளையிலே [தே
மாகாதல் சொல்லிமலர் மாலைதரச் சொல்வாயே

என்று மடமா னியம்பத் திருமலையில்
வென்றிக் கருப்பன்முன்னே வெள்ளையன்னஞ் சென்றதுவே

துய்யவெள்ளை யன்னஞ் சுகக்கருப்பன் முன்புசென்று
மய்யலெல்லாஞ் சொல்லமலர் மாலை கொடுத்தானே

தாதவிழு மாலிகையைத் தான்கொணர்ந்து பாங்குடனே
காதல்கொண்ட நங்கைதிருக் கையிற் கொடுத்ததுவே



கையிலிட்ட மாலிகையைக் கண்டாள் மயல்காணாள்
தொய்யலிட்ட கொங்கைத் துணைகள்விம்ம விம்மினளே

கண்ணிலொற்றி யொற்றிக் கனதனத்தின் மாரணைய்த
புண்ணிலொற்றி யொற்றிப் புளகம் படைத்தாளே

செய்ய திருமலையிற் சென்று செழுங்காவித்
துய்யசுனை யாடிச் சுகம்பெறவாழ் வார்போல

தாமமலர் போற்றுந் தமிழ்க்கருப்ப னைக்கூடிக்
காமன் பகைதீர்த்துக் கன்னிமணம் பெற்றாளே

ஞானத் திருமலையி னையகனார் வாழியந்தத்
தானத்தார் வாழியெங்கள் சங்கத் தமிழ்வாழி

நற்றுலம் பெற்றெடுத்த நங்கைகுழல் வாய்மொழிசேர்
குற்றால நாயகருங் குறும்பலவும் வாழியவே

அத்தனெனை யாண்டவறி வானந்த நாயகரென்
சித்தாம் புயத்திற் சிறந்திருந்து வாழியவே

ஆதிநக ரீசரெங்க ளறம்வளர்த்தாள் வாழிமனு
நீதிதரும் பண்பைநகர் நீடூழி வாழியவே

தேனவிழுங் காவித் திருச்சுனையின் முன்புகண்ட
மானமான் சுப்ர மணியநம்பி வாழியவே

விந்தைசேர் கந்தன் விரைமலர்த்தாள் போற்றிவரும்
பைந்தமிழ்சேர் விக்கிரம பாண்டியன்மிக வாழியவே

ஏழுலகத் துள்ளோரு மெல்லோருங் கொண்டாடும்
வாழுமச்சன் கோவில் மணிகண்டன் வாழியவே

தோன்றுசிலை யாளரெனுஞ் சோதிமணி கண்டராது
மூன்று குலத்தரசர் மூவேந்த ரும்வாழி

வாசற் றுரைத்தனஞ்சேர் மந்திரிமா ரும்வாழி
தேசத்தர் யாவர்களுஞ் சிறப்பாக வாழியவே

வளைத்து வடகரையூர் மதில்சூழ்ந்த மூங்கிலைப்போற்
றழைத்தபுகழ்ச் சின்னணைஞ் சான்கிளையும் வாழியவே

வடித்த தமிழ்க்காவி மலைக்கருப்பன் காதலன்பாய்ப்
படித்தவருங் கேட்டவரும் பண்பாக வாழியவே.

திருமலைக் கருப்பசுவாமிபேரிற்
காதல் முற்றும்.

உ

## பிள்ளைத்தமிழ்ச் சாற்றுக்கவி.

அறந்தருநந் தனவருடந் தைமூவைந் தாந்தேதி யவிட்ட நாளில்
நிறந்தருபொற் றிரிகூட பதிப்பெரிய சாமிதுரை நிருபன் பேரிற்
கறந்திடுபா லொடுதேன்போற் கயிலாச நாதகவி ராச சிங்கஞ் [னே
சிறந்தபிள்ளைத் தமிழ்பாடி யரங்கேற்றிப் புகழ்விசையஞ்செலுத்தி

---

உ

# வடகரைப்
# பெரியசாமித் துரையவர்கள்பேரில்
### கைலாசநாதக் கவிராயரவர்களியற்றிய
# பிள்ளைத்தமிழ்.

### காப்பு

மாமா னினிதா மருவும் புயசயிலச்
சீமான்சீர்ச் சின்னணைஞ்சான் செல்வனுங்—கோமான்
றுரைப்பெரிய சாமிபிள்ளைச் சொற்றமிழ்காப் பான்கை
வரைப்பெரிய சாமி மகிழ்ந்து.

## காப்புப் பருவம். (1)

### திருமால்.

கங்கைமா னதிவள ரிளம்பிறைச் சடிலத்தர் கத்தர்திரி கூட பதிசேய், கருணையா லுலகமோ ரேழும் புரப்பவெங் கலியிருடை ப்ப வேலைச்; செங்கிரண னுதயஞ்செய் தாலெனக் கிழுவையிற் சின்னணைஞ் சேந்த்ர னீன்ற, செம்புலித் துரைபெரிய சாமிமக ராசனைச் செயவிசைய னைப்பு ரக்க; வெங்கயத் தைப்புரந் தபயத்தை நல்குநால் வேதவித் தைச்சு கத்தின், மென்மொழிப் பொன்மருமகலாது வளர்கா ளமேகத்தை யமுதோததிப்; பங்கயச் செங்கட் பசுந்துழாய் மணிமுடிப் பரிதிப் படைக்கை நிதியைப், பண்புசெறி செண்பகந லூர்மேவு ராசகோ பாலனை வணங்கு வாமே. (1)

### விநாயகர்.

கார்கொண்ட நீலப்பொருப்பருவி தூங்கமேற் கதிரிளம் பிறைதரித்த, காட்சியிற் கரடமத சுவழிபாய் மாத்தடக் கையானனத்தி ரெருபால்; வார்கொண்ட கிம்புரி மருப்பிலக வடவரையின் மாபார தம்பொ றித்த, வண்புகர்ச் சிந்துரச் செண்பக விநாயகனை வந்தனைசெய் தஞ்ச லிப்பாஞ்; சீர்கொண்ட தென்பாண்டி மண்டலத்

தலைமைபெறு செங்கோல் செலுத்து ரத்னச், சிங்காச னதிபனை மங்காத வெற்றிபெறு திண்சிலைக் குரிசி லைப்பூந்; தார்கொண்ட மற் புயச் சின்னணைஞ் சேந்த்ரனருள் சந்ததியை மனுப திபைபித், தரைபுகழு நேமிசேர் துரைபெரிய சாமிமா றனைநிதங் காக்கவென்றே. (2)

உமையம்மை.

எண்டிக்கி லுக்கடங் காப்பெருந் திறல்விசய னெங்கள்சங் கரலிங்கரா, சேந்த்ரன்ச கோதரனை மகுடசிர தானையட லேறு புய பூத ரனையின்; றண்டரள மிலகுவெண் கவிகையொன் றுக்கு ளித் தரையேழு மரசு புரியுந், தருமநெறி மனுராச துரைபெரிய சாமிமா றன்னைமகிழ் வொடுபு ரக்க; வண்டாடு தண்டலைப் புண்ட ரிக மண்டப மடப்பிடி நடைக்கொ டியைநேர், மங்கைசெங் கைப் பிடிக் கன்றுசென் றேவில் வளைக்கின்ற சக்ர பாணி; கொண்டாடு சித்ரசபை மன்றாடு மாடத்ரி கூடக் குறும்ப லவில்வாழ், குற்றால நாயகர் மணக்கோல மகலாத குழல்வாய் மொழிக்க வுரியே. (3)

முருகக்கடவுள்.

வேறு.

அருமறைக்கிளவி முறையிடப்புனையு மருணரத்நமணி நூபுரத் தாட்டுணை, யழகனைக்கனக சபையினிர்த்தமிடு மானைவித்துரும வார்சடைக் காட்டனை, யயில்விழிப்பிணையின் மருளவெட்டியிவ னவளெனச்சொலவு பாயமிட்டாட்டிய, அறம்வளர்த்தபரைகுழல்மொழிக்கிருக னனைய புத்திரர்ச ரோருகத்தோட்டுறை; திருமகட்குரிமை மருமகட்கிறைவர் சிரமுறப்புடைப டீரெனப்போட்டவர், தினைவிதைத்தகதிர் மணிபிடித்துவிளை சிறுபுனத்திலமர் குமரியைத்தேட்டினர், சிவனுரைத்தபடி யவர்தமக்கினிய செவிபுகப்ரணவ மோதுமெய்ப் பாட்டினர், திருமலைக்குள்வளர் குருபரக்குமரர் சிவபரப்பிரம தேவரைப்போற்றுது; பாவலர்க்குமுது மறையவர்க்குமறி வுறவினர்க்குநிதி மாரிபொப்பாய்க்கவி, யிருடொக்கவரு மிரவியொப்பவனை யிருபுயத்தளவ நாண்மலர்ச்சூட்டனை, யெளியர்சித்தமுடன் வலியர் த்தமிகு தெனதிறுக்குநிறை கோலெனத்தீட்சண, விதயனைத் மிழி னமுதசத்ரமிவ னெனவெடுத்துரைசெய் போசனைத்தாட்டிக;



வரிசைபெற்றமுகில் பொருவுமெய்க்குரிசின் மருகசற்குணவி வேகனைப்பார்த்திபர், மகதர் குச்சிலியர் குருதர்கப்பமிட வகையிமெறுப்பமிடு சேயகைப் பார்த்தனை, மணமிகுத்தபொழின் மடலவிழ்த்திழிய மதுவயற்பெருகி வாவியிற்றேக்கிய, வடகரைக்கரசு கிழுவைநற்பதியில் வருதுரைப்பெரிய சாமியைக்காக்கவே. (4)

முப்பத்து மூவர் முதலியோர்.

வேறு.

சந்தனப் பொதியா சலத்திறைவ னைச்செழுந் தாம்ப்ரபன் னித்துறைவனைத், தளகர்த்த மதியூகி யெங்கள்சங் கரலிங்க தாட டகன் மருகனைச்சீர்ச்;செந்தமிழ்க் கிழுவையிற் சின்னணைஞ் சேந்த்ர னருள் செம்புலியை யம்புயச்செந், திருவனிதை பிரியாத துரை பெரிய சாமியைச் செயதானை யேபுரக்க; கந்தனைத் தந்தருள் கரி ஞ்சைவன லிங்கமணி கண்டனெழு கன்னிமாதர், காளிசெண் பக வல்லி தாணிபீ டச்சத்தி கலைமங்கை கமலமங்கை; யிந்திரன் முத லெண்மர் பன்னொருவர் பன்னிருவ ரிமகரன் வடுகன் வேதா, விக் குமதன் வீரபத் ரன்றருவி னீழற்கு னிதமர்ந் தருள்தேவரே. ()

காப்புப்பருவ முற்றும்.

---

# செங்கீரைப் பருவம் (2)

---

வைபிட்ட வேல்விழிச் செவிலிமார் புனலாட்டி மன்னுமீ ரம்பு லர்த்தி, யாகிலப் பொட்டிட்டு நாவேறு காணேறு வந்துறு நீறு மிட்டுச்; கையிட் டெடுத்துடல் குலுக்கியுட லுச்சியுமு கந்துமடி மேலிருத்திக், கனிவாயி னமுதம் புகட்டியிரு கண்ணினுக் கஞ்ச னந் தீட்டியுரகப்; பையிட்ட ரத்நப் பதக்கமிட் டுச்சரப் பளியிட்டு வளைகளிட்டுப், பைம்பொனு ணிட்டுக் குதம்பையிட் டுச்செழும் பவளவாய் முத்தமிட்டுச்; செய்யிட்ட முறவளர்த் தருளவள ருங்குழவி செங்கீரை யாடியருளே, தெரிதமிழி னமுது துரைபெரிய சாமி முகில் செங்கீரை யாடியருளே. (க)

ஏனுபதி யாகினு மதிப்பதிக் குவமான மெய்ப்பதியு மில்லையென் னு, மிநத்ரபதி தென்கிழவை யம்பதிக் காதிபதி யிரதிபதி மகபதியினைத்; தோதுபதி னெண்புரா ணக்யான மனுபதிவி னுடு பதி யெனப்புரவலர்க், கோங்குபதி யஷ்டபதி கேட்டன்று நடமிடுவி னோதரகு பதிபூபதி; தாதுபதி முல்லையம் போதுபதி திண்புயச் சயிலபதி வடகரையெனுங், தானாதி பதிதளச் சேனாதி பதிபெருஞ் சகமண்ட லாதிபரொடுஞ்; சேதுபதி யுந்துதிசெய் திரிகூட பதிராச செங்கீரை யாடியருளே, தெரிதமிழி னாரமுது துரைபெரிய சாமி முகில் செங்கீரை யாடியருளே. (உ)

மின்னுலவு நீலக் கருங்குயினன் மானமா வேழமே லுற்று லாவி, மேனகைக் கனியினைக் கொம்பருங் கானமுற மெய்கா லசைத் தாடவே; பொன்னிலகு சசிதழுவி யுயர்தருவி னீழற் பொருந்திவிண் மேவிமாறுப், புத்தமுத மார்ந்திர வகற்றுமிரு நிதிமணி பொலிந்தி னிய காமதேனு; மன்னுமுனி சூழவே வயிரங்கை யுறநாட்ட மாசித்ர காயமேவ, வந்தனைகள் புலவர்செய விந்திரனை நிகரான மாணிக்க மலைநாடனே; சின்னணைஞ் சானுதவு செம்புலிச் செகராச செங்கீரை யாடியருளே, தெரிதமிழி னாரமுது துரைபெரிய சாமிமுகில் செங் கீரை யாடியருளே. (ங)

மத்தகச மித்தனை திரட்குதிரை யித்தனை ரதத்தொகுதி யித் தனையென, வரைவற்ற துரைமக்கண் மகுடத்த லைபணிந்து சொன புட்ப முதலாகவே; யத்தமல ரிட்டுநவ ரத்நமு நிரைப்பமிடை குப் பைசிறு செப்புமுலையா, ரலகிட் டொதுக்கவிள நிலவிட் டெறிக்கு மத் தாணிமண் டபவாசலாய்; முத்தமிழ் மணத்துமது நித்தமு மளி த்தசமு கத்தினனு மத்துவசனே, முல்லையந் தொங்கலணி யெங் கள்சங் கரலிங்க முன்வந்த பொன்மேருவே; சித்ரசபை நித்தனை வழுத்துகரு டத்துவச செங்கீரை யாடியருளே, தெரிதமிழி னார முது துரைபெரிய சாமிமுகில் செங்கீரை யாடியருளே. (ச)

கருமையெரு மைபுனிற் றேரிளங் கன்றிரு கவைக்கால் பெயர்த் தசைத்துக், கள்ளுண்ட வெறியர்போற் றள்ளுண்டு துள்ளுண்டு னைகொண்ட தாய்தனத்திற்; பிரியமுட னுண்ணவே பிதிர்விட் டெழும்பயப் போறு கால்பரந்து, பின்னுசெந் நெற்கன்னல் வயலூடு



லாவியே பெருகிவெண் டிரையெறிந்து; மருமலர்த் தண்டலையி லனி லமுற் றுச்சிதறு மதுமழையி னூற்றெழுந்து, வருநதி கலந்துசர சுபதிபுணர் கங்கையென மருவுகல் லகநாடனே; திருமலைப் பெரு மாண்மெய் யருமைமைத் துனராச செங்கீரை யாடியருளே, தெரி தமிழி னாரமுது துரைபெரிய சாமிமுகில் செங்கீரை யாடியருளே.

செங்கீரைப் பருவம் முற்றும்.

## தாலப்பருவம் (3)

கன்னங் கறுத்த சூன்மேகங் ககன முலவ நறும்புன்னைக், கருங் கோ டுழக்கச் சொரிபுனலிற் கடன்மீன் வரவே தடவாளை; யுன்னி யெதிர்போய்ப் பொருதுவெடித் தோங்கு தென்னம் பழமுதிர்க்க, வுடைந்த நீரு மலர்த்தேனு முலைந்த மதுரக் கனிரசமு; மன்னிப்பாய வயற்சாலி வளரத் தருமம் வளரநிதி, வளர மருவு குடிவளர மனு வார்செங்கோன் மிகவளரத்; தன்னில் வளர்செண்பக நல்லூர்த் தன தா தாலோ தாலேலோ, சதுரா பெரிய சாமிதனு விதுரா தாலோ தாலேலோ. (க)

தென்ற லுலவுந் தண்டலையிற் செவ்வா னனக்கூன் மந்திபலாத், திரண்ட கனியை முழவுகொட்டத் தேமாங் குயில்க ளிசைபாட; மன்றன் மலரில் வண்டார்ப்ப மயில்க ளாடக் கிளிபூவை, வசன முரைக்கச் செண்பகப்பூ வயங்கு தீப மேந்திநிற்ப; வென்றி யுடை வா ளேவுபடை விரைமென் கொம்பர் கொடிதாங்க, விருது மதனன் வசந்தனொடு மேவி நாளு மின்பமுறத்; தன்ற னிகரி லாக்கிழவைத் தலைவா தாலோ தாலேலோ, சதுரா பெரிய சாமிதனு விதுரா தாலோ தாலேலோ. (உ)

பருவத் தலையாம் ருதுகாலம் பணைத்தே யெழுந்த பயோதரப் பெண், பாவை தலைவன் றனைச்சேர்ந்த பண்பார் கருவாய்ப் பயந்த ருள; வரையி லுயர்ந்த மாணிக்க மலையாஞ் செவிலி யிடந்தங்கி, வளர்ந்து தவழ்ந்து நடைகள்பெற்று மலரு மணியும் வளைமுத்து; மரிதிற் கலைபொன் மணிமுதலா வணிந்து மருதத் தோழியுட, னளவ ளாவிப் பண்ணைவிளை யாடுங் கருப்பா நதிக்கன்னித்; தருமத் துறைவா செம்புலிப்பாண் டியனே தாலோ தாலேலோ, சதுரா பெரிய சாமிதனு விதுரா தாலோ தாலேலோ. (ங

வேறு.

கண்டிகை புங்கந் தரமுமி சைந்து கலந்து கலந்தாடக், கணைபாழிகளுங் கடகங் களுமிரு கையி லிசைந்தாட; முண்டக சந்திர மண்டல முகமும் மூரனு முற்றாட, முத்துச் சுடிகையு நெற்றிப் பட்டமுமுடிகு முவந்தாடப்; புண்டர முங்கன குண்டல மும்பைம் பொற்காரையுமாடப், புனைகிண் கிணியடி தொட்டி லுதைந்தே புன்னகையாடிமணித்; தண்டிகை யேறிப் பவனி வருந்துரை தாலோ தாலேலோ, தனபதி பெரிய சுவாமி மகிபதி தாலோ தாலேலோ. (௪)

வேறு.

மதுர சுபாஷித வுரைபயி றுலா கீலால, மடுநிறை கிழுவையில் வாழ்கதிர் வேலா பூலோகத்; ததிக மனோகர மதனன் கோலா மேலோர்கட், கமுதன சுவையுறு சுமுகவி சாலா நூலோதித்; துதிதமிழோர்நய முறுமனு கூலா மாலாகச், சொலவுல ககமிழ் வுறுகுணசீலா பாலோடே; ததிபரு கியகோ பாலா தாலோ தாலேலோ, தனபதி பெரியசு வாமீ தாலோ தாலேலோ. (௫)

தாலப்பருவம் முற்றும்.

# சப்பாணிப்பருவம் (4)

கோமளச் சங்குசக் காமச்ச மேறுதுடி கோகனக ரேகை யங்கை, கொழிதமிழ்க் குதவியிந் திரதாரு நாணக் கொடைத்தழும் புற்ற செங்கை; காமர்பெற் றிடும்விசய தசமியிற் றேவிதரு கட்டாரி தாங்கு செங்கை, கருதலா ரஞ்சவே படைவாள் பிடிக்குங்கை கடகங்க ளிட்ட செங்கை; வாமநற் கேயூர மணிபுங்கை சரணென்றவர்க்கஞ்ச லென்ற செங்கை, வளர்பெரிய சாமியென் றெப்பமிடு செங்கைதன வத்தொடைபல் சூட்டுகின்ற; தாமரைக் கையிணை சிவப்பச் சிவப்பவொரு சப்பாணி கொட்டி யருளே, தருமநெறி மனுராச துரைபெரிய சாமிமுகில் சப்பாணி கொட்டியருளே. (௧)

திமிரவிர விற்றிசை விளங்கவே பலவுடுத் திரளு டெழுந்திலங்கு. திங்களென வளையின குழூஉப்புறத் தனிடை சிறந்திடு வலம்புரியென, வமருததி யேழினிற் பாற்கட லுதித்ததென வசலத்துண் மேருவென்ன, வளவிடுந் தருவுக்கு ளிந்த்ரதரு வென்னவரு மாற்றினுட் கங்கை யென்னக்; கமழவளி மொய்த்தபன் மலருக்குளே செழுங் கமலமென வைம்பொறிக்குட், கண்ணெனப் புலவரிற் கண்ணனென வேதரணி காவலர்கள் யாவருக்குந்; தமதுமகுடத்தணி சிரோரத்ந மன்னவா சப்பாணி கொட்டி யருளே, தருமநெறி மனுராச துரைபெரிய சாமிமுகில் சப்பாணி கொட்டி யருளே. (௨)



காலத்தின் மாலைதரு மேகநற் கணவன் கசிந்தெதிரி னூற்றுமேவக், கண்டுயிர் பரிந்துட றழைந்தரும் பானநகை காட்டியே முகமலர்ந்து; கோலத்தி னெல்கிமென் கொடியிடை குழைந்துபைங் கொம்பிற் பொலிந்த செயலாற், குலமாதர் கற்புநிறை கொண்டதண் டளவமணி கோதண்ட ரகுராமனே; நாலெட் டிரட்டிசெய் கலைக்யான தீபனே லளிதகுண மிர்துவசனனே, நரபால ஞனசங் காலிங்க முன்வந்த நகுலனே மகிபாலனே; தாலத்தி னீதிபுரி சின்னணஞ் சான்மதலை சப்பாணி கொட்டி யருளே, தருமநெறி மனுராச துரைபெரிய சாமிமுகில் சப்பாணி கொட்டி யருளே. (௩)

செப்பானு மொப்பரிய கும்பப் படாமுலைத் தேங்கிளி மொழிப்பூமக, டிருப்பாற் கடற்பெறுஞ் செல்வியிவ ரிதயச் செழுங்கமல முகைபவிழ்ப்ப; மைப்பார்வை யங்குவளை மலரவொரு கிரணமணி மார்த்தாண்ட னென்ன வாயர், மான்பா லுதித்தகோபாலபூபாலனே வங்கிஷ பாரம்பரை யதாய்; முப்பானு மன்னமுஞ் சொன்னமுந் தந்தின்ன முந்தன்னை நம்பினோரை, முழுதும் புரந்தருள் புரந்தர துரந்தரா முன்னூனு மனுமுறைமையுந்; தப்பாத செங்கோல் செலுத்துந் திருக்கைகொடு சப்பாணி கொட்டி யருளே, தருமநெறி மனுராச துரைபெரிய சாமிமுகில் சப்பாணி கொட்டி யருளே. (௪)

செங்கமல முங்குமுத முங்குவளை யுந்தனி செனிக்குமொண் கழனி தோறுஞ், செங்கட் கரும்பகடிணைத் துழவ ருழுதுழுது தெளிசமைப் பித்த சேற்றிற்; பொங்குமது வைத்திந்தி ரன்றன்னை யடிதொழுது புதுமுடி யவிழ்த்து நாற்றைப், பொருந்தநடு மள்ளியர்கள் குரவையொலி மணவொலி பொலிந்தவல் லக நாடனே; துங்கவக ளங்கரண சிங்கசங் காலிங்க துரைமதனன் ராமசாமி, சுமுகன் முத்துச்சாமி யிவர்கட்கு முன்வந்து தோன்றுமெய்த் துணைவராக; சங்கீத சாகித்ய சம்பன்ன விற்பன்ன சப்பாணி கொட்டியருளே, தருமநெறி மனுராச துரைபெரிய சாமிமுகில் சப்பாணி கொட்டி யருளே. (௫)

சப்பாணிப்பருவம் முற்றும்.

# முத்தப்பருவம் (5)

தந்திக் கருமா மருப்பின்முத்தஞ் சங்கந் தருமுத் திந்துமுத்
தந், தாட்டா மரைமுத் தரம்பைமுத்தந் தையலார்கந் தரத்தின்
முத்தஞ்; சிந்தி னுலவிப் பியின்முத்தஞ் சேதா கோதாப் போதாக்
கட், செவிகார் முதலை குரண்டம்வளை செந்நெல் கன்னல் பூகமுத்த;
முந்தி வருமீன் றலைமுத்த மோங்கி வளர்கீ சகமுத்த, முரைத்த
முத்த மிருபதினும் மொவ்வா தெனவே யென்மனது; கந்த செம்ப
வளவிம்பக் கனிவாய் முத்தந் தருகவே, கன்னு பெரிய சாமிமன்னு
கனிவாய் முத்தந் தருகவே. (௧)

விண்ணுக் கினிய மதிநிலவு வீசி விளங்கு மேடைதொறு,
மேகக் குழலார் மெல்விரலால் விரும்பி வருடும் வீணையிசைப்; பண்
ணுக் கினிய வனுராகம் பயின்று பயின்று பரதமுறைப், படியே
லயந்தப் பாமலிரு பாதச் சிலம்பு கலகலெனப்; பெண்ணுக் கினிய
கமலையெனப் பெருமைக் கினிய நடனவொலி, பெருகுங் கிழவைச்
சின்னணைஞ்ச பெருமா ளுதவுந் திருமாலே; கண்ணுக் கினிய வதிம
தூரக் கனிவாய் முத்தந் தருகவே, கன்னு பெரிய சாமிமன்னு கனி
வாய் முத்தந் தருகவே. (௨)

வெதிர்வா யிசைக்குந் தீங்குழலை விரைவாய் மிர்துவாய் விரல
மைத்து, வெவ்வே றுகச் சத்தசுரம் விளங்கப் பயிலுஞ் செங்கனி
வாய்; பதிவாய் வெண்ணெ யுண்டசெழும் பவள மனைய செங்க
னிவாய், பாடி தனில சோதைமுலைப் பாலுண் டுவந்த செங்கனி
வாய்; முதிரா மதலை யால்விசயன் முடுகு சமரில் வலம்புரியை, முழ
க்கக் குறித்த செங்கனிவாய் முளரித் திருமான் மொழிகேட்டுக்;
கதிர்வாண் முறுவற் கனிதருஞ்செங் கனிவாய் முத்தந் தருகவே,
கன்னு பெரிய சாமிமன்னு கனிவாய் முத்தந் தருகவே. (௩)

பண்ணேர் மொழிப்பொன் புணர்பீதாம் பரனே திமிர தின
கரனே, பாரவீர வாகுவெனப் பாரா சர்கடம் பகைதடியும்; விண்
ணே றெனவே யுதித்தகுல விளக்கே துளக்க லாகாமா, மேரு
கிரியே யருட்கடலே வேலாவலையம் புரக்கவருந்; தண்ணு ரமுதே



ளவமலர்த் தாமா வீமா சோமனெனத், தமிழுக் குதவிந் திரத
ருவே தருமப் பொருளே யிருநிதியே; கண்ணு ரெழிற்சிந் தாம
ணியே கனிவாய் முத்தந் தருகவே, கன்னு பெரிய சாமிமன்னு கனி
வாய் முத்தந் தருவே. (௪)

தனுவி லுருசி வீழுநத்தாற் றருக்கா லடரு மவுணர்படை,
சாயப் பொருதிந் திரற்கரசு தப்பா தளிக்குந் தன்மையினன்;
மனுவி னெறியாந் தசரதன்றன் மகவாய்ப் பரத னிலக்குமணன்,
வளர்சத் துருக்கன் பின்வரமுன் வந்து புரந்த ரகுபதிபோ; வினிய
தமிழ்ச்சின் னணைஞ்சான்சே யெனவே துரைச்சங் கரலிங்க,மிராம
சாமி தமிழ்க்குதவு மெங்கண் முத்துச் சாமியுடன்; கனியுந் துணையா
யுதித்துலகங் காப்பாய் முத்தந் தருகவே,கன்னு பெரிய சாமிமன்னு
கனிவாய் முத்தந் தருகவே. (௫)

முத்தப்பருவம் முற்றும்.

# வருகைப்பருவம். (6)

கருதார் சிரசிற் கிரீடமலை கடகந் தழுவு முபயபதங், கரிஞ்சை
வனலிங் கரைவணங்கிக் கருதிப் பிரதக் கணஞ்செய்பதம்; பொரு
வெங் களிறு நடத்தியரும் புரசைத் தழும்பு பொருந்துபதம், புக
ழ்வீ ரகண்டா மணியணியாப் புனையும் பாதந் தண்டைகளும்;பரியங்
கழங்கிண் கிணிபுமணி பாத முலக மளந்தமலர்ப், பதமை வருக்குத்
தூதுசெலும் பாத மசைய விளையாடி; வருவாய் திருவாய் முத்த
மிட மகிழ்வாய் வருக வருகவே, வரிசைத் துரையே துரைப்பெரிய
சாமி வருக வருகவே. (௧)

தேமாங் கனிமென் மொழியார்தித் திக்கும் புகழ்த்தன் னமு
தமிகுந், தேனு றியமா துரியநறுஞ் செய்ய விம்பக் கனிபழுத்த;
சோமா னனத்துக் குமிழ்மறிந்து துலங்கு குழையி லடர்ந்துகமுந்,
துணைமீன் விழிகள் பொருந்தாமற் சோதி மணிநித் திலவடமுஞ்;
சேமா ரமுஞ்சந் தனமுமணிந் திணைத்துக் கனத்துப் பசந்துருவிந்,
திறுமாந் தெழுந்த கும்பமுலைக் கெய்த்தேபொய்த்த விடைதளர்ந்து;

மாமோ கத்தான் மடலெழுது மதனு வருக வருகவே, வரிசைத் துரையே துரைப்பெரிய சாமி வருக வருகவே. (௨)

கொஞ்சித் தவழ்ந்து விளையாடுங் குமரா வருக திருமுகத்தின், குறுவேர் வாற்ற வருகமணிக் குதம்பை புனைய வருகவுன;தஞ்சொற் கேட்க வருகபசிக் கமுதந் தருக வருகவணி, யாரம் புனைய வருக வம்பொ னரைநா ணிறுக்க வருகநறுங்; கஞ்சப் பதத்திற் சதங்கை தண்டை கனகச் சிலம்பு மிடவருக, கையில் வளைகே யூரமுதற் கலந்து தரிக்க வருகமலர்; வஞ்சி மருவுஞ் சின்னணைஞ்சான் மதலாய் வருக வருகவே, வரிசைத் துரையே துரைப்பெரிய சாமி வருக வருகவே. (௩)

சீரா ரமுதே யமுதகுணச் சிந்தே யெனக்க சிந்தனைமார், சிந்தை மகிழ வெடுத்தணைக்குஞ் சிந்தா மணியே யவுதாரா; தாரார் தளவப்புயத்தாமா தாமோ தரனே தானறியுஞ், சங்க நிதியே நிதி பெருகுந் தனதா தனதா யடுப்போரைப்; போரார் களிறு மூண்டெ விட்டப் புரந்த வரசே புரந்தரனே, புரிவார் கிழவை தனிற்றருமம் புரிவார் பேறே மிகுமாறு; மாரா துரைச்சின் னணைஞ்சான்குமாரா வருக வருகவே, வரிசைத் துரையே துரைப்பெரிய சாமி வருக வருகவே. (௪)

வேறு.

அம்பத்தி நாண்மதிய மார்சடில ரைப்பணிசெ யம்பத்தி யான் வருகவே, யார்வத்தி ரத்தனு மெனவரு பெருங்கருணை யார்வத்தி ரத்தன்வருக; கும்பத்தி ஞனையான் செந்தமிழ்க் குற்பவக் கும்பத்தி ஞன்வருகவே, கோதண்ட மாற்றலர்க் கன்பருக் கருள்செயுங் கோதண்ட பாணிவருக; சம்பத்தி ஞனுக்கு மிக்காக வரசுபுரி சம்பத்தி ஞன்வருகவே, சந்தான மாகவே சின்னணைஞ் சானுதவு சந்தான தாருவருக; கம்பத்தி ஞனைவென் றன்றுகட் டியதுவச கம்பத்தி ஞன்வருகவே, காடமத களிறேறி வருபெரிய சாமியாங் கனகமா முகில்வருகவே. (௫)

வருகைப்பருவம் முற்றும்.



# அம்புலிப்பருவம். (7)

மாலையுங் காலையுஞ் சிந்தைமகிழ் வுறமருவு மரபாற் சிவந்துதித்து, மறுமன்னி யற்காய்ந்து தரணியிறை வற்குமேல் வட்டமுறவேவளர்ந்து; சீலமுறு மாலோ னெனத்தினமு வந்துசெந் தேனிதழி யார்விரும்புந், தேகம் படைத்தியா வருமிவன் றுரகா திபனெனுந் தன்மையுற்றுத்; தாலமெங் கும்புகழ் குபேரனிவ னென்னவே தண்ணமுத முதலளித்துத், தணவாது குவலைய மலர்ச்சிபெற வருதலாற் சமமொக்கு மிருவருக்கு; மால்விழி யிரதிவடி வம்புலிச் செம்புலியொ டம்புலி யாடவாவே, யனவரத கலியாண நிதிபெரிய சாமியுட னம்புலீ யாடவாவே. (௧)

கற்பகா லங்களிற் சென்றழிக் குங்குறைக் கலைமதிய னீயிவன் வருங்,கற்பகா லங்களினு நந்தாத கற்புமிகு கலைகள்வளர் பூர்ண மதியோன் ; சொற்பமா கியவெறுஞ் சோமனீ யனசத்ர சோமனிவன் மாமனிடமே, தோன்றுசா பந்தவிர்த் திலைமாம னிடமிவன் றோன்றுசா பந்தகர்த்தான்; வெற்பிணை வலஞ்சுற்றி யுடல்வெளுத் தனையதின் மேற்கொடி பொறித்ததிவனே,விண்ணிலொரு மண்டலம் முண்டுனக் கிவனுக்கு வெகுமண்ட லங்களுண்டே; யற்புத மிவன்சரிதை யாதலா லதுவறிந் தம்புலீ யாடவாவே, யனவரத கலியாண நிதிபெரிய சாமியுட னம்புலீ யாடவாவே. (௨)

கார்முகத் தைச்சென் றடுத்தியே லஃதிவன் கையினுற் கூனி நாளுங், கட்டுறுந் தினகர னிடஞ்சேரி லோவுனது காந்திதனை மாந்திவிடுவ ; னீர்முகந் தெறிகின்ற நெடுநேமி காப்பதென நீசென் றொதுங்க நினைவாய், நிலையாத வாரிப் பரப்பு நீ ரதுசுவற நெடுவேல் விடுத்த திவனே; பார்முகம் விரும்பும்வெண் பிறையே யிருப்பிடம் பார்க்கிலுள தோவுனக்கிப், படியாக வேசலிப் படையவிதி யோதமிழ்ப் பாண்டிநாட் டிறையிவன்போ; லார்முகம் பார்த்துனை யழைப்பவர் பிழைக்கலா மம்புலீ யாடவாவே, யனவரத கலியாண நிதி பெரிய சாமியுட னம்புலீ யாடவாவே. (௩)

சரியாக வொழுகிட வாநிசா சார்புவு சரியாக முறவடர்த்
தான், றனிநிசா சரணிலை யடர்த்தலரி தோவிவன் சரிதையைபி
தென்று சாற்றுந்; தெரியாத கனகனறை தூணிலே யுக்கிரச் சிங்க
மென வந்துபொருதே, சினத்துடல மாயவே நெஞ்சஞ் சிதைத்த
னன் சீறிவிடி லேதுபுகலா; மரியாதை யொடுவரிற் றனவரை முன்
காத்த வாறுபோ லேபுரப்பான், மன்னுதா னவனெனும் பேரூழு
ருந்தொழிலும் வருமுனக் கின்னமதனு; லரியாச னுதிபதி செம்பு
லித் துரைமகிழ வம்புலீ யாடவாவே, யனவரத கலியாண நிதிபெ
ரிய சாமியுட னம்புலீ யாடவாவே. (௪)

கயமுகத் தசுராதி பொடிபடத் தூரகமயில் கடவுதிரு மலையில்
முருகக், கடவுளைப் பரவியவர் கருணை கடாட்சமிக் காகவே பெற்ற
வதனுற்; பயிலுநித் தியனனைய குருமணி பரஞ்சோதி பாதமற
வாத வதனுற், பாருலகி லிவனுளங் கருதியது முற்றுநற் பார்வை
வைத் திடிலுய்குவாய்; தயிரியத் துரைராம சாமிசங் கரலிங்க சாமி
தமிழ் முத்துசாமி, தமையனென வருமரசு திருமலைப் பெருமாள்
தபாலுமைத் தனனம்புயத்; தயில்விழிக் கமலையா கம்புலிச் செம்
புலியொ டம்புலீ யாடவாவே, யனவரத கலியாண நிதிபெரிய சா
மியுட னம்புலீ யாடவாவே. (௫)

அம்புலிப்பருவம் முற்றும்.

## சிற்றிற்பருவம். (8)

பொன்னின் மணலா லில்வளைத்துப் புதிய கோமே தகமடுப்
யாப், பொருந்தக் கூட்டி மரகதத்தாற் பொற்பார் குழிசி முதலமை
த்து; மன்னும் பன்னீ ருலைப்பெய்து வயங்குந் தாள வல்சியிட்டு,
வயிடூ ரியத்தி னுமிபரப்பி மணிமா ணிக்கத் தழன்மூட்டி; மின்னும்
பவள விறகடுக்கி வியப்பா லமுது கறிசமைத்து, விளங்கு ரதநப்
பாவைமன் றல் விளையாட் டியற்றுந் தருணமிது; சின்னஞ் சிறியே
முனைப்பணிதல் செய்தேஞ் சிற்றில் சிதையேலே, சீலா பெரிய சாமி
மகி பாலா சிற்றில் சிதையேலே. (௧)



மனது பொருந்தச் செய்தநன்றி மறந்த கபடர் கிரகமல்ல,
மாற்று ரமரில் வந்துநிற்க மறைந்து போவார் மனைகளல்ல; உனது
கரத்தா லெழுதுமொப்ப முன்னித் திறையி டார்மருவு, முறைபு
ளல்ல நிதிபெருக்கி யுற்றூர்க் குதவா ரகமுமல்ல; தனதாய் நம்பி
னோர் தம்மைச் சதிசெய் கொடியார் வீடுமல்ல, சங்கப் புலவோ ரந்த
ணர்க்குத் தருகண் செய்வார் பதியுமல்ல; தினமுன் புகழே துதித்
தாடு சிறியேஞ் சிற்றில் சிதையேலே, சீலா பெரிய சாமிமகி பாலா
சிற்றில் சிதையேலே. (௨)

வதனந் தனிற்பாக் கியத்திருமான் மலர்ச்செங் கரத்தி லென்னு
ளும், வழங்குந் தான விமலைபுய மருவும் வீரச் செல்வியுன்ற; னிதை
யங் கருணை யிந்திரைசொல் லினிய குணத்திற் கீர்த்திசெய்மா,
வியல்பாய் மேவுஞ் சருவாங்க மிசையுஞ் சௌமிய மான்கமலை; கதிர்
வா டனிலை சவுரியப்பொன் காக்குங் குடையிற் செங்கோலிற், கரு
துஞ் சாம்ப்ராச் சியசலதை களின்னா யட்ட லக்குமிசேர் ; சிதையா
வின்பத் திருமாலே சிறியேஞ் சிற்றில் சிதையேலே, சீலா பெரிய
சாமிமகி பாலா சிற்றில் சிதையேலே. (௩)

வேதா கமங்க டழைக்கமனு வேந்தாய்க் கிழவை தனிலுதி
த்து, மேரு கிரியி லேற்றினைத்த விளக்கா யுலகில் விளங்குபுரு;
கூதா மகரக் குழைக்காதா கோவே பாவேந் தருக்குதவுங், குன்றே
யரியேற் றிளங்கன்றே குளிருஞ்சுமுக குணநிதியே; தாதாவென
வந் தடுப்பவர்க்குத் தாதா தானம் பொழிந்துவரு, தந்தா வளத்
தாய் மாற்றரசர் தந்தா வளமே பெறவணங்குஞ்; சீதா பதியே நர
பதியே சிறியேஞ் சிற்றில் சிதையேலே,சீலா பெரிய சாமிமகி பாலா
சிற்றில் சிதையேலே. (௪)

இந்தார் சுமுக னிந்த்ரதரு ராம லிங்க முகிலீன்ற, வெழின்மா
ணிக்க வாசகஞ்சொல் லினிய மாம னெனவணங்க; வந்தா தரித்
தாய் பெருமைதரு மைந்தன் பெரிய சாமிதனை, மகிழ்மைத் துன
னென் றுவந்தருளும் வரிசைத் துரையே மகபதியே; சந்தா பமு
றக் கவுதமன்முன் சபித்த சாபந் தவிர்த்தொருகற், றூனே நடந்து
முன்வணங்குந் தன்மை புரிந்த நன்மைதரு; செந்தா மரைப்பூந்
திருவடியாற் சிறியேஞ் சிற்றில் சிதையேலே, சீலா பெரிய சாமிமகி
பாலா சிற்றில் சிதையேலே. (௫)

சிற்றிற் பருவம் முற்றும்.

# சிறுபறைப் பருவம். (9)

தப்பறைய வொண்ணு தெனக்குப்ப மிட்டவர்க டங்கப்ப மொ
ப்பாகவே, தடமகுட மணையாக வடலரசர் கண்டுயில்செய் தமனி
யத் திருமுன்றிலின்; முப்பறை முழங்கவே முழவுபல் வாத்தியம்
முன்னீர தாய்முழங்க, மூதண்ட முஞ்செவிடு படவாதி சேடனும்
முடிபசைந் ததிசயிப்ப; வொப்பறையின் மன்னுமின் னார்களுங்
காமமுற வோங்குமெய்த் துணைவர் சூழ, வுபயச் சிலம்படி சிவப்
பேற வேநடந் தொன்னலார் வச்ரமென்னச்; செப்பறைவ னெஞ்சந்
திடுக்குத் திடுக்கிடவொர் சிறுபறை முழக்கி யருளே, செண்பக
வனப்புலி யெனும்பெரிய சாமியே சிறுபறை முழக்கி யருளே. (௧)

மண்டலத் தாசுரிமை வழுவாத செங்கோன்மை மனுமுறை
நடத்து கீர்த்தி, வளரண்ட கூடமெண் டிசைகண்முத னிலவுதின்
மன்னியதெ லாம்வெளுப்ப; முண்டகத் தயன்மேவு வாணியுட னன்
னமும் முன்னவன் கயிலை கங்கை, முகிலூரு மிந்திரன் சிந்துரங்
கந்தகமு மூதலகை யுண்டளந்த; கொண்டன் மெய்ப் பள்ளிபறை
பாயலுந் தேடிக் குறிப்பினு லறிவ ரென்னிற், குவலயத் துன்பெரு
மை நவிலுதற் கெளியதோ குறுகலார் திறையளந்து; தெண்டனிட்
டடிபரவு சின்னணைஞ் சான்மதலை சிறுபறை முழக்கி யருளே,செண்
பக வனப்புலி யெனும்பெரிய சாமியே சிறுபறை முழக்கி யருளே.()

மல்லகதி பல்லகதி சசகதி மயூரகதி வானரக் கதிபொருந்தி,
மாதர்த மனத்திலும் வெருவிசையி னிடசாரி வலசாரி வந்துகிரணத்;
தெல்லதன் புரவிக்கு மூன்றாவி யிந்திர னேறுபரி யைத்தூர
ங்கே, யிருதூரத் தடையலர்க டடமகுட மணிகடக மிடறியே முடுகு
வீரா; சொல்லுதற் கரியமத கரடக் களிற்றைத் துவைத்துக்ர
வாடல்புரியத், தூளியெண் டிசையண்ட முகடணவ வண்டர்தந்
தாசினாற் கண்மறைப்பச்; செல்லுந் தியங்கவரு தூரகட வியநகுல
சிறுபறை முழங்கி யருளே, செண்பக வனப்புலி யெனும்பெரிய
சாமியே சிறுபறை முழக்கி யருளே.
(௩)



துங்கமுறு கருணிக்கர் சீமைக் கணக்கினொடு தொகைவகை
யுரைப்ப தொருபாற், சொன்னகப் பத்தினொடு மன்னரெழு தோலை
கள் துலங்கவா சிப்பதொருபாற்; சங்கமுறு புலவர்பிர பந்தகவி பா
டியே சம்மான மேற்ப தொருபாற், சங்கீத பரதமுறை தையலா
ரபிநயச் சதியுட னடிப்பதொருபால்; வங்கிஷ பரம்பரையில் வரு
மந்தி ரித்தலைவர் வரிசையி னிறைந்த தொருபான், மனுவினிற் திர
னாக வினியகொலு விற்பரிசு வந்துசெங் கோனடாத்துஞ்; செங்க
மலை பிரியாத சிங்காச னாதிபதி சிறுபறை முழக்கி யருளே, செண்
பக வனப்புலி யெனும்பெரிய சாமியே சிறுபறை முழக்கி யருளே.()

பூமண்ட லத்துக்கு ளின்னா னெனக்கீர்த்தி பொலியவனு மக்
கொடிதனைப், பொன்மேரு கிரியிற் பொறித்துவள ரரசுரிமை புரிகி
ன்ற சக்ரவர்த்தி; யாமென்று கூறத்ரி கூடபதி பாதமல ராணை
யாக் கிணைசெலுத்தி, யடையலா ருந்தனை யடுத்தோர்கள் வெங்கலியு
மார்கலி கடந்துசெல்ல; மாமன்றல் பெருகிடச் சேடன்முடி பொறை
யாற வையக மகிழ்ச்சிகூர, வருகின்ற விசயரகு ராமனே செண்பக
வனத்திற் றவழ்ந்திசைந்து; தேமந்த மாருதங் குலவுகல் லகநாட
சிறுபறை முழக்கி யருளே, செண்பக வனப்புலி யெனும்பெரிய
சாமியே சிறுபறை முழக்கி யருளே. (௫)

சிறுபறைப் பருவம் முற்றும்.

# சிறுதேர்ப்பருவம் (10)

இனமணி குயிற்றுபொற் பாண்டின்மர கதவச் சிலைத்திந்த்ர
நீலநற்பா, ரிலகுவயி டூர்யப் பரப்புநில முற்றதனி லெந்திரப் பொறி
களாட; வனமுற நிறைத்துமே னடனத் தலங்குறடு மருவஞ்ச்ரு
வாணிமதலை, வயிரமுத் தம்பதும ராகத் தமைத்ததனில் வண்டு
ணர்க் கால்கணாட்டிக்; கனகரம ணியரத்ந கசிதமுறு தலையலங் கார
முத லேதிருத்திக், கதலியொடு பீதாம் பரந்தொங்கல் குஞ்சங் கலந்
திலங் கப்புனைந்தேர்; தினமிதனி லேறியே செம்புலிச் சிங்கேறு
சிறுதே ருருட்டி யருளே, திரிகூட பதிகாத்த துரைபெரிய சாமியே
சிறுதே ருருட்டி யருளே. (௧)

உத்தரம தாயெழுந் திரவின்மலை தனையெடுத் தூற்றார்க ளுயிர ளிக்க, வொன்னார்க டிரிபுரத் தோங்குநகை யனன்மடுத் தொண் ணுத லிடத்தனாகி; யத்தமுறு குறியினா லபயங் கொடுத்துவா னண் டரெல் லாநடுங்க,வஞ்சக் கரத்தினன்மெய் யாருயிர்த் துணைவனென வலைகடல் கடந்தகண்ட; நித்தமும மைந்துசெம் முகமுநேர் பெற்ற தா னிமலன் றனைப்பொருந்து, நேசம் புரிந்தனும னிலைமைபெறு விருதாகு நீடுவச மேல்விளங்கச்; சித்தமகிழ் வாகவே செம்புலிச் சிங்கேறு சிறுதே ருருட்டி யருளே, திரிகூட பதிகாத்த துரை பெரிய சாமியே சிறுதே ருருட்டி யருளே. (௨)

வேறு.

அண்டவான் முகடுநெறு நெறெனவிடி படவொருகை யாற்ற டவி யொழுகுகிரணத், தாயிரங் கதிரவன் சகடம்விறு விறெனநட வாதுகிறு கிறெனவிசையி, லலம்வந்து பொலுபொலென விரதவணி யுகவலித் தம்புவி தனைப்பிடித்தே, யாட்டியே மேலெறிந் தண்ணா ந்து நோக்கிவிண் ணவர்களதி பதிகொலுவினிற்; சண்டமா ருதமெ னத் துண்டமுச் செறிதரத் தருவைவிரை வொடுமுறித்துத், தரித் துக் கறித்துக் குதட்டிக குதட்டியெழு சத்தமே கக்குழாத்தைச், சடு தியினி லிடிகுமிறி வெளிறியுள றிப்பிழிந் ததுகொளுகொ ளென வழியவே, தாங்கித் துதிக்கைகொடு வாங்கியப் புனன்முழுகு தண் பிட ரிறைத்துமூழ்கி; மண்டலத் தூரகன்முடி படபடென வுடனெ ளிய வாய்விடங் கொப்பளிப்ப, மைக்கண் பிதுங்கப் பிதுங்கப் பது ங்கவெழு வங்கவா ருதியினகடு, டடமடென வுடைவுபட விரையறு ரை திரைபுரள மகரமொரு குகர மடைய,வன்கறைப் பதமிட் டிழக்கி யள ருக்கிவட வரைபட ரென்றுகீறத்; திண்டிறற் கிரிகளெட் டுங்க டுகு பொடிபடச் சிதறிநீர்த் தூளியாக்கித், திக்கானை யெட்டுந் தரைக்கீ ழடங்கச் சினத்துவீ றிடுமத்தகச், சிந்துரந் தனைநடவு செம்புலிச் சிங்கேறு சிறுதே ருருட்டி யருளே, திரிகூட பதிகாத்த் துரைபெரிய சாமியே சிறுதே ருருட்டி யருளே. (௩)

வேறு.

வட்டமிட் டாடிவரு குதிரைக் குழாத்திலே வருதூளி யண்ட மண்ட, வானிடி முழக்கென்ன வீறிட் டெழுங்களிறு மாமணித்



தொனிமுழங்கப்; பட்டாணி ராவுத்த மார்சலாஞ் செய்தொரு பவுஞ் சதென முன்னடப்பப், படைத்தலைவர் வீரருஞ் சூழவே கட்டியம் பராக்கெச் சரிக்கைகூற; வொட்டகை பேரிகை முதற்பஞ்ச வாச்சி யத் தோங்குமொலி கடலுடைப்ப,வுபயசா மரையன்ன மன்னார்கள் வீசவே யொன்னலா ரபயமென்னச்;சிட்டர்பரி பாலனச் செம்புலிச் சிங்கேறு சிறுதே ருருட்டி யருளே, திரிகூட பதிகாத்த துரைபெ ரிய சாமியே சிறுதே ருருட்டி யருளே. (௪)

பெருத்தேறு செண்பக வனத்தினின் மேவலாற் பெரிதின்ப மேபொருந்தப், பேசுமனு நீதியின் றிங்கண்மும் மாரியும் பெய்ய வள மேசுரக்கக்; கருத்தேறு தயவினாற் செல்வமே றப்பெருங் கரு ணையாற் குடியுமேறிக், காவோங்கு கல்லகநா டாளும் வேந்தனே கட்டாரி தாங்குமுகிலே; பெருத்தேறு சித்ரசபை யெந்தைகட் டளைவளர்ந் தேறிய திருப்பணியுட, னினிதேறு சத்ரமுத லுள தரும மோங்கிட வியற்றிமா [illegible]தொறும்விழாத்;திருத்தேர் நடத்தி மகிழ் செம்புலிச் சிங்கேறு சிறுதே ருருட்டி யருளே, திரிகூட பதி காத்த துரைபெரிய சாமியே சிறுதே ருருட்டி யருளே. (௫)

சிறுதேர்ப்பருவம் முற்றும்.

பிள்ளைத்தமிழ் முற்றிற்று.

---

வாழ்த்து.

வெண்பா.

பொன்மேவு மாலும் புரந்தரனும் போலவே
மென்மேலுஞ் செல்வ மிகுந்தோங்க—நன்மைதரு
சின்னணைஞ் சானீன்ற சேய்பெரிய சாமிமன்னா
யின்னிலத்தி னீவாழி யே.

---

உ

# செம்புலிப் பெரியசுவாமித் துரை அவர்கள் பேரில்

## சிவகுருநாதக் கவிராயரவர்கள் பாடிய

# வருக்கக் கோவை.

---

### காப்பு

கார்கொண்ட செங்கைப் பெரிய சுவாமியெங் கர்த்தன்றன்மேற்
சீர்கொண்ட கோவை வருக்கத்தைக் கூறத் திகழ்பொருப்பிற்
போர்கொண்ட பாரத மன்று வரைந்த புகர்முகக்கை
வார்கொண்ட தந்தனுங் கந்தனுங் காக்க வணங்குதுமே.

### பாட்டுடைத்தலைவன் வாழ்த்து

கோவுக்கு நாயகங் கோவைக்கு நாயகம்(?) கோதறுசீர்ப்
பாவுக்கு நாயகம் பாண்டிக்கு நாயகம் பங்கயப்பொன்
மாவுக்கு நாயக மான பெரியசு வாமியென்றும்
பூவுக்கு நாயக மாகமெய் வாழ்வு பொருந்துகவே.

### ஆக்கியோன்.

மகத்துவ ஞெஞ்சின் னணைந்தான் பெரியசு வாமிதன்மே
லகத்திணை யாம்வருக் கக்கோவை தேர்ந்தாங் கறைந்தனன்சொன்
மிகத்துதி யாக விசைய வருடந்தை மேவுநன்னாட்
செகத்தில்வங் காரைச் சிவகுரு நாதச் செயதுங்கனே.

### வருக்கக் கோவை நூல்.

#### இரந்துபின்னிற்றற் கெண்ணல்.

அம்புய மானெழில் வாய்த்திங்ஙனேநின்ற வாயிழையை
நம்புத லாக விரந்தெய்த லாமினி நன்னெஞ்சமே
செம்புலி ராசன் பெரிய சுவாமி சிலம்பின்வள்ளிக்
கொம்புட னேகுகன் சேர்ந்தது போலிக் குவலயத்தே. (1)



#### மெய்தொட்டுப் பயிறல்.

ஆனனந் தாமரை யென்றளி காள்சென் றடுத்திடும்போ
தேனுஞ் சிறைவளிக் காற்றுதிம் மா[illegible]ட தேம்பல்கண்டு
மான குலன்சின் னணைஞ்சான் பெரியசு வாமிவெற்பி
லீனமுற் றோரை யடல்பழி கூந்தல்விட் டேகுமினே. (2)

#### பொய் பாராட்டல்.

இருமா நிதியெம் பெரிய சுவாமி யெழில்வரைப்பூந்
திருவே யுனது முகத்துக்குக் கிஞ்சுகந் தேனிறைமை
தருநீல முல்லையும் பூத்திணை யாகச்செந் தாமரையு
மொருகாலி னின்று வனந்தொறு மேசெயு மோர்தவமே. (3)

#### இடையூறு கிளத்தல்.

ஈது மகேந்திர சாலங்கண் டாய்சொல் லிடைவெளியின்
மீதுயர் சொர்க்கம் விளங்கச்செய் தேதமிழ் வேந்தர்புகழ்
தாதுகு முல்லைப் பெரிய சுவாமி தடஞ்சிலம்பின்
மாதுளங் கையினில் வைகுந்தங் காட்டி மறைத்ததுவே. (4)

#### முறுவற்குறிப்புணர்த்தல்.

உன்னுசை தீர விருநான் கதனி லொருமணத்துக்
கின்னாட் பவளத் திருப்பா லிகையி லிலங்குமுளை
தன்னுன் முளைத்தது போனகை பூத்ததித் தையறன்பாற்
பொன்னார் புயனெம் பெரிய சுவாமி பொருப்பினெஞ்சே. (5)

#### முயங்குதலுறுத்தல்.

ஊர்மதி மைந்தன் மகன்பட்சி ராச னுதவால்ல
கார்குழற் காந்தி மதியைக் கலந்தது கண்டிலைப்
பார்விதி கூட்டவிப் பாவையைப் பெற்றனம் பண்பினெஞ்சே
சேர்து நமது பெரிய சுவாமி சிலம்பிடத்தே. (6)

#### இதுவுமது.

ஊனமில் சீவகன் காந்தரு வக்கன்னி யுற்றகதை
யானதிம் மானை யணையப்பெற் றும்விதி யாகும்வஞ்சி
வானவன் சங்கர லிங்கம் பெருமை மருகனெங்க
டேனலர் முல்லைப் பெரிய சுவாமி சிலம்பினெஞ்சே. (7)

புணர்ச்சியின் மகிழ்தல்.

என்னே மொழிகுவ லிந்த்ராணி போக மினிச்சிறிது
மின்னே ரிழையை முயங்கி[illegible]காநந்த வேலையுற்ற
தன்னேரி லாத வெனக்குநெஞ் சேமுத்து சாமிதுணை
மன்னேய ராசன் பெரிய சுவாமி வரையிடத்தே. (8)

புகழ்தல்.

ஏரணங் கார்தன மின்குறி நேர்பெற வின்னமந்தக்
காரண நாரணர்த் தாங்கிய நாகமுங் காசுற்றதேற்
சீரண மாகும் பொருளோ வவயவஞ் சேர்வதுகை
வாரணங் காத்த பெரிய சுவாமி வரையிடத்தே. (9)

அணிந்துழி நாணிய துணர்ந்து தெளிவித்தல்.

ஐயந் தவிர்குழற் கஞ்சிடை யஞ்சலுன் றருயிராந்
தையன்முன் செய்தகை போலே யணிந்தனன் சானகிக்காக்
கையம் படைத்தருள் சின்னணைஞ் சேந்திரன் காதலனிவ்
வையம் புரந்த பெரிய சுவாமி வரையகத்தே. (10)

பெருநயப்புரைத்தல்.

ஒருபூங் கொடிதனி லேயிரு போதினு மோரளிகாள்
விரியா முளரித் துணைமூன் று கஞ்சம் விரிந்ததுவு
மருளாற் குவிந்தலர் தாமரை மூன் று மறிந்ததுண்டோ
திருமால் பெரிய சுவாமிதன் றுட்டிற் செறிதடத்தே. (11)

இடமணித்தென்றல்.

ஒரு முயிர்க்குயி ராமணங் கேயணித் துங்கள்பதி
சேரும் பெரிய சுவாமிதன் மாணிக்கச் செஞ்சிலம்பும்
பாரு மரகதத் தெம்மூர்ச்செய் குன்றமும் பாயொளியா
னேருமை பாக னிருவரைப் போன்றன நிச்சயமே. (12)

செல்லுங் கிழத்தி செலவு கண்டுளத்தொடு சொல்லல்.

ஔவிய நெஞ்சங் கலைசோர மானிங்க தாகமதி
செவ்விய முத்த மரும்பத் தளர்ந்தொரு சித்திரம்போ
னௌவியங் கெய்த பெரிய சுவாமி நளிர்வரையிற்
பௌவிய மாநம் முயிரே நடப்பது பாருவந்தே. (13)



வாயில் பெற்றுய்தல்.

கனகச் சுவரி னவரத் தினவன்னங் கண்டொருவன்
மனம்வைத் தெதிரெழு தோவியம் போலிந்த மாதுமுன்னோர்
பனகச் சயனன் பெரிய சுவாமி பனிவரையி
லனமுற் றிமைக்குறை தீர்த்தா ணமக்குமன் பானவளே. (14)

தலைவன் கண்படை பெறாது கங்குனோதல்.

சந்தார் முலைதரு மாலிரு ணீங்கித் தனித்தவென்றன்
சிந்தா மதியை விழுங்கி யதுவொப்பச் செம்புலியாம்
பைந்தாம முல்லைப் பெரிய சுவாமி பனிவரையில்
வந்தார் பருதியை யுண்டது வோவிந்த மாலிருளே. (15)

தலைவன் பாங்கனைச் சார்தல்.

ஞபம்படச் சொல்லென் றவைசொன்ன தானெஞ்ச நாந்துபரான்
மயங்குதல் பண்பி னுரைத்தால் விழிக்கு மருட்சியகற்
றியங்கினன் போலருள் செய்வானம் பாங்க னிகலினரைச்
செயஞ்செயு மெங்கள் பெரிய சுவாமி சிலம்பிடத்தே. (16)

தலைவனுற்றதுரைத்தல்.

தருமானுஞ் செங்கைப் பெரிய சுவாமி தடஞ்சிலம்பில்
வருமானை வேட்டை புரியச்சென் றேனவ் வனத்தினண்பா
வொருமா னிருகொம் புடனெதிர் தோற்றவென் னுள்ளமுற்ற (17)
பெருமான மெண்ணெண் கலைதோற்ற வாலென்ன பேசுவதே.

கற்றறி பாங்கன் கழறல்.

நந்தா வளம்பெற்ற சின்னணைஞ் சான்சொ னரேந்திரன்மற்
றந்தா வளத்தன் பெரிய சுவாமி தயாளுவெற்பி
லந்தா வளக்கட லையவி தன்னி லடங்கியதா
மைந்தா வளத்தன மின்னுட்கு நெஞ்ச மருண்டதுவே. (18)

கழற்றெதிர் மறுத்தல்.

பதுமத் தவனத்தன் பண்டோர் விருந்தை பதியுருவாய்ப்
புதுமைக் கலவி புரிந்தவ னாலரன் பூமியின்மா
லதுவுற் றுழன்று வனமுறின் மோக மடாதவரார்
மதுரைக் கரசன் பெரிய சுவாமி வரைநண்பனே. (19)

### பெட்டவாயில் பெற்றிரவு வலியுறுத்தல்.

நீலால வேணித் திரிகூட நாதர் கிருபையுற்ற
கோலா கலனெம் பெரிய சுவாமி குவட்டினெஞ்சே
மேலான சொற்க மறமாணை யுற்றவர் மேவுவர்நா
மாலான சொற்க மறமாணை யுற்று மருவுதுமே. (26)

### சேடுதிவினுதல்.

குஞ்சர மேகங் குலையொன் றிரண்டுவெண் கோடுடன்கை
வெஞ்சர மேக முறவுற்ற தோதமிழ் வேந்தர்கணம்
பஞ்சர மேகம் பெரிய சுவாமி பனிவரையி
னஞ்சர மேகம் பனிவிழி யீருங்க ணற்புனத்தே. (27)

### ஒழிந்ததுவினுதல்.

கூந்தலுக் கஞ்சிரு கொங்கைநல் லீரொன்று கூறினுங்கள்
பாந்தவ மேன்மைப் பழுதுமுண் டோவுயர் பான்மதிநல்
வேந்தன்முன் னும்பற்செவ் வாய்கிரி யாதுகொன் மேவலென்னே
சாந்தன்கட் டாரிப் பெரிய சுவாமி சயிலத்திலே. (28)

### யாரேயிவர் மனத் தெண்ணம் யாதெனத்தேர்தல்.

கெங்கை சிறுத்த கிணற்றினிற் பாசி கெழுமுற்றென
விங்கைய ருள்ள மறைத்தூர் பெயர்கலை யானையென்றே
செங்கை நிதியெம் பெரிய சுவாமி சிலம்பின்முக
மங்கையி லங்குழை வாடநின் றொண் ணறிந்திலமே. (29)

### எண்ணந் தெளிதல்.

கேட்டதெ லாநிசங் கண்டேன் றழையிற் கிளர்புனத்தில்
வேட்டமென் றேயெம் பொன் வேழத்தைச் சேர்க்க விரும்பிவந்தார்
தோட்டலர் முல்லை யிராம சுவாமி துணைவன்மனக்
கோட்டமி லாத பெரிய சுவாமி குவட்டண்ணலே. (30)

### இறைவனை நகுதல்.

கைபம்பி லாதவ ரெய்மத வேழமெய்க் காயமுடன்
பொய்படி யுங்கொண்டு போனது சென்மம் பொருந்தலுறத்
தையன் மலடி மகனை மணந்த தகைமையதாம்
வையம் புகழும் பெரிய சுவாமி வரையிடத்தே. (31)

மதியின் வரவரமனக்கருத்துணர்தல்.

கொல்லியம் பாவையன் னாளக மேயிந்தக் கோவளமும்
புல்லிய தாலிவர் கண்ணிணை நோக்கும் பொருந்தல்கண் டேம்
வல்லிய சேதன ராசன் பெரியசு வாமிவெற்பிற்
சொல்லிய லாற்பய னென்கொ லெனச்சொன்ன சூழ்ச்சிநன்றே. ()

தலைவனுட் கோள் சாற்றல்.

கோவிந்த னோர்பெண் குறைதீர வோர்தருக் கொண்டளித்த
தாவிந்தை யுண்ணமு தைந்தரு மற்றுந் தருவனின்றே
மாவிந்தை மார்பன் பெரிய சுவாமி வரையிலுங்கள்
பூவிந்தை யாமுகஞ் சற்றே திரும்பல்பொருளெமக்கே. (33)

தலைவன் றலைவியை யுயர்த்தல்.

கௌரி யருள்பெற்ற கட்டாரிச் செம்புலிக் காண்டிபன்மெய்ச்
சௌரி கொடைக்குப் பெரிய சுவாமி சயிலமின்னே
பௌரிச மன்றுநக் தாரம் பிறந்ததும் பாற்கடலோ
கௌரிய மாதர் நலமே குலம்பெறு நானிலத்தே. (34)

இறைவி தன்மை யியம்பல்.

சன்னை யினிச்சொல்வ தென்னனைங் கேயுயிர் தன்னுயிரா
யன்னை யெனமன்னு வாயென் னுயிர்க்குநல் லம்புயத்தின்
மின்னை மருவும் பெரியசுவாமிதன் வெற்பிடத்தி
னுன்னை மறைக்கும் பொருளெது முண்டோவென் னுசாவுவதே. (35)

நின்குறைநீயே சென்றுரையென்றல்.

சாயன் மயிலன்ன கங்கைக்கு மெய்ச்சந் தனுவினுக்கும்
போயவர்க் கன்று பொருத்தின தார்புகழ் பொங்குதமிழ்
நாயக னெங்கள் பெரிய சுவாமிநன் னாட்டண்ணலே
நீயவட் சாரிற் குறைதீரு மைய னிகழ்ந்திடிலே. (36)

தலைவன்றன்னிலை சாற்றல்.

சிங்காச னாதிபன் செம்புலி ராசன் றிகாந்தமட்டு
மங்காத கீர்த்திப் பெரிய சுவாமி வரையிலெம்போ
லங்காவி யொன்றியுஞ் சேர்ந்தன சோதமை யந்திநளன்
கொங்கார் தடவன மல்லது நீயுமக் கொள்கையனே. (37)



உலகியல்புரைத்தல்.

சீர்த்திகழ் வெங்கதிர் போன்றன லேவலஞ் செய்தலனு;
பார்த்திப வென்குலப் பாவையைச் சேர்தல் பரிவல்லவே
தார்த்திகழ் முல்லைமெய்ச் சங்கர லிங்கந் தமையனென்ற
கீர்த்தி நரேந்த்ரன் பெரிய சுவாமி கிழவையிலே. (38)

தலைமகன் மறுத்தல்.

சுண்ணந் திமிர்ந்திமை யாக்கருங் கண்முலைத் தோகையைவேட்
டெண்ணந் தவிரென்ற தேந்திழை யேபசித் தேறகவந்தோர்க்
குண்ணமு தந்தர வேரிக்கு நாட்செய்வ தொத்ததுமால்
வண்ண னமது பெரிய சுவாமி வரையகத்தே. (39)

பாங்கி கையுறை மறுத்தல்.

சூடு மகுட மணியார் சிவப்பத்தன் னோர்கள்சென்னி
நாடுஞ் சரணன் பெரிய சுவாமி நரேந்த்ரன்வெற்பிற்
றேடும் பொருளெங் குலதெய்வ நின்ற செழுந்தழைவிட்
டாடு மயில்கொடி யாந்தழை கன்னிக் கடாதண்ணலே. (40)

ஆற்றுநெஞ்சினோடவன் புலம்பல்.

செருநர்வெங் கண்டனு மக்கொடி மேருவிற் றீட்டியுல
கொருபுயந் தாங்கும் பெரிய சுவாமிதன் னோங்கன்மின்னார்
வருகய னோக்கம் பெறுதகைக் கொக்கென வாடுநெஞ்சே
கருவரி யானைக் குயிரினி யுண்ணுங் கவளமிதே. (41)

எழுதரிதென்றல்.

சேனா திபனெங்கண் முத்துச் சுவாமி திருத்துணைவேண்
மானா பரனெம் பெரிய சுவாமி வரையினள்போன்
மீனார்கண் சங்கர நாராய ணன்றெழின் மேவச்செய்வை
யானா லரசங் கிழியல வெற்பரி யாங்கிளியே. (42)

இதுவுமது.

சேதன ராச கிரீடியிம் மானங்கந் தீட்டிடலா
மாதன மீச னிருவிழி யின்குண மன்றனுறும்
போதனத் தானும் படைக்கி லரிதென போக்கினன்சு
வேதனத் தேந்தும் பெரியசு வாமிதன் வெற்பிடத்தே. (43)

அந்நகை பொருதவன் புலம்பல்.

சய்யப் பொதியைக்கு நேரிக்குங் கொல்லிக்குந் தன்கொடிநா
டுய்யப் பொறித்த பெரியசு வாமிதன் னோங்கன்மின்னே
மெய்யக் கனற்பட்ட புண்ணினிற் காய்ச்சுநெய் விட்டதன்றோ
நய்யப் படுமயற் றீயவி யாது நகைக்கின்றதே. (44)

இறைமகன் றனக்குக்குறைநேர் பாங்கியிறைவிக்கவன் குறைகூறல்.

சொல்லொன் றிரண்டுரை யாவேள் பெரிய சுவாமிவெற்பில்
வல்லொன்று கொங்கை மயிலேந மேனல் வளர்புனத்தில்
வில்லொன்று கையிற் றழைமுகம் வாட மெலிந்து நின்றா
ரெல்லொன்றில் வந்துயிர்ப் பாரா ரறிந்தில மென்னணங்கே. (45)

பாங்கியை மறைத்தல்.

சோலையும் புள்ளு மலையுநன் மாவுமித் தொல்லுலகின்
மேலை யெவர்க்கும் பொதுவெது வேண்டினு மேவுவர்தோண்
மாலைய முல்லைப் பெரிய சுவாமி வரையினிலென்
னாலைய மோமங்கை நீசங்கை யாக வறைந்ததென்னே. (46)

குறிப்பு வேறாக நெறிப்படக் கூறல்.

சௌரிய ராசன் பெரிய சுவாமி தடஞ்சிலம்புற்
றவரிகன் மன்னர்மெய் யீசனைத் தார்கையி லார்கிளியோ
டுவரி யுறுங்கிளி யுன்னெழில் சொல்லுமற் றென்றுரையார்
கவரியி னுள்ளா ரெதுவோ முடிக்குங் கருத்தணங்கே. (47)

தலைவி கை யுறையேற்றல்.

குமலியஞ் சாய லணங்கே யிருதலை நற்பட்சியா
யமர வயனமை யேபடைத் தான்மறுத் தாவதென்கொல்
கமல வதனன் பெரிய சுவாமி கனவரையிற்
றமரய லேகினு நன்றவர் தந்த தழையருளே. (48)

தலைவி கையுறை யேற்றமை பாங்கிதலைவற்குணர்த்தல்.

ஞான கரன்மெய்ப் பரஞ்சோதி யாங்குரு நாதனுண்மை
யேநாளு மேவும் பெரிய சுவாமி யிரவியன்ன
தேனரு கின்றழை மாலாகத் தானுமெய்ச் சேடனைப்போ
லானு ளவனிற் பகைதவிர்த் தாளெங்க ளாரணங்கே. (49)



குறியிடத்துய்த்து நீங்கல்.

ஞிமிறு முகாரி யிசைபாடுஞ் சோலையி னில்லனங்க
னமிர்தாதி மட்டு மரம்போல லாத வரசுமுண்டாற்
றமிழலங் காரன் பெரிய சுவாமி தயாளு வெற்பிற்
சிமிழன்ன கொங்கைநின் கூந்தற்குப் பூக்கொய்து சேர்குவனே.

இயைதல்.

ஞெகிழியஞ் சீறடி மான்போற் கலவி நிறைபமிர்த
மகிழ்நகை கூரப் பெரிதா யளிக்கும் வகையறியா
ரகிலதெய் வேந்த்ரன் பெரிய சுவாமி யடுக்கன்மின்னார்ச்
சுகிநலஞ் சிற்றின்ப மென்பார்கள் காமத் துரோகிகளே. (51)

தலைவியை விடுதல்.

ஞொள்க விலாதெனை வாழ்விக்க வந்தரு ளுண்ணிடையீர்
வெள்கவி லாய மனத்தைய மாமென்று மேவுதல்போ
லெள்கவி கோபன் பெரிய சுவாமி யெழில்வரையி
னுள்கலில் யான்வரு வேன்சேரும் பாங்கி யுடன்பணைக்கே. (52)

விருந்து விலக்கல்.

தரணி குலேச னெனவந்த மானுமெய் சார்குகன்பான்
முரணில தாய்விருந் துற்றத னாலெந்த மூரினுற்றே
பரணிசொல் கீர்த்திப் பெரிய சுவாமி பனிவரையிற்
றிரணிலை மான்றழை மானிறை யும்முண்டு செல்குவிரே. (53)

மாலையம் பொழுது கண்டிரங்கல்.

தாரவெற் போனுக்குத் தன்னிற மீந்த தகைமையினுண்
மூரல்கண் மேயன வாயுயிர் யாவு முடிப்பனனிற்
றீர னமது பெரிய சுவாமி சிலம்பிலந்தி
நேரமென் னாருயி ருண்ணவந் தாற்பின் னிகழ்த்தலென்னே. (54)

நீங்கற் கருமை தலைவி நினைந்திரங்கல்.

திருவாணி தேவிமுத் தேவர்த மார்புசெவ் வாயிடமு
மருளாற் பொருந்தியும் வேற்றுமை தோற்றுமென் றஞ்சிமின்னே
கருணை லயனம் பெரிய சுவாமி கனவரையிற்
றருமா விரதி யுளத்தில்வைத் தாள்சித்த சன்றனையே. (55)

பாங்கி முன்னையிற் செறிப்பறிவுறுத்தல்.

திவாய்க் கணியா மலர்வாய் திறக்கத் தினைக்குரலின்
மாவாய்க் குரலிழந் தேகுகின் றேமெங்கண் மாமனைக்கே
வேய்வாழுந் தோளணங் கார்மணக் கோலம் விளங்கவெற்றித்
தூவாள் விதிர்த்த பெரிய சுவாமி சுரும்பண்ணலே (56)

வறுங்களா நாடி மறுகல்.

தொடர்ந்தடை யார்சிரப் பந்தெற்றித் தாவிதிர்த் தூளிபட
வடர்ந்த புரவிப் பெரிய சுவாமி யணிவரையின்
மடங்க லடியுற்ற தாற்புன நீங்கி மனந்தளர்ந்தே
யுடந்தைய தாம்பிடி சென்றதெவ் வாறளி யோதுகவே. (57)

பாங்கி நெறியின தருமை கூறல்.

தூதிற் பணிந்த வரசர் திரையுந் தொழார்சிரமும்
வாதிற் கொணரும் படையான் பெரியசு வாமிவெற்பிற்
காதுற்ற மாவெங் கழுதிரை தேருங் கனையிருளிற்
பாதத் தருவி வருவர்கொல் லோகுலப் பார்மன்னரே. (58)

இறைவிக் கிறையோன் குறையறிவுறுத்தல்.

தெவ்வினர் தேகத்தைச் சொர்க்கத்தில் வீசித் திரும்பக்கையால்
வெளவிச் சுழற்றுங் களிற்றான் பெரியசு வாமிவெற்பா
னெளவியங் கண்ணிபி னட்சக்ர வாகத்தின் நண்ணியின்ப
மெவ்வின றின்று சகோரத்தின் மேவ வுரைத்தனரே. (59)

வண்டுறை தாரோன் வந்தெதிர்ப்படுதேல்.

தேர்மே யனுமக் கொடிமேவி ரத்நப்பொற் றேர்கடவிப்
போர்விசை யஞ்செய் பெரிய சுவாமி பொருப்பிடத்திற்
காரிரு டன்னிலெம் மாவிரு ணீக்கக் கடிதுவந்தீ
ராரர விந்த மலர்க்கத வார்திறந் தாரணங்கே. (60)

தான்குறி மருண்டமை தலைவியவட் குரைத்தல்.

தைக்குஞ் சரவிழி மானே யிறைகுறி சார்ந்தனரென்
றெய்க்கும் படிநொச்சிப் பூவுதிர் போதுநின் றீண்டுவந்தேன்
மெய்க்கும் புகழிற் பெரிய சுவாமி வியன்வரையிற்
பொய்க்குந் தலைவர்வந் தாரில்லை யாலென் புகல்வதுவே. (61)



தலைமகளவலம்பாங்கி தணித்தல் (அலர் குறி)

தொன்னாடு காக்கும் பெரிய சுவாமி சுரும்பினுற்றார்
மன்னா திரவிற் றிருமால் கதிரை மறைத்ததிலே
கன்னாரி யாக்கின தொன்றா லளந்ததுங் கைக்கொனடையும்
பொன்னா னவனை யடரா யுதமும் பொருந்தினவே. (62)

தலைவி குறிமருண்டமை பாங்கி தலைவற்குணர்த்தல்.

தோயச் சுனையிற் றுணைமீன் வெடித்துத் துடித்துவிழ
நேயத் திறைவநின் கல்லொலி யென்றுமுன் னீர்ப்புவிக்குத்
தாயிற் சிறந்த பெரிய சுவாமி தயானுவெற்பிற்
போயக் குறியினும் பாவோட மாகப் பொருந்தினளே. (63)

நிலவு வெளிப்படுதேல்.

தெளவைக் கொடிக்குத் தரியலர் மூளை தசையருத்த
வெளவுங் கட்டாரிப் பெரிய சுவாமிதன் னேக்கன்மின்னை
செவ்விதி னன்பரிங் கேகா தெழுந்த செழுந்திங்களை
வெளவர வுக்குஞ் சிவனுக்கு நான்செய்த வஞ்சமென்னே. (64)

தலைமகன் வருந்தொழிற் கருமை சாற்றல்.

நவிகண்டு பின்சென்ற ராமாவ தாரன்செந் நாவலர்சொற்
கவிகொண்ட கீர்த்திப் பெரிய சுவாமி கவிகைமதிச்
சவிதங்க வூரன்னை காவலர் நாய்கண்டுஞ் சாக்குடிஞை
குவியுமுட் டாட்குர லோவாதெவ் வாறன்பர் கூடுவதே. (65)

தலைவி தன்றுயர் தலைவர்க்குணர்தல் வேண்டல்.

நாக ரிகன்முத்து சாமி துணைவ னளினமின்னார்
வாக னுசிதக்கட் டாரிப் பெரியசு வாமிவெற்பிற்
கோக மிலகு கிளிச்சிறை யுற்ற குறியைச்சென்றன்
பாக வரசர்க் குரைத்தவ ரேதெய்வ மாமணங்கே. (66)

வெறிவிலக்கல்.

நிதியா யிரஞ்சங்க நேர்கொடைச் செங்கை நிருபனதி
பதியாங்கட் டாரிப் பெரிய சுவாமி பகைஞரினா
னதிமா னுறநம தன்னையர் சுற்ற மருந்துதற்கோ
சதியா யொருப்படத் தான்றுணிர் தார்பழி தானணங்கே. (67)

வெறியச் சுறுத்தல்.

நீநலஞ் செய்ய வருந்துமின் னெஞ்ச நினைவறியா
தேனல் வனத்தெய்வ தம்போற்றி நின்றேம லீந்தனர்கோ
மானயஞ் சேர்சின் னணைஞ்சான் பெரிய சுவாமிவெற்பர்
தான முறவஞ் சடக்கிதன் போத்தஞ் சாற்றலென்னே. (68)

பகல்வருவானை யிரவு வருகென்றல்.

நுடங்கிடை மங்கை சகோரங் கலந்துற நோக்கியுல
கடங்கவெல் சூர்தலை மைந்த னிறந்ததற் காகுலித்தாண்
படங்க லனையகட் டாரிப் பெரியசு வாமிவெற்பிற்
றடங்கழு நீரலர் கொய்துகொண் டேயிங்ஙன் சாரண்ணலே. (69)

ஆற்றாத் தன்மை யாற்றக் கூறல்.

நூதன நூதன மாலாயி னுள்வரை நொந்துமின்னாள்
வேதனை யாய்ச்சிவ னுனர் பசப்புடன் மேவினதாற்
சீதரன் சங்கர லிங்கஞ் சகோதரச் செம்புலிவேண்
மாதவன் முல்லைப் பெரிய சுவாமி வரையண்ணலே. (70)

பாங்கிகனவு நலிவுரைத்தல்.

நெட்டிருங் கூந்தற் கரும்பார் கனவி னினைவினைப்போற்
கட்டி யணைத்துக் கலந்தவ னெஞ்சங் கவர்ந்தகறன்
மட்டிணர் முல்லைப் பெரிய சுவாமி வரையண்ணலே
கெட்டி யரசற் கியல்போ விதுகற்ற கேண்மைநன்றே. (71)

என்பொருட் பிரிவுணர்த் தேந்திழைக் கென்றல்.

நேமியங் குன்றத் தகநேமி தன்குடை நீழலுற
நேமியங் கேவும் பெரிய சுவாமிதன் னேமியின்வாய்
நேமியம் போருக மின்னெஞ்ச நேமிக்கு நேர்பொருட்கியா
னேமியங் கெய்த வகல்வது வேயுளை நேரிழையே. (72)

பூங்குழை யிரங்கல்.

நைவளம் பாடும்வண் டார்சோலைச் செண்பக ராமநல்லூர்
செய்வளஞ் சேரும் பெரிய சுவாமி சிலம்பிலென்றன்
மெய்வள மாமுலை பொன்னுறல் கண்டுநம் மேந்தல்கட
லெய்வளஞ் சேர்பொன் கொணரச்சென் றூரெவர்க் கிவதற்கே. ()



பாகன்றன்னொடு கூறல்.

நொறில்பரித் தேர்வல வாகுயின் முன்செலி னோக்கிமயில்
வறிதின் மனத்தளர் வாய்நொந்து சோர்ந்துபின் வாழ்ந்திடுமே
தறியடு தந்திப் பெரிய சுவாமி சயிலத்துநா
மறிவுயர் சம்பந்தர் போற்கற்க வேணு மறம்புரிந்தே. (74)

தலைமகன் வந்துழி நினைத்தமை வினாதல்.

நோக்கமொன் றார்க்குந் துயரின்ப மோநம்பி னோர்க்குச்செயும்
பாக்கிய ராசன் பெரிய சுவாமி பனிவரையிற்
றுக்கணங் கன்னமின் னாளையு நெஞ்சினிற் றுனிருத்திக்
காக்கவு மாலினுற் றீரோ கடல்சென்ற காவலரே. (75)

காதலன் முலைவிலை கொடுத்தமை பாங்கி தலைவிக்குணர்த்தல்.

நௌவி யிடத்த னருடிரு மாமலை நாயகனைச்
செவ்வி திற் போற்றும்பெரிய சுவாமி சிலம்பருந்த
னெவ்வனக் கொங்கையிற் பொன்னல ரேயின் றிகழுநம
ரொவ்வநற் பொன்னல ரீந்தார் வரைவெதி ருற்றிடவே. (76)

மணம் பொருட்டாக வணங்கைப் பராய் நிலைகாட்டல்.

பரராச சிங்கந் திரிகூடச் செம்புலிப் பாண்டியனுயர்
நரபால னெங்கள் பெரிய சுவாமிநன் னாட்டரம்பை
தரமான பொற்குட மேந்தக் குவளை தளிர்க்கையுற
வரமா தணங்கைப் பராயது பாருன் மணப்பொருட்டே. (77)

இல்வயிற் செறி... றல்.

பார்புரந் தோர்கல்லைப் பா... பணியதில்...
வார்கழற் பாதன் பெரிய... வரையின்...
வேர்தனிற் காயை மறை... மனச மௌனவனையோ...
சார்பி லொழித்தென்னை... காந்தாரிபோன் றாருந் தன்... குறித்தே.

எறிவளை... மைக் கேதுவினாதல்.

பிடிநடை மான்சிங்க மே... ரி பெருக... வி
முடியி லுறப்பசந் தாளே த...

படிமுழு தாண்ட பெரிய சுவாமி பனிவரையிற்
றுடியிடை மாது தினைப்புனங் காவ றொலைந்தபின்னே. (79)

### களிறுதரு புணர்ச்சியாலறத்தொடு நிற்றல்.

பீடுறு மாதங்க முன்வர மாதங்கம் பின்னயரக்
கோடுகத் தாக்கியச் சீவகன் போலொரு கோவுற்றதாற்
றேடு நிதியெம் பெரிய சுவாமி செழுஞ்சிலம்பில்
வாடு மிடையுங் குணமாலை யாகினண் மாதரசே. (80)

### செவிலி நற்றாய்க்கறத்தொடு நிற்றல்.

புலியும் பசுவு மொருதுறை மேவப் புவிபுரந்தே
கலியிருண் மாற்றும் பெரிய சுவாமி கனவரையின்
முலைநிகர் மாவினை மாற்றிப் புனல்விழ முன்னெடுத்தா
வலைமற வேன்மங்கை யென்றன ளுமொரு மன்னனையே. (81)

### பாங்கி தலைவற் குடன்போக்குணர்த்தல்.

பூமா னிருவர் புயமார்பு தன்னிற் பொருந்தவளர்
கோமான் பெரியசு வாமிதன் மாணிக்கக் குன்றெயினை
ரேமாரக் கொங்கை விலைக்கிந்த்ர லோகமு மேற்பதில்லை
நீமா நகரின் மணஞ்செயெம் மாதை நெடுந்தகையே. (82)

### கற்பு மேம்பாடுரைத்தல்.

பெரியசு வாமியென் றொப்பஞ் செலுத்தினற் பேரரசே
புரியபி ராமன் பெரியசு வாமி பொருப்பனையா
யுரிய புருடர்பின் னேகற்கு நாணமற் றுண்டுகொல்லோ
வரியகற் பாகிய வள்ளிக்கன் றென்குறை யானதுவே. (83)

### கையடை கொடுத்தல்.

பேதமி லாதருண் மன்மதன் வேழம் பெருங்குலிசன்
போதக மாகிச்செண் டாயுத னூர்தி பொருமகுட
மாதன யோகினி யூர்தியைத் தாக்கினு மாதினையே
சேதன ராசன பெரியசு வாமி சிலம்பண்ணலே. (84)



### கண்டோர் இரங்கல்.

பைங்கழை வில்லிய னங்க னிரதி பதமுலகிற்
றங்க வுருவன்னி யஞ்சிடும் பாலையிற் சக்கரத்தால்
வெங்கதிர் மாற்றும் பெரியசு வாமிதன் மேவலர்போ
லிங்கடைந் தார்முகின் மின்போ லெவர்நடந் தேதமுற்றே. (85)

### காதலின் விலக்கல்.

பொங்கிரு ளேவரப் போன திரவியும் போதலன்று
பைங்கிளி யோமிக வாடினள் காண்பர ராசர்க்கச்சந்
தங்கிடி யேறு பெரிய சுவாமி சயிலத்தெம்மு
ரிங்கிரு வீரு மிருந்தகல் வீரு மெழினகர்க்கே. (86)

### செவிலி தன்னறிவின்மைத்தன்மையை நொந்துரைத்தல்.

போரார்வை வேலன் பெரிய சுவாமி பொருப்பின்மிக்கோர்
காரா மிராம கதைசொலிற் சீதையுங் கானடைந்த
தோராவென் றேனகைத் தாளேந் திழையனை யேனெனக்கண்
பாரா திருந்தன ளோர்ந்திலன் பாவியிப் பான்மையையே. (87)

### நற்றாயிரங்கல்.

பௌவந்த நன்னுக லாய்செம் புலஞ்செல் பராக்ரமர்போற்
பௌவந்த மன்னன்பின் னேகினை பாலையிற் பன்னகத்தாற்
பௌவந் தடுத்த பெரிய சுவாமி பனிவரையிற்
பௌவந்த நின்மதி மான்போலென் பாலுறை பான்மைவிட்டே. ()

### தலைவி மென்மைத் தன்மைக் கிரங்கல்.

மஞ்சனத் தூவி மிதித்திடிற் கன்றி மலரடியு
மஞ்சனக் கண்ணுஞ் சிவந்திடு மேமக ளேமகளே
மஞ்சனக் கொண்டல் பெரிய சுவாமி வரையிற்புள்ளு
மஞ்சனற் பாலை செலத்தகு மோவொரு மன்னன்பின்னே. (89)

### செவிலியாற்றுத் தாயைத் தேற்றல்.

மாணிக்க வாசக மாதுலன் செம்புலி மாற்றலரைக்
காணிக்கை வாங்கும் பெரிய சுவாமி கனவரையி

லாணிப்பொன் னைக்கொணர் வன்றேடி யன்னையு ளுகுலந்தீர்
பாணிப்பென் றென்கண் ணுக்குள்ளோர்க்கு முட்பட்ட பாரிதுவே.

மிக்கோரேதுக் காட்டல்.

மின்னேமுத் தாரங் கவிகன்ன வின்பத்தை மேவிக்கொண்டார்
பின்னேமி யோங்கப் புலவோர் மனம்பணை பேர்ந்ததுண்டோ
தன்னே ரனைய பெரிய சுவாமி தயாளுவெற்பி
லென்னேய மாதினைந் தேடவென் னேநகை நன்றலவே. (91)

சுவடுகண்டிரங்கல்.

மீண்டயர் மானை வலஞ்சுற்றிப் பின்வந்த வெம்புலிமு
ணுண்டகை மேவப் பதுங்கித்தன் வாலை யடித்தெழும்ப
மாண்டற வட்ட வடியீத்து மங்கை மரவடியே
சேண்டரு கீர்த்திப் பெரிய சுவாமி சிலம்பிடத்தே. (92)

கலந்துடன் வருவோர் புலம்பறேற்றல்.

முத்துச் சுவாமி யிராம சுவாமிமுன் னேவருசம்
பத்துச் சுவாமி பெரிய சுவாமி பரித்திடுநா
டத்திக் குலாவி வடகரை சேருவா னைநடுங்க
வித்திக் குலாங்குழ லாள்கண்ட மின்னுட னேந்தலுமே. (93)

தலைவி சேணகன்றமை செவிலிநற்றாய்க் குணர்த்தல்.

மூவடி வாங்கிய மாலடி யென்னவிம் முதுலகென்
சேவடி தோய்ந்திடத் தேடியுங் கண்டிலன் றேமொழியே
மாவடி வோங்கும் பெரிய சுவாமி வடகரையே
காவடி வாங்குழற் கன்னியுங் காளையுங் கண்டனரே. (94)

தலைவனைப் பாங்கி வாழ்த்தல்.

மெல்லியல் பாகம் பிரியா விமலரின் மேவியெங்க
ளல்லியங் கோதை யுடன்வாழி வாழி யருளண்ணலே
வல்லியர் மோகனம் முத்திரு ளப்பன் மருகனணி
நல்லிணர்த் தாமன் பெரிய சுவாமி நகரிடத்தே. (95)



செவிலி நன்மனைவாழ்க்கை நன்றென்றுகூறல்.

மேதினி யிற்பொரு ளெல்லாந் திரண்டங்கு மேவுதலாற்
சீதர குக்கி நிகர்மனை வாழ்க்கையைச் சேர்ந்தடையார்
வாதினை வென்றகட் டாரிப் பெரியசு வாமிவெற்பி
லோதிய வில்லறஞ் செய்துயர்ந் தாளன்னை யொண்டொடியே. (96)

இறைமகன் புறத்தொழுக்கிறைவி யியம்பல்.

மையோ டரிக்கண் மருட்டுமின் னார்முலை வாரணத்துக்
கையோ மனக்கரும் பீந்தனர் மங்கையின் றன்றுநம்முன்
கையோர் கிழிவைத் துழன்று புனத்திற் கவன்றுநின்ற
தையோர்ந் திலாது பெரிய சுவாமி தனுட்டினரே. (97)

செவ்வணிகண்டு பரத்தையர் பழித்தல்.

மொய்த்தளி யார்குழ லீர்பாரும் பாரும் முதல்வர்மனை
வைத்த தலைக்கொடி பூத்ததென் றேயிந்த வையமெல்லா
மெய்த்த கொடையிற் பெரிய சுவாமி வியனகர்க்கே
பைத்த வடிக்கொடி செம்மைய தாகப் படர்ந்ததுவே. (98)

தலைமகன்வரவு பாங்கி தலைவிக்குணர்த்தல்.

மோட்டலர் கொங்கை யணங்கேநின் றுதி முகிலின்செம்மை
காட்டவின் றுன்கடை வந்துநின் றாரண்ணல் கல்லகநன்
னாட்டணி ராசன் பெரிய சுவாமி நரேந்த்ரன்வெற்பில்
வாட்டமி லாதெதிர் கோடனங் கற்பு மரபதுவே. (99)

புணர்ச்சியின்மகிழ்தல்.

மௌவலந் தாமப் புயத்தான் பெரியசு வாமிவெற்பிற்
பௌவநற் காதலி யுள்ளுட னஞ்சருட் பாங்கியவ
ளௌவிய சித்ரக் கலவி யமிர்தமி துண்டுவந்தே
செவ்விய வங்கமத் தேவர்க ளாகச் சிறந்ததுவே. (100)

தலைவியுணர்ந்து தலைவனொடு புலத்தல்.

யமனைப் படைத்த கொலைக்கணல் லாரடை யாளமுலைச்
சிமிழிற் கலைவையெம் பாலிற் சிதையுமச் செல்வர்முகக்

குமுதத் துணையைப் பெரிய சுவாமி குவட்டிற்கண்டாற்
கமலத்தை யொப்பநம் மில்லினைச் செய்யுநற் கன்னியரே. (101)

பாணன்றலைவனுக்குற்றதுரைத்தல்.

யாணர்ப் புயத்தெம் பெரிய சுவாமிவெற் பன்னமென்னைக்
காணிற் கடலுஞ் சிவந்தனை மேகமுங் கன்மழையே
தானுக் கொளாமற் பொழிந்தநின் பேர்சொலிற் றப்பினதோ
பாணிச்சி மங்கலத் தீர்க்கமற் றில்லையிப் பாரண்ணலே. (102)

இதுவுமது.

யானையுன் சந்து பொருத்திடப் போன ததிசயமெங்
கோனையென் சந்து பொருத்துவ தார்கிரி கூடபதி
பானையம் வைத்த பெரியசு வாமிவெற் பன்னமன்னார்
தானே யெறிந்தகன் மாவடு வாகத் தவம்புரிந்தே. (103)

சீறேலென்றவள் சீறடிதொழுதல்.

யுககோடி யோர்கண மாக்கிய குற்ற மொழித்திடவுன்
னுககோ டியல்பு தவிரா விரணிய னோன்மைநெஞ்சி
னககோடி காட்டும் பெரியசு வாமிநன் னாட்டயிலம்
பககோ டியவி னுதலாய் சரணம் பணிந்தனனே. (104)

காமக்கிழத்தியைக் கண்டமை பகர்தல்.

யூகந் தனிலுனைப் போலுமென் சேயிட முற்றுவந்தே
யாகந் தனிலன்னை யிற்புல்லி னாளகி லாண்டமொரு
வாகம் புயத்திற் பரித்தோன் பெரியசு வாமிவெற்பா
மோகந் தனிலெங்கை யென்றே நகைத்தனண் மொய்குழலே. (105)

புறங்காட்டல்.

யோசனை சண்பக வாசங் கமழுட லொண்டொடியென்
னாசை யெனுங்கட லாழ்வது கண்டு மதுகடப்பான்
மாசறு சீர்த்திப் பெரியசு வாமி வரையிற்சந்தம்
பூசணி பொற்குடந் தாராது வெந்நல்கும் போதநன்றே. (106)



பாணனைப்பழித்தல்.

வருட மிரவி மதிவர வெண்ணி வருத்தமிருங்
குருவி யெனவென் கொழுநர் வரவு குறிக்கையிலே
தருண தியாகி பெரியசு வாமி தயாளுவெற்பி
லருமை மகவின் றனில மிராப்பக லாகினையே. (107)

இதுவுமது.

வடபுலந் தென்புல மல்லும் பகலு மருவிரவி
யடவினின் றந்தையச் சேரியு மில்லு மடைவதற்குந்
திடமக மேருப் பெரியசு வாமி சிலம்பின்மைந்தா
தடவரை விந்த மெனவளர்ந் தாய்பெற்ற தன்மையிதே. (108)

ஓதற் பிரிவு பாங்கி மறுத்தல்.

வாரத் துரையெங்கண் முத்துச் சுவாமி மதன்றுணைமா
லாரத் தளவன் பெரிய சுவாமி யணிவரையி
னீரெத் தனைபடித் தாலுஞ்சஞ் சீவினி நேரிற்கல்லும்
பாரத் தனத்தி யுயிரினை மீட்கமெய்ப் பாலண்ணலே. (109)

காவற் பிரிவிற் கூதிர்ப் பருவங் கண்டிரங்கல்.

விசையக்கட் டாரிப் பெரியசு வாமிவித் தாரவெற்பர்
வசமுற் றுவாவி தனையு நடுக்கஞ்செய் யார்வடந்தை
பசையற்று ளாவி புலரவென் மெய்யைப் பனித்திடவே
திசைமுற் றுங் காப்பச்சென் றாற்பல னேதுகொல் சேயிழையே. ()

தூதிற் பிரிவு பாங்கி தலைவிக்குணர்த்தல்.

வீறிற் பகைத்த விருகுல வேந்தர்க்கும் மேற்குலநாஞ்
சேறிற் பொருந்து மெனவுரைத் தேயின் னுஞ் செந்தமிழைக்
கூறிற் கனியும் பெரிய சுவாமி குவட்டுநினைக்
காறிக்கு முன்பனிக் காதவ னென்றனர் காரிகையே. (111)

துணைவயிற் பிரிவு பாங்கிக் குணர்த்தல்.

வெயினமர் வேந்தன் முசுகுந்த னிந்திரன் வேண்டவலன்
பயின்மா ரரற்றின போலின்றி யான்செல் பரிசையெங்கண்

மயின்முரு கேசனை வாழ்த்தும் பெரியசு வாமிவெற்பி
லயில்விழி மங்கைக் குறையா துரைத்தரு ளாரணங்கே (112)

பாசறையிற் றலைமகனுரு வெளிகாண்டல்.

வேந்தர்கள் வேந்தன் பெரியசு வாமி வியன்சிலம்பிற்
பாந்தவ ராசர்க் குதவியுற் றேற்கிப் பகற்றுணையா
யேந்தயில் வாள்சிலை நேமியுந் தாங்கி யிரதமுடன்
மாந்தளிர் மேனி பலவுரு வாயெம்முன் வந்தனளே. (113)

பொருள்வயிற் பிரிந்தவிறையோன் வந்தமை தலைவிக்குணர்த்தல்.

வைவேற் குகனருள் பெற்றோன் பெரியசு வாமிவெற்பி
லெய்வேட் கினியம ரில்லைமின் னேயணி யேற்கவணி
கொய்வாழ் புரவி யிரத மலையிற்பொற் கொண்டலெனக்
கைவேத் திரர்புகழ்ந் தேத்தவந் தார்பொருட் காதலரே. (114)

பொருண் முற்றிய தலைவன் காரோடு கூறல்.

வெளவுங்கட் டாரிப் பெரியசு வாமிக்கு மங்களநே
ரொவ்வுஞ்செங் கோலர சாட்சியும் வாழிய வொண்கடலிற்
செவ்வுறும் வள்ளத் தனமுமிம் மான்வள்ளச் செந்தனமு
மிவ்வுழி யாயுற்று வாழ்வுபெற் றுமினிப் பெய்மழையே. (115)

வாழி.

பங்கயன் மாலும் பணிதிரி கூட பதியருளாற்
றங்க விசையந் தழைக்கநற் கீர்த்தி தமர்களுடன்
மங்கள யோகன் பெரியசு வாமி மனமகிழ்வாய்த்
திங்க ளுடுவென வேவாழி யிந்திர செல்வமுற்றே. (116)

வருக்கக் கோவை முற்றிற்று.

---

உ

# வடகரைப் பெரியசுவாமித் துரையவர்கள் பேரிற் கோவைச்சதகம்.

## காப்பு.

சீர்வளருஞ் சின்னணைஞ்சான் சேய்பெரிய சாமிதன்மேற்
பார்புகழ்கோ வைச்சதகம் பாடுதற்கே—யார்வமுறக்
கம்பகும்பத் தானைவென்ற கார்முகத்தோ னும்பரவு
கம்பகும்பத் தானைமுகன் காப்பு.

## நூல்.

### காட்சி

பருதியந் திங்கட் பிறைமாக நாகம் பயோதரமல்
விருதிந்த்ர சாபமுந் தாங்கிவிண் ணீங்கி விபுலையின்பங்
கருதியிக் காவிலோர் மின்கொடி போலுறல் கண்டனம்பூ
வருதிரு மார்பன் பெரியசு வாமி வரையிடத்தே. (1)

### ஐயம்.

இடமோ கனமுக மோவிழி யோவல தேந்துமுலைத்
தடமோ வுரோமத் தொழுங்குல கோவிடை தான்கொனெஞ்சே
யடலாழி யொன்றிற் புவியேழுந் தன்வச மாக்குமனத்
திடவான் பெரிய சுவாமிவெற் பாருமிச் சேயிழைக்கே. (2)

### துணிவு.

சேயணி கைத்தொழில் காட்டின கூந்தலிற் செம்மலரு
நீயென வாடின கண்ணிமை யாநின்ற நெஞ்சமெங்க
டாயக மான பெரிய சுவாமி தயாளு வெற்பிற்
றோய வுறும்பக மாமாம் புவியிந்தத் தோகையர்க்கே. (3)

### குறிப்பறிதல்.

தோகை மயின்முரு கோனருள் பெற்றவுத் துங்கனம்மே
லோகை புரியும் பெரிய சுவாமியொன் னார்த்தடிந்து
வாகை புனைந்தடுத் தோர்க்கஞ்ச லென்னும் வகையிரண்டும்
பாகை யடர்மொழி மின்னாள்கண் காட்டின பார்மனனே. (4)

### இதுவுமது.

மணமாறா சூருரம் பாய்ந்துயிர் வாட்டம் வருத்திப்பின்னுற்
பனமான வின்ப மளித்தவை வேலெனப் பாவலர்க்குக்
கனமானுஞ் செங்கைப் பெரிய சுவாமி கனவரைமா
னினமார்கண் வேலின்று செய்தன நம்மட்டு மிம்மட்டிலே. (5)

### இரந்து பின்னிலை நிற்றல்.

மட்டாரு முல்லை யணிபுயச் செம்புலி வாகைபுனை
கட்டாரி வேந்தன் பெரிய சுவாமி கனவரையிற்
றொட்டார் வலைக்கண்ணி லென்னுள மீனஞ் சிமிழ்ப்புறக்கை
விட்டாற் பழிவந்து கூடுஞ்செந் தாமரை மேலணங்கே. (6)

### மறுத்தெதிர் கோடல்.

மேலாழி சீதைக்கன் றீந்த பதாகையன் மேவரங்காய்ப்
பாலாழி கொண்ட பெரிய சுவாமி பனிவரையிற்
காலாழித் தேரண்ணன் மோகன நாணிற் கடத்த னெஞ்சே
மாலாழி தாங்க மறைநூலிற் செய்க வசமிட்டதே. (7)

### தெய்வத்திறம் பேசல்.

வசன லளிதன்கட் டாரிப் பெரியசு வாமிவெற்பிற்
கசநகி லப்பன் னகமானைப் பார்த்தன் கலந்தெனவம்
புசகனி மாதிங்ங னேநமைத் தெய்வம் பொருத்தினதே
நிசநடுங் கேல்பிரி வாமோவெண் பாலுட னீர்கலந்தே. (8)

### தலைவி தெளிவு.

கலந்தாங் கியகொம்பு மானுர் கலையைக் கவர்ந்துமலை
வலந்தாங்கி யானிரை காத்தோன் பெரியசு வாமிவெற்பர்
நிலந்தாங்கி யாயி வருமான தாற்சொன் னிலைதவறா
தலந்தாங் கியநெஞ்ச மேகாந்த லோகம தாகுவரே. (9)

### பாகனொடு சொல்லல்.

வரையார மார மணிசூட மேந்திய வல்லியஞ்சி
நிரையாயந் தன்னையு மென்னையும் பார்க்குங்கண் ணோர்வலவா
திரையாழி யெய்த பெரிய சுவாமி சிலம்பிற்சுனைக்
கரையார்ந்த பட்சியு மீனமு மானதைக் காட்டியதே. (10)



### தந்த தெய்வம் தருமெனச் சேறல்.

காட்டாத பேரின்பங் காட்டிய போலிக் கனியைச் சந்தார்
கூட்டாமற் கூட்டிய தெய்வமுண் டாலின்று கூட்டுமஞ்சே
நீட்டாவை வேலன் பெரிய சுவாமி சிலம்பிலென்னை
வாட்டா தெழுமனஞ் செல்வோஞ்சில் லோதி மருவுமென்றே. (11)

### முந்துறக்காண்டல்.

என்றார் வருந்திசை நோக்கிக்கண் ணீருற் றிதழ்குவிந்து
பொன்றா தணிநெருஞ் சிப்போ தெனமலர்ப் பெற்றொடியே
குன்றாத வாய்மைப் பெரிய சுவாமி குவட்டிடத்தி
னின்றா டனியிங்ங னேநமைத் தேடி நெடிதுயிர்த்தே. (12)

### முயங்கல்.

நெடியோ னயனிந் திரதேவ ராலு நினைப்பதற்கு
முடியாத வானந்த வாரியி லேயெனை மூழ்கச்செய்தே
வடிவேலன் சின்னணைஞ் சேந்த்ரன் பெரியசு வாமிவெற்பிற்
றடியா மருங்கு லருள்சொர்க்கம் போலொரு சொர்க்கமுண்டே. (13)

### புகழ்தல்.

உண்டிலை யென்னு முருவாய்க் திரதி யுகந்திரதங்
கண்டிலை யென்றதன் மேன்முடி தாங்கியக் காமனெழில்
வண்டிலை யீசனை வாழ்த்தும் பெரியசு வாமிவெற்பிற்
கொண்டிலை நேர்வதெ னிம்மா னிடைக்குக் கொடிவஞ்சியே. (14)

### உடன் புணராயத் துய்த்தல்.

வஞ்சியர் சித்ர மடலேந்து முத்துசு வாமிதுணைச்
செஞ்சிலை வீரன் பெரிய சுவாமி சிலம்பணங்கே
நெஞ்சி லயமுற்று மாயத்திற் செல்லுக நிற்பிரியே
னஞ்சிலை பட்சிக் குழாத்தனப் பேடங் கடைந்தெனவே. (15)

### பாங்கன் கிழவோற் பழித்தல்.

அடையார்வின் னொட்டி லடையச்சங்க்ராமஞ்செய் தாடல்கொண்ட
படையான்கட் டாரிப் பெரிய சுவாமி பனிவரையாற்
கடையாநின் றுங்கலங் காவாரி யூமத்தங் காய்மத்தினா
லோடையாநின் றன்ன வொருமானுக் குன்னெஞ் சுழலுற்றதே. (16)

### தலைவனோ டழுங்கல்.

நண்பக லாத வனையிருண் மொய்த்ததை நானிலத்தோர்
செண்பக வியன தீபங்கொண் டாங்கது தீர்ப்பதென
வண்புக ழோங்கும் பெரிய சுவாமி வரையினள்செய்
பண்பக லாவுன் னகந்தேற நான்சொல் பரிவண்ணலே. (17)

### இறைவியைக் காண்டல்.

அண்ணாந் தெழுந்த வனமுலைத் தோளித ழாம்பல்களாம்
பண்ணாருங் கந்தர நேத்திரங் கூந்தல் பகரும்வண்டாம்
விண்ணாருங் கீர்த்திப் பெரிய சுவாமிதன் வெற்பர்சொன்ன
பெண்ணா ரமுதிவ ளேமா வனமிடம் பேதமன்றே. (18)

### கிழவோன் வேட்கைதாங்கற் கருமை சாற்றல்.

உற்றாலங் கேதமுற் றாராற்ற லன்றி யொறுப்பர்கொல்லோ
பற்றாலங் கண்ணி வலைப்பட்டு மானிற் பரிதபித்தல்
குற்றாலம் போற்றும் பெரிய சுவாமி குவட்டிற் கண்டு
நற்றாலங் கூர்ங்கணை யால்வருத் தாநின்ற நண்பு நன்றே. (19)

### இகழ்ந்ததிற் கிரங்கல்

அன்றானை காத்த பெரிய சுவாமி யணிவரையிற்
குன்றாத தாரு வனமோன ரேமயல் கொண்டயரா
நின்றா ளவளிவ ளென்றறி யாது நெடிதிகழ்ந்தே
னின்றா தரவிலர் போலவந் தாரை யினிது நண்பே. (20)

### தலைவியை வியத்தல்.

இனிதா மரம்பைநல் லூரு வசிகண் ணிரவிசொர்க்கங்
கனிவா யருங்கற்பு மேனகை யாய்மெய்யிற் காட்டியதா
னனிதான யோகன் பெரியசு வாமி நரேந்த்ரன் வெற்பிற்
றனியாந் தலைவிக் கெவரேனு நேரெனச் சாற்றரிதே. (21)

### தலைவன் றனக்குத் தலைவி நிலைகூறல்.

அரியாருங் காவினுன் மானிடஞ் சேர்கலை யம்புலிமால்
புரியானை நாக மயில்குயில் கிள்ளையம் பூவைமுதற்
றரியார் வணங்கும் பெரிய சுவாமி சயிலத்தண்ண
றெரியா தரவினிற் கண்டேன் கண்டேனிலை சிங்கமொன்றே. (22)



### பாங்கி நாற்றங் கண்டையுறல்.

ஒன்றுவிரண்டு கவிகையும் பெற்றவ னென்னலரை
வென்றுடல் கொண்ட பெரிய சுவாமிவித் தாரவெற்பிற்
குன்றார் களப முறும்வாச முண்டிந்தக் கோதைமெய்யி
னின்றார் களப முறும்வாசஞ் சேர்ந்த தியல்பலவே. (23)

### செலவு கண்டையுறல்.

அலங்கொண்ட வூசல் களங்கம் மனைதனை யாடல்செய்யா
தலங்கொண்ட நெஞ்சொ டுயிர்ப்பால்விசையஞ்செய்தங்கையின்மே
வலங்கொண்ட ராமன் பெரிய சுவாமி யணிவரையி
லலங்கொண்ட கூந்த றனியே வனஞ்சென் றடைவதென்னே. (24)

### ஊர் வினாதல்.

என்பதி பொன்பதி யான வடகரை யேந்தலம்பூ
மின்பதி மேகம் பெரிய சுவாமிதன் வெற்பினுங்க
டன்பதி யாதவ னண்பல ரன்றின்று தார்குழலீர்
நன்பதி யாதுரை செய்வீ ரதற்கு நவையிலையே. (25)

### கலை வினாதல்.

இலையென்ற சொன்மட்டுங் கல்லாக் குறையென் றெடுத்துரைக்க
நிலைநின்ற கீர்த்திப் பெரிய சுவாமிநன் னீதன்வெற்பிற்
கலையொன்று காயத் துடனுளஞ் சேர்ந்துங்கள் காவினிலார்
வலையொன்று மான்கண்டு வந்ததுண் டோசொல்லும் வல்லியரே. ()

### கையுறை யேந்திவருதல்.

வல்லிய மீனஞ் சிலையு மலைகடல் வானுறச்செய்
தொல்லனு மக்கொடி நாட்டும் பெரிய சுவாமி வெற்போர்
செல்லுரு மின்னுருத் தாங்கிய போலிரு செல்வியரும்
புல்லித னுற்றது வேசெவ்வி மால்சொலப் போகற்கின்னே. (27)

### பாங்கிதலைவனோடெதிர் கோத்தல்.

கற்கலை யார்சிங்க மானுகச் செய்கழற் கான்முகுந்தன்
சொற்கலை கற்ற பெரிய சுவாமி சுரும்பிற்கண்டேம்
வற்கலை விண்ணின் மதிக்கலை மேகலை வஞ்சியர்பா
னிற்கலை வற்கலை நற்கலை யேகலை நிற்கலையே. (28)

பாங்கிதலைவியருமை சாற்றல்.

நிற்கும்பொற் றாணில் வருநார சிங்க நிருபர்வந்து
தற்கும் பிடச்செய் பெரிய சுவாமி தயாளுவெற்பிற்
செற்கும் புறக்கங்கைக் கேகிணற் றுமை செலவுன்னலாம்
வற்குங்கு மக்கொங்கை மானுக்கு நின்மன மானித்ததே. (29)

பாங்கியைத் தலைவன் பழித்தல்.

மாநிதி சங்கர லிங்க மிராம சுவாமிதுணைத்
தானிக னெங்கள் பெரிய சுவாமி சயிலமின்னே
கானிளம் பஞ்சுறு பிஞ்சில வஞ்சுகங் காத்தெனப்பூந்
தேனிமி ருங்குழ லாட்குனை நம்பித் திரிந்ததுவே. (30)

பாங்கி பேதமையூடல்.

திரிகூட மேவிய சித்ர சபேசர் திருவருளு
வரிகூட மங்களம் பெற்றோன் பெரியசு வாமிவெற்பர்
புரிகூட முற்றுயிர் கொன்றுணும் வேடர்தம் புத்ரிமத
கரிகூடஞ் சேரினுஞ் சேரா ளிரங்கியுன் காதலுக்கே. (31)

கையுறை புகழ்தல்.

காதலை வார்குழை யீர்பாரும் பார்வையிற் கண்மலரே
போத வரும்புந் திடந்திடங் காண்புய பூதாத்திற்
றூதலர் முல்லைப் பெரிய சுவாமி சயிலத்திலே
சூதல வித்தழை தேடரி துங்க டுடியிடைக்கே. (32)

பாங்கி யாற்று வித்தகறல்.

அடிகொண்ட கீர்த்தி விளங்கும் பெரிய சுவாமியைப்போற்
படிகொண்ட விண்புற வெய்யோன் கிரணம் பரப்பிவந்தால்
வடிகொண்ட வேலண்ண லுன்கை யுறையெங்கை மானிடைவேண்
முடிகொண்ட மாமணி யாக்குவ னின்றவண் முன்னிரந்தே. (33)

மடற் கூற்றதனைத் தன்மேல் வைத்துரைத்தல்.

இரந்தாம் வருந்தி யுமையவட் காயினி யீசனெனப்
புரந்தான் புனைந்து மணிவண்ணன் முன்னவன் பொற்கொடியைப்
பரந்தாம னெங்கள் பெரிய சுவாமி பனிவரையிற்
நரந்தா மெனச்சொல்ல வாசிய தாக்குவன் றூர்குழலே. (34)



தலைமகன் றன்னைத் தானே புகழ்தல்.

தாரணி சங்கர லிங்கத் துரைமுத்து சாமிதனைக்
கூரணி வேற்கைப் பெரிய சுவாமி குவட்டணங்கே
வாரணி கொங்கைக்கென் மாலை யமைத்து மறந்ததிடை
யாரணி யாய்வரைந் தேன்பொறிப் போரெனை யன்றியுண்டோ. ()

அலர்முலைப் பாங்கி யருளியல் கிளத்தல்.

அன்றின் மனைவஞ்சி மேவண்ண றூரம லாயுதன்பா
லொன்றிய பூங்கொடி யின்னுரை வாழி லொருபெணுக்காய்
நன்றிசெய் நீதிப் பெரிய சுவாமி நரேந்திரன் வெற்பிற்
கொன்றிடி லுன்னருண் மேன்மைக்குக் கீழ்மைக்குறையுமுண்டே.

பாங்கி யென்னை மறைப்பி னெளிதென நகுதல்.

குறையற முண்டகந் தேனுக் கமிர்தங் கொடுக்கினும்வை
கரையுறு மாதவ னன்றியுண் டோகரு தார்கள்வந்து
திறையிடு முன்றிற் பெரிய சுவாமி சிலம்பண்ணலே
நறைகுழ லேரினு மென்னை மறைப்பி னலந்தருமே. (37)

பாங்கி கையுறையேற்ற பின் கிழவோனுற்றல்.

நலமிகு சீதைபொன் னுணுறு முன்சிலை நாணுறச்செய்
வலாகு ராமன் பெரிய சுவாமி வரையினம்மோ
டுலாமெய் வாடுந் தலைவியு மாவுமுன் னேறுதியமுக்
குலமுந் தழையத் தழையேந்துங் கொம்புக்கென் கூறுவதே. (38)

பாங்கி யிறையோற் கண்டமை பகர்தல்.

கூறு மதிநுத லுன்விழி கொங்கை குறித்ததனை
மாறுசெய் தேகலை யானையென் றேமறு மாற்றலரை
வீறுகொண் டோச்சும் பெரிய சுவாமிதன் வெற்பில்வந்தே
யாறு விளைவின ரஞ்சும் புலியி லடைந்தனரே. (39)

தோழி கிழவோன் றுயர் நிலை கிளத்தல்.

தனத்தா மரைத்திரு வேசக்ர வாகந் தழுவல்கண்டே
யினத்தா மரைபிரிந் தாலெனச் சோர்ந்துயிர்த் தேங்கிவிம்மி
வனத்தா மரையினை சொல்லும் பெரியசு வாமிவெற்பர்
தினத்தா மரைக்கணத் தென்னையும் பார்த்துளந் தேம்பினரே. ()

### தலைவி பாங்கி தன்னை முனிதல்.

தேந்தழை தந்தன ரென்றேந்தி வந்தனை சேயிழையே
மாந்தழை தாய்க்குத வாதவர்க் காமன்றி மற்றெவருக்
காந்தழை கல்விப் பெரிய சுவாமி யணிவரையி
னாந்தழை வாங்கன் முறையோ குறையென்னை நாட்டலென்றே. ()

### இறைவி கையுறை யேற்றமை பாங்கி இறைவற் குணர்த்தல்.

நாட்டுக் கரசன் பெரிய சுவாமி நரேந்திரன் வெற்பா
வேட்டுக் கனியுடன் மாந்தளி ரென்ன விஞுவித்தந்த
தேட்டுத் தழையுரு வாயவட் சேர்ந்தனை செப்புவதென்
கோட்டுக் கிளித்துயர் காய்விக்ர மார்க்கன்மெய் கொண்டெனவே.

### குறியிடத் திறைவியைக் கொண்டு சேறல்.

கொண்ட விருநிதி சிந்தா மணிதரு கோவும்வெள்க
மண்டலத் துற்ற கரத்தான் பெரியசு வாமிவெற்பிற்
கண்டனம் வேங்கைக் கொடிக்கர வண்ணலைங் காணு தும்வா
விண்டலர் பூத்தபைங் காவிற்செந் தாமரை மெல்லியலே. (43)

### இறையோ னெதிர்ப்படுதல்.

இயலிசை நாடகச் செந்தமிழ் கேட்டினை யானைக்கன்றும்
வயல்வள நாடுந் தருவோன் பெரியசு வாமிவெற்பி
லயலறி யாதிங்கு வந்தீர் கமடத் தகநினைந்தே
கயலெனப் பார்த்தழ காய்க்கட்டிச் சேர்ந்தெனைக் காப்பதற்கே. ()

### புசழ்தல்.

தற்பா லடைந்தவ ரார்கலி யார்கலி சாரச்செய்வோன்
பொற்பாவை கேள்வன் பெரிய சுவாமி பொருப்பணங்கே
கற்பான் சிறைப்பட்டு வேதனை யுற்றினங் கற்றிலவா
னிற்பாதம் போனடை யன்னமென் றலைது நேர்சொல்வதே. (45)

### நீங்கித் தலைவற் கோம்படை சாற்றல்.

நேரிழை யான சுபத்திரை யர்ச்சுன னேர்ந்தபடி
பாரிய தாக்கிய கண்ணனைப் போலிப் படிபுரந்த
வாரிச மங்கை மருமன் பெரியசு வாமிவெற்பிற்
காரிகை நின்புயஞ் சேரச்செய் தேனையுங் காத்தருளே. (46)



### தலைவனிடத் தலைவி வருந்தல்.

அருள்செய் பெரிய சுவாமிதன் னாட்டினி லாழியன்போன்
மருவு தனச்சக் கரங்காங் கொண்டந்தி மாலையுற
நெருனலிற் செய்தகன் றாரின்றிந் நேரந் தனித்துநின்றுங்
கருதும் பனைவரு முன்சிவ னேவரக் கண்டிலனே. (47)

### பாங்கியச்சுறுத்தல்.

கண்டன சொல்லி யிறைவிருப் பாற்றினைக் காவிதண்காக்
கண்டனி கானலிற் றாமரை யாய்த்திரி காலையின்மார்க்
கண்ட னமது பெரிய சுவாமி கனவரையாய்
கண்டன னென்னிற் புனங்காவல் போம்வருங் காவலுமே. (48)

### இறைவனைப் பாங்கி குறிவரல் விலக்கல்.

காவலர் காவலன் சின்னணைஞ் சேந்திரன் காதலன்சொன்
னாவலர் போற்றும் பெரிய சுவாமி நரேந்த்ரன்வெற்பி
லாவல ராகுந் தினைவினை யாய்க்குர லாலழைக்க
மாவலர் கண்ணி பனைவருங் கேள்வரும் நீவரிலே. (49)

### இறைமக ளாடிட நோக்கி யழிதல்.

வரியர வாடரங் காக்கும் பெரியசு வாமிவெற்பிற்
புரியர னாலைந் தருநீழ லின்பம் பொருந்திப்பின்னும்
பரிபவ முற்றவர் போலென லானுந்தம் பான்மணந்தும்
பிரிய முடிந்தன தண்டலை யன்பர்க்கென் பேசுவிரே. (50)

### வறுங்கள நாடி மறுகல்.

பேசணி சித்ரம் பெரிய சுவாமிவெற் பெங்கணுற்ற
ளாசற வைவருக் காவிய லாவி யழித்தவரே
தேசர்கள் கற்பவ ரேசூரன் மாண்டு செனித்தவரே
வாசவ னானவரே சொல்லு வீர்மதி மன்னவரே. (51

### இறையோ னிருட்குறி வேண்டல்.

மதியற்ற வானின் மழைதூற்ற மின்னி வழிகுறித்தும்
பதிபுக்கி னென்விருந் தாயனங் கேநங்கை பாலமுத
மதிவிக்ர மார்க்கன் பெரியசு வாமி யணிவரையி
லெதிர்வைத் தளிப்பரென் றேயெண்ணி யானிவ் விரவினிலே.

### நேரிழை பாங்கியோடு நேர்ந்துரைத்தல்.

இரவ......................ல்லிதழ் விரிய
விரவுங் கமல முகிழ்ப்பதுண் டோததி வெண்ணெயன்பாற்
கர........................பெரிய சுவாமி கனவரைமி
லரசுவந் தாலணங் கென்னே மறு............. (53)

### தலைமக ளாற்றின தருமை நினைந்திரங்கல்.

வல்லவன் சங்கர லிங்கம்........................ண்ணி
கல்லக நாடன் பெரிய சுவாமியைக் காண்கிலர்போ
லில்லமி.....................ருட்டால்வர வேய்ந்ததுவே
யல்லரும் பேய்க்கும் விழிதெரி யாவழி யானடந்தே. (54)

* * *

நடராசர் தாச னெனுஞ்செம் புலிதமிழ் நாவலர்சொற்
றிடராச ராசன் பெரிய சுவாமி................
...............டனே கலந்துயி ரொன்றுய்ப் பரவச முற்றவின்ப
மடலாழி யான்பெறி னுண்டோபி............துவே. (55)

### திருமகட் புணர்ந்தவன் சேறல்.

அதுலன் கிழவைப்.....................ற்பன்னமின்னுட்
கதுமென வந்து கலந்துள மாவிருட் கங்குலின்வாய்
......................றின தாலணங் கென்னகர் போதவன்னுள்
விதுநுதா சிந்துற முன்ன..................னே. (56)

### பிழைப்பேற்றல்.

மின்னுர் கடகப்...........................தீ
துன்னுர் திறையிட வெல்லும் பெரிய சுவாமிவெற்பர்
முன்னுள் வனத்தி லிலைதுளும் பாச்செவ்வி முற்றுங்கண்டா
ளுன்னுர் குறியி னுனைமேவக் கண்டில ளொண்கொடியே. (57)

### கூகை குளறுதல்.

கொடிப்பகை யாலஜன் பேரிடைப் பட்ட கொடியரென்றே
யடிக்கடி வர்மித் தலறிக் குடிஞைநம் மண்ணல்வரா
திடிக்கொடி யிந்த்ரன் பெரிய சுவாமியை யேத்தலர்போற்
றுடித்துயிர் வாட்ட மடுக்கத் தடுக்கத் துணிந்தமின்னே. (58)



### பருவரல்வினவியபாங்கிக் கிறைவியருமறை செவிலியறிந்தமைகூறல்.

துணிகண்ட சூர்தங்கை கையாகக் கையடைத் துன்பறச்செய்
மணிகண்டன் மெய்யருள் பெற்றோன் பெரியசு வாமிவெற்பிற்
பணிகண் டனமொழி யென்றிரு மேனி பசந்துமையா
லணிகண் டனைகண் சிவந்தாணங் கள்ள மறிந்துகொண்டே. (59)

### காம மிக்க கழிபடர் கிளவி.

அறிவுக் கனந்தன முத்திரு ளப்பனண் பார்மருக
னெறியிற் றருமன் பெரிய சுவாமி நெடுங்கடல்வாய்ச்
செறிகைச் சரியினங் காள்விழி காளென் றிருமுகங்காள்
குறிவைத் தகன்றவ ரென்னையெந் நாள்வந்து கூடுவரே. (60)

### வரைவெதிர் வுணர்த்தல்.

கூடுங் களவு சதமல்ல வீட்டுமன் கோவிரும்பி
நாடுங் கனிமணம் பேசலை யோவெங்க ணங்கைதனை
வாடு மருங்குன்மின் னூர்வேள் பெரியசு வாமிவெற்பிற்
றேடும் பொருள்கொண்டுங் கேள்வரி லீவர் திடமெதிர்ந்தே. (61)

### இரவு வருவானைப் பகல்வரு கென்றல்.

திடராச னெங்கள் பெரிய சுவாமி செழுந்தமிழ்க்கு
வடமேரு வைத்தரு முன்னே யெனது மதனகும்பத்
திடமார் முலைக்கிணை யாமிரு பட்சி தழுவக்கண்ட
வுடனே மருவிலன் பாமென் றுரைத்தன ளோரண்ணலே. (62)

### தலைவி நெஞ்சொடு புலத்தல்.

ஓர்ந்திலை பெண்பழி யென்றிரங் காவொவ் வொருத்தருள்ள
நேர்ந்தது கண்டும் படித்தா யிலையென்ற னெஞ்சமென்னே
தேர்ந்தருள் யோகன் பெரிய சுவாமி சிலம்பர்தம்பாற்
சார்ந்தனை வெள்கிப்பின் மீண்டனை யேதாந் தானுனக்கே. (63)

### பாங்கி இறைவியையாற்றுவித்திருந்த வருமை கூறல்.

தானும் புயமங்கை சேர்செங்கை வேண்முத்து சாமிதுணைத்
தேனுரு முல்லைப் பெரிய சுவாமி சிலம்பண்ணலே
கானு மசோகத் தசோகம்பொன் சேரமேற் காத்தமின்போன்
மானுரை யாற்றின துன்குல வாய்மையின் வாறுரைத்தே. (64)

ஓடரிக் கண்ணிக் கவன்மேற் செலவுணர்த்தல்.

உரையாணி யாய்ச்செந் தமிழ்முத லாங்கலை யோர்ந்துநெஞ்சங்
கரையாகக் கொண்ட பெரிய சுவாமி கனவரையில்
விரையார் குழலியுன் வெள ..................................
... ... ... ... (65)

(66)

(67)

(68)

தென்ப காதல்செய்யே. (69)

புனறரு புணர்ச்சியா லறத்தொடு நிற்றல்.

செய்ய கிழவைப் பெரிய சுவாமிதற் சேர்ந்தவர்க
ளுய்யும் படிக்குத் துயர்க்கலி யார்கலி யுற்றயர்முன்
கையங் களித்துக் கரையேற்றல் போலுநங் கன்னிசுனை
மையந் தயங்கி யமிழ்ந்துமுன் காத்ததோர் மன்னவனே. (70)

போக்குடன்படுதல்.

நவந்தரு சந்த்ர பதிபுக வஞ்சி நவிகனலிற்
சிவந்த கதிர்படு பாலை கொடிதுகொல் செப்புமன்னு
நிவந்த கவிகைப் பெரிய சுவாமிநன் னீதன்வெற்பிற்
பவந்த நுதலி பதம்பதஞ் சேரிற் பதந்தருமே. (71)

பாங்கி தலைவிக் குடன்போக்குணர்த்தல்.

தருவன சங்கர லிங்கத் துரைமுத்து சாமிமுன்னோன்
திருவணி மார்பன் பெரிய சுவாமி சிலம்பரென்னே
யருமக ளென்னி லினிநா னெனச்சொல்லி யாற்றுவையோ
மருளுநற் றுயர்முற் றுரணங் கோர்ந்தில வஞ்சகமே. (72)

தலைவி யொருப்பட் டெழுதல்.

சகந்தாங் கனந்தன் முடியாறத் தோட்கொண்ட தாட்டிகன்மா
மகந்தாங்கு மிந்த்ரன் பெரியசு வாமி வரையின்மின்னே
யகந்தாங்கு மெய்யனன் மூன்றிலொன் றிங்ஙன மாற்றுவதாச்
ககந்தாங்கும் வேலன்ய ரல்லாது மின்செலக் காலமிதே. (73)



தலைவன்றன் பதியடைந்தமை தலைவிக்குணர்த்தல்.

காலன சேர்ந்தன மென்றய ரேலிது கான்சிறந்த
பாலன சத்திரம் பாடக சாலைநற் பைந்தொடிமார்
சால நடஞ்செ யரங்கம் புரிசை தயங்குமன்ற
மாலன கீர்த்திப் பெரிய சுவாமி வடகரையே. (74)

நற்றாய் பாங்கி தன்னொடு புலம்பல்.

வடக்குங் குமக்கொங்கை மானனைத் தேற்றி வழியனுப்பி
நடக்குந் துணிவுசெய் தெம்மினுந் தேடினை நங்கையென்னே
கடக்குஞ் சரமன் பெரிய சுவாமி கனவரையி
லடக்கும் படிமுன் னுரைத்தா யிலையெனக் காயிழையே. (75)

இளமைத் தன்மைக் குள மெலிந்திரங்கல்.

ஆயில வம்பஞ் சரும்புகை யேய்க்கு மழற்சுரத்திற்
றுயிலி யாநனி செல்ல மகட்குத் தகுந்தகுமே
சேயி னிளைய பெரிய சுவாமி சிலம்பெதிர்கூய்
நீயினி யாட வராயென் றெழுந்தனை நென்னலின்றே. (76)

அச்சத்தன்மைக் கச்சமுற்றிரங்கல்.

இன்றுனைப் பெற்ற வயிற்றி னெருப்பிட் டெரிசுரத்தின்
மென்றுனைப் பாதம் முறத்துணிந் தாயென் விதியிதுவோ
மன்றுணம் மீசனை வாழ்த்தும் பெரியசு வாமிவெற்பி
லொன்று புலிங்கஞ் சுடுஞ்சுடு மென்றஞ் சொருமகளே. (77)

செவிலி யெயிற்றியொடு புலம்பல்.

ஒருமா னிருதந்தி பின்சேற லிற்கதி ரோங்குகுலப்
பெருமான்முன் னுகச் சிறுமிடி யேவரிற் பேசுநிதி
தருமா லபயன் பெரிய சுவாமி சயிலத்திலே
திருமா லிருபத மேத்தின ரீன்ற சிறுமியரே. (78)

கலந்துடன் வருவோர்க் கண்டு கேட்டல்.

சிறுமதி யாலெம் பெருமதி யானனச் செல்வியன்னாள்
மறுவர மீண்டன ரென்றயிர்த் தேனும்மை மற்றவரைக்
கெறுவித வேழப் பெரிய சுவாமி கிழவைவெற்பிற்
றுறுவன லஞ்சிய வெஞ்சுரக் கண்டிலிர் சார்ந்தவரே. (79)

### புதல்வியைக் காணாது கவலை கூர்தல்.

தவமே புரிந்தரு டாயினை யாற்றுவ தாரினிநா
மவமே நடந்தனுத் தேநெஞ்ச மேதன் னகத்திலென்றுஞ்
சிவமேவு நேசன் பெரிய சுவாமி சிலம்பிலென்செய்
குவமேமன் சொல்லிய வாமுடி யாநங் குலத்துமுன்னே. (80)

### தலைவன் பாங்கியை வாழ்த்தல்.

முன்னைசெய் புண்ணிய மின்னுரு வாயின்ப மூட்டியதா
லென்னை புகழ்து மிருவரு மேதமி ழேத்தினர்பா
னன்னையஞ் செய்யும் பெரிய சுவாமித னாட்டணங்கே
தன்னை ரனைய திருமா லெனமகிழ்ந் தாமனமே.. (81)

### செவிலி நற்றாய்க் கிருவர் காத்தலு மறிவித்தல்.

வனபதி ராமலிங் கந்தரு மாணிக்க வாசகமாந்
தனபதி மாமன் பெரிய சுவாமி தயாளுவெற்பி
லனவர தம்பிரி யாதொன்றி நின்மக ளண்ணலுமே
வினமண வீடு துருவ பதத்தினு மிக்கதுவே. (82)

### தனித்துழி யிறைவி துனித்தழு திரங்கல்.

கதுமெனக் காட்டு நிறவசத் தாம்பளிங் கன்னமனப்
பொதுமக வார்முத்தம் வேண்டிப் பிரிந்தும் புலருமட்டு
மதுமலர் முல்லைப் பெரிய சுவாமி வரையண்ணலே
யிதுவெனங் கண்ணொளித் தேமுத்தந் தந்த திருமுலைக்கே. (83)

### தலைவியைப் பாங்கி கழறல்.

முலைநகை மாதரு னண்பல வீத்தொடு மொய்காரத்தாற்
றலைமைய முன்னுகந் திண்டாக விந்தில தார்ப்புயத்திற்
சிலைவளர் வீரன் பெரிய சுவாமி சிலம்பணங்காங்
கலைவலர் சேரிசொ ருரென வெண்ணுத லன்பலவே. (84)

### சேவ்வணி யணிந்து சேடியை விடேப்புழி யவ்வணி யுழையர் கண்டழுங்கிக் கூறல்.

கற்பகக் கொம்பணி பூத்தன மென்று கணிகையினம்
வற்புறக் காண்குறி காட்டுங்கொ லோநிச வாய்மையுற
மற்புத யோகன் பெரிய சுவாமி யணிவரையிற்
பற்பல ரேசக் குடிமாட்சிக் குற்ற பரிசுநன்றே. (85)



### புணர்ச்சியின் மகிழ்தல்.

பரிச முலையும் புலனுக ரின்பருள் பைங்கனியே
...............ட......ளி யிடையே காமுபங்கிக மகிழ்ந்தால்
குரிசில தீபன் பெரிய சுவாமி குலவரையிற்
புரிதவ மிங்கெமை யன்றிப்பெற் றாரெவர் பூவகத்தே. (86)

### வெள்ளணி யணிந்து விடுத்தல்.

பூவணி தூசுபுள் ளோதிமத் தாளெனப் பூண்டுதிங்க
ளாவணி யார்வத னாக மதலை யவதரித்தன்
மாவணிச் சின்னனைஞ் சேந்த்ரன் பெரியசு வாமிவெற்பீர்
கோவணி பூரணுக் கோதிடச் சென்றனர் கோதையரே. (87)

### தலைவன் றன் மனத்து வகை கூறல்.

கோதையர் மோகனம் முந்து சுவாமிக் குரிசின்முன்னோன்
சீதை மணாளன் பெரிய சுவாமி சிலம்பணங்கே
தாதை மகற்பெறும் பேறன்றி யுண்டுகொ லாண்பெறுதன்
மாதைநெய் யாடிய மேனியைக் காண மதித்தனமே. (88)

### பாணன் வாயின் மறுத்தல்.

மதியுந் துகிலுங் கலையுமுன் வாங்கின மன்னவரே
கொதிவெந் துயருங்கண் முத்தமும் பொன்னுங் கொடுத்ததல்லாற்
பதியெம் பெரிய சுவாமிதன் னாட்டுறை பாணவுண்டே
சதிசெய் தவர்க்கின மீவது மீளத் தருவதுமே. (89)

### காமக்கிளத்தி தன்னோ டிரங்கல்.

தருணா விந்தமின் சேர்முத்து சாமி தமையனெங்கள்
கருணை பிராமன் பெரிய சுவாமி கனவரையி
லருணா டியவயி டூரியம் வெண்பளிங் கார்மணியாம்
பொருணாடிக் கற்றதிற் சேர்ந்தோ ரெலாம்பெண் புரவலர்க்கே. ()

### விருந்தோடு வந்துழிப் போற்றல் கண்டிறையோன் மகிழ்தல்.

வலவன் பெரிய சுவாமிதன் னாட்டினின் மட்கலஞ்செய்
குலவன்மின் னூடற் பிரிவையன் னாள்வந்து கூட்டியவெண்
ணிலவணி வேணியன் போல விருந்தின்று நேரிழையின்
புலவி தவிர்த்தின் னலந்தாச் செய்ததெம் புண்ணியமே. (91)

இஃதெங்ஙகையர் காணினன்றன் றென்றல்.

புண்ணிய தேகன் பெரிய சுவாமி பொருப்பண்ணலை
பண்ணியல் பாசகத் தாடிய நாடக பாதமென்று
னண்ணி முடிபணி யத்த நமாலித்து நன்றலவேற்
கண்ணினை யெங்கையர் கண்டாற் சினப்பர் கருத்திழந்தே. (92)

வள்ளியினமு.........புரத்தான்.

கருப்பாற்றி னன்கல் லகநாடன் வாவிக் கயறருவின்
மருப்பார்க்குஞ் செண்பக நல்லூர்ப் பெரியசு வாமிவெற்பி
லுருப்பார்த்துஞ் சித்திரத் தேர்வி.........ா தீட்டற்கொவ் வாதெனுமெய்த்
திருப்பார்த் துயிர்ப்பவென் கக.........தீர்மலத் தெயவமின்னே. ()

சிறுநுதற் பாங்கி மனைவியைப் புகழ்தல்.

தெய்வந் தொழாணற் கொழுநற் றொழுதெழுஞ் சேயிழையாள்
பெய்யெனப் பெய்யு மழையென்பர் காண்மலர்ப் பெண்கொடியே
வையம் புரக்கும் பெரியசு வாமி வரையிற்கணி (94)
கையர் மனைசென்ற காதலர் போற்றுநின் கற்பினுக்கே.

போதற்பிரிவு.........குத்தல்.

கற்பா லிருவகைப் பாலுக்கு மேன்மைகண் டீசதலாற்
பொற்பா லுறுபய னென்......சொற்பொ......வந்
துற்பா வளர்க்கும் பெரிய சுவாமி நரேந்த்ரன்வெற்பி
லற்பாக.........திருத்தலடைவலவே. (95)

காவல் பாங்கி.........மறுத்தல்.

அடல்வீர பத்ர னெனுமுக்கு சுவாமிக்கன் பார்துணைவேண்
மிடலார் புயக்கன் பெரிய சுவாமிதெய் வேந்திரன்போற்
கடல் சூழு மண்டலங் காக்கச்சென் றான்மதி காயமரை
மடன்மேவு பெண்கள்.................. (96)

கோவைச்சதகம்

முற்றிற்று.

---

சிவமயம்.

# பெரியசாமி செம்புலிச் சின்னவணஞ்சுத்துரையவர்கள் பேரில்

தென்காசிக் கவிராசபண்டாரமவர்கள் பாடிய

# விறலிவிடுதூது.

காப்பு.

பாமருவு தென்கிழவை வாழ்பெரிய சாமியெனுஞ்
சோமன் விறலிவிடு தூதுரைப்பத்—தேமருவிச்
சித்ரநதி முத்தமெறி சித்ரசபை நிர்த்தமிடு
கத்தனரு ளத்திமுகன் காப்பு.

நூல்.

கார்கொண்ட மேனிக் கனமான சந்ததிதான்
சீர்கொண்ட வேலைச் செவிலியிடத்—தேர்கொண்டு
சென்று மருவித் திரைமுலையின் பால்வயிறு
துன்றும் படிநிறையத் துய்த்தெழுந்தே—யொன்றுடல
மேகுளிர்ந்து காட்டிநிற மேபசந்து கொர்ச்சித்தே
மாகமுன்றி லுற்று மனோரதத்தா—லாகமதின்
மின்னு ரணிபிலங்க மேவித் தவழ்ந்துலவிப்
பொன்னூர் வரையிடமும் பூங்காவுந்—தன்னூர்வஞ்
சேர்ந்துவிளை யாடிவருஞ் செவ்விதனில் வாயமுதம்
வார்ந்தொழுக லென்ன மழைபொழிய—வார்ந்த
பயிர்வளரச் செல்வம் பலவுமினி தோங்க
வியல்புடனே பூவலயத் தென்று—முயிர்களெல்லா
முப்ப மனுநெறியா லோங்கியசெங் கோன்மைசெயுந்
துய்யகதிர் வேற்கைத் துரந்தரிகன்—செய்யபுகழ்
மங்கைமலர் மங்கைதமிழ் மங்கைசெய மங்கையுஞ்சேர்
மங்களகல் யாண மகராசன்— துங்கநெடு

வானம் வழங்க மறையா னினம்வாழத்
தானந் தருமந் தழைத்தோங்க—மேன்மைதரு
தெய்வ சிவாலயங்கள் செய்பூ சனைமீறச்
சைவ சமயந் தலைமைபெற—மெய்யா
யதிக தவங்கிழுவை யார்செய்த வாறே
பொதியைவள நாட்டற் புதமா—முதியோர்கள்
செய்தரும மொன்றாய்த் திரண்டுற் பவித்தனவாய்த்
துய்யமல ரோன்படைக்கத் தோன்றினான்—மெய்மைதிகழ்
மூத்தமிழு நித்திய முழக்குசமு கத்ததிபன்
வித்வசன ரக்ஷக விதட்சணிகன்—சத்தயிகு
சிந்தை யுறவிணங்குஞ் செற்படித்ரி கூடர்பதஞ்
சிந்தை யுறவணங்குஞ் சென்னியான்—நந்தாத
சந்த்ர வரைப்புவிப்ப தாகைபொறித் தோனரிச்
சந்த்ர வசன தயாமேக—முந்திரவி
வேலை யலருமர விந்தம்போ லுங்கருணை
வேலை மருவும் விழியினா—னாலோன்
கலையமுத முண்டினிமை கண்டசகோ ரம்போற்
கலையமுத மார்ந்த கனத்தான்—கலகக்
கவுத்துவமாற் றுரைவெரிங் கண்டகல மீதே
கவுத்துவரத் நந்தரித்த கண்ணன்—தவுத்தியங்கூர்
பொன்னார மார்வுமுறப் பூண்டதின்மே லேவிசையப்
பொன்னார மேவுபுய பூதரத்தான்—வன்னமிகு
கற்கடகப் பொன்முழந்தாட் கன்னியர்வேள் வச்ரமணிக்
கற்கடகம் பூண்ட கரதலத்தா—னுற்றடுத்துக்
கண்டாரல் லார்குடிவாங் கத்தொனித்தோங் கும்வீர
கண்டா மணியணியுங் காலினான்—மண்டலத்திற்
செம்பு லிகிதமிட்டுச் செந்தமிழ்க்குச் சிமைநல்குஞ்
செம்புலியென் றோதுதிட சிங்கேறு—கம்பலைசேர்
வாரி கரைகடந்து வந்தாலுஞ் சந்திரனுஞ்
சூரியனுந் தென்வடக்காத் தோன்றிடினும்—பாரி



னலங்கார மேரு வசைந்தாலு முள்ளங்
கலங்காத வீரமணி கண்ட—னிலங்களிலே
தேகியென்றோர்க் கிந்தருடி யாகிமதி யூகிசொல்லி
வேகி புகழ்மீறு மேன்மையான்—மாகிளைசூழ்
காரியுப காரிவிவ காரிதர்ம காரியவு
தாரி சொல்லித் தாரியவு தாரியவான்—வாரணியும்
வட்டமுலை மானார் மடலெழுது மாமதனன்
கட்டழகு மேவுசிலைக் காமவே—ளிட்டமுறு
மாசானு வாகனன பாய னமுதநய
வாசால கன்விசைய வாளபிமன்—றேசமிகு
மானா பரணன் மதுர கவிஞனுக்காத்
தானகப் பாய்சருட்டுஞ் சக்ரதரன்—மேனாளில்
வாவியுர மூடுருவ வாளிதொட்ட செங்கையினாற்
பாவினலை யுண்ட பரந்தாமன்—கோல
முடியாமென் னுரை முடித்தா னகிலப்
படியான்மெய்ஞ் ஞானம் படித்தான்—கடிகமழ்பூந்
தாரான்மெய்ச் சின்னலைஞ்சான் றந்தான்சீர்ச் செண்பகன்
னூரான் களிறுபரி தேரூர்ந்தான்—காரார்
மகர சலதியுண்ட மாமுனியைப் போலே
சகல கலையறிவித் தாரன்—செகமீதில்
வீணாள் படாமை விமலர்பதம் போற்றார்க்கு
வாணாள் வழியடைக்குங் கல்லென்று—பேணியே
சிந்தைசதா காலமூர்த்தி கூடபதி பாதார
விந்த தியானமே மேற்கொண்டோன்—வந்தாருஞ்
சித்ர சபைதனிற் செம்பொற் றடமூத்திப்
பத்தியாய் மாமண்ட பங்கட்டி—நிர்த்தசபை
முன்னுதய பானுமுடி வணங்க வந்ததுபோற்
சொன்னமணித் தூவிக் கடர்பாயச்—சன்னிதியிற்
தெற்பக் குளமுஞ் சிகரசெடு மண்டபமும்
பற்பலவாச் செய்யும் படித்துறையும்—பொற்பார்

சதுர்வேதம் வீதிபதாச் சாத்திரமே தேறப்
பதுமனுல கிற்படைத்த பண்பாய்க்—கதிபெறவே

தேருந் தெருவுந் திருவிழா வும்புதிதா
யாருங்கொண் டாடிடவுண் டாக்கினோன்—பேருலகிற்

பூசுரர்க்கு வெவ்வேறு போசன சாலைகட்டிக்
காசலையா யன்னசத்ரங் கற்பித்துத்—தேசணிநேர்

குத்துப் புரைசதுக்கை கொட்டகைகற் பந்தல்வெகு
சுத்தமடைப் பள்ளிமதிற் சோபானங்—கத்தனுக்கே

யாருந் திருநாட்கொண் டாடுமணி மண்டபமு
மாருக் கருகூல மாளிகையுங்—கூற

மணக்குமறை வாசனுமவ் வாசன் மணிபங்
கணக்கரொடு சம்பிருதிக் கார—ரிணக்கமெனச்

சத்ரம்விசா ரிப்போர் சதாகாலுஞ் சூழ்ந்திருக்குஞ்
சித்ரமணி மேடைத் திருமுகப்பு—மெத்தக்

கறங்கு வடவருவிக் கங்கையெடுத் துண்பா
னிறங்கு துறைக ளிருபாலும்—பிறங்கலினால்

வாங்குபடி கட்டி வடகிழக்கே மற்றோர்க்கு
மோங்குமன்ன சத்ரமுத லுண்டாக்கி—நீங்காம

லன்னா ளறம்வளர்த்தா ளாதலினா லாவுடைத்தாய்
தன்னா யகனுமவ டானுமே—யின்னாளி

லிந்தத் தருமம்வளர்ந் தேற வெழுந்தருளி
வந்திருக்கு மம்பொன்மலை மாதினுக்கு—மிந்தணியுஞ்

சங்கரலிங் கர்க்குந் தகும்பூ சனைநடத்திப்
பங்கயமு நீலோற் பலமலரு—மங்காத்

தடங்களுஞ்செய் வித்தே தங்குதற்கங் கங்கே
யிடங்கள் வெகுவசதி யென்ன—மடங்கள்பல

கட்டித் திருப்பணிகள் கட்டளைக ளர்ச்சனைகண்
மட்டற்ற பொற்பணிகள் வாகனங்கள்—கட்டுபரி

வட்ட முதலமைத்து வாய்த்தசிறு காலசந்திக்
கட்டளையே கோலா கலஞ்சிறந்த—குட்டமென



விறலிவிடு தூது.

வாவலுடன் செய்யுமன தன்பினா லாதிவிட்டு
தேவனிவ னன்றிநர சென்மமோ—பூவுலகி

லென்னப் பெரியோ ரெடுத்தியம்பும் பாக்கியவிற்
பன்னப் பிரபலஞ்சேர் பத்திமான்—மின்னுபுய

மன்னிலஞ்சிச் செவ்வேண் மகிழ்ந்துறையுந் தண்டலைசூழ்
தென்னிலஞ்சிச் செவ்வேள் தினப்பூசை—நன்மைதரு

கந்தசட்டித் தேர்த்திருநாட் காசினியெல் லாம்புகழச்
சிந்தைவைத்துத் தானடத்திச் செங்கதிர்வே—லெந்தை

திருமலைவே லற்குத் தினப்பூ சனையுந்
திருவிழா வோங்குதிருத் தேருந்—திருவா

பரணமுங் கட்டளையும் பாலித் தவன்ற
னரண மெனநினைந்தோ னந்தக்—கரணமுறச்

சங்கரனூர் வாசிநெல்லை தண்கருவை தென்மதுரை
சங்குலவுஞ் செந்தூர் தமிழ்ப்பொதியச்—சிங்கபுர

மெங்கெங்கே யுள்ளதல மெத்தனையோ வத்தனைக்கு
மங்கங்கே கட்டளையுண் டாக்கினோன்—மங்கலஞ்சேர்

தசாங்கம்.

ஆரம் புலிவே யறுகாவக் கங்கைவனத்
தாரம்பஞ் சானனமா மைவனமுஞ்—சேர்வதனாற்

கானவரா கம்பயிலுங் காட்சியத னாற்கோடு
மீனவரை காக்கும் வியப்பினால்—வானுலவு

மிந்திரவி மானமுவந் தேறலா லீசனெனை
வந்தருண்மா ணிக்க மலையினான்—சந்ததமும்

பாரதியை யோட்டம் பயிலப் பொருந்திடலால்
வாரசங்க பாணியுந்தி வந்திடலாற்—சேர

வனப்புள்ளின் மேலூர்ந்த வாறதனால் வாச
நனைக்கமல வேதனென நண்ணிப்—புனத்தகிலோ

டாரமலை யாரமலை யாரமலை யாரமலை
வாரமலைக் குங்கருப்ப மாநதியான்—பாரினிலே

காமனையும் பெற்றுக் கமலத் தடங்களூற்று
மாமருத மொத்த மலர்க்கால—னேமமொடு

பொன்னங் கொடியும் புரஞ்சேர்ந்து மாதவன்போ
னன்னயஞ்சேர் கல்லகநன் ஞட்டினன்—றன்மை

வழுவாத சொற்பொருளும் வந்தலங்கா ரங்க
ளெழுவாயி லம்பதிசே ரேய்ந்து—முழுவதுமே

யத்தமிட்டே முத்தமிழை யாராய்ந்து மூரல்கொளச்
சித்திரப்பா வைக்கூட்டுஞ் செய்கையா—னித்தியமும்

பண்பகலாப் பாவலர்சொற் பாவைநிக ராங்கிழவைச்
செண்பகநல் லூராந் திருநகரா—னண்புறவே

மெய்தனையு மார்பகத்தில் விந்தை விளையாடச்
செய்தருளும் வெண்படிகச் சிற்றிலென—வெய்துமலர்

வித்தார மாமாதர் வென்றிபிற்செய் வெண்ணகைபோன்
முத்தார மாகவந்து மொய்த்தனபோ—னித்தங்

குடவளையூர் கின்றதிரி கூடத் திருமால்
வடவருவி வந்திறங்கு மாபோன்—மடலவிழ்ந்த

குல்லை யணிந்தெழிலே கொண்டபுய பூகாத்தின்
முல்லை யணிந்த முகில்வண்ண—னெல்லெழுந்த

செங்கதிரோன் வெம்பரியைச் சேணிற் செலச்சீறி
யைங்கதிகொண் டுன்னியனு மானித்துத்—துங்கமிகு

மண்டலிகர் பார மகுட முடியிடறி
யண்ட கடாக மதிரவே—கொண்டனிறந்

தோயுமத தந்தி சுழலக் குமைத்துழக்கிப்
பாயுங் கவனப் பரியினு—னேயுமுது

சக்ரவெற்பி டித்தெதிர்த்த சத்துருக்க ளைத்துரத்தி
யத்தியைக்கு மைத்துழக்கி யக்ரமித்த—திர்த்துரத்து

கொத்தளத்தி ரட்டினைக்கு ரைத்துநெட்டி டித்தடர்த்து
முத்தணிப்ப டைத்தளத்தை முற்காத்த—டித்தடித்து

வேகத்தி னலெற்றி மேகத்தி னிரைத்த
னகத்தி லேகொட்டி யேபட்ட—நாகத்தை

மோதல்கண்டு காலனஞ்சி மோசமென்று யோயொதுங்க
வீதிவந்து லாவுகின்ற வெங்களிற்றி—னேதுமன



வேகத்தா லாங்கே விரைந்தெழுந்தா காசவழி
யாகத்தா விச்சென் றணுகியே—யூகத்தான்

மேரு வடபால் விளங்கிரவி கண்டுதெளிந்
தாரு மருத்துமலை யைக்கொணர்ந்தே—பேருயிர்க

டந்துசிலை ராமர் தமைப்பணிந்து மேன்மைபெற்ற
சுந்தரஞ்சேர் வெற்றித் துவசத்தான்—சந்தமுலை

விண்ணுலக மங்கையரும் வேலைபுடை சூழ்ந்திலங்க
மண்ணுலக மங்கையரு மாலையிட்டே—நண்ணுசுப

மன்றல் புரிய வறிஞர்கவி நீங்கமணி
முன்றிலதிர் மூன்று முரசின—னென்றுங்

கடவான்குற் றமலர் கமலபதத் தாளை
கடவான் வெகுவிசய கர்த்தன்—மடலேறு

வாசக் கமல மகளா லயமுடுத்த
பூசக்ர வாளப் புவனமெலா—நேசத்தாற்

றிக்குவிச யஞ்செலுத்திச் செங்கோ னடாத்துகின்ற
வுக்கிரகாம் பீர்யசெய வுத்துங்கன்—சக்ரதரன்

சேரர்பெரு மான்வழுதி செம்பியனிம் மூவேந்து
மோருருவாய்த் தான்வர் துதித்தபிரான்—கூரு

மிரணிய கெர்ப்ப சுதாகரனீ ரேழு
தரணியெங்க ளும்புகழ்ந்த யாது—வருள்சேர்

மனந்தழைத்த கோன்குல மாலைமணி மார்ப
னனந்தபத்ம நாபர்பதத் தன்பன்—தினந்தினமும்

ராசாதி ராசர்பணி ராசமார்த் தாண்டனெண்ணார்
தாசாதி தாசரெனத் தாள்பரவத்—தேசாதி

கொண்டநவ கண்டரெலாங் கொற்றக் குடைநிழற்கீழ்க்
கண்டகண்ட மும்பறித்த காகுத்தன்—றிண்டிறல்சேர்

பால ஜெயராம வர்மகுல சேகரபூ
பாலன் மனமகிழ்ந்தன் பாகவே—கோலமணிக்

கண்டிகையும் ரத்னக் கணையாழி யுங்கனக
தண்டிகையுஞ் சாதிகையி தாய்பரமு—மொண்டிமுத்துஞ்

சிந்தூரமும் வாம்பரியுந் திவ்வியவெண் சாமரையுஞ்
சந்திரவட் டக்குடையுந் தாரணியும்—விந்தைதரு

துங்கச் சுடர்வடிவா ளோடன்றும் பரிசையுட
னங்கைக் கணியு மடல்விர—சங்கிலியுந்

தந்தருள வாங்கிமத தந்தியின்மே லேபவனி
வந்தருளுங் கீர்த்தி மனுவேந்தன்—வந்துவந்தே

யிந்திரனுந் தாள்பணியு மீசர்முடி மேலிலங்குஞ்
சந்திரகு லத்துதித்த தாஷ்டீகன்—சந்ததமுஞ்

சங்கு முழங்குந் தமிழ்நா டினிதளித்த
துங்கவி பங்க துரந்தரிகன்—செங்கயலார்

கேதனத்தான் பந்தனதி கேதனத்தா னத்திரையை
மாதனத்தான் போல வழுத்துவோன்—போதனந்தா

னென்றும் பரவிலவை யீசர்மது நாகர்பத
மொன்றுமன நீங்காத வுற்பனத்தான்—வெவ்விபுரி

வீரஜப கோளவர் மெந்த்ரமக ராசன்மன
வார முபர்குமர வர்க்கமெனப்—பார்புகழக்

கோப்புநிக நாற்பதுபேர்க் குங்குறையா தென்றுளும்
வாய்ப்புடனே நல்க வரமருளி—மாப்பொலியுந்

தன்னகத்து ளோமகிழ்ந்து தங்கள் விருதுகளையு
மின்னந் தருமெனவே யீந்திடலாற்—பொன்னின்

முடிபொறுத்த பாண்டியனென்ன முதலோர் போற்றப்
படிவரிசை பெற்றபரந் தாமன்—வடிவழக

னொக்கதுரை மக்கணா டுற்றதுரைத் திரள்கண்
மொய்த்துவர மிக்கதிறன் முக்யமிகு—சுத்தரண

நற்புகழி ராசாக்கள் நாய்க்கமார் கம்பளத்தார்
மற்புயத்து மெத்தமார் வகைபுனை—விற்படைசேர்

சேருவை காரர் திரளுபய ராணுவமு
மாரு நெருங்கி யணிவகுப்ப—வீர

ரளவற்ற பாளையம னேகங்கா லாட்க
டளகர்த்தர் தங்களுடன் சாரத்—தெளிதமிழ்ச்சொல்



கும்பமுனி பூசனைசெய் குற்றால நாதர்பொற்று
ளம்புயத யானமனத் தன்பினன்—செம்பொன்வரைத்

தொண்டைமண்ட லாதிபதி சொன்னாவ லர்க்கனம்பால்
கொண்டலென நல்குங் கொடையினான்—றண்டலையூர்

கோதண்ட ராமனருள் குற்றால நாதமன்னன்
வேதண்ட மன்னபுய மேருமா—னீதியுடன்

பக்கத்தி லேகனக பல்லக்கி லேறிவர
மிக்க சவுந்தரிகன் மேவிவளர்—மைக்கண்மட

மின்னார் மதனரண வீரப்பன் சேனியெனத்
தன்னுமை மோங்குசிவ சங்கரமான்—முன்னுதித்த

வாறுமுக ராய னனித்தொண்டை மானகரா
னேறுங் குதிரைதனி லேவரவே—மீறியுய

ரொட்டகைமீ தேநகரா வும்பலின்வெம் பேரி
கொட்டுகின்ற பல்லியங்கள் கோஷிப்ப—வெட்டிப்

பொருதிடவா வென்றழைத்தல் போற்காளஞ் சின்னம்
விருதுகுழல் கொம்புமிகுந் தார்ப்பக்—கருதி

முனுமப் பரதனமுன் மூழ்காது காக்கு
மனுமப் பதாகையசைந் தாடத்—தொனியுற்றே

கையிசைந்த கேடகமுங் கத்திகச்சை யுஞ்சேர்ந்து
வெய்யகளிற் றின்சகட மேற்கொண்டே—துய்யநிறக்

கட்டாணி முத்தின் கவிகை நிழற்றிவரப்
பட்டாணி மார்கள்சலாம் பண்ணிவர—மட்டிலா

விம்முசல ராசிபடி மேகமெனச் சேனைநடுக்
கைம்முசல வாரணங்கள் கான்மீறப்—பொம்மலாய்ப்

போற்றரச ரோடுபுற மிட்டாரைப் போகவிட்டு
மாற்றலர்பாற் சென்று வயவீர—ரேற்றுமருந்

திட்டபீ ரங்கிடா ரென்றெழுப்பத் தெவ்வருடல்
பட்டுருவிச் சோரி பரந்தோடச்—சுட்டவெடி

மண்டியெழு இன்றபுகை மங்குல்வரை யுந்தரையு
மெண்டிசையு மெங்கு நிரம்பவே—யண்டலா

நேரிட்ட வீரத்தர் நேரொத்து மாளக்கை
வாரிட்ட போருக்குண் மாவுத்த—மார்பட்டு
வீழவுக்ர ராசர்பட்டு வீழமத்த யானைமுட்டி
வீழநிர்த்த வாசிபட்டு வீழவெட்டி—வீழ்களத்தி
லற்றசிர மற்றகர மற்றதுர மற்றசெவி
யற்றகள மற்றகழ லற்றகுட—ரற்றவுடல்
சோரிப்ர வாகஞ் சுழித்துக் கரைபுரண்டு
வாரிப்ர வாகமென வார்ந்தோடு—நீரி
லருவிக் கவந்த மசைந்தபனந் துண்டா
யொருவிக் கவந்தமசைந் தோட—வொருசடிகா
லற்றுவிழு மத்திரருப் பத்திமிதி கொப்பொருநை
பற்றுகளை தொட்டியதம் பாரியென—வுற்றிறைப்பக்
கொக்கினுட லிற்சொரிகு டற்றொடையெ னக்கருதி
யெக்கழுது மொக்கமன மிட்டயர—வக்கடிகை
யொட்டகைமெப் செக்கா யுலக்கை கழுத்தெனவே
தொட்டலகை வட்டமிட்டுச் சூழ்ந்துழப்ப—வட்டவயற்
சாலுழவர் மேழிபிடித் தாற்போல வீரரிரு
காலொரு கால்கூளி கைதூக்கி—யோலிடவே
மண்டு சமர்க்களத்தின் மாமகுட கோடிமன்னர்
தெண்டனிட வீரத் திருமடந்தை—கண்டுவகை
கூரத் திறல்வாகை கொண்டுவரு வச்சிரவித்
தாரக்கட் டாரிபுனை சங்க்ராமன்—பார்புரந்த
கண்டனு கண்டலன்மார்க் கண்ட னுயிர்புரந்தோன்
றெண்டன் பெரிய சுவாமிவேள்—பண்டுகருங்
கல்லுங் கனியுருவாக் கண்டுமுனி சொல்கவெனச்
சொல்லும் பெரிய சுவாமிவேள்—வல்லமைசேர்
சின்னணைஞ்ச ராசேந்த்ரன் சேயெனவே வந்துதித்த
மன்னன் பெரியசு வாமிவே—டுன்னு
மருதூரி னுன்மால வார்குலத்தில் வந்தோன்
விருதாரும் பக்கரைடால் வேந்தன்—திருமேவு



சற்புருடன் காமயனுஞ் சங்கரலிங் கேந்த்ர துரைச்
சொற்புதல்வ ராச துரந்தரிகன்—விற்பனவான்
றங்கநிச ராம சுவாமி யுயிர்த்துணைவன்
சங்கநிதி போலுதவுந் தன்மையான்—வெங்களிற்றுத்
துன்னார் மகுடமுடி சூட்டும் பதாம்புயத்தா
னன்னு வலர்க்குதவு நாகரிகன்—கன்னனிகர்
சங்கரலிங் கத்துரைச கோதரன்மிக் கானகுலோத்
துங்கன் பெரிய சுவாமிவேள்—பொங்குதிறல்
வீரண கெம்பீரன் விக்கிரமார்க் கன்கருணை
வார மிகுந்த மனோகரமால்—சேருமுல்லைத்
தாமம் புனைராம சாமிதனைத் தம்பியெனுஞ்
சோமன் பெரிய சுவாமிவேள்—காமமட
மின்னார்க் கதிமோகன் மேவார்க் கிடியேறு
தன்னுண்மை யேசெலுத்துந் தாட்டிகன்—மன்னவனு
முத்து சுவாமி முகுந்தனுக்கு முன்னுதித்த
சுத்தன் பெரிய சுவாமிவே—ளுத்தமனுஞ்
சங்கரலிங் கேந்த்ரன் றமிழ்பெருகு நன்மருக
துங்கன் பெரிய சுவாமிவே—ளங்கணன்மா
லத்தி யழைக்கமுன மஞ்சலெனு மாலனைய
முத்திரு ளப்ப முகின்மருக—னித்தியமுஞ்
சிந்தைகளி கூர்ந்து சிவனுசெய்த புண்ணியத்தால்
வந்தபெரு மாள்திரும லைப்பெருமாள்—செந்தமிழ்சேர்
மன்னன்முத்து வீருதவு மால்திரும லைப்பெருமாள்
கன்னன்காத் தப்பவிறற் காமனுக்கு—மின்னிலத்தி
னன்மைத் தனமா னயவான் பெருமுதகு
தன்மைச் சுதன்பெரிய சாமிதனை—மன்மதவே
டன்னைநிகர் சின்னணைஞ்சு சங்கரலிங் கேந்திரனைப்
பொன்னை மருவுபுய பூதரனே—யென்ன
மனுநீதி சேர்திரும லைப்பெருமா ளீன்ற
தனுராக வன்பெரிய சாமி—யெனுமுகிலைப்

பூமிதுதி ராமலிங்க பூபாலன் பெற்றெடுத்த
மாமணியா மாணிக்க வாசகத்தைச்—சோமன்
றிருஞான சம்பந்த தீரனிவர் தம்மை
மருக ரெனவழைக்கும் வள்ளல்—தரையைப்
பரியாக வேபுரக்கும் பாண்டியன்முன் செப்புப்
பரியேறி யேநடத்தும் பார்த்தன்—றரும
வரகுணரா மேந்த்ரசின்னத் தம்பிவாண் டாய
திரகுணரா சேந்த்ரசெய தீர—நிருபனையும்
பொன்னாட்டு வேந்தனெனப் பூமண்ட லம்புரக்குந்
தென்னாட்டு ராய திடபுருடன்—சொன்னாட்டுங்
கீர்த்தி நவநீத கிர்ஷ்ணமரு தப்பனையும்
பார்த்திபனுஞ் சேறைப் பதிபுரந்தோன்—சீர்த்திருமான்
சேர்வடம லைத்திருவன் சேவகத்தே வைப்பரவு
காரனைய செம்பொற் கரதலத்தான்—வீரக்
குமர குருபரங்கு மாரன்முத்து சாமி
தமையனன பாயனிந்த்ர தாரு—சமுகனெனுஞ்
சங்கர பாண்டியனையுந் தாரணியி லேபிறியா
தெங்கும் புகழ வினிமையுட—னங்கே
பிணைதருச்சஞ் சீவி யெழின்மேரு வொப்பாந்
துணையெனவே கொண்டருளுத் துங்கன்—பணைநிலமேல்
வெங்கோன்மை யாற்றிமனு விஞ்ஞான நீதிமுறை
செங்கோன்மை செய்யுந் திருநாட்டின்—மங்கையுமை
கோமதிசேர் மெய்சாய்ந்த கோமான் கொலுவிருக்கு
மாமருதூர் முத்துக்கு மாரபட்டர்—பூமருவுங்
கோகநக வாண்முகமுங் கோடிமனம் வாடியவர்
தேக மெலிந்த செயல்கண்டே—ராகமுகில்
பெய்வனபோல் யாழ்விறலி பேருவகை மூரல்கொள
மெய்படியத் தெண்டனிட்டு வீழ்ந்திறைஞ்சி—யய்யரே
தேவரீர் வந்ததென்று செப்புமுமைக் காணுதற்கே
யாவலா கப்போச்சு தல்லவோ—பூவுலகி



லானுறவு தானுறவோ வம்மம்மா நல்லதுபோங்
காணு முமக்குவெகு கன்னெஞ்சோ—வானுதலா
டன்னைமறந் தீரோ சகல சனங்களுட
னென்னை மறந்து மிருந்தீரோ—வன்னையுமை
மைப்பூசுங் கட்கோ மதிபாகர் கொண்டாடுந்
தைப்பூ சமுமறக்கத் தக்கதோ—வெய்ப்பானீ
ரேதுதிரு மேனி யிளைத்தீர் மணம்புரிந்த
மாதுதனை விட்டெங்கே வைகினீ—ரேதுபழி
யஞ்சாத ரூபன்முலை யாலே யடல்பொரமா
தஞ்சாத ரூபமுலை யானாளோ—வெஞ்சாம
லாசுகத்தில் வாழ்ந்தீரோ வஞ்சுகமன் னாளுமத
னாசுகத்தி லஞ்சி யயர்ந்தாளோ—பூசுரரே
கண்டீ ரவமனையீர் காணுந் தலம்பலவுங்
கண்டீ ரவடியரங் காணீரே—கண்டுகமு
கஞ்சனத்தை யொத்தமிடற் றன்னமனை யாளமுதா
மஞ்சனத்தை யும்புசியா னையரே—யஞ்சாமற்
பட்டக சாலையிற்போய்ப் பாருமினிச் சந்த்ரபதி
பட்ட கவலையுடற் பண்பெல்லாம்—பட்டரே
யென்ன விறலி யியம்ப வுடலமொல்கித்
தன்னறி விலச்சை தலைக்கொண்டு—வன்னமலர்க்
காவேரி சூழ்குமரி கண்டமுழு தும்புரக்கச்
சாவேரி பாடும்ரச தாளியே—காவா
விகாரியாய் வந்தோர் விடாய்தீர்த் தருள
முகாரிபா டும்பான் மொழியே—பகாதநிறச்
செந்துவ ராளிதழ்வாய்ச் சேயிழையா ருந்துதிக்கப்
பந்துவ ராளிபயில் பாவையே—வந்துகுளி
ரிங்கிதசா ரங்கி யிசைத்தவனு ராகரசந்
தங்கியகோ லாகலம தங்கியே—யெங்குந்
திறலினாற் றானா திபத்தியஞ்செ லுத்தும்
விறலியெனும் பேர்படைத்த மின்னே—திறலுடன்மெய்ப்

பாடினிதா யோதுமிசைப் பாடினியே யென்னுடைய
பாடினிநான் சற்றே பகரக்கேள்—பாடுமிசைக்
கன்னடையும் பாடுங் கரும்பேநான் சென்றலைந்த
வென்னடையும் பாடு மெளியவன்றே—சொன்னானுஞ்
சொல்லிமுடி யாதியான் சொன்னசெய்தி யந்தனையும்
வல்லிநீ கேட்டாற்ற மாட்டாயோ—சொல்லுங்கா
லுற்றார் மனநெகிழ்வா ரூரார் நகைபுரிவார்
சற்றோநான் பட்ட சளஞ்சொல்லி—முற்றோத
யாதி மறையோ ரருங்குலத்தில் வேட்டதுவு
நீதி தவறாம னின்றதுவும்—போதனையான்
மாமனார் சன்னைசொன்ன வார்த்தைசகி யாதுபுத்தி
சோமனா தையன் வந்து சொன்னதுவு—மாமெனா
னந்தப் படியே யனேகநிதி கொண்டுசென்று
மிந்தப் படிநேர்ந் திளைத்ததுமென்—சிந்தையுற்ற
வாசையினா லெங்கு மலைந்ததுவுந் தென்காசி
வேசைகையிற் பட்டு மெலிந்ததுவும்—வேசையெனும்
பாதகத்தி பொன்னைப் பறித்து விரட்டியதுந்
தோதகத்தி யால்வழக்குத் தோற்றதுவும்—மேதினியி
ளெங்கள் துரைச் செம்புலிரா சேந்திரன்பாற் சென்றதுவும்
பிங்கலன்போ லேவரிசை பெற்றதுவு—மங்கையே
யெள்ளளவுஞ் சங்கையில்லை யென்னாணை யுன்னாணை
யுள்ளசெய்தி நான்வகையா யோதுகிறேன்—துள்ளுகயல்
வாள்வார்மைக் கண்ணிபங்கர் வன்னியப்பர் வாழ்ந்திருக்கு
மாள்வார் குறிச்சியில்வந் தங்கொருநா—ணீள்புனலா
ரத்திரி தீர்த்தமுவந் தாடியரனைப்பணிந்து
நித்தியகன் மம்புரிந்து நிற்கையிலே—நத்துலவு
தென்னம்பூர் வாழுஞ் சிவசயில நாதர்பங்கி
லன்னம் பரமகலி யாணித்தாய்—சன்னிதியில்
வாய்த்த சகத்திரனா மம்புகலும் ராமலிங்க
சாத்ரிபிரா தக்காலை சந்திபண்ணி—யேத்தரிய



தென்கடனை யாடவந்தா ளன்னவய னானாலு
மென்கடனை யாடவருக் கில்லையென்று—பொன்கடனை
வாரிக் கொடுத்துமிந்த மாப்பிளைக்கே பெண்ணைநித்
தாரித்து வாடாடே சாமியெனப்—பூரிக்குள்
ளன்போ டழைத்திடலா லன்பூறி யானுமவர்
பின்போனே னென்னையவர் பிள்ளைபோற்—றன்பாலே
வைத்து வளர்த்தார் வளர்பொழுதி லேமகட்குப்
பத்துவய தான பருவத்தின்—முத்தநகைச்
சந்த்ர பதிக்கு மெனக்குநறுந் தார்சூட்டி
யிந்த்ரபவு சாக விருக்குநாள்—வந்து
கலியாணி யம்மன் கடையத்தூர் தன்னிற்
கலியாண நாலாநாட் காட்சி—மலிவாக
மஞ்சணீ ராட்டியுலா வந்தருளும் வேளையென்மேன்
மஞ்சணீ ரள்ளிநம்பி மாரிறைத்தார்—கஞ்சிகையிற்
பட்டிருந்து தானானும் பார்த்தே னிலையதனைச்
சுட்டிலிங்க மண்ணபட்டன் தாண்டிவிட்டான்—கெட்டியென்று
தன்மனத்தி லேதேதோ தாறுமா றாய்நினைந்து
வன்மம்வைத்து வித்யாச வார்த்தைசொன்னா—ரம்மொழியைக்
கேட்டவுட னானுமவர் கிட்ட வெதிர்த்துநின்று
தாட்டிகமாச் சற்றுஞ் சருக்காமல்—வேட்டிடத்திற்
கேசவனும் பாற்கடலி லேகிடக்கின் றானமு
மீசன்மது ராபுரியி லேயிருந்தா—னாசையினாற்
பெண்கொண்ட வீடு பிரியமாம் யாவருக்குங்
கண்கண்ட தென்மட்டோ காணுங்காற்—பெண்கொண்டார்க்
கன்பே பிரதான மன்றிமற்றெ லாம்பொருளோ
வென்பேரு மூரு மிகழ்ந்துவிட்டு—நின்பானான்
வந்ததையு மிங்கே வளர்ந்ததையு நின்மகளைத்
தந்தையுஞ் சற்றுநினைந் தாயிலையே—நிந்தையதா
யண்ணபட்டன் றன்மொழிகேட் டாகாம்ய மேனுரைத்தா
யெண்ணமற வென்னிடத்தி லென்றவுட—னண்ணுமவர்

வல்ல முருகனைய் மாப்பிள்ளையென் முருகனை
நல்லதென்று தோழனுக்கு நானுரைத்த—வெல்லையவன்
கொஞ்சமதி யாலேபெண் கொண்டிடத்தி னிலிருந்தான்
மிஞ்சவவ மானமின்ன மேல்வருங்காண்—வஞ்சி
பிறந்த மனையைவிரும் பித்திரிவார்க் குண்டோ
சிறந்த தலத்தீர்த்தச் சேவை—யறம்பொருளொன்
றேதினுன் காந்தம்விரைந் தூசிபற்றி னாற்போலப்
போதிலே கோபம் பொருதெழுந்தே—யாது
மதியாதார் முற்றத்தில் வைகலுஞ் சென்று
மிதியாமை கோடிபெறு மென்றே—புதிதாய்
மணம்புரிந்த சந்த்ரபதி மஞ்சமக லாம
லிணங்கி யிருந்ததும்விட் டேனன்—வணங்கி
யருணை சலநினைக்கி லாகுமுத்தி யன்பாத்
தெரிசனை முத்திதிருத் தில்லை—கருவாய்ப்
பிறக்குமுத்தி யாரூர் பிறவா திருகைக்
கிறக்கமுத்தி காசிநக ரென்றே—துறக்கமுத
லாருங்கொண் டாடு மதிகதல நான்பணியச்
சாரும்வகை யாவருக்குஞ் சாற்றுமற்—சீர்பெறவே
துன்று நிதியந் தொகையா லெடுத்துவழி
சென்றுவிட்டேன் விக்கிரம சிங்கபுரத்—தன்றுவந்து
தேவதா யோக்கியஞ்சேர் சித்திரைவி ழாத்திருநாட்
பாவநா சத்தலத்தன் பாகவே—யாவலுடன்
கல்யாண தீர்த்தங் களித்தாடி மாதுலகாள்
கல்யாண லிங்கர் கழல்போற்றி—வில்வலனைஞ்
சின்னனைஞ்ச ராசேந்த்ரன் செய்பெரிய சாமிவைத்த
வன்னசத்ர சாலைக் கணுகினேன்—றென்னன்
பசுங்கிளிபூ பாலன்வர பாலன்பொ யில்லான்
வசம்பெறச்சாப் பாடுபண்ணி வைத்தா—னிசைந்தருந்தித்
தன்னெல்லை காட்டாத சாலிவா டீசர்திருத்
தென்னெல்லை கண்டு தெரிசித்தே—யன்னை



வடிவாளை வேணுவன வானவனைப் போற்றிப்
பிடிவாச்சு தென்றேகும் பிட்டேன்—படிபுகழுஞ்
செந்தூர் களந்தை திகழ்கன்னி யாகுமரி
நந்தூர் சுசீந்தரம னந்தபுரங்—கொந்தூரும்
வற்கரைமிக் கானதிரு வஞ்சைக் களம்பணிந்து
சொற்கரையப் பாடித் துதிசெய்தேன்—நற்கருணைக்
கோகருண மோகாம் புரிபழநிக் கும்பிட்டு
மோகமுறச் சுப்ரமண்ய மும்பணிந்து—நாகூர்
திருச்சிராப் பள்ளிசீ ரங்கமா னைக்கா
திருக்களர்கா ளத்திதிரு வாரூர்—திருக்காஞ்சி
வள்ளிருக்குஞ் சூலர்திரு வண்ணா மலைகாழி
புள்ளிருக்கு வேளூர் புலியூருந்—தெள்ளிருக்குங்
கும்பகோ ணம்புகலூர் கோவூர் விருத்தகிரி
பம்பு மிடைமருதூர் பஞ்சநதம்—நம்பவானி
கூடலா டானைபரங் குன்றுதிருப் பூவணந்தென்
கூடலிரா மேசுரமுங் கும்பிட்டு—நாடிவெகு
தத்தரமாய் ராமீ சரைப்பணிந்து நீராடி
யுத்தர கோசமங்கை யும்பணிந்து—கத்துமொலி
பற்பலமீ ருதநவ பாசாண மும்பணிந்து
தெற்ப சயனந் தெரிசித்துப்—பொற்பாரு
மாறார் சடைமுடிநச் சாடைதவிர்த் தாரேறு
மேறா ரடிகண் டிறைஞ்சினேன்—கூறுங்
கருவா புரிபுன்னைக் காவிரையும் விந்தைத்
திருமூல நாதரையுஞ் சிந்தித்—துரிமைநக
ராண்டவரா மெங்க ளழகியசொக் கற்குமயல்
பூண்டமீ னாட்சிபதம் போற்றியே—நீண்டபுகழ்ச்
செண்பக ராமநல்லூர்த் தேருந் திருநாளுந்
தண்புனலா ருந்தடமுஞ் சன்னிதியும்—வண்பயிலுந்
சோலைகளு நந்தவனச் சூழல்களு மன்னசத்ர
சாலைகளும் யாகம்வளர் சாலைகளு—மேலான

பாடக சாலைகளும் பைந்தொடியார் பந்தடிக்கு
நாடக சாலைகளும் நான்கண்டேன்—றேடிப்

பெரியசுவா மித்துரைதான் பேணியடி போற்றும்
பெரிய சுவாமியெனும் பெம்மா—னிருசரணப்

போதும் பாவினேன் பூரண வல்லியிரு
பாதந் தொழுதேனன் பாகவே—பீதாம்

பராச கோபாலர் பாதம் பணிந்திந்
திராச வாழ்வுசிறந் தெய்தி—யரியும்

விரிஞ்சன்முத லோர்போற்ற வீற்றிருந்த ஞானக்
கரிஞ்சவன நாதரையுங் கண்டேன்—தெரிந்சு

திருக்கமல நாதர்கரும் பார்பொழிசெந் தேனார்
திருக்கமல பாதமுஞ்சிந் தித்தே—புரக்குந்

திருமங்கை நிர்த்தமிடுந் தென்கிளசை காக்க
வருநல்ல மங்கைபதம் வாழ்த்தி—யருள்புரியும்

முத்தயனைக் கும்ப முனிக்குபதே சித்தவத
னத்தயனை யன்பர்தியா னத்தயனைப்—பத்தியா

யின்னிலஞ்சி வாசார்ய னென்றே யெடுத்தியம்புந்
தென்னிலஞ்சி வாழ்குகனைச் சேவித்தே—நன்னகரப்

புண்ணியனை ஞான புராதனனைப் புங்கமெனுங்
கண்ணியனை மேவிதழிக் கண்ணியனை—நண்ணித்

திருக்குறும்ப லாயிரமாஞ் சென்மவிடா யார்வந்
திருக்குறும்ப லாவுறையுஞ் செல்வ—னிருக்குமிட

மெத்திக்குங் கண்டுதெண்ட னிட்டே னினிவீடு
சித்திக்கு மென்று திடந்தேர்ந்தே—னத்தியொடு

செல்லோல மிட்டதெனத் தெள்ளருவி துள்ளிவிழுங்
கல்லோல மிட்டசெண்ப காடவியு—நல்ல

சிவமது கங்கையிலுஞ் சென்றுநீ ராடிக்
கவலைமுற்று மேற்றடா கத்திற்—சிவஞ்செய்

யடுக்களைப்பா றைக்கு ளடுத்தேனக் குள்ள
மடுக்களைக்கண் டுள்ள மகிழ்ந்தேன்—கொடுக்கும்



வரகருணை வாரி வடவருவி யாடி
யரகரவென் றோலமிட்டு ளன்பாக்—கரகமலத்

தங்கமுறை யேதற்ப ணாதிக் குறைமுடித்துச்
சங்கநெடு வீதிவலந் தான்வந்தேன்—செங்கை

சிரசுமுழங் காலையுறத் தெண்டனிட்டுத் தேவ
முரசுமுழங் காலயத்தின் முன்னோர்—பரசுமுறை

யேத்திவலம் வந்துகனிர் தெம்மானைக் குற்றாலக்
கூத்தனையுங் கண்டிறைஞ்சிக் கொண்டுநின்ற—மாத்திரத்திற்

றன்மவா னும்பெரிய சாமிதுரைக் கேயிசைந்த
சென்மநாள் வந்த சிறப்பினாற்—றொன்மைத்

திருப்பாற் கடலுதித்த செங்கதிர்போ லெங்கோன்
விருப்பால் விடையில்வரும் வேளை—யுருப்பான்மைச்

சித்ரசபை வீதியிலே சேவித்தே னங்கவர்கள்
சத்திரத்திற் சம்ப்ரமமாச் சாப்பிட்டேன்—முத்திதரு

மந்தக் கயிலாச மானாலு மற்புதஞ்சே
ரிந்தத் தலம்போ லிருக்குமோ—யெந்தைதல

வாச மிருந்து மறுநாட்டென் காசிக்கே
நேச முடனடக்கும் நேரத்தில்—வாசரிபோற்

காசிவிசு வேசபட்டன் கண்டவுட னேயுரைத்தான்
றூசிவிசு வாசஞ் சனமுண்டா—மாசைகொண்டு

தென்காசிக் கேகிறீர் தேவடியார்க் குள்ளாகிப்
பொன்காசிங் குள்ளதெல்லாம் போகவோ—வென்காதை

சற்றே யுனிக்கேளுஞ் சன்னிதிக்கு நேர்வடபாற்
பொற்றே ரடிக்கப் புறமேல்பா—லுற்றவெழி

னன்னலஞ்சே ரும்விசுவ நாதமா ணிக்கமருள்
கன்னிகையாம் நித்திய கல்யாணி—யென்னுமொரு

மாணிக்க மீன்ற வனிதையதி மோகவல்லி
பாணிக் கமலம் பளபளனு—மாணிப்பொற்

பைந்தொடியாள் வாலைப் பருவத்தே மாதரொடும்
பந்தடிக்கக் கண்டாசைப் பட்டேனு—னந்தவிதி

யென்ன சொலவெறுக்கை யெல்லாம் வெறுக்கையுற்றே
சின்ன மனுடனெனத் தேகநொந்தே—னன்னதன்றி

யின்ன மொருபேச் சியம்பக்கே ளண்ணாவுன்
றன்னைநிக ராம்பாக்ய சம்பன்னன்—கன்னியவள்

போகத்தாற் கிழப் புலியூரி லேயிருந்த
வேகத்தா லோடிவரும் வேளையிலன்—பாகப்

புலிக்குட்டிப் பிள்ளையடி போற்றிக்கா வென்று
சொலிக்குட்டிக் கொள்ளாத தோடம்—பலித்ததோ

சம்பாத்யஞ் செய்யவெகு சாமர்த்தி யங்களுண்டு
சம்பாத் தெருவன்சொந் தக்காணி—சம்பாநெற்

கட்டுக் கிடைநிரம்பக் கட்டுசெல விக்கடையுண்
டெட்டுக் கிடைப்பசுவுண் டென்றைக்கு—மட்டில்லா

விப்பிரருக் குள்ளதிக மேம்பாடு குன்றியே
யொப்பிலாச் செல்வ மொழிந்ததனா—லெப்பொழுதுங்

காசியய்ய னென்றபெயர் கட்டோ டொழிந்துபர
தேசியய்ய னானார் திருநாமந்—தாசியெனு

மின்னமொரு பெண்வேண்டு மென்றுலக நாயகித்தாய்
சன்னிதிநீ ராடித் தவம்புரிந்து—பொன்னிலகு

சொற்கத் தலமிரண்டுஞ் சொம்பொனுநன் னோன்புமுற்றக்
கெற்பக் கிரகங் கிளர்ச்சியுறப்—பொற்பதும

வாயில் திறந்து மதவே ளரண்மனையாங்
கோயில்தனி லுட்பூசை கொண்டருள—மாயவனார்

தாம விருந்தை தனைவிரும்பல் போலவனுங்
காம விருந்தைக் கலந்தளித்து—நேமமுட

னுண்டானாள் கெற்ப மொருநா ளினுக்கொருநாட்
டிண்டாடி யுள்ளந் தியங்கினாள்—செண்டார்

முலைக்கண் கறுப்பு முதிர்ந்தலர வுந்தி
மலர்க்கண்செவ் வாய்வெளுப்ப மாரன்—சிலைக்கிணையாம்

பாங்கின்மொழி வஞ்சியுடற் பச்சைநரம் பெய்திவெகு
காங்கிசையா னாள்பலகா ரங்களிலே—மாங்காய்



பிடியென்றாற் போதும்வெகு ப்ரீதி புளியங்
குடியென்றால் வாயுறிஞ்சிக் கொள்வாள்—நெடியகருக்

கொண்ட வயிறுதிருக் குற்றாலச் சத்திரத்திற்
றண்டளவ மால்பெரிய சாமிதனைக்—கொண்டாடிக்

கூடி யறைந்தமுது கொண்டு சரசகவி
பாடுமறை யோர்வயிற்றுப் பாகியே—நீடியதோர்

மாதமும்பத் தாகி வயிறுளைந்து மாதரசி
வேதனையாய்க் கண்குழிந்து மெய்சோர்ந்து—சோதிதிக

ழாணிக் கனகம்போ லாரமுதம் போலனங்கன்
மாணிக்கம் வைத்த மகுடம்போற்—காணிக்கை

கண்ணா ரமுதம்போற் கட்டழகெல் லாந்திரண்ட
பெண்ணா ரமுதினையே பெற்றவுடன்—பெண்ணென்றே

சொன்னா ரதுகேட்டுத் துண்ணென் றெழுந்திருந்து
கன்னா ரமிர்தாக் களிகூர்ந்தாண்—முன்னாக

வேந்திழையார் கையா லெடுத்துப் புனலாட்டிப்
பூந்துகிலா லீரம் புலர்த்திநல்க—வாய்ந்தனைதான்

சூத்திரவித் தைத்தொழிலுங் கோளுங் கொடுமையும்பொய்ச்
சத்தியமும் வாதுபுரி சற்பனையு—மெத்துமிந்த்ர

சாலவித்தை யுங்கபடுஞ் சாதனையுஞ் செய்மாய
மாலவித்தை யுங்களவும் வஞ்சனையும்—பாலுடனே

சேரப்பொய் யும்புரட்டுஞ் சேனையா கப்புகட்டிப்
பாரத் தடமுலையின் பாலூட்டிப்—பேரிட்டா

ளின்பரச வல்லியென்றே யெண்டிசையோர் கொண்டாடப்
பொன்பரச வந்துதித்த பூங்கொடிக்கே—யன்புடனே

தப்பிவிட்டோ டாதினோர் தங்கள்சிந்தை தட்டழிய
வொப்புவித்தாற் போலமகட் கொப்புவித்தா—ளொப்பில்புகழ்

நாட்டுவாய் மாலாயி னாரைக் குரங்காட்ட
லாட்டுவா யென்றுதொட்டி லாட்டினாள்—பேட்டனமே

யாரா ருனைத்துதியா ராரா ருனைப்பணியா
ராரா ருனக்குநிகா ராராரோ—பேராசை

தாரா தலாரார் தஞ்சமென வந்தணுகா
தாராரோ வென்றேதா லாட்டினாள்—பேராட்டி.

மார னரண்மனைக்கு வச்சிரம ணிக்கதவாத்
தோரணிவா சற்கிடுகி லாத்தியதாய்த்—தோரணங்கள்

தூக்கு மாசிலையாத் தோகைதனக் கேமானங்
காக்கு மரைமூடி கட்டினாள்—தேக்கமலச்

செங்கைகொட்டிக் காட்டியமு தேவருக வென்றெடுத்துக்
கங்கைநீ ராட்டியா கம்புலர்த்திச்—செங்கிரண

பந்திநிலா வீசு பவளவளைக் கையினா
லந்திநிலாக் காட்டி யருமையிட்டுப்—பைந்தொடிக்கை

யேந்தி மடிமீ திருத்தியநா ளிற்றவழ்ந்து
போந்துமனை முன்றிற் புறஞ்சென்று—வாய்ந்த

தளரு நடைப்பருவந் தள்ளிவய தேழாய்
வளரும் பிறைபோல் வளர்ந்தாள்—வளர்கையிலே

சிக்கவளை யுண்டேகெர்ச் சிக்கவளை கொண்டவனுஞ்
சிக்கவளை யென்றிட்டாள் செங்கைவளை—யிக்கருத்துஞ்

சஞ்சரிகக் கண்ணார் சரிசரியே சாமன்மிக்காச்
சஞ்சரியென் றேகைச் சரிபுனைந்தாள்—வஞ்சிதனைக்

கண்டசரம் போலே கருத்தா டவர்க்கொடுக்கக்
கண்டசரந் தன்னைக் கழுத்தணிந்தாள்—மண்டுபுகழ்

கட்டுவடம் பேர்புகல்வள் கவ்வையில்லை யென்றிசைத்துக்
கட்டு வடமெடுத்துக் கட்டினாள்—மட்டுலவு

நீல மலரி னிழல்பத்தி பாய்வனபோ
லால விழிக்கஞ் சனமிட்டா—ணூல்கோத்

திழையணியும் வல்லி யெழிற்கிளைஞ ருள்ளங்
குழையவென விட்டாள் குழையை—யிழையாம

லந்தி பகனுன் னரண்மனைக்கு வாரார்மேல்
வந்திபுரி யென்றேகை வந்தியிட்டாள்—முந்துவன

வாகன மாலையுநீ மாலாக வேண்டுமென்றே
மோகன மாலை முலைக்கணிந்தாள்—வேகமொடு



கொண்டைபிடித் தாடவர்கள் கூட்டமிட்டுன் ணாலேவி
தண்டையிட வென்றேபொற் றண்டையிட்டாள்-தெண்டிரையி

லாலமிடற் றான்மயங்க வன்றுவந்த மோகினிபோற்
சாலமிடென் றேபாத சாலமிட்டாள்—சால

வகமகிழச் செய்பாதத் தம்முறைதப் பாமல்
வெகுசாரி நாட்டியஞ்செய் வித்தாண்—மகிழ்வாத்

தருக்கனகாம் போதிகாந் தாரி நவரோ
செருக்கலகாம் போதிமல ரென்ன—விருப்பமுறுஞ்

சங்கீதத் தோடுமிந்துத் தானி தெலுங்குமுதன்
மங்காத பாஷை வருத்தியே—பொங்குபுகழ்த்

தானத்தார் கோயிற் றலத்தார் வரிசையிட
மோனத்தாற் கண்டுமிக மோகிக்க—கானத்தார்

கல்யாண மண்டபத்திற் கன்னிமுதற் கங்கைவரை
யெல்லாரு மெச்சவரங் கேற்றினாண்—மெல்லப்

பருவ வயதுபதி னொன்றுபனி ரண்டாத்
திருவனையாண் மன்மதநூ றேர்ந்தா—ளரகரா

வையகமெல் லாம்பதைத்து வாடத் தளதளத்துத்
தொய்யுமிடை யுஞ்சினத்துத் துண்ணென்று—செய்ய

சுணங்கு பரந்து துதைந்துகறுஞ் சாந்த
மணங்குபீ ரென்றுகமழ் வாடை—யிணங்கிச்

சிமிழாய்க் குரும்பையாய்ச் செப்பாய்த் திரண்ட
குமிழாய் முலையங் குரித்தே—யமிழா

தடிகனத்துப் பந்தினையொப் பாகவட்ட மிட்டே
தடித்தெழும்பத் தன்னையறிந் தாள்வேண்—முடிக்கிசைந்த

விந்தைத் தனங்கள்வளர்ந் தேறவே முன்னிருந்த
வந்தத் தனங்களையுள் ளாக்கினாள்—இந்துமதத்

தண்களபக் கும்பமிசை சார்முகப டாம்போல
வண்களபக் கும்பமிசை வாரணிந்து—கண்களுக்கு

மையிட்டுச் செம்பொன் வலைகளுட னேகடகங்
கையிட்டுக் காரை கழுத்திலிட்டு—மெய்யிட்டுக்

கூந்தல் வகுப்பெடுத்துக் கோதி முடித்ததிலே
பூந்தொடையல் சூட்டி நுதற் பொட்டிட்டு—வாய்ந்தமணி

மூக்குத்தி யிட்டு முறைமுறையே மேன்முருகு
தூக்கிட்ட காது துவண்டசையத்—தாக்குமக

னென்னோலை யென்ன வெழுதிவிலைப் பட்டகுழைப்
பொன்னோலை யிட்டுப் புதுமுத்து—வன்னமணிச்

சேலைகட்டி மாரன் செருவிலவன் பேரியென
வோலமிடுஞ் செஞ்சிலம்பை யும்புனைந்து—காலுக்குப்

பாடகந் தண்டை சதங்கைப் பணியணிந்து
வேடகமென் சிற்றிடைக்கு மேலாக—வாடவரில்

வல்லா ரெவரும் வசமாக மோகநகை
யெல்லாம் புனையுமுறை யிற்புனைந்து—மெல்லமகள்

விற்பத்தி யுங்கடைக்கண் வெட்டொருட் டும்பார்த்தே
தற்புத்தி சொல்லத் தொடங்கினாள்—பற்பகலும்

வாடப் படாத மருக்கொழுந்தே மாங்குயிலே
தேடக் கிடையாத் திரவியமே—சோடற்ற

பெண்ணே யமுதப் பெருக்காறே யென்னிரண்டு
கண்ணேயென் கண்ணுட் கருமணியே—நண்ணமுத

சஞ்சீவி காமரச தாளிச் செழுங்கரும்பே
வஞ்சியே யின்பரச வல்லியே—யெஞ்சாது

மாலை தனிலுமணை மஞ்சனங்கொண் டாடியிழைச்
சேலை யுடுத்துத் திருநீறு—பாலமிட்டுக்

கோதிக் குழல்வகிர்ந்து குப்பிதொங்கல் வைத்துமுடி
காதிற் குழையிணைமிக் காகவணி—பாதிமதி

மத்தகத்திற் சுட்டி வனைந்தா டவரையெல்லா
மெத்த வசிகரப்பொட் டிட்டுக்கொ—ளித்தரையோர்

போற்று நெடுங்கோ புரவாசற் றென்றலிளங்
காற்றி லுலாவிநகை காட்டியே—நாற்றிசையும்

பார்த்துக் கவிழ்ந்துவெகு பாசாங்கு செய்யில்வந்தோர்
வேர்த்து மிகமருள வேண்டாவோ—நீர்த்தயங்கு



குஞ்சத் திருமயிலே கண்ணினுக்கு மையெழுது
மஞ்சட் குளியை மறவாதே—யஞ்சுகமே

வாடைப் பொடிபூசி மாலைநே ரத்திலனப்
பேடைக் கிணையாப் பெயர்ந்துலவிச்—சாடைகளாய்ப்

புள்ளிகண்டு நீதெருவிற் போய்நின்று கையிலணி
வெள்ளி வளைதிருத்தி மெய்நாணி—விள்ளரிய

துட்டத் தனமதனைத் தொண்டுசெய்ய மூரலிடு
வட்டத் தனமதனை வார்நீக்கு—திட்டமுடன்

பல்லா ரறியப் பறையறைந்து நாட்கேட்டுக்
கல்யாணஞ் செய்தமனை காத்திருக்கும்—பொல்லாத

வம்புக்கா ரர்க்குண் மருளாதே யாங்கவர்கள்
செம்புக்கா சொன்றுஞ் செலவிடார்—பைம்புனலின்

மீனேறிப் பாய்ந்து வெடிதாவுந் தன்மையது
தானே வருமதற்குச் சாதிமுறை—மானனையா

ரேலவே யன்னக் கினுக்கார் பயிற்றுவித்தார்
பாலுடனே நீரைப் பகுத்துண்ணுஞ்—சீலமே

யாதலா னீயே யதிதபுத்திக் காரியுனக்
கோதவேண் டாமெனினு மோதுகின்றேன்—மேதினிபின்

மூப்பிளமை யென்று முறைபார்க்கின் மோசமந்தக்
கோப்புநம்மா லேநடந்து கூடாது—மாப்பிளைமார்

தாசிவீ திக்குள்வரத் தக்கமுறை நீயதனுள்
மாசிவீ திக்குண்மெள்ள வந்துநின்று—கூசாமற்

பூவரையா தோடிவிழும் போர்வண் டினம்போல
யாவரையுங் கண்மருட்டுள் ளாக்கிவிடு—பூவி

லருமையும் பாரா ரவமதிப்புங் கொள்ளார்
கருமமே கண்ணாயி னாரென்—றொருநாலை

முன்னோ ருரைத்த முதுமொழியும் பொய்யலவே
யுன்னோடொத் தாரைக்கே ளொண்ணுதலே—முன்னாளிற்

பொன்னனையா ளென்றபெயர் பொன்னாலப் பொன்னாலே
முன்னவனும் வந்துதிரு முன்னின்றான்—பொன்னதிநந்

தேடியே யம்பொற் சிலம்பியென்று பேர்படைத்தா
ணீடியபூங் கோதாய் நிகழ்த்தக்கேள்—பாடிவைத்த

நந்திக் கலம்பகத்தி னற்கவியொன் றிற்பாதி
சிந்தித்து நங்குலத்துச் சேயிழையை—வந்துழையோ

ராணையவ தாரமினி யைஞ்ஞூறு பொன்கொண்டேன்
வீணைமொழி யாண்முழுது மேபுகன்று—நாணயமா

யாயிரம்பொ னீந்துவிட்டா னந்நாளைத்தேட்டுண்
டாயிருந்தல் லோபேருண் டாக்கினாள்—தூய

குறுங்கைநீ ளாதே கொழுங்கூறை யின்றி
வெறுங்கை முழமிடுமோ மின்னே—நறுங்கமலச்

செல்வியே காற்றுளபோ தேதூற்ற வேணுமன்றிப்
பல்விழுந்தா னம்மைமுகம் பார்ப்பதார்—மெல்லியலே

வந்து பணங்கனமாய் வாரி யிறைப்பவர்க்குச்
சந்ததியை நீக்கித் தனங்காட்டு—வந்தபொழு

துண்ட துறுதி யுலவிநின்ற நீரினுக்குக்
கண்டதுவே ளாண்மையெனிற் காரியமோ—பண்டைமொழி

யில்லாரை யெல்லாரு மெள்ளுவரே செல்வர்களை
யெல்லாருஞ் செய்வர்சிறப் பென்றுரைத்தல்—பொல்லாதோ

வேசைபிழைப் பென்பதெல்லா மின்வெட்டி லேபணம்பார்த்
தாசு களைந்ததுபோ லல்லவோ—தேசுலவு

மையோ தியும்வெளுத்து வட்டநகி லஞ்சரிந்தா
லையோபின் வேசைபிழைப் பற்றதே—தையலே

பொய்சொல் வதுநமக்குப் பொன்னே குலவிருது
மெய்சொல்லிக் கெட்டார் வெகுபேர்கள்—பொய்யதனைச்

சற்றுங்கூ றுமலரிச் சந்திரன்முன் பட்டதின்ன
முற்றுங் கதையாய் முடிந்ததே—புற்றுக்கேள்

வாய்வீண ரூர்க்கொருவர் வம்பருண்டு மேவிவிடு
பாய்வேணு மென்றுபொருட் பாராதே—தோயவந்தாற்

கம்ப மதமுலையாய் கைநட்ட மென்னவொரு
செம்புதண் ணீர்மாத் திரஞ்செலவு—சம்போகந்



காட்டவறி வேனென்பார் கள்ளப் பிளுக்கர்கையை
நீட்டுகுறி சொல்லுகிறே னில்லென்பார்—வேட்டினிதாய்க்

கோதிச் சொருக்கிடுமுன் கூந்தற் கிசைந்தசுகந்
தாதித் தொடைவாங்கித் தாரமென்பார்—பாதிப்

பிழவுக் குலைகீறிப் பேசிமடிப் பாருன்
னழகுக்கு வாஞ்சித் தலைவார்—குழைவாயுன்

காலைப் பிடித்தாலுங் கண்ணே யிணங்காதே
மாலைப் பணமன்றி மாதரசே—ஞாலத்தில்

வைப்பிருக்குஞ் செம்பொன் வழங்கிடினும் வாலிபத்தில்
வைப்பிருக்க வேசம் மதியாதே—யெப்பொழுதும்

கச்சிருக்கும் பூண்முலையாய் கச்சக்காய் விற்றபணங்
கச்சிருக்கு மென்று கழியாதே—வைச்சிருக்கு

மூக்கறையர் கூனர் முடவர் குருடரொரு
வாக்கறையிற் சும்மா மருவிவிடு—மூக்கறையன்

றந்த பணங்களிலே தாகிலுமுண் டோகுறைகை
வந்தபண மேயுனக்கு மாப்பிள்ளை—சிந்தையில்லை

நூற்றுமே லூற்று தவலா யிரமாகி
லாற்றுவரத் தென்ப தறியாயோ—வேற்றொருவர்க்

காவலாய் நீமருண்டா யானக்கா லுன்னையொத்த
தேவடியா ரெல்லாஞ் சிரியாரோ—மேவழகிற்

சீவகனே யானாலுஞ் செம்பொனின்றி வந்தேது
பாவகஞ்செய் தாலுமுகம் பாராதே—பூவையே

தாய்தந்தைக் கீழ்ச்சிறுவர் தம்மை மறையவந்து
தோயென்று தோயுஞ் சுகங்காட்டி—வாயில்

வடிவு நகக்குறியும் வையா தணையுட்
படுவ ருனதுவலைப் பட்டாற்—றடுமாறி

யெங்கிமுதற் போச்சென் றிகழுமுன்னே பூசிகுழல்
வாங்குவது போற்பொருளை வாங்கிவிடு—பாங்காக்

கவிராய மார்கற் பனையாய் முடிப்பார்
கவிராய வாய்மயிலே கண்டா—பவர்கள்வந்தாற்

கைப்பணத்துக் காசைகொள்ளார் காமபூ சைக்குணது
பைப்பணத்தா லாசைப் படுவார்க—ளொப்பிவிடு

தம்பிவரு வான்முன் றமையன்பின் னேவருவா
னம்பிவரு வானவன்ற னற்புதல்வன்—வம்பியென்று

சொல்லா தவரவரைத் தோய்ந்தனுப்பா யாண்பிளைக
ளெல்லாரு மாப்பிளைகா ரிந்தக்காற்—சொல்லரிய

நம்பிமார் பட்சமெனி னல்லெண்ணெ யுஞ்சோறும்
வம்பில் வலிய வரவிடுவார்—நம்பிமார்

சந்தி முடித்திடவந் தாற்போல் வருவர்வந்தால்
முந்திமுடித் தங்கே முயங்கிவிடா—யந்தப்

பரிசா ரகனுங்குப் பய்யனயக் காரன்
பரிசாரஞ் செய்வலியப் பேசு—விரைவாக

வாற்றங் கரைமேலுன் ஞசாம்பு காணில்மறு
மாற்றங்கள் சோறு வடைதோசை—யேற்ற

பரமானம் பாற்கஞ்சி பண்யாரங் கொண்டு
வருவா னவன்போல்வா யாது—தருவதிலே

செய்கா ரியக்காரன் சிபண்டா ரக்கணக்கன்
கைதான் பிடித்தாற் கடவாதே—கைபிடித்த

நட்டுவனு நும்மருண்டா னல்லதென்று புல்லிவிடு
கொட்டுவனு னைப்பகைத்துக் கொள்ளாதே—துட்டனவன்

றங்காணி யென்று தலைகாணி யாய்க்கிடப்பான்
கங்கா ளியையுங் கலந்துவிடு—பங்காளர்

சோழியர்கைப் பொன்னமக்குச் சொந்தமதின் மிக்கதிரு
வீழியர்வந் தாலோ வெகுவாய்ப்பு—பாழறுவார்

பொன்னென்று பொன்னைப் பொருட்பாரா ராறுலு
மென்னென்று சென்ம மெடுத்தாரோ—மின்னே

யசைமா நிலம்பயிர்கொண் டாட்டுவ தல்லாம
லுசையாய்வே ளாண்மைவே றுண்டோ—பிரவியந்தா

னத்தமொக்க மென்னின்மனைக் காகாதா ளாகிலுமவ்
வுத்தரத்தைப் பேசா துடனேபோய்த்—தத்தரமாய்க்



குப்பாவி சேகரீர் கொண்டாடிக் கூசாமற்
சம்பா ஷணைசெய் தனுப்பிவிடு—கொம்பனையாய்

சப்ரமஞ்ச மீதொருவன் சார்ந்துமகி ழும்வேளை
யப்பொழுது மற்றொருவ னஞ்சாறு—கைப்பொருள்க

டந்தா லுடனுனக்குச் சன்னைசெய்வேன் செப்பினொடு
பந்தாடு தந்திரமொப் பாகவே—வந்தணைந்து

பையவே கொல்லையிற்போய்ப் பாதசுத்தி பண்ணிவருஞ்
செய்கைபோ லேயவன்பாற் சேர்ந்தணைநீ—பொய்நமது

சாதிக்குத் தக்கமுறை சாதியென்றே யுற்பனமாய்ப்
போதிக்கும் புத்தியெல்லாம் போதித்தா—ளாதிமுத

லன்னை மொழிந்தபுத்தி யன்றியுப தேசகுரு
வென்ன வுளவோ வெனுந்தகைமை—மன்னியதாற்

சீரியதாய் புத்தி சிறுமின் மினியாய்த்தான்
சூரியகாந் தம்போற் றுலங்கினு—டாருலவி

மட்டுப் படாமென் மலர்க்குழலா ளாசையொரு
மட்டுப் படாமன் மருள்வோருங்—கட்டழகி

யாடவரும் வேளையிதென் றத்தலத்தைப் பார்த்தயரு
மாடவரும் வேளை யழைப்பாருஞ்—சூடகமோ

வேட்டாண் டிருந்தபங்கு வீடுவிற்று மாடுவிற்று
மோட்டாண்டி யாய்க்கெட் டுழல்வாரு—நாட்டமுட

னாற்றங் கமழ்குழலா ளுரலாநீ ராடவரு
மாற்றங் கரைகாத் தலைவாருஞ்—சாற்றும்

வசந்தன்றேப் பிற்றிருநாண் மண்டபத்தில் வஞ்சி
யிசைந்து நடம்புரியு மெல்லை—யசைந்து

புயலார் குழலியரு போகப்பேய் கொண்டு
பயலாளாய்ச் சோருசுபப் பாரு—மயலாகிச்

சொந்தமென நானங்கே தோய்ந்திருக்கும் வேளையினீ
வந்ததே னென்று மடிபிடித்துச்—சந்தியினிற்

கெண்டையிட்ட கண்ணிதன்னாற் கெட்டொருவ ருக்கொருவர்
சண்டையிட்டு மண்டை தகர்வாரு—மண்டர்பிரான்

சன்னிதியி லாள்விலகுந் தன்மைபோற் சந்தடியின்
மின்னனையாண் மேலுரசி வீழ்வோரு—முன்னடப்பங்

கட்டவோ மேல்பிடித்துக் கால்பிடித்துக் கட்டின்மெத்தை
தட்டவோ கைலாகு தான்றரவோ—கிட்டவந்துன்

பாதத் துகள்பஞ் சணைமேற் படாதெனது
சீததுகி லாற்றுடைக்கச் செய்யவோ—யேதுசெய

வென்றே யவளுக் கிதங்கூறி யேந்திழைபின்
சென்றே மயங்கித் திரிவோரு—மன்றல்கமழ்

செவ்வாம் பலங்கொடுக்குஞ் செவ்வதர பானமன்றோ
செவ்வாம் பலங்கொடுக்குந் தீர்த்தமெனச்—செவ்வே

குளித்தபுன லுள்ளினுக்குங் கொண்டுதலை மேலுந்
தெளித்து மகிழ்ந்துதிரி வோருங்—களித்துவெகு

சந்தடியில் வஞ்சி தனபார மஞ்சடம்மேல்
வந்திழுகிக் கொண்டு மகிழ்வோரு—மந்திபகற்

பார்த்தகண் ணும் பூத்துமடப் பாவைதிரு வாசலிற்போய்க்
காத்துக் கிடந்து கரைவோரு—மார்த்தமுடன்

சிங்கார லீலை செயுமமளி கேட்டிறப்பி
லங்காந்து பார்த்தங் கயர்வாரு—மங்காத

குன்று முலைகுணமாக் கூறினு லும்பயலா
ளென்றாலும் போதுநமக் கென்பாரு—நின்றோர்க

ளன்மேன் மிகுந்தபட்ச மென்றைக்கு மேந்திழைக்கே
யுன்மேலு மப்படியோ வென்பாரு—நன்மயிலே

தேவர்முத லோர்க்குச் செலவழித்தோ மோகடவுள்
கோவிலுக்கே தேனுங் கொடுத்தோமோ—பாவலவர்

செந்தமிழாற் கீர்த்திச் செயத்தம்ப நாட்டவென்றே
சொந்தமுதல் வாரிச் சொரிந்தோமோ—வந்திபகல்

வீட்டிமைவ லூட்டிசெயு மேட்டிவெகு கோட்டிபலால்
வீட்டின்மனை யாட்டிதனை வேட்டுநகை—பூட்டியந்தக்

கண்காட்சி பார்த்துக் களித்தோமோ வீணிலிந்தப்
பெண்காத லான்முழுப்பேய் கொண்டோமே—பெண்களிலே



மாவடிவின் மிக்கான மங்கையரிற் றென்காசித்
தேவடியா ராசை தெவிட்டாது—பூவுலகி

லென்று வெகுவெகுபே ரின்னமீ டேறும
னின்றுருகும் வேளையிலே நீரங்கே—சென்றுவிடின்

மோசம்வருங் காணவள்பான் மோகம்வருமென் றுவிசு
வேசபட்டன் சொன்னபுத்தி வேதனையாத்—தாசிபிழை

யித்தனையெல் லாநீயிங் காரைப்பார்த் தோதவந்தாய்
சித்தப் பிரமையோ செப்புகிறாய்—மெத்தவுமே

கம்பொழிய நின்றமழைக் காலிருட்டா லுமந்தி
கொம்பிழந்து பாயுங் குணமுண்டோ—வம்பே

புலிபசித்த தானாலும் புல்லையருந் தாது
கலியுகத்தி லேயிதுகண் கண்டாய்—நலிவாக

வென்னத்தைச் சொல்லவந்தா யேழையென் றெட்டியவன்
கன்னத் தறையக் கருத்தாகி—யுன்னிவிட்டே

னப்பாலுன் சம்மதியென் றப்புறஞ்சென் றானுடனே
சுப்பாவ தானிவந்து தோன்றினான்—விப்பிரரே

மாசித் திருநாள் வருதிருச்செந் தூரினுந்தென்
காசித் திருநாளின் கண்காட்சி—நேசித்துப்

பார்க்கப் பதினா யிரம்பார்வை வேணுமென்று
னேற்க மனதுக் கிசைந்ததினா—லூர்க்கணுக

நன்மார்க்க மோதுமென்றே னன்னகரப் பாதையென்று
னென்மார்க்கத் துக்கதா மென்றுரைத்தேன்—பின்மார்க்க

மேலகர மென்றான் விரைந்துநடந் தேனானைப்
பாலங் கடந்தேயப் பானடந்தேன்—மேலுலகை

யெட்டிப்பார்க் குந்துவி யேற்குமுலை யென்றுபெண்க
ளொட்டிப்பார்க் குஞ்சிகர மோங்கியமேற்—றட்டுயருங்

கோபுர வாயில்கண்டு கும்பிட்டே னப்பொழுதின்
மாபுனித மாக வளர்ந்தோங்கிச்—சோபிதனுசா

வெள்ளி மலையே விளங்கியசெம் மேகமும்பா
சொள்ளியமே காரமுங்கொண் டேர்வனபோல்—வெள்ளியுரு

வாதி மழவிடைமே லண்ண லகிலேசர்
வீதி யுலாவிவந்து மிக்கான—சோதிமணி

மண்டபத்தி லெம்மா னுமாது மினிதிருக்கக்
கண்டுதெரி சித்துநிற்குங் காலையிலே—யொண்டொடிதான்

மிக்கபணி லங்கண்டு மேவும் வலம்புரிபோற்
றக்க கணநடுவிற் சந்திரனு—மொக்குமென

வன்ன மனையமின்னா ரககவளைச் சூழ்ந்துநிற்ப
வன்ன மடமயில்போன் மங்கைநல்லா—ணன்னயமாய்த்

தித்திபொடு தைத்தாளஞ் சீர்மத் தளம்பலகை
யொத்தமுக வீணை யுறுகெர்ச—மொத்திசைப்பப்

புட்பாஞ் சலிசெய்தாள் பூவைபிள்ளை யார்கவித்வ
நட்பா மிழையநாயி ஞர்கவித்வங்—கட்பார்வை

தோவாரி கைவீச லாது தொடும்பவுரி
தாவாத செக்கனிசுத் தாங்கங்க—வாவாத

பின்னந்தம் பின்னெடுப்பு பின்வீச் சபிநயங்கண்
முன்னந்த மெல்லா முறைபயின்று—நன்னயமாந்

சங்கீத ராகமிசைத் தாடினா ளப்போதே
யங்கீ கரிக்கமன தாகியே—யிங்கிவள்பாற்

கூட்டுவிக்க வேணுமென்றே கோபுர வாசற்காளி
யூட்டினுக்கு நேர்ந்தே னெருமுடிப்பை—பேட்டனமுங்

கோவிற்கா லங்கூடிக் கோலமயில் போலொயிலாய்
மாவித்தா ரம்பொருந்து மாமனைக்கே—மேவத்தான்

செஞ்சிலம்பு கொஞ்சசாஞ்சி தம்பிறந்தி லங்கநின்ற
வஞ்சிகொஞ்சி மிஞ்சி வழிக்கொண்டே—பஞ்சமென

வந்துவிட்டாள் கண்ட கமகிழ்ச்சியினா லேயுனக்குச்
சொந்தமினி யென்றுசலாந் சொல்லியே—முந்துங்

கருக்கறிவை யேபாத காணிக்கை வைத்தேன்
திருக்கருபென் றேகியா னித்தேன்—பெருக்கவே

ராசைக் குதிரைமே லானேனகைத் தாப்பிணிடை
வீசித் துடிக்குமன வீதிவிட்டேன்—வீசிவரும்



வாலிபத்தை நீங்காத வாறுபோ லேதொடர்ந்தேன்
வாலிபத்தை நீங்காத மான்பிறகே—நூலிடையுஞ்

சென்றாண் மனையுட் டெருவா சலிலுலவி
நின்றேன் மனமருண்டு நிற்கையிலே—நின்றநிலை

கொண்டுதிரி கைக்கே குடுமியகப் பட்டதுபோன்
மண்டுசுழு குத்தி வசமாகி—விண்டுரையா

தொற்றைக்கா லோடே யொதுங்கிநிற்பா னேனெனவே
கற்றைக் குழலி கதவோடே—நற்றயவா

யோதினே னங்கவட னுத்தார மில்லையென்றே..
வேதோ மரம்போ விருந்ததன்றி—யேதேனும்

பேசவில்லை யென்றேநான் பேசுமொழி கேட்டறிந்தோ
வாசலிலே யங்கொருத்தி வந்துநின்று—பூசுரரே

யெந்தவூ ருங்களூ ரேதுமது நாமமிங்கே
வந்ததே தென்றுகனி வாய்திறந்தாள்—பைந்தொடியே

நாறுங் கமலவிதி நன்முகத்தி லுற்பவித்துக்
கூறுங் கவுண்டினிய கோத்திரத்தி—லேறுயர்த்தோன்

வேதாதி யிற்சாம வேதபா ராயணரிற்
போதாய சூத்திர பூசுரரின்—மீதாகு

மிக்க புடைமருதூர் மேலமா டத்தெருவிற்
சொக்கநா தையனெங்க டோப்பனு—ரிக்கின்சொற்

சோமாதி. தீட்சணருள் சுப்ரமண்ய சாத்திரியென்
மாமனுர் முத்துக்கு மாரையனு—னேமப்

பெரிய குடியிற் பிறந்தேன்முன் னோர்செய்
யரிய தவமகிமை யா[illegible]ளைவேய்

வன்ன கலாப மயில்போலப் பொன்வடிவாள்
சன்னிதியி லாடிவந்த தையறனே—யின்னிலத்தி

லாரோ வறியே னவள்பேரின் னுளெனவே
நீரோத வெணுமென நின்றுகொண்டேன்—சீராரு

மங்கையே ரின்பரச வல்லியென்றார் நானுடனே
யிங்கிவட்குத் தான்பனைய மென்னவென்றே—னங்கயற்கண்

மாதுக் கிசைந்த வரிசைப் பணையமொரு
போதுக் கிருநூறு பொன்னென்று—டாதிமார்
தங்களுக்கும் வேறு தனித்தனியே யைம்பதுபொ
னிங்கெனக்கு மப்படித்தா னேயென்று—ளங்குடனே
யள்ளிக் கொடுத்தே னவள்போன பின்புசிலர்
துள்ளிக்கொண் டோடிவந்தே தாதிமார்—வள்ளலே
தேவடியார் தங்க டெருவினிற்பா னேன்விதியோ
சாவடியில் வந்துதகை யாறுமென்றே—பூவையரும்
போனார் சருகசையப் போகா தசையிலந்த
மானா ளெனவே மனமகிழ்ந்து—நானேபோ
யெட்டியெட்டிப் பார்த்தே யிடைமண்ணுந் தொண்டாக்கித்
தட்டழிந்து நிற்குந் தறுவாயிற்—கட்டழகி
கூர்த்துப்பார்த் துள்ளங் கொதித்துமட மான்வரவு
பார்த்துப்பார்த் தாவி பதைக்கையிலே—கீர்த்திசொல்லுஞ்
சல்லாப மோகினிவந் தாளவளைப் பார்த்திழைபாய்ச்
சல்லாவு மோதிரமுந் தான்கொடுத்தே—னுல்லாசத்
தங்கமுத்து மாலையென்றோர் தாதிவந்து கைகுவித்தா
டங்கமுத்து மாலை தனைக்கொடுத்தே—னங்கி
முலையானை காட்டிவெகு மோசமிட வந்தாண்
மலையாம னின்றுசமா ளித்தேன்—மெலவந்து
குப்பியென்றோர் கோதை குறுநகைகொண் டஞ்சலித்துச்
செப்பினீர் சற்றே திறந்துவிட்டா—டப்பிவரப்
பட்டபா டந்தப் பரம சிவனறிவான்
மட்டுலாங் கோதை வளவுக்கே—தட்டழிந்து
நின்ற நிலையு நினைவுகெடு நெட்டுயிர்ப்புங்
குன்றமுலை யார்முரல் கோட்டியே—நன்றாகக்
கண்டார் கருத்தைநிதிக் கப்பல்வந்து சேர்ந்ததென்று
கொண்டாடிக்கண்சிமிட்டிக்கொண் டெனக்கே—யொண்டொடியார்
கைலாகு தந்தழைத்தார் காமனென வேயெழுந்து
மெய்லாகை போட்டமயில் வீட்டினுக்கு—ளய்யமறப்



பையநடந் தேன்விரித்த பாவாடை யின்மெல்ல
மைவிழியா ராலத்தி வாழ்த்தெடுப்பச்—செய்ய
படுக்கைவீட் டைக்குறிப்பாய்ப் பார்த்தேன்வேர்த் தென்னோ
திடுக்கென்ற தென்னுடைய தேகந்—துடுக்காகச்
சப்ரமஞ்ச மீதிருந்த தையலெனைக் கண்டவுடன்
குப்பென்று கீழே குதித்துநின்று—துப்பணியுந்
தங்கவளை யேங்கத் தலைவணங்கித் தாமரைப்பூச்
செங்கைமயி லஞ்சலியுஞ் செய்துநிற்ப—விங்கிதமாய்ப்
பள்ளி யறைச்சிறப்பைப் பார்த்து மனமகிழ்ந்து
மெள்ளவிருந் தேன்றாளி மெத்தையின்மேற்—கள்ளியதி
மோகவல்லி சந்த்ர முகவல்லி யாமதினி
நாகவல்லி யும்பிளவு நல்கியே—மோக
வரிசைக் கொழுந்தனார் வாருங்கோ வென்று
டுரியத்திற் றுதியர்க டோன்றி—முருகுற்றே
சந்தனமும் பூசுஞ் சவாதுநறும் பன்னீருங்
கந்த பொடியுநறுங் கத்தூரித்—தந்தச்
சிமிழுமொரு தட்டில்வைத்துச் சேர்தம் பலத்தை
யுமிழும் படிக்கமும்வைத் துள்ளே—யமையாத
பத்து விளக்கிருந்த பாவகம்போற் சூத்திரத்திற்
குத்து விளக்குக் கொழுந்துவிட—வத்தைவந்தே
யந்தணரே யென்கண் ணனையமகன் மாலையிட
வந்த வரிசைமண வாளரே—கந்தமென
வந்தீரோ வையாவே வாருங்கோ வென்றானென்
சிந்தை குளிர்ந்திடவந் தேனென்றே—னந்துபல
வேடங் கிடைந்தசைய பிக்கசக்க தேவியுன்னிக்
கோடங்கி சொன்ன குறிபோலே—கூடத்திற்
பல்லிக் கெவுளி பலபலென வாய்ச்சொலுங்கள்
வல்லிக்கு நன்மை வருகுதென—மெல்லவிடப்
பாகந் துடித்ததுவும் பார்வதிதான் றும்மினதுங்
ஆகங் கனைந்ததுவுங் கண்டனளே—யோகம் பேறு

கொஞ்சமலைக் கானக் குறத்திகுறி யோசொற்றின்
மஞ்சளகப் பட்டசுப மங்களமோ—நெஞ்சறிய
விந்தக் குறிதவறா தென்றிருந்தேன் றெய்வசெய
லந்தப் படிமறையோ ராகவந்தி—ரிந்தமயி
லாடும் பொழுதேகண் டாசித்தா ளாம்பார்த்துத்
தேடுங்க ளொன்றுடனே செப்பினா—டேடுமனஞ்
சிந்தா குலந்தீரச் சென்றாடுந் தீர்த்தமே
வந்தாடப் பெற்றதுபோல் வந்தீர்காண்—வந்தக்கா
லுங்கள்வீ டுங்கண்மனை யுங்கண்முத லுங்கண்மனை
துங்களுக்கார் சொல்வா ருபசாரஞ்—சங்கையதாய்
வாசலினிற் பானேன் வரலாமே யிச்சிறுக்கி
காசளவே கேட்டதுபோற் காணாதீ—ராசைகொண்ட
கன்னி யொருவர்முகங் காணாள் வயதுமொரு
பன்னிரண்டு தான்சமைந்து பத்துநா—ளன்னியர்பால்
விட்டாற் கிரந்திவரு மென்றே பயந்துவெகு
கட்டாக வின்றுவரை காப்பாற்றித்—திட்டமாய்ச்
சல்லாப மோகினியுந் தங்கமுத்து மாலையையும்
நல்லகுப்பி யங்கியொடு நாலுபேர்—வல்லிக்
கிடைமாறாக் காவல்வைத்தே னிங்கே யினிமே
லுடையா ருடையபடி யுண்மை—தடையில்லை
குற்றநடந் தாலுங் குணமா நடந்தாலு
முற்றும் பொறுக்க முறைகண்டீர்—நற்றயவாய்
வைத்து நடத்துமென்று மாமயிலுக் குஞ்சிறிது
புத்திபுரைத் தப்புறத்திற் போயினா—டத்தரமாய்
மேல்விதா னம்பார்த்து மெச்சினேன் பார்க்கிலது
போல்விதா னங்களில்லை பூதலத்திற்—கோலமலர்க்
கொத்துச் சரமோ கொழுந்துசுகந் தாதியுடன்
முத்துச் சரமோ முறைதூக்கி—வைத்திலகும்
வெட்டிவேர் வாசனையோ மிக்கபீ தாம்பரமேற்
கட்டியோ நற்பவளக் கால்களோ—கட்டழகி



தூங்குமஞ்சக் காந்திச் சுழுகுமெத்தை யோபடிக்கந்
தாங்கிய வெள்ளித் தளிகையோ—பாங்குடனே
கூடு மணவறையின் கோலா கலநினைத்தாற்
றேடுமதை நெஞ்சமென்ன செப்பவோ—பேடையினை
மானேயென் னின்பரச வல்லியே வாருமென
நானே புகன்றிடமெய் நாணியே—தேனனையாள்
பஞ்சணை மேல்வந் திருந்தாள் பரிவாயென்
னெஞ்சமயல் கொண்டு நினைவழிய—வஞ்சிகையாற்
கின்னரத்தை மீட்டினள்சங் கீதா கந்தருக்கள்
வன்ன நயம்பெறவே வாசித்தாள்—கன்னிமார்
சந்தனமும் பன்னீருந் தாகவே ளைக்குணவு
நிந்தையற வைத்தொதுங்கி நின்றார்கள்—வந்துநின்ற
பெண்காணீர் போமெனவாய் பேசா தபிநயமாக்
கண்காட்டி மெள்ளக் கடத்தினா—டிண்கதவால்
வாசலடைத் தாள்விரைந்து வந்தாள் நறுஞ்சாந்தம்
பூசி யெனக்குநுதற் பொட்டிட்டாள்—வாசச்
சுகந்தமெடுத் துத்தாலுஞ் சூட்டினா ளிங்கென்
முகந்தயவா கப்பார்த்தாள் மோக—மிகுந்தவர்போற்
றன்வா யிலுந்தரித்தாள் தாம்பூல மப்படியே
யென்வாய்க்கு நல்க விரங்கினாள்—மின்வாங்க
வஞ்சினாள் வஞ்சி யுடுக்குமெத்தை மேற்படுத்தாள்
மிஞ்சினா ளேசால வித்தையிலே—கொஞ்சமோ
வம்பிக் கணையமொழி மார னரண்மனைக்குக்
கம்பிச் சிறுசேலை கட்டினா—ளின்பமிக
விச்சை பெருத்தது லச்சை சிறுத்தது
மிச்ச மதிற்பல் விதத்தொழி—லுச்சித
மெத்த விசித்ர விசித்ர மெனப்பல
தத்தர மிட்ட தரத்தமு—தத்தொடு
முத்த மளித்து முகத்தொ டணைத்தன
ளொத்த கருத்தொரு மித்துளம்—வைத்தன

ணொஞ்சொடு நெஞ்சு நெருங்க நெருங்கவ
சஞ்செய் தணைந்து சதங்கைகள்—செஞ்சிறு
தண்டை சிலம்புப தங்களி ணங்கியி
ரண்டினி லுங்கலி னென்றொலி—விண்டிட
வண்டிரு செங்கை துவண்டு நெரிந்தன
கொண்டை சரிந்து குலைந்துபு—ரண்டன
கொப்போ குழையோமூக் குத்தியோ வட்டியலோ
துப்பார மோமுத்துத் தூய்வடமோ—செப்புந்
திருவும் பிறையுமெல்லாஞ் சேர்ந்ததையச்சுற்றி
மருவியிட சாரிவல சாரி—திருகிவந்து
முத்துக்கு மாரனுநீ மோக சுகநயவி
தத்துக்கு மாரனுநீ தானென்று—நித்தியசு
கானந்த வேலையிற்குள் ளானோ மிருவர்மனத்
தானந் தனிலின்பந் தான்மடுப்பத்—தேனொழுகும்
பூமெத் தையின்மேற் புழுகு கமகமெனத்
தாமத் தொடையல்வா சங்கமழ—மாமதவே
டாமோ ரதியோ சயனித் திருந்ததென
மாமோக நித்திரைபோ மாதெனது—சோமனைத்தன்
சேலையெனச் சுற்றிவெளி சென்று நினைவுவந்த
வேலையிலே நான்கூட வேசென்றேன்—கோலமயி
றேகசுத்தி செய்து திரும்பிமஞ்ச மீதிருந்து
பாகுவெற்றி லையருந்திப் பண்பாக—வோகையுற்றே
கூந்த லொருபாற் குலைந்து சொருகியது
மேந்து துகிலொருகை யேற்றதுவும்—வாய்ந்திலகுந்
தாதிட்ட மாலைச் சரங்கள் வதங்கியதுங்
காதிட்ட தோடு கழன்றதுவுங்—கோதற்ற
வஞ்சி யிருக்கு மணக்கோலம் பார்க்கிலது
கொஞ்சமோ நெஞ்சங் கொதியாதோ—வஞ்சியவண்
மாப்பிளைகண் டாற்கனகம் வாரிச் சொரிந்ததென
மூப்புடையோர் சொல்லு மொழிகண்டீர்—நீப்பரிதா



நித்தியமிந் தப்படிக்கு நீங்கே னெனவெனக்குச்
சத்தியம்பண் ணித்தாருஞ் சாமியென்றாள்—சித்தமது
கல்லோ சிவசிவா கல்லுங் கரையுமவள்
சொல்லோது மூன்றுறுதி சொல்லிவிட்டேன்—மெல்லியலுங்
கான குழல்வகிர்ந்து கையாற் சொருகுதல்போற்
றானங் குலியதனாற் றன்றலையிற்—பேனையெடுத்
திந்தப் பிராண னிருக்குமட்டு நான்பாரி
யந்தப் படிதவறு தானையென்றாள்—பைந்தொடியைத்
தாசியர்க்குள் வாய்மை தவறாண் மிகுத்தவிசு
வாசியென நானு மயங்கினேன்—ராசிப்
புதுமின்ன லஞ்ஞூறு பொன்கொடுத்து விட்டே
னதுபின்ன ரேதாதி யர்க்குங்—கதுமென்ன
நெஞ்சறிய வைம்பதுபொ னேரே யளித்ததற்பின்
வஞ்சி மருவு மணக்கோல—மஞ்சளினாற்
றங்கப்ர காசம்போற் றானே தளதளவென்
றங்கப்ர காசத் தழகெறிப்பச்—செங்கதிரோன்
வெம்பகைபா வந்துதித்தான் மிக்கநக ரேகையென
தம்புயத்திற் கண்டே னகமகிழ்ந்தேன்—வம்புலவு
சித்ர நதிபாடச் சென்றேனென் சிந்தையொரு
மித்தா லலவோ பவுத்திரமா—முத்தனையாண்
மந்திரத்தை யெண்ணி மயங்கியே நான்செபிக்கு
மந்திரத்தை விட்டேன் மதிமறந்தேன்—பைந்தொடிதன்
காலை யுதையநமக் காரமிட்ட தன்றிவெய்யோன்
காலை யுதயநமக் காரம்விட்டே—னீலமயி
றற்பணத்தை யெண்ணித் தளர்வேன் றடம்புனலிற்
றற்பணத்தைச் செய்யேன் றடுமாறி—யற்பகன்முச்
சந்தி யறிவதல்லாற் சாந்தி பரிகார
சந்திசள சந்தியெனத் தான்மறந்தே—னுந்துபுனல்
வந்தசுத்தி போய்முழுகி வண்கரையி லேறியபின்
றந்தசுத்தி பண்ணிமோ சப்படுவே—னிந்தையுறுங்

காமனிட்ட மாயைக் கலகமிட்ட தன்றிவெய்யோ
னேமகிட்டை யெல்லா நெகிழ்ந்துவிட்டேன்--மாமிபெற்ற

மூத்தமகன் மோகவல்லி மோகமுறு மூர்த்தியய்ய
னார்த்த முடனே யழைத்தென்னை--வார்த்தைசொல்லித்

தம்பிவா வென்றழைத்துச் சாப்பாடு பண்ணிவைத்தா
னம்பனகன் னாள்வா யமுதம்போற்--சம்பாநெல்

லன்னம் பருப்புநெய்பா லாதிரச வர்க்கமெல்லா
மென்னென் றமைத்தானோ வென்னை--கன்னிபொருட்

டாக வுபசரித்தா னானும் புண்ணியவான்
றேக மிதுவேசந் தேகமில்லை--பாகுடனே

வெற்றிலைதந் தானருந்த வில்லை விரைந்துடனே
முற்றிலைபாற்கொண்டுவந்து முன்வைத்தேன்--முற்றிலையாள்

புன்மூரல் கொண்டுதாம் பூலஞ் சுருட்டிமடித்
தென்வாயில் மாறி யினிதருத்தி--நன்மையள்போ

னாட்டிலே யுள்ளதன்றி நட்பு மிகுந்துபுண்ய
வாட்டிமருந் துக்கு வகையிட்டாள்--காட்டிலுள்ள

தும்பை கருந்துவரை தூதுவளை பூழைகவு
தும்பை மலைகலக்கி தோதகத்தி--சம்புடனே

பின்றுடரி முன்றுடரி பேய்ப்பீர்க்கு நாய்ப்பாகல்
குன்றி முறைமயக்கி கோவையத்தி--வென்றிதரு

மானை வணங்கி பழகண்ணி பேய்வணங்கி
பூனை வணங்கி புரமெரித்தான்--மானமுட்டி

யாடையொட்டி யாதண்டை யாண்டொடரி பெண்டொடரி
தோடைவெட்டி சின்னிதொலி யாக்கலப்பை--கோடைமந்த

நாவடக்கி நன்னாரி நாகவல்லி காரவல்லி
பூவடக்கி யிந்த்ரவல்லி பூரவல்லி--காவிலுற்ற

வச்ரவல்லி சோமவல்லி மாலமுத வல்லியு--
னிச்சைதரும் புல்லுருவி யிங்கிதன்றி--நிச்சயமாய்

மாதளைப்பூ மிக்க மகனகா மீசுரப்பூ
வாதளைப்பூ முல்லைபிச்சி யாவணாப்பூப்--பாதிரிப்பூக்



கர்ப்பூரங் கற்காந்தங் கன்மதங்கன் னாசேலங்
தற்கோலஞ் சாதிக்காய் சாதிபத்ரி--பொற்காரம்

கொட்டங்கோ ரோசனைகத் தூரிமஞ்சள் குங்குமப்பூ
மட்டு மதுரமில வங்கமுட--னிட்டமுறு

சித்தரத்தை வெண்காரஞ் சேர்ந்த வதிவிடயங்
கொத்துமல்லி முந்திரிகை கூறும்பின்--கத்தரந்தைப்

பித்துடனே தேவாங்குப் பித்தும் பெருங்கூகைப்
பித்துடனண் டங்காக்கைப் பித்துடனே--மொய்த்தகரு

வண்டுசுழல் வண்டு மருவு பருந்தீரல்
கொண்ட வலியான் கொழுப்புடனே--மண்டலத்தி

லச்சுவத்தின் வாயினுரை யானைமதஞ் செவ்வானை
பச்சோந்தி யிந்திரகோ பத்துடனே--புச்சிதமாக்

காட்டு மருந்துங் கடைமருந்து மூன்மருந்துங்
கூட்டி நிறுத்துக்கை கொண்டெடுத்தே--யூட்டுவகைச்

சாராயம் பேய்க்கருப்பஞ் சாறெல்லாம் விட்டரைத்துச்
சிராக வுண்டைபண்ணிச் சேகரித்து--நேரே

தலைமண்டை யோட்டில்வைத்துச் சாமத்திற் காணி
நிலையந் தனிற்புதைத்து நீலி--பலிதமாச்

சுண்ணாம் பினிற்கலந்து தோகைதந்தாள் வெற்றிலையிற்
பெண்ணா ரமுதைப் பிரியாமற்--பெண்ணினல்லா

ராசைப்பேய் கொண்டாரே யாற்றலகன் றாதிலும்
வேசைப்பேய் கொண்டால் விளையாட்டோ--பூசையெனுந்

தந்திரமே தந்திரமே தையல்சொற்கஞ் சொற்கமவண்
மந்திரமே மந்திரமாய் மானனையா--ளுந்தி

யடியிட் டிடமெங்கோ வவ்விடத்துக் கெல்லா
முடியிட்டே நின்றேன் முழுதுங்--கொடியிடைதன்

வாசலிலே வேறொருவர் வந்துமிதிக் கச்சகியேன்
பாசிழைக்கு நானே பதியானேன்--மாசமொன்றிற்

செல்லும் பலசெல்வுஞ் சேகரமாச் சிட்டெழுதி
நெல்லும் பணமு நிறைசெலுத்தி--வல்லையிலே

பாற்பசுவுக் கைம்பதுபொன் பார்வையிட் டேனித்தனையே
னாற்பதுபொன் போதுமென்று னல்கினேன்—வார்ப்புடைய
கன்னார் சிலரங் கணத்திற் கலங்கள்வெட் டென்
றென்னாமுன் னேதுண் டிறக்கென்று—சொன்னவுட
னானைக்காற் சட்டி யகப்பைசிறு செம்புகெண்டி
சேனைக்காற் றம்பாளஞ் சிப்பிலொடு—மானனையார்
வைத்துவிளக் கின்றசரு வந்தாம்பூ லக்கமலங்
குத்துவிளக் கோடுகொட் டுக்கூடை—சித்ரவனச்
செப்புக் குடம்பதுங்கச் சென்மித்த கொங்கையட்குச்
செப்புக் குடம்படிக்கஞ் சீனிபா—றுப்பமுதந்
தாலந் தனிலருந்தத் தக்கவுரு நல்லதிந்தத்
தாலமிதெல் லாம்வாங்கித் தாருமென்று—டாலமொரு
கும்பாத் திரமாமிக் கோவையிவட் காமெனவை
கும்பாத் திரம்பலவுங் கொண்டளித்தேன்—கொம்பனையாள்
செம்பவள வாயைத் திறந்துபதி னேழுபணச்
செம்பவள வாகிணையந் தீருமென்றாள்—செம்புடனே
யிந்தமுதற் சேகரத்துக் கெண்ணூறு பொன்கொடுத்தே
யிந்தமுதற் றனிச்சேர்ந் தெய்தினாள்—பைந்தொடிக
னற்பசினே கத்தையெண்ணா தாடருவிக் குற்றாலத்
தற்பசி விழாவிசுக்கொண் டாடுநா—ளற்பதுபோ
லங்காடி யிற்சென்று ளன்னமென தானனம்பார்த்
தங்காடி பள்ளிபறைக் கானதென்றாள்—சிங்கார
மான்மதத்தி பத்சனத்தி வாடைப் புழுகொடிந்த
மான்மதத்தி லேசிறிது வாங்குமென்றாள்—கானமுறத்
தாதித்தா வென்றுடுந் தையற் கிசைந்தசுகந்
தாதித்தா ரும்வாங்கித் தாருமென்றாள்—கோதறவே
யிந்தமுத்துக் கொப்புக்கா மிந்தமுத்துக் குச்சுக்கா
மந்தமுத்துக் கொங்கைமுத்துக் காமென்று—டந்தமுக
மூக்குத்திக் கான முதலென்றாள் பின்னுமெள்ள
நாக்குச் சுழற்றி நகைசெய்தே—தூக்கியெடுத்



தாணிக் கனகம்விலை யாயிரம்பொன் னாகினுமிம்
மாணிக்க மாலையொன்று வாஞ்சித்தேன்—பாணிக்கு
வந்தவளை யைக்காசு மாறியெனி னும்வாங்கித்
தந்தருள வேண்டுமெனச் சாற்றியே—தந்திடைக்கி
தாமே கலையென்று ளம்மே கலையுமிந்தக்
கோமே தகமும்விலை கூறென்று—மாமாது
செங்கைக் கணிகடகஞ் செம்பவளங் குப்பிதொங்கல்
கொங்கைக்கு முத்துவடக் கொத்துடனே—மங்கையவள்
காதுக்குப் பொற்பூடி காதுக்குப் பொற்சிமிக்கி
காதுக்குக் கொப்புக் கனங்குழையு—மீதலாற்
பாலெழுத்து வன்னப் பவளக் கொடிச்சேலை
கோலமுற்ற வன்னக் கொடிச்சேலை—ஞாலமகிழ்
மோகவன்னப் பொற்சரிகை முத்துவன்னக் கண்டாங்கி
மேகவன்னஞ் சந்திரகா விச்சேலை—நாகரிகப்
பட்டும் பணியும் பலபொருளு மேதொகையா
யிட்டங் களித்ததுபொ னெண்ணூறு—வட்ட
முலைக்கச் சுனக்காகு மோவென்றே னையா
மலைக்கச்சும் மாபுகலு வானேன்—விலைக்கிரையந்
தீர்த்துவாங் கிப்புனையச் செய்தா லுமக்கழகு
பார்த்தபேர்க் கென்னே பலனென்றாள்—பார்த்துடனே
முப்பதுபொன் னீந்தே முலைக்கச்சை யும்வாங்கி
யப்பதுமக் கொங்கைக் கணிவித்தே—னொப்பிமின்னை
யேற்றிருந்து வெட்கமினி யேதென்றே தீர்க்கமுற்றே
வீற்றிருந்தே னங்காடி வீதியிலே—தூற்றி
யிறைத்தேன் பணத்தையெல்லா மென்குலத்தின் மேன்மை
குறைத்தேன் மிகமயக்கங் கொண்டே—னிறைக்கனக
முன்னே நடக்க முழுச்சுமடு தாங்கியவள்
பின்னே நடந்தேன்கெம் பீரமா—யன்னேர
மென்வசமோ வென்செயலோ வெல்லா மிரதிபதி
தன்வசமு மின்வசமுந் தானன்றோ—மின்னுடனான்

வீட்டுக்கு வந்திருந்தேன் மெல்லியலை முன்னாளி
லாட்டிற் பயிற்றியவண் ணாவிமார்—பேட்டனத்தி

னாகபா சத்திலிவ னல்லறி வாளனென்றே
னாகபா சக்கார நட்டுவமார்—சேகரமா

யாடிவந்து கண்டார்கொண் டாடிவந்த தென்னவென்றேன்
பாடிவந்தோ மிங்கோர் பதமென்றார்—நீடுபுகழ்

சக்காதர சங்கீத சாஹித்ய சம்பன்ன
லக்கினிகுண் டத்தாப னாசார்யா—மிக்ககொடைக்

கன்னாவென் றேபதமுங் கல்யாணி யிற்புகன்றார்
பொன்னார் கடகமணிப் பூணளித்தேன்—மன்னுசுப

பங்களம்பா டித்திர்ந்த மாத்திரத்தி லோடிவந்தா
டங்கழுத்து மாலை சரதம்போன்—மங்கையிவ

டாயார்க்குப் பித்தத் தலைவலியோ நீர்ப்பாடோ
வாயா லெடுத்ததொரு மட்டில்லை—யாயாசஞ்

சற்றலவே தோமாடன் தம்பிரா னார்தெய்வ
குற்றமோ நானறியேன் கூவென்றாண்—முற்றிழையே

யேதென்று பார்த்துவா வென்றே னெழுந்திருந்தாள்
சூதென்ற கொங்கைச் சுவடசையப்—பேதையங்கே

செல்லத்தான் கண்டுவெகு தெய்வகுறை யென்றொருத்தி
சொல்லிப்பேய் வந்துதலை சுற்றியே—நல்லமுழுப்

பூசைக் கிருநூறு பொன்முடிந்து வைத்திலையே
லாசைக் கிடமிலையுன் னன்னைக்கென்—றேசொனுமுன்

காதி லுடைமை கழுத்தி லுடை மைகழற்றி
யீதி லொருபொன் னிருநூறும்—வேதியரே

வைத்தடகா கப்பணத்தை வாங்கித்தா ரும்மெனவே
முத்தனையாள் கொண்டுவந்து முன்வைத்தாள்—வைத்தவுடன்

மன்னை கசையடகு வைப்பானே னென்றுமுத
னானை யெடுத்தவட்கு நல்கினேன்—றேனனையாள்

கோட்டிக் கெறுவக் குணட்டென வேகுட்ட
னாட்டுக் குறைதீர்த் [illegible]—கேட்டபடி



வாழைப் பழந்தேங்காய் வண்பூ விரியிளநீர்
தாழைப்பூ மாலைசுகந் தாரியுடன்—கோழிமுட்டை

வெட்டிவே ரும்பாக்கு வெற்றிலைப னங்கருப்புக்
கட்டி புகையிலைபின் னாக்குக்கள்—வெட்டுங்

கருங்கிடாய் சூற்பன்றி கத்தியசெஞ் சேவன்
முருங்கையிலை காய்கறிகண் முற்றும்—பெருந்தடிகை

வல்லையங்கள் வெட்டரிவாள் வன்னவுரு மாற்காக்குச்
சல்லடம்வீ ரச்சிலம்பு தன்முரசு—வில்லடிப்பாட்

டிந்த வகைக்கோ ரிருநூறு பொன்கொடுத்தேன்
கந்தபொடி யும்புழுகுங் கட்டிவைத்தே—னந்தோ

வுடம்பறியாப் பேயாட்டு முண்டோதன் னெஞ்சத்
திடங்குறியாப் பொய்யு மிலையே—மடங்குறியாய்

நாணிநின்ற மாமியார் நாணங் கழிந்துடலங்
கோணிநின்றென் முன்னாடக் கோப்பிட்டாள்—பூணுமன

நேசமாய்க் கோமளத்தார் நெற்றியைத்தொட் டேநீறு
பூசினார் நானும்வாய் பொத்தினேன்—ராசரிகந்

தந்தோமென் றாருடனே சந்தோட மாய்மகிழ்ந்தே
னந்தோ வெனைக்கெடுத்த தவ்வளவோ—முந்தநகை

யங்கேயென் கண்பார்த் தபகரித்த வாயிழைவந்
திங்கேநான் றந்தநகை யெங்கென்றாள்—சங்கையற

நானெடுக்க வில்லையென்றே னாரியவ டாயிடத்தின்
மேனடுக்க முற்று விரைந்தோடிப்—போனவுட

னேன்வந்தா யென்றுரைத்தா ளென்னுடைமை யய்யன்முன்னே
தானங் கிருந்ததெங்கே தாவென்று—னானறியே

னென்ன விளையாட் டடிமகளே நீயதுபோற்
பொன்னனிழே னுந்தேடப் போறாயோ—வன்னமலர்

பூத்துதிர்ந்த பாதிரியைப் போல்வந்து நின்றாயே
யாஸ்தியெல்லாந் தோற்றனையேயையையோ—காத்திருக்க

கின்று யகனைசம்பி சீயுடைமை வைத்தனையே
வன்றேனவன் றேவென் றனையாற்றிப்—பின்னுமையோ

வென்றாள்செங் கைநெறித்தா ளேங்கினாள் கண்ணருவி
நின்றா றெனவொழுக நெட்டுயிர்த்தாள்—பின்றளர்வா
யென்னிடத்தில் வந்தழுதா ளின்பரச வல்லியவ
டன்னிடத்தி லேநகைபோந் தன்மையதாய்ச்—சொன்னநகை
கொண்டுவரு மாசாரி கூலியுட னாயிரம்பொன்
கண்ட துடைமைக் கணக்குக்குத்—தொண்டையித
ழின்னமுத வல்லிகணக் கிட்டமுதற் கோரிரட்டி
பொன்னுடைமை யேசமைத்துப் பூட்டினேன்—மன்னுமுத
லில்வாய்மை யாக வெடுத்தனவும் நன்னயமாய்ச்
சில்வானந் தந்துவருஞ் செட்டியெனும்—நல்ல
பெரிய கடைமீராப் பிள்ளைகட னுக்கு
முரியசாந் துக்கார ருக்குந்—தெரிவு
பலவெற் றிலைக்காரி பாறயிர்நெய்க் காரி
திலவெண்ணெய்க் காரிகடன் செல்ல—விலையென்று
சொல்லியபோ தேநத் தொகையாக வெண்பதுபொன்
வல்லிகையிற் றானே வழங்கினேன்—வல்லி
கொடுத்தவெலா முள்ளடக்கிக் கொண்டாண்மா பாவி
கெடுத்தா ளெனதறிவு கெட்டேன்—தொடுத்து
மடுப்பிளந்து நீர்முழுதும் வாங்குதல்போ லென்பா
லடுத்தடுத்து வாங்குதற்குள் ளாக்கி—யெடுத்தெடுத்துச்
செங்கைநிதி யுள்ளதெல்லாஞ் சேயிழைக்கு நல்கினதா
லிங்கிருந்த பாண்ட மெனவானே—னிங்கெனுக்
கேதுமில்லை யென்றறிந்தா ளென்செயலை நாள்வழியே
மாது மவளுடைய மாதாவுங்—காதுக்
கடுக்கனரை நாணும்விற்கக் கண்டதனு னெஞ்சங்
கடுக்கனரை நாணமற்ற கள்ளி—தொடுத்தங்
கொருகணமு மூடாட வொட்டாள் கிடந்தங்
கிருகணையு மூடா ளிகலிப்—பரிமளங்கள்
பூசலையே யென்றெடுத்துப் பூசையிலே தாய்க்கிழவி
பூசலையே யுண்டாக்கிப் போரிடுவாள்—பூசல்கண்டே



யுத்தரத்தைப் போலவெனக் குத்தரமல் லாதவெறு
முத்தரத்தை மெத்தமெத்த வோதினாள்—வித்துரும
வாய்ச்சியையுஞ் சீறிநித்தம் வைவாள்பின் கம்மியர்கை
வாச்சியது போலெனக்கு வார்த்தைசொல்வா—ளேச்சதனைச்
சற்றுநினைந் தேனுமில்லை சந்தேக மில்லாமன்
முற்று மயங்கி முயங்கினேன்—குற்றமிக
வின்னாசெய் தாரை யொறுத்த லவர்நாண
நன்னயஞ் செய்துவிட லன்றென்னட்—பின்னுமலர்ச்
சப்ரமஞ்ச மீதே தழுவலா மென்றவுட
னப்புறங்காட் டிக்கிடப்பா ளங்கோரஞ்—செப்பும்
உலையின் மெழுகா யுருகி யடுத்தாலுந்
தலையிடிக்கு தென்றேசா திப்ப—ளிலையேன்
மலர்முகத்தைச் சுண்டி வயிற்றுவலி யென்பள்
கலகவிழி மூடிக் கரைவாள்—வலிதருமை
செய்யத் தொடுத்தாற் சிணுங்குவளப் போதனையும்
வையத் தொடுத்தாள் வரம்புண்டோ—வெய்யவனை
பொல்லாத வம்பிநான் போடாவென் வீட்டிலுனை
யல்லா லொருவர்வர லாகாதோ—வல்லபமாய்ப்
பன்னூறு நான்முக்குப் பார்த்ததே டும்பழைய
பொன்னா பரணமெல்லாம் போயிற்றே—கன்னியுடம்
பென்னுருங் கல்லா யிருக்குமோ வாகெடுவா
யுன்னாலு முண்டோ வுபகாரஞ்—சொன்னாலுங்
கேளாயோ கெட்டசிறுக் கிக்குப்பார்ப் பானைச
மீளாதோ வென்று விளம்பினாள்—கேளாச்சொற்
காதுகுளி ரக்கேட்டேன் கன்னிமுழங் கையாலப்
போதுபுடைத் தாள்வெளியிற் போவென்றே—யோதுமுன
மாப்பிள்ளைமா ராக வருவாரும் போவாருந்
தோற்பைமுலை யாட்குநயஞ் சொல்வாரும்—வாய்ப்பாக
வென்னைப் பழையவைப னெங்கே கிடக்குதென்று
சின்னப் பரியாசஞ் செய்வாருஞ்—சொன்னதெல்லாங்

கேட்டேன் சகியாமற் கிள்ளைமொழி யாண்முதுகிற்
போட்டேன் வெளியிற் புறப்பட்டாள்—கேட்டவரோ
கூவென்று ளோடிவந்து கூட்டமிட்டார் மின்னாளை
வாவென் றழைக்க மலைந்திருந்தார்—நாவசைக்கு
முன்னே தலையுங் கலையு முலையுமசைத்
தந்நேர மோடிவந்தா ரத்தையா—ரந்நேர
மூப்பிளமை யாக முதல்வாங்கா மற்சிறிய
மாப்பிள்ளைமா ரைத்தேடு மாமியார்—தோப்பிலுள்ளே
பாங்கான வெற்றிலைக்கும் பாக்குப் புகையிலைக்கு
மாங்காய்க்குஞ் சஞ்சரிக்கு மாமியார்—பாங்காகக்
கட்டித் திரவியத்தைக் கைக்கடனு க்கொடுத்து
வட்டிக்கு நஞ்சுதின்னு மாமியா—ரிட்டமுற
விந்து நுதலிசித்ர ரேகைபோ லாரிடத்தும்
வந்துவிழுங் காமியார் மாமியார்—வந்தவர்தான்
மீகாமன் போற்பொருளின் மேலே நினைவிருக்கு
மாகாம்ப வித்தையா ரத்தையார்—போகாதோ
சல்லியமீ தென்வீண் சனியனைப்பா ரென்றுவசை
சொல்லிமரி யாதைகெடத் தூஷணமாய்ச்—சொல்லிநிந்தச்
சுட்டித் தலைச்சிறுக்கி துன்மார்க்க மின்னமிந்தச்
சட்டித் தலைபனைத்தான் றள்ளாளோ—கெட்டிகெட்டி
தேட்டுப் பொருண்முழுதுஞ் சிக்கினாற் பின்புசொட்டுப்
போட்டுத் துரத்திவிடப் போகாதோ—கேட்டியென
வங்கிவந்து கூடினா ளந்தமுறு மிந்தனத்துக்
கங்கிவந்து கூடியதொப் பாகவே—யிங்கிருப்ப
தேண்டா முரண்டா வெழுந்திருடா கோபம்வந்து
மூண்டா வினியாற்றி முற்றாது—வேண்டா
மடையாளம் போட்டேர்க் கனுப்பவோ வன்றி
மடையாசும் மாபோக மாட்டாய்—நடவென்றாள்
பாதகியே நான்கொடுத்த பைம்பொனெலாந் தந்தாலிப்
போதகல்வே னென்றேனப் போதிலே—மாதினுக்கு



மூத்த மடந்தை முறைதப்பிப் பொல்லாத
தூர்த்தாபோ வென்று துடிதுடித்து—வார்த்தைசொல்லி
முந்நியிற்கை போட்டானுன் மோகவல்லி யார்களடாத்
தந்நியிற்கை போட்டேன் சகிப்பேனோ—பைந்தொடிக்கா
யேதுநீ பெண்பிள்ளைகள் பாலெடுப்பு வார்த்தைசொன்ன
தேது விபகார மேதடா—வோதெனவே
வைது வடுகிலே வார்த்தைசொல்லி யேதுனது
செய்தியென வீசை திருத்தினான்—பய்ய
வடுகன் சலுகையினான் மாமிதுள்ளி வந்து
கெடுகந்த லேயறிவு கெட்ட—தடிமாடா
மூடாநா யக்கர் முதலினியென் னலனிக்கக்
கூடா தவரறிந்தாற் கொல்லுவார்—போடாமுன்
வாவென்றே யுன்னை வலிய வழைத்தவரார்
போவென்றாற் போய்க்கலைந்து போகாயோ—பூவையுனக்
கத்தைமக ளோவவளுக் கம்மான் மகனோசொல்
தந்தைநைநான் றலிகட்டித் தந்தேனோ—மித்தைசொலும்
வம்பனைக்கேட் பாரிலையோ மன்றுளீர் கேளுமென
வம்பலத்தி லோடி யலறினா—ளம்பலத்தி
னன்றி நடுவிலையோ ஞாயமிலை யோகசட
னென்றிவனைத் தள்ளுவா ரில்லையோ—நன்றியுள
தானத்தா ரேயிந் தலத்தாரே யூராரே
மானத் துடனேநான் மாலிமையாய்—மேன்மையுற
வின்றளென் றேயார்க்கு மெண்ணிக்கை யாயிருந்தே
னிந்நாள் வரையுமின்றைக் கென்னையிவன்—சின்னமதாய்
மாணிக்கத் தாளை மடச்சிறுக்கி யென்றானே
பூணிக்கு நானிழைத்துப் பேனேனோ—பூணிப்
பயலென்று லென்செய்வாய் பார்ப்பானீ யென்று
ளயனின்ற பேர்க ளமர்த்தி—நயமாக
வையன் வழக்கதனை யப்புறங்கேட் போமுதிய
தையலே யுன்வழக்கைச் சாற்றெனலுஞ்—செய்யவுப்பன்

பட்டரே குற்ருல பட்டரே யானையைய
பட்டரே பண்டார பட்டரே—யிட்ட
சிவராம பட்டரே தென்காசி யூர்வி
சுவநாத பட்டரே ஸ்வாமி—குவலயத்திற்
பேச்சியென நான்பெண் பிறந்ததுவு மென்வயிற்றில்
வாச்சமக ளுக்கிவன் மாப்பிள்ளையா—வாச்சதுவு
நல்ல மரத்தி னரையான் விழுந்தாற்போல்
வல்லிக்கு வால வயதிலே—பொல்லாத

பார்ப்பான் கெடுத்தானே பாண்கிரந்தி சூலையுரை
யாப்பாதி யெல்லாமுண் டாக்கினான்—மூப்பான
வென்னை யவமதித்தா னென்மகளை யீடழித்தான்
பின்னை யொருவரொடு பேசொட்டான்—மின்னாளை
யஞ்சாறு மாதமா யாலயத்திற் செல்லாமன்
மிஞ்சாசை கொண்டே விலக்கினான்—கெஞ்சி
வருவாரைக் கண்டுமெள்ள மச்சாவி யென்றிங்
கொருவார்த்தை யும்பேச வொட்டான்—பொருளாயிங்
கேது கொடுத்தானே யென்று ளுடனைப்
போது கொடுததெல்லாம் போயிற்றே—வேதனத்தோ
டாம்பாலு மென்னு லறிந்தகென்றே னப்படிக்குப்
பாம்பார் குடத்திலிடு பாணியென்றாள்—சோம்பாமற்

பார்ப்பான் கெடுத்தானே பார்த்தீரோ சொன்னசெய்தி
பேர்ப்போந்த வூரிற் பெரியோரே—பார்ப்பானன்
மானம்போ மோதே வடியாளென் றுனுமவ
மானம் பொறுத்திருக்க மாட்டோங்கா—ணீனனிவன்
சந்தி யறியான் றவமறியான் காலைபக
லந்தி யறியா னடைகிடப்பான்—பைந்தொடிபாற்
கொண்டகடன் றண்டிவிட்டுங் கொள்ளையென்ன சள்ளையென்ன
சண்டையென்ன மெள்ளவிட்டுத் தப்பாமற்—றிண்டுமுண்டா
யென்னைத் தலைமயிரை யெட்டிப் பிடித்திழுத்துக்
கன்னத் திலேயறைந்தான் கையாலே—சொன்னவசை



யிங்குரைத்து முற்று மிவனை யொழியுமென்று
செங்கைகொட்டி நீட்டிநின்று செப்பினாள்—ளங்கவர்க
ளாதிமுத லாநடந்த தத்தனையு மஞ்சாமல்
வேதியசொல் லென்றார் விளம்பினேன்—மாதிடத்தின்
மொய்த்தநிதி யெல்லா முடிப்பாகக் கொண்டுவந்து
வைத்ததும்வைப் பாவவனை வைத்ததுவும்—வைத்ததிலே
பொன்னின்கைக் கேசிறிது பொன்னும்வெள்ளி நன்னகைகட்
கென்னச் சிறிதங் கிறைத்தவும்—வன்னமுற

நாடுமெச்ச நன்றாய் நவரங்க வேலையிட்ட
வீடுகட்டி வைத்ததுவு மேகம்போன்—மாடுகொண்டு
விட்டதுவுஞ் சேலைவிலை வெண்கலமற் றுள்ளவகைக்
கிட்டதுவும் பேயூட்டுக் கிட்டதுவு—மட்டுண்டோ

வீக்கூட்டுந் தேனை யெடுத்தூ னருந்தியசெந்
நாய்க்கூட்டி வைத்தமுழு ஞாயம்போற்—பாக்கியமா
மாட்சிமுத லெல்லா மளித்தே னளித்ததற்குச்
சாட்சிமா சித்தெருவிற் சாம்பசிவன்—சூட்சியா
யிப்படி நாடோறு மென்கைமுத லைப்பறித்துந்
தப்புநடை யாய்மகளுஞ் சஞ்சரித்தா—டப்புநடைக்
கன்னையுமுள் ளாயிருந்த தல்லாமன் முன்குடுமி
தன்னையிழுத் தென்னையடி தாக்கினாள்—மின்னவிரு
மேலக் கதுப்பை யிழுத்தொருகைக் கொண்டவடன்
கோலக் கதுப்பினுங்கை கொண்டடித்தே—னாலமிட்டா
ளிவ்வளவு தானென் றெதிராடி நானியம்பு
மவ்வளவில் வம்பி யவமதித்தே—பவ்வியமா
யிந்நாள் வரையுமுனக் கிட்டதல்லா லுன்வெறுங்கை
தன்னா லொருகாசு தானுண்டோ—விந்நிலத்திற்
புல்லறிவா ளர்க்குப் புரிந்த வுபகாரங்
கல்லின்மேல் விட்ட கலமென்ன—வல்லமையாய்ச்
செப்பியசண் டாளச் சிறுக்கிதனை நான்வெகுண்டே
னப்பொழுதி லென்னை யழைத்தூரார்—விப்பிரரே

யீக்கடிக்கக் காளைதுள்ளி யேழைமேற் பாய்ந்ததுபோற்
றுய்க்கிழவி மேல்வே தனைவேண்டா—யோக்கியரே
தானபா னஞ்செபங்கள் சந்திகா யத்ரிகலை
ஞானபோ தங்க ணழுவவிட்டு—மானமிலா
வேசை யிடத்தில் விரும்பலாற் றீராத
வாசை படைத்ததுமக் காகாதே—வேசைதனக்
கீந்த முதல்திரும்பி யெள்ளளவே னும்வருவ
தாய்ந்த மறையீ ரறிவீரோ—வாய்ந்திலகு
முப்புரிநூ லோர்க்கு முறைபோ மறையோருக்
கெப்பொழுது நிற்குமே யிந்தவசை—மெய்ப்புடனே
மண்ணிற் பொழிந்தநெடு வான்புனறு னெவ்விதத்தும்
விண்ணிற் புகுமோ விளம்புவீர்—புண்ணியரே
வேசையர்க்குப் போனபொருண் மீளுமோ வும்முடைய
யோசனைக்குத் தோன்றுத துண்டோவென்—றேசொலத்தென்
காசிவிப காரமாய்க் கண்டதிலே பாதியிந்தத்
தாசிபால் வாங்கியே தாருமென்றேன்—பேசுமிந்த
நெட்டூரப் பேச்சை நிறுத்துமினி நீரிவளை
விட்டூருக் குப்போய் விடவேணும்—பட்டரே
வீணாசை வேண்டாம்போ மென்றே வெடுவெடென்றென்
வாணாள் கழிய வழக்குரைத்தார்—பூணுமன
லன்புற் றிருந்ததுதாய் மாத்ரமவள் பெற்றமக
ளன்புற் றவளென் றருகணைந்தே—னன்பா
யவள்வலியப் பேசவிலை யானு லதரத்
திவலையைநா மாசித் திருந்தா—லுவலையா
மென்றே திடுக்கென் றெழுந்தேனு னேகிவிட
வென்றான் மனந்திரும்ப வேண்டாவோ—நன்றாய்ப்
பரிசிவதீர்த் தந்தாம்ப்ர பன்னியிற்சென் மித்துஞ்
சிரசி லெழுதுகிஞ்சுச் சேஷ—மரகரா
வான்புகழு மேலோர்துன் மார்க்கனென் றே நிந்தைசொல
நான்புவிமேற் றூர்த்த நடையாகிக்—காண்பனைநேர்



தோளாட்டி யாசைத் தலைக்குழிக்குள் விட்டுமத
வேளாட்டு வித்தமனம் வேறானேன்—வாள்விழிமான்
வட்ட நிலை வடுப்பார்த்து நான்கலங்க
விட்டமெல்லா மெண்ணி யிரங்குமே—கட்டிலின்மே
லண்ணி மதன்போ லனுபோக நான்புரிந்த
தெண்ணி நெடுமூச் செறியுமே—யொண்ணுதலாள்
கொங்கையிலே சற்றுமனங் கூசாதென் போலெவருஞ்
செங்கையினாற் றீண்டிற் சிரிப்பாரே—சங்கையின்றி
மஞ்சார் குழற்கோனான் வைத்தவரம் பற்றெவரு
மஞ்சாது போக்குவரத் தாவாரே—தஞ்சமின்றி
நெஞ்ச முருகி நினையாதெல் லாநினைந்து
வஞ்சிபால் வைத்த மனமாற்றி—மிஞ்சுபுக
ழாண்டார்நம் பிக்கே னவதியுரைத் தேன்கவலை
வேண்டா முமக்கு வெகுயோக—மீண்டேயுண்
டாகுதுநீர் செல்வீ ரருள்சேர் வடகரைவி
பேகன் மகிசேர் பிரதாப—னுகரிகன்
செண்பகவ னம்புடைசூழ் செண்பகநல் லூர்வாழுஞ்
செண்பகவ னப்புலிவ சிகரவேள்—தண்பதும
மாமுகங்கண் டானுடனே வந்தெய்தும் பாக்யமென
வாமதுவே காரியமென் றன்புடனே—நேமமதா
யத்தருணந் தன்னிலசைந் தாடும் பெருமான்முன்
வைத்தநடை சாலை வழிக்கொண்டே—நத்துலவு
செங்கைநட ராசத் திருமா லினிதாகத்
தங்குநட ராசபுரந் தான்கடந்து—பொங்குதமிழ்த்
தென்னிலம்வே யம்பதியிற் சேர்ந்த திருக்கோயிற்
சன்னிதியில் வந்தஞ் சலிசெய்தே—மன்னு
நடராச மண்டபத்தை நண்ணிவா ரீசத்
தடமாடிச் சந்திமுடித் தப்பாற்—கடவுண்
மதுநா யகனை மணக்கோலஞ் செய்த
புதுநாக ரீகமடப் பூவை—பதும

முகத்தா ளறம்வளர்த்தாண் முண்டகத்தாள் போற்றி
யகத்தா மரைகுளிர்ந்தே னன்பாய்—மகத்துவஞ்சேர்
பண்பை யறம்வளர்த்த பார்வதியைச் சைவநெறிப்
பண்பை வளர்த்த பராபரையைப்—பண்பயிலுங்
கண்டேய் மொழியைக் கலந்தநக ரீசரையுங்
கண்டேன் றிருமலையுங் கண்களிப்பக்—கண்டே
னடிவார முற்றே யயிலப்பா வுன்பொன்
னடிவார மாகவரு ளென்றே—முடிவணங்கி
மெய்ப்புளக மாக விதிர்விதிர்ப்ப வென்னிரண்டு
கைநடலை மேற்குவித்துக் கண்ணீரான்—மெய்முழுது
மாடினே னெங்க ளருணகிரிபாடல்
பாடினேன் மெல்லப் படிமீதி—னாடியே
யேறியிடும் பன்கோயி லெல்லைகடந் தாலயத்தின்
மாறிலா வீதி வலம்வந்தே—யாறுமுகன்
முன்மண் டபத்து முகப்பிலடுத் தேனெனது
கன்மங்க டீர நமக்கரித்தே—தென்மருகி
லன்னசத்ர சாலை யணிமாட மாளிகையுங்
கன்னிமா ராலயமுங் கற்படியுஞ்—சன்னிதியிற்
பச்சிலைதா னின்றிப் படிதுலைத்துச் சேடன்முடி
யுச்சியணி ரத்தினமு தித்ததுபோன்—மெச்சுதிருச்
செந்தூர் முதலெதிலுந் தெய்வீக முன்னமுகி
ழிந்தீ விரப்பூ வெழுஞ்சுனையும்—வந்து
பரிசு வெதகோடி பன்முறையும் வாழ்த்தித்
தெரிசனஞ்செய் கின்ற சிறப்பு—முரசதிர
மங்கல வாச்சியங்கள் வாழ்த்திசைப்ப மத்தளமுஞ்
சங்கு முழங்கத் தமிழ்முழங்க—மங்கையர்கை
வெண்சா மரையிரட்ட வெண்கவிகை தண்சுருட்டி
யெண்சார் மறையோ ரினிதேந்த—வொண்சுடர்சே
ராலவட்டம் வீச வணியிடக்க யம்பிடிப்பக்
கோலமிட்ட சேவற் கொடியுயர்த்த—நீலமலர்



விக்கிரம பாண்டி யனருள் வேள்வால சுப்ரமண்யன்
சுக்கிரவா ரத்தெடுக்குஞ் சோபிதமு—மொக்கவே
கண்ணாரக் கண்டேன் கவலையொழிந் தேனுடனே
புண்ணுமற் பூரித் துடல்குளிர்ந்தே—னுண்ணுமெனச்
சின்னணைஞ்சான் கட்டளையிற் சிரகச்சம் பாவமைத்த
வன்னமங்கை தந்தா ரருந்தினேன்—சின்னணைஞ்சான்
தந்த துரைபெரிய சாமி திருமலையிற்
கந்தனுக்குப் பாடுங் கவிபாடிப்—பைந்தொடியா
ராடினார் நட்டுவமா ராட்டிவைத்தார் நானதுகொண்
டாடினேன் கண்ணுமு தாகுமென—நாடியே
யென்கவலை தீர்த்தருளென் றெண்ணிநிற்கும் வேளையிலே
தன்கருணை கூர்ந்துதிருச் சன்னிதியி—னன்கா
யசரீர வாக்கெழும்ப வற்புதமி தென்றே
விசுவாச முற்றுவெளி வந்தே—னிசமா
யிடும்பனையுஞ் சேவித் திறைஞ்சிவிடை கொண்டே
நடந்து வடகரையை நாடித்—திடம்பெறவே
மாதுரிய மாகவந்தேன் மட்டுவா சற்காரர்
நீதியுட னையரே நில்லுமென்றார்—வேதியரில்
வித்யாப்ர சங்கியென்றேன் விட்டுவிட்டார் வாசல்கடந்
தக்காணி மண்டபத்து ளாகினேன்—வித்தாரச்
சிங்கா சனமீது தேவேந் திரன்போல
மங்காத வாழ்வுபெறு மார்க்கண்ட—னெங்கோன்
சமுகன் துரைப்பெரிய சாமிமக ராச
சுமுகன் கொலுவையென்ன சொல்வேன்—குமுதவிதழ்
வெண்கமல மங்கைபுனை வெண்படிக மாலையெனத்
தண்கமலக் கொங்கையின்முத் தாரமென—வெண்களின்றி
வீறு யெழுந்தகடல் வெண்டிரைபோ லேயிருபான்
மாறுத வெண்சா மரையிரட்டக்—கூறியசீர்
கட்டியங்க ளார்ப்பக் களிறுசெவி யாட்டுதல்போல்
வட்ட விசிறி மருங்கசைப்பக்—கட்டாய்ப்

பலகவர்த்தி வர்த்திவெகு பாற்கரன்போன் மின்ன
நிலவு மதியொளிபோ னீட—விலகுமணிக்

காளாஞ்சி யோடடப்பைக் காரிரு பானுநிற்க
வாளேந்தி வீரர் மருங்குநிற்ப—நீருரத்ன

கட்டாரி கேடகமுங் கைவேலுங் கல்வெடியும்
பட்டாவுந் தாங்குபரி வாரநிற்ப—விட்டமுறப

பூசுரர்க ளாசி புகன்றட் சதைகொடுப்பத்
தேசரா சாக்கள் சிறந்திருப்ப—வாசமலி

வங்காரி யூர்புரந்த வள்ளலதி யோகமன்னன்
கொங்கார் குவளைபுனை யுங்கோமான்—றுங்கச்

சிதம்பர தாண்டவரா சேந்த்ரன்வர பால
னிதம்பெறுகல் விக்கடலா மென்னுஞ்—சுதந்தரவான்

சந்தங் கலித்துறைசேர்த் தாழிசைவெண் பாவிருத்த
மைந்துங் கலந்தே யகப்பொருளின்—பைந்தமிழிற்

செஞ்சொற் றெரிந்து திருமலைவே லற்கினிதாப்
பஞ்சரத்னக் கோவைதனைப் பாடினோன்—மஞ்சுதிகழ்

சீர்படைத்த கீர்த்திச் சிவகுருநா தேந்த்ரனெனுங்
கார்படைத்த செய்ய கரதலத்தான்—றேரு

மனவார மால்நமசி வாயவர பாலன்
றனவாரை யூர்வருவித் தார—னனதாரு

வெண்ணெண் கலைபுணர்ந்தோ னெண்டிசையெலாம்புகழ்வோன்
றண்ணங் குவளைத் தடம்புயத்தான்—றிண்ணமிக

விங்கிருவர் நாளு மிருபா லினிதிருப்பத்
துங்கநெடு வைப்பெரிய ஸ்வாமிதரு—செங்கண்முகில்

சித்திர புத்ரநிதி சீர்க்குமர சாமிதரு
புத்ர முகில் சுப்ரமண்ய பூபதியு—முத்தமவான்

முத்தமிழ்தேர் கின்றசெல்வ முத்துமுகில் பின்னுதித்த
சத்தியவாய் மைப்பெரிய சாமியுமே—நித்தம்

பாராசர் தாமனுப்பும் பாசுரஞ்சே சோலை
கிரமாக வங்கவர்வா சிப்ப—வரமேவு



மத்ரவிழி யார்மதன னாதிநா ராயணமால்
புத்திரனும் ராமலிங்க பூபாலன்—சித்ர

ஏவனமத ரூப னிருளப்ப னீன்ற
சிவசங் கரராம தீரன்—றவஞ்சேர்

புதுக்காவு தந்த புகழ்ப்பெரிய சாமி
ரதிக்காசை மீறுரெங்க நாதன்—றுதிக்கினிய

காராள னாமுத்து கன்னன்கு மாருமைந்தன்
சீராரும் ராமலிங்க சீதரனும்—பாரிலிவர்

நெல்லும் பணமு நிலுவைவர வும்பிறவுஞ்
சொல்லுங் கணக்குந் தொகுத்துரைப்பக்—கல்வி

யருண சலநிதிகொட் டாரஞ்சேர் நெல்லுக்
குரையாணி போலுற் றுரைப்ப—மருவு

வரிசையாய் ராணுவத்தார் வாரிட்டு நிற்பப்
பொருமரச ரும்பணிந்து போற்ற—விருதுசெய

வித்வசனர் முத்தமிழ்வி ரித்தமுத மொத்தறைய
வித்துரும முற்றவிதழ் மின்னனையார்—நிர்த்தமிடச்

சங்கீத நட்டுவமார் தாளத் துடனியற்றச்
சிங்கார ரூபமதன் செம்புலிவேள்—கொங்காருங்

கும்பப்ப யோதரப்பூங் கோதைமட வார்விரகந்
தங்குமதி ரூப சவுந்தரிக—னெங்கணிறை

கல்வி முழுதுங் கரைகண்டோன் பூங்கமலச்
செல்விகுடி கொண்ட திருமுகத்தான்—வில்விசையன்

சங்கரலிங் கேந்த்ரன்முத்து சாமி சகோதரவுத்
துங்கன் பெரிய சுவாமிமன்னன்—மங்காத

வாரத் துரைராம சாமிமுனம் வந்தருளு
தாரத் துரைபெரிய சாமிமன்ன—னோர்பெருகு

காமன்காத் தப்பனருள் கன்னன்முத்து வீருசொக்கை
மாம னெனவுரைக்கு மானபரன்—சோமனிகர்

நாராயண ராதிபதி நல்குமுத்து சாமிதனை
மாரனிகர் மாணிக்க வாசகத்தைத்—தீர

னிருளணைஞ்சு பால னெழிற்பெரிய சாமி
யருமைதரு செண்பககுற் றாலம்—வருமிவரை

மைந்தரெனச் சொல்லு மகராசன் ராமுதகு
தந்த்ரமதி யூகி தளசிங்கஞ்—செந்தமிழோர்க்

கைந்தருப்போற் றந்தருள்சின் னாண்டி நராதிபதி
சுந்தரவீ மன்பெரிய ஸ்வாமிக்கும்—வந்த

சிவனடியா னீன்ற திறற்பெரிய ஸ்வாமி
புவனிபுகழ் ராமசந்த்ரன் பூவு—சிவனுகர

பாரிகாத் தப்பனருள் பண்டார ராசனருள்
சீரார் சிதம்பரகுற் றாலவேண்—மாரன்

றிருமலைமுத் துக்குரிசில் செல்வன் கவிஞர்க்
கருமைசெயுஞ் சங்கரகுற் றாலம்—பெருமைத்

திருமலைவே லுக்ருஷ்ட்ண தீரன்பண் டாரந்
தருபெரிய சாமிதிட சாலி—கனைவாழ்

அருவன் பெரிய சுவாமி குமாரு
தருசிதம்ப ரம்பின்வரு தம்பி—யுரிமைதரு

ராஜகோ பாலனையு நன்மைத் துனனென்போன்
காசினியோர் தோத்திரஞ்செய் கார்மேகம்—வீசுபுகழ்

விற்பனமா லட்சு மணப்பெருமா னீன்றெடுத்த
பொற்பணியுஞ் சின்னணைஞ்சு பூபால—னற்புதஞ்சேர்

மன்னன்காத் தப்பன் மகன்பெரிய சாமிகொடைக்
தென்னன்மா யாண்டி திறற்பால—னின்னிலத்தி

னத்தேந் தியசிவனு ராசகோ பாலன்மகன்
முத்திரு ளப்ப முகில்வண்ணன்—சுத்த

ரணவீரன் மிக்கபுகழ் நாட்டுபிறை சூடி
குணசாலி வெள்ளையன்கு மாரன்—மணமேற

தீதமுல்லை வேய்ந்த சிவனடி யான்றனையு
மாதயவு கூர்ந்துமரு மக்களென்போ—னீதமுறு

மங்கையர்வேள் புன்னை வனத்தரு சூர்ப்பநகி
சங்கரகு மாருதரு சந்ததியார்—துங்கமிகு



சின்னாண்டி ராயன் சிதம்பரபூ பாலனுயர்
மன்ன னெனுஞ்சே வகப்பெருமா—னன்மைதரு

கொண்ட லனைய குமாரவேண் மாயாண்டி
தண்டமிழோர் வாழ்த்து தருமவான்—புண்டரிகக்

கண்ண னிகரான் கயிலாச பூபதிவேய்ப்
பண்ணிசைந்த ராசகோ பாலனையு—மண்ணுலகிற்

கற்றவரெல் லாந்துதிக்கக் காவலவர் கொண்டாட
நற்றுணைவ ரென்று நவிலுவோன்—சொற்றேர்ந்

திதவாய்மை கூறு மெழிற்சின் னணைஞ்சான்
சுதனும் பெரிய சுவாமி—நிதிராசன்

வாசமிகு முல்லைமலர் மாலைபுனை யும்புயத்தான்
போசனென வீற்றிருக்கும் போதிலே—நேசமுற

விந்தைபெறும் ராஜ விசையீ பவாவென்று
சந்தமுற வாசீர்வா தம்புரிந்தேன்—முந்துறவே

மன்னன் முகமலர்ந்து வாரீ ரெனவழைத்தே
முன்ன மிருத்தி முகநோக்கிப்—பன்னுமறை

விப்பிரரே யேதுடல மெத்த விளைத்ததென்று
னெப்பொழுதே தோத்திரஞ்செய் தன்பாக—விப்புவியில்

வாய்மையரிச் சந்த்ரா மகராசர் பஞ்சவர்ச
காயதோர்த் தண்டமார்க் கண்டனே—தூயசிவ

தாசநே யாசருவ சாம்ப்ராச்ய லச்சுமிநி
வாசகா ருண்ய மதிவதனு—நேசமுறு

தெய்வபரி பூர்ண சிவகலைநின் றோங்கிவளர்
சைவர் தழையவரு தண்மதியே—செய்ய

மனுராச செண்பக வனப்புவிரா சேந்த்ர
தனுராச ராமாவதாரா—வெனவே

வரிசைவச னபூர்வ மாக வடநூற்
பாசுலோ கங்கள் பகர்ந்தேன்—துரைமனது

மெய்த்து முகமலர்ந்து மிக்ககணை யாழியுடன்
கொத்துச் சரப்பணியுங் கோலமணி—வைத்தொளிரும்

தங்கக் கடுக்கனுமுத் தாரமும்பொன் னுன்முடிரு
மங்கைக் கடக மரைநாணு—மிங்கிதலாற்

சாலுவை சாதிரைபீ தாம்பரமெல் லாரும்வியப்
பாலுவகை கூர்தகட்டுப் பாகுடனே—சீலமுறும்

மம்புயமான் சேர்சீனி யையம் பெருமாளைச்
செம்புலிவேள் கொண்டுவரச் செப்பினான்—சொம்புதிக

ழக்கலிங்க மும்பூணு மாங்கவன்வைத் தானதின்மேற்
சொக்கலிங்கம் வைத்தநிதி சொல்லுவதே—னக்கணமே

தானுவந்து தந்தான் தமிழ்ப்பெரிய சாமியெங்கோன்
மேன்மையுடன் வாங்கி விடைகொண்டே—நானுமன்பால்

வந்தேனெனது வரவு தமிழ்விறலி
செந்தேன் மொழிவிறலி செப்பெனலு—மந்தப்

படியே மதுரமொழிப் பாடினிசென் றங்கே
துடிநே ரிடையாட்குச் சொல்லப்—பிடிநடையாள்

சிந்தை குளிர்ந்தே திருமுகமுந் தான்மலர்ந்தே
பந்தனைய கொங்கையிணை பாரித்தே—வந்துலவு

மேகத்தைக் கண்டுவந்த மேகாரம் போலுமதி
யாகத்தைக் கண்டசகோ ரம்போலு—மோக

மணவாளர் தம்மெதிரே வந்திறைஞ்ச நெஞ்சக்
குணமாது தன்னுடனே கூடித்—தணவாது

மெல்லிநல்லா டோள்சேர வேணுமென வவ்வைசொன்ன
சொல்லின் வழியே சுகமுற்றே—னல்லிமலர்ப்

பூமாதுஞ் செய்ய புகழ்மாது மிக்கசெய
மாமாதுந் தங்கி மனமகிழச்—சோமனெனுஞ்

சின்னணைஞ்ச ராசேந்த்ரன் சேய்பெரிய சாமிமன்ன
னிங்கிலத்தில் வாழி யினிது.

விறலிவிடுதூது, முற்றும்.

---

339

உ

# இரத்தினாகர விலாசம்.

## சாற்றுக்கவி.

---

ஆனதொளா யிரத்தறுபத் தைந்ததனி லாவணியி லஞ்சாந் தெய்தி
வானவர்கோன் சின்னணைஞ்சேந் திரனீன்ற வடகரைப்பெ ரியசா
தேனுலவு மொழிக்கவிஞன் றிருமலைவே லிரத்தினா கரவிலாச[மிக்கே
மானதனை மணத்தல்செய்து வளமுறவே பரிசில்பெற்று மகிழ்வுற்றானே

---

# வடகரைப்

# பெரியசுவாமித் துரையவர்கள் பேரில்

## திருமலைவேற் கவிராயரவர்களியற்றிய

# இரத்தினாகர விலாசம்

---

### காப்பு.

மண்டலா திபர்கொண் டாடு மன்னவன் பெரிய சாமி
கொண்டல்போற் கனக மாரி கொடுத்தருண் முகுந்தன் மீதே
யெண்டிசை புகழுங் கீர்த்தி யிரத்தினா கரவி லாசத்
தண்டமிழ்க் கொருகோட் டுச்சித் தந்தியைச் சிந்தை செய்வாம்.

### நூல்.

கார்பொருந்திய சீர்சிறந்த தியாகயோக தயாபரன்
கமலமண்டப மயில்விரும்பிய மருமனாடிய பூதர
னேர்பொருந்திய கோடிமன்மத ரூபசுருவ பூமனீ
ளெண்டிசைக்குளுயர் மண்டலத்தரசர் கண்டுதெண்டனிடு தொலுவினான்
றூர்பொருந்திய வீரராகவ ராமசோமகிர் பாகரன்
றந்தியென் றுமினி யஞ்சலஞ்சலென வந்துவந்தருள்செய் செம்புலிப்
பேர்பொருந்திவளர் சின்னணைஞ்சபெரு மான்மகிபதி வரோதயன்
பெரியசாமியிரு பதியானதுரை பெரியசாமிமக ராசனே. (1)

### வேறு

திருமலைக்கு மாரவீர செம்புலிக்கட் டாரிவேள்
சேரசோழ ராதிராசர் திறைகுவிக்கும் வாசலான்
முருகுமொய்த்த தளவம்வைத்த முடிபொறுத்த பாண்டியன்
முத்தமிழ்ப்ர பந்தவாணர் துத்தியஞ்செய் புகழினான்
வரிசைபெற்ற வடகரைத்து ரைத்ரிகூட பதியினார்
மதனனெங்கள் பெரியசாமி ப்ரபலயோக விசையமால்
தரணிமெய்க்கு மன்னசத்ர சாலைசோலை பாடக
சாலைவேள்வி தருமவாய்மை பெருகவே வளர்ப்பனே. (2)



### வேறு.

பரிவா ரமும்வெஞ் சிலையும்வெடி பயினும் வாளை யேந்துதனம்
பல்கு மாம்பல் சேருவையும் பகடும் பாயு மாக்குதிரைத்
திரளு மதிக்குந் தேவர்களுஞ் செல்லு மனுமப் பூங்கொடியுஞ்
சேரக் கனக தண்டிகைமேற் றிகழப் பவனி வந்திடலாற்
றுரைகண் மகுட சிகாமணிமெய்த் துருவன் ராம சுவாமிதுணைத்
துங்கன் பெரிய சாமியுலாத் தோற்றம் போலத் தெரிகடலே
விரிச ரோச முடையாய்நீ மிஞ்ச ரோச முடையேன்யான்
விருப்பற் றிருந்தா யென்னுரையை விருப்புற் றினிநீ கேட்பாயே. ()

வாரு மலையும் பயோதரமும் வரிவண் டணிபூங் காங்களுங்கு
வலைய முடுக்கு மம்பகமு மலரா னனமும் படைத்தேனன்
வாரு மலையும் பயோதரமும் வரிவண் டணிபூங் காங்களுங்கு
வலைய முடுக்கு மம்பகமு மலரா னனமும் படைத்தாய்நீ
பாரம் பரிய மெங்கள்துரை பாரிப் பெரிய சாமியுலாப்
பார்த்து மாலுக் கிடமானேன் பரிதி மாலுக் கிடமானாய்ப்
சாரு மதனா லிருவோருஞ் சரியா யிருந்தோங் கடலேமோ
தலையே கலையே மலையேசந் தனமே கனமே கேட்பீரே (4)

வள்ளைக் கொடியே மருங்கலையே மருங்கே யிராத மருங்கலையே
வாச நளின வராடகமே வசந்தன் மாது வராடகமே
வெள்ளைக் கரைசூ ழுடம்பினமே விதனந் தரும்வே ளடம்பினமே
விரைப்பா னலத்தி னமைப்போதே விழிகள் பொருந்தா திமைப்
துள்ளித் திரிபாய் மகரமே சுடுமே மதியி மகரமே [போதே
சுற்றும் புளினத் திடத்தயிரே துடிக்கு முளமத் திடத்தயிரே
பிள்ளைக் குருகே தாராவே பிருகந் தளவந் தாராவே
பெரிய சாமி துரைக்கனமே பேசா மாலோ துரைக்கனமே. (5)

அருமைப் புன்னை கப்பணையே யயர்த்தேன் வயாமிக் கப்பணையே
ய ணியாய் மறுகந் தரங்கமே யாரே யெனக்கந் தரங்கமே
விரைமொய்த் திருக்குந் தாமரையே விலக்கி ரிலஞ்சித் தாமரையே
விலங்குந் தவளப் பணிலமே மேவத் தவமுன் பணிலமே

தரணிக் குடைசேர் மயிலையே சந்து விடுத்தேன் மயிலையே
சாதி பொழிதா லக்கரையே தளவத் தொடைமே லக்கரையே
பிரசத் தினங்கள் விரும்புகளே பெண்கண் மனதன் விரும்புகளே
பெரிய சாமி துரைக்கனமே பேசா மாலோ துரைக்கனமே. (6)

சுரிவால் வளையே யஞ்சாயே துபர்க்கோர் வித்தா மஞ்சாயே
துன்னு மலர்சே ரளியாரே தொடைவெண் டளவ மளியாரே
விரிநீ ருவரிக் கரும்பாரே வேளுக் களித்தார் கரும்பாரே
வெண்கோ கனகத் தாசலமே விரும்புஞ் சகிதா யாசலமே
யுரைவா லுகமே வாருதியே யுண்பா னுயிரை வாருதியே
யுறுசீ கரத்தின் கோசனையே யுரைப்பார் பலரிங் கோசனையே
பெருநா வாயே யடங்காரே பிறர்நா வாயே யடங்காரே
பெரிய சாமி துரைக்கனமே பேசா மாலோ துரைக்கனமே. (7)

அடைசேர் நாக மஞ்சரியே யகன்றே போகு மஞ்சரியே
யதிர்வி ரையின்வா யாதனமே யாமே பசலை யாதனமே
புடையே யிருக்குஞ் சராசரமே பொருவான் வேளொன் சராசரமே
பொன்சேர் நெய்தன் மாதவமே பொய்யோ யான்செய் மாதவமே
படர்சே தாம்பற் றுன்னலரே பரிவி லயலார் துன்னலரே
பசிய தாழை முள்ளீரே படும்பா டொன்று முள்ளீரே
பெடையோ டுறைவண் டானமே பிரிந்தேன் பணைவண் டானமே
பெரிய சாமி துரைக்கனமே பேசா மாலோ துரைக்கனமே. (8)

அரும்புன் னைகத் துணரீரே யாசைக் குறிப்ப துணரீரே
யள்ள றழைக்க வருங்குளிரே யாவி நுகர வருங்குளிரே
வரும்ப ரிசைசேர் கமடமே மால்கொண் டதும கமடமே
வளரும் பவளக் காவலியே மதன்காட் டுவன்பார் காவலியே
நெருங்குந் தாலக் காயினமே நிலாத்தீக் காலக் காயினமே
நீலஞ் சொரியா சடைத்தேனே நெஞ்ச மிகவுஞ் சடைத்தேனே
பெருந்தா ழையினன் மடலினமேபெறுந்தாய்க்கெனக்குமடலினமே
பெரிய சாமி துரைக்கனமே பேசா மாலோ துரைக்கனமே. (9)



சிறக்குந் திகிரி வாரணம்பொன் செந்தா மரைக்க ணம்பொருந்தித்
திகழு மாமை மாக்கோடு செங்கை யேந்த லாலரிநேர்
நிறக்குங் குமமா ணிக்கவரை நிருபன் பெரிய சாமியெங்கோ
னிறையுங் கருணைப் பெருக்கேபோ னிலைக்குந் தரங்கக் கருங்கடலே
யுறக்க மதனை யேவிடுத்தே னுறக்க மதனை யேயடுத்தா
யோங்கு மதியா னுளமெலிந்தே னுலவா மதியா னுளமலிந்தாய்
அறக்குந் தலைவ னைகமுறேன் சூழுந் தலைவ னைகமுற்றாய்
சொல்லும் போத மிகுந்தேனே துறவாப் போத மிகுந்தாயே. (10)

அமையு மமைய மிடம்பொருந்து மாரம் புலியு மறுகுழிசை
யணிவாஞ் சிகர மேந்துதலா லமலா னந்தப் பரஞ்சுடராஞ்
சிமைய நெடுமா ணிக்கவரைத் தீரன் றுரைச்சின் னணைஞ்சேசந்த்ரன்
செல்வன் பெரிய சாமிபெங்கோன் சித்த மகிழும் வாருதியே
சுமைபார் காண்வண் டலரேவெஞ்சுமையார் தமம்வாரணம்பொதியத்
துதிக்கும்வளிந்தோ மாதரெனத்துதிக்கும்படையுமுடையவில்வேள்
சமரா டுவனீ கொண்டனையே தரித்தா மவற்குக் கொண்டனையே
தாளிக் கிடராங் கோடனையே சரியா மனது கோடனையே. (11)

சங்கம் பொருந்திப் பல்குதிரை தானே பெருமான் முன்செலுத்திச்
சார்ந்தே கங்கை யம்பிகைசேர் தாத்தாற் சந்த்ர சேகரன்போற்
பொங்கு கருப்பா நதிச்சார்வ பூமன் முத்து சாமிதுணைப்
பூமான் பெரிய சாமியெங்கோன் புகழ்போ லோங்குங் கருங்கடலே
செங்கண் மாலை யாதரித்தாய் தீரா மாலை யாதரித்தேன் [றேன்
றினமு மெலிவாய்ப் புலம்பலுற்றாய் தேடி மெலிவாய்ப் புலம்பலுற்
பங்க மடுத்துப் பயப்படுவாய் பங்க மடுத்துப் பயப்படுவேன்
பாரா வாரத் தாபெணக்கன் பாரா வர்ரா தாய்சகியே. (12)

மருவந் தரங்க மிசைந்திடலால் வளர்பொங் கருளை நிறைந்திடலான்
மருதத் தூரிற் றவழ்ந்திடலான் மாலே போலுங் கருப்பாநதி
நிருப னிருபர் சிகாமணியி னேம நேமி வரைவரைதன்
னேமி செலுத்து மனுபதிமெய் நீதன் பெரிய சாமிதுரைக்

துருவன் மருவா நாளரியே சூழு மருவா நாளமரை
றன்னு முனையம் பாமேவே டொடுக்கு முனையம் பாமாமே
யுருவம் பசந்தாய் மாறுடமுன் னுருவம் பசந்தா வும்பரிவே
ளுடைய வேலை யேதொடவுள் ளுடைய வேலை யிரங்காயே. (13)

கண்ணு றுறு பொருந்தியுமாக் கனிகுஞ் சரிசேர் மணம்பொருந்தங்
காவ றனிளுற் கந்தனைநேர் காணுஞ் செழுங்கல் லகநாடன்
றண்ணார் புகழ்ச்சங் கரலிங்க சாமி ராம சாமிமுத்து
சாமி துணைவன் றுரைப்பெரிய சாமி தளம்போற் கருங்கடலே
விண்ணு டருக்கன் றமரிதந்தாய் விண்ணு டருக்கன் றமரிதந்தான்
வேலா வலையப் பேர்படைத்தாய் வேலா வலைய மாவசையே
பெண்ணு வாரார் மாற்றுடையார் பேணு வாரார் மாற்குடையாய்
பிறங்க லடக்கும் பாய்திரையே பிறங்க லடக்கும் பாய்வருமே. (14)

கலைகல் லகநா வலர்துதிக்குங் கனகல் லகநா டனைநிரைக்காய்க்
கவிக்கல் லகனு யகனையிருட் கவிக்கல் லகனு தனைப்பொருஞ்சூர்
நிலைகல் லயில்வே லனைப்பணியு நீதிப் பெரிய சாமிசெக
நிருபா திபனைப் பரவார்போ னித்த மிரங்குங் கருங்கடல்வா
யலர்மல் கியசெம் பறிவையே யடல்வே டொடுமம் பறிவையே
யஞ்சு மலரு மென்னுளு மஞ்சு மலரும் பொறுப்பேனு
வுலகம் பிறரங் கருவரியே யுகாந்த காலங் கருவரியே
யுறக்கம் பலத்திற் படுத்தானு முறக்கம் பலக்கண் படையாதே. (15)

ஆருந் துதிக்கை யுறக்கோட்டை யமைந்தே வலவை யிடம்பொருந்தி
யரிய தானந் தருமநிறை வாலே கணேசன் றனைப்போலுங்
காரு லாவு கிழவைவட கரைச்சின் னணைஞ்ச பெருமான்சேய்ப்
கண்ணன் பெரிய சாமியெண்ணொண் கலைபோ னிறைந்தகருங்கடலே
பாரங் குறையக் களித்தாய்வாள் பாரங் குறையக் களித்தான்வேள்
பசும்பா னலமுங் கசலமுள்ளாய் பசும்பா னலமுங் கசந்தேனே
சாரு மாசை யடங்கலையே சற்று மாசை யடங்கலையே [றுமே.
தவழ்சந் தனத்தை யெறிதிரையே தனிச்சந் தனத்தைத் தணம்பெ



ஆம்பல் களித்தா னச்சலதி யாம்பல் களித்தா னப்புனலோன்
றுநிச் சேறு மிகுவிந்தி யன்ந்தந் சேறு மிகநடக்கும்
பூம்பங் கயமான் மகிழ்கிழுவா புரியில் விசையம் புரிவிசையன்
பூமான் பெரிய சாமியெங்கோன் புகழ்போ லோங்குங் கருங்கடலே
வேம்பு நிசா மிதவையே வெள்ளத் துகளு மிதவையே
மேகம் விருந்து ணங்காலே விடியா விருந்து ணங்காலே
தேம்பாய் நாகக் கொப்பாரே தென்கா லலதாய்க் கொப்பாரே
திகழ்கண் டலமா ருங்கவடே செய்தார் சகிமா ருங்கவடே. (17)

மானந் தனவ னம்பொருந்தி வாசித் திடவே டெடுத்திசைநூல்
வாய்ந்தம் புயமேற் பொருந்திடலால் வாணி தனையே நிகராகுந்
தேனுந் தேனுஞ்செறியுமுல்லைத்தெரிய லுடையான்சின்னணைஞ்சேந்
திரன்சேய் பெரிய சாமிநிறை செல்வம் போலுஞ் செழுங்கடலே
பானந் தனைபே வெறுத்தேனின் பானந் தனையே பொறுத்தாயே
பாச மாமேற் கொண்டாய்நன் பாச மாமேற் கொண்டான்வேள்
பேனந் தமரஞ் சார்வாயன் பேனந் தமரஞ் சார்வாயென்
பிழைப்புக்கரைக்குறைசொலுவேன்பெட்புக்காரைக்குறைத்தாரே

வண்டு சாதி யுண்மாலை வண்டு சாதி மடவார்கண்
மடலே யெடுக்க முகையவிழ மடலே யெடுக்கு மலர்த்தளவங்
கொண்ட புயபூ தரணிதியங் கொண்ட லெனவே பாவலர்க்குக்
கொடுக்கும் பெரிய சாமியெங்கோன் கொடைபோ லோங்குங் குரைகடலே
தண்ட காரை நிகராங்கோ தண்ட காரை மார்முனமே
தக்க கனலி சாபமதி தக்க கனலி போலாமே
புண்ட ரீகக் கண்டகமே புகலு முடங்கற் கண்டகமே
போர்வே லெடுத்தான்கொக்கரையேபொன்னூர்மாதர்கொக்கரையே.

வெய்ய நாகந் தனைச்சீறி விளங்கு மாலை மேற்கொண்டே
மிகுபொன் னண்டத் துற்றிடலான் மிக்க மகவான் றனைப்போலுஞ்
செய்ய கருட கேதனமா றிறற்செம் புலிச்சின் னணைஞ்சேந்த்ரன்
செல்வன் பெரிய சாமியெங்கோன் சித்த மகிழுந் திரைக்கடலே

துப்ப வனம்பாங் கிசைந்தாய்நீ சொல்லெவ் வனம்பாங் கியர்பாரார்
தொலைவில் கணப்பா றுடையாய்நீ சொரியுங் கணப்பா றுடையேனான்
மையி லிலங்கைத் திடர்சேர்ந்தாய் மாலா லிலங்கைத் திடர்சேர்ந்தேன்
வழுதி கூடல் வளர்ந்தாய்நீ மறுகிக் கூடல் வளர்ந்தேனே. (20)

உரக படந்தா னவருடைய வுரக படமா மணிசிதறு [த்தோன்
முரத்து வணப்பூங்கொடியுயர்த்தோ னுரத்து வணப்பூங் கொடிதரி
கரக முலைபார் தமக்கினிய காமன் சோமன் வீமன்மலர்க்
காமன் பெரிய சாமியெங்கோன் கருத்துங் கிசைந்த சலதியே
விரக மதற்கோ ரளவிலையே மேக சால மளவிலையே
மேவு மடற்கே தகைத்தேனே வில்லே வடற்கே தகைத்தேனே
இரவன் றில்லா யடையாரே இகழ்வன் றில்லா யடையாரே
சிந்து வாரத் தம்பலரே சிந்து வாரத் தம்பலரே. (21)

அரிமே வியவம் புயப்பொருட்டார்ந் தண்டம் படைத்து மான்மகனா
யஞ்சம் பொறுத்த லான்மலர்மே லமரும் பிரம தேவனைநேர்
விரியு மனும கேதனத்தான் வேண்முத் திருளப் பன்மருகன்
வேந்தன் பெரிய சாமியெங்கோன் விசயம் போன்ற கருங்கடலே
துருவுஞ் சிலமா தரையடுத்தாய் தூது சிலமா தரைவிடுத்தேன்
சொல்வஞ் சகமுள் ளடக்கியுற்றாய் சூழ்வஞ் சகஞ்சே டியர்புரிந்தார்
கருத லருங்கா யலுமுறவே காட்ட வருங்கா யலும்பகையே
கம்ப வளம்பெற் றாய்மிகுஞ்சோ கம்ப வளவாய் புலர்ந்தேனே. (22)

ஆழி யெறியுந் திரையெறிநீ ராழி தாவிப் போந்தகணை
யாழி சனகிக் களித்தோசா ராழி முகிலை யடிபரவும்
வாழி யனும கேதனத்தான் மாமால் துரைச்சின் னணைஞ்சேந்த்ரன்
மைந்தன் பெரிய சாமியெங்கோன் மனது மகிழுங் கருங்கடலே
வீழி யிதழார் செறுனரம்பை மேய்ந்து திரியுஞ் செறுனரம்பை
மின்னார் வரப்பெற் றாய்தினமு மேவ வரப்பெற் றாய்நின்றாய்
நாழி தொலையா தியாமினியே நகைக்கென் செய்வ தியாமினியே
நன்னந் தினமுள் ளுடையாயுண் ணன்னந் தினமும் வெறுத்தேனே.



விரும்பு மரும்பு கருமன்றம் விளங்கு மனமுந் திருந்தவென்றும்
விரியுந் தளத்தாற் பொருந்தலரை மிகவா தரிக்கு மதனாலே
சுரும்பும் படிகற் பகதருநேர் சொல்லு மணிமும் முரசுடையான்
துங்கன் பெரிய சாமிதுரைச் சுமுகன் சமுகம் போற்கடலே
மருந்து மதனஞ் செயக்கொடுத்தாய் மலர்க்கோ மதனஞ் செயக்கொடுத்தான்
வனசங் கரமாத் திரைசடையான் வனசக் கரமாத் திரையுடையாய்
பொருந்தந் தகராங் குலத்தினுக்குப் போதந் தகராம் பயந்தவரே
போதா ரவட லுக்ககன்றார் போதா ரவடம் பொரிந்தனவே. (24)

தாமக் கோடு கொண்டுகும்பத் தானத் தந்தா வளமென்பேர்
சார்த லாலே பொதியவரை தனைநேர் தடக்கை வாரணத்தான்
மாமற் புயன்சங் காலிங்க மான்முத் திருளப் பன்பெருமு
மருகன் பெரிய சாமிசெல்வ வளம்போ லோங்கும் வளைகடலே
காமக் கவலை யாற்றனத்தைக் கழுவக் கவலை யாலிகண்டு
காத லனைமார் பணைத்தாரே காத லனைமார் பணைத்திலனே
பூமிக் குடையா யினைமதன்போர் புரிமிக் குடையா யினன்புலிபோற்
பொருந்தென் றலையார் விதித்தாரோ பொருந்தென் றலையார் விதியாமே. (25)

வேறு.

திண்டுமிண்டு கொண்டகண்டர் சிந்தைநொந்து சிந்தவே
திண்கைகொண்ட டர்ந்திரண்டு கொம்புகொண்டு மண்டியே
யண்டரண்ட முங்குலுங்க நின்றதிர்ந்த தந்தியா
னனகனெங்கள் பெரியசாமி துரைமகிழ்ந்த சலதியே
விண்டுனக்கு ரைப்பனின்று விண்டுபுத்தி ரன்கையில்
வீரவேள்க ருப்புவில்லவ் வீரமேவு வெண்பிறை
சண்டவாளி யிடுவவன்ப்ர சண்டவேக மென்சொல்வேன்
றனியிரங்கு நீயிரங்கு தனியிரங்கெ னக்கரோ. (26)

வடகர்கொங்கர் குடகர்வங்கர் மகதரங்கர் செஞ்சியார்
வருகலிங்கர் மகுடபந்தி மணிகள்சிந்த மண்டியே
கடகடென்று குமுறுகின்ற கம்பகும்ப தந்தியான்
கண்ணனெங்கள் பெரியசாமி யுண்ணயந்த சலதியே

குடதலங்கள் விம்மு யுந்த ரூபமைந்த புனலினுற்
குளமலந்து மாரலைவ நுமலந்து மீனமே
படைராவிய திக்கவாயு படைராவிய வைமுறும்
பாரமுந்து மாகமேலைப் பாலைமுந்து மாகமே. (27)

காதுமுந்த வீரமுந்த காவிரித்த மாடவே
காலகத்தர் மாகதத்தர் கால்கைபற்று வீழவே
மோதி முட்டி வீசும்வெற்றி முரிமத்த யானையான்
முச்சகந்தொல் பெரியசாமி மெச்சுகின்ற சலதியே
சேதுபர்ச்சி பெற்றிநீநெஞ் சேதுபர்க்கு ளாகுமோ
சிறியசங்கை புடையைமையல் பெரியசங்கை யானதாற்
றுதிருக்கு முல்லைமாலை தாதிருக்கு லாவிலாழ்
தாமரைக்க ணண்ணல்கற்ப மாமரைக்க ணங்களா. (28)

கொட்டமிட்ட துட்டர்வெட்டெ யிற்பரப்பை முட்டியே
கொத்தளத்த டித்திரட்டை பெற்றிமுற் காத்திறற்
றட்டிவட்ட மிட்டசக்ர வெற்பிடித்த தந்தியான்
றனதனெங்கள் பெரியசாமி துரைவிரும்பு சலதியே
யிட்டகன்று கங்கணங்கை விட்டகன்று போனதா
யிரங்கலங்க ருண்டுநெஞ் சிரங்கலங்க லைக்குறு
மட்டரும்பு மொத்தியார மட்டரும்பு விக்குளா
மஞ்சினங்க ளசைக்கும் வெஞ்சினங்கண் மீறுமே. (29)

அட்டதிக்கி னிற்கும்வெற்றி யத்திபைச்சி னத்தொரே
மூத்திபைக்க லக்கியுக்ர வக்ரமச்செ ருக்கினு
லெட்டுவெற்பி னைப்பிடித்தெ டுத்தடிக்கும் யானையா
னிர்த்ரனெங்கள் பெரியசாமி சிந்தைதங்கு சலதியே
தொட்டிடுந்தி லகம்வெறுத்த றொட்டிடும்பு வசமினுர்
சொல்லுவார்கள் வாய்நெகிழ்ந்து துன்னுவார்கண் மலர்புனை
மட்டிலாத வான்விரும்பு மட்டிலாரு நீயுமே
வந்துமாலை தருதிசீறு வந்துமாலை யனிலமே. (30)



வேறு.

சீரார் குரலைவ் வுளைபொருந்தித் தெரிபா வடிகொண் டேகவியத்
திகழு மாதி கத்தினிலே செவ்வா யுறலாற் புலவரைநேர்
போரார் கவனப் பரிகுலன் போசன் றுரைச்சின் னணைஞ்சேந்த்ரன்
புதல்வன் பெரிய சாமிகினை போலே பெருதுங் கருங்கடலே
பேரா தமரும் பாசமுற்றுப் பேசா தமரும் பாசமற்றூர்
பீடார் தாரா தாரமுள்ளாய் பீர்க்கே தாரா தாரமுள்ளாய்
காரார் பெண்ணைக் கருக்குவரே காதற் பெண்ணைக் கருக்குவர்பு
கலக்கம் பார்வை தருமேமால் கலக்கம் பார வருந்தினையே. (31)

வேறு.

கடல்கலங்க விருதுகொண்ட கபடர்நெஞ்சு பதறவே
கதிமிகுந்த பவுரிகொண்டு களபபந்தி சிதறவே
யடன்மிகுந்த விசையின்மண்டு மனிலமென்ற புரவியா
னனகனெங்கள் பெரியசாமி மனதுவந்த சலதியே
நடலையன்று கொடுமையேசெய் நடலையேநி கர்த்திடா
நகையனத்த மேமினர்க ணகையனத்த மாகுமே
விடமதாகு மமுதசார விடமமார னிகல்செய்வான்
மிகுமபக்க மேதவிர்க்கும் வெகுமபக்க மாகுமே. (32)

துன்னலார்க டங்கிரீட சென்னிசின்ன பின்னமாய்ச்
சொரியுமூளை கொளுகொளென்று வழிபவேகு தித்திடுங்
கன்னசாம ரங்குலாவு கின்றவென்றி வாசியான்
கத்தனெங்கள் பெரியசாமி சித்தமெச்சு முவரியே
யன்னலார முடையநீயு மன்னலார்வ ருந்தவே
ளம்புராசி சொரிதல்பார்த்தி யம்புராசி யாதலான்
மன்னனங்கை யாலணைக்கின் மன்னனங்க னென்செய்வான்
வாதுபூச லொழியுமேச வாதுபூச லாகுமே. (33

வாகைகொண்ட சாரிகொண்டு வாதுமிண்ட ரோடவே
வானகம்பொன் மேருவண்ட மாதிரங்க ளூடுலாய்
வேகமிஞ்சி மேலெழும்பு வீரவென்றி வாசியான்
விருதுகொண்ட பெரியசாமி கருணைதங்கு முவரியே

யாகமென்று மெலிகுவேனை யாகமென்ற குருமணி
வப்புமார னெய்துவானுன் னப்புமார வொண்ணுமோ
நாகதாரி யுண்ணவேழு ஞகநஞ்ச ளித்தநீ
நன்மைபாழி யென்னவெற்கு நன்மையா யிருத்தியே. (34)

வீரசூர திரகோர மேவலார்க ளோடியே
வீழுவாளி யேறுபோல மீதுதாவி மோதியே
சாரிகோடி கோடியோடி யாடிமீளும் வாசியான்
றனதனெங்கள் பெரியசாமி மனதுவந்த சலதியே
யாரவில்லை பூசவில்லை யாரவில்லை யமுதமு
மஞ்சனங்க ணெழுதவில்லை யஞ்சனங்க ளமரரே
பாரவல்லி வள்ளைபேகண் பாரவல்லி மலர்நறும்
பாயலுங்க ணிந்திநெஞ்செய் பாபலுங்கும் பானமே. (35)

மக்கர்மச்ச ரைத்தரத்தி மைக்களிக்க டத்துமான்
மத்தகப்பொ ருப்பினுச்சி வைத்தடித்து வைத்துமே
மூங்கிரப்ப ரிக்குலத்தி ளைச்சினத்த வாசியா
னுலகளந்த பெரியசாமி யுளமகிழ்ந்த சலதியே
யக்கரத்தை நேர்மிஞர்மெலக்கரத்தி ஞலென்மே
லப்புமாரம் வெப்புமார னப்புமாரல் குளிசமே
யிக்கருத்தி யளிகளென்றுனிக்கருத்தி னென்னநீ
யேதுமோர்கி லீதிதற்கொ ரேதுமோதி லீர்களே. (36)

வேறு.

சத்தி படைத்தே யாறுதலை தாங்கலாலும் புட்கலைக்கா
தாவினுணே வாய்ந்திடுஞ் சரமேபூட்ட லாலும்விண்ணோர்
பத்திபுரியுந் திரிகூட பதிபைப்பதிநேர் திருமலையெம்
பரனாரச கோபாலப் பரந்தாமனைபன் னவனையொப்பா
ரெத்தன்பெரிய சாமிபைபு கினைத்தேயானை செலுத்துநிதி
யிருபன்பெரிய சாமிசெல்வ நிலைபோணிலைக்குங் கருங்கடலே
பெத்தனுணவுப் பரிகலமே யணியெனதுவு பரிகலமே
மாலைச்சிலைவே டகஞ்சினமே பன்னைசகிலாய்க் கஞ்சினமே. (37)





வனமாக்கனிக்கா தரம்படைத்தோன் வனமாக்கனிக்கா யுலகைவலம்
வருமயூர வாகனனி வருமயூரத் திருமலையான்
தனதாரருளாற் சந்ததியுந் தனதானியசம் பத்துமுள்ளோன்
சாமிபெரிய சாமிகிளை தனைப்போற்றழைக்குஞ் சமுத்திரமே
பனகாபரணன் போனகமே பசும்பான்மதனம் போநகமே
பழிக்குமுலைவாய்ப் பாயமின்னர் பழிக்குமுலைவாய் மெலிவேனே
யெனகாரணமோ தெரியாதே யிந்துநோமோ தெரியாதே
யிறலினங்க ளார்களியே யிறலினங்க மானேனே. (38)

வரையையெடுத்து வரையிசைத்தை வரையேற்றுத்தெவ் வரையடர்ந்து
வரைமாற்றித்து விரைபுரந்த வரையமாத வரைவரையா
தருள்செய்ராச கோபால வச்சுதரையே யடிவணங்கு
மதுலன்பெரிய சாமியெங்கோ னுழிபோலு மார்கலியே
திருகுமாவிந் தம்பால்கைத் திருக்குமாவிந் தன்செயலோ
செஞ்சந்தனமு மிசையாதே திகழ்சந்தனமு மிசையாதே
கரகபாலி சுடவடலைக் காமனுடல மடலையதாய்க்
கரும்புகையுமா றினதென்றூர் கரும்புகையின மொழிந்திலவே (39)

மானைக்கானை யிலங்கையர்கோ மானைப்பொருது மதமொழுகு
மானைக்குதவி புரிந்தபெரு மானைத்தேனைத் தருந்தளவத்
தானைத்துரைச்சின் னணைஞ்சேந்தன் றருட்பாலனைச்செம் புலிப்பெரிய
சாமிமுகிலைப் பரவாதார் தமைப்போலிரங்குங் கருங்கடலே
தேனைத்தூது விடுத்தேனொந் தேனைத்தூது வனைக்கனிபோற்
றித்தித்திருக்கு மிதழார்வாய் தித்தித்திருக்கு மடைக்கவொட்டார்
கானற்குருகுப் பெடையினமே கானற்குருகு கலைதாங்குங்
கண்டகரையே யனையார்மால் கண்டகரையே யனையாரே. (40)

அஞ்சக்கரத்தா னடிபரவு மஞ்சக்கரத்தா திபதியனை
யஞ்சக்கரத்தார்க் குழற்கணைமா னஞ்சக்கரத்தார் விரும்புவில்வேண்
மஞ்சக்கிணைபாய் நிதிபொழியு மான்முத்திருளப் பண்பெருமு
மவன்புகழ்ச்சங் கரலிங்க மருகன்பெரிய சாமியெங்கோன்

நெஞ்சத்திசைந்து மருவாநா ணிறைநாணகன்று மருவானா
னிறைத்தான்பலபத் திரங்குறைத்தாய் நிறைத்தாபலபத் திரனாமங்
கஞ்சத்தவனங் கயலார்வாய்க் கஞ்சத்தவன மால்விதித்தான்
கமலனாளா மாரிருளே கமலமேவு மார்கலியே. (41)

திரட்டுப்பால்ப ருப்புநறுந் தேனெயதினமும் பெருகுறமாச்
செவ்வாம்பலாமை செறியரம்பைத் திகழுங்கனியப் பளமன்னம்
விருப்புப்பரமா னத்துடனே மேல்வேண்டினர்க்கு முதவிடலால்
வேந்தன்முத்து சாமிதுணை விசயன்பெரிய சாமியெங்கோன்
றரைக்குட்சிறப்பார் குற்றாலத் தலத்திலன்ன சத்திரம்போற்
றழைக்குங்கடலே யெனக்கடலே சாருங்கடலே போற்கறுத்தா
யிருப்புச்சுறவே யச்சுறவே யேதிலாரு நச்சுறவே
யிலங்குப்பாரே கரும்பார்வந் தெதிர்ப்பாரேபூத் தொடுப்பாரே (42)

வனமேபுனைந்தோன் மனுவெனப்பு வனமேழையுமேழையும்புரந்தோன்
வனமேகலைச்சா னகியெழிலெவ் வனமேவிரும்பிச் சிலைவளைத்தோன்
றனமேவியகு பேரனர தனமேயணிந்த ரகுராம
சாமிதுணைவன் றுரைபெரிய சாமிநேமி தனைத்தரித்தோன்
கனமேவியபா ரிரும்பாணி காட்டிப்பலவங் கந்தாங்கிக்
கனகத்திடக்க யம்பொருந்திக் கதிர்சூழ்மணிச்சே கரமேந்தித்
தினமஞ்சாறு மிருத்திடலாற் றிருக்குற்றாலத் தரற்கியற்றுந்
திருத்தேர்நிகர்சிந் தேபிரித்தா சேரத்திருத்தேர் பசந்தேனே (43)

பரதந்திரகே சரிவிரத பரதன்முனமே யுதித்தோன்சம்
பரதந்தியினீ ருரிபுனைநம் பரதன்கரிஞ்சை வனநிழல்வாழ்
வரதவெனவே யனுதினமும் வழுத்திப்பெரிய சாமிதனை
வணங்குந்துரைச்சின் னணைஞ்சேந்த்ரன் மைந்தன்பெரிய சாமியெங்கோன்
விரவுமாலை யேந்தடுக்கு மிக்கதீபஞ் சாந்தமுற்றே
விரியும்பூவார் பரிவட்ட மென்றும்விளங்கற் பூரமமை
தாலாலருள்கூர் குற்றாலத் தரனுக்கியற்றுங் கட்டளைபோற்
றழைக்குங்கடலே கட்டளையுந் தளவத்தருந்தார் தருவாயே. (44)



காசிகாஞ்சி யுறையூர்தென் காசிமதுரா புரிபுரக்குங்
களபப்புயமா றற்கோட்டுக் களபப்புருகூ தனைநிகர்வோன்
றேசம்புகழுஞ் சின்னணைஞ்சேந் திரதயாளு வாத்துதித்த
திங்கட்குடையான் போர்க்குடையான் றீரன்பெரியசாமியெங்கோ
னாசையமலை நன்னாக மணியம்புலியு முகந்திடமே
லாய்ப்பண்டாரங்க மிறைநாட்ட மாகச்செயலாற் குற்றாலத்
தீசன்றனக்கு முனமியற்று மிலகுசித்ர சபைநேரா
யிசைவிசித்ர சலநிதியே யென்கற்புக்கற் பருள்வாயே. (45)

ததியைக்கவர்ந்தா ரமுதினுக்கு ததியைக்கடைந்தே குருவருள்சந்
ததியைமீட்டே பொருவிலருந் ததியைநிகர்கற் பழகுதுரோ
பதிதன்மானங் காத்தாகு பதிமெய்த்துரைச்சின் னணைஞ்சேந்த்ரன்
பாலன்கோலா கலவிசையன் பாரிபெரிய சாமியெங்கோன்
கதுவுங்காலுங் கமைமதலை காட்டுங்கொடியுத் தரமிசையக்
கதிப்பாய்மேற்பாத் தட்டோடு கடியவான நங்கூர
மதுவும்பொருந்து வரியாத லாற்குற்றாலத் தினிதியற்று
மரிபதான திருப்பணிதே ரரியேதரியேன் போதரியே. (46)

சமரம்புரிவெம் புலியுமசே தனமாய்ப்புல்லாய் வனம்பதுங்கச்
சாரம்புலியுந் தேய்ந்தலைவாய்ச் சடைப்பட்டிரவென் னாளுமுறக்
கமலைவளர்செம் புலிப்பட்டங் கற்பகாலம் வரையும்வளர்
காமன்பெரிய சாமிதுரை கலைசேர்பலபு ராணமிசை
யமரரங்கங் கிடைமுழக்க மரியவேள்வி தவம்பொருந்து
மப்பார்ப்பார்நன் மதலைகள்சே ரத்தியானஞ் செய்திடலாற்
சுமுகன்றுருவ னெங்கோன்செய் சொற்பாடகசா லையைப்போலுந்
தோயப்பாவா யென்னையவன் றோயப்பரிவா யமைப்பாயே. (47)

தாமேயறிந்து பாண்டவர்க்குத் தாமேபுகன்று குடையாய்க்குத்
தாமெயெடுத்துப் பெருகுதிறை தாமேவலரைக் குறும்படக்குந்
திருமால்திரும லைப்பெருமாள் தீரனருமை மைத்துனவேள்
செவ்வேள்பெரிய சாமியெங்கோன் சேராநாளிற் கருங்கடலே

பெருகுபார திக்கிடமாய்ப் பிதாவாயுந்தி பொருந்திவரம்
பெற்றோனடிக்கும் விளங்குதலாற் பிலங்காரண்டம் படைத்திடலா
லருமாதவர்வாய்த் துதிக்கையினு லஞ்சம்பனையுந் தம்பியென்று
மமைதலாலே வேதனையொப் பாய்வேதனையைத் திராயே. (48)

கனமேயனைய கொடையான்சொற் கனமேயறிந்து தமிழ்ச்சாரங்
கனமேகொடுத்துக் கேட்டிமென கனமேல்வாரந் தவறுதோன்
சினமேவலரைக் குறும்படக்குந் தீரன் றுரைச்சின் னணைஞ்சேந்த்ரன்
செல்வன்பெரிய சாமியெங்கோன் சித்தமகிழ்ந்து சோராநாள்
வனமேவியநாற் கோடுறுநால் வாயுந்துதிக்கை செகமஞ்சும்
வரும்பன்னகமாங் கறையடியும் வாய்ந்தேதால வட்டமுற்றே
மூனம்வானவர்கோன் வாரணம்போன் முழங்கிப்பாயும் வாரணமே
முதுசக்கரமே யருந்தேனே முதுசக்கரமே பொருந்தேனே. (49)

காராமனைய கொடைமதசிங் காராவீரா வெவர்க்குமுப
காராதீரா விசையதுரங் காராமாசே மாவெனவே
சீரார்புலவோர் புகழும்வச்ர தேகன் றுரைச்சின் னணைஞ்சேந்த்ரன்
செல்வன்பெரிய சாமியெங்கோன் சோராநாளில் வாருதியே
வாரார்பயோத ரங்கள்விம்ம வாசமுறுமே கலைகடக
மருவுங்கரவால் வளைசிலம்பு மதியென் ஞளுந் தோற்றிடவே
நேராயமரு முகங்கவிழு நிலையாலெனையே போன்றிருந்தாய்
நினையாரகன்று ரோவுரையாய் நினையாரகன்றார் தருவாயே. (50)

வெய்யதான வரையடக்கி விளங்குந்தான வரைக்காத்து
மிக்கதான வரையிசைத்து மெய்த்தானவரை வரைப்புரந்தோன்
மையலயிரா வதப்பாகன் மதவேள் துரைச்சின் னணைஞ்சேந்த்ரன்
மைந்தன்பெரிய சாமியெங்கோன் மருவாநாளிற் கருங்கடல்வாய்ச்
செய்யவரும்போ தகத்தனமே திதலைவரும்போ தகத்தனமே
தினமுந்தொய்யி லெழுதேன்முத் தினமுந்தொய்ய லுஞ்சிறந்தே
துய்யமகரந் தங்கிடமே துன்னுமகரந் தங்குளருந்
தொனித்தேமெங் கசற்துடைந்தேன் தொனித்தேமெங் கசக்கனியே. (51)



கணையேசெலுத்தித் திரைவாரிக் கணையேபொருத்திப் புவிபுரந்து
கணையேசெவியாப் பெரும்படநா கணையேவிரும்பிக்கண்வளர்ந்தோன்
றுணையாய்க்குகனைக் கொண்டகொண்டல்துரைச்சின்னணைஞ்சேந்திரன்பாலன்
றருவன்பெரிய சாமியெங்கோன் றேயாநாளிற் கருங்கடலே
யணையேயிராமன் கோதண்டத் தாலேயாக மறிந்தனைநீத்
தனையேயிராமன் கோதண்டத் தாலேயராக மறிந்தனன்யான்
புணையுமலருங் கண்ணீரும் போதவுறவும் படைத்தாய்வெம்
புணையுமலருங் கண்ணீரும் போதவுறவும் படைத்தேனே. (52)

கரையாழியினுண் டாக்கியரக் கரையாரையும்வென் முகுந்தன்வட
கரையாதிபதி டில்லிசொல்லா கரையாரணிசா தாரிமட்டுந் [த்ரன்
திரமேகிருபஞ் செலுஞ்சிட்டுச் செலுத்துந்துரைச்சின் னணைஞ்சேந்
செல்வன்பெரிய சாமியெங்கோன் சேராநாளில் வாருதியே
யிரையாதிருந்தா யிலையானிற் கிரையாதிருந்தா யிரங்காளா
யிறந்தாரைக்கா மனைப்புரந்தா யிரந்தாரைக்கா வெனப்புகல்வேன்
வரையேபோலோங் கணித்திரையே வாராவாளங் கணித்திரையே
வாரிக்கரையே யினுக்கிடைந்தேன் வாரிக்கரையே விலக்காயே. (53)

பாலைப்பொருசோ லைச்சொருகைம் பாலைப்பொருந்து மடவார்கண்
பாலைச்சிலைமன் மதவேள்செம் பாலைத்தருகிம் புரிவயிரக்
கோலப்பிறைத்தந் தாவளத்தான் குமணன்முத்து சாமிதுணைக்
குபேரன்பெரிய சாமியெங்கோன் கூடாநாளில் வாருதியே
யோலைக்குழையார் மருவலரே யுரைப்பாரவரு மருவலரே
யுதையப்புலியே யம்புலியே யுடலம்புலியே யுனுமுயிரே
யாலைத்திருக்கை யேமதவே ளாலத்திருக்கும் வரைவென்ற
வலர்க்கோவிடமாம் வளத்தனமே யருந்தாதிருந்தேன் வளத்தனமே.

துரையேபுலவோர் தமிழ்ச்சாரத் துறையேயறிந்துள் ளுவந்துநயந்
துரையேபுகலுஞ் சோமாம துரையேபுரக்கும் பாண்டியனே
வரைநேர்புயத்தார் தருதியென மடவார்தினமு மடலெழுது
மதவேள்பெரிய சாமியெங்கோன் மருவாநாளில் வாருதிசூழ்

142628

கணைவாயிருக்கு மருந்திலையே காமனோய்க்கு மருந்திலையே
கலைத்திங்களையு மருந்திலையே களிறேசயில மருந்திலையே
விரிவாரிசமே சலஞ்சலமே மின்னார்மிகவுஞ் சலஞ்சலமே
வேளாலெனக்குஞ் சலஞ்சலமே விடமாஞ்சகிநே சஞ்சலமே. (55)

பனசப்பெருமா னடிபரவும் பனசற்குணவேள் திரவியசம்
பனசக்கரமால் குமணன்விருப் பனசந்திரசோ மனைநிகர்வோன்
வனசத்திருமா னகலாத மருமன்புகழ்முத் திருளப்பன்
மருகன்பெரிய சாமியெங்கோன் மனதுமகிழ்ந்து மருவாநாட்
கனகத்தனம்பெற் றேன்கடலே கனகத்தனம்பெற் றனையாலங்
கயலார்வாய்ச்சொற் கேயுடைந்தேன் கயலார்வாய்க்கேளிக்குடையாய்
நனையைத்தருமம் புயத்தாயென் னனையைத்தரும மெனநினைத்தே
னஞ்சத்துருவாய்க் கறுத்தாயன் னஞ்சத்துருவா வெறுத்தேனே.

பாதைச்சிலையைப் பெண்ணாக்கிப் பாரச்சிலையை வளைத்தருளு
பதிமெச்சிலைப்பிரான்பதத்தைப்பணிவோன்விழிப்பைஞ் சிலைகமழுங்
கோதைக்குழலார் மடலெழுதுங் கோமான்முத்து சாமிதுணைக்
குரிசில்பெரிய சாமியெங்கோன் கூடாநாளில் வாருதியே
மாதத்தலைநீங் காயரிய மாதத்தலைநீக் கான்கமல
மாதத்தலையே பயந்தாய்தை மாதத்தலைப்ப னிக்குடைந்தேன்
றாதுக்களியை யடுத்தாய்நீ தாதுக்களியை விடுத்தேனுன்
றோழிக்களியை வெறுத்தேன்வான் சுரருக்களியைப் புரிந்தாயே. (57)

குகவேடனைவந் தனைபுரிவோன் குகவேடனையே துணைக்கொண்டோன்
குறும்பலரநம் பனைத்துதிக்குங் குறும்பலாத மனத்திருமால்
சுகவேள்துரைச்சின் னணைஞ்சேந்த்ரன் சுதன்மெய்ப்பெரிய சாமியெங்கோன்
றோயாநாளி லோயாமற் றொனிக்கும்பனிக்குங் கருங்கடலே
மகவான்விழிநேர் புண்டரிக வனமேதாயும் புண்டரிக
வனமேவனமே வருந்துமென்க வனமேவனமே புகலாதே
நகநாகத்தின் பார்ப்பேக னகனாகத்தி னைக்கிழிக்கு
நகமேமதியஞ் சிறுகால்பன் னகமேமதியங் கயர்ந்தேனே. (58)



முல்லைத்தாரா னமரிலென்று முதுகுதாரா னீதியினின்
முறுகுந்தாரா னமரானை முடிக்குந்தாரான் முழுதுணருங்
கல்வித்துரைச்சின் னணைஞ்சேந்த்ரன் கண்ணின்மணியெண் ணெண்கலையுங்
கற்றோன்பெரிய சாமியெங்கோன் கலவாநாளி னாகாமே
சொல்வித்துரும மாலதையே சொல்லாரவர்க்கென் மாலதையே
துள்ளும்வெள்ளைச் சீகரமே சுசியாம்பன்னீர்ச் சீகரமே
யல்லிக்கொடிக லனங்கரையே யழைக்குங்குயிலா லனங்கரையே
யாறுகாலுஞ் சிலீமுகமே யஞ்சுகாலுஞ் சிலீமுகமே. (59)

கடலம்பதனை முன்படைத்தான் கனகவளஞ்செல் வம்படைத்தான்
கதிரைமறைக்கும் வளைப்படையான் கருதார்மேற்றண் ணளிபடையான்
புடவிபுகழ்சங் கரலிங்க பூமன்ராம சாமிதுணைப்
போர்வேள்பெரிய சாமியெங்கோன் பொருந்தாநாளிற்பொருங்கடலே
குடகிலுதிக்குந் தானவனே கொடுமைசெயப்பிந் தானவனே
குறையாமதன குஞ்சரமே குடிக்குமுயிர்ப்பூங் குஞ்சரமே
வடவைநிகரா மம்மனையே மறந்தேன்விரும்பு மம்மனையே
மாதாவசையும் வைவாளே வணங்குஞ்சகியும் வைவாளே. (60)

மதியக்குடையான் றனைப்பரவு மதியக்குடையான் றிருந்தலர்க்கு
வனத்தாரகமே கொடுத்திடுவோன் வனத்தாரகமே தரித்திடுவோன்
றுதிசொற்புலவோர்க் கிருநிதியஞ் சொரியுந்துரைச்சின் னணைஞ்சேந்த்ரன்
சுதன்மெய்ப்பெரிய சுவாமியெங்கோன் றோயாநாளி லம்பரமே
விதியச்செயலார் வென்றவரே விரும்பிப்பிரியோ மென்றவரே
மேவார்களிப்பப் பொருமுதலை விளைத்தாளனைபொ ருமுதலையே
புதுமைத்தாளக் காவாயே புலம்புமெனைநீ காவாயே
புணரியிடமே வங்குயிலே போர்வேளைக்கூ வுங்குயிலே. (61)

கனகனுவி கவர்ந்திடும்வே கனகநாகே சரியாய்த்தாக்
கனகநாக படநடகோ கனகபாத மணிமார்பன்
றனகனுவு தாரன்முத்து சாமிதுணைவன் றுரைப்பெரிய
சாமிபூமின் மணவாளன் றழுவாநாளிற் சமுத்திரமே

யினவாராலே கலக்கமுற்றே னினவாராலே கலக்கமுற்றே
வீரமதியந் தோவுளத்தை யீரமதியாந் தோற்பேனோ
புனைகையாலே திரிபுரத்தைப் பொருதவரனே திரிபுரத்தைப்
பொடித்தானென்றே ரவன்கைவிலம் பொடித்தானிலையோ வுரைப்பாயே (62)

உருமாறுட மாறுட மோங்கும்வங்க வங்கமுற
வொளியாமச்ச மச்சமிக வுயர்மாகதமா கதமடங்கப்
பொருசெம்புலிபோர் மதப்புலிமெய்ப் புகழ்ச்செண்பகவனப்புலிமற்
புயவேள்பெரிய சாமியெங்கோன் பொருந்தாநாளின் மகோததியே
கருவிமுகிலே சந்துரையா காவிமுகிலே சந்துடைநீ
காலகால ஞாளிகையே கற்பகால நாளிகையே
யிரவிபுதிக்கும் பரவையே யிலங்கால்விடக்கும் பரவையே
யிணைபாய்வருங்கோ தினாலையே யீர்ந்திடாத் தினாலையே. (63)

கலிகைத்தளவ வாணைய கலிகைக்கருஞ்சா பந்தீர்த்தார்
கலிகைக்கணைபாற் காய்ந்தடுத்தோர் கலிகைத்தனமு மளித்தளித்தோன்
மலிகைக்குழலார் மடலெழுது மதவேள்துரைச்சின்னணைஞ்சேந்தன்
மைந்தன்பெரிய சாமியெங்கோன் மருவாநாளின் மகோததியே
மெலிகைபோர்த் திருந்தியே மின்னார்க்கிதுவோ திருத்தியே
வேம்புநிகராஞ் சாயனமே விடையுத்தாம்பே சாயனமே
சுலவாலந்தோ மறுபதமே சுற்றித்திரியு மறுபதமே
தோய்ந்தாலுள்ள மறுகலமே துறைவாயிறங்கு மறுகலமே. (64)

தாரமிசையும் பாவலர்வித் தாரக்கவிதா ரசந்தெரியு
தாரதருவண் டினங்கனகாந் தாரமுரன்மா கதித்தாரான்
வீரவிசையக் கட்டாரி வேந்தன்சேந்தன் சாந்தன்வரி
வில்வேள்பெரிய சாமியெங்கோன் மேவாநாளி னுவாயே
சோனாஞ் சூழ்திடரே சேரநாரஞ் சேர்கடலே
சிந்தித்திருக்கு மென்மனநீர் சிந்தித்திருக்குந் திசைபார்க்கும்
வாரந்தாய்க்குச் சாற்றிலையே வாரந்தாய்க்கு வினைபடக்கும்
வாரிநீரே யென்னுயிரை வாரிநீரே யுண்பீரே. (65)



கரனை முனைப் பொருதிவி நரனைவெயிலே மறைத்தருள்சக்
கரனை முதுசொற் றெரிதமிழா கானையிலகு மணிமகுட
தானைராம சாமிமுத்து சாமிகனையே தம்பியெனுந்
சாமிபெரிய சாமியைநான் றழுவாநாளிற் சலதியே
பரியவாமை யனுக்குடைந்தேன் பரியவாமை யனுக்கலரும்
பசுங்காவிக்கா தாபோல் பருகாவிக்கா தாவுமிழ்ந்தே
னுரியநாகம் புவிபுதவு முரியநாகம் புவிதரித்தோ
ருக்கம்பாரி தனையழித்தா யுக்கம்பாரி யிழந்தனலே. (66)

கடலையடைத்துத் தானவர்தங் கடலைச்சிதறச் சுரர்க்காய்ப்பொங்
கடலைவிளைக்கு மால்வேந்தர் கடலைவனஞ்சார் முடிதகர
வடலையுயிரைப் புண்ணீரை யுறிஞ்சும்விசையக் கட்டாரி
யுடையோன்பெரிய சாமியெங்கோ னுவந்துமருவா நாட்கடலே
தொடலையாசை தீர்ந்தேனிந் தொடலைபாசைப் புறத்தகற்றுன்
சோதிப்பதங்க னென்கருத்தைச் சோதிப்பதங்க ளையர்தொழிலே
மடலைவிரிப்பு வாளிபொரு மடலைவிரித்துச் சொல்தொலையா
வாவுமீன மேபொருந்த வாவுமீன மேதருமே. (67)

தருவைபொருத்திக் களித்தாய்தார் தருவையாகில்பாம் பிழைப்போர்
தானைசரிதல் பார்த்திபுவந் தானைதனைக்காத் தனையேயென்
றரிவைமார்கண் மடலெழுது மதலைனபய னகளங்க
னனகன்பெரிய சாமியெங்கோ னணைபாநாளி லார்கலியே
யுருவம் பாறுற் றீர்மதசத் துருவம்பதனு லுடைந்தேனே
ஏதுபனலமா லைப்பணியே யுலையனலமா லைப்பொழுதே
திரையினிடமாஞ் சரவணமே தென்காவிராம சரவணமே
தீரத்தமருங் கொக்கேமால் தீரத்தமருஞ் செய்யாரே. (68)

சேரமானும் பாண்டியனுஞ் சேரமான்போற் கலைந்தோடத்
திறல்சேரபயன் கோடிநிதி திறைதந்தபய மபயமென
வீரவிசையம் புரிந்துதிக்கு விசையஞ் செலுத்துங் காண்டீப
விதூரன்பெரிய சாமியெங்கோன் மேவாநாளிற் சமுத்திரமே

சாருமூற்றாற் றாரியுமேற் சாருமூற்றா லும்பொலிவாய்
தட்டுவலெபெற் றுபானும் தட்டுவல்லபா னென்றேனே
யாருங்கைச்சா லேடைவா சாருங்கைச்சாற் புகலேநிங்
கறைவாயபிப்பு வலைதிர்த்தி யறைவாயபிப்பு வலைபினமே. (69)

வலைபாங்கருங்கண் பொருந்தாக்க வலைபாசலையா வினத்தூரு
வலையானுலைவாய் மெழுகானைம் வலைபாதரவு புரிதியென
முலைபாமலையார் மடலெழுது மோகன்ராம சாமிமுகின்
மூன்றோன்பெரிய சாமிதுரை முருந்தன்மருவா நாட்கடலே
பலையாதவனங் கீகற்றனே யலைபாதவனஞ் சேர்மலரே
பங்கங்கோடா நிலைமழலே யங்கங்கோடா டலைப்புள்ளே
தொலைபாதாளக் களிபேயின் டொலைபாதாளத் தனத்தார்வாய்ச்
சொல்லானுள்ள மலைத்தேனே தனைப்பூவுள்ள மலைத்தேனே. (70)

மாரிகுமனைன் சகரர்தந்து மாரிபாரி யனையவன்மன்
மாரிபொழிபு மலர்க்கணைக்கா மாரிபாத மறவாதேன்
மாரிமருவ லார்கள்சிங்கந் தயானுராம சாமிமுத்து
சாமிதுணைவன் றுரைப்பெரிய சாமிதழுவா நாட்கடலே
பாரம்பரியம் பேசொனுன்மேற் பாரம்பரியம் பலவிளைப்பார்
வ்வந்தத்தைத் தருநுதலார் பவ்வந்தத்தை யென்சொனுவே
நாவினஞ்சங் கடம்பாரே யாரவினஞ்சங் கடம்பாரே
ஞ்சம்பணைபா ரேதடுப்பா ரஞ்சம்பணையா ரிடத்திடரே. (71)

ரவிபுரந்தாய்தமிழ்ப் பொதியக்காவில் வரும்வேள்கணைபொழிந்தான்
டவாரணத்தைக் காத்தாயிங் கடவாகாவா திருத்தலைமைப்
ரவியெனவே யெழுபருவப் பாவைமாரும் பின்றொடரப்
ரரிபெரிய சாமியெங்கோன் பணைக்கைமாவிற் பவனிவந்தான்
ரலகானுங் கண்டேனே சலசத்தலரின் கண்டேனே
ரியுஞ்சரியோ டம்பரமே தாவுந்திமிலோ டம்பரமே
காலமணிய மகரமே குபேரணரியு மகரமே
ற்றுமணைமார் மாற்றாரே கூவுங்குயிலை யாற்றாரே. (72)



ஏழுமாமரம்போற் கூவுகுயி லெழுமாமரமுஞ் சாய்ந்திடவே
யெய்தாயிலையே மயரீர வெய்தாயிலைவேள் வனைந்தான்பார்
தழுவாதிருத்த லென்கொலெனத் தையலார்கள் பின்றொடரச்
சாமிபெரிய சாமியுலாத் தந்தாவளத்தின் வரக்கண்டேன்
வழுவாவெனைப் பார்ப்பீரே வருந்தென்முகத்தைப் பார்ப்பீரே
மடவார்வசைச்சொல் விளம்பீரே மறையமருந்து விளம்பீரே
யழகார்திரைசூழ் சாகரமே யன்னுண்முழுதுஞ் சாகரமே
யச்சங்கனைக்குங் குருகேவேட் கச்சங்கனைக்கூட் டிடலாமே. (73

கன்னல்பசலை யலர்மபல்பொங் கன்னலார்கண் மடலெழுதுங்
கன்னன்மதவேண் முன்னமொரு கன்னல்வடிவு புரிநாளான்
... னணைந்த பெருமான்சேய் செண்பகமனைப் புவிமருவார்
சிங்கம்பெரிய சாமியெங்கோன் றெய்வேந்திரன்போற் பவனிவந்தா
னன்னவமெனும் பெயர்க்கடலே யன்னவனைநான் பார்த்தேனே
யாழிக்குருகே போலாழிக் காழிக்குருகேத் தொக்காவே
யுன்னுகிரவுஞ் சம்புலம்பு முயிர்நுங்கிரவுஞ் சம்புவிரும்
புகாந்த மிதையம் விரகமிரும் புகாந்தமிதையன் பாயுமையே (

தந்தாவளத்துக் கெதிர்ந்தாய்தார் தந்தாவளத்துத் தனஞ்சேரச்
சமயமிதுகண் பார்த்தருளே சமையல்யாமோ பொறுப்போமென்
றிந்தார்நுதலார் மடலெழுதவிலகுமருப்புப் பொருப்புமிசை
யெங்கோன்பெரிய சாமிதுரை யெய்தும்பவனி யெதிர்கண்டே
னந்தாதாமைக் கருங்கனியே நந்தாதாமைக் கருவரியே
னணையாமேட்டுத் தடங்கரையே கணையாமேட்டு தவிசகன்றேன்
சிந்தாமணியா ழிமனங்க சிந்தாமணியா லேமெலிந்தே
திகைத்தேதினமுந் தேன்பாலா திகைத்தேதினமு தருந்தேனே

கன்றேயெடுத்தா யெமதுகரக் கன்றேயளித்தா லாகாதோ
காமன்றுணைவ னாகவந்தாய் காமன்கணையை விலக்காயோ
குன்றேகவித்தாய் மயங்குமெமக் குன்றேமலர்த்தார் தருதியென
கும்பத்தனத்தார் பின்றொடரக் கும்பவனைமேற் புரந்தரன்போல்

வின்றேபவனி யெதிர்போந்தா னெங்கோன் முத்து சாமிதுரை
யேந்தல்பெரிய சாமிதுரை யானுமாலாய்க் கண்டேனே
நன்றுமுவரிக் கரைக்காவே நாடுஞ்சமரிக் கரைக்காவே
ஞாலமிசையு முன்னீரே நவிர்கான் மிசையு முன்னீரே. (76)

அவனியளந்தாய் மலர்க்கணையெய் பவனி ... யே விலக்காயோ
வணியம்பரத்தைக் கடைந்தாயா மணியம்பரத்தை யிழந்தோமென்
றெவனமடவா ரெங்கள்கற்புக் கிசையுமவர்கள் பருகியென
வியம்பக்கடவா ரணமிசையே யெங்கோன்பெரிய சாமிதுரை
பவனிவரச்சந் தித்தேனே பசந்தேன்கவர்சந் தித்தேனே
பாரம்பார மென்விரகம் பாரம்பாரம் புபத்தலரே
நவநித்திலங்கா ணுந்துறைபே நதிபோலாங்க ணுந்துறையே
நரலைபிடத்திந் தீவரமே நாளும்வருந்தா தீவரமே. (77)

மருவார்குலகல் லகநளினை மருவார்மணிமார் பன்முல்லை
மருவார்புயத்தான் வன்மீன மருவாரகநந் தனனெனவே
பருள்கூர்துரைச்சின் னணைஞ்சேந்த்ர னருளும்பெரிய சாமியெங்கோ
னவனிபுகழும் பவனிவந்தா னணைந்தேன் றொழுதேனம்பரமே
திரையாயிருக்கும் பட்டிகையே நீக்கும்டைமேற் பட்டிகையே
நிலவுகால்செ னித்திலமே நிறையோடுறச்ச னித்திலமே
திரைவாய்ப்படரும் வளத்துகிரே தினமுங்கூடல் வளைத்துகிரே
தையுஞ்சதபத் திரத்தாரே சிலதியருபத் திரத்தாரே. (78)

டாரத்தரசர் பலநிதியங் கடாரத்துடனே திறைகளிப்பக்
கிங்கத்திறைவர் விசித்திரப்பூங் கலிக்கங்கப்ப மிடசமுகன்
டாரப்புயபூ தரக்குரிசில் பதுமக்கொடிக்கு மணவாளன்
பாரிபெரிய சாமியுலாப் பார்த்தேனவனும் பார்த்தானே
டமைக்கயற்க ணனத்தாரே யடமைக்கயற்க ணனந்தமே
த்தக்குருகு மிழந்தேனே யத்தக்குருகு முரம்போவேள்
டாரிப்பார்வை யேயெனையே தடாரிப்பாவை மார்சநிமார்
ங்கார்வையத் துணிந்தாரே சங்கார்வையை விலக்காயே. (79)



கோதைவேலை யேந்துபுகழ்க் கோதைசீதை காதலிற்பொங்
கோதைவேலை சூழிலங்கை கோதைமகனை லழித்தபிரான்
காதுவிகடக் கலுழிநிகர் கரடக்கடத்தந் தாவளமேற்
கண்ணான்பெரிய சாமியுலாக் கண்டேன்விரகங் கொண்டேனே
யாதவன்மார்க் குரைத்திடுவே னுதவன்மா மதிநாகத்
தயமாத்துத்தி யானமே யகக்கேமனத்துத் தியானமே
பாதைமேவி யதுவசமே பையுள்விதிய துவசமே
பசருநிகரில் கின்னரமே பயிலேனிசையான் கின்னரமே. (80)

வெவ்வாரணத்தைப் புரந்தடங்கார் வெவ்வாரணத்தைக்குறும்படக்கி
வெல்வாரணத்தை யுயர்த்தவனை விரவாரணத்தின் முறைபணிவோன்
பைவாளரவச் சுமைபொறுக்கும் பாரப்புயபூ தரவிசயன்
பாரிபெரிய சாமியுலாப் பார்த்தேன்பசலை பூத்தேனே
யொவ்வாதிருக்கும் பொருந்தாரன் புடையாதிருக்கும் பொருந்தேனே
யுளக்கவலையா ரொழிப்பாரே யுளக்கவலையா ரம்பரமே
செவ்வாயிதழன் னையர்புரியார் செவ்வாயிதழும் புலர்ந்திடவி
சிந்தான்கலைமா தினுக்கிறையு சித்தான்கலைமா மதிதானே. (81)

பாரத்தரசர் புடைநெருங்கப் பாரப்பேரி குழுகுமெனப்
பணைக்கைமருப்புப் பொருப்புமிசைப் பாரிபெரிய சாமியெங்கோன்
சீரப்பவனி வரக்கண்டேன் சென்றேன்றொழுதேன் கண்ணிணையிற்
செங்கோகனகை வீரமகள் சேர்க்குமணிக்கட் டாரிதனி
லாரப்புயத்திற் பூமடந்தை யமைதல்பார்த்தேன் றிகைத்துநின்றே
னுனலென்ன பொதுவியரை யணையவிலையோ வெனத்தெளிந்தேன்
வாரத்துவரே யென்மீது வாரத்துடனே மதிகுளிர
மலைபச்சந்து பூசமுல்லை மலையச்சந்து புகல்வாயே. (82)

வண்டுதனையே தூதுவிட்டால் வண்டாவென்போர் கண்டோரு
மறுநாளுடைய தாதவிழுன் மறுகாலுரைக்க மாட்டாதே
விண்டேமதன னுனமான் மேவினுன மல்லுரையா
விள்ளுமலர்நா ளும்பொருந்து மிகவுமார்க்குங் கறுப்பாமாற்

பண்டையபிணு முட்டாளே பார்க்கிலதுவும் பிணிமுகமே
படிந்தூட்டங்க முடையதுவே பட்டருடுந் தலைச்சுமையே
யண்டலார்கள் தெண்டனிடு மனகன்சின்ன ணைஞ்சேந்த்ரா
னருளும்பெரிய சாமியெங்கோ னருமைக்கடலே பிணிக்கேனோ, (83)

பரிவாயன்னந் தனைபனுப்பிற் பயில்வேதனையே தாங்கியென்றும்
பாரச்சிறைபட் டிருக்குமொன்றும் பாலுநீரும் பிரிப்பதுவே
யரியதொழிலா மதுபொருத்தற் கொவ்வாதாகுங் கருங்குயிலு
முற்றதாய்க்கு முதவாதா லுறுகோகிலமே யாதலினாற்
றெரியவுளத்தாங் கோகிலமே சேரச்செய்யு மதன்வரவே
செம்மாந்தநாக்கயற்றிப்படிம்வேள் சின்னமாத லாலதுசொல்
பிரிவில்சொல்லுஞ் சின்னமன்றே பெரியதாயுங் கொடியதுவே
பேகன்பெரிய சாமிபன்பரிப் பேசுங்கடலே சொலக்கேளா. (84)

தென்றன்மகன்றே ராணுலுஞ் செல்லவறுவுங் காலிலியே
சேர்க்குங்கோடி முடிக்காக்கா திகழுங்கிளியு நாக்கூழை
யொன்றையுரைத்த தல்லாமலோகோவிரித்துச் சொல்லாதே
யுறுசாரிகையு மங்கசவே ளூகைக்குஞ்சாரி கைப்பரியே
யென்றன்மனமும் வென்றிபுனை யெங்கோன்பெரிய சாமியுலா
வேத்தத்தொடர்ந்து பின்போன திங்கேதிரும்பி வரவிலையே
மன்றல்கமழுங் குழலாரும் வஞ்சியாரா தலினாலே
வஞ்சியாரென் றெணப்படுமோ வங்கக்கடலே புகல்வேனே. (85)

நீந்தவரிய தாமலையே நின்றுமிகவும் பயம்பொருந்தி
நெடுந்திகாந்த வரைதிரிந்து நித்தம்வாய்விட் டலறுமுகி
லேந்துமகுடந் தரித்தருள்பாண் டியனுமிவனே யாதலின்முன்
னிட்டதனையாற் பட்டசள மெண்ணிபருகு செல்லாவான்
மாந்தர்புகழும் புகழ்ச்சனகன் மாமால்துரைச்சின் னணைஞ்சேந்த்ரன்
மைந்தன்பெரிய சாமிதனை மருவிச்சுகிக்க வொருதூது
போந்துபுகல்வா ரில்லையெனப் புந்திவருந்திக் கனன்மெழுகே
போலக்கலங்கி மயங்கியுளம் போலக்கடலே தளர்ந்தேனே. (86)



சரியுங்கலையு மேகலையுந் தாமக்குழலுஞ் சரியமனந்
தள்ளாடிடவே யுள்ளாவி தளராவண்ண மேன்மேலும்
பிரியமுடனே சென்றுடப் பெற்றதீர்த்தம் வந்தாடப்
பெற்றதெனவே யென்கவலைப் பிணிக்கோர்மருந்து கிடைத்தெனவே
தெரியவொருபெண் வடிவெடுத்தச் சிந்தேநீதான் வந்ததுபோற்
றீரன்பெரிய சாமியைநான் சேரப்புரியுந் தவம்போல
வரியமலர்ப்பூங் குழற்கோதை பொருந்திவந்தா ளுன்னையவ
ளுருவிலிசையக் கண்டேனே யுருவிலிசலாஞ் செய்தானே. (87)

மேகங்கூந்தல் கமலமுகம் விழிபைஞ்சிலைநீ பெற்றபிறை
விளங்குநுதல்வா யாம்பனகை விரிவெண்டாளங் காதுவள்ளை
வாகுபெறுவா ரணங்கண்டம் வதியுமணிமை நாகமுலை
வளங்குமுந்தி யுந்திமடி வாவுந்திரைமுன் னுண்மதிக்கு
நாகமிடையப் படமிதம்ப நாடுமிருதோ ணிறஞ்செம்பொ
னுரும்வெள்ளைக் கழைமுழந்தா ணண்டுநடைவா கனம்வச்ர
தேகன்பெரிய சாமியண ஷீரன்கொலுமா முகங்காணுந்
தெரிவைபுனைப்போ லிருந்தாள்வாட் டெரிவைபாத னுகரமே. (88)

வேலைநினைப்போ லிருந்தனளவ் வேலைவரக்கண் டுவந்துபல
விதமாமுகமன் புகலவுஞ்செவ் விதமாவெனவும் புகன்றேனீ
சாலமயல்கொண் டதுமுகவி சாலந்தனிலே தோன்றுதினிச்
சந்துநானே யுரைக்குவனி சந்துன்புறலென் றேதிடமுஞ்
சிலமுடனே யுரைத்தரசர் சிங்கம்பெரிய சாமிகொலுச்
செவ்விதனிலென் மெலிவுகுறை செப்பினனென் பவனிகண்ட
கோலமாதர் தம்மிலொரு கோதைகோதி லிரதிதங்கை
கொடுக்கவேண்டு முல்லையென்றாள் கோமானுமென் றுரைத்தானே,

வாரியிடத்தி லிணங்கூடல் வளைத்தேயிருக்கின் றுளெனப்பொன்
வாரிவரையா துதவுதிரு மாமால்பெரிய சாமிதன்பாற்
காரிகையும்பின் புரைத்திடமா கதியாரமுமா ரமுங்கொடுத்தான்
கனிக்குந்தூதி கொண்டுவர்ந்தென் கையிற்கொடுத்தான் மெய்குளிர்ந்தேன்

சாருந்தனத்தி லணைத்திருகண் டன்னிலொற்றிக் கொண்டிவளை
சரிமேகலைநா புரஞ்சர்ஞ்சி சரித்துமணையி லுவந்திருந்தே
னீரமதியும் வசந்தனும்வே யிசையுங்குளிர மையறவிர்ந்
திருகண்பொருந்தித் துயில்போதிலெங்கோனைக் கண்டேனே.

வந்தான்கனவி லெழுந்திருந்து வணங்கினேனைக் கையார
வாரியெடுத்து மடியில்வைத்தான் வாசமுல்லைத் தொடையணிந்தான்
சந்தோடமதாய்ச் சவாதுநறுஞ் சந்தோடணியும் பலவணிந்தான்
றந்தான்முத்தஞ் சுருண்மாறித் தந்தானத்தை முகந்தானே
செந்தாமரையான் வீற்றிருக்குஞ் செய்யகண்ணு மதிமுகமுந்
திரண்டதோளும் புன்னகையுந் திலகநுதலு மணிமார்பும்
நந்தார்கடலே யென்னிரண்டு நயனங்களிக்கத் தெரிசித்தே
னங்கோன்பெரிய சாமிதுரை நடத்துந்தொழிலை நவில்வேனே. (91)

... ... ... ... (92)
... ... ... ... (93)
... ... ... ... (94)
... ... ... ... (95)

மொழியு மஞ்ச மேலாக மொய்க்கு மலர்ப்பா யலையிசைந்தே
முத்தங் கொடுக்கு மென்னுக முழுதுந் தழுவன் னீராற்பின்
ம வழியும் போக முன்னுக மாற்ற வணைத்திட் டேபொருந்தும்
வ வகையா லாம்பன் மலரிதழ்வாய் வருந்தே னளிக்க வருந்திரத்தா
நீ லெளியர் தமக்கோர் தாயகமா யிகல்வே லரசர்க் கிடியேறு
நெ யெனக்கின் னுயிருக் குயிராகு மெங்கோன் பெரிய சாமிதுரை
வே விழிபோ லிருக்குங் கருங்கடலே வேந்தர் வேந்த னெனைச்சேர்ந்த
னிட விதம்போ னீயு மிருந்திடலால் விரித்துச் சொல்ல வேண்டாவே(96)

மாமுன்னுட் புரிந்த தவப்பேறு முற்றி னதுவோ சலவையினுன்
மைமுகத்தின் வெயர்வை துடைத்துமெல்ல முளரிக் கரத்தாற் குழல்
போ தன்னு ரமதா முல்லைமலர்க் காமஞ் சூட்டிக் கலவியிலே [கோதிக்
போ சரிந்து கிடந்த பலபணியுந் தானே திருத்திக் கலைபொருத்திக்



கொன்னுர் வேற்கைப் பராசர் கோமான் பெரிய சாமியருள்
கூர்ந்து நகைத்தா னென்னிருகண் குளிரப்பார்த்தேன் ப
மின்னுர் தமையே யனுபோக விதத்தாற் றன்னை வசப்படுத்தும்
வித்தையவனுக் கேயல்லால் வில்வே டனக்கும் வாராதே. (97)

பெருஞ்சை வலமாங் குழல்செருகிப் பிறைபோ னுதலிற் காப்புமிட்
பேசுன் னிறமாங் கஸ்தூரி பிறங்கு திலக நடுவெழுதி [டெ
யருங்கட் கடையின் முன்பிறந்த வாலம் போலஞ் சனந்தீட்டி
யணியு மணியும் பலவுமணி பாய்ப் பொருந்தி
பொருந்தும் புயத்தின் முலையெனவே பொருவின் மணியம்
பொருப்பில் விருப்ப முடன்சேர்த்துப் புதுமென் னுரைப்பூந் துகிலுடுத்தி
வருந்துஞ் சனகிக் கிரங்கிவில்லை வளைத்தோன் பெரிய சாமிவரை
வாரிக் கடலே நினைப்போலென் வடிவந் திருத்தப் பார்த்தேனே

உன்னு காள பாரணமே யுடையோன் சிற மாரணமே
யுற்ற வனங்க னாரணமே யோகோ வினிநீ வாரணமே
மன்னு மதித்தாய் நீரணமே மறந்தா ளெனையு மோரணமே
வாழி யென்றாள் வாரணமே மாவிற் குயிலுஞ் சாரணமே
துன்னு தவள வாரணமே தொனித்தோன் முன்னை யாரணமே
சொல்லித் துதிக்கும் வாரணமே சொன்ன பெரிய சாமிதுரை
யென்னை யணைந்த காரணமே யியம்பிலதற்கு நாரணமே
யென்னு குமனப் பூரணமே யிரத்ன காம்வாழ் வாரணமே

மாலைக் கனவு தவறுமன் மாலைத் தளவப் புயனெனது
மாலைத் தவிர்க்கப் புலரியினின் மாலைப்போலே வரமனமுந்
சாலக் கண்ணுங் குளிர்ந்திடவென் சாமி தனையே நெரிசித்தே
தவமே யாதி தயாதருமன் றனிச்செங் கோலு நாரம் பொன்
சீலத்தினையுமிகப்புகழ்ந்தேன் றிறற்செம்புலிச்சின்னனை
செல்வன் பெரிய சாமிரண சிங்கஞ் செங்கை யாலெனது
மேலைத் தடவி நவநிதியம் வேண்டும் வரிசை கொடுத்திரா
வில்வேள் போலக் கலந்திருந்தான் விளக்கு மிரத்தினகாமே.

வாழி திரற்செம் புலிப்பட்டம் வாழி கிழுவன் வடகரையும்
வாழி துரைச்சின்னணைஞ்சேந்த்ரன்மைந்தன்பெரியசாமியெங்கோன்
வாழி யவன்கைக் கட்டாரி வாழி துணைச்சங் கரலிங்கம்
வாழி ராம சாமிமுகில் வாழி முத்து சாமிநிதி
வாழி திரும லைப்பெருமாள் வாழி புகழ்ச்சங் கரலிங்க
மான்முத் திருளப் பன்பெருமு வாழி யருமந் திரித்தலைவர்
வாழி கிளைதன் மக்கண்மரு மக்கள் சேனை பரிவாரம்
வாழி தரும நீதிசெங்கோல் வாழி யிரத்தி னுகரமே. (101)

இரத்தினுகரவிலாசம் முற்றிற்று.

---

உ

வடகரைச் சமஸ்தானம்

# முத்துசாமித் துரையவர்கள் பேரில்

# வருக்கக் கோவை.

---

## காப்பு.

பூமேவு செம்புலிச் சின்னணைஞ் சேந்த்ரன் புதல்வன்மலர்
மாமேவு கீர்த்தித் துரைமுத்து சாமி வரோதயன்மேற்
பாமேவு சீர்வருக் கக்கோவை பாடும் படிக்கருள்வாய்
தேமேவு கூந்த லலகின்ற செண்பகச் சிந்துரமே.

## நூல்.

### காட்சி.

அம்புயம் பானலஞ் செவ்வாம்பன் முல்லை யரும்புகுமிழ்
வம்புறு கோங்குமென் காந்தளுந் தாங்கி வளர்கிழவைச்
செம்புலிச் சின்னணைஞ் சான்முத்து சாமி சிலம்பிடத்திற்
கொம்புயர் காவினி லோர்காம வல்லி குலாவியதே.

### ஐயம்.

ஆதிரை யானிட மானிட மோவவு ணம்பிடமோ
மேதினி யோமுது பாதல மோமத வேழம்விரைந்
தோதிய போது வருமுத்து சாமி யுயர்வரைவாய்
மாதிர திக்கு மணவாளன் வில்லெனும் வல்லியாக்கே.

### துணிவு.

இருகுங் குமதன மேற்றொயின் மாத ரெழுதியதுஞ்
சொருகுங் குழலு மலர்வாட்ட மும்பைங் துளவலங்கன்
மருவுந் தடம்புய மான்முத்து சாமி வரையிடத்தி
லொருபெண் சிகாமணி தான்புவி மேல்வந் துதித்ததுவே.

### குறிப்பறிதல்.

வார் மலர்முகம் பார்த்திப் போர்மனத் தெண்ணமும்போற்
றவா மெனவகை யாதருள் வோரன்புங் கப்பமிட்டு
மவார் தொழுஞ்செம் புலிமுத்து சாமி வியன்கிரியிற்
வா ரிசமின் விருநாட்டத் துற்றறிப் போதினிலே. (4)

### இரந்து பின்னிற்றற் கெண்ணல்.

திக்குஞ்சத் திரானன மின்னாட் கிதங்க ளுரைத்தவள்சம்
கிக்கும் படிசெய்து மேவுதும் யாங்குழல் வாய்மொழிபாற்
ரிக்குங் கருணை நிறைந்தகுற் றலர் பதாம்புயத்தைத்
மிக்குந் துரைச்செம் புலிமுத்து சாமி சுரும்பிடத்தே. (5)

### இதவுமது.

நகா மெழுகன் றிவர்நெஞ்ச மேதய வுண்டுத்மக்
நகாய் நமையும்வைத் தாதரிப் பாரரு மைத்தமிழ்க்கே
நகார் துரைச்சின் னணைஞ்சேசந் திரன்சிறு தந்தையென்ன
நகாமன் செப்புலி மான்முத்து சாமி வரையிடத்தே. (6)

### இரந்து பின்னிலை நிற்றல்.

நக் கதலியன் னீர்விழி வெல்லெனெஞ் சுடுருவப்
ருங்கு விட்டிரங் காதுநின் றிரந்திப் போதைமறைத்
ருக்கு மைத்துன் னுழுந்து சாமித் துரைவரைவாய்
ருக் குவிமுலை யிர்கட்டுங் காயமிவ் வேளையிலே. (7)

### பிரிந்து வருகென்றல்.

டிசை மெய்க்கச் சொலுங்கவி வாணர்க்கி யானையும்பொற்
கை புந்தரு மான்முத்து சாமி தடஞ்சிலம்பிற்
டிவர் தண்கரை மேம்மா திகழுமச் செய்கையென்ன
டிசை யுங்குழ லாய்பிரிந் தேகி வருகுவனே. (8)

### இடமணித் தென்றல்.

கயிந் தமிழ்த்தேறும் மூரின் னிசைப்புலவோர்
ங் கவிக்கெங்க ளூர்ப்பெரி யோர்கள் பயன்சொல்வர்கான்



### வருக்கக் கோவை.

தேடும் புகழ்ச்செய் புலிமுத்து சாமி சிலம்பின்மறிந்
காடுங் கயல்விழி யாய்தவிர்ப் பாயுன தாகுலமே. (9)

### தலைவன் பாங்கனைச் சார்தல்.

ஐய மினிநமக் கேதுநெஞ் சேதம யந்திநனன்
கையம் புயம்பற்ற வென்னமுன் கூட்டிய காரணம்போல்
வையம் புகழ்செம் புலிமுத்து சாமி மணிவரைவா
யுய்யும் படிநம் முயிர்ப்பாங்க னேவந் துதவுவனே. (10)

### கிழவோன்கழற்றெதிர் மறுத்தல்.

ஒருவா ரிசமலர் மான்புவி மானினி யுற்றிருந்துந்
திருமால் விருந்தைக்கு மாமால்கொண் டான்முது செந்தமிழ்க்கே
தருவாரி மேருத் துரைமுத்து சாமி தடஞ்சிலம்பில்
வருமான னார்க்கெவ ராசைகொள் ளார்நண்ப மானிலத்தே. (11)

### பாங்கன் கிழவோற் பழித்தல்.

ஓராழி மானுக் குடைந்தன போன்முலை யூடெழுந்த
வாராழி மானுக்கு நீமெலிந் தாய்சக்ர வாளவட்டப்
பாராளும் வேள்செம் புலிமுத்து சாமிவெற் பாவுனைப்போற்
காராழி சூழுல கத்தெவ ராகிலுங் கண்டிலமே. (12)

### தலைவனுற்றதுரைத்தல்.

கரும்பா மொருகன்னி கண்வேலி னாற்கருங் கல்லெனுமென்
பெரும்பார நெஞ்சகம் பேதித்த தாற்பலைப் பெண்ணுருவாய்த்
தரும்பாத மால்செம் புலிமுத்து சாமி தடஞ்சிலம்பிற்
சுரும்பார் புயநண்ப வென்பால்வர் துற்றன சொற்றனமே. (13)

### மெய்தொட்டுப்பயிறல்.

காரிகை யோதி யறிந்தவர் நீர்முன்னங் கற்றநன்னூல்
நேரிய தொன்று நினைந்திலி ரோநெடு நீர்கலங்க
மூரிவி லேந்துந் துரைமுத்து சாமி முகுந்தன்வெற்பிற்
சேரிய தண்ணளி கூர்திரு மாமச் சிவீமுகமே. (14)

### இடையூறு கிளத்தல்.

ஒரிக்கை கருப்பொரு ளல்லாது காந்தளெங் கேபகரு
வரிக்கை யுளதுன் னிடத்திற்கண் டோமை வகைக்கதிவாம்
பரிக்கை நுதல னெனுமுத்து சாமி பனிவரைமஞ்
சரிக்கேச பரமின் னேயுனக் கேதித் தனைமயக்கே. (15)

### சீறேலென்றவள் சீரடிதொழுதல்.

சீற்றம் புலிநுத லாய்மண நாளிற் கிளர்வடமீன்
போற்றும் பொழுதினிற் கால்பிடித் தேன்பொற் பொருப்பின்மிசை
யேற்றும் பதாகைத் திறன்முத்து சாமிந ரேந்த்ரன்வெற்பிற்
சீற்றந் தனையொழி யாயளி யாய்ரசத் தெள்ளமுதே. (16)

### இறைவியைக் காண்டல்.

குயினை ரளகங் குயினைர் மொழிபசுங் கோமளமா
மயிலை பயிலு மயிலை விழிதென் வடவருவிச்
சயிலை சனைத்தொழு மான்முத்து சாமி தடங்கிரியே
பயிலை யிடமு மிவரேநங் கோன்சொன்ன பாவையுமே. (17)

### தந்ததெய்வந் தருமெனச்சேறல்.

கூடத் திருவனை யாளைமுன் னேகொணர் வித்ததெய்வந்
தேடத் தியங்கவும் பார்த்திடு மோபொற் சிகரமணி
மாடத்ரி கூட பதிகாத்த முத்துசு வாமிவெற்பி
னீடத் திருவுள மின்னமுங் கூட்டு நிசநெஞ்சமே. (18)

### அணிந்துழிநாணியதுணர்ந்து தெளிவித்தல்.

கடிமன்ன ரஞ்சமெய்க் கீர்த்திக டாத்துஞ்சிங் கேறுவெற்றித்
முடிமன்னன் செம்புலி மான்முத்து சாமி சுரும்பிடத்தில்
டிவன்ன மேழுன்ன மேயுயிர்ப் பாங்கி வனைந்தவந்தப்
டிவன்ன மேயமைத் தேனினி யேது பயமுனக்கே. (19)

### பெருநயப்புரைத்தல்.

ஞசர் தனிலலர் வண்டுகண் மருங்கள் கேணியிலே
சம் புகழ்த் திருமுகம் போற்செக ராசர்தொழும்
டே



போசன் கிழவைத் துரைமுத்து சாமி பொருப்பிடத்தே
வாசந் தருமம் புயமேற் குமுத மலர்ந்ததுவே. (20)

### பிரியே னென்றல்.

கைவரை யும்பொன் வடகரை யும்பசுக் கானிரையு
மைவரை யும்புரந் தோன்முத்து சாமி யணிவரையி
லுய்வகை யாமிரு பேர்நட் புடம்பு முயிருமென்றே
பெய்வளை யேபிரி யேன்மன னேசம் பிரியினுமே. (21)

### உடன்புணராயத்துய்த்தல்.

கொத்தார் மலர்க்குழ லாய்தெய்வ மாதர் குழாத்துள்ளளி
னத்தாள்வந் தெய்திய வாறென்ன வேகலங் கூர்தருமன்
பத்தாறு தேசம் புகழ்முத்து சாமி பனிவரையில்
வித்தாரப் பாங்கிய ராயத்து ணீசென்று மேவுகவே. (22)

### களிறுதருபுணர்ச்சியா லறத்தோடு நிற்றல்.

கோமான் கிழவைப் பெரியசு வாமிச கோதரவேள்
பூமான் புணர்செம் புலிமுத்து சாமி பொருப்பிடத்தில்
மாமான் வெருள வருயானை ராவணன் வந்தமன்னன்
சீமான்மின் னந்தத் திருமானென் றுள்ளந் தெளிந்தனனே. (23)

### நற்றுயிரங்கல்.

சங்கேறு வானி வடகரைச் சின்னணைஞ் சானுதவு
சிங்கேறு மான்முத்து சாமி குபேரன் செழுங்கிரியிற்
கொங்கேறு வெம்பாற் பாதையி லேயடி குந்திக்குந்திப்
பங்கே ருகமெப் படிவைக்கு மோமென் பனிமொழியே. (24)

### கலவியின் மகிழ்தல்.

சாயன் மயிலனை யாரர சேசொற்கந் தண்ணமுதம்
வாயமு தேயந்தத் தேவா ரமுதம் வழங்குகொடைந்
தூயபு கழ்ச்செம் புலிமுத்து சாமி சுரும்பிடத்தி
னேயம தென்னசொல் வேனிந்த்ர போக நிகரல்லவே. (25)

புறங்காட்டல்.

சின்னனைஞ் சான்பெற்ற சேய்முத்து சாமி சிலம்பிடத்தின்
முன்னனைந் தாலென்ன தாழ்ச்சியுண் டோமுத்து மோகினியே
வென்னனைந் தான்மதி செவ்வாய் வியாழம்வி ரோதமில்லை
பொன்னனைந் தான்புறங் கொண்டேன் கயிலைப் புறத்தினிலே (26)

வெறி விலக்குவித்தல்.

சீகாழி சொர்க்க புரத்தாற் குழுற்பகை செய்திலையே
யாகா துயிர்க்கிட ராருஞ்செய் யார்மண்ட லாதிபத்ய
யோகா திபன்செம் புலிமுத்து சாமி யுயர்வரையின்
மோகா விகார மயிலார்க் கிதன்று முதுமருந்தே. (27)

பொய் பாராட்டல்.

சுந்தர மால்செம் புலிமுத்து சாமி சுரும்பிடத்தின்
மந்தர மாமுலை யாள்குழல் போலுமொவ் வாதகறைக்
கந்தர மோடிக் கடன்மேற் பயங்கொண்டு கால்பதறி
யந்தர மார்க்கம தாய்மலை நாடுற் றமர்கின்றதே. (28)

ஆடிடம் விடுத்துக்கொண்டகறல்.

சூடுங்கி ரீடத் தரியாரை யேதினஞ் சூறையிட்டுச்
சாடுங் கடாசல மான்முத்து சாமி தடஞ்சிலம்பில்
ஆடும் பொழில்வண்டு காள்கிள்ளை காளெம தன்பரென்னைத்
தேடும் பொழுதிவ் வழியே வரச்சொல்லுஞ் சீக்கிரமே. (29)

சுனை வியந்துரைத்தல்.

செருமீதிற் செம்புலி வேண்முத்து சாமி சினத்தெதிர்த்து
மருவாரைப் பார்க்கின்ற பார்வையைப் போற்செவ் வரிபரந்து
விருபார் வையுமவன் றன்புகழ் போன்ற விதழ்நிறமுந்
தருமேற் குடைவன மின்னே யடியெனத் தண்சுனையே. (30)

எழுதரிதென்றல்.

சேலார் விழிகளுஞ் செல்லார் குழலுஞ்செஞ் சீறடியு
மேலா முறுப்பு மெழுதுவை நீகஞ்சன் விட்டமத



மாலானையைவென்ற மான்முத்து சாமி வரையண்ணலே
பாலார் மொழிபுல னெய்திடு மோவரைப் பாவையர்க்கே. (31)

தலைவிதழையேற்றமை பாங்கிபகர்தல்.

சைவத் துரைசெம் புலிமுத்து சாமி தடஞ்சிலம்பிற்
பொய்வைத்த சிற்றிடை கைகூப்பி வாங்குநின் பூந்தழையைத்
தெய்வத் துவமித் திருவிழி மேல்வைத்துத் தேமலங்கொங்
கைவைத்து முத்தமிட் டாற்பின்னை யேது கழறுவதே. (32)

பூத்தரு புணர்ச்சியாலறத்தொடு நிற்றல்.

சொற்புல வோர்தங் கவிதாப்ர சங்க சுமுகன்வெகு
விற்பன வான்செம் புலிமுத்து சாமி வியன்கிரியி
லுற்பல மென்றொரு போதுதந் தான்வஞ்சி யும்புனைந்தா
ளற்புத மென்றறிந் தோமன்னை வேறொன் றறிந்திலமே. (33)

தலைவியை வியத்தல்.

சோமன் கிழவைப் பெரியசு வாமித் துரைதளவத்
தாமன் றனைச்செம் புலிமுத்து சாமி தடஞ்சிலம்பிற்
காமன் பரிமொழி யிங்கே யிருக்கமெய்க் காமனென்னும்
நாமன் சசிக்கொருப் போல்வந்த தேதண்டர் நாட்டினிலே. (34)

தலைவனை வியத்தல்.

தண்ணாரும் பூரண சந்த்ரோத யத்தமு தந்தனைக்கண்
டுண்ணா துமீழுஞ் சகோரமுண் டோவங் குறுத்தெதிர்த்த
நண்ணாரை வெல்லுந் திறன்முத்து சாமி நளிர்வரைமேற்
பெண்ணா ரமுதினைக் கண்டுவந் தானம் பெருந்தகையே. (35)

பயந்தோரைப் பழிச்சல்.

தானா பதிகளுங் கல்விப்ர சங்க சமுகமுஞ்சூழ்
சேனா பதிசெம் புலிமுத்து சாமி செழுங்கிரியி
லானாப மெய்யின்ப மெற்களித் தானை யளித்தவர்க்கே
வானா டுறுநிதி போலநின் றுமென்றும் வாழியதே. (36)

எழுதியிரங்கல்

திருமலை புஞ்சுனை யுங்கனி தான்வைத் திருந்துமென்ன
வருள்புரி யாரிவ ராரறி யேனண்ட லாளையெற்றிப்

பொருகளிற் முன்செம் புலிமுத்து சாமி பொருப்பிடத்தில்
வருமயி லார்சற் றருமையில் லாரிவர் மாத்திரமே. (37)

### தன்னிலை தலைவன் சாற்றல்.

தீராத மால்கொண்ட சுந்தரற் கேசஞ் சிதங்கள்முற்ற
வாரு ரணையன்றி நேர்பட்ட தோவொன்ன லாரைவென்ற
வீராதி வீரன் துரைமுத்து சாமிபொன் வெற்பணையிர்
நீரா தரவுசெய் தாவின்று கூடும் நிலவரமே. (38)

### முன்னுற புணர்ச்சி முறையுற்க்கூறல்.

துரைராச கேசரி மான்முத்து சாமி சுரும்பண்ணலே
திரையார் கடலமு தன்னார்க்குன் சோர்வு தெரிந்திருந்தா
லுரையா திருபிறர் பாலென்ன காரிய மோதுகநீ
விரையார்தண் சோலையி லேமுன்னம் போலின்ன மேவுகவே. (39)

### நின்குறை நீயே சென்றுரையென்றல்.

தூதாற் கொணர்ந்துண்ணு மோவண்ண லேயஞ் சுகமுமிதழ்ப்
போதார்க்குந் தும்பியும் போலே விசையம் புரிந்துவந்த
சீதா பதிசெம் புலிமுத்து சாமி சிலம்பிடத்தில்
நீதான் விளம்புநின் சிந்தனை யாவுமன் னேரிழைக்கே. (40)

### தாய்துஞ்சாமை.

தெய்வதப் பார்வைபெற் றாளோ வனைதுஞ் சிடாததென்ன
சைவரைப் போற்சிவ ராத்திரி யோமுன்பு சாரதியா
யைவரைக் காத்த முகின்முத்து சாமி யணிவரையின்
மெய்வனப் பாருயிர்ப் பாங்கியி தென்ன விதியெனக்கே. (41)

### கார்முகங் கண்டோன் கவலையுற்றுரைத்தல்.

தேரும் புரவியும் பாகனுஞ் சூரிய தேவர்தந்தாற்
கூரும் புகழ்ச்செம் புலிமுத்து சாமியெங் கோன்கிழுவை
யூருஞ் சமீபிக்கும் பாகாநம் வஞ்சிக் குராத்துயர்செய்
காரும் பிறகிடு மேயில்லை யேலென்ன காரியமே. (42)



### பாங்கியிறையோற் கண்டமை பகர்தல்.

ஐயா மெனுமிரு தாரைநல் லாயொழித் தாவதென்னு
மெய்யாசை பூண்டொரு மானை விஞ்ஞி வெறுந்தழைகொண்
டுய்யான வாய்க்கருங் கொண்டலை யேகண் டுணர்ந்தனம்பூஞ்
செய்யாள் புணர்செம் புலிமுத்து சாமி சிலம்பிடத்தே. (43)

### பல்வேறு கவர்பொருட் சொல்லிநாடல்.

தொண்டையஞ் செவ்விதழ் வெண்ணகைகாட்டவத்தொண்டைநிறங்
கெண்டையங் கண்டர நீராடும் பூஞ்சுனை கீர்த்திபெற்ற
திண்டிற வான்செம் புலிமுத்து சாமி சிலம்பிற்பைம்பொற்
றண்டையந் தாளணங் கேகிடை யாதுகொல் சாற்றெமக்கே. (44)

### பாங்கியென்னை மறைப்பதேன் னெனத்தழால்.

தோட்டலங் காரமெல் லாமறி யாத சுரும்புமின்னார்
பூட்டலங் காரத்தி லேபொன்னி லாமணிப் பூணுமுண்டோ
கோட்டலங் கார முலையாய் மறைத்ததென் கூறுசெம்பொன்
னாட்டலங் கார முகில்முத்து சாமி நளிர்வரைக்கே. (45)

### பாங்கனெவ்விடத் தெவ்வியற் றென்றல்.

கடிக்குங் கலாப மயிலோ வியவிட நாட்கஞ்சமோ
துடிக்குங் கயல்விழிக் கேயண்ட லாரைத் துறந்தெயிலைப்
பிடிக்குந் திறற்செம் புலிமுத்து சாமிகெம் பீரன்வெற்பில்
வடிக்குங் கதிர்வடி வேல்வல வாசொல்லு வாயெனக்கே. (46)

### அவனஃ திவ்விடத்திவ்வியற் றென்றல்.

நாரா யணன்மனை மாமனை யேயிரு நாட்டமுகங்
காரார் வேதியர் தார்நெஞ்ச மேயெண்டி காந்தமுந்தன்
பேராண்மை நாட்டுந் திறன்முத்து சாமி பிறங்கலிலே
வாரானை கொண்டிங்ங னேயென்னை வாழ்விக்க வந்தவர்க்கே. (47)

### பாங்கனிறைவனைத் தேற்றல்.

நித்தில வாணகை பாற்சென்று நானுன் னிடத்தெய்தினே
னத்தனை போதும் வருந்தேல் கமற்றுலை ம்பபுமோ

வைத்தருள் செம்புலி மான்முத்து சாமி வரையண்ணலே
கத்தன் வருமட்டுஞ் சுந்தரன் பார்த்த கருத்தென்னவே. (48)

பாங்கன் குறிவழிச் சேறல்.

நீலக் கடலும்பொன் மேருவுந் தாங்கி நெறிகுறியாய்
ஞாலத்தெங் கோன்றன் மனங்கவர்ந் தேநல் லமுதகுண
சீலத் துரைச்செம் புலிமுத்து சாமி சிலம்பில்மணக்
கோலத் தடம்பொழில் வாய்நிற்கு மோவிசைக் கோகிலமே. (49)

இகழ்ந்ததற்கிரங்கல்.

துவலங்க சன்கணை யைந்தாலிம் மானிரு நோக்கம்பினாற்
கவல்கின் றவனை யிகந்தன மேசதா காலமுநற்
சிவசிந் தனைச்செம் புலிமுத்து சாமி சிலம்பிடத்தி
லெவரிங் கனைநிகர் புண்மீது கார மிடுபவரே. (50)

தலைவனை வியத்தல்.

தூதன வாசங் கமழ்காடுங் கோடும் நுவல்கடலு
மாதன மேருவுந் தான்கடந் தேவளஞ் சேரனும
கேதன மால்செம் புலிமுத்து சாமி கிரியிலொப்பி
லாதன னண்பனிங் கேவந்த தால ததிசயமே. (51)

தலைவியை வியத்தல்.

செரிஞ்சித் துணரிவள் சூரிய னேயவ னெய்தலிருள்
பெரும்புத் தமுத மதியவ னம்பின பேர்க்குதவ
வருங்கற்ப காடவி செம்புலி முத்துசு வாமிவெற்பி
லரும்பொற் பசிய மயிலிவ ளேகுயி னம்மவனே. (52)

தலைவன்றலைவியைப் பாங்கியோவேருகெனப் பகர்தல்.

நேரிட்ட வேழு மராமர மூடுற நீள்சிலையிற்
கூரிட்ட வாளி தொடுமுத்து சாமி குவட்டிடத்தே
தாரிட்ட பூமணம் போலநின் காதலி தன்னுடனே
வாரிட்ட பூண்முலை நீவர வேண்டு மனதுவந்தே. (53)



தலைவன் றலைவியைப் பாங்கியிற் கூட்டல்.

நையுந் துடியிடை யார்பூணின் மங்கல நாணதுபோன்
மெய்யிந் திரியத்திற் கண்போலு மேகடல் மேற்சரந்தொட்
டெய்யுந் துரைச்செம் புலிமுத்து சாமி யெழிற்கிரியின்
மையுந் திகழ்விழி யாருடன் போதுக மாமயிலே. (54)

காமமிக்க கழிபடர் கிழவி.

நுங்கரு ளும்பனை யேபுனை யேயதி னெஞ்சினையே
கொங்கரு ளுந்தலை யேகலை யேசெழுங் கோகனக
மங்கைம ணோகரன் செம்புலி முத்துசு வாமிவெற்பிற்
சங்கருள் மான்முத்த மேதந்தி லாரன்பர் தாமுத்தமே. (55)

மணம்பொருட்டாக வணங்கைப் பராய் நிலைகாட்டல்.

நோக்குநின் பான்மணஞ் செய்வதற் கேநுதி வேலண்ணலே
பூக்கொண்டு தெய்வதம் போற்றுதல் பார்பொருந் தாரையஞ்சத்
தாக்குந் திறற்செம் புலிமுத்து சாமி தடஞ்சிலம்பில்
வாக்கு மனமு முடலுமொன் றாய்நின்ற மாமயிலே. (56)

இறையோனிறைவிதன்மையியம்பல்.

படியேழும் போற்றும் படிவாய்த்த வென்னுயிர்ப் பைந்தொடிக்கே
பிடியே நடைமொழிப் போமு தேதிறல் பெற்றவொண்ணார்க்
கிடியேறு செம்புலி மான்முத்து சாமி யெழிற்கிரியின்
கொடியே யிடைமுலை குன்றே யிருகண் குவலயமே. (57)

தெய்வத்திரம் பேசல்.

பாகச் செழும்பசு வின்பாலும் வாழைப் பழமுமினி
தாகக் கலந்த செயல்நமக் கேபுவி யாளுந்தொட்ட
யோகத் துரைச்செம் புலிமுத்து சாமி யுயர்வரையிற்
கோகத் துணைமுலை யாய்தெய்வத் தால்வந்து கூடினதே. (58)

குலமுறை கிளத்தல்.

பிறக்குந் தருண முதலா யுதாசமும் பேருமெங்கு
சிறக்கும் புகழ்ச்செம் புலிமுத்து சாமி நெடுங்கிரியிற்

சிறக்கும்பொன் மாமணி சேர்மார் பணிகுன்றி சேருமிந்தக்
குறக்கும்ப மாமுலைக் கோமன்ன னீயிர்சை கொள்கின்றதே. (59)

### பேர்வினைதல்.

ஏதாம பசமுகில் சேருமின் னேஹிமப் பெண்ணணங்கோ
காதார்ந்த வேல்விழி மேனகை யோதென் கரிஞ்சைப்பிரான்
பாதாம் புயம்பணி மான்முத்து சாமி பனிவரைவாய்ச்
சேதாம்பன் மெல்லித ழீர்சொல்லு வீர்நுர் திருப்பெயரே. (60)

### கெடுதிவினைதல்.

அடைக்கின்ற மத்தகத் தேறம்பிற் சோரி பொருந்தவபர்
நடைக்குஞ் சரமொன்று வந்ததுண் டோவந்த நாணிரைக்காக்
குடைக்குன் றுயர்த்திடு மான்முத்து சாமி குவட்டிலருள்
படைக்குங் கடைக்கணல் லீருங்க ளேனற் பசும்புனத்தே. (61)

### யாரேயிவர் மனத்தெண்ணம் யாதெனத்தேர்தல்.

பூசார்க் கள்பழும் கல்லாக் கலையும் புனத்துற்றதோ
டசா துரையுமென் றேதினர் நீதிச்செங் கோன்மைசெய்யும்
தேசா திபன்செம் புலிமுத்து சாமி சிலம்பிலந்த
ஈர்சா துரியத் திவரார்பின் யாது மனத்தெண்ணமே. (62)

### எண்ணந்தெளிதல்.

பெரும்பாரின் மீதிவ ராரோ வறிகிலம் பேர்வினவி
வரும்பான்மை யும்பொய்யை மெய்யா யுரைப்பதும் வாலியஞ்சப்
பொரும்பாணந் தொட்ட மூகின்முத்து சாமி பொருப்பிடத்திற்
கரும்பார் குழல்பொருட் டால்வந்த தாமென்று தோன்றியதே. (63)

### முன்னிலை யாக்கல்.

பசா மெள்ளனமுற் றீரோ வுரையொன் றும் பேசுகிலீர்
தசாரு மோவியம் போனின்ற வாறென்கொல் தெள்ளமுத
ர்சா லகன்சின் னலைஞ்சேந் திரன் சொற்கு யாரசில்
சா பலன்செம் புலிமுத்து சாமி பொருப்பிடத்தே. (64)



## வருங்கக்கோவை.

### காமக்கிழத்தியைக் கண்டமைபகர்தல்.

பையா டரவல்கு லாளொரு மாதுநின் பாலகனைக்
கையா லெடுத்துமுத் தங்கொடுத் தாள்சென்ப காடவிவா
மையா னனருள் சேர்முத்து சாமி யணிவரைவாய்
மையாடுங் கண்ணி யவளெனக் கார்சொல்லு மன்னவரே. (65)

### தலைமகன் மறுத்தல்.

பொதிமுக் தமிழ்ச்செம் புலிமுத்து சாமி பொருப்பிடத்தி
லதியப் பசிக்குத் தரிசா னதைவய லாக்கிவிதை
பதியப் புதிய பயிரேற் றெனச்சொன்ன பான்மையொப்பாம்
விதியிற் கனியை மணஞ்செய்து மேவென்ற வித்தகமே. (66)

### குறங்கூறல்.

போடுங் கவளம்பொன் னூசியுங் காந்தமும் போலவன்பர்
கூடுங் கௌளி வலஞ்சொல்வ தாலென் குழிபொய்க்குமோ
பாடுங் கவிக்கு மதயானைக் கன்று பழனவள
நாடுந் தருஞ்செம் புலிமுத்து சாமிநன் னாட்டணங்கே. (67)

### நலம்பாராட்டல்.

மண்டல மோங்கும் புகழ்முத்து சாமி மணிவரைவாய்
விண்டு பிதிர்விட் டொழுகும் பலாச்சுவை மென்கனிகற்
கண்டுநெய் பால்சர்க் கரைதேன் கலந்த கழனியமு
துண்டு வளர்ந்த கரும்போவிம் மங்கைக் குடம்பெங்குமே. (68)

### அறியாள் போலவினைதல்.

மார்கழி யுந்தையு மாசியு மெற்றி மலர்க்கண்முலை
யார்கள னேகருண் டேவண்ட வாயந்து வரங்கதிலே
யோர்களில் மிக்க வெவராசை தந்த திசையுமுல்லைத்
தார்கமழ் திண்புய மான்முத்து சாமி தமிழ்வெற்பரே. (69)

### அவடேற்றல்.

மின்வந்த தென்ற லுடன்வந்த தேரகை விளம்புமொரு
வன்வந்த வன்கிழ வாபுரிக் கேகுவன் வாரணத்தின்

முன்வந்த சங்கர லிங்கதெய் வேந்த்ர முகுந்தனுக்குப்
பின்வந்த வேண்முத்து சாமிநன் னாட்டன்னை பேதுறலே. (70)

அலர்குறி.

மீனார் விழியன்ன மேமுன்ன மேயொரு வேடனுடன்
றூடல் கொண்டெதிர்த் தோன்மீதி லேழ்புலி தாங்கியசெந்
தேனாரு முல்லைப் புயன்முத்து சாமி சிலம்பிடத்தில்
வானார்கு போற் குரித்தான வல்லி மருவினளே. (71)

கலவியின் மகிழ்தல்.

முகமேல் முகம்வைத்து முத்தமிட் டேமுகை யானசெம்பொன்
னகமே லகம்வைத் திதழூற லுண்டுமின் னார்கலந்த
சுகமே பெரிது துரைமுத்து சாமி சுரும்பிடத்தி
லிகமேற் பரமெனுஞ் சொர்க்காதி போகம்வந் தெய்தியதே. ()

உலகியலுரைத்தல்.

மூவேந் தரும்வந் தொருவடி வாக முடிபொறுத்த
தேவேந் திரன்செம் புலிமுத்து சாமி திகழ்கிழவைப்
பூவேய்ந்த பந்தரி லந்தணர் வன்னிமுன் போற்றிவந்தே
மாவேந் திழையை மணஞ்செய்து கூடன் மரபுநன்றே. (73)

செல்லுங்கிழத்தி செலவுகண்டுளத்தொடு சொல்லல்.

மெய்யார் வெயர்வு மயர்வும்பின் பார்க்கும் விழிக்கடையு
நெய்யார் கருங்குழல் சோர்வுங்கொண் டேயன் னிரண்டுமலர்க்
கையானைப் போற்றிய மான்முத்து சாமி கனவரையி
லெய்யா மடநெஞ்ச மேசெல்லு மானம தின்னுயிரே. (74)

கோழிகூற் காட்டல்.

மேதினி மேல்வந்து விண்ணாடு காத்துவெஞ் சூரனுமாச்
சூதிரு கூறுசெய் வேலொரு கூற்றைத் துணித்திலையன்
றாதனை நோவதல் லாற்சேவ லானதை நான்சொல்வதென்
போதிசை முல்லைத் துரைமுத்து சாமி பொருப்பிடத்தே. (7)



வலம்புரி கிழத்தி வாழ்த்தல்.

மைபார் குவளைத் திருமலை யாண்ட வனைப்பணிசெங்
கையான் வடகரை வாழ்முத்து சாமி கனகிரியிற்
பொய்யா நமதன்பர் வந்தாரென் றூதும் புரிவளைக்கே
மெய்யா யதற்கினி யென்னகைம் மாறு விளம்புவதே. (76)

தலைவி நெய்யாடிய திகுளைசாற்றல்.

மெய்யார் குலைமுடத் தெங்கினம் போன்முலை விற்றருந்துங்
கையார் வளைச்சியர் வீட்டுக்குப் பூட்டொத்த காவலரே
வையாருங் கொற்றப் படைவீரன் முத்துசு வாமிவெற்பின்
மெய்யான பாலனைப் பெற்றுநெய் யாடினண் மெல்லியலே. (77)

நீடுநினைந்திரங்கல்.

மோகந் தணிவதென் னாள்வந்து கூடி முகையிளநீர்த்
தாகந் தணியத் தருவதென் னாள்கவி தாப்ரசங்க
மேகந் தருமத் துரைமுத்து சாமி வியன்கிரியிற்
பாகந் தருமொழி யீரொளி யீர்பஞ்ச பாணத்தையே. (78)

புகழ்தல்.

யமுனா நதித்திண் கரைசேர்ந் தறனு மிருண்டதுபார்
விமுனொளி கோ முடைபட்ட தார்க்குழன் மென்முகையீ
ரமுதா சனருக்குங் கிட்டா தமதின்ப மம்பொன்வளர்
சமுகா தியன்செம் புலிமுத்து சாமி சயிலத்திலே. (79)

பருவங்கண்டு பெருமகள் புலம்பல்.

யானேது செய்வேன் குயில்போய்க் கருங்குயி லெய்தியும்பின்
கானேர் மதலை கணிபூத் தரவெங் காரவைவென்று
மானே யனைத்தரச் ச[illegible] முத்துசு வாமிவெற்பெங்
கோனே வாரதென் னோதெய்வ மேயிக் குறிகண்டுமே. (80)

கண்டோர் தம்பதி யணிமை சாற்றல்.

இந்தா தெரிகின்ற தால்வெகு தூர மிலையணங்கே
பைந்தாருச் செட்புலி மான்முத்து சாமி யணிவரையு
நந்தா வனமும் வடகரைக் கல்லக நாடுநறுங்
கொந்தா ரமனை வாசலு மெட்டுகற் கோட்டையுமே. (81)

### [illegible]ரைந்தமை சேவிலிக் குணர்த்தல்.

யுகமான வூழி வரைவாழி பெற்றிட வொண்ணுகலைச்
சுகமான வண்ண லுடன்மணந் தானென்று தூயமுனி
மகமா னதைப்புரந் தோன்முத்து சாமி மணிவரையின்
சேகமா தவரினி தாயனை யேவந்து செப்பினரே. (82)

### கற்பு மேம்பாடுரைத்தல்.

யூபம் பொருந்து மகராச னேரண்ண லோது மித்ர
கோபம் பொருந்திதழ்த் தேனுகர்ந் தான்செம்பொற் குன்றில்வைத்த
தீபம் பொருந்தும் புகழ்முத்து சாமி சிலம்பினிற்ப்ர
தாபம் பொருந்துமின் னாள்கற்பு நான்சொலத் தக்கதன்றே. (83)

### கையடை கோடுத்தல்.

வடவாலி லேயிள நீர்காய்க்கி னுஞ்சை வலங்களெல்லாங்
குடவால் வளையுற்ற கொள்கைபெற் றாலுஞ்செங் கோண்மைநெறித்
திடவான் புகழ்ச்செம் புலிமுத்து சாமி சிலம்பிடத்திற்
படவா ளரவல்கு லாடனைக் காக்கப் பரமுனக்கே. (84)

### முகம்புகு கிழவி.

வானந் தருள்மணி யன்னீரின் னேகனி வாயமுத
பானந்த ரீர்மையற் றுகத்தைத் தீர்க்கப் பசுநிரைகாத்
த்தானந்த மாயொரு காம்போதி காம்பி லசைத்திசைத்த
கானந் தருங்கனி வாய்முத்து சாமி கனவரைக்கே. (85)

### இதுவுமது.

வாங்குஞ் சிலைநுத லீர்தநை தீரநும் மாதுரியப்
பூங்குங் குமவிள நீர்தரு வீர்புளி யேழுமொன்றாய்த்
தாங்கும் புயன்சின் னணைஞ்சேந் திரன்சிறு தந்தையென்ன
வோங்கும் புகழ்ச்செம் புலிமுத்து சாமி யுயர்வரைக்கே. (86)

### உலகில் மேம்படவிருந்து விலக்கல்.

விருந்தாயெம் மூர்தங்கு வீர்செங்கண் மால்குகன் வேண்டிடச்சென்
றிருந்தா ரவர்க்கிழி வேதுமுண் டோவிடி யோன்முழங்கித்



இருந்தா ருடைய தளங்கொத் தளங்கள் சிதையவெற்றிப்
பொருந்தானை யான்செம் புலிமுத்து சாமி பொருப்பண்ணலே. ()

### தலைவி பரத்தையைப் பழித்தல்.

வீமனைப் பாம்பெலங் காண்டீப மேந்தும் விசையனுபர்
சோமனைப் போற்றரு மான்முத்து சாமி சுரும்பண்ணலே
காமரைச் சேர்ந்து மதிக்கிசை யாமற் களங்கமுங்கிழ்
தாமரைக் கேணியை நேராம் பரத்தையர் தம்முகையே. (88)

### அவள்குறி மருண்டமை யவளவற் கியம்பல்.

வெடிகொண்ட தாமரைப் பூங்கோயின் மேவிய மின்மகிழ்ந்து
குடிகொண்ட மற்புய மான்முத்து சாமி குவட்டண்ணலே
படிகொண்ட சோலையி னீவரு வாயென்று பார்த்துமயி
லடிகொண்ட பாதமுங் கங்குலுந் தேய்ந்த தவணடந்தே. (89)

### கலவியிற் பிரிவு பாங்கிக்குத் தலைவனறி வுறுத்தல்.

வேலார் கருங்கணல் லாய்கவி ராயர் வியந்திருக்கும்
பாலாரு மன்னக் குழாத்திடை கொக்குறும் பானமையல்லால்
நூலார் கலைகற்றி லார்கவி ராய நுவல்வருயர்
கோலா கலன்செம் புலிமுத்து சாமி குளிர்வரைக்கே. (90)

### தலைமகளோடிருந்த தலைவன் கார்ப்பருவங் கண்டுவேந்து சோல்லல்.

வைபகந் தாங்கும் புயபாரன் முத்துசு வாமிவெற்பிற்
செய்ய முளரித் திருமான் முகைத்தடஞ் சேர்தனம்வே
ளையம்புங் கொண்டு வழிபார்த்துச் செல்ல வனுதினமும்
பெய்பம் பரமுகி லேபுவி வாழ்வு பெறும்படிக்கே. (91)

### இதுவுமது.

வைத்தலங் காரஞ்செய் பொன்னனை யாள்கை வளையிறுக
மொய்த்தலங் காரஞ் செயும்பூ வணையின் முயங்கினம்பூங்
கொத்தலங் காரப் புயன்முத்து சாமி குவட்டிலவன்
கைத்தலம் போலினி நீபொழி வாழிய கார்முகிலே. (92)

### வருக்கக்கோவை முற்றிற்று.

சிவமயம்.

சிவகிரி ஜமீன்தாரவர்கள்

# வரகுணராமபாண்டிதுரையவர்கள் மீது

# * திக்குவிஜயம்.

## காப்பு.

விரவுதிரை யுடுத்ததிக்கு விஜயவிலா சப்புரிந்து மேவாரெல்லாம்
பரவுவர குணராம பாண்டியவன் னியன்புகழைப் பரிந்துகூற
வுரககண பணமௌலி யொடுமதிய மிடுசடில ருமையாண்மேவு
சரசகெரு விதசுகசுந் தரராம லிங்கர்பதந் தலைக்கொண்டேனே.

## ஈரடிப்பஃறாழிசை.

ஆதியுமையாண் மீனாட்சி யம்மைகருணைத் தவப்பேறே
நீதியரசு சிவகிரியி னீங்காதிருக்கு நிலைப்பேறே.

அண்டர்பரவுஞ் சங்கரனா ரம்பொற்கமலத் தாளிணையைத்
தெண்டனிடுஞ்சன் னிதிப்பேறே திக்குவிஜயஞ் செலுத்தவே.

சீதைராம வெற்றிகிருட்ணன் செய்ப்புவிளையா டலுங்கொடுத்துக்
கோதைசூடி மாயனுக்குக் கொடுத்தாள்புகழுங் கொடுத்தாளே.

சொக்கர்கொடுத்தசெங்கோன்மைத் துரைப்பாண்டியனைவரகுணனை
தக்கவிசையத் திறம்பாடித் தமிழாற்றுதிக்க மனந்துணிந்தேன்.

சாற்றுவிசயச் சிவகிரியுந் தமிழோர்பரவு வடகரையு
மூற்றுமலையும் புரப்பவர்க ளுயர்ந்ததமிழ்நாட் டரசரன்றோ.

உலகமறிய மூவரையு மொன்றாய்க்கூட்டு மொருகடவுட்
புலவர்மகிழ வென்றமிழும் பொருந்தக்கூட்டிப் புரப்பதுவே.

## வேறு.

வேந்தன்வரகுணராமபாண்டியனுக்கேவிசயவிலாசஞ்சொன்னேன்
மாந்தரெலாமகிழவிசைவளர்த்ததுவும்விசயமால்வரைதானன்றோ.

---

* இப்பிரபந்தமியற்றியவர் கடிகைமுத்துப் புலவரென்பர்.

புதுவைநவநீதகிட்டணன்பொன்னடியுந்திரிகூடப்பொருப்பின்மேவும்
விதுவணியுங்குற்றாலர்விரைமலர்த்தாளுந்துணையாய்வேண்டினேனே

வேறு.

நூல் வரலாறு.

நீர்கொண்ட கடல்முகட்டி னிலவுதயம் விரித்ததெனப்
பார்கொண்ட திசைதொறும் பரவுபுகழ் வெளுப்பாலும்.
விசைத்தவேழ் பரிப்பரிதி விசைப்பொலிசக் கரமுகைத்த
திசைக்குவெயில் கொடுத்தாணை செலுத்தியசக் கரத்தாலும்.
இருக்குமொழி முறைதவறா திருக்குமென வெங்ஙாளுந்
திருக்கரத்தின் மிசையேந்து செங்கோன்மை யதனாலும்.
இருநாக்குப் பணிக்கமையா திவர்நாக்கு மிசைத்தரா
சொருநாக்கு நிறையாகி யுலகனைத்தும் புரப்பவனே.
எழுதுதமி ழரசர்தம திருநிலமு மொருவகைசெய்
வழுதிமனு பதியனைய வரகுணரா மேந்திரனே.

வேறு.

வடகிரிக்கிணை சிவகிரிப்பதி வரைமுகட்டுறை துருவனெப்பிவ
னடல்விளைத்திடு துடிநடப்பன வகிலவட்டமுங் ககனவட்டமும்.
சிவனையர்ச்சனை புரிமகத்துவ செனனமுக்கிய வரகுணப்பெய
ரவனையொப்பிவ னிவனையொப்பவ ரவனிவைப்பினி லரிதுரைக்கவே.
முதுதமிழ்க்கிவன்குறுமுனிக்கிணைமொழிவதற்புதமெனநினைப்பதென்
னதுசொலத்தகு மிவர்கணித்திய மாசிருப்பதென் மலைதழைக்கவே.

வேறு.

பரிமயிற்குமர னிவனெனப்பகர்வர் படைமுனைச்சமரி லறிபலா
மெரியனற்பொறியிலவனுதித்ததெனவேழ்சிகைக்கடவுண் மரபனே.
செம்புவெந்தகொ டுந்தழற்புரவி செந்நிறப்புரவி யென்னவே
வெம்புசிந்தைது ணிந்துதாவவரு வீரனுக்குநிகர் யாவரே.

வேறு.

ஆப்பனூ ரான்புலவ ராகுமிரு வகைப்பேர்க்கு மன்பாய்நல்கப்
பூப்பதும னிதிமனது புழுங்கியதி லெக்களிப்புப்பொருந்தக்காட்டும்.



காவலவன் குடைக்குமவன் கைக்குநிக ரல்லவெனுங் கருத்தினாலூர்
தேவர்பிரானைவல்கொளாச்செயலறிந்துநாமுமொருதேவாமென்றும்
செம்பிநாட் டாதிபதி இனதான நல்கவருந் திறத்தைநோக்கி
யம்புவிக்குட்சாதகப்புள் ளறமலைக்குந்தேற்றமுமுற்றுங்கேயெய்தும்.
வேந்தர்பிரா னருள்கொடைக்கு மேகமஞ்சுமென்னுமறவிதியோர்கையி
லேந்தியதா ரைப்புனலி விற்றுவிழுந் துளிநமக்கு மினிதாமென்றும்.
துங்கன்வர குணராம துரைவரையா தருள்தான சூரம்பார்த்துத்
தங்களிலே மனமகிழ்ந்து சக்கரவா கங்கணன்றாய்த் தழுவிக்கொள்ளும்.
குறையாமலிவன்கொடுக்குங்கொடையெளிதோமேருவையுங்கொடுப்பானின்ன
மறையாது பேரிசை மாறாத மணம்பொருந்தி வாழ்வோ மென்ன.

வேறு.

கொடைவளத்திலு மிவனையொப்பவர்குவலயத்தினுமிலையெனச்சொலப்
படைவளத்திலு மிவனையொப்பிலார் பாவைசுற்றிடுந் திசையனைத்துமே.

வேறு.

சங்குநின்னத் தம்பிவர குணவாண் டாயர்
தாலிக்குவே லிக்கருமைச் சந்ததியாய் வந்த
சிங்கம்வர குணராம பாண்டியவன் னியனைச்
செப்புவரிப் படியாலுஞ் செப்புவதொன் றுளதோ.

செங்கதிர்க ளாயிரமுங் கொழுந்துபடர்ந் தனபோற்
செம்பவளத் தாலிணக்கித் திரட்டியதூ ணிறுத்தி
யங்கதன்மேற் சந்திரமண் டலங்கிடந்த தெனவே
யமைத்தவிர சதத்தகடு மளப்பிலகொண் டடுக்கி.

தாரகையுங் கிரணமும்போ னீரிலுறை மலருந்
தருமலருங் கொடிமலருந் தனித்தனியே நாற்றி
யாரமும்வச் சிரத்தகடு நிறைத்தனபித் திகையா
லண்டகோ ளகைபொருவு மண்டபத்தின் சிறப்பே.

மழைதுளிக்கு முகிலூர்தி யிந்திரவோ லக்க
மண்டபம்போ லிருந்ததொலு மண்டபத்தி லிருந்தான்

பழையவர குணராம பாண்டியன்போ லரனைப்
பரவுவர குணராம பாண்டியவன் னியனே.

அந்தமணி மண்டபத்தி னரியணைமீ திருப்ப
வத்தாணி மருங்கினிற்சிற் றாலவட்டத் துடனே
சந்தமுலைக் கொடியிடையார் கவரிகா லசைத்தார்
சந்திரன்கொப் பளித்தநிலாச் சிந்தியதொப் பெனவே.

வேறு.

மகதர்கொங்கர் மராடர்வந்துதலை வாசனின்று தவிப்பதாற்
சகலதண்டிகையுமிவுளிவெள்ளமுஞ்சச்சடங்கலுஞ்செச்சைமுன்னிலே.
குப்பமிட்டரசர் கப்பமிட்டெமது கொட்டில்கட்டளை யிட்டசீட்
டொப்பமிட்டுத வச்சொலென்னவு ரைப்பதுங்கட விரைப்பதே.
மாதரத்திறை பூதரத்திறை வந்துவந்தவைகு விந்ததை
யாதுலர்க்கவ னளிக்கமற்றவ ரளிக்கவந்தவர் களிக்கவே.

வேறு.

வ. குவியும்வச்ரமொரு மலையெனத்திறை குவிந்ததென்றுசிலர் சொல்லவே
ண கவிஞருக்குதவு மென்றதன்றியது கண்டிலன்சமர கண்டனே.
சி: ஆடகத்திறை சுமந்துவந்துமத யானைநிற்ப தெனச்சொலப்
ர பாடகர்க்குதவு மென்றதன்றியது பார்த்திலன்கருணை மூர்த்தியே.
முசிதளத்தரள மாலைகப்பலொடு தென்னர்தந்தனர்க ளென்னவே
ன மாதருக்குதவு மென்றதன்றியது வாங்கிலன்கமலை பாங்கனே.
இந்தவாறவ னிருந்தபேரவையி லெழுதுவேதிகை யமர்ந்திடு
மந்தவேதிகையி லொன்றுதேடரிய வமுதமிந்துசிலை யதனிலே.
ஏறுமாதர்முக மதிதனக்குருகி யிந்துகாந்தம தருத்தநீ
ரூறுவாவியை நிகர்க்குமங்கையரு மோதிமத்தொகுதி யொப்பரே.
மரகதத்தக டழுத்தும்வேதிகை வதிந்தமாதர்சில கோகிலம்
விரவுபச்சிலை பொதிந்தமாவின்மிசை மேவிநிற்பனவு மாவரே.
கனகபீடிகை வதிந்தமாதர்சில கனகமேருமு கட்டிலே
தினகரோதய மெனக்குலாவவரு தெய்வமாதரை நிகர்ப்பரே.



வச்சிரத்தக டழுத்தும்வேதிகையின் வைகுமாதர்சிலர் மாமதி
யுச்சிமேவிவளர் மானெனப்பகர்வ தொன்றலப்பலவு மொப்பரே.
நீலமாமணி குயிற்றும்வேதிகை நிறைந்தமாதர்க ளிருப்பது
காலமாமலை குயிற்றுமின்னொளி கரந்திடாமையை நிகர்ப்பதே.
செய்யமாமணி பொதிந்தவேதிகை சிவந்ததாமரை நிகர்த்திடும்
ஐயநுண்ணிடையர் தாமிருப்பதுவு மாயிரந்திரு நிகர்க்குமே.
மெய்ப்பளிங்கு நிலத்தின்மெய்தெரிய வேறுமாதர்க ளிருக்கையென்,
றப்புறத்தினி லிருக்குமங்கையரு மாயிரத்தி னு மிரட்டியே.
அப்படிக்கொலு விருக்குமன்னவ னனங்கனூர்வதன தாமரை
வெப்பமுற்றது வெயர்த்தல்கண்டுள விருப்பமாயினி துரைப்பனே.
வசந்தகாலமிது மங்கைமீர்நமது வாவிசேருநல் வனத்திலே
இசைந்துநாமும்விளையாடவாருமெனவின்சொல்பேசிமுனெழுந்தனன்.
செம்பிராடது புரந்தமன்னனொரு சிந்துரக்களிறெ னச்செலக்
கொம்பனூர்பிடி யெனச்செல்வார்களிரு கும்பயானைகள் குலுங்கவே.
கொடியசிங்கமொரு தூணில்வந்துமுன் குதித்த தோருரு வெனச்சொல்வார்
நெடிய கொம்பிலிரு சிங்கம் வந்துதலை நீட்டுமென்றவகை காட்டவே.
சிங்கமொன்றுகடல் கடையவிட்டதொரு திங்களோதகடவன்கையிற்
சங்கமோகுட மெனப்பொதிந்தவகை சாற்றுமென்றபடி தோற்றவே.
முரசமத்தள மடித்தபேரிகை முழங்கவேபுவி துளங்கவே
இரசதத்தினி லமைத்ததண்டிகையி லேறினனரச னேறனன்.

வேறு.

புதியதண்டிகை தனிலிருந்தது புணரியன்று கடைந்தநாண்
மதியமண்டல மதிலொதுங்கிய மாலிருந்தது போலுமே.
இன்னவாறு நடந்தமன்ன னிருந்ததண்டிகையி றங்கியே
கன்னிமார்புடை சூழவந்தொரு காவனந்தனின் மேவினன்.

வேறு.

உவந்தமடவார் தங்கள்முலைக் குவளையெனவே மாதுளையின்
சிவந்தகனியைப் பறித்துடைத்துத் தின்பாரினிக்கு தென்பாரே.

தென்னமரத்தி னிளநீரைத் திரண்டமுலைக்குப் பகையெனவே
யன்னநடையார் பறித்துமரத் தடியிற்சினங்கொண் டடிப்பாரே.

மையார்விழியார் மூக்கினுக்கு மாறுமெனச்சண் பகமலரைக்
கையாற்பறித்து நாராலே கட்டிக்குழலி லமைப்பாரே.

முல்லைமலரைச் சிலமடவார் முறுவற்பகையென் றெண்ணியந்தத்
தொல்லைகளைய வேண்டுமென்றே சூட்டிலெடுத்து வைப்பாரே.

தருவிலிருந்து மலர்பறிப்போர் தலையைப்பார்க்கப் புன்னையின்கீழ்
மருவுமலரைக் கண்டுமுத்து வடத்தைத்தடவிப் பார்ப்பாரே.

நலத்திற்சிறந்த சிலமடவார் நந்தவனத்தின் மலர்பறிப்பச்
செலத்திற்புகுந்த சிலமடவார் செய்யும்விளையாட் டெய்தினரே.

கரையிற்படர்ந்த வள்ளையின்மேற் கயல்பாய் வனவுங் குழையவிழி
விரையிற்குதிக்குந் தொழில்காட்டி மின்னார்பொருவு நன்னீரே.

வள்ளையருகிற் சைவலமும் வனசப்பொகுட்டு மலர்க்குழலும்
பிள்ளைஞிமிறும் போற்றோன்றிப் பெண்ணீர்மையுமாந் தண்ணீரே.

அந்தத்தடத்தின் மடவியர்க ளனம்போலிறங்கு மணித்தரளஞ்
சிந்தக்கிடந்த வால்வளைகள் சேரப்பரந்து திரிந்தனவே.

ஊரும்வளையைக் கழுத்தாமென் றுன்னிவதனஞ் செய்யாமல்
நீரிலொருத்தி மறையுமென நின்றுளொருத்தி சென்றாளே.

பாயிலிருந்து கனியதரம் பருகுங்கணவன் போலாம்பல்
வாயிலிருந்த விதழ்த்தேனை வண்டுபருகக் கண்டாளே.

வள்ளமுகையைக் கொங்கையென்று மலர்ந்தமலரை வதனமென்று
முள்ளபடியே தாமரைக்கு ளொளித்தாளெனப்போ யழைத்தாளே.

கடுவிற்பொதிந்த வோதிமங்க ணளினமுகையை யொத்ததனம்
வடுவைத்திடுநா யகனையெண்ணி மார்பைக்குறித்துப் பார்ப்பாரே.

களபமுலைகள் மேலாகக் கமலத்தடத்தி னீந்துதல்போன்
முளரிமுகையென் றளிகுடைய முழுகார்துணுக்கென் றெழுவாரே.

கொங்கைக்குடத்தா னீந்துதல்போற் குதம்பையடிக்குஞ் சிலமடவா
ரங்கத்தினின்முத்துதிர்வனபோலவர்காற்புனல்கொண் டிறைத்தனரே.

மேவித்தடத்தின் மூழ்குதலும் வீழ்ந்தகலையைக் காணும
லாவிப்புனலைக் கலையெனக்கொண் டறியாத்தலத்தை மறைப்பாரே.



நரந்தங்கரைந்து மலர்வாவி நன்னீரெமுனை யாறுளூற்
பரந்துகுளித்த மடவாரைப் பலரென்றியம்ப வேண்டாமே.

பண்டுபழகி யிருந்தாலும் பலனற்றவரைப் பிரிபவர்போல்
வண்டுங்கமல மலர்நீங்கு மாலைப்பொழுதும் வந்ததுவே.

கள்ளக்கலவிக் குளமுருகிக் கங்குலுறங்கார் கண்களென
வெள்ளத்தடத்திற் காவிமுகை விரிக்குஞ்சமய மடுத்ததுவே.

அந்திப்பொழுது வரவிருகோட் டயிராவதமு மதப்புழைக்கைத்
தந்திப்பொருப்பைக் கொணர்திரென்றான் சங்குராச சுபுத்திரனே.

ஆனைப்பிடறி லவனிருப்ப தலங்குங்கூந்தற் பிடிசுமக்கு
மானைப்பொருவு விழியார்கண் மலைமேலிருக்கு மயிற்குலமே.

முத்துநகையார் நடைபரியின் மொய்த்துவருதல் பாற்கடலிற்
றத்துதிரைக டொறுமிருக்குந் தண்டாமரைப்பெண் ணுவாரே.

திரளுநிலவு விராவிருளுந் தீபச்சுடர்கொண் டோங்குவன
விரவியிரவி லுதயம்போ லெந்தத்திசையும் பரந்தனவே.

வேறு.

கொண்டலொத்து நடந்துவந்திடு குஞ்சரத்தினி லிறங்கியே
மண்டபத்தினில் வந்திருந்தனன் மண்டலீகரர் கண்டனே.

வேறு.

பாடுமிடறு விம்மாது பார்க்கும்விழியு மிமையாது
கோடும்புருவ நெறியாது குழலுந்தலையு மசையாது.

வண்டுமுழங்குங் குரல்போல மாதர்மிழற்றுக் கருவியிசை
கொண்டுமுழங்குங் குரல்கேட்கிற் குழையாமனமுங் குழைந்திடுமே.

தந்தியிசையோ மிடற்றிசையோ சாற்றுமெனவே வீணைநரம்
புந்தியிசைக்கு மிசையுமதற் கொக்கப்பிறழா திசைத்திடுமே.

ஊதுங்குழலி னிசைகேட்ப வும்பருலகஞ் செவிமடுக்குங்
காதுங்குளிருங் கேட்டவர்கள் கருத்துங்குளிருங் கண்டீரே.

கஞ்சக்கருவி மத்தளமுங் கலந்துதொனித்துக் காட்டுவது
பஞ்சப்புலனும் பூதமஞ்சும் பரந்தவுடல்போ லிருந்ததுவே.

உடலுக்குயிரா மப்படித்தா னுயிருக்குயிராய்ப் பொதுநீக்கிப்
புடவிக்காசு செலுத்தியெமைப் புரக்குங்கருணைப் பாண்டியனே.
கையும்விழியு மெய்யுமிரு காலுஞ்சதியும் பிசகாமற்
செய்யுநடனஞ் சிலமடவார் செய்தாருலகந் திகைத்திடவே.
கானுநிலத்திற் றேயும்வகை காணரிமையா டாதிருப்ப
தானுமிவளோ வுருவசியென் றயிர்ப்பார்நெடுமூச் சுயிர்ப்பாரே.

வேறு.

நெட்டரவு தட்டழிய நெட்டையுட னெட்டிவிட
வட்டவரை தொட்டவரு மட்டியர்ப டைக்கதிபா.
வடகர்கரு நடகுடகர் வடகடலி னிடைபுகுத
நடவுதிரி கடகரட நடைமலையில் வருமுதயா.
முடுகியடு படைநிருபர் முடிசிதற வுடல்புதைய
வடுபகழி தொடுதிடமு மடலுமுறு தனுவிசையா.

வேறு.

மறுகுதிரை குறுகுறெனை மறுகுமிழி பறியமுறி
செருநருடல் பதாமுடி சிதறுகுரா கதநகுலா.

வேறு.

அடுபடை ராசராச வதிபகி ரீடகோடி
படவம ருடுசாடு பதயுக சார்வபூமா.

வேறு.

ஆக்ஞை சுக்கிரீபா ஆப்பனு ரிற்ப்ரதாபா
தாக்ஞை னுக்ரகோபா தாஷ்டிகா சுப்ரதீபா.

வேறு.

உக்ரசத்தியு ரைத்தவுருத்திரா வுத்தமச்சிவ பத்திவிதட்சணு
சக்ரவர்த்திக ளுக்குநிகர்த்தவா சத்துருச்சம ரத்தையுடைத்தவா.

வேறு.

அடையலர்கொடிமதி லிடிபடமாவைத் தாண்டியே
அவனியைமுழுவது மொருபுயமேல்வைத் தாண்டவா



படைதனின்முனைதரு ரகுபதிபேரைப் பூண்டவா
பரதளசெயதர வரகுணராமப் பாண்டியா.

வேறு.

என்றுருகர் துதிப்பமயிற்குல மென்றுமாதர் நடிப்பவடற்பகை
வென்றவீரம் விழைத்தமதப்புலி விஞ்சைவாரண ரிருப்பவிருப்பனே.

வேறு.

சிவகிரியும் வடகரையுந் திறலூற்று மலையுமெனச் செப்புமூன்று
புவனமதிநுதற்றிலகம்புனைந்தநெற்றிப்பட்டமெனப்பொருந்திவாழும்.
மூவகையாதிக்கமதின்மூவேந்துமொருமனதாய்மொழியும்வார்த்தை
யாவதுமொன் றுய்மனுடரனைவோரும்பேதமில்லாதாங்கேயெய்தும்.
பெரியமரு தப்பனுக்குப் பேரன்மரு தப்பனுடன் பெருமையான
வரிசைபெறு ராமலிங்க மகிபனழ கியநம்பி மற்றுளோரும்.
வடகரைக்குப் பிரதானி வாய்த்தபிச்சப்பிள்ளைதருமைந்தன்கீர்த்தித்
திடபுருட னும்பெரிய நாயகரா யெமைப்புரக்குந் தியாகமேகம்.
சீரார்பொன் னம்பலவேள் சேய்கூடற்றிருமலைவேள்திசைகடோறும்
பேரான வசைந்தாடும் பெருமாள்சொற் சிதம்பரதாண்டவபூபாலன்.
ஊற்றுமலை மந்திரியா முயர்ந்தவெங்க டேசுரய்ய னுடனின்னோர்கள்
சாற்றுமதி மந்திரியோ சனைபேசி யினிதிருக்குஞ் சமுகந்தன்னில்.

வேறு.

கொற்றவிசயத் திருமணந்த கோமானிருந்த சமுகத்தி
லொற்றரெனுமோர் நால்வருந்தா முற்றதிசையி லுரைபுகல்வார்.
குடக்கிலொருவன் வடக்கொருவன்குணபாலொருவன் தெற்கொருவ
னடக்கவரிய தனிக்குறும்ப ரமைந்தாரெனக்கண் சிவந்தானே.

வேறு.

கனதூரந்தான்றமிழறிந்தசொற்கவிதைகொண்டவன்புலவரின்சொலின்
மனதுகந்தவன் காடதந்தியன் மகுடமும்புனை விசயசிங்கமே.

வேறு.

ஞாரத்திசை வட்டமதெட்டுநிலாச்சோதிக்கவிகைக்குளிருத்தியமால்
வீரப்பன்வரத்திலுதித்திடுவோன் வீரத்திருவைப்புணர்மற்புயனே.

வேறு.

தென்னவன் பார்முழுது மவனே புரக்கவரு
சின்னணைஞ் சானமரர் பெருமா னெனப்புகலு
மன்னவன் காதலுறு மடவார் தமக்கழகு
மன்மதன் போர்புரியும் ரணவீர பத்திரனே.

திரிகூட பதிதானை யறிவால்வ ணங்கலாற்
செகமேழு நிலைமாறி மலையாமல் வந்ததா
லரிதான தமிழேத னிடமாய்வ ளர்ந்ததா
லருளாலு மியலாலு மழியாத கும்பனே.

செம்பியன் கிளைவழிப் பாடலுக் குதவியது
சேரனு டென்பரது செந்தமிழ்ப் புடவியவ
நம்பிவரு புலவருக் கிவனுதவு செல்வவள
நாடுதமிழ் நாடென்று நாடொறு முரைப்பனே.

வேறு.

எனுமகத்துவ மிகுதியு மாகிய விருநிலத்துறை பெரியசு வாமிதன்
மனதுவைத்திடு தயவுவிடாமலு மகிழுமைத்துனன்வரகுணராமனே.

வேறு.

தென்னாட்டு ராயமரு தப்பவர பாலனைச்
சீவலம கீபனைச் சிறுதந்தை யென்றவன்
பொன்னாட்டு மணிமார்ப னொருசேடன் முடிமீது
பொறைநாட்டு புவிநாட்டி லிசைநாட்டு வளவனே.

கடவார ணத்தரசர் கடவார ணங்களுங்
கண்டதுண் டப்படக் கண்டதுண் டப்படித்
திடவானெ னப்பகர்ந் திடவானெ னத்தருஞ்
சிங்காச னாதிபதி சிங்கார ரூபனே.

வேறு.

கனகநிதி யனையகொடை தருசமய வுசிதன்
கமலைதன அபயமுகை முழுகுமொரு கணவன்



அனகனதி பலனினிய கவிதைமுது தமிழி
னருமையறி குரிசிலெம தருமையறி துரையே.

வேறு.

மருதப்ப னென்றரவி குலராச சுந்தரனை
மனதுக்கி சைந்ததுணை யெனவேம கிழ்ந்தபுவி
விருதிட்ட வஞ்சகர்த முடிதாளெ ழும்பவிடு
விசயத்து ரங்கன்வர குணராம சிங்கமே.

வேறு.

நல்லதென் றுபுன் னகைபுரிந்துபின் னனுதிக்கினு மோலையேவினு
னெல்லையிற் றுணிந்தோலைவாங்கியேயொற்றரோடினார்வெற்றிகூறியே
ஒற்றர்கூறலு மற்றராசர்க ளுபயாராணுவுஞ் சமரவேழமுஞ்
சுற்றுவாம்பரி முற்றும்வந்தது சூரியன்கடுந் தேரும்வந்ததே.

வேறு.

பலமுரசந் திசையதிரப் படையெழுச்சி யெனப்புகலப் பகைஞரேங்க
நிலமகளுமனங்குளிரநிருபர்பிரான் போர்க்கோலநிறையச்செய்தான்.
மேதினிசார் மன்னர்தொழ மிக்கநிசார் தொட்டுமன வீரந்தாங்கி
நீதிமன்னர் சட்டைசெய்ய நீங்காமற் சட்டையுட னிறையச்சாத்தி.
வேந்தர்நடுக் கட்டுமென்று மிக்கநடுக் கட்டுமதன் மேலேகட்டி
யேந்தல்தலைப்பாகுமென்றேயிசைந்ததலைப்பாகுசென்னியிடத்திற்சாத்தி
பார்க்கவசம் பார்த்துடனே பரிந்தெடுத்துச் சுமந்தபுய பாரமீது
சீர்க்கவசம்புனைந்துவெற்றிசெலுந்துகரகங்கணமுஞ்சிறப்பப்பூண்டு.
பொற்கழலும் வனைந்துவட்டம் புனைந்துமின்றுன் முதலிலங்கா புரத்துவேந்த
னிற்கழலுங் கோசிகனு ரேற்றியவேள் விக்கனலு மீந்தகோமான்.
சிட்டர்தமக்குதவிசெய்துசெகதலத்திற்குடியிருந்துதிறத்தார்போரி
றட்டரைமாய்த் தொருவீர சொர்க்கமதிற் குடியேற்றுஞ் சுடர்வாளொன் றும்
வானவர்க்கு விருந்தாகி மனப்பயமற் றரம்பையர்கண் மணத்தைமேவித்
தானமெனப் பொன்னிலத்திற் றரியாரை நிலைநிறுத்துந் தடக்கைவாளே.
விருந்துடனுண் டுடுத்துமண மேவியச்ச மற்றுமனம் விரும்பிப்பார்மே
லிருந்தாட்பா வாளவென்றே யெடுத்தவடி வாள்கரத்தி லேந்தினனே.

தூரவெட்டுத் திசைப்பாரைச் சுமந்தபுயந் தனக்குமொரு துணையாய்ப்போரிற்
பாரவெட்டு தனைத்தாங்கப் பரித்தபரி சையுங்காத்திற் பற்றிக்கொண்டான்.
மனுபதியா கியராமன் வரிசிலையோ பார்த்தன்வரி சிலையோ வொன்னார்
தனுவெடுத்த தனுவளையத் தான்வளையா தெனவளைக்குந் தனுவொன்றேந்தி.
அருச்சுனன்பா ணம்பே லொன் றுயிரமாய் ராமன்கை யம்பிற்றப்பா
திருத்தடையார் முடித்தலையை யுடைத்தசிலீ முகப்பொதியுமொருங்கேயெய்த
நிருபனே சங்குகன்றுன் நீதியினுத் தேறவென்ற நிலைமையாலும்
பொருதசிலைக் கடற்கணையும் பொருத்தியம ராரைவென்ற புகழினாலும்.
அம்புடைக்க மாரீச னாடிக்கீழ் வீழ்தனுக்கொண் டமைத்தலாலுங்
கும்பகர்ன னீடுகடக் குஞ்சரமேற் கொண்டேவுங் குணத்தினாலும்.
பொன்னிலங்கை முகந்துவைத்துப் புலவர்தமைக் காத்தருளும் புகழினாலும்
மன்னியதோர் வாலிபட மானமுந்தா ரையுந்துணைக்கை வழங்கலாலும்.
பரதநடத் துங்கருத்தப் பாதுகைச்சீ ராற்காட்டும் பரிவினாலு
மிரவிகுல ராமனவ னிவனும்வர குணராம னெனவந்தானே.

வேறு.

இடியிடித்ததென மலைவெடித்துவிழ வெரிதிரைக்கடலு மளறெழ
அடிபடப்பிளிறு காடமத்தகச மணிவகுப்பனவு மலைகளே.
உரகருச்சிநெறு நெறெனவட்டவரை யுடைபடக்ககனம் வெளிபடக்
குரமிதித்துவிசை யொடுகுதித்துலவு குரகதத்திரளு முபரியே.
நெடியகைக்குழல்கள்படைமுனைச்சவளநிமிர்புயத்தின்மிசைபரியவே
படிதுலக்கவரு கருநடப்படைகள் பரவைசுற்றிவரு முகில்களே.
பலபடைக்கலமுமிகவெடுத்தவர்கள் பகைஞரைப்பொருதசெருவினர்
வலமிகுத்தவர்கள் புலிபடைக்குழுதல் வருகுலத்தில்வரு மறவரே.
செஞ்சிலைக்கையவர் கம்பளப்பொருநர் சிங்கமொத்ததிறல் வலியினர்
வெஞ்சினத்தின்மலை வந்தெதிர்த்திடினும்வென்றுவெற்றிகொளுமொய்ம்பரே.
செஞ்சியிற்பொருநர் தஞ்சையிற்குதிரை சிங்களப்படை நெருங்கவே
குஞ்சரத்தினொடு வந்துநிற்பர்சிலர் கொங்கர் பப்பரர்தெ லுங்கரே.
வங்கர் கைக்குழலு மங்கர்விற்படையும் வந்துநிற்பதும னந்தமே
கொங்கணத்தர்படைமுன்பிடிக்குருகுகுந்தமுற்றுமொரு பன்றியே.
வேலெடுத்தபரி வாரமத்தனையும் வீரபத்திரர் சொருபமே
ஆலவட்டமு நிலாமதிக்குடையு மாதவற்கெதிர் மறைக்குமே.



நேரிசைப்படைம ராடர்சுற்றுவது நேமிவட்டமென லாகுமால்
வாரிபிற்குமுறு பேரிசத்தமிட வாயடைக்குமுகி லேழுமே.
கேடகச்சுரிகை வாளெடுத்தவர்கள் கேசரிக்குருளை போல்வரே
ஆடல்பெற்றவய வீரர்மக்கர்மலை யாளர்தொட்டியர்வி ராடரே.

வேறு.

கடலெழுந்தென வருதுரங்கமுங் காடதர்ந்தியும் வயவர்பந்தியும்
புடவியெங்கணும்வருவதென்றவன்புரிசைமுன்றிலினிறைகின்றவே.

வேறு.

வட்டமிட்ட சக்ரவெற்பு மட்டுமுட்டி யட்டதிக்கு
மெட்டுவெற்பு மெட்டெயிற்றி லெற்றியெற்றி யுற்றுழக்கி.
மெட்டுவைத்து வட்டமோட்டு விட்டெயிற்ப ரப்பிலிட்ட
கட்டுமெட்ட றப்புகைத்த கட்கடைக்க னற்கொளுத்தி.
அக்ராச்செ ருக்குமுற்றி யப்புறக்க டற்கலக்கி
யுக்ரமிக்க திக்கயத்தி னுச்சியைக்கு மைத்திடித்து.
மக்களைத்து ரத்தியச்ச மட்டிருக்கி யொட்டியத்தை
நிக்ரகித்து மத்தகத்தின் நெற்றியிற்கை வைத்திலைத்து.

வேறு.

மேகபந்தி மிசிலுங்கை வீசிமண்டு நீலமொண்டு
சாகரங்க லோலமுங்கு தாரைசிந்து வீறுகொண்டு.
வீரதண்டை யோசைதண்ட மேலையண்ட கூடமும்ப
டீரெனும்பொன் மேருவுஞ்ச டேரெனும்ப கீரெனும்பொன்.
நாடுகங்கை நீரலம்பு நாகமுஞ்ச லேரெனுங்கண்
முடிநின்று சேடனஞ்சி மோசமென்று மேனடுங்க.

வேறு.

நிழலோதுங்க மனம்வெருண்டு நெடியகொம்பு கொடுதுரந்து
குழைவுகந்து செவியசைந்து குமுகுமென்று வடவைபொங்க
உறுதிகொண்ட நடையிலும்ப ருடல்கிடந்து படபடென்று
கிறுகிறென்று கதிர்சுழன்று கிரணபந்தி யொடுதுளங்க.

யடமடென்று பகைஞர்சென்று மலைபுகுந்த விசையினின்று
கடகடென்று மலைகடந்து கதறவண்டு புடையொதுங்க.

வேறு.

அந்தரம் புழுதியெழு துகளா லடங்கவே
யம்பரந் தனிலளறு படுதுளொ துங்கவே
மந்தரந் தனைநிகர வருகோப தந்திமேல்
வந்தனன் சங்குவர குணராம சிங்கமே.

வேறு.

கடலுடை படவடு புனலெனவே கடகஜ துரகத தளம்வரவே
வடவரை முகடிட திமிரவிதேர் மறைபட வுறுதுக ளெழுவனவே.
தறுகின கரைமறு நிறைமதியே தடைபடை வெளியடைபடர்நடுவே
மறுதிசை தவறின வரிவரிதாய் மறுகின குறுகிவ ருறுநகரே.
கடுகிடு மிடைமிடை யிடையிலையே கடுகின முடுகிடு மடுபடையே
புடவியு முடைபடு மினியடடா பொடிபடு மடையலர்கொடி மதிலே.
படநெடு முடிவிட வரவுடலே பதறுவ பறைபறை வதிலறவே
குடல்பத றுவசெரு நர்கள்வயிறே குமுறுவ தவர்மனை வியர்மனமே.
படையொடு தொடர்வது திடியடியே படுசுட ருடுவொடு மிடைவதுவே
யிடையிடையடைவதுகொடிகுடையே யிடுநிழல்புடவியினிடமறவே.

வேறு.

என்றுநின்றரசர் கண்டுதெண்டனிட ராவணன்பொருத சமரிலே
வென்றுநின்றரகு ராமனென்றிவனும் விரதந்திதனை யேவினான்.
மகுடவர்த்தனர்கள்தொடுகடற்படையும்வலியகல்லாணு முடைபடப்
புகுவதற்கினிது மனதிலுன்னியவர் புரிசைவாயிலி லிறங்கினான்.

வேறு.

நாகமென்பதே நீள்கயிறும்வரை நாலிரண்டுமே சூழ்கயமாநிரை
யாகநின்றமொய் மாவலோயார்கலி யானிருந்ததேர் பூமியுமானது.
சிலையென்பதே முடியதோடது சேரநின்றதாண் மேருவுமானது
மேலையண்டமே போலவும்வீரர்கள் மேவுகின்றகூ டாரமநேகமே.



வேறு.

ஆனைகளுஞ்சில காளிகளாங்களி லாடியசைந்தது காணுமிடந்தொறு
மீனவனன்றிரு காலில்விலங்கிட மேகமசைந்தது போலவிசைந்ததே.

வேறு.

கயிறுகாவிடத் தறிகொளாமலே கடினவேகவாம் பரிகடாவுத
லுபருமேருவிற் பெரியசேடனொ டுலவுமாருதந் தவழ்தல்போலுமே.
தள்ளருந்துகிற் படமடித்ததிற் றக்கபாசமே திக்கெலாம்விசித்
துள்ளடங்குபல் பண்டமேற்றலா லொப்பிலாவணங் கப்பலானதே.
ஆளும்வாசியும் வேலைபாய்திரை யானையாவன பாறைபோல்வன
நீளமானகூ டாரம்யாவையு நின்றமாமணற் குன்றுபோலுமே.
எங்குநின்றபீ ரங்கியென்பன வெறிசுறாவுடன் மகரமாவன
சங்குபேரிகை பொங்கியார்த்திடுஞ் சத்தமேகடல்கத்துமோதையே.
நீட்டமாய்வெளிக் காட்டும்வெள்ளைடால் நிலவுபோலவேகுலவியாடுவ
போட்டபாளையங் கூட்டமானதும் புடவிசுற்றிடுங் கடனிகர்க்குமே.

வேறு.

அற்றைநாளதி லடித்தபாளையமு மம்புராசியி லடங்கின
மற்றைநாளுதய காலம்வந்தவுடன் மருவலார்செரு முயன்றனர்.
மாமனென்றசெந் தொட்டிபூபதியை வாவெனப்பகர்ந் தடலினான்
வீமனென்றபுய பாரமின்பலமும் விசயமுந்தெரிய வேண்டுமால்.

வேறு.

முரணுமிப்பகைஞர் கலகமிட்டசமர் முனைபிடித்தவர் வளைத்தகல்
லரணுமற்றுமடு துகள்படுத்தென வுமவன்மகிழ்ச்சியொ டெழுந்தனன்
சேனைமுன்செல விசைத்தெழும்புரவி சேரவும்படை நெருங்கவே
யானையொன்றின்மிசை யேறினனமரி லானியென்றசெய வீரனே.
எதிர்நடந்துவரு படையினந்திரையு மிடிமுழக்குதால் செவிபுக
வதிருமுண்டுமன வலியுமுண்டுபகை பரசருஞ்சமரி லசுரரே.
கடைதிறந்துவெளி வரவினைந்தவர்கள் கலைவளைந்தகட லதனிலோர்
மடைதிறந்துவரு புனலெழுந்ததென வருவதங்கவர்கள் படைகளே.

வேறு.

மேல்கடற்றிரைகள் கீழ்கடற்கரையில் மேவியுத்தாடு மாறுபோல்
வேல்களிற்பரிசை வாள்களிற்சிலையில் வீரர்பற்பலரு நேர்வரே.
தூவிவிட்டகணை மாரிபொத்தெதிரி தூளியிட்டசம ரதனிலே
மேவிநிற்குமிரு வோருமிப்படிவி டாதெதிர்ப்பரிலை யாமலே.
நேரிடப்பொருத போரின்மற்றவரு நேரெனப்பொருவ ராகையால்
வீரவுக்ரண வீரபத்ரதுரை வீறுபெற்றமரி லேறவே.

வேறு.

வேகத்தி லேதத்தி மேகத்தி லேமுட்டி
மாகத்தை மோதித்தன் வால்சுற்றி யேயெட்டு.
வேழச்ச ரீரத்தில் வீசிப்ப கீரிட்டு
ஆழிக்கு ளேயப்பி னாழ்வுற்ற மாவெற்பை.
வானத்தி லேயெற்றி வாரிக்க லோலத்தின்
மீனொக்க வோடத்தன் வீரத்தி னாலெற்றி.
நேமித்த கால்வட்ட நீளத்தில் வீதிக்குண்
மாமிச்ச மாயுற்று வாதிட்ட பேர்தப்பி.
யோடக்க லாபத்தி லோவிட்ட கூடக்க
லாபத்த ரோடக்க பாயிட்ட சீனத்தர்.
வீறிட்டு வாய்விட்டு வீழத்த டாரித்த
போருக்கு ளேசத்தி பூசைக்கு நாளிட்ட.

வேறு.

விசைகொண்டு மிகல்கொண்டு விறல்கொண்டு மதிர்கொண்டு
மசையண்ட பகிரண்ட மதுகண்ட கதிகொண்டு.
சககண்ட நவகண்ட சலகண்ட புவிமண்டு
துகளுண்டு விடவிண்டு தொடமண்டுக திகொண்டு.
குறமண்டி யமதண்ட கொலைகொண்ட திறல்வென்று
பரகண்ட ருயிருண்டு பகைவென்ற பரியொன்று.



வேறு.

கடல்கலங்கி மலைமிதித்த கவனராசபுரவிமேன்
மடல்விரித்த குவளைவைத்த மார்பனேறி யேவினான்.
புரவியேறு பொழுதுசீறு புணரியென்றெ ழும்படை
யரவமோடி யடையலார்க ளகடுலைந்து பதறுமே.

வேறு.

யம்பரஞ்சு ழன்றதென்று பங்கெறிந்த தென்றெழும்பி
யம்பரந்து ளங்கின்ற டர்த்துறந்து ரங்கமே.
குஞ்சரங்க ளொன்றொடொன்று குன்றமொன்றொ டொன்றுநின்று
வெஞ்சமம்பு ரிந்ததென்று மிண்டுகொண்ட டர்ந்ததே.
செஞ்சரஞ்சொ ரிந்ததுண்டு சென்றதுந்தெ ரிந்ததின்று
வஞ்சர்நெஞ்ச மும்பிளந்து மண்டையுந்த கர்ந்ததே.

வேறு.

ஆளெறிந்த வேல்புதைந்த வானைநின்ற கோலமன்று
வேளெறிந்த வேல்சுமந்து மேவுகுன்ற மானதே.
சூரர்மண்டை போய்விழுந்து தூளடர்ந்த பாழுடம்பு
நீரிலங்கை வாய்கிடந்த நீள்கவந்த நேருமே.
காலறுந்து தோளறுந்து காதுகண்டம் வாயறுந்து
சாலவம்பர் கீழ்கிடந்த தாலதுண்ட நேர்வரே.

வேறு.

குன்றமொத்து வந்தெதிர்த்த குஞ்சரத்தி லம்புதைக்க
வன்றுதித்த கன்றையொத்த தங்கிரத்த முங்கியே.
பந்தியிற்று ரங்கமுற்ற பைங்கடற்கொர் துங்கன்விட்ட
குந்தமுக்கி ரன்றடக்கை கொண்டசத்தி யென்பவே.

வேறு.

ஒருவனின்றபடி தலையறுந்துசிர முயரமண்டிவிழ விழுவது
பொருவின்மன்றலதில் விசிறுசிந்துகனல்பொரியாந்ததனை நிகருமே.

வேறு.

கேணிரத்த மீதுகத்தி கேடயத்தி னோடுசுற்றல்
சோனையுட்கு மீனமைத்த தோணிவிட்ட தாகுமே.
மாமதத்த யானைபட்டு வாரிரத்த நீர்குளித்தல்
நேமிபுக்கு ளேயொளித்த நீலவெற்பு மானதே.

வேறு.

உண்டைடமீரெனமண்டைபடரெனவொணடியிலேவிழு கண்டகனை
யண்டையிலேயுயிருண்டொருபேய்மனமந்தகனுமெனநொந்ததுவே.

வேறு.

வாயிலிரத்தமு மோடவயிற்றினில் வாளிபுதைத்திட வீழ்பவரைத்
தாயரெடுத்தது போலவெடுத்தன தாகமெடுத்திடு கூளிகளே.
தாரையெடுத்திடு சோரிகுடித்திடு தாளிவயிற்றோடு சோகதுபோய்
வீரர்குடற்களை மாலையுமிட்டது வீசுகைகொட்டிய மாடியதே.
மூடுகுடத்தயிர் போலவுடைத்திடு மூளைகுடித்தது வாய்கொளவே
கூடுநரிக்கொரு பூசைகிடைத்தது கூளிமுடிக்கவு மோடியதே.

வேறு.

தலைகளற்றபேருடல்களற்றபேர்தமையிழுத்தபேயெளியதிற்கையான்
மலையெனக்களே பாமடுக்கவே வலியமட்டைபோ யதையுளப்புமே.
புவனவட்டமே லெயிறதுக்கியேபொருதுபட்டபேர்தமையடுத்தபோ
திவர்நகைப்பதா லுயிரிருக்குமா லெனநினைத்தபேய்தறுகிநிற்குமே.
பெரியமத்தமாவுடறுணித்துவீழ்பிணமலைக்குமேலலகைதொத்தியே
திரிவதச்சமா வெளியபற்றலார் திகிரிவெற்பிலே தவழ்தலொக்குமே.

வேறு.

மூட்டப்பேய்க ளிருந்ததட்ட மூளிப்பேய் பயந்துதலை மூளைவாரி
யிட்டப்பூசைகொண்டுபசியிளைப்பாறிப் போய்வாவென் றிசைக்குமாதோ.
கன்போன வொருபேய்க்குக் கைகொடுக்கு மலகைதசை கட்டிவாரி
யுண்போவென் றளித்திடவு மூணக்குமி தாரோவென் றுரைக்குமாதோ.
ஆணலகை கிணம்வழுக்கி யடித்துவிழப் பெண்ணலகை யதனைப்பார்க்க
காணம்வா வெழுந்துபிண நடுவேபோ யொளிக்குமது நகைக்குமாதோ.



பண்பாய தசையெடுத்துப் பசிக்குதவ வூடலினாற் பலிவாங்காத
பெண்பேயையாண்பேயென்பிழைபொறுப்பாயெனக்காலைப்பிடிக்குமாதோ.
தனித்தவொருகிழட்டலகை தடுமாறிவீழமகவு தலையைத்தாங்கி
பினித்ததசையறுத்துவயிறிடங்கொளாதலகொதுக்குமிருகைநீட்டும்
துடித்தவொரு பெண்ணலகை தூங்குழகை வயிறலைக்குஞ் சுமைகொண்டெய்த
வடித்தலந்த டித்தவென வடிவயிற்றைத் தடவியதா ணலகைபோலும்.
குனிந்துநிற்கு மொருபேயைக் குதிரையெனப் பாய்ந்தேறுங் குறளொன்றுறிக்
கனிந்தகுட றினையெடுத்துக் கடிவாள மிடநகைத்துக் கடித்துத்தின்னும்.
இருபூதம் பிணத்தொதுக்கி விருந்துசுகம் பாராட்ட வெட்டிப் பார்க்கு
மொருபூதந் தினைச்சீறி யுடற்குறைகொண் டெறியகைத் தோடித்தூக்கும்.
மனத்தகையா லொருபூத மறுபூதத் தலைவியுடன் மகிழ்ந்து பேசுங்
கனத்தழகை தொடப்பார்க்குங் கைக்கூலி நிணத்தசையைக் காட்டியேய்க்கும்
குறும்பூதத் துடனலகை கொழுத்ததசை நிணமருந்திக் கொண்டபூசை
இறும்பூதந் திறற்காளி யெடுத்துரைப்ப வவளுமகிழ்ந் தெய்திநோக்கி.
விருந்துணவு மருந்திவெற்றி விசயவா குணராம வேந்தன்கீர்த்தி
பொருந்துவனம் பாடியவன் பொருதகளந் தனிலாடல் புரிகின்றானே.

வேறு.

கொம்மை கொட்டின குரவை சுற்றின குறள்க ளுஞ்சிறு குடந்த மாடின
வம்மை சுற்றின பவுரி யிற்சில வலகை கொட்டின பறைமு ழக்கவே.

வேறு.

நெடிய பீரங்கி டமீரென வெழுந்தன நிருபர் தேசமும் பகீரென வதிர்ந்தன
பொடிய டுந்துகள் குபீரென வெழுந்தனபுரிசையின்படைதிடீரெனவிழுந்தனே.

வேறு.

மருவலர் வந்துகாலைத் தொட்டபோதவர்
மனைவியர் நின்றுதாலிப் பிச்சைதாவென
வெருவின ரென்றுநேமித் திச்சைபேசினன்
விசயது ரந்தரீகச் சுபர்தீபமே.

வேறு.

குடதிசையிலிருப்பவனைக்குறும்படக்கிப்பலதிறையுங் கொடுக்க வாங்கி
வடதிசையி லிருப்பவன்றன் வளநாடு குறைகொண்டு வலியுஞ்செய்தான்.

அன்னவனுஞ் சூரபத்ம னாகவெதிர்ந் தானவனை படலிற் சாய்த்து
மன்னவனுமெழுந்துசுப்ரமணியவிம்பமெனப்போரின்வலியைக்காட்டி.

வேறு.

இகலுநடந்தது வெகுவெகுசண்டைகளிவனுநடந்தனனவனுமெதிர்ந்தன
னகிலநடுங்கினபகைஞருடம்பினிலயில்கொடெறிந்தனனகடுபிளந்ததே.
அமரிலெழுந்தறுமுகனடரும்பொழுதசுரன்விழுந்தனன்மருவலரும்பரி
னமரர்மகிழ்ந்தனருலகிலிருந்தவரனைவருமின்புறமனதுமகிழ்ந்ததே.

வேறு.

கிழக்குத்திசையி லிருப்பவன்றன் கெருவமடக்க ரணபேரி
முழக்கத்துடனேகருங்கடற்போன்முனைவீரரைமுன்னடத்தினனே.

வேறு.

கடல்வளைத்ததோவிகல்விளைக்கவேகனகவெற்பிலோர்முடியொடித்தநா
ளிடமுளைத்தமா னகரமொக்குமாவிகல்விளைத்ததேவலனிருக்கையே.
படையனைத்துமேனிருகரொப்பவேபகைஞன்மிக்காவணனிகர்ப்பனு
லுடைதிரைக்குளே யணைபொறுத்தல்போலுறையகழ்க்குளே திடர்சமைத்தியே.
பொருநர்முட்டியே புரிசை முற்றுமே பொடிபடுத்தியே புரமழிக்கவே
செருவிளைக்கவே மனமிளைப்பனோ சினமிகுத்ததே வலனெதிர்ப்பனே.

வேறு.

எதிர்த்தராவணனெனக்கையாடினனினிப்பொருவெனவளைத்தவார்சிலை
யெதிர்த்தநாணொலி யெழுப்பிநீள்கணை யடுக்கினான்மநு குலத்துராமனே.

வேறு.

மனுகுல ராம னென்ற வரகுண ராம சிங்கம்
வரிசிலை நாணெறிந்து கணைவிடு போது வஞ்ச
னெனுமெதி ராளிநெஞ்சு கிழிபட வேவிழுந்த
தெனசொல ராவணன்ற னடுகள மாயு ளம்ப.

வேறு.

இந்தப்படிரா வணவேட்டை யாடியினிது தெக்கணமா
மந்தத்திசையி லிருப்பவன்ற னடலுந்திறமு மறியவென்றே.



வேறு.

விசையரண கொலுவிருந் தடையலர்க ளடிவருட
விக்ரமா தித்தனென வுக்ரகோ பஞ்செய்து
திசைமுழுது மிகவென் றிருக்குஞ் செருக்கினான்
றென்றிசை யிருப்பவன் செய்திபை வினவினான்.

இரணியன் போல்வரமு மடலும்ப டைத்தவன்
இப்போது நம்முடைய மித்ரரா சர்களுடன்
முரணிடுஞ் சீமைபப ழித்தவன் செய்திதனை
மொழிவதென் னென்றுசிலர் வழிமுறை யுரைக்கவே.

அவனுயிர் குடிக்குநர சிங்கரா ஜவனென்
றுக்ரமித் தானெழுந் தசனியே றென்னவே
புவனமுங் கிடுகிடென் றதிரவெங் கரிகளும்
புரவியும் படைகளுங் கொடிகளுந் தொடரவே.

அடிபடும் பேரியொலி திடுதிடென் றதிரவே
யண்டமுஞ் செவிடுபட் டண்டமுந் துண்டுபட்
டிடிபடும் பரராச ரென்படார் நவகண்ட
மெங்குங் கலங்குமலை யெங்குங் குலுங்குமே.

குறிப்பு:—இதுவரை மூன்று ஓலைப்பிரதிகளும் இரண்டு காகிதப்பிரதிகளும் வைத்து ஒப்பு நோக்கி அச்சிடப்பெற்றது. இதன் பின்னுள்ள பாகம் ஓலைப்பிரதி கிடையாமையால் கிடைத்த இரண்டு காகிதப் பிரதிகளை மட்டும் வைத்து ஒப்புநோக்கிப் பதிப்பிடப் பெற்றது.

பூசக்ர வாளவட் டத்தைப் புரப்பவன்
பூசக்ர வாளக் குடைக்குள்வரு கின்றனன்
ராசர்க்கு ராசரவி குலராம.ஜயபரசு
ராமவர குணராம ரணவீர பத்ரனே.

வந்திடு மதக்கரி கரத்துளை யிறைக்குநீர்
மண்படா முகைமூடு வெண்படா மாகவே
செந்துகள் பறப்பதே செங்கதிர் தனக்குமோர்
செம்புடவை யிட்டதென வம்பரம றைக்குமே.

வேறு.

மழைசொரிந்ததோ வனைவகுந்ததோ மறியுமென்பதா ரளவைகண்டதார்
பழையகங்கையோ புதியகங்கையோ படைநடந்ததோ வெனநடந்ததே.
வெயிலுமின்றியே தகையுமின்றியே மிகநடந்ததால் வயவர்பந்தியே
பயிலுமந்தமா ருதமதென்றதாய்ப் பழகுசண்டமா ருதமதென்பவே.
புவனமண்டலீ கரதுரந்தரன் புகழ்பரந்தபோ லிரததந்திமேற்
சிவிகைசந்திரோ தயமதென்பவே தினகரன்புகுஞ் சமயம்வந்ததே.
பகனடந்தபேர் தகையடங்கவோர் பதியமைந்தபோ திரவுதங்கினர்
செகமுமண்டலோ கழுயடங்கியோர் திசையில்வந்தா மவரிருந்ததே.

வேறு.

அரிகுவித்தமலை யதையடுக்கிமுத லலையடைத்ததிவ னென்னவே
யரிகுவித்தமலை யதையெடுத்துதவி யதிர்படைக்கல மடுக்கினன்.

வேறு.

ஒருத்திபுய மொருத்திவிழி யொருத்தியக மொருத்திமருங் கொருத்திநாவி
லிருத்தியுல காண்டவனுக் கிதுவுமொரு வியப்பாகு மென்றல்போலும்.
பன்மடவார் தனிலொருத்தி பதம்வருட வொருத்திசுருட் பாகுநீட்டப்
பொன்மடமான் போலொருத்தி புடையிருக்கப் பன்மாதர் புகழ்கொண்டாட.
சிலமடவார் நடம்புரியச் சிலமாதர் வீணையிசை தெரிந்துபாட
நிலமாது மனங்களிப்ப நிருபர்பிரா னிருந்தகொலு நிறைந்துகாட்டும்.
இரவிருளைக் கதிர்துரத்த விகலிருளை வெளிப்படுத்த வெண்ணிநின்றே
யரவணையி லறிதுயில்கொண் டமர்ந்தவன்போ லெழுந்துநடந் ததனைக்கேளும்.

வேறு.

வீரகொற்றமத யானைநெற்றிசெறி வீரபட்டம்வெயி லனையது
வாரணத்துதய மாலவர்க்கிகலு மாதிரத்திருளு மகலுமே.

வேறு.

எதிர்நின்ற படைகண்டு மிவனின்ற நிலைகண்டு
மதிர்கொண்ட பரகண்ட ரவரொன்று பகர்வரே.
நடுகம்ப வளமொன்றி னரசிங்க முதல்வந்த
தடுகம்ப வளமொன்றின் வருகின்ற நரசிங்கம்.
இவனென்பர் செயசிங்க மிவனென்பர் மததந்தி
கவனங்கொண் மலையென்பர் கடலென்பர் தளமென்பர்.



வேறு.

தந்தங்கொண் டங்கிங் கெங்குந் தண்டுந்துண் டங்கொண் டண்டஞ்
சிந்துந்தண் டுங்கொண் டென்றுந் திண்டுங்கொண் டண்டுந்தண்டும்.
சண்டன்கண் டஞ்சுந் தஞ்சந் தந்தந்தொண் டென்றுங் கெஞ்சுங்
கண்டங்குஞ் சிந்தும் பொங்குங் கந்துங்கண் டுந்துந் தந்தி.

வேறு.

மணியொலி யாரவார வரிசிலை நாணினோசை
குணில்பொரு பேரியோசை குரைகடல் வாயையூடும்.
மதகரி சீறுபோது வடவரை கால்கொ ளாது
குதிரைகள் சீறவேலை குயவர்கை யாழிபோலும்.
புசபல வீரசூரர் புடைவரு சேனையேவு
வசனக ரேமாக வரைதடு மாறமீறும்.

வேறு.

இவர்கள்விட்ட படைநெருக்கி லிகல்விளக்கு மணிவகுக்கு
மவர்கள்விட்ட படையுமுட்டி யடல்விளக்கு மமரிலே.
கடுகடுப்பர் வெடுவெடுப்பர் கதறிநிற்ப ரவரவர்
படபடப்பர் போர்மலைப்பர் பகைஞர்விட்ட வயவரே.
உடலுமற்று முடியுமற்ற தொருவன்வெட்டி லொருவனுக்கு
மிடல்படைக்கு மொருவன்வெட்டில் விழுவரெட்டு வயவரே.

வேறு.

வெடியெழுப்பின புகையின்மற்றொரு வெளியுமற்றது திசைமயக்கின
கொடிபரப்பின வதைநிகர்த்தன குவலயத்தினு நிழல்பரப்புமே.

வேறு.

கோடுவளைந்தது போலவளைந்தது கூடிநடந்தது சேனையடங்கலு
மோடுமிடந்தெரியாமலிருந்தன வூருணியென்றெதிராளிசனங்களே.
வாசிகளுஞ்சிலகால்பலமும்பொர வாரணமொன்றதன்மீதுநடந்துகை
வீசியறைந்தகி லோடிநெடுங்கள மீதுவிழுந்தனர் கோடிசனங்களே.

வேறு.

குதிரையி னுடல்குழ குழெனவு ளம்பின
குறைபடு தலைபிறை யெனவும்வி ழுந்தன

வுதிரமு நதிபொரு சலதியு மொன்றென
வொழுகின களமள றதியவி ருந்ததே.
முடிகளு டைந்ததி னவமணி சிந்தின
முழுமதி யுங்கதிர் வெயிலுமெ ரிக்கிரி
யடியிலு திர்ந்தன புரைவன செங்கள
மதனில்வி ழுங்களி றருகுகி டந்ததே.
களமுதி றைந்தது குறுகலர் வெம்படை
கவனது ரங்கமு மொருவிசை சென்றதி
ளவில்க ருங்கொடி யொருகலெ றிந்ததி
லலறியெ ழுந்தன வுளறிமு றிந்ததே.

வேறு.

மத்தகத்தையுடைத்தடைப்பினில்வைத்துவெட்டினவெட்டிறைத்துட
றத்தளித்துகெ ளித்துமைக்கரி சத்தமிட்டுநி லத்தைமுட்டுமே.
ஒட்டுவிட்டவர் பட்டுவிட்டதி லொட்டிரட்டியொ ழித்துவிட்டவர்
விட்டுவிட்டுவெ ருட்டிவெட்டின வெட்டுமட்டல வெட்டிரட்டியே.
தட்டிமுட்டிய தட்டியொட்டலர் தப்பியப்புற நிற்கையிற்களி
றெட்டியெட்டியி ழுக்குநெற்றியி லெற்றியெற்றிமி தித்துழக்குமே.
முட்டைதட்டியுடைக்கையிற்கருமொய்த்திருப்பதையொத்ததுச்சியில்
வெட்டையிற்றசை பற்றியப்புற மெத்தவுற்றதி லுற்றபித்தமே.
இப்படிப்படை தத்தளித்துமெ திர்த்தெதிர்த்துமடக்கையிற்கன
குப்பமிட்டத ளத்தின்மற்புலி கொக்கரித்துந டக்கலுற்றனன்.

வேறு.

அதிரமுழங்கிய குரலதிலண்டமு மகடுபிளந்தது முகடுமுடைந்தது
மதியொடுவெங்கதிர் திருகியசைந்தது மருவலருங்கிடுகிடெனநடுங்கவே.
படுதிரையுங்கடகடெனவுதிர்ந்தது பனிவரையுஞ்சடசடெனஒடிந்தது
திடுதிடெனும்படி புவனமசைந்தது திசைமுழுதுங்குமு குமெனவிரைந்ததே.
இவனரசிங்கமெதனவுநடந்தன னிரணியனென்றொருஅவுணனிருந்தன
னவனைவளைந்தனன் மடியிலிருந்தன னதிரமொழிந்தனன் வரகுணசிங்கமே.

வேறு.

குற்றியு டைத்துவ யிற்றைய றுத்தெதிர்
கொட்டிய ரத்தமி றைக்கமு ழுக்குடர்



பற்றியி ழுத்தொரு கைக்குள மைத்திகல்
பற்றற மற்றொரு சத்தமெ ழுப்பினன்.

சத்திய மெய்ப்பரி சுத்தபு யத்தொரு
சத்துரு விக்கிய ரற்றமு னைப்பொரு
கத்திக னக்கிரை யிட்டுநி றுத்திய
கர்த்தன்ம கத்துவ சக்கர வர்த்தியே.

முக்கண னுக்குடல் பத்தர்த மக்கிடர்
முற்றும்ஒ ழித்தவ ரக்கனை யிப்படி
தெக்கண திக்கிலி ருப்பவ னுக்கதி
திர்ப்திவ ரப்பலி யிட்டுநி றுத்தினன்.

வேறு.

இரணிய னென்றொரு பதகன்ம டிந்தன
னெனவுநெ டும்புவி யுபரவ ளர்ந்தது
முரணும வன்படை திசைதொறு நின்றது
முதுகுபி றந்தது முழுதுந டந்ததே.

வேறு.

தலைபைத்தடவிநாம்பிழைத்தோஞ்சனங்கள்பிழைத்தால்வருவாரெ
றலையக்குலைய விழுந்தோடு மவரோசேனைத் தலைவர்களே.

வேறு.

சங்குவா பாலன்முன்னர் தாமுமொரு சேவகர்போற் றரியா டிப்
ரும்.
பங்குழாந் தடியூன்றிப் பாதைதொறு நடப்பாரைப் பாரு
ந்துநாறு
மைந்தனைக்காணுததந்தைமலைத்துநின் றுநாம்பிழைத்தான்.
ப்பாரும்.
சந்ததியுண் டாமெனவே தறுகாம லைனடக்குஞ்சமர்த்
ேடர்நாங்கள்
புத்தியற்ற பேர்கள்கத்தி போடாம லுயிரிழந்து
யைக்கேளும்.
கத்திதனை யெறிந்துயிரைக் காத்துவந்தோ மென்றவர்தங் க
ஊடேவந்தோ
குதிரைதனைப் பொருளாகக் குறியாம லிகழ்ந்துடலைக் கெ
ர் வாவைப்பாரும்.
மதிதனிலே யெமைப்போல மனந்துணிந்தா ரில்லையென்
சேவரேடே
தேடிவைத்த பொருளுடைமை சோமுத விட்டுநன்றாய்
யோடிவந்து பிழைத்தோமென் றொருவரொரு வரைவினவுமுறையைக்கேளும்.

உன்குதிரை போயிற்றென் றொருவனொரு வனைக்கேட்ப வொருவனோடி
யென்குதிரை தான்போயிற் றென்றுரைக்கும் வாய்ப்புலப்ப மெல்லாங்கேளும்.

பாளையமும்பல்பொருளும்பறிகொடுத்து மாற்றலர்கள்பயந்துபோனார்
நாளையென்று சொல்லாமனல்லதுரைச்சிங்கமதைநயந்துபார்த்தான்.

அவரவர்க ளெடுத்தமுத லவரவர்க்கென் றுதவியொழிந் ததனையெல்லாஞ்
சிவனடியார் மறையோர்கள் செந்தமிழோ ரிரப்பவர்க்குஞ் செலவிட்டானே.

காடமத யானைகளுங் கவனதுர கதமுமொரு கணக்கோவாங்கி
யிரவலர்கள்கொள்ளைகொண்டார்யாங்களும்போயவன்புகழையிசைக்கின்றோமே.

வேறு.

கோடானு கோடிசேனை கூடார வாயில்வீழ
ஆடாடி வாளையீச யோகாதி யோகவீமா.

வேறு.

கோபவுக்ர வீரபத்ர கோரசுத்த வீரசுப்ர
தீபசுக்ர ராசவச்ர தேகமுக்ய ராமபத்ரா.

வேறு.

தசங் கிதலோ மொகுமொகென் றேதுபாடல்
பனுவலும் பாடமேவு கோனுவலங் காரலோல்
கண் டீராஜ சமரசங் ராமநீதி
வையுள்ளிங் காரணம சௌர்யசங் தானலோலா.

வேறு.

சமரபு ளவீம சுமுக்தன அனைரா
சத தாணிவீர விஜயசக தேகவாரா
வமரானு ஜிறு நிருதர்குல அலகோப
வதுல தாபபிம ஜயதரவ சேரதீரா.

வேறு.

ஆகத தானகவுத் தம்பிகூர்தேவு மன்னிய கீர்த்தி
வரகுண ராமசிவத் தம்பிவாண்டாய வன்னிய தீர்க்கா.

வேறு.

அங்கவ சேகர விஜயீபவா அர்ஜுன ரூப விஜயீபவா
சங்கு குமார விஜயீபவா சம்ப்ரம லோல விஜயீபவா.



வேறு.

பாதள ராஜ காண்டவா பன்னக சாயி விஜயீபவா
வரகுண ராம பாண்டியா வன்னிய ராஜ விஜயீபவா.

வேறு.

வாழிவாழி யெனத்துதித்தா மன்னர்பெருமான் மனமகிழ்ந்து
சூழியானை வயப்புரவி துகிலுங்கலனு மிகக்கொடுத்தான்.

வாங்கியாங்க ளருகினின்றே மகரச்சுறவு மறிதிரைநீர்
தேங்குகடல்சூழ் புவியனைத்துந் திக்குவிஜயஞ் செலுத்திவந்தோன்.

வேறு.

வாரமுகி லானவணங் காமுடிச்செந் தொட்டி
மன்னவனைச் சங்குமுத்தை மாதுலர்க ளென்போன்
வீரனார் சங்குமுத்துப் பெரியவீ ரப்ப
வேந்தனையு மைத்துனனென் றுந்தாங்க நினைப்போன்.

தாலிக்கு வேலிவர குணராம முகிலைத்
தமையுளமைத் துனனுமென் றனுதினமும் புகழ்வோ
ஞலிக்குந் தமிழ்க்கரசன் வரகுணரா மனையே
யன்புடைய தம்பியென வின்பமுடன் மகிழ்வோன்.

புலியூரான் மகிபதியைத் தமிழறிந்து கல்விப்
புலவர்திற மறிசங்கு பூபதியை நாளும்
வலிதான தம்பியரென் றுளத்துவகை கூர்வோன்
மனுபதியுந் தனுபதியு மனையாகு பதியே.

சங்குசின்னத் தம்பியிவன் றன்னையே பெற்றோன்
சங்கரபாண் டியனையிவன் றானேமுன் பெற்றோ
னெங்குமிவன் புகழெடுத்துத் துதிக்கவும்பேர் பெற்றோ
னிப்பெயர்பெற் றவர்களா சிருக்கையும்பெற் றவரே.

தாயுமா னவன்றனக்குத் தந்தையுமா னவன்சீர்
தருகருட பதிதனையுந் திருமதலை யெனவே
வாயுமா னதமுமொன்றாய் மகிழ்ந்தழைக்குங் கீர்த்தி
வரகுணரா மனைக்காண வாராதா ரெவரே.

சங்குவலம் புரிபதிர வங்கர்வங்கர் கலிங்கர்
தாள்பணிந்து கரங்கூப்பிச் சனங்களெலாந் துதிக்கப்
பொங்குமதக் களிறுசிந்து மிருகவுட்டு வேழப்
பொருப்பின்மிசை யேறிவயப் புலியெனவந் தனனே.

மனுபதியாஞ் சோழனுடன் வரகுணபாண் டியனும்
வந்ததுபோற் புலிக்கொடியு மகரகே தனமு
மினிதுவரக் கண்டுமீ னங்குடத்தை யடுக்கு
மிந்துகலை மானையுங்கொண் டிராக்காலம் வருமே.

வேறு.

குலவவருஞ் சகலாத்துக் குடைநிழற்ற மதகயமுங் கூந்தன்மாவும்
பலவகையா மிவுளிகளும் பல்படையாங் காலாளும் பரந்து சூழ.
மஞ்சாருங் கொடைவேந்தன் வரியுழுவை காவிகண்டான் மான்போலோடி
யஞ்சாதார் கையெடுப்பா ரவன்கேத னந்தனைக்கண்டதிராருண்டோ.

வேறு.

விசயரண சமரமுக வீரவிக்ர மார்க்கனெனும் வேந்தர்வேந்தன்
றிசைமுழுதுந் தானுகிச்சிவகிரிப்பட்டணத்தில்வந்து சேர்கின்றனே.
வீதிதொறு மலங்கரித்தார் வீடுதொறுஞ் சுதைகரைத்து வெள்ளைசாத்திச்
சோதிமணித் தூணிறுவித் துலங்குபல பந்தரிட்டுத் தொடருநாற்றி.
தோரணமு நாட்டியெங்குஞ் சூழ்ந்தகன்னற் கதலிகட்டிச் சுடர்கண்ணாடி
பூரணகும் பங்கள்வைத்துப் பொருந்துமணித் தீபம்வைத்தார்பொன்னுடன்ன
மன்னர்பிரான் மணிமறுகின் மால்யானைப் பவனிவந்தான் மகிழ்வாலெய்து
மன்னவடை யார்களுங்கண் டடிவணங்கி மாலாறு ரதனைக்கேளும்.
கந்தவே ளாகுமென்பார் காமவே ளெனப்புகல்வார் கன்னிமார்க
ளிந்தவே ளடத்தியது மிவர்களே வெண்பிறைக்கோட் டிபமோவென்பார்.

வேறு.

ஆமோகந் தாகமெனக் காறிலையே பார்த்திருக்க
லாமோகந் தாகமுனக் காறிலையே பார்த்திபனே.
மெய்க்கரும்பு மென்புருக வேட்கையுற்று வேட்கையுற்றோ
மெய்க்கரும்புங் கைக்கரும்பும் வேண்டிலையா லாண்டகையே.
வரிக்குவளைத் தாமமா மடந்தையர்பான் மாரனெய்த
வரிக்குவளைத் தாமமா மலர்க்கணையும் பூட்டினனே.



செம்பிரா டும்புரந்தாய் செப்புறவான் மெய்ப்புறவான்
செம்பிரா னங்கழைவிற் சேர்வேடன் போர்விலக்காய்.
இலங்காப்ப னாதிபா விந்தமதன் போருவந்தெம்
மிலங்காப்ப னூர்வாத மேறியடர்த் தேறுதற்கே.
சங்குவ ரோதயசந் தான்மே வேள்போர்க்க
சங்குவ ரோதையலார் தாமமொன்று நல்கிலையே.
வைகையாற் றனே மருவவரா மோடியாய்
வைகையாற் றனே மடலெடுக்க மாட்டாமே.
மருமந்தா னிலமீது மறலியுள தென்றிசைய
மருமந்தா னிலமீது வருத்துவது மறிந்திலையே.
கருத்தாவ லாவறியோங் கண்டபலன் கொண்டமையல்
கருத்தாவ லாவறியோங் கட்டுரைத்து மிரங்கிலையே.
சிவகிரிதா ழாதுயர்ந்த தீரமத னாலஞ்
சிவகிரிதா ளார்வருந்துஞ் செய்கைமனத் தெண்ணிலையே.

வேறு.

இன்னவாறு மடவியர்க ளியம்பக்களப முகைதழுவ
மன்னர்பெருமா னருட்பார்வை வழங்கிமுறுவல் புரிந்தனனே.
கருணைக்கடலி னீராடிக் காமவிகாரத் தகையடங்கித்
தெருளுமடவா ரவரவர்தாஞ் சேருமனையிற் சென்றாரே.

வேறு.

உயர்ந்தமேனிலை வதிந்தமாதர்க ளுயர்ந்ததேவர்த மடந்தையாயினர்
சயந்த னுமென வியந்த பூபதி தனந்தொ டானென மனந்தளாடுவர்.

வேறு.

திட்டியிற்பல திட்டிவைத்தொரு தெற்றியிற்பொலி யுத்தமத்திகண்
மட்டலக்கன சித்திரத்தொடு வைத்தசித்திர மொப்பரோப்பரே.

வேறு.

யானையும்பரி சேனையுந்திறை யாழிவந்தது போனடந்தன
கோனையுந்தொடு மாதரும்பல கோடியுண்டவர் சூழவந்தனர்.

வேறு.

[illegible]லைப்பொரு நுட்குசிற்றிடை மடங்கலைப்பொரு வளைமலர்க்குழல்
[illegible]குவி முகைமெல்லுழை மைத்தடங்குவ ளிருக்கணென்பவே.

வேறு.

அரும்பன வனமுகை யநுதுயர வரும்பன வனமுகை யசைதாவே
கரும்பிறை நிகர்புரு வமும்வளைவ கரும்பிறை நெடுமுடி வளைவுறவே

வேறு.

அனந்த னைப்பொரு குறியுடை மடவிய ரனந்த னைப்பொரு மழகிய நடையர்
தினந்தின மவரிசை செய்பவர் தடத்துந் தினந்தினந் தனை நிகர் கழுத் தியரே.

வேறு.

கலத்தாலத் திக்குவிச யங்காட்டிக் கண்ணெச்சில் கழித்தார் நின்ற
கலத்தாலத் திக்குவிச யங்காட்டு மன்னர்பிரான் கருணைகூர.

கருவிருந் தமழைசொரியுங்கரு முகில்போ லுருவெடுத்தகமலக் கண்ண
னருகுநின்ற மன்னவர்க ளவரவர்க்கு விடைகொடுத்தா னவருஞ்சென்றார்.

பாரமத தந்தியெனும் பருப்பதத்தி லிருந்துமுகிற் படிவம்போல
வீரனை வேட்டைசெய்தோன் மேதினியிற் கமலபத மிதிக்கின்றானே.

மின்னார்கள் கைகொடுக்க மின்னார்கள் கவரியுடன் விசிறிவீசப்
பொன்னாரு மணிமாடம் புகுந்திருந்தா னிகல்கடந்த புலியேறன்றான்.

பாடகரும் புலவர்களும் பரிசனமுமனைபுகுந்தார் பரியுந் தூசு
மாடகமு மியானையுங்கொண் டகத்தில்வந்தோம யாம்பெறுபே றார்பெற்றாரே.

எழுநிலை முறைநாங்க ளிருப்பதவ னிடத்திலெம்மூ ரெங்கோனன்றாய்
வாழுமகா வடபுறத்தில் வடகிரியாஞ் சிவகிரியே வழங்கும்பேரே.

அன்னகரி னீங்கள்புகுந் தாசார வாயினினின் றறிக்கைசெய்யச்
சொன்னவுடன் வரவழைப்பான் சொல்லருமை யறியநல்ல துரையாமன்றோ.

காதலகர் வனராஜ கண்டீர ஜயதரனைக் கருதாரெல்லாம்
பாவுவர குணராம பாண்டியனை நீங்களுஞ்சொற் பனுவல்கூறும்.

எழிசையு [illegible] வரை யெழுவரிசை யுங்கொடுப்பா னெங்கோனன்றாய்
[illegible] தண் மக்களுஞ்சுற் றமுந்தழைக்க வாழலாமே.

வேறு.

திருவுசிவ கிரிவாழி வரகுணரா மேந்திரனும் வாழிகீர்த்திப்
பெருமைவட கரைவாழி பெரியசுவா மியும்வாழி பெரியோர்வாழி
கருவணைய தென்னாட்டு [illegible] வாழுமரு தப்பன்மிகத் தழைத்துவாழி
யிருநிலத்து நான்மறைய [illegible] மந்தணரு மெந்நாளும் வாழிவாழி.

[illegible]க்குவிஜயம் முற்றிற்று.

142628